# தாய்வீடு

221

ISSN 2369-3657

THAIVEEDU | AUGUST | 2025

தாய்வீடு | ஒகஸ்ட் | 2025



**கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர்**
**பேராசிரியர் மா. செல்வராஜா**
- து. கௌரீஸ்வரன்

**றொறன்ரோ சர்வதேசத்**
**திரைப்படவிழா - TIFF 50**
- ரதன்

**கண்ணுக்குத் தெரியாத**
**ஆழமான ஓர் இழப்பு**
- ச. சத்யதேவன்



ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
416.939.8789
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*

தாய்வீடு

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**அட்டைப்பட வடிவமைப்பு**
பிரசாத் சொக்கலிங்கம்

**வடிவமைப்பு**
ஆரையன், ஊரோடிகள் குழுமம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

**படங்கள்**
istock.com,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

**அஞ்சல் முகவரி**
**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Canada**

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

# எங்களுடைய காலத்தில் ஊழி மீண்டும் நிகழ்கிறது

காசாவில் இஸ்ரேலின் இனப்படுகொலை தொடர்கிறது. இஸ்ரேல் என்ற நாடு உலக வல்லரசுகளால் பலவந்தமாக உருவாக்கப்பட்டது முதல், பாலஸ்தீனத்துக்கு எதிரான பல்வேறு ஒடுக்குமுறைகளை முனைப்புடன் முன்னெடுத்துவந்த இஸ்ரேல், 2023 ஒக்ரோபர் முதல் முழுமையானதும் வெளிப்படையானதுமான ஆயுதமுனை ஆக்கிரமிப்பை ஆரம்பித்திருந்தது. இந்த ஆயுதத் தாக்குதல்கள் எதிர்பார்த்த உடனடி வெற்றியை வழங்காத நிலையில், தற்போது, பட்டினியை ஆயுதமாகக் கையிலெடுத்துப் போர்க்குற்றம் புரிந்துவருகிறது இஸ்ரேல்.

இந்த நிலையிலாவது ஆண்டாண்டு காலமாக இஸ்ரேலின் அராஜகப்போக்கை ஆதரித்து வந்த மேற்குலக வல்லரசுகள், தங்கள் நிலைப்பாடுகளில் கொஞ்சம் மாற்றத்தைக் காண்பிக்கத் தொடங்கியிருப்பது சிறிதளவேனும் நம்பிக்கை அளிக்கிறது.

பாலஸ்தீனத்தைத் தனிநாடாக பிரான்ஸ் அங்கீகரிக்க முடிவெடுத்துள்ளது என பிரெஞ்சு அதிபர் இம்மானுவல் மக்ரோன் அறிவித்த சில நாட்களிலேயே பிரித்தானியப் பிரதமர் கீர் ஸ்ராமரும், அடுத்து கனடியப் பிரதமர் மார்க் கார்னியும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்திலே பாலஸ்தீனத்தைத் தமது நாடுகள் தனிநாடாக அங்கீகரிக்கும் என அறிவித்துள்ளார்கள். இதன்மூலம், பாலஸ்தீனத் தனிநாட்டை அங்கீகரிக்கும் முதல் மூன்று ஜி-7 நாடுகளாக இம்மூன்று நாடுகளும் ஆகியுள்ளன. இனிவரும் நாள்களில், மேலும் சில பலம்பொருந்திய நாடுகள் இந்த அணிவகுப்பில் இணைந்து கொள்ளும் என எதிர்பார்கலாம்.

இந்த அறிவித்தல்கள் வரவேற்கத்தக்கவையே. எனினும், இந்த நாடுகள் இந்த நிலைப்பாட்டை எடுக்க ஏன் இத்தனை காலம் எடுத்தது என்ற கேள்வியும் எழுகிறது. 1967-ஆம் ஆண்டிலேயே அப்போதைய பிரெஞ்சு அதிபர் சார்ள்ஸ் டிகோல் இஸ்ரேலையும் பாலஸ்தீனத்தையும் தனித்தனி நாடுகளாக, ஏனைய நாடுகள் ஏற்றுக்கொள்வதிலேயே இருநாடுகளுக்கும் இடையிலான அமைதி தங்கியிருக்கிறது எனக் கூறினார். 1982-இல் இஸ்ரேலின் நாடாளுமன்றமான கினெசெற்றிலே உரையாற்றிய அப்போதைய பிரெஞ்சு அதிபர் பிரான்சுவா மித்தரோன்ட், இஸ்ரேலும் பாலஸ்தீனமும் ஒன்றையொன்று தனிநாடுகளாக அங்கீகரிப்பதே பேச்சுவார்த்தைக்கான அடிப்படையாக இருக்கவேண்டும் எனக் கூறினார். 1996-இல் பாலஸ்தீனச் சட்டவாக்கச் சபையின் முன் உரையாற்றிய அப்போதைய பிரெஞ்சு அதிபர் ஜாக் சிராக், தனித் தேசத்தை அடைய முனையும் பாலஸ்தீனர்களின் அவா இயல்பானது என்றார். பிரான்ஸ், தான் ஊருக்கு உபதேசித்ததைத் தானே பின்பற்ற 2025 வரை ஆகியிருக்கிறது.

இதேவேளை கனடியப் பிரதமரும் பிரித்தானியப் பிரதமரும் வெளியிட்டுள்ள அறிக்கைகள் கரிசனையூட்டுபவையாக அமைந்துள்ளன. பிரித்தானியப் பிரதமர் தனது அறிக்கையிலே, ‘ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அமர்வுக்கு முன் இஸ்ரேல் தனது நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளாவிடால் தனது நாடு பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும்’ என்றே கூறியிருக்கிறார். ஆகவே இதை இஸ்ரேலுக்கான ஒரு எச்சரிக்கை என்று மட்டுமே எடுத்துக்கொள்ளமுடியும். ஐ.நா. பொதுச்சபை அமர்வுக்கு முன் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி பிரித்தானியா தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டால் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை.

கனடியப் பிரதமர் தனது அறிவிப்பிலே ஹமாஸ் தனது ஆயுதங்களைக் களையவேண்டும் என்றும் பாலஸ்தீன நாட்டின் எதிர்கால அரசாட்சியிலே ஹமாஸ் எந்தவிதப் பங்களிப்பையும் ஆற்றக்கூடாது என்றும் வலியுறுத்தியுள்ளார். இந்தக் கூற்று ஈழப்போரிலே கனடாவும் ஏனைய வல்லரசுகளும் எடுத்த இரண்டக நிலைப்பாட்டை நினைவுபடுத்துவதாய் உள்ளது. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தைகளை ஆதரிப்பதாக ஒருபுறம் அறிக்கைகள் விட்டுக்கொண்டு, மறுபுறம் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகத் தடைசெய்து, அரசின் போர்க்குணத்தைப் பலப்படுத்திப் பேச்சுவார்த்தைகளின் தோல்விக்கு வழிவகுத்த கனடிய அரசின் செயற்பாட்டை யாரும் மறந்துவிடவில்லை. அதனால், பாலஸ்தீனம் சார்ந்தும் இத்தகையதொரு கபட நாடகத்தை உலக நாடுகள் ஆடுகின்றனவா என்ற சந்தேகம் எழுவதையும் தடுக்க முடியவில்லை.

'எங்களுடைய காலத்தில்தான் ஊழி நிகழ்ந்தது' என கவிஞர் சேரன், ஈழம் குறித்து எழுதிய வரிகள் காசாவுக்கும் பொருந்தி, தமிழின அழிப்பில் நாங்களடைந்த அருளைக் கிளறிக்கொண்டிருக்கின்றன. ஆனால் உலக மக்களின் கருத்து இஸ்ரேலின் இனவழிப்புப் போக்குக்கு எதிராகத் திரும்பிக்கொண்டிருக்கிறது என்பது கண்கூடு. இந்த எதிர்ப்பிலே யூத மக்களும் தம்மை இணைத்து வருகிறார்கள் என்பது நம்பிக்கையூட்டுவது. எமது காலத்தில் இடம்பெற்ற ஓர் இன அழிப்பின் சாட்சியங்களாக இருந்த நாம், எமது காலத்திலேயே நடக்கும் இன்னோர் இனவழிப்பைத் தடுக்கும் குரலுக்கு வலுச்சேர்க்கும் நிலையிலிருக்கிறோம். எமது குரல்களின் பலமே எமது அரசியல் தலைவர்களைத் தடம்மாற வைக்கும்.

# இம்மாதத் தாய்வீட்டில்...


செம்மணிப் புதைகுழிகளும் வரலாற்றுப் பாடங்களும் 5
- சிவா முருகுப்பிள்ளை

கொலம்பசின் தொலைபேசி அழைப்பும்
டொனால்ட் டிரம்பின் காலை வணக்கமும் 8
- ரதன்

ஈரான் மீதான இஸ்ரேல்-அமெரிக்கக் கூட்டுத் தாக்குதல்
பின்னணியும் விளைவுகளும் 15
- ரூபன் சிவராஜா

ஏற்கெனவே பட்டறிந்த 'நல்லாட்சி'
மீண்டும் அமையாவாறு தடுப்பது எப்படி? 20
- அம்பிகா சற்குணானந்தன்
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

இந்தியாவில் பொதுவுடைமைக் கட்சிகள் இணையுமா? 24
- வ. பொன்னுராஜ்

இந்தியத் திருநாட்டில் மனிதக்
கழிவுகளை மனிதனே அகற்றும் அவலம் 28
- நெல்லை ஜெயசிங்

கருப்பை நார்த்திசுக் கட்டிகள் 32
- போல் ஜோசேப்

தற்கால உலகில் முதியோரின் உணவு முறைகள் 34
- ப. விஸ்வகோகிலன்

ஒன்ராறியோவில் விலைகூடிய வாகனக் காப்புறுதி 36
- செந்தூரன் புனிதவேல்

பாவனையும் பராமரிப்பும் 38
- வேலா சுப்ரமணியம்

கனவுகளின் அத்திவாரமும்
யதார்த்தத்தின் இடைவெளியும் 41
- யமினா கிருஷ்ணசாமி

மாணவர்களின் ஆளுமையில்
செல்வாக்குச் செலுத்தும் நல்லாசான்கள் 44
- அகமட் பிஸ்தாமி

பிள்ளை வளர்ப்பில்
பெற்றோருக்கும் சான்றிதழ் தேவை? 46
- த. சிவபாலு

பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே...
ஒப்புக்கொள்வதையும் அங்கீகரிப்பதையும்
வேறுபடுத்துங்கள்! 50
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

சிறுவர்களும் நிகழ்நிலையும்
ஓர் உளவியல் பார்வை 52
- சரவணன் லக்ஹரன்

தாரே ஜமீன் பர் 56
- மாதவி உமாசுதசர்மா

செயற்கை நுண்ணறிவு
Artificial Intelligence 58
- சேஷாத்ரி தனசேகரன்

விமானங்களின் வேகத்தை எட்டிய தொடருந்துகள் 60
- சுப்ரமணியம் ஜெயசீலன்

விண்வெளியில் சாதனை படைக்கும் வொயேஜர்-1 63
- குரு அரவிந்தன்

அழியாத கோலங்கள் 66
- குமார் புனிதவேல்

தீபாவளி போனஸ்... 68
- நிசன்குமார் கோபிநாத்

சூழலைப் பாதுகாக்க
பழங்குடியினரைப் பாதுகாக்கவேண்டும் 74
- சி. நற்குணலிங்கம்

செம்மீன்: சில நினைவுகள் 77
- ஓவியர் ஜீவா

ரொறன்ரோ சர்வதேசத் திரைப்படவிழா 80
- ரதன்

நவீன உலகும் உறவுகளின் சிதைவும்
அன்டோனியோனியின் இருத்தலியல் சினிமா 86
- சொர்ணவேல்

புத்தள மாவட்ட முஸ்லிம்களின் மரபும் மாற்றமும்
பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸின்
வாழ்வை முன்வைத்து ஓர் உசாவல் 94
- இக்பால் அலி

நடனச் சுடரொளி விஜயாம்பிகை இந்திரகுமார் 101
- நவஜோதி ஜோகரட்னம்

கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர்
பேராசிரியர் மா. செல்வராஜா 104
- து. கௌரீஸ்வரன்

காரிருளில் பிரகாசித்து ஒளிர்ந்த நட்சத்திரம்
பேராசிரியர் மா. செல்வராஜா 106
- சி. ரமேஷ்

நுகி வா தியாங்கோவுக்கு அஞ்சலி – 2
காலனியாதிக்கச் சிந்தனையிலிருந்து விடுபடல் 110
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

'பொற்கை' யாழ் . பல்கலைக்கழகத்தின்
50 ஆண்டு நிறைவு வெளியீடு 115
- வே. விவேகானந்தன்

கானல் நீர்: வாழ்க்கையின் மாய வெளிச்சம் 118
- மேரி றெசோதா

தீபச்செல்வனின் 'சயனைட்' நாவல்
ஒரு காலத்தின் சாட்சி 120
- தாமரைச்செல்வி

ஈழத்துத் தாகூரின் பார்வையில்
கவியரசர் தாகூரின் வாழ்க்கை 123
- மல்லியப்புசந்தி திலகர்

அஷ்ரஃப் சிஹாப்தீன் கவிதைகள்:
அரசியலும் அழகியலும் 126
- ஜிஃப்ரி ஹாசன்

ஒரு நூலின் உருவாக்கம்:
ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல் 129
- என். செல்வராஜா

'கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்'
திராவிட மொழிக் குடும்பத்தின்
சிறப்புகள் / பண்புகள்' 132
- நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக
காமன் கூத்து 134
- அருணாசலம் லெட்சுமணன்

மனக்குழப்பம் 139
- த. ஜீவராஜ்

ஈழத்துப் பெண்ணிலைவாதக் கவிதைகளில் அகம் 140
- சி. ரமேஷ்

தண்ணீருக்குத் தவிக்கும் கென்யக் காடுகள் 146
- சதீஸ் செல்வராஜ்

கண்ணுக்குத் தெரியாத ஆழமான ஓர் இழப்பு 150
- ச. சத்யதேவன்

வரலாற்றில் 'ஊடல்'
திருவள்ளுவரும் பிற இலக்கியகாரர்களும் 156
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

இனப்படுகொலையின் அரசியல் – 16
சர்வதேசப் போர்க்குற்ற விசாரணை:
தீர்ப்பாயங்களின் அரசியல் 162
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கண்ணனால் கிட்டிய கவிதைச் செல்வம் 169
- கிருங்கை சேதுபதி

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் 173
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

கம்பனின் கருவூலம் திறந்து... 176
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

முலையறுகாதை!
பெண் துயரப் பெருங்கதை 181
- மா. சித்திவினாயகம்

பஞ்சவர்ணம் தேடும் பச்சைக்கிளிகள் 185
- சியாமளா யோகேஸ்வரன்

உண்ணா நோன்பு 189
- அ. கந்தசாமி

இலவசச் சவாரிப் பயணத்தின்போது நடந்த
கார் விபத்து 192
- டெனிஸ் ஜோன்சன்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

# செம்மணிப் புதை குழிகளும் வரலாற்றுப் பாடங்களும்

– சிவா முருகுப்பிள்ளை



ஈழ விடுதலைப் போராட்டத்தின் மையப்புள்ளியாக, இலங்கையில் வாழும் தமிழ் பேசும் சிறுபான்மையின மக்களுக்கு எதிரான பேரினவாதத்தின் ஒடுக்கு முறையே இருந்துவந்திருக்கிறது. இது வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு காலகட்டங்களில் வெளிப்பட்டு வந்திருக்கின்றது. தமிழ் பேசும் மக்கள் என்ற போது அது வடக்குக் கிழக்கில் அதிகம் செறிந்து வாழும் தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள் மற்றும் மலையகத்தை அதிகம் மையப்படுத்தி வாழும் மலையக மக்கள் என்றாக மூன்று பிரதான பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது.

இவர்களை இணைப்பது மொழியாக இருந்தாலும் மதம், பண்பாடு, கலாசாரம் மற்றும் வாழ்விடம் என்பவற்றில் தனித் தன்மைகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் பேரினவாதிகள் இவர்களை மொழிச் சிறுபான்மை மக்களாகவே கையாண்டு ஒடுக்க முற்பட்டனர். இனச் சுத்திகரிபிற்கு உள்ளாக்க முற்பட்டனர்.

இலங்கையில் எழுச்சி பெற்ற சிங்களப் பேரினவாதம் பௌத்தம் என்ற மத வாதத்தையும் இணைத்தே தன் ஒடுக்குமுறைப் பயணத்தைத் தொடங்கியிருந்தது. அநகாரிக தர்மபால காலத்துச் சிந்தனைகள் இதன் மையஓட்டங்கள். அதன் தாக்கம் பேரினவாதத்தைக் கையாண்ட அரசியல் தலைவர்கள் பௌத்தத்திற்கு அப்பால் உள்ள தமது பிறப்பின் அடிப்படையிலான மத அடையாளங்களை மறைத்து அல்லது மறந்து பௌத்தர்களாக காட்டிக் கொண்டு முன்னேறிய வரலாற்றை இலங்கை கொண்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்கள் அப்பிரதேசத்தை, தொடர்ச்சியான நிலப்பரப்பை, வாழ்விடயங்களைக் கொண்டு தமது தாயகம் என்ற உணர்வுடனேயே வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் இந்த வாழ்விடத் தொடர்ச்சியை இல்லாமல் செய்யும் செயற்பாடுகளையே சிங்கள பௌத்த பேரினவாதம் முதலில் செய்து வந்துள்ளது. இதன் வெளிப்பாடுகள்தான் கிழக்கின் எல்லைக் கிராமங்களில் உருவாக்கப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள். இதன் உச்ச வடிவங்களை நாம் அம்பாறையிலும் திருகோணமலையின் சேருவாவலையிலும் டொலர் பாம், கென்ர் பாம் பகுதிகளிலும் கண்டு கொள்ள முடியும். இது படிப்படியாக ஏனைய பல எல்லைப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

இந்த எல்லைப் பிரதேசங்களிலேயே அதிகம் தமிழ் பேசும் மக்கள் இலங்கை அரச படைகளாலும் அவர்களின் ஆதரவுக் காடையர்களாலும் துரத்தப்பட்டனர், கொல்லப்பட்டனர் அல்லது கொன்று புதைக்கப்பட்டனர் - எரிக்கப்பட்டனர். உண்மையில் பேரினவாதத்தின் கோரத்தாண்டவத்துக்கு அதிகமாகப் பாதிக்கப்பட்ட இடங்களாக கிழக்கு மாகாணப் பகுதிகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். அங்கு எண்ணற்ற கொலைகளும் அது சார்ந்து தோண்டப்படாத புதைகுழி களும் விரவிக் காணப்படுகின்றன. உண்மையில் பேரினவா தத்தின் உச்சங்களை தொட்ட இடங்களாக கிழக்கு மாகாணமே அதிகம் காணப்பட்டது, இன்னும் காணப்படுகின்றது.

இன்று செம்மணிப் புதை குழி அதிகம் கவனத்தைக் கோரிநிற் கின்றது. அது இன்னும் முனைப்புப் பெறவேண்டியதொன் றாகவே காணப்படுகின்றது. அந்தகைய முனைப்பு இலங்கைத் தமிழர்கள் வடக்கிற்குள் - அதுவும் யாழ்ப்பாணத்திற்குள் சுருக்கப்பட்டு அரசியல் மயப்படுத்தப்படக் கூடாது. அதற்காக, செம்மணிப் படுகொலைகளைச் சதாரணமாகக் கடந்து போகுமாறு இந்தப் பத்தி சொல்ல முற்படுவதாக அவசர முடிவிற்கு வரவேண்டாம். தமிழ் பேசும் மக்ளுக்கு எதிரான இலங்கை இராணுவத்தின் கொலைகளுக்குள் செம் மணியும் பிரதான பாத்திரத்தை வகிக்கின்றது. எப்படி வெலிக் கடைப் சிறைப் படுகொலை பிரதான பங்கினை வகித் கின்றதோ அதே போல் இதுவும் மிக முக்கியமானது. ஆனால் கிழக்கில் சத்துருக் கொண்டான், கொக்கட்டிச்சோலை, வீரமுனை, குருக்கள் மடம், மூதூர் போன்ற பகுதிகளில் நடைபெற்ற வகைதொகையில்லா பௌத்த சிங்களப் பேரின வாதத்தின் படுகொலைகள், செம்மணியில் தோண் டப்படும் புதைகுழி மண்ணிற்குள் மறைந்து போகக் கூடாது என்பதற்கான சுட்டிக் காட் டலாகவே இந்தப் பதிவை முன்வைக்க விரும்புகின்றேன்.

பேரினவாதம் தமிழர்களின் பிரச்சினையை வடக்கிற்குள், குறிப்பாக யாழ்ப்பாணத் திற்குள் சுருக்கிவிடும் சதிச் செயற்பாடுக ளுக்குத் துணையாக நாம் வாய்கால் வெட்டி வரப்புகளைக் கட்டி விடக்கூடாது என்பது இங்கு முக்கியமான விடயம். செம்மணியை நீர்த்துப் போகச் செய்வது என்ற வாதங்களுக்கு அப்பால், அதனுடன் இணைந்த பல புதை குழிகள் கிழக்கிலும் உண்டு, அவையும் கண்டு கொள்ளப்படவேண்டும். அதாவது கிழக் கில் நடைபெற்ற, அதிகம் கருத்தில் எடுக் கப்படாத கொலைகள் - நசுக்கப்பட்ட குரல்கள் கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்பதற்கான குரலாகவே இப்பதிவை முன் வைக்கிறேன். பேரினவாதம், இலங்கைத் தமி ழர்களின் பிரச்சினை வடக்கிற்குள் மட்டுமே என்ற தோரணையின் வெளிப்பாடுகளை யுத் தத்தின பின்னரான காலகட்டத்தில் அதிகம் வெளிப்படுத்தத் தொடங்கியிருப்பதனை அவ தானிக்க முடிகின்றது. அதன் வெளிப்பாடா கத்தான் வடக்கின் வசந்தமாகவும் கிழக்கின் உதயமாகவும் தனித்தனியான கட்மைப்புகள் உருவாக்கப்பட்டிருந்தன.

> எல்லாத் தீர்வுகளையும் சர்வதேசம் பெற்றுக் கொண்டுக்கும் என்ற நம்பிக்கையில் நாம் இன்றுவரை இருப்பது சரியானதா? என்பது. காசாவில் பலஸ்தீன மக்களுக்கு சர்வதேச மனித உரிமை அமைப்புகள் பெற்றுக் கொடுக்காத தீர்வை செம்மணியின் புதைகுழிக்கோ, கிழக்கிலும் ஏனைய இன்னும் பல பகுதிகளில் தோண்டப்படாதிருக்கும் புதைகுழிகளுக்கோ பெற்றுத் தரும் என்று நம்புவது எவ்வளவு பொருத்தமானது.

உண்மையில் வடக்கு - கிழக்கு இணைப்பு என்பதே தவறான பார்வை, அதனைத் தமிழ் பேசும் தரப்பு வரலாற்றில் எப்போதும் அணித்தரமாக முன்வைக்கவில்லை. சரியாகச் சொன்னால் வடக்கையும் கிழக்கையும் பிரித்துப் பார்க்கா தீர்கள் என்ற அரசியல் முன்னெடுப்பினையே அவர்கள் மேற் கொண்டிருக்க வேண்டும்.

ஈழவிடுதலைப் பேராட்டத்தின் முக்கிய காலகட்டமான 1980-களில் இந்த விடயம் அதிகம் முன்னிலை பெற்றிருந்தாலும் காலப் போக்கில் பின்னுக்குத் தள்ளப்பட்டு வடக்கு-கிழக்கு இணைப்பாக முன்னிலை பெற்றது. பின்பு அது அரசியல் அமைப்பில் 13-வது திருத்தச் சட்டத்தின் மூலம் வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டமை வரலாற்றில் அவை பிரிந்தே இருந்தன என்பதான மாயை கட்டவிழ்த்துவிட்டது.

வடக்கும் கிழக்கும் மொழியால் பண்பாட்டால் கலாசாரத்தால் இணைந்தே இருந்தன என்பது மறுதலிக்கப்பட்டு, தற்போது புதிதாக இணைக்கப்படுவதாக சட்ட வரைவாக்கம் என்ற உச்ச அரசியல் அமைப்பிற்குள் வந்துவிட்டது. நிர்வாக ரீதியாக வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் என்னும் இரு மாகாணங்கள் இருந்தாலும் உரிமைகள் மறுக்கப்படும் மக்களின் உணர்வில் இவ்விரு மகாணங்களும் ஒன்றாக இருந்ததே வரலாறு.

ஆனால், ஈழவிடுதலைப் போராட்ட காலத்தில் கிழக்குப் புலிகள், வடக்குப் புலிகள் என்பதாக பிரபாகரன், கருணா போன்றவர்களிடையேயான பிளவு, வடக்கும் கிழக்கும் தனித்தனி என்ற தோரணையினை ஏற்படுத்தி விட்டது. இதற்கு அப்பால் சென்றால் இலங்கைத் தமிழரசுக் கட்சி, அரசியல் முன்னெடுப்பில் முஸ்லீம் மக்களை ஒதுக்கியதால் அவர்கள் தங்களுக்கான தனித் தலைமை வழியை உருவாக்கி கிழக்கின் அம்பாறையை முஸ் லீங்களுக்கான தனியலகு என்ற சிந்தனைப் போக்கிற்கு உள்ளாகிவிட்டனர். இவற்றை சரி செய்வதற்கான அணுகு முறைகளை தமிழ் மிதவாதத் தலைமைகளும் ஈழவி டுதலை அமைப்புகள் - குறிப்பாகத் தமிழீழ விடுதலை புலிகளும் முன்னெடுக் கவில்லை என்பது வருத்தத்திற்குரிய விட யமாகும்.

மாறாக சிறுபான்மையின மக்கள் ஒன்று பட்டு நிற்பதற்குரிய ஏதுக்களைத் தமிழ் கட் சிகளும் சரி, முஸ்லீம் கட்சிகளும் சரி உரு வாகாமல் தங்களுக்குள் பிரிந்து நின்று செய லாற்றும் போக்கும் தங்களின் அரசியல் இலாபங்களுக்காகச் சிறுபான்மை மக்கள் ஒன்றுபட்டு நிற்பதனைத் திட்டமிட்டு தடுத்து நிற்கும் செயற்பாடும் சிறுபான்மை மக்க ளின் பலத்தினை குறைப்பாக்கம் செய்தே வந்திருக்கின்றது.

இந்நிலையில்த்தான் செம்மணியில் தோண் டப்படும் புதைகுழிகள் கிழக்கில் நடந்த இனப்படுகொலைகளை வெளிக் கொண்டு வருவதற்கான வாய்ப்புகளைக் குறைத்து

விடும் அபாயம் இருப்பதனை உணரவேண்டியதாகின்றது. தற்போது செம்மணியின் உண்மை வெளிச்சத்திற்கு வருவதற் குரிய சாத்தியம் உருவாக்கப்பட்டது போன்றே, கிழக்கின் படு கொலைகள் வெளிச்சத்திற்கு வரவேண்டும். அங்கு புதைந்து போயிருக்கும் உயிர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும். இதற்கு சிறுபான்மைக் கட்சிகள் இன, மத பேதங்களைக் கடந்து ஒன்றிணைய வேண்டும். ஒன்றிணைந்து மனித உரிமைச் செயற் பாட்டாளர்களுக்கு கிழக்கின் உண்மைகளை எடுத்துரைத்து அவர்களின் கவனத்தினை அங்கும் திருப்பவேண்டும்.

ஆனால் இதில் நாம் கவனிக்க வேண்டிய விடயம், எங்க ளுக்கான எல்லாத் தீர்வுகளையும் சர்வதேசம் பெற்றுக் கொண்டுக்கும் என்ற நம்பிக்கையில் நாம் இன்றுவரை இருப்பது சரியானதா? என்பது. காசாவில் பலஸ்தீன மக்க ளுக்கு சர்வதேச மனி உரிமை அமைப்புகள் பெற்றுக் கொடுக்காத தீர்வை செம்மணியின் புதைகுழிக்கோ, கிழக் கிலும் ஏனைய இன்னும் பல பகுதிகளில் தோண்டப்படாதி ருக்கும் புதைகுழிகளுக்கோ பெற்றுத் தரும் என்று நம்புவது எவ்வளவு பொருத்தமானது. சமகால உலக வரலாற்றில் நடை பெற்றுவரும் இன அழிப்புகள் குறித்து எந்தக் கரிசனையும் இல்லாமல் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் மௌனம் காத்து வருவதனை நாம் கண்டுகொண்டும் அவர்களை நம்பி யிருப்பது பொருத்தமான ஒன்றாக அமையாது.

ஆனால் தற்போது நாட்டைப் பொறுப்பெடுத்துள்ள அரசத பாடுகளை ஒத்ததாக இருப்பதனால் எங்களின் வலிகளை அவர்கள் உணர்ந்து கொள்ளும்வண்ணம் அவர்களை அணுகி அவர்கள் மூலம் இன அழிப்பின் உச்சமாகத் திகழ்ந்த, கடந்த காலத்தில் அரசாட்சி செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் இறந்து போனவர்க ளுக்கான நீதியினைப் பெற்றுக் கொள்வதற்காகவும் முயற் சிகளை முன்னெடுப்புச் செய்யலாம். சர்வதேசம் எமக்கான தீர்வைப் பெற்றுத் தரும் என்று அரசனை நம்பி புருசனை கைவிட்ட கதையாக இல்லாது இராஜதந்திரதுடன் நாம் காய் நகர்த்தியாக வேண்டும்.

இதற்கு வடக்கு கிழக்கு என்றில்லாமல் இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் கடந்த காலங்களில் மேற் கொள்ளப்பட்டுவந்த இன அழிப்புச் செயற்பாடுகளைக் கண் டடைந்து அவற்றினை வெளிக் கொண்டு வருவதன் மூலம் இலங்கையில் தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக நிகழ்ந்த அனைத்துக் கொடுமைகளையும் வெளியுலகத்திற்கு கொண்டு வர முடியும். இதற்குத் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித் துவம் செய்யும் அனைத்துக் கட்சிகளும் தங்கள் ஒவ்வொருவ ருக்குள்ளும் உள்ள கசப்புக்களைக் கைவிட்டு ஒன்றாக நின்று ஒருமித்த குரலில் பேசவேண்டும்.



siva.murugupillai@thaiveedu.com



# கொலம்பசின் தொலைபேசி அழைப்பும்

# டொனால்ட் டிரம்பின் காலை வணக்கமும்

– ரதன்



> “அமெரிக்கா கிறிமினல் குற்றஞ்சாட்டப்பட்ட அகதிகளை எல்-சல்வடோருக்கும், சூடானுக்கும் அனுப்புகின்றது. எல்-சல்வடோர் முகாம் மிகவும் கடுமையான சிறையாகும். இதே போன்ற தடுப்புச் சிறையொன்றை அண்மையில் அமெரிக்கா புளோரிடா மாநிலத்தில் திறந்துள்ளது.”

கொலம்பஸ் தொலைபேசியில் பூர்வீக முதன் குடியினருக்கு அறிவித்துவிட்டு வந்தார். அவரது ஐரோப்பிய வம்சாவளியினர் அமெரிக்கக் கண்டத்தையே தங்களதாக்கினர். இன்று பூர்வீக முதன் குடிகள் மூன்றாந்தரப் பிரசைகளாக உள்ளனர். அரசாளும் ஐரோப்பியர் அகதிகளை வெளியேற்றத் தொடங்கிவிட்டனர். யாரின் நிலத்தில் யார் ஆட்சி செய்து யாரை வெளியேற்றுவது ?

இன்று மக்கள் அகதிகளாகப் பல்வேறு மேற்கு நாடுகளுக்குச் செல்கின்றனர். இலங்கையில் இனப் போர் நடைபெற்ற காலங்களில் இந்தியா சென்றவர்கள் இன்றும் அகதி முகாம்களில் உள்ளனர். பல இன்னல்களை இவர்கள் சந்தித்து வருகின்றனர். மூன்றாம் உலக நாடுகள் அகதிகளை மனிதர்களாகக் கூட மதிப்பதில்லை. பாலஸ்தீன மக்கள் அகதிகளாக புலம் பெயர்ந்துள்ள அண்டை நாடுகளான ஜோர்டான், லெபனான், எகிப்து போன்ற நாடுகளிலும் அந்த நாட்டு மக்கள் தங்களது வேலை வாய்ப்பிற்கு இவர்கள் தடையாகவுள்ளார்கள் என்ற எதிர்க் குரல் எழுப்புகின்றார்கள். தற்பொழுது கனடா போன்ற நாடுகளிலும் இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கள் இவர்களால் பறிபோவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. கனடா உட்பட்ட மேற்கு நாடுகள் புதிய சட்டங்களையும் இயற்றியுள்ளன. அவுஸ்திரேலியா நீண்ட காலமாகவே பசிபிக் தீவுகளுக்குப் புகலிடம் கோருபவர்களை அனுப்பி வருகிறது. இத்தாலி அல்பேனியாவிற்கு அகதிகளை அனுப்பும் திட்டத்தை வைத்துள்ளது. இத்தாலி போன்று மற்றைய ஐரோப்பிய நாடுகளும் சட்டங்களை மாற்றவுள்ளன. தற்பொழுது போலாந்தில் அகதிகளுக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. தீவிர வலது சாரி அமைப்புக்கள் இப் போராட்டத்தை நடாத்துகின்றன. வலது சாரி அமைப்புக்கள் அகதிகள் வருகை போலாந்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளது எனத் தெரிவிக்கின்றன. போலாந்திற்குத் தற்பொழுது உக்கிரைன் அகதிகளே அதிகளவு வருகின்றனர். சிரிய அகதிகளும் வருகின்றனர். கிறீன் போர்டர் அதாவது பசுமை எல்லை என அழைக்கப்படும் பெலரஸ்-போலாந்து எல்லை நீண்ட காலமாகவே அகதிகளுக்குச் சிக்கல்களை அளித்தன. பல அகதிகள் இங்கு இறந்துள்ளனர். ஐரோப்பிய நாடுகளுக்கு (பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள்) செல்வதற்காக பெலரஸ், போலாந்து எல்லையினூடாக செல்கின்றனர். போலாந்தின் எண்பதுக்கும் மேற்பட்ட நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. ஏற்கனவே அகதிகளை அங்கீகரிப்பதற்கு எதிராகப் போலாந்தில் கடுமையான சட்டங்கள் உள்ளன.

அமெரிக்கா கிறிமினல் குற்றஞ்சாட்டப்பட்ட அகதிகளை எல்-சல்வடோருக்கும், சூடானுக்கும் அனுப்புகின்றது. எல்-சல்வடோர் முகாம் மிகவும் கடுமையான சிறையாகும். இதே போன்ற தடுப்புச் சிறையொன்றை அண்மையில் அமெரிக்கா புளோரிடா மாநிலத்தில் திறந்துள்ளது. இங்கே ஒரு கூட்டிற்குள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். இதனை அமெரிக்க ஊடகங்கள் கண்டித்துள்ளன.

அமெரிக்காவில் ஐ.என்.எஸ் (Immigration and Naturalisation Service) விசா செயலாக்கம் மற்றும் புகலிடம் முதல் நாடுகடத்தல் வரை அனைத்தையும் INS செயல்படுத்தியது.

1996-இல் ஒரு குடியேற்றச் சட்டம் நிறைவேற்றப்பட்டது, இது ஒருவரை நாடு கடத்தக்கூடிய குற்றங்களின் பட்டியலை விரிவுபடுத்தியது. மற்றும் சில புலம்பெயர்ந்தோருக்குக் கட்டாயக் காவலை உருவாக்கியது. ஐ.என்.எஸ் நிறுவனம் தனியார் சிறைச்சாலைகளை நம்பியிருந்தது. 9/11-இற்குப் பிறகு, ஐ.என்.எஸ்க்குள் டி.எச்.எஸ் எனப்படும் உள்நாட்டுப் பாது

காப்புத்துறை மற்றும் ஐஸ் உருவாக்கப்பட்டது. அமெரிக்கா அகதிகளை தேசிய பாதுகாப்பு கண்ணோட்டத்திலேயே பார்ப்பதற்காக அமெரிக்க புத்திஜீவிகள் கருத்துத் தெரிவித்து அகதிகள் வெளியேற்றத்தை ஆதரிக்கின்றனர். ஐஸ் அமைப்பிற்குள் ERO, HSI போன்ற அமைப்புக்கள் உண்டு. ஐஸ் தற்பொழுது மிகத் தீவிரமாக ஒவ்வொரு அகதியையும் சந்தேகக் கண்ணுடன் பார்க்கின்றது. அமெரிக்க இடதுசாரிகள் ஐஸ் நிறுவனத்தை நச்சுத்தன்மை வாய்ந்ததாகக் கருதுகின்றனர்.

மூன்றாம் உலக நாடுகளின் சட்டமின்மையிலிருந்து லொஸ் ஏஞ்சல்ஸ் நகரைக் காப்பாற்றுவோம் என டொனால்ட் டிரம்ப் கூறினார். நான் உடனடியான நடவடிக்கை எடுக்காவிட்டால் லொஸ் ஏஞ்சல்ஸ் தரைமட்டமாகிவிடும் என மேலும் தெரிவித்துள்ளார். இவரது இந்தக் கருத்துக்கள் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அகதிகள் கைதுக்கு எதிராக நடைபெறும் போராட்டங்களை குறிவைத்தே கூறப்பட்டுள்ளது. இவர் தனது அரசுக்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்கும் அமெரிக்காவில் பிறந்த முதலாம் தலைமுறையினரையும் குறிவைக்கின்றார். இவர்களையும் வெளியேற்றுவதற்கான சாத்தியங்கள் உண்டு. இந்த வெளியேற்றங்களுக்கான மொத்தச் செலவு ஒரு ரில்லியன் டொலர்கள் செலவாகும் எனக் கணிக்கப்படுகின்றது. புதிதாக பல ஐஸ் அதிகாரிகளை வேலைக்கமர்த்தியுள்ளார்கள்.

மத்திய அமெரிக்க நாடுகளில் Notre என்பது சொர்க்கத்தைக் குறிக்கும். உண்மையான பொருள் வடக்கு. வடக்கு என்பது அவர்களுக்குச் சொர்க்கம். அப்படியென்ன வடக்கில் உள்ளது? அமெரிக்கா, மத்திய அமெரிக்க நாடுகளில் அமைதியைக் குலைத்து உள் நாட்டு யுத்தங்களை ஏற்படுத்தியதில் உலகின் வல்லரசுக்குப் பெரும் பங்கு உண்டு. சொர்க்க நாட்டால் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அமைதியின்மை அவர்களை வடக்கு நோக்கி நகரவைக்கின்றது. மெக்சிக்கோவிலிருந்து கலிபோர்னியா நுழைவாயிலைக் குழாய்கள் மூலம் இணைத்து அந்தக் குழாய்களினூடாக மக்கள் கலிபோர்னியாவிற்கு வருகின்றார்கள். குழாயினுள் இருட்டு, கழிவு நீர் ஓடிக்கொண்டிருக்கும், எலிகள் சுதந்திரமாக நடமாடும். எலியிடம் கடி வாங்கி, கழிவு நீர் குடித்து உடலெங்கும் காயத்துடன் கலிபோர்னியா வந்தால், அங்கு கடின வேலை. அந்தஸ்து அற்ற அகதி. இப்போது அதுவுமில்லை. கால்களில், கைகளில் விலங்கிட்டு, விலங்குகள் போல் வெளியேற்றம்.

> ***“எலியிடம் கடி வாங்கி, கழிவு நீர் குடித்து உடலெங்கும் காயத்துடன் கலிபோர்னியா வந்தால், அங்கு கடினவேலை. அந்தஸ்து அற்ற அகதி. இப்போது அதுவுமில்லை. கால்களில், கைகளில் விலங்கிட்டு, விலங்குகள் போல் வெளியேற்றம்.”***

1800-களின் பிற்பகுதியில் கலிபோர்னியாப் பகுதியில் வேலை பார்த்து வந்த சீனர்களுக்கு எதிராக அமெரிக்கா Chinese Exclusion Act மற்றும் Geary Act ஆகியவற்றை அறிமுகப்படுத்தி கொடுமைப்படுத்தியது. சீனர்கள் அமெரிக்கர்களின் வேலைகளைப் பறிப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. பின்னர் மேற்கொண்ட ஆய்வுகள் அமெரிக்கர்கள் செய்ய விரும்பாத வேலைகளையே சீனர்கள் செய்ததாக உறுதிப்படுத்தப்பட்டது.

நியூயோர்க் நகராட்சியின் கணக்காளர் நாயகம் பிராட் லன்டர் (Brad Lander) யூன் 17 அன்று கைது செய்யப்பட்டார். இவர் ஒரு வழக்கறிஞர். எதிர்வரும் நியூயோர்க் நகர மேயருக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர். நீதி மன்றத்தில் குடிவரவாளர் ஒருவர் மீதான குடியுரிமைக் கோரிக்கை வழக்கில் குடிவரவாளர் சட்ட விரோதமாகக் குடியேறியுள்ளார் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனாலும் அவருக்கு ஒரு மாத கால அவகாசம் மேன்முறையீடு செய்வதற்காக வழங்கப்பட்டது. அக் குடிவரவாளர் நீதி மன்றத்திலிருந்து வெளியேறும் பொழுது அவரை ஐஸ் எனப்படும் அமைப்பு கைது செய்ய முயன்றது. குடிவரவாளரை நீதி மன்றத்திலிருந்து வெளியே பிராட் அழைத்து வந்த போதே அவர் கைது செய்யப்பட்டார். இதற்கு முன்பாகவும் கலிபோர்னியா மாநில செனட்டர் Alex Padilla, அமெரிக்காவின் உள்நாட்டு அமைச்சர் Kristi Noem-மிடம் கேள்விகேட்க முற்பட்டபோது கைது செய்யப்பட்டார். அவர் நிலத்தில் விழுத்தப்பட்டு, அவர் மீது வன்முறைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு கைது செய்யப்பட்டார்.

யூன் மாதம் ஆறாம் நாளிலிருந்து அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் போராட்டங்கள் ஆரம்பித்தன. இது பின்னர் அமெரிக்காவின் பல நகரங்களில் நடைபெற்றது. இதற்கிடையில் யூன் 14-ஆம் திகதி Kings protests அமெரிக்கா எங்கும் நடைபெற்றது. உறுதிப்படுத்தப்படாத ஊடக தகவல்கள் அமெரிக்காவின் 2100 நகரங்கள், சிறிய நகரங்களில் இப் போராட்டம் நடைபெற்றது எனத் தெரிவிக்கின்றன. இப் போராட்டம் டொனால்ட் டிரம்பிற்கும், அவரது அரசின் நடவடிக்கைகளுக்கும் எதிராக நடைபெற்றது. யூன் 14-ஆம் திகதியன்று அமெரிக்க இராணுவத்தின் 250-ஆவது நிறைவு நாள் கொண்டாட்டம், அமெரிக்காவின் தலைநகரம் வோசிங்டனில் நடைபெற்றது. அத்துடன் அன்று டொனால்ட் டிரம்பின் 79-வது பிறந்த நாளாகும்.

### மத்திய அரசும் நீதி மன்றங்களும்:

அமெரிக்காவின் சட்ட திட்டங்கள் வித்தியாசமானவை. பொதுவாகவே சட்ட அமுலாக்கம் நாட்டுக்கு நாடு வேறுபடும். அமெரிக்காவில் ஜனாதிபதி தனது executive order என்பதன் மூலம் தான் நினைத்தவற்றைச் சாதிக்க முடியும். அத்துடன் நீதி மன்றத்தால் தண்டனை பெற்றவர்களை பொது மன்னிப்பு மூலம் விடுதலை செய்யும் அதிகாரமும் ஜனாதிபதிக்குண்டு. டொனால்ட் டிரம்ப் தேர்தல் பிரச்சாரத்தின் போது ஆவணமற்ற மற்றும் சட்டத்துக்கு மாறாக அமெரிக்காவில் வாழ்பவர்களை நாட்டை விட்டு உடனடியாக வெளியேற்றுவேன் எனக் கூறியிருந்தார். இங்கு ஆவணமற்ற என்பதற்கும் சட்டத்துக்கு மாறானதென்பதற்குமிடையில் பெரிய வேறுபாடுகள் இல்லை. டொனால்ட் டிரம்ப் ஆட்சிக்கு வந்தவுடன் ஐஸ் அமைப்பிற்கு, சட்டத்துக்கு மாறானவர்களை கைது செய்ய உத்தரவிட்டார். கைது செய்யப்பட்டவர்கள் தங்களது சொந்த நாடுகளுக்கு அனுப்பப்பட்டார்கள். சிலர் எல்-சல்வடோரில் உள்ள CECOT (Centro de Confinamiento del Terrorismo முகாமுக்கு அனுப்பப்பட்டார்கள். இந்தச் சிறையில் 40,000 பேர்வரை சிறைவைக்கக் கூடிய வசதிகள் உண்டு. இது 2023-இல் ஆரம்பிக்கப்பட்டது. மிகவும் கொடூரமான சிறை என இதனை மனித உரிமை




அமைப்புக்கள் விமர்சித்துள்ளன.

டொனால்ட் டிரம்ப் பதிவியேற்ற முதலாம் நாள் CHNV (Parole for Cubans, Haitians, Nicaraguans, and Venezuelans) திட்டத்தை இரத்துச் செய்தார். இத் திட்டத்தின் படி கியூபா, ஹெய்ரி, நிக்கராகுவா,வெனிசூலா நாடுகளிலிருந்து வந்தோருக்கு, ஏற்கனவே அமெரிக்காவில் வாழும் ஒருவர் இவர்களது வாழ்க்கைச் செலவை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் இரண்டு வருடங்கள் தங்குவதற்கான அனுமதிவழங்கப்படும்.

“ அமெரிக்காவிற்கும் எல்-சல்வடோருக்குமான ஓர் ஒப்பந்தம் மூலம் அமெரிக்கா சட்டத்துக்கு மாறானவர்களை அங்கு அனுப்புகின்றது. வெனிசூலா கும்பல் என அடையாளப்படுத்தப்பட் டவர்களே இங்கு அதிகம் அனுப்பப்பட்டார்கள். ”

அமெரிக்காவிற்கும் எல்-சல்வடோருக்குமான ஓர் ஒப்பந்தம் மூலம் அமெரிக்கா சட்டத்துக்கு மாறானவர்களை அங்கு அனுப்புகின்றது. வெனிசூலா கும்பல் என அடையாளப்படுத்தப்பட்டவர்களே இங்கு அதிகம் அனுப்பப்பட்டார்கள். அவ்வாறு சென்றவர்களுக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டன. நீதி மன்றம் அவர்களை மீண்டும் அமெரிக்காவுக்குக் கொண்டுவருமாறு ஆணை பிறப்பித்திருந்தது.

டொனால்ட் டிரம்ப் 2.0-இன் அரசாட்சிக் குழு நீதி மன்றங்கள், கொங்கிரஸ் மற்றும் ஜனாதிபதியின் நடவடிக்கைகளில் இடையூறு செய்கின்றது என்ற குற்றச்சாட்டை முன்வைக்கின்றார்கள். இது பொதுவாக ஜனநாயக ஆட்சியில் நடைபெறுவது. எனினும், டொனால்ட் டிரம்ப் 2.0 நீதி மன்றத் தீர்ப்புக்களை மதிக்கவில்லை. டொனால்ட் டிரம்ப் 2.0 அரசு தாங்கள் நீதியானவர்கள் என்பதனைப் பொது வெளியில் தெரியப்படுத்தவே நீதி மன்றத்தை பயன்படுத்துகின்றார்கள். டொனால்ட் டிரம்ப் 2.0 நீதியையும் நீதி மன்றத்தையும் மதிப்பதில்லை.

அமெரிக்கச் சட்டத்தால் மக்களுக்கு வழங்கப்பட்ட சட்ட உரிமைகள் மற்றும் நீதிமன்ற நடைமுறைகளைப் பயன்படுத்த உரிய நடைமுறைச் சட்டங்கள் அனுமதிக்கின்றன. ஒரு நீதிபதி போன்ற நடுநிலை முடிவெடுப்பவரின் முன்னிலையில் அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட ஒரு நடவடிக்கையை எதிர்த்துப் போராட அனுமதிக்கிறது என்றும் உச்ச நீதிமன்றம் கூறுகிறது.

### கலிபோர்னியா:

கலிபோர்னியா அமெரிக்க மாநிலங்களில் தனித்துவமானது. இங்கே தான் டொனால்ட் டிரம்ப் 2.0-இற்கு எதிரான குடிவரவுப் போராட்டங்கள் ஆரம்பமானது. கலிபோர்னியா கடந்த பல தேர்தல்களில் ஜனநாயகக் கட்சியையே ஆதரித்து வந்தது. கலிபோர்னியாவின் தற்போதைய கவர்னர் கவின் நியூசம் (Gavin Newsom). இவரும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவராவர். யூன் ஆறு தொடங்கிய போராட்டங்களை அடக்குவதற்கு டொனால்ட் டிரம்ப, 4000 கலிபோனியாவின் தேசியப் படைகளை பாதுகாக்கக் கட்டாயப்படுத்தினார். இது அமெரிக்க அரசியலமைப்புக்கு எதிரானது என கவர்னர் வாதிட்டார். கவர்னர் நீதி மன்றத்தை நாடினார். கலிபோர்னியா நீதி மன்றம் கவர்னருக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது. மேல் நீதி மன்றம் டொனால்ட் டிரம்பின் முடிவை ஏற்றுக் கொண்டது. கலிபோர்னியா மாநிலம், சட்டம் 54-ஐ நடைமுறைப்படுத்தியதன் மூலம் சட்டத்துக்கு மாறான குடிவரவாளர்களை மத்திய அரசிடமிருந்து ஒரு சில விடயங்களில் பாதுகாத்தது. சட்டம் 54-இற்குத் துணையாக சட்டங்கள் 450, 251-ஐ அமுல்படுத்தியது. இச் சட்டங்கள் குடிவரவாளர்களைப் பற்றிய விபரங்களை மத்திய அரசுக்கு நிறுவனங்கள் கொடுப்பதை தவிர்க்கின்றது. பாதுகாப்பு அதிகாரிகளும் இவர்களிடம் அடையாள அட்டைகள் கேட்பதைக் கட்டுப்படுத்துகின்றது.

இச்சட்டங்களை டொனால்ட் டிரம்ப் ஏற்றுக்கொள்ளவில்லை. மாநில அரசுகளைக் குறிப்பாக ஜனநாயாக கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களை மதிக்கவில்லை. மாநிலங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கவேண்டும் என்பது டொனால்ட் டிரம்பின் தீர்மானம். மாநிலங்களின் சுயத்துக்கு எதிராகவே டொனால்ட் ரம்ப் 2.0 அரசு செயல்படுகின்றது.

மாநிலத்துக்கான சுய செயல்பாடுகளின் எல்லைகளை மத்திய அரசு மீறுகின்றது. தன்னிச்சையாகச் செயல்படுகின்றது போன்ற குற்றச்சாட்டுக்கள் ஊடகங்களாலும், கலிபோர்னியா புத்திஜீவிகளாலும் முன்வைக்கப்பட்டது. இதற்கிடையில் ஏற்கனவே கலிபோர்னியா அமெரிக்க சாம்ராச்சியத்திலிருந்து பிரிந்து தனிநாடாக செயல்படவேண்டும் என்ற கோரிக்கை முன்னெழுந்திருந்தது. டொனால்ட் டிரம்பின் செயல்பாடுகளின் பின்னர் இது மீண்டும் துளிர்விடுகின்றது.

கலிபோர்னியா அமெரிக்காவின் 30-வது மாநிலமாக, மெக்சிக்கோ-அமெரிக்கப் போரின் (1846-1848) பின்னர் 1848-.ல் இணைக்கப்பட்டது. இதற்கு முன்பாகக் கலிபோர்னியா நியூ ஸ்பெயினின் ஒரு பகுதியாகவிருந்தது. நியூ ஸ்பெயின்

மெக்சிக்கோ, கலிபோர்னியா, புளோரிடா, கொலம்பியா, பிலிப்பைன்ஸ் போன்ற பகுதிகளை உள்ளடக்கியது. Province of Las Californias என்பது; அமெரிக்க மாநிலங்களான நிவேடா, யூற்றா, அரிசோனா, வயோமிங், கொலராடோ மற்றும் தற்போதைய மெக்சிக்கோவின் Baja California , Baja California Sur ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது.

தற்போது கலிபோர்னியா பிரிந்து செல்லவேண்டும் என ஒரு குழு அதற்கான செயல்களத்தில் உள்ளது. Calexit என்ற பெயரிலேயே இதன் நடவடிக்கைகள் உள்ளன. 2028-ஆம் ஆண்டு சர்வசனவாக்கெடுப்பு நடாத்துவதற்கு இக்குழு முயற்சி மேற்கொள்கின்றது. இது ஆரம்ப கட்டத்திலிருந்தாலும், டொனால்ட் டிரம்பின் நடவடிக்கைகள் இக்குழுவிற்குச் சாதகமாகவேயுள்ளது. 2022-ஆம் ஆண்டு கலிபோர்னியாவின் தேசிய உற்பத்தி 3.9 ரில்லியன் டொலர்களாகும். இது ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி, கனடா, பிரான்ஸ் போன்ற நாடுகளை விட அதிகமாகும். Texas Nationalist Movement (TNM) ரெக்சாஸ் மாநிலத்தை அமெரிக்காவிலிருந்து பிரிப்பதற்கும், ரெக்சாஸ் தனிநாடாக செயல்படுவதற்குமாகப் போராடுகின்றது. இதுவும் ஆரம்பக் கட்டத்தில் உள்ளது. ரெக்சாஸ் மாநில தேசிய உற்பத்தியும் பல நாடுகளை விட அதிகமாகும். கலிபோர்னியா, ரெக்சாஸ் மாநிலங்கள் இயற்கை வளங்களை அதிகமாகவும், பல கனிமங்களையும் கொண்டுள்ளன.

பல மாநிலங்கள் டொனால்ட் டிரம்பின் குடிவரவுக் கொள்கைக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றன. ஐஸின் அடாவடித்தனமான குடிவரவாளர்களைக் கைது செய்வதை எதிர்க்கின்றன.

## Operation Aurora:

டொனால்ட் ரம்பன் குடிவரவாளர்களை கூண்டோடு வெளியேற்றும் இயக்கத்துக்கான பெயர்.

இந்த நடவடிக்கையால் எத்தனை பேர் மற்றும் எந்தப் புலம்பெயர்ந்தோர் குறிவைக்கப்படுவார்கள் என்பதை இது ஆராய்கிறது. இந்த முயற்சி 1954-ஆம் ஆண்டு Operation Wetback உடன் ஒப்பிடப்படுகிறது. அதன் ஒற்றுமைகள் மற்றும் வரலாற்றுத் தவறுகள் மீண்டும் நிகழும் அபாயங்கள் உள்ளன எனத் தெரிகின்றது. டொனால்ட் டிரம்பின் குடிவரவுக் கொள்கைகளை வடிவமைத்தவர் ஸ்ரீபன் மில்லர் ஆவார். இவர் அடிப்படையில் குடிவரவாளர்களுக்கு எதிரானவர். டொனால்ட் டிரம்ப் 1.0-இல் டொனால்ட் டிரம்பின் பேச்சுக்களை எழுதிக்கொடுப்பவர். 'Project 2025' குடியரசுக் கட்சியின் திட்டம். இதில் குடிவரவாளர்களை வெளியேற்றுவது முதலில் உள்ளது. MAGA (Make America Great Again) மீண்டும் அமெரிக்காவைச் சிறந்த நாடாக்கு என்ற கோசத்துக்கு அமையவே குடிவரவாளர்கள் வெளியேற்றம் உள்ளது என்ற பிரச்சாரத்தையும் குடியரசுக் கட்சியினர் செய்து வருகின்றனர்.

ஐசன்ஹவரின் (முன்னால் அமெரிக்க ஜனாதிபதி) நாடுகடத்தல் கொள்கை ஒரு துயரச் சம்பவம். மனித உரிமைகள் மீறப்பட்டன. உணவு அல்லது தண்ணீர் இல்லாமல் மக்கள் தூர இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். தேவையற்ற மரணங்கள் பல நிகழ்ந்தன. சில சந்தர்ப்பங்களில், ஹிஸ்பானிக் வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கக் குடிமக்கள் கூட நாடு கடத்தப்பட்டனர். அது அபத்தமானது. அது பயங்கரமானது. குடியேறியவர்கள் அவமானப்படுத்தப்பட்டனர். இராணுவமும் துணைக்கழைக்கப்பட்டது. ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஜோசப் ஸ்விங் தலைமையில் நடைபெற்றது, அவர் 1954-ஆம் ஆண்டு கோடையில் அதைச் செயல்படுத்தினார். ஒரு மில்லியன் இளம் மெக்சிகன்கள் நாடு கடத்தப்பட்டனர்.

நாடு கடத்தப்பட்ட பலர் மீண்டும் அழைக்கப்பட்டனர். வேலைக்குத் தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்ட நேரங்களில் மெக்சிக்கோவிலிருந்து வேலை செய்தோரில் பலர் முன்னர் வெளியேற்றப்பட்டவர்களாவார்கள். மெக்சிக்கன் பிரசைகளை நாடுகடத்தும் பொழுது, மெக்சிக்கோவும் அமெரிக்காவுடன் உடன்பட்டிருந்தது. காரணம் மெக்சிக்கோவிலும் வேலை செய்வதற்கு தொழிலாளர்கள் பற்றாக்குறையிருந்தது.

கிளின்டன் தொடங்கி ஒபாமாவரை நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது. ஆனால் டொனால்ட் டிரம்ப் 1.0 ஆட்சியின் போது இந்த எண்ணிக்கை குறைந்திருந்தது. காரணம் ஐஸ் அமைப்புடனும் டொனால்ட் டிரம்புடனும் மாநில மற்றும் நகர அரசுகள் ஒத்துழைக்க மறுத்தமையாகும்.

சராசரியாக ஒரு வருடத்தில் இவர்கள் ஆட்சியில் நாடுகடத்தப்பட்டவர்கள்

| | |
|---|---|
| ஒபாமா | 385,000 |
| கிளிண்டன் | 143,000 |
| புஷ் | 252,000 |
| டிரம்ப் 1.0 | 299,000 |
| பைடன் | 174,000 |

Nicolás Maduro வெனிசூலா ஜனாதிபதி. இவர் தேர்தலில் வெற்றி பெற்றபோது இவரது வெற்றியை அமெரிக்க அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. இவரை டொனால்ட் டிரம்ப் 2.0-இன் விசேட அதிகாரி நேரில் சென்று சந்தித்து வெனிசூலா அகதிகளை ஏற்றுக்கொள்ளுமாறு கூறினார். கொலம்பியா தனது பிரசைகளை ஏற்றுக் கொள்ள மறுத்த போது, டொனால்ட் டிரம்ப் கொலம்பியாவிற்கு 25 வீத சுங்க வரி விதித்துப் பயமுறுத்தியே அடிபணியவைத்தார். ஒட்டு மொத்தக் குடிவரவாளர்கள் வெளியேற்றத்துக்கான செலவு 315 பில்லியன் டொலர்களாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

## United States Immigration and Customs Enforcement (ICE):

ஐஸ் என அழைக்கப்படுவது; அமெரிக்காவின் சுங்க மற்றும் குடிவரவு அமுலாக்கத் திணைக்களமாகும். ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட இதன் தலைமை நிர்வாகக் குழுவில் எந்தவொரு ஆபிரிக்க அமெரிக்கர்களுமில்லை. இதன் நோக்கம் என ஐஸின் இணையத்தளம் பின்வருமாறு தெரிவிக்கின்றது.

'நமது நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பதும், நமது குடியேற்ற அமைப்பின் ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதும் நாடு முழுவதும் உள்ள ஐஸ் அதிகாரிகள் மற்றும் முகவர்களின் முதன்மையான நோக்கம் ஆகும். குடியேற்ற அமுலாக்கம் என்பது ஐஸின் மிகப்பெரிய ஒற்றைப் பொறுப்பாகும், மேலும் இது நமது நாட்டின் ஒட்டுமொத்தப் பாதுகாப்பு (Safety and Security) மற்றும் நல்வாழ்வின் ஒரு முக்கிய அங்கமாகும்.

ஐஸ் திணைக்களம், அமெரிக்காவின் உள் நாட்டுப் பாதுகாப்பு அமைச்சின் Department of Homeland Security (DHS))கீழ் உள்ளது. 9/11 சம்பவத்தின் பின்னர் 2002-இல் உருவாக்கப்பட்டது. ஐஸில் சுமார் இருபதினாயிரம் பேர் வேலை பார்க்கின்றனர். அமெரிக்கா முழுவதுமாக 400 அலுவலகங்கள் இதற்குண்டு. ஐஸிற்கான மொத்தச் செலவு (Wages only) 8 பில்லியன் டொலர்களாகும். அமெரிக்கா முழுவதும் 122 குடிவரவாளர்களின் தடுப்பு முகாம்கள் ஐஸினால் நிர்வகிக்கப்படுகின்றன.

2023-ஆம் ஆண்டு அமெரிக்காவில் வாழும் 51.3 மில்லியன் மக்கள் வேறு நாடுகளில் பிறந்துள்ளார்கள். இவர்களில் 49 வீதமானவர்கள் அமெரிக்கப் பிரசாவுரிமை பெற்றவர்கள். 19 வீதமானவர்கள் நிரந்தர வதியுரிமை பெற்றவர்கள். 5 வீதமானவர்கள் மாணவர்கள், வேலை பார்ப்பதற்கான அனுமதி பெற்றவர்கள், 27 வீதமானவர்கள் அல்லது 13.7 மில்லியன் மக்கள் சட்டத்துக்கு மாறாக அமெரிக்காவில் வாழ்பவர்கள். இவர்களில் 4 மில்லியன் மக்கள் ஏதோ ஒரு வகையில் நாட்டைவிட்டு வெளியேற்றப்படமுடியாமல் தற்காலிக அனுமதியுள்ளவர்கள். மிகுதி 9.7 வீதமானவர்கள் அமெரிக்காவின் மொத்தச் சனத்தொகையின் மூன்று வீதமானவர்களாவார்கள். மேலே குறிப்பிட்ட 4 மில்லியன் தற்காலிக வாழ்வுரிமை பெற்றவர்களில் 2.1 மில்லியன் மக்கள் தங்களது அகதிக் கோரிக்கையின் நீதிமன்ற முடிவுக்காகக் காத்திருப்பவர்கள். 521,000 பேர் ஆப்கானிஸ்தான் மற்றும் உக்கிரேயின் போன்ற நாடுகளிலிருந்து அரசியல் தஞ்சம் பெற்றோர். 654,000 பேர் மீண்டும் தங்களது நாடுகளுக்குச் செல்வதற்கு பாதுகாப்பற்றவர்கள். 562,000 பேர் குழந்தைப் பருவத்தில் நாட்டினுள் வந்தமையால் பாதுகாக்கப்படுபவர்கள். (Deferred Action for Childhood Arrivals)

குறிப்பாக 5.1 மில்லியன் அமெரிக்காவில் பிறந்த சிறார்களின் (அமெரிக்க பிரசாவுரிமை பெற்றவர்கள்) பெற்றோர்கள் உரிய ஆவணமற்றவர்கள்.

அமெரிக்காவுடன் ஒப்பிடும் பொழுது இந்தியாவிலேயே அதிகளவு ஆவணமற்ற குடிவரவாளர்கள் வாழ்கின்றனர். இவர்களில் 20 மில்லியன் பங்களாதேசப் பிரசைகள். ஒரு முரண் நிலை அதே பங்களாதேசில், ஆவணமற்ற மியன்மார் (பர்மா) குடிவரவாளர்கள் மில்லியன் கணக்கில் வாழ்கின்றனர். கனடாவிலும் சுமார் ஐந்து லட்சம் ஆவணமற்ற குடிவரவாளர்கள் உள்ளனர்.

சட்டத்துக்கு மாறாக அமெரிக்காவினுள் வருபவர்களில் அதிகளவானவர்கள் மெக்சிக்கோ நாட்டைச் சேர்ந்தவர்கள். அடுத்த படியாக எல் சல்வடோர், இந்தியா, கோதமாலா, கொன்டுரஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். தெற்கு எல்லையாக மெக்சிக்கோ இருப்பதனால் பலர் மெக்சிக்கோவினூடாக அமெரிக்காவிற்குள் வருகின்றனர். அதே சமயம் வட எல்லையில் கனடா இருப்பதனால் இந்தியர்கள் உட்பட பலர் கனடாவினூடாக அமெரிக்காவிற்குள் செல்கின்றனர். அதிகளவு சட்டத்துக்கு மாறான குடிவரவாளர்களை உள்வாங்கும் மாநிலங்களாக கலிபோர்னியா முதலிடத்திலும், ரெக்சாஸ் இரண்டாமிடத்திலும், தொடர்ந்து புளோரிடா, நியூயோர்க், நியூஜேர்சி, இலினோய்ஸ் மாநிலங்கள் உள்ளன. இவற்றுள் கலிபோர்னியா, ரெக்சஸ் மாநிலங்கள் மெக்சிக்கோவின் அருகில் உள்ளன. கியூபாவிலிருந்து 90 மைல் தூரத்தில் புளோரிடா மாநிலம் உள்ளது.




> **குடியேற்ற மேல்முறையீட்டு வாரியத்தால் குடியேறிகள் நாடுகடத்தப்பட்டாலும் அவர்கள் அந்தத் தீர்ப்புகளை மீண்டும் ஒரு கூட்டாட்சி நீதிமன்றத்தின் முன் சவால் செய்யலாம்.**

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையில் வெளிவந்து குடிவரவுச் சட்டங்கள் பற்றிய விடயங்களின் சுருக்கம் இவை.

## ஆவணமற்ற குடியேறிகளுக்கு என்ன மாதிரியான முறையான நடைமுறைகள் உள்ளன?

நாட்டை விட்டு வெளியேற உத்தரவிடப்பட்ட புலம்பெயர்ந்தோர், குடியேற்ற நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறையால் மேற்பார்வையிடப்படும் நீதிபதிகள் சம்பந்தப்பட்ட சிவில் நடவடிக்கைகள் மூலம் நாடுகடத்தலை எதிர்த்துப் போராடலாம். அவர்கள் ஒரு குடிவரவு நீதிபதியின் முன் சாட்சியங்களையும் ஆதாரங்களையும் சமர்ப்பிக்கலாம், இது ஒரு விசாரணையைப் போன்றது. அவர்கள் ஒரு வழக்கறிஞரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படலாம் மற்றும் நீதித்துறையின் ஒரு பிரிவான குடியேற்ற மேல்முறையீட்டுத் திணைக்களத்துக்குச் சாதகமற்ற முடிவுகளை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாம்.

குடியேற்ற மேல்முறையீட்டு வாரியத்தால் குடியேறிகள் நாடுகடத்தப்பட்டாலும் அவர்கள் அந்தத் தீர்ப்புகளை மீண்டும் ஒரு கூட்டாட்சி நீதிமன்றத்தின் முன் சவால் செய்யலாம்.

இந்தச் செயல்முறை மாதங்கள் அல்லது ஆண்டுகள் கூட ஆகலாம், குறிப்பாக இதுபோன்ற வழக்குகள் குறிப்பிடத்தக்க அளவில் தேக்கமடைவதால்.அரசாங்கம் அந்தச் செயல்முறையைத் தவிர்க்க முடியுமா? என்ற கேள்வியுள்ளது.

1996-ஆம் ஆண்டு சட்டம் குடியேற்ற அதிகாரிகள் விசாரணை, வழக்கறிஞர் அல்லது மேல்முறையீட்டு உரிமை இல்லாமல் சில நிபந்தனைகளின் கீழ் மக்களை நாடு கடத்த அனுமதிக்கிறது. இந்த செயல்முறை விரைவான நீக்கம் என்று அழைக்கப்படுகிறது. தற்போதைய கொள்கையின் கீழ், விரைவான நீக்கத்திற்கான உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையின் அளவுகோல்கள் எல்லையிலிருந்து 100 மைல்களுக்குள் மற்றும் நாட்டிற்குள் நுழைந்த 14 நாட்களுக்குள் காணப்படும் ஆவணமற்ற புலம்பெயர்ந்தோருக்குப் பொருந்தும்.

இந்தச் சட்டம் எந்தப் புவியியல் வரம்பையும் விதிக்கவில்லை மற்றும் ஒரு புலம்பெயர்ந்தவர் நாட்டிற்குள் நுழைந்த இரண்டு ஆண்டுகள்வரை விரைவான அகற்றல்களை அனுமதிக்கிறது. இது டிரம்ப் நிர்வாகம் இந்த அதிகாரத்தை மிகவும் தீவிர மாகப் பயன்படுத்தக்கூடும் என்ற சாத்தியத்தை எழுப்புகிறது.

மற்றொரு ஊடகமான என்.பி.சி ஊடகவியலாளருக்கும் டொனால்ட் டிரம்பிற்குமான உரையாடல் இவை.

'அவர்கள் உரிய நடைமுறை பற்றிப் பேசுகிறார்கள், ஆனால் நீங்கள் இங்கு சட்டவிரோதமாக இருக்கும்போது உரிய நடைமுறை கிடைக்குமா' என்று டிரம்ப் NBC இன் மீட் தி பிரஸ் மதிப்பீட்டாளரான கிறிஸ்டன் வெல்கரிடம் கேட்டார்.

'அரசியலமைப்பு ஒவ்வொரு நபரும், குடிமக்கள் மற்றும் குடி மக்கள் அல்லாதவர்களும் உரிய நடைமுறைக்குத் தகுதி யானவர்கள் என்று கூறுகிறது' என்று வெல்கர் பதிலளித்தார்.

பின்னர், அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் மார்கோ ரூபியோவின் கூற்றுப்படி, குடிமக்கள் அல்லாதவர்களுக்கும் உரிய நடைமுறைக்கு உரிமை உண்டு என்று கூறியதன் மூலம், டிரம்பிடம் அவர் உடன்படுகிறாரா என்று கேட்டார்.

**டிரம்ப்:** 'எனக்குத் தெரியாது. நான் ஒரு வழக்கறிஞர் அல்ல. எனக்குத் தெரியாது.'

**வெல்கர்:** 'சரி, ஐந்தாவது திருத்தச் சட்டம் அதைத்தான் சொல்கிறது.'

**டிரம்ப்:** 'எனக்குத் தெரியாது. அது அப்படிச் சொல்லலாம், ஆனால் நீங்கள் அதைப் பற்றிப் பேசுகிறீர்கள் என்றால், நாங்கள் ஒரு மில்லியன் அல்லது இரண்டு மில்லியன் அல்லது மூன்று மில்லியன் வழக்கு விசாரணைகளை நடத்த வேண்டும்.'

**வெல்கர்:** 'ஆனால் நீங்கள் குறிப்பிடும் எண்ணிக்கையைக் கருதினாலும், ஜனாதிபதியாக நீங்கள் அமெரிக்காவின் அரசியலமைப்பை நிலைநிறுத்த வேண்டிய அவசியமுள்ளதல்லவா?'

**டிரம்ப்:** 'எனக்குத் தெரியாது. நான் பதிலளிக்க வேண்டியுள்ளது. எனக்குப் பணிபுரிய சிறந்த வழக்கறிஞர்கள் உள்ளனர், அவர்கள் நிச்சயமாக உச்ச நீதிமன்றம் சொன்னதை வெளிப்படையாகப் பின்பற்றப் போகிறார்கள். நீங்கள் கூறுவதற்கும் மேல் நீதிமன்றம் கூறுவதற்குமிடையில் வேறுபாடுகள் உள்ளன. விளக்கங்கள் வேறாக உள்ளன'.

டொனாலட் டிரம்பின் தெளிவின்மையையும் தடுமாற்றத்தையும் முறையற்ற திட்டத்தையுமே மேலே உள்ள உரையாடல்கள் வெளிப்படுத்துகின்றன.



Top Ten Countries of Origin for the U.S. Unauthorized Immigrant Population, 2010 and 2023

Number of unauthorized immigrants  Share of overall unauthorized immigrant population

| | | |
|---|---|---|
| Mexico | 5,530,000 | 40% |
| Guatemala | 1,402,000 | 10% |
| Honduras | 1,098,000 | 8% |
| El Salvador | 1,078,000 | 8% |
| Venezuela | 486,000 | 4% |
| Colombia | 351,000 | 3% |
| Philippines | 294,000 | 2% |
| Brazil | 286,000 | 2% |
| Ecuador | 225,000 | 2% |
| India | 199,000 | 1% |

2023- ஆம் ஆண்டு 1.1 மில்லியன் குடிவரவாளர்கள் அமெரிக்காவை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். 2024 நவம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் 678,000 பேர் வெளியேற்றப்பட்டுள்ளாகள்;

## குடிவரவாளர்களும் தொழிற்துறையும்:

கட்டுமானம், விவசாயம் போன்ற துறைகளில் அதிகளவு வேலை பார்ப்போர் குடிவரவாளர்களாவார்கள். இவர்களின்றி இத் துறைகளின் பணிகளை முழுமையாக முடிக்கமுடியாது என இத்துறைசார்ந்த நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. அதிகளவு சட்டத்துக்கு மாறாக வாழும் குடிவரவாளர்களே இத் தொழில்துறைகளில் வேலை செய்கின்றளர்.

H-2B Temporary Non-Agricultural Workers மூலம் பல நிறுவனங்கள் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துகின்றார்கள். கட்டுமானப் பணிக்கு 66,000 தொழிலாளர்களையே அதிகபட்சம் இம்முறை மூலம் வேலைக்கமர்த்த முடியும். ஆனால் கட்டுமானப் பணியில் சுமார் 1,544,600 தொழிலாளர்கள் சட்டத்துக்கு மாறான குடிவரவாளர்கள் வேலை பார்க்கின்றனர். அப்படியிருந்தும் கட்டுமானத்துறை முழுமையான பணியாளர்களின்றியுள்ளது. இதே போன்ற நிலையே விவசாயத் துறைக்குமுள்ளது.

எனினும் இதற்கு ஏற்படும் காலத்தைக் கருத்திற்கொண்டு பல நிறுவனங்கள் அமெரிக்காவில் வாழும் குடிவரவாளர்களை முகவர்கள் மூலம் வேலைக்கமர்த்துகின்றார்கள்.

சட்டத்துக்கு மாறாக அமெரிக்காவில் வாழ்பவர்கள் பின்வரும் தொழில்துறைகளில் பெரும் பாலானவர்கள் வேலை பார்க்கின்றனர்.

**தொழில் வீதம்**

| | |
|---|---|
| கட்டுமானம் | 13.7 |
| விவசாயம் | 12.7 |
| விருந்தோம்பல் | 7.1 |
| பொது சேவைகள் | 6.5 |
| மொத்த வியாபாரம் | 5.5 |
| போக்குவரத்து | 5.5 |
| உற்பத்தி | 5.4 |
| தொழில்முறை சேவைகள் | 4.7 |



> "அமெரிக்காவினுள் குடிவரவாளர்கள் அதிகம் வருவதற்கான காரணம் அமெரிக்கா மீதான கவர்ச்சியாகும். அது மட்டுமல்லாமல் அமெரிக்கா தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் என்ற நம்பிக்கையுமாகும்."

உரிய ஆவணமற்றவர்கள் அமெரிக்காவின் தேசிய உற்பத் திக்குப் பெரும் பங்களிப்புச் செய்கின்றார்கள்.

| | |
|---|---|
| மத்திய வருமான வரிகள் | 46.80 பில்லியன் |
| மாநில மற்றும் உள்ளூர் வரிகள் | 29.30 பில்லியன் |
| சமூக பாதுகாப்பு பங்களிப்புகள் | 22.60 பில்லியன் |
| மருத்துவக் காப்பீட்டு பங்களிப்புகள் | 5.70 பில்லியன் |

அமெரிக்காவில் சட்டவிரோதமாக இருந்து வேலை செய்ய அங்கீகரிக்கப்படாத குடிவரவாளர்களும் Taxpayer Identification Number, பெற்றுக்கொள்ளலாம் இதற்கு SSN இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

அமெரிக்காவினுள் குடிவரவாளர்கள் அதிகம் வருவதற்கான காரணம் அமெரிக்கா மீதான கவர்ச்சியாகும். அது மட்டுமல் லாமல் அமெரிக்கா தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த் தும் என்ற நம்பிக்கையுமாகும். அது மட்டுமல்லாமல் அமெ ரிக்கா மத்திய அமெரிக்கா, இலத்தீன் அமெரிக்காவில் குழப் பங்களை ஏற்படுத்தியது. இடது சாரிகள் ஆட்சிக்கு வந்தால் அங்கெல்லாம் ஆட்சிக் கவிழ்ப்பை ஏற்படுத்தியது. அந்த நாட்டு மக்களின் மனித உரிமைகள் ஒடுக்கப்படுவதற்கும் பிரதான காரணமாக அமெரிக்காவிருந்தது. அந்த நாடுகளின் வளங்கள் அமெரிக்காவால் சுரண்டப்பட்டன. பொருளாதார நலிவை அந்த நாடுகள் அடைந்தன. அந்த நாட்டு மக்கள் வாழ வழி தேடி அமெரிக்கா வருவதில் என்ன தவறு? இது ஒரு பக்கமிருக்க கலிபோர்னியா போன்ற வளர்ச்சி பெற்ற மாநிலங்களின் தொழிற்துறை விருத்தியடைய குடிவரவாளர் களே உதவினர். இந்த மாநிலங்களை பொருளாதாரத்தில் வீழ்ச்சியடையச் செய்யவும் டொனால்ட் டிரம்ப் 2.0 விரும்பு கின்றது. டொனால்ட் டிரம்ப் 2.0 ஆட்சி சாதாரண மக்களின் சுபீட்ச வாழ்வுக்கு எதிரானது. குடிவரவாளர்களின் வெளியேற் றத்தால் உற்பத்தி குறைவடையும் பொழுது, பொருட்களின் விலை கூடும். பணவீக்கம் ஏற்படும். முன்னர் நடைபெற்றது போல் வெளியேற்றிய குடிவரவாளர்களையே மீண்டும் அழைத்துவந்து வேலை கொடுக்கவேண்டிய நிலையேற்பட லாம்.

**அடிக்குறிப்பு:**

- https://www.pbs.org/newshour/nation/analysis-who-are-the-immigrants-who-come-to-the-u-s-heres-the-data
- https://www.statista.com/chart/34074/us-industries-highest-share-of-the-workforce-undocumented-immigrants/
- https://www.sacattorneys.com/articles/california-is-now-a-sanctuary-state-for-undocumented-immigrants/
- https://www.nytimes.com/2018/06/25/us/politics/due-process-undocumented-immigrants.html
- https://www.aljazeera.com/news/2025/5/11/is-due-process-different-for-undocumented-immigrants-as-trump-claims

**Trump:** "I don't know. I'm not a lawyer. I don't know."

**Welker:** "Well, the Fifth Amendment says as much."

**Trump:** "I don't know. It might say that, but if you're talking about that, then we'd have to have a million or two million or three million trials."

**Welker:** "But even given those numbers that you're talking about, don't you need to uphold the Constitution of the United States as president ?"

**Trump:** "I don't know. I have to respond by saying, again, I have brilliant lawyers that work for me, and they are going to obviously follow what the Supreme Court said. What you said is not what I heard the Supreme Court said. They have a different interpretation."

- A one-time operation to deport these immigrants would cost at least $315 billion, broken down as follows:

The government would have to spend $89.3 billion to conduct sufficient arrests.

The government would have to spend $167.8 billion to detain immigrants en masse.

The government would have to spend $34.1 billion on legal processing.

The government would have to spend $24.1 billion on removals.



rathan@thaiveedu.com



# ஈரான் மீதான இஸ்ரேல் - அமெரிக்கக் கூட்டுத் தாக்குதல்

## பின்னணியும் விளைவுகளும்

– ரூபன் சிவராஜா

ஈரான் மீது இஸ்ரேல் ஜூன் மாதம் 13-ஆம் திகதி பாரிய தாக்குதல்களை நடத்தத் தொடங்கியது. ஈரானின் அணுசக்தி நிலையங்கள், முதன்மை அணுசக்தி விஞ்ஞானிகள், நாட்டின் வான் பாதுகாப்பு, உயர்மட்ட இராணுவத் தலைமைப்பீடம் ஆகியவற்றை இலக்குவைத்து இஸ்ரேல் தாக்கியிருந்தது. 250-இற்கு மேற்பட்ட ஈரானியப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பதிலுக்கு ஈரானும் இஸ்ரேலின் 'டெல் அவிவ்' மற்றும் 'ஹைபா' ஆகிய நகரங்கள் மீது எறிகணைத் தாக்குதல்களை நடத்தியிருந்தது. அதில் 24 பேர் வரை கொல்லப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. 20.06.2025 அன்று இஸ்ரேலியப் போர் விமானங்கள் நூற்றுக்கும் மேற்பட்ட இலக்குகளை ஈரானில் தாக்கின. இஸ்ரேலின் தாக்குதல்களைத் தொடர்ந்து நிபந்தனையற்ற சரணடைவுக்கு (அணுசக்தித் திட்டத்தினைக் கைவிடுமாறு) அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஈரானை வலியுறுத்தியிருந்தார்.

ஆழ்பதுங்குகுழிகளைத் தகர்க்கும் குண்டுகளை ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது போட்டு அமெரிக்காவும் தாக்குதல்களை நடத்தியுள்ளது (21, ஜூன் 2025). இதன் மூலம் இஸ்ரேல்-ஈரான் முரண்பாடு, போருக்குள் அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டுள்ளது. ஃபோர்டோ, நடான்ஸ் மற்றும் இஸ்ஃபஹான் (Fordow, Natanz og Isfahan) ஆகிய மூன்று அணுசக்தி நிலையங்கள் பாரிய தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன. GBU-57 வகையைச் சேர்ந்த ஆழ ஊடுருவும் (Massive Ordnance Penetrator) 14 குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றின் நிறை 13.6 தொன்கள் என்பதோடு, பல மீட்டர் நீளம் கொண்ட மலைகள் மற்றும் கடும் கற்பாறைகளை, கொங்கிறீற்களை ஊடறுத்துத் தாக்கக்கூடிய வலுவுடையவை. இந்தக் குண்டுகள் அமெரிக்க B-2 குண்டுவீச்சு விமானங்களிலிருந்து (American heavy strategic bomber) வீசப்பட்டுள்ளன. புவியிடங்காட்டல் (Global Positioning System – GPS) மூலம் இயக்கப்படுகின்ற விமானங்கள் இவையாகும்.

ஈரானின் தலைநர் தெஹரான் பத்து மில்லியன் மக்கட்தொகையைக் கொண்டது. அத்தகு மக்கட்செறிவான நகரிலிருந்து பொதுமக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் கட்டளையிட்டிருந்தது. அச்சத்தினால் பெருமளவு மக்கள் தலைநகரிலிருந்து வெளியேறியுள்ளனர். குடும்பம் குடும்பமாக நூறாயிரக்கணக்கில் மக்கள் நெடுஞ்சாலைகளின் ஊடாக இடம்பெயர்ந்ததாக சமூக ஊடகங்களிற் செய்திகள் வெளிவந்திருந்தன. பல நாட்கள் தொடர்ந்து இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தியது. ஈரான் ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் மூலம் இஸ்ரேலுக்குப் பதிலளித்துள்ளது. இவற்றில் பல இஸ்ரேலின் ஏவுகணை எதிர்ப்பு Anti-missilsystem கருவியான 'Iron Dome' இன் தடுப்பில் அகப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்டிருந்தன.


**ஆழ்பதுங்கு குழிகளைத் தகர்க்கும் குண்டுகளை ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது போட்டு அமெரிக்காவும் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதன் மூலம் இஸ்ரேல்-ஈரான் முரண்பாடு, போருக்குள் அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டுள்ளது.**


ஈரான் மீதான இஸ்ரேல் - அமெரிக்கக் கூட்டுத் தாக்குதலை முன்வைத்து ஈரானின் அணுசக்தித் திட்டம்-அதன் வரலாற்றுப் பின்னணி - சர்வதேச தலையீடுகள், விளைவுகள் - பிராந்திய நிலைப்பாடுகள் பற்றி விரிவாக நோக்குகின்றது இக்கட்டுரை.

### அணுவாயுத உற்பத்தி:

ஈரான் அணுவாயுத உற்பத்தியை நெருங்கி வருவதாக இஸ்ரேல் கூறுகிறது. ஆனால் இதனைச் சர்வதேச அணுசக்தி முகாமையகம் (International Atomic Energy Agency – IAEA) உறுதிப்படுத்தவில்லை. சர்வதேச அணுசக்தி முகாமையகம் என்பது அணுத்தொழில்நுட்பத்தின் பாதுகாப்பான பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்குடன் செயற்படும் அமைப்பாகும். அரசாங்கங்களுக்கிடையில் சர்வதேச ரீதியிலான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான மையமன்றமாகச் செயற்படுகிறது. சர்வதேச அமைதி, பாதுகாப்பு மற்றும் ஐ.நா.வின் நிலைத்தன்மை இலக்குகளுக்கும் பங்களிக்கிறது இந்நிறுவனம். ஈரானின் அணுவாயுத

உருவாக்கத்தைத் தடுக்கும் நிமிர்த்தமும் அத்திட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டும் இஸ்ரேல் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. இதுவே இஸ்ரேல் முன்வைக்கும் தர்க்கம். ஈரான் தனது அணுசக்தித் திட்டத்தினைக் கைவிடாதுவிடின் அதன் அணுமையங்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குரிய பச்சைக்கொடியினை இஸ்ரேலுக்கு முன்கூட்டியே ட்ரம்ப் காட்டியிருந்தமை (19.06.2026, The Wall Street Journal) தெரியவந்துள்ளது.

ஈரானிய அரசாங்கச் செய்திகளின்படி Kermanshah-இல் அமைந்திருந்த மருத்துவமனை மீது இஸ்ரேல் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளது. அத்தோடு ஈரானிய தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுவனம் ஒன்றும் நேரடி ஒளிபரப்பின் போது தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. ஈரானின் ஏவுகணை (Missil) தயாரிப்பு நிலையம் உட்பட்ட இராணுவத்தளங்களை இலக்குவைத்து இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தியிருந்தது. ஈரானின் அணுசக்தி விஞ்ஞானி ஒருவர் கொல்லப்பட்டுமுள்ளார். தலைநகர் தெஹரானில் அமைந்துள்ள மூன்று மருத்துவமனைகள் இஸ்ரேலின் தாக்குதலில் கடுமையாகச் சேதமடைந்துள்ளதாகவும் செய்திகள் வெளிவந்திருந்தன.

அமெரிக்காவின் இராணுவத் தலையீடு மத்திய கிழக்கில் பதட்டத்தை அதிகரித்துள்ளது. பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. கட்டாரில் (தலைநகர் டோஹா) உள்ள அமெரிக்க இராணுவத் தளம் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி உள்ளது. முன்னெச்சரிக்கை விடுத்தே ஈரான் தாக்குதல்களை நடத்தியது. அதனால் அழிவுகள் குறைக்கப்பட்டுள்ளன.

ஈரான் ஒரு சர்வதிகார ஆட்சிபீடம். அது ஜனநாயகம், கருத்துச் சுதந்திரத்தை நடைமுறைப்படுத்தாத அரசு. சொந்த மக்களையும் பெண்களையும் ஒடுக்குகின்ற கடுமையான இஸ்லாமியச் சட்டங்களையும் ஆட்சி நிர்வாகத்தையும் கொண்டுள்ளது. அதற்கான அந்நாட்டின் மீது இன்னொரு வெளிச்சக்தியோ அல்லது வெளிநாடுகள் கூட்டாகவோ தாக்குதல் நடத்துவதும் மக்களைக் கொல்வதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. இதனைக் கிறிமினல் நடவடிக்கை என ஈரான் கூறியதில் எந்தத் தவறும் இல்லை.

**ஈரான் அணுசக்தி வரலாறு:**

ஈரானின் அணுசக்தித் திட்டம், அதன் வளர்ச்சி, அது சார்ந்த சர்வதேச உடன்படிக்கைகள், அதன் நிமிர்த்தம் உருவாகியுள்ள பிராந்திய மற்றும் உலகளாவிய பதற்றங்களைப் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்குவது பொருத்தமானது. அத்தோடு இந்த விடயத்தில் ஈரானின் நிலைப்பாடு, இஸ்ரேலின் எதிர்வினைகளைப் பற்றியும் பேசுவது முக்கியமானது.

ஈரானின் அணுசக்தித் திட்டம் 70 ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றைக் கொண்டதாகும். 1950-களில் அமெரிக்க ஆதரவுடன், ஷா முகமது ரெஜா பஹ்லவி (sjah Mohammad Reza Pahlavi) ஆட்சியின் கீழ்; சிவில் அணுசக்தித் திட்டமாகத் (Civilian Purposes of Nuclear Technology) தொடங்கப்பட்டதாகும். ஆனால் 1979-இல் நிகழ்ந்த இஸ்லாமிய புரட்சிக்குப் பிறகு அத்திட்டம் இடைநிறுத்தப்பட்டது. பின்னர் 1980-இல் ஈரான் மீது ஈராக் போர் தொடுத்ததை அடுத்து ஈராக்கிற்கு எதிரான தனது பாதுபாப்பு என்ற மூலோபாயத்துடன் மீண்டும் அணுசக்தித் திட்டம் தொடங்கப்பட்டது.

அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் அணுவாயுதங்களை வைத்திருக்க உரிமையுள்ளது எனும் போது ஈரான் ஏன் வைத்திருக்கக்கூடாது. பிராந்திய பாதுகாப்புக்கும் படைச் சமநிலைக்கும் அது அவசியமானது என்ற அரசியலை ஏன் ஏற்றுக் கொள்ள முடியாது ?

”



Natanz மற்றும் Arak ஆகிய பிரதேசங்களில் இரகசிய அணுசக்தி உள்கட்டமைப்புகள் பற்றி அறியவந்தது. இது ஈரானின் அணுத்திட்டத்தின் இராணுவ நோக்கங்கள் குறித்த சந்தேகத்தை ஏற்படுத்தியதோடு, ஈரான் மீதான ஐ.நா.வின் பல்வேறு தடைகளுக்கும் காரணமாக அமைந்தது.

2015-இல் ஜேர்மனி மற்றும் ஐ.நா. பாதுகாப்பு அவையின் நிரந்தர உறுப்புநாடுகளுடன் கூட்டு விரிவாக்கச் செயற்திட்டத்தில் (Joint Comprehensive Plan of Action - JCPOA) ஈரான் இணைந்தது. இந்த உடன்படிக்கை, யுரேனியச் சுத்திகரிப்பைக்(Uranium enrichment) கட்டுப்படுத்தியதோடு ஈரான் மீதான பொருளாதார, வணிகத் தடைகளை தளர்த்துவதற்கான ஆய்வுகளையும் அனுமதித்தது.

2018-இல் கூட்டு உடன்படிக்கையிலிருந்து (JCPOA) அமெரிக்கா விலகியது. காலப்போக்கில் அணுவாயுதத் தரத்தினை நெருங்கும் ‘அளவுகளுக்கு’ யுரேனியச் சுத்திகரிப்பை ஈரான் அதிகரித்தது. சர்வதேச அணுசக்தி முகாமைத்துவ நிறுவனத்துடனான (International Atomic Energy Agency - IAEA) ஒத்துழைப்பையும் குறுக்கியது. இது ஈரான் அணுவாயுத உற்பத்தியை நோக்கி நகர்கின்றதான அச்சுறுத்தலாக இஸ்ரேல் மற்றும் அமெரிக்க, ஐரோப்பியத் தரப்புகளால் உருவகிக்கப்பட வழிகோலின.

இரகசிய அணு உற்பத்திச் சாதனங்களின் பயன்பாடு-60 வீத யுரேனியச் சுத்திகரிப்பு உட்பட்ட காரணிகளை முன்வைத்து, அணுவாயுதத் தடுப்பு உடன்படிக்கையை ஈரான் மீறியதாக IAEA, அறிக்கை வெளியிட்டது. ஈரானுக்கு சிவில் நோக்கங்கள் மட்டுமே உள்ளன என்பதை உறுதிப்படுத்த IAEA-இனால் முடியவில்லை. ஈரான் தனது அணுசக்திக் கொள்கையில் மூலோபாய தெளிவின்மையை (Strategic ambiguity) வெளிப்படுத்திவந்துள்ளது.

அணுசக்தித் திட்டத்தினை ஈரான் தற்காப்பாகவும் பேச்சுவார்த்தைகள், பேரம்பேசலுக்கான நுழைவுச்சீட்டாகவும் பயன்படுத்திவந்துள்ளது. ஈரான் தனது பாதுகாப்புக் கொள்கையின் ஒரு பகுதியாகப் பிராந்திய இராணுவ, போராட்டக் குழுக்களை ஆதரிக்கிறது.

## இஸ்ரேலின் அணுவாயுதப் பின்புலம்:

இஸ்ரேலுக்கும் ஒரு அணுவாயுதப் பின்புலமும் வரலாறும் உண்டு. அரபு நாடுகளின் அச்சுறுத்தல்களுக்கு பதிலளிக்கவும் தனது இருப்பிற்கான பாதுகாப்பிற்காகவுமான அணு வாயுத மேம்படுத்தல்களை இஸ்ரேலும் அதன் தேச உருவாக்கத்தை அடுத்து 1950-களிலேயே முன்னெடுக்கத் தொடங்கியது. பிரான்ஸ் நாட்டின் ஆதரவுடன் அத்திட்டம் தொடங்கப்பட்டது. இஸ்ரேல் ஏறத்தாழ 90 அணுவாயுத நிலைகளை (nuclear warheads) கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனை இஸ்ரேல் உறுதிப்படுத்தவோ மறுக்கவோ இல்லை. போதாக்குறைக்கு இஸ்ரேல் அணு பரவற் தடுப்பு உடன்படிக்கையிலும் (Non proliferation treaty) இணையவில்லை. இது சர்வதேச அணுசக்தி முகாமைமையத்தின் ஆய்வுகளுக்கு இடமளிக்காமல் தவிர்க்கவும் உதவுகிறது.

மத்திய கிழக்கின் பாதுகாப்பு இயக்கவியல் இடியப்பச் சிக்கலை ஒத்தது. அணுவாயுதத் திட்டங்களுக்கு எதிரான எதிர்வினைகளும் முற்றிலும் நலன்சார் அதிகாரம் சார் அரசியல் மயப்பட்டவை. அச்சுறுத்தலற்ற அணுசக்தியாக இஸ்ரேல் கருதப்படும் சமவேளையில் ஈரானின் அணுசக்தித்திட்டம் அதீத அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகங்கள் போன்ற பிராந்திய சக்திகளும் அணுசக்தி உடன்படிக்கைகள் மற்றும் அணுசக்தித் திட்டங்கள் தொடர்பான மாறுபட்ட நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளன.

அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் அணுவாயுதங்களை வைத்திருக்க உரிமையுள்ளது எனும் போது ஈரான் ஏன் வைத்திருக்கக்கூடாது. பிராந்திய பாதுகாப்புக்கும் படைச் சமநிலைக்கும் அது அவசியமானது என்ற அரசியலை ஏன் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற கேள்வி புறந்தள்ள முடியாதது.

## போரை விரிவுபடுத்தாத ஈரானின் அணுகுமுறை:

ஒப்பீட்டளவில் ஈரான் இப்போரைக் கூர்மையாக்கி விரிவுபடுத்த விரும்பவில்லை என்பதை அதன் அணுகுமுறைகளிலிருந்து காண முடிகின்றது. கட்டாரில் அமெரிக்க இராணுவத் தளத்தினைத் தாக்கியுள்ளது. அது ஒரு வகையான இராஜதந்திரப் பதிலடியும் பதில் எச்சரிக்கையுமாகும். அமெரிக்க மண்ணில் ஈரான் பழிவாங்கல் தாக்குதல்களை நடத்தக்கூடும் என்ற அச்சம் பல மட்டங்களில் நிலவிவந்தது. பொதுமக்களுக்கும் அத்தகைய அச்சங்கள் இருந்தன. அமெரிக்கப் பயணம் மேற்கொள்ளவிருந்த நண்பர்கள் சிலர் அப்பயணத்தைத் தவிர்க்கும் மனநிலைக்குச் சென்று-பின் நிலைமைகளின் அரசியற் பரிமாணம் குறித்த தகவல்கள், மதிப்பீடுகளின் அடிப்படையில் பயணத்தினை முன்னெடுத்ததை அறிவேன். நிலவிய அச்சுறுத்தலை ட்ரம்ப் நிர்வாகமும் அமெரிக்க மற்றும் அமெரிக்க சார்பு ஊடகங்களும் பாதுகாப்புக் கெடுபிடிகளை அதிகரிப்பதற்கான கருவியாகக் கையாண்டன.

முரண்பாட்டினையும் பதற்ற சூழலையும் தீவிரப்படுத்தவும் விரிவாக்கவும் இடம்கொடுக்காதிருப்பதில் ஈரான் உறுதியாகவிருப்பதை அவதானிக்க முடிகிறது. ட்ரம்ப் நிர்வாகம் ஈரான் மீது கண்மூடித்தனமாக வலிந்து ஒரு ஆக்கிரமிப்பினையோ- ஈராக், ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்புப் போல மேற்கின் ஆதரவினைத் தன்பின்னால் திரட்டியவாறு களமிறங்குவதற்கான வாய்ப்பினையோ வழங்கக்கூடாது என்பதில் ஈரான் தெளிவாக உள்ளதான தோற்றப்பாடு தெரிகின்றது.

ஈரானின் தற்போதைய ஆட்சிபீடம், இஸ்ரேல் - அமெரிக்கக் கூட்டுத் தாக்குதல்களைத் தாண்டி நீடிக்குமானால், பொருளாதார மற்றும் இராணுவ இழப்புகளால் அணுசக்தித் திட்டத்தை மீண்டும் உயிர்ப்பிப்பது கடினமாகும். அதேவேளை தற்போதைய ஆட்சிபீடம் வீழ்த்தப்படுமாயின் அணுசக்தி-ஆயுதத் திட்டம் முழுமையாக முடிவுக்குக் கொண்டு வரும் என்ற கருத்துகளும் சில மட்டங்களில் முன்வைக்கப்பட்டன.

## சர்வதேச சட்ட மீறலும் பொறுப்புக்கூறலின் அவசியமும்:

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஈரானுக்கு எதிராக மேற்கொண்ட தாக்குதல்கள், கொலைகள், சிவில் மற்றும் அணுஅறிவியல் நிலையங்கள் மீதான தாக்குதல்கள், சர்வதேச சட்டங்களை மீறுகின்ற நடவடிக்கை என்பதோடு, அரசுகளின் பொறுப்பு மற்றும் சர்வதேச விழுமியங்கள் சார்ந்த கூட்டுப்

> ***“இஸ்ரேல் ஏறத்தாழ 90 அணுவாயுத நிலைகளை (nuclear warheads) கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனை இஸ்ரேல் உறுதிப்படுத்தவோ மறுக்கவோ இல்லை. போதாக்குறைக்கு இஸ்ரேல் அணு பரவற் தடுப்பு உடன்படிக்கையிலும் (Non proliferation treaty) இணையவில்லை.”***



பொறுப்பு மீறல் குற்றங்களிலும் சேர்வன. இந்தவகை மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் ஐ.நா தீர்மானங்களில் (ஐ.நா தீர்மானம் 487,1981 மற்றும் 692,1991) வரையறுக்கப்பட்டுள்ளன. இழப்பீட்டுக்கான சட்டபூர்வ மற்றும் நிறுவன ரீதியான வரைபுகளையும் வழங்குகின்றன. ஐ.நா தீர்மானங்களின் மேற்சொன்ன சாசனங்கள் ஈரானுக்குச் சாதகமானவை.

ஈரானுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்து இழப்பீடு வழங்க ஐ.நா ஆதரவு கொண்ட சர்வதேச ஆணையத்தை அமைக்க வேண்டுமென்ற பரிந்துரைகளும் முன்வைக்கப்படுகின்றன. கடந்த ஜூலை 7-அம் திகதி அல் ஜசீரா இணையத்தில் எழுதிய கட்டுரையில் அப்பாஸ்-அலி கட்கோதையி (Abbas-Ali Kadakhodaei) இதனை வலியுறுத்தியுள்ளார்.

தள்ளியது. அந்த அரசியற் சிதைவு மற்றும் சகதிக்குள்ளிருந்தே ஐ.எஸ் என்ற இஸ்லாமியப் பயங்கரவாத அமைப்பும் தோன்றியது. ஈராக்கிற்குள் அமெரிக்கா இறங்கிய போதே, அடுத்த இலக்கு ஈரான் என்ற ஊகங்களும் எதிர்பார்ப்புகளும் நிலவின. ஆனால் அது நிகழவில்லை.

## ஈரானுக்கு எதிராகவும் இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் மேற்குலகு:

தற்போது ஈரான் மீதான இஸ்ரேலின் போரை அமெரிக்காவும் மேற்கும் முண்டுகொடுப்பதொன்றும் ஆச்சரியத்திற்குரியதல்ல. அமெரிக்காவும் மேற்கும் இஸ்ரேலின் போர்மீறல்கள், சர்வதேசச் சட்டமீறல்களைக் கண்டிப்பதில்லை என்பது ஒரு



***“ஈரான் மீதான இஸ்ரேல்-அமெரிக்கத் தாக்குதல்களைச் சர்வதேச அணுசக்தி முகாமைத்துவ மையம் கண்டிக்கவில்லை. இது அதன் சார்புத்தன்மையை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது.”***

கட்கோதையி பல முக்கியமான கல்வியியற் பணிகளை வகித்துள்ளார். அரசியலமைப்புச் சபை ஆய்வுநிறுவனத் தலைவர் ஈரான் நீதித்துறை அமைச்சகத்தில் நீதிபதியாகவும் இருந்துள்ளார். அக்கட்டுரையில் அவர் IAEA இன் நடுநிலைத்தன்மை மீறல் சார்ந்தும் குற்றம்சாட்டியிருக்கின்றார். போர்க் குற்றங்களுக்கு அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் IAEA மட்டும் பொறுப்பாளிகள் அல்ல, அனைத்துச் சர்வதேச அரசுகளும் அமைப்புகளும் இத்தகு நடவடிக்கைகளைத் தடுக்கச் செயற்படவேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

ஈரான் மீதான இஸ்ரேல்-அமெரிக்கத் தாக்குதல்களைச் சர்வதேச அணுசக்தி முகாமைத்துவ மையம் கண்டிக்கவில்லை. இது அதன் சார்புத்தன்மையை அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது. தவிர ஈரான் அணுசக்தி சார் கடப்பாடுகளைச் சரிவரக் கடைப்பிடிக்கவில்லை எனும் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. இதன் விளைவாக IAEA மீது ஈரான் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தியுள்ளது. IAEA உடன் தொடர்புகளைத் துண்டிக்க ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷேஷ்கியன் உத்தரவிட்டுள்ளார். குண்டுவீசப்பட்ட மையங்களைப் பார்வையிடுவதற்கான IAEA இன் கோரிக்கையை ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அரக்சி நிராகரித்துள்ளார்.

2003-இல் ஈராக்கிற்கு எதிரான போரில் அமெரிக்கா இறங்கியபோது உயிரழிவு ஆயுதங்களை சதாம் உசேன் ஆட்சிபீடம் வைத்திருந்ததாகப் பொய்ப்பிரச்சாரங்களை முன்வைத்தது அமெரிக்கா. மத்திய கிழக்கில் தமக்குச் சவாலாக இருந்த சதாமை வீழ்த்துவதற்கான தந்திரமாக உயிரழிவு ஆயுதங்கள் குறித்த கட்டுக்கதைக்குப் பின்னால் மேற்குலகம் திரட்டப்பட்டது. சதாமை வீழ்த்திய அமெரிக்கா, ஈராக்கினைப் பெரும் அரசியல், சமூக, பொருளாதாரச் சிதைவுக்குள்

புறமிருக்க, ஈரான் அவர்களின் பரம விரோதி என்ற காரணமும் சேர்ந்துகொள்கிறது. தற்போது இஸ்ரேலுடன் அமெரிக்கா நேரடியாகத் தாக்குதலில் இறங்கியது. மேற்குலக நாடுகள், குறிப்பாக ஜேர்மன், பிரான்ஸ், பிரித்தானியா ஆகியன G7 உச்சி மாநாட்டில் ‘இஸ்ரேலின் தற்பாதுகாப்பு உரிமை’ என அதன் தாக்குதல்களை நியாயப்படுத்தியுள்ளன. ஜேர்மன் தலைவர் பிரட்ரிக் மெர்ஸ் ஒருபடி மேலே சென்று ‘இஸ்ரேல் எமக்காகவும் சேர்த்து கடினமான பணியைச் செய்கிறது’ என்று இஸ்ரேலின் போருக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

அணுசக்தி சார் பொறுப்புக்கூறல்களை ஈரான் பின்பற்றவில்லை என்று சர்வதேச அணுசக்தி முகாமை மையம் சுட்டிக்காட்டினாலும் அதற்கான ஆதாரங்கள் முன்வைக்கப்படவில்லை. ஈரான் மீதான இஸ்ரேல் மற்றும் அமெரிக்கத் தாக்குதல் சர்வதேசச் சட்டத்திற்கு முற்றிலும் புறம்பானது. உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல்களை அமெரிக்காவும் மேற்கும் போர்க்குற்றமாகச் சித்திரிக்கின்றபோது ஈரான் மீதான இஸ்ரேல்-அமெரிக்கக் கூட்டுத்தாக்குதலை தற்காப்புப் போர் என்பதில் எந்தவிதத் தர்க்க நியாயமும் இல்லை.

மேற்குலகம் உக்கிரைனுக்கு ஆதரவான தமது நிலைப்பாட்டிற்கு நியாயம் சேர்க்க விரும்பினால் போர் தொடர்பான சர்வதேச சட்ட நியாயத்தை அனைத்துச் சூழலிலும் சமமாகப் பொருத்திப் பார்க்கவேண்டும். அமெரிக்கா தலைமையிலான மேற்கு தமது எதிராளிகளைக் கையாள்வதில் தனிவிதிகளைக் கடைப்பிடிக்கின்றது. இங்குதான் வலிந்த தாக்குதல் தற்காப்பாகவும் தாக்குதல் நடத்தியவர் பாதிக்கப்பட்டவராகவும் சித்திரிக்கப்படுகின்றார் என்ற George Orwells-இன் கூற்றுப் பொருந்திப் போகின்றது மேற்கின் அணுகுமுறைக்கு.

### பிளவுகளைத் தாண்டிய தேசிய ஒருமைப்பாடு:

இஸ்ரேலும் அமெரிக்காவும் ஈரான் மீது மேற்கொண்ட தாக்குதல்களினால் ஏற்பட்ட உயிரிழப்புகள், அழிவுகள் - ஈரானில் நிலவிவந்த பிளவுகள், ஆட்சிபீடத்திற்கு எதிரான மனநிலைகளைத் தாண்டி - ஈரானிய மக்களிடையே தேசிய ஒற்றுமையை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த நிலைமைகள் குறித்து சமூக மானிடவியலாளர் ஹொசைன் ஹம்திஹ் (Hossein Hamdieh) ஜுலை 5, 2025 கார்டியன் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் வலியுறுத்தியுள்ளார்.

ஈரானின் அணுசக்தித் திட்டம், மத்தியகிழக்கில் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்ட சக்திகளுக்கான அதன் ஆதரவு, ஈரானின் ஜனநாயக விரோதப் போக்குகளைக் காரணங்களாக முன்வைத்து அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இஸ்ரேலின் தாக்குதல்களை ஆதரிக்கின்றன. இந்தப் போக்கு மேற்கு நாடுகளின் நியாயத்தன்மை, நடுநிலைமை சார் நம்பிக்கையீனங்களை மத்தியகிழக்கில் மேலும் குறைத்துள்ளது.

மேற்கின் பாரபட்ச, ஒருதலைப்பட்ச அணுகுமுறை காரணமாக அணுசக்தியைத் தமது இருத்தலியற் பாதுகாப்பிற்கு அவசியமான ஒன்று என்று பல ஈரானியர்கள் கருதத்தொடங்கியுள்ளனர். தமது நாட்டின் மீது எதிர்காலத்தில் இடம்பெறக் கூடிய வெளிச்சக்திகளின் தாக்குதல்களை எதிர்கொள்ளத் தேவையான ஒரு தடுப்பாக அணு ஆயுதங்களை ஈரானியர்கள் கருதத் தொடங்கியுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

தற்போது ஒரு போர்நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளது. ஆனாலும் இஸ்ரேல் அதைக் கடைப்பிடிக்கும் என்ற நம்பிக்கை கொள்ளமுடியாது. அத்தோடு இந்த முரண்பாட்டில் மேற்குலக அல்லது சர்வதேச தரப்புகளை நம்பகமான நடுநிலையாளர்களாகக் கருத முடியாது. அதற்கான வரலாற்று ரீதியானதோ சமகாலத்தினதோ முன்னுதாரணங்கள் இல்லை. ஈரானின் ஆட்சிபீடத்தினை இராணுவ-அரசியல்-பொருளாதார ரீதியில் பலவீனப்படுத்துவதை இஸ்ரேலும் அமெரிக்காவும் இலக்காகக் கொண்டுள்ளன.


**உசாத்துணை:**

- Morgenbladet | Atomtrusselen som ble eksplosiv (The nuclear threat that became explosive) | Pål Velo | 20.06.2025
- Klassekampen | Sinte på vestlig støtte (Angry at Western support) | Amal A. Wahab | 19.06.2025
- Aljazeera | Iran will pursue all legal avenues to seek redress from its attackers | Abbas-Ali Kadkhodaei (Full professor of law at Tehran University) | 07.07 2025
- The Guardian | Sleeper cells and threat warnings: how the US-Iran conflict is spinning up fear | Ben Makuch | 30.06.2025
- The Guardian | In Iran, Israel's attack has shattered any trust in the west – even for those with no love of the state | Hossein Hamdieh | 05.07.2025




rooban.s@thaiveedu.com





# ஏற்கெனவே பட்டறிந்த ‘நல்லாட்சி’

## மீண்டும் அமையாவாறு தடுப்பது எப்படி?



**வழமையாக ஜே.வி.பி. க்கு வாக்களிக்க விரும்பாத பலர் இரண்டு முக்கிய காரணங்களுக்காக தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தார்கள் என்பதை அரசாங்கம் மறந்துவிடக்கூடாது.**

**அம்பிகா சற்குணானந்தன் — தமிழில்: மணி வேலுப்பிள்ளை**

நடந்துமுடிந்த உள்ளூராட்சித் தேர்தல் இந்த அரசாங்கத்தை துயிலெழுப்பும் அறைகூவல். தோல்வியை ஒரு தெரிவாகக் கொள்ளமுடியாது என்பதை ஏற்கனவே அரசாங்கம் உணர்ந்துகொள்ளவில்லை என்றால், இனியாவது உணர்ந்துகொள்ள வேண்டும். அரசாங்கம் அதன் போக்கை மாற்றிக்கொள்ளாவிட்டால், தோல்வி அடைதல் திண்ணம்.

வழமையாக ஜே.வி.பி.-க்கு (மக்கள் விடுதலை முன்னணிக்கு) வாக்களிக்க விரும்பாத பலர் இரண்டு முக்கிய காரணங்களுக்காக என்.பி.பி.-க்கு (தேசிய மக்கள் சக்திக்கு) வாக்களித்தார்கள் என்பதை அரசாங்கம் மறந்துவிடக்கூடாது:

- அத்தகைய வாக்காளர்களுக்குக் கைகூடக்கூடிய வேறு மாற்றுவழிகள் இருக்கவில்லை
- இலஞ்சம், ஊழல், கப்பம் ஓங்கிய பழைய அரசியற் பண்பாட்டையும், ஆளுகை முறைகளையும் என்.பி.பி ஒழிக்குமென அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து, நாட்டை ஆளும் போர்வையில், அதைச் சூறையாடிக் கொள்ளையடித்த மேட்டிமைக் குழாத்தைச் சேராத அனுர குமார திசநாயக்க என்.பி.பி.-யின் வெற்றிக்கு மாபெரும் தொண்டாற்றினார்.

### கற்கத்தவறிய பாடங்கள்:

சில குடியியற் சமூகத் தரப்பினர் உட்பட பல சமூகத் தரப்பினர், அரசாங்கத்தை வெகுவாக நம்பி இன்புறுவதனாலோ என்னவோ, அவர்கள் அரசாங்கத்தை விமர்சிக்க மறுக்கிறார்கள்; அரசாங்கத்தின் நடவடிக்கைகளை ஆதரிக்கிறார்கள்; விமர்சகர்கள் எழுப்பும் கரிசனைகளை நிராகரிக்கிறார்கள்; வருத்தமளிக்கும் முதலாவது சங்கதி இது.

அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளை விமர்சிக்கத் தவறுவது, அரசாங்கத்தின் தோல்விக்குத் துணைநிற்கும் என்பதும், அடக்கியாளும் வன்கோன்மைக்கு அது வழிவகுக்கக்கூடும் என்பதும், ‘நல்லாட்சி’ அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் நாம் கற்றுத்தேறிய அல்லது கற்கத்தவறிய பாடம்.

‘நல்லாட்சி’ அரசாங்கம் மீதான விமர்சனம், ராஜபக்சாக்களின் கைகளில் ஆயுதமாக மாறும், அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு மீள அது வாய்ப்பளிக்கும், ஆகவே ‘நல்லாட்சி’ அரசாங்கத்தை விமர்சிக்கக் கூடாது என்றெல்லாம் நியாயம் கற்பிக்கப்பட்டது. இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால், ‘நல்லாட்சி’ அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளை விமர்சித்து, அவற்றுக்கு அதனைப் பொறுப்பேற்க வைக்கத் தவறியமையே ராஜபக்சாக்களின் மீட்சிக்கு வழிவகுத்தது.

> ***‘நல்லாட்சி’ அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளை விமர்சித்து, அவற்றுக்கு அதனைப் பொறுப்பேற்க வைக்கத் தவறியமையே ராஜபக்சாக்களின் மீட்சிக்கு வழிவகுத்தது.***

அதேவேளை, சில குடியியற் சமூகத் தரப்பினர் உட்பட ஒரு சமூகத் தரப்பினர், வர்க்க பீதி அடைந்து, அரசாங்கத்தின் தோல்வியைக் களிவெறியுடன் வரவேற்க விரும்புவோர் போல் தோன்றும் அளவுக்கு, அரசாங்கத்தின் நடவடிக்கை முழுவதையும் மிகுந்த கண்டனக் கண்கொண்டு நோக்குவதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தைச் சேர்ந்த சிலர் திமிர் கொண்டு, விமர்சனத்தை ஏற்கமறுத்து, வன்மையுடன் பதில்வினை ஆற்றுவதால், அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்ட நம்பிக்கை குன்றி வருவதை அது கவனத்தில் கொள்ளவேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அறுதிப் பெரும்பான்மை ஈட்டாத உள்ளூராட்சி மன்றங்களில், எதிர்க்கட்சிகள் கூட்டுச்சேர்ந்து ஆட்சியமைக்க முயன்றால், நாடாளுமன்றத்தில் தமக்குள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மையை, எதிர்க்கட்சிகளுக்கு எதிராகப் பயன்படுத்தத் தயங்கமாட்டோம் என்று ஜனாதிபதி தெரிவித்த கூற்று கவலைக்குரியது மட்டுமல்ல, குடியாட்சி நெறிக்கு மாறானதும் கூட.

தம்மீது அவதூறு கற்பிக்கப்படுவதாக ஜனாதிபதி உட்பட அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் காவல்துறையிடம் முறைப்பாடு தெரிவிப்பது, நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. அரசாங்கத்தைச் சேர்ந்தோர் எளிதில் விசனப்படுவோர் எனும் எண்ணத்தையும், தம்மீது நம்பிக்கை அற்றோர் எனும் எண்ணத்தையும் அத்தகைய செயல்கள் தோற்றுவிக்கின்றன.

இலங்கைச் சட்டத்தில் அவதூறுக் குற்றம் இல்லாதபடியால், இம்முறைப்பாடுகள் இணையப் பாதுகாப்புச் சட்டத்துக்கமைய முன்வைக்கப்படுவதாக நாம் கருத வேண்டியுள்ளது. தேசிய மக்கள் சக்தி, எதிர்க்கட்சியாக இருந்தபொழுது, இதே சட்டத்தை உச்ச நீதிமன்றில் எதிர்த்து வாதாடியது. இப்பொழுது ஆட்சியில் அமர்ந்துள்ள தேசிய மக்கள் சக்தி, அதை நீக்க மறுக்கிறது. இந்த முரண்பாடான நிலைப்பாடு குறித்து ஏற்கத்தக்க விளக்கம் எதையும் அரசாங்கம் முன்வைக்கவில்லை. சொற்சிலம்பத்துக்கும் செயல்புரிவுக்கும் இடைப்பட்ட வெளியை இது புலப்படுத்துகிறது.

அண்மையில் ஓர் ஊடகத்தின் இணையதளத்தில் காணப்பட்ட ஒளிப்படம் ஒன்று, ஜனாதிபதியை சரிவரப் புலப்படுத்தவில்லை என்று கருதிய அவரது ஊடகப் பிரிவு, அந்த ஊடகத்துடன் தொடர்புகொண்டு, அந்த ஒளிப்படத்தை நீக்கும்படி வேண்டிக்கொண்டமை வருத்தமளிக்கிறது. அரசாங்கத்தை விமர்சிப்பதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு கருதும், வேறு செய்தி அறிக்கைகளைக் குறித்தும் அத்தகைய 'வேண்டுகோள்களை' அது விடுக்கக்கூடும் அல்லவா!

அதிகார மையம் வேறெங்கோ அமைந்திருப்பதால், தமது ஆணைக்கு உட்பட்ட துறைகள் தொடர்பாக முடிவுகள் எடுக்கும் அதிகாரம் அமைச்சர்களுக்கு அளிக்கப்படவில்லை எனும் எண்ணம் பொதுமக்களிடையே மேலோங்கி வருகிறது. அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்ட நம்பிக்கை குன்றுவதற்கு இது இன்னொரு காரணம்.

தமிழ், முஸ்லீம் சமூகங்களைத் தாம் புரிந்துகொண்ட விதத்தையும், அவர்களது விடயங்களில் செயற்படும் விதத்தையும் அரசாங்கம் மீளவும் நிதானித்துப் பார்க்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியில் ஆதிக்கம் செலுத்தும் ஜே.வி.பி. கடந்தகாலத்தில் ராஜபக்சாக்களுடன் சேர்ந்து, போரை ஆதரித்து, அதிகாரப் பரவலாக்கத்தை எதிர்த்த வரலாற்றை முற்போக்கானது என்று கற்பனைசெய்தே பார்க்க முடியாது.

பற்பல விடயங்களில் மிகவும் முற்போக்கான நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட கட்சியாக இப்பொழுது அது மலர்ந்துவிட்டதோ என எண்ணத்தக்க தோற்றத்தை, அண்மைக் காலத்தில் அது ஆடிய சொற்சிலம்பம் அதற்குக் கொடுத்தது.

வடபுலத் தமிழரின் வாக்குகளை அரசாங்கம் வென்றெடுத்தமை, அவர்கள் தமிழ்க் கட்சிகளை விட்டு விலகிவிட்டார்கள் என்பதற்குச் சான்று பகர்வதாக அரசாங்கம் மார்தட்டியது. தமது நெடுங்காலக் கோரிக்கைகளை விட்டு அவர்கள் விலகிவிட்டார்கள் என்று அரசாங்கம் தப்புக்கணக்குப் போட்டது.

> ***நாடாளுமன்றத்தில் தமக்குள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மையை, எதிர்க்கட்சிகளுக்கு எதிராகப் பயன்படுத்தத் தயங்கமாட்டோம் என்று ஜனாதிபதி தெரிவித்த கூற்று கவலைக்குரியது மட்டுமல்ல, குடியாட்சி நெறிக்கு மாறானதும் கூட.***

தமிழ் மக்கள் பொருட்படுத்தும் அதிகாரப் பரவலாக்கம், போர்க் குற்றம், படைவிலக்கம், பயங்கரவாதத் தடைச் சட்டம், காணி அபகரிப்பு, அரச ஆக்கிரமிப்புப் போன்ற விடயங்களில் உருப்படியான நடவடிக்கை எடுக்கத்தவறிய அரசாங்கம், அதன் வடபுல வெற்றியைச் சாட்டி, தமிழ் மக்களுக்காகப் பேசமுடியுமெனவும் கருதுகிறது. அந்த மார்தட்டலை உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் பொய்ப்பித்துள்ளன. வடபுல மக்கள் தமிழ்க் கட்சிகளுக்கே பெருவாரியாக வாக்களித்துள்ளார்கள்.



அரசாங்கத்தின் அரசியல்-தந்திரோபாயம் பற்றிய வினாக்களையும் அது எழுப்புகிறது. உள்ளூராட்சித் தேர்தல் நடப்பதற்கு ஒருசில கிழமைகளுக்கு முன்னர், வடபுலத்தில் 5,940 ஏக்கர் காணியை அபகரிக்கும் அரசமடலை வெளியிட்ட அரசாங்கத்தால் எப்படித் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடியும் ? தமிழ் மக்கள் முக்கியத்துவம் கொடுக்கும் விடயங்களை அரசாங்கம் அறியவில்லையா ? அல்லது, அவர்களின் கரிசனைகளை அரசாங்கம் அறவே உதறித் தள்ளுகின்றதா ?

தமிழ் மக்கள், நிர்ப்பந்தம் காரணமாக, செயல்நோக்குடன் கூடிய வாக்காளர்களாக மலர்ந்துள்ளார்கள் என்பதை அரசாங்கம் உள்ளத்தில் பதிப்பது நலம் பயக்கும். போரின் பொழுது, தமிழ் மக்களுக்கு எதிராக, பாரதூரமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர் என்று குற்றம் சாட்டப்படும் சரத் பொன்சேகாவுக்கு, 2010-இல் தமிழ் மக்கள் வாக்களித்தமை, அதற்கோர் எடுத்துக்காட்டு. எனவே, உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் ஈட்டிய வெற்றியைப் புறக்கணிப்பதும், அது முறைகேடான வழியில் ஈட்டப்பட்ட வெற்றி என்று பழி சுமத்துவதும், மேன்மேலும் தமிழ் மக்களின் வாக்குகளை இழப்பதற்கே வழிவகுக்கும்.

உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கைப் பொதுஜன முன்னணி (எஸ்.எல்.பி.பி.) எய்திய பெறுபேறுகளுக்கு, அரசாங்கம் பதில்வினையாற்றும் விதம், இனி அது செல்லும் திசையைத் தீர்மானிக்கும் காரணிகளுள் ஒன்றாக அமையும். வலதுசாரிச் சிங்களத் தேசியவாதிகளின் வாக்குகளை ஈர்க்கும் நோக்குடன் நடவடிக்கை எடுக்கும் வழியில் தேசிய மக்கள் சக்தியை அது இட்டுச்செல்லுமா ?

பௌத்த சிங்கள கடும்போக்குத் தேசியவாதிகளை மகிழ்விக்கும் அத்தகைய நடவடிக்கை தமிழ், முஸ்லீம் சமூகங்களைப் பாதிக்கும் என்பதிலும், அதனால் மிதவாதிகளின் ஆதரவையும், சிறுபான்மையோரின் ஆதரவையும் தேசிய மக்கள் சக்தி இழக்கும் என்பதிலும் ஐயமில்லை.

தாம் சிங்களத் தேசியவாதிகளின் வாக்குகளை இழந்துவிடுவோம் என அஞ்சி, ஒரு குறுங்கால நடவடிக்கையை ஆட்சியாளர் மேற்கொள்ளக்கூடும்: ஐ.நா. மனித உரிமை மன்றம் இலங்கை தொடர்பாக நிறைவேற்றிய தீர்மானம், அதற்கமையத் தோற்றுவிக்கப்பட்ட இலங்கை பொறுப்புக்கூறல் நிகழ்பாடு, சான்றுகள் திரட்டும் பொறிமுறை முதலிய விடயங்களில் அரசாங்கம் வன்மையான நிலைப்பாட்டை எடுக்கக்கூடும்.

ஒரு சுதந்திர வழக்குத்தொடுநர் அலுவலகத்தை அமைக்க அரசாங்கம் பூண்ட உறுதி வலுவானதாகவும், வரவேற்கப்படுவதாகவும் தெரிகிறது. எனினும், போரின் இறுதிக் கட்டங்களில் இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்து, அரசாங்கம் அதன் அரைவாசி ஆட்சிக்காலத்தை எட்டும் தறுவாயிலாவது, வழக்குத் தொடுக்கப்படும் என்பதற்கு அது உத்தரவாதமாகாது.

போர்க்கால உரிமை மீறல்கள் தொடர்பாக எதிர்காலத்தில் வழக்குத் தொடுக்கும்பொழுது, பொறுப்புக்கூறல் நிகழ்பாட்டின் மூலம் உரிய சான்றுகளை முன்வைக்க முடியும். ஆதலால், அக்குற்றங்கள் குறித்து நாடளாவிய முறையில் வழக்குத்தொடுக்க அரசாங்கம் பூண்ட உறுதி மெய்யானதாயின், பொறுப்புக்கூறல் நிகழ்பாடு போன்ற, சான்றுகள் திரட்டும் சுதந்திர-சர்வதேயப் பொறிமுறை தொடர்ந்து செயற்படுவதை அரசாங்கம் வரவேற்க வேண்டும்.

## எடுக்கவேண்டிய நடவடிக்கைகளும், எடுக்கக்கூடாத நடவடிக்கைகளும்:

அரசாங்கத்தால் உடனடி நீதி வழங்க முடியாது; அது விரும்பத்தக்கதுமல்ல; அரசாங்கம் உடனடி நீதி வழங்க உறுதியளிப்பது புத்திசாலித்தனமும் அல்ல. அப்படிச் செய்வது உரிய படிமுறையை மீறவும்கூடும்; வழக்குகள் வலுவிழந்து தோற்கவும் கூடும்; அதனால் அரசாங்கத்தின் மீதும், குற்றவியல் நீதித்துறையின் மீதும் மக்கள் கொண்ட நம்பிக்கை குலையவும் கூடும்.

முன்னைய அரசாங்கங்கள் பெருவாரியான வேளாவேளைக் குழுக்களையும், செயலணிகளையும் அமைத்து நாட்டின் தலையில் கட்டியடித்துள்ளன. அவை பாரதூரமான விடயங்களில் உருப்படியான நடவடிக்கை எடுப்பதைத் தவிர்க்கும் உபாயங்கள் என மக்கள் கருதுவது சரியே. எனவே காத்திரமான முறையில் கட்டமைப்பை மாற்றுவதற்கு, தூய இலங்கைச் செயலணி போன்ற வேளாவேளைப் பொறிமுறைகள் அமைப்பதை அரசாங்கம் நிறுத்தவேண்டும்.

> ***“ உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் ஈட்டிய வெற்றியைப் புறக்கணிப்பதும், அது முறைகேடான வழியில் ஈட்டப்பட்ட வெற்றி என்று பழி சுமத்துவதும், மேன்மேலும் தமிழ் மக்களின் வாக்குகளை இழப்பதற்கே வழிவகுக்கும். ”***






தூய இலங்கைச் செயலணி எனும் வேளாவேளைக் குழு இன்றைய ஜனாதிபதியால் அமைக்கப்பட்டது. அது அவருக்கு மட்டுமே பதிலளிப்பது. அதன் ஆணையும் அதிகாரங்களும் பரந்துபட்டவை; ஆனால் தெள்ளத் தெளிவானவை அல்ல. எடுத்துக்காட்டாக, இச்செயலணிக்கு 'சட்ட ஏற்பாடுகளை வகுக்கவும்', அச்சட்டங்களை நடைமுறைப்படுத்த 'ஒரு கட்டமைப்பை உருவாக்கவும்' அதிகாரம் உண்டு என்று அரசமடல் கூறுகிறது. உண்மையில் இவை வெவ்வேறு நிரந்தர அரச கட்டமைப்புகளின் பணிகள் ஆகும்.

இச்செயலணி வேறு அரச கட்டமைப்புகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கமுடியும். அவற்றின் அதிகாரங்களுக்குள் ஊடுருவ செயலணிக்கு அது வாய்ப்பளிக்கும். மேலும், இச்செயலணியில் தமிழரோ, முஸ்லீங்களோ இடம்பெறவில்லை. ஆனால் தரை-கடல்-வான் படைத் தளபதிகளும், காவல்துறையின் பதில் தலைமை மேலாளரும் இடம்பெற்றுள்ளார்கள். இவ்வாறு மேலும் ஓர் அரச கட்டமைப்பு படைமயப்படுத்தப்பட்டமை கவலையளிக்கிறது.

படைப் பணிகளுக்கு மாத்திரமே படை பயன்படுத்தப்படும் என்று அரசாங்கம் முழங்கியதுண்டு. ஜனாதிபதியோ நாட்டில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு மாதந்தோறும் மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12-ஆம் பிரிவைப் பயன்படுத்தி ஆயுதப் படைகளைத் தொடர்ந்தும் களமிறக்குவது, அந்த சொற்சிலம்பத்துக்கு முரணானது. காவல்துறை படைமயமாவதை இது நிலைநிறுத்துகிறது. அதாவது, நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைத் தவிர்க்கும் வண்ணம், செயலளவில் ஓர் அவசரகால நிலை பறைசாற்றப்பட்டுள்ளது.

முன்னைய அரசாங்கத்தின் இன்னொரு வழமையை இன்றைய அரசாங்கம் சங்கடமான முறையிலும் கள்ளத்தனமான முறையிலும் முன்னெடுத்து வருகிறது. போதைமருந்துப் பாவனையாளர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கை மீண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. போதைமருந்துக் கடத்தலில் ஈடுபடாவிட்டாலும் கூட, நச்சுமருந்து-அபின்-ஆபத்தான போதைமருந்துக் கட்டளைச் சட்டத்தின் 54-அ பிரிவுக்கமைய அவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்படுகிறார்கள். ஆண்டுக்கணக்காக அல்லாவிட்டாலும், மாதக்கணக்காக அவர்கள் சிறையில் அடைத்து வைக்கப்படுகிறார்கள். அதனால் சிறைகள் நிரம்பி வழிகின்றன. சிறைகளில் போதை மருந்துச் சந்தை கூடுகிறது. போதை மருந்து பாவிக்கும் கைதிகளுக்கு சுகாதார சேவைகள் மறுக்கப்படுகின்றன. போதை மருந்து கடத்தல், போதை மருந்துக்கு அடிமையாதல் போன்ற பிரச்சினைகளை எந்த விதத்திலும் அவை தணிக்கப் போவதில்லை; மாறாக, அவற்றைப் பெருக்கியே தீரும்.

குடியியற் சமூகம் சார்ந்த இன்னொரு விடயமும் உண்டு: அரசாங்கத்தைப் பொறுப்புக்கூற வைப்பதிலும், மனித உரிமை மீறல்களுக்கு உள்ளானவர்களுக்குத் துணைநிற்பதிலும் குடியியற் சமூகம் ஒருங்கிணைந்து பங்கு வகிக்கிறது. அதனுடன் பூணும் உறவையும், அந்த உறவைத் திருத்தியமைக்கும் விதத்தையும் அரசாங்கம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அரசு சாரா அமைப்புகள் நாட்டுக்கு எதிரானவை, ஊழலில் உழல்பவை, இலங்கைக்கு எதிரான சதிகளுக்குத் துணை நிற்பவை என்றெல்லாம் ஜே.வி.பி. முத்திரை குத்திவந்துள்ளது. இந்த எண்ணத்தை எந்த வகையிலேனும் தொடர்ந்து முன்னெடுப்பது எதிர்விளைவை உண்டாக்கி, ஐயுறவையே வளர்க்கும்.

சமூக-பொருளாதார விடயங்களிலும் குடியியற் சமூகத்துக்குப் பரந்த பட்டறிவும், நிபுணத்துவமும் உண்டு. எனவே சட்டம், கொள்கை என்பவற்றைச் சீர்திருத்துவது குறித்து அதனுடன் கலந்துசாவ வேண்டியுள்ளது. அப்படியிருக்க, குடியியற் சமூகத்தை மேற்பார்வையிடுவதில் படைத்துறையை உள்ளடக்கி, குடியியற் சமூகத்தின் சுதந்திரமான செயற்பாட்டைக் கெடுத்து, குழுமச் சுதந்திரத்துக்கு ஆப்பு வைக்கும் சுற்றறிக்கைகளைக் கடந்த சில மாதங்களில் அரசு சாரா அமைப்புச் செயலகமும், இலங்கை மத்திய வங்கியும் விடுத்துள்ளன.

## மக்கள் எதை விரும்புகிறார்கள்?

அரசாங்கம், அது சொல்லியபடி செயற்பட்டு, தனது தவறுகளையும் தவறான நடவடிக்கைகளையும் ஒப்புக்கொண்டு, தன்னைத் திருத்தியமைத்து, வெளிப்படையான முறையில் நடவடிக்கை எடுப்பதையே மக்கள் விரும்புகிறார்கள். இது எளிதான ஒன்றாகவே தென்படும். ஆனால், இலங்கையில் எந்த ஓர் அரசாங்கத்தினாலும் இதை நடைமுறைப்படுத்துவது மிகமிகக் கடினம் என்பது தெளிவாகி வருகின்றது. இதில் தேசிய மக்கள் சக்தி ஏதோ வேறு விதமான ஒன்றாகுமா?

Ambika Satkunananthan, Deja vu ?: How to prevent Yahapalana 2.0, Financial Times, 2025-05-19



mani.velupillai@thaiveedu.com



# இந்தியாவில் பொதுவுடைமைக் கட்சிகள் இணையுமா?

– வ. பொன்னுராஜ்

‘மக்களுக்காகப் போராடும் கட்சிகள் என்று பெயர் பெற்று இருந்தாலும் மக்கள் கம்யூனிஸ்ட்களைத் தேர்தலில் வெற்றி பெற வைப்பத்தில்லை’ என்று தொடங்குகிற ஒரு காணொளியை அண்மையில் பார்த்தேன். அந்நிய ஏகாதிபத்திய நுகத்தடியை உடைத்தெறிந்து இந்திய விடுதலைப் போராட்டம் வெற்றிபெற்ற பிறகு நடந்த முதல் நாடாளுமன்ற தேர்தலில் இரண்டாவது பெரிய கட்சியாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பெரும் வெற்றி பெற்றதைச் சுட்டிக் காட்டுகிற அக்காணொளி, கடந்த சில ஆண்டுகளாக இந்திய நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங் களுக்கான தேர்தல்களில் இடதுசாரிகள் வாக்கு வங்கியைத் தொடர்ந்து இழந்து வருவதைக் கவலையோடு பேசுகிறது. கம்யூனிஸ்ட் கட்சி (CPI), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (CPI-M), என்று பிரதான இந்திய இடதுசாரிகள் பிரிந்து செயற் படுவதே அவர்களின் வாக்கு வங்கி இழப்பிற்கான முக்கியக் காரணம் என்று சொல்கிறது. அத்தோடு நின்றுவிடாமல் அவ்வாறு பிரிந்து நிற்பதற்குக் காரணமாக கற்பனைக் கதைகளை கட்டமைக்கிறது.

அந்த காணொளியில் மட்டுமல்ல, மக்களின் பொதுப் புத்தியிலும் அத்தகைய தவறான கற்பிதங்கள் விதைக்கப் பட்டுள்ளன. இன்றைக்கு வலதுசாரிகள் இந்திய அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வருகிற சூழலில் இடதுசாரி அரசியலின் தேவையை உணர்ந்துள்ளவர்களின் மனதிலும், இடதுசாரி ஆதரவாளர்கள் மனதிலும் கம்யூனிஸ்ட் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரே கட்சியாகச் செயற்பட வேண்டும் என்ற ஆதங்கம் அண்மைக் காலமாக வளர்ந்து வருகிறது. இந்த ஆதங்கம், அனைத்து கம்யூனிஸ்ட் கட்சி களுமே மார்க்சிய சித்தாந்தத்தின் அடிப்படையில் செயற்ப டுகிறபோது அவை இணைவதற்குப் பெரிய தடையாக என்ன இருந்துவிட முடியும் என்ற கேள்வியை எழுப்புகிறது. இக்கேள்விக்கான விடையைத் தருகிற சாக்கில் கம்யூ னிஸ்ட்களைக் கொச்சைப்படுத்துகிற பணியை ஆளும் வர்க்கம் திட்டமிட்டு செய்து வருகிறது. கம்யூனிஸ்ட்களை நேசிப்பவர்களும் அந்த தந்திரத்திற்கு இரையாவது வேதனைக்குரியது. ஆளும் வர்க்கத்தின் பொய்களைத் தோலுரித்துக் காட்டவும், அனைத்துக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஒரே கட்சியாக இணைவதைத் தடுக்கிற உண்மையான தடை என்ன என்பதை சொல்லவும் இக்கட்டுரை முனைகிறது.

> **“பெருவாரியான மக்களின் நிலம், உணவு, வேலை, கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாமல் முதலாளித்துவ பொருளாதாரம் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது.”**

சி.பி.ஐ., சி.பி.எம். இவ்விரண்டும் நீங்கலாக, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (CPI-ML) மற்றும் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி விடுதலை (CPI-ML Liberation), உள்ளிட்ட பல சிறு சிறு அணிகளாக கம்யூனிஸ்ட் கட்சிகள் பிரிந்து செயற்படுவதால் வாக்கு வங்கி சரிகிறது என்ற வாதம் முதலில் ஏற்புடையதல்ல. ஏனெனில் அண்மைக் காலமாக CPI, CPM, CPIML (L) ஆகிய மூன்று கட்சிகளும் தேர்தல் களத்தில் இணைந்தேதான் பணியாற்றுகின்றன. இன்று இந்தியாவில் நடைமுறையில் இருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி தோல்வியை அல்லது வாக்கு வங்கி பலத்தைப் பணபலம், அதிகார பலம், கவர்ச்சிகரமான இலவச அறிவிப்புகள் மற்றும் அடையாள அரசியல் உள்ளிட்ட பல காரணிகள் தீர்மானிக் கின்றன. வர்க்கச் சுரண்டலுக்கு எதிராக மக்களை அணி திரட்டும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இக்காரணிகள் சாதகமாக இருப்பதில்லை. தங்கள் தலைமையில் திரட்டப் படும் தொழிலாளர்களில் பெரும் பகுதியைக்கூட இக் கட்சிகளால் அரசியல்ப்படுத்த முடியவில்லை என்பது இவர்களின் கூடுதல் பலவீனம். இவற்றுக்கெல்லாம் மேலாக அனைத்து வகை ஊடகங்களும் இன்று பெரும் முதலாளிகள் வசம் இருப்பதால் அவை யாவும் ஆளும் வர்க்கத்திற்கு ஆதரவான செய்திகளையே மக்களிடம் கொண்டு சேர்க்கின்றன. இன்றைய தேர்தல் அரசியலில் தவிர்க்க இயலாமல் முன்னுக்கு வந்துள்ள இக்காரணிகளை எடுத்துச் சொல்வதன் நோக்கம், நேர்மையான அரசியலின் பின்னால் மக்களை அணிதிரட்டுவதில் கம்யூனிஸ்ட்கள் தொடர்ந்து சந்தித்துவரும் தோல்வியை நியாயப்படுத்துவது அல்ல. பெருவாரியான மக்களின் நிலம், உணவு, வேலை, கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாமல் முதலாளித்துவ பொருளாதாரம்

நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. அதன் தோல்வியின் பயனை இந்தியாவில் மட்டுமல்லாது உலகின் பல பகுதிகளிலும் வலதுசாரி கட்சிகள் அறுவடை செய்து வருவது கவலை தருகிறது. இந்த புதிய சூழலில் இடதுசாரிகள் மண்ணுக்கேற்றவாறு மார்க்சியத்தை நடைமுறைப்படுத்தவும், மக்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் அவர்களை அரசியல்ப்படுத்தவும் கூடுதலாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்பது மறுப்பதற்கில்லை. இந்த பொதுவான அவதானிப்பு ஒருபுறம் இருக்கட்டும். இனி, கட்டுரையின் முக்கிய நோக்கமான சி.பி.ஐ, சி.பி.எம், சி.பி.எம்.எல் (விடுதலை) கட்சிகளின் இணைப்புக் குறித்துப் பேசுவோம்.

## கொச்சைப்படுத்துவதே நோக்கம்:

இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணொளி தன் வாதத்தை இப்படி முன்வைக்கிறது: '1962-இல் நடைபெற்ற தமிழக சட்டமன்ற தேர்தலில் தி.மு.க, காங்கிரஸ், சுதந்திரா மற்றும் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் தனித்துப் போட்டியிட்டன. தேர்தல் முடிவுகள் கம்யூனிஸ்ட் களுக்குச் சாதகமாக அமையவில்லை. தி.மு.க. 50 இடங்களிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 2 இடங்களிலும் வெற்றி பெற்றன. தேர்தலின்போது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் சிலர் தி.மு.க.-வை விட காங்கிரஸ் முற் போக்கான கட்சி என்று பேசியதைத் தவறு என்று கம்யூனிஸ்ட் கட்சி தன்னை சுயவிமர்சனம் செய்து கொண்டாலும் அக் கட்சித் தலைமையின் ஒரு பகுதி காங்கிரஸ் ஆதரவு நிலைப்பாட்டைக் கைவிடவில்லை. இந்நிலையில் 1964-இல் கம்யூனிஸ்ட்சியின் தேசிய அளவில் பிளவு ஏற்பட்டது. காரணம், ரஷ்யா - சீனா பிரச்சினை. சீன கம்யூனிஸ்ட் கட்சி ரஷ்யாவைத் தடம் மாறிப் போவதாக விமர்சனம் செய்தது. இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பிரிவினர் ரஷ்யா வையும் மற்றொரு பிரிவினர் சீனாவையும் ஆதரித்தனர். மேலும் 1962-இல் நடந்த இந்தியா - சீனா போரில் ஒரு பிரிவினர் இந்தியாவையும் மற்றொரு பிரிவினர் சீனாவையும் ஆதரித்தனர். இம்முரண் இந்திய அளவில் காங்கிரஸ் ஆதரவு, காங்கிரஸ் எதிர்ப்பு என்ற பிரச்சினையில் விஸ்வரூபம் எடுத்தது. காங்கிரஸ் எதிர்ப்பு நிலையெடுத்த பிரிவினர் தனியே பிரிந்து சி.பி.எம். என்ற கட்சியைத் தொடங்கினர்.'

இவ்வாறு ரஷ்யா மற்றும் சீனாவின் ஊதுகுழல்களாகக் கம்யூனிஸ்ட் கட்சிகளைக் கொச்சைப்படுத்துகிற இந்த வாதம் திட்டமிடப்பட்டுப் பரப்பப்படுகிற பொய்யன்றி வேறெதுவும் இல்லை. இந்திய-சீன போரின்போது ஒரு பிரிவினர் 'போர் ஒருபோதும் தீர்வு தராது எனவே இரு நாடுகளும் எல்லைப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும்' என்று சொன்னதைத் திரித்து சீனாவை ஆதரித்தனர் என்று சொல்வது வடிகட்டிய பொய். ஆளும் வர்க்கத்தின் குரலாக ஒலிக்கிற இந்த வாதம், சி.பி.எம் உருவானபொழுது அதனை ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி அங்கீகரிக்கவில்லை, சீன கம்யூனிஸ்ட் கட்சி ஒருபடி மேலே சென்று சி.பி.எம். கட்சியை சர்வதேச அநாதை என்று விமர்சித்தது போன்ற சில வரலாற்று உண்மைகளை வசதியாக மறைத்து விடுகிறது. சி.பி.எம். - சி.பி.ஐ. பிரிவிற்கு இப்படி வலிந்து தரப்படுகிற ஊதுகுழல் இலக்கணம் உண்மையென்றால் அதற்குப்பின்னர் வேறு சில கம்யூனிஸ்ட் அணிகள் உருவானதற்கு இவ்வாதத் தின்படி இடமில்லை. எனவேதான் சி.பி.எம். உருவானதற்கு விலாவாரியாக விளக்கம் தருகிற இக்காணொளி சி.பி.ஐ.எம்.எல். மற்றும் சி.பி.ஐ.எம்.எல்.(விடுதலை) கட்சிகள் உருவானது குறித்து மௌனம் காக்கிறது.

சமீபகாலமாக தேர்தல் களத்தில் மட்டுமல்லாது மக்கள் பிரச்சினைகளை முன்னிறுத்தும் போராட்ட களத்தில் ஒன்றிணைந்து செயற்பட்டு வரும் CPI, CPM, CPIML(L) ஆகிய மூன்று கம்யூனிஸ்ட் கட்சிகளும் ஒரே கட்சியாக இணைவதற்கு எது தடையாக உள்ளது என்ற கேள்விக்கு இனி வருவோம்.

## இறுதி இலக்கு:

காங்கிரஸ் உள்ளிட்ட பல முதலாளித்துவ கட்சிகளுக்கு ஆட்சியில் அமர்வதுதான் இறுதி இலக்காக இருக்கிறது. வர்க்கச் சுரண்டல் தலை விரித்தாடுகிற இன்றைய முதலாளித்துவ சமூக அமைப்பை மாற்றுவதற்கான திட்டம் ஏதும் அக்கட்சிகளை வழி நடத்துவதில்லை. எனவே அக் கட்சிகளுக்குள் ஏற்படுகிற முரண்பாடுகள் பெரும்பாலும் தனிநபர் சார்ந்ததாகவே இருக்கும், அக்கட்சிகளில் உருவாகும் பிளவும் தனிநபர் சார்ந்ததாகவே இருக்கும். இத்தகைய பிளவுகளை காங்கிரஸ், திராவிட கட்சிகள்



உள்ளிட்ட பல முதலாளித்துவ கட்சிகளில் காண முடிகிறது. இனம், சாதி, மதம் போன்ற அடையாளங்களின் அடிப்படையில் உருவாகிற அல்லது செயற்படுகிற அரசியல் கட்சிகளுக்கு, தங்கள் பிரிவினரின் நலனைப் பேணுவது என்ற இலக்கு இருக்கும். ஆனால் சமூக மாற்றம் என்பது இலக்காக இருப்பதில்லை. எனவே பொருளாதாரக் கொள்கை என்று வருகிறபோது இக்கட்சிகளும் முதலாளித்துவ பொருளாதார கொள்கைகளையே பின்பற்றுகின்றன. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது இறுதி இலக்கல்ல. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் இந்தியாவில் முதலில் வர்க்க பேதமற்ற ஒரு சோசலிச சமூகத்தைக் கட்டுவதும் பின்னர் வர்க்கமற்ற ஒரு கம்யூனிச சமூகத்தைக் கட்டுவதுமே எந்த ஒரு கம்யூனிஸ்ட் கட்சியினதும் இறுதி இலக்காக இருக்கும். இந்த இறுதி இலக்கை எட்டுவதற்குக் கட்சித் திட்டம் ஒன்று வகுக்கப்படும். கம்யூனிஸ்ட் கட்சிகளின் திட்டம் என்பது உண்மையில் நாட்டில் நிலவும் சமூக நிலைமை குறித்த மார்க்சிய லெனினிய ஆய்வின் அடிப்படையிலான ஓர் ஆவணம். Concrete analysis of concrete situation என்பது இயக்கவியல் அணுகுமுறையின் முக்கியமான அம்சமாகும். எனவே சமூக, வர்க்க நிலைமைகளைக் கணிப்பதில் ஏற்படுகிற தவறு இறுதி இலக்கை அடைவதற்கான சரியான வழியைத் தேர்ந்தெடுப்பதில் ஊனத்தை ஏற்படுத்தி விடும். சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகளின் இறுதி இலக்கு ஒன்றாக இருப்பினும் சமூக வர்க்க நிலைமைகளைப் பற்றிய கணிப்பில் அவை வேறுபடுகின்றன. அதன் காரணமாக அக்கட்சிகளின் திட்டங்கள் வேறுபடுகின்றன. கட்சித் திட்டத்தைத் தீர்மானிப்பதில் உருவான கருத்து வேறுபாட்டின் காரணமாகவே இந்திய கம்யூனிஸ்ட் இயக்கம் இன்று பிளவுபட்டு இருக்கிறது. கட்சித் திட்டத்தின் அடிப்படையில்தான் சமூக, அரசியல் பிரச்சினைகள் குறித்த அணுகுமுறைகள் அமைகின்றன. வேறுபட்ட கட்சித் திட்டங்களின் காரணமாக, ஆளும் வர்க்கம் குறித்த, வர்க்கப் போராட்டத்தின் தலைமை மற்றும் வழிமுறை குறித்த கணிப்பில் அக்கட்சிகள் வேறுபடுகின்றன; எனவேதான் தாராள மய பொருளாதாரக் கொள்கைகளை எதிர்ப்பதில் ஒரே நிலைப்பாட்டை எடுக்கிற இக்கட்சிகள் பல சமூக, அரசியல் பிரச்சினைகளில் வேறுபாடான நிலைகளை எடுப்பதை நம்மால் காண முடிகிறது.

> “ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் இந்தியாவில் முதலில் வர்க்க பேதமற்ற ஒரு சோசலிச சமூகத்தைக் கட்டுவதும் பின்னர் வர்க்கமற்ற ஒரு கம்யூனிச சமூகத்தைக் கட்டுவதுமே எந்த ஒரு கம்யூனிஸ்ட் கட்சியினதும் இறுதி இலக்காக இருக்கும்.”



## இலக்கு ஒன்று திட்டம் வேறு:

கட்சித்திட்டங்கள் எப்படி வேறுபடுகின்றன என்பதைச் சற்று விரிவாகப் பார்ப்போம். இந்திய விடுதலைப் போரை இந்திய சமூகப் புரட்சியின் முதற்கட்டம் என்றே மூன்று கட்சிகளும் வரையறுக்கின்றன. இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முந்தைய காலத்தில் விரிவான கட்சித்திட்டம் உருவாகாத பின்னணியில், நாட்டின் விடுதலையை உடனடி இலக்காகக் கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயற்பட்டு வந்தது. ஆனால் இந்தியா விடுதலை பெற்ற பிறகு கட்சித்திட்டம் இறுதி செய்யப்படுகிறபோது, இந்திய ஆளும் வர்க்கம் குறித்தும் புரட்சியின் அடுத்த கட்டம் குறித்தும் கட்சிக்குள் எழுந்த கடுமையான கருத்து முரண்பாடுகளின் காரணமாகவே இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உருவானது. கட்சித்திட்டம் குறித்து 1955-இல் தொடங்கிய உள்கட்சி விவாதம் ஏறக்குறைய பத்து ஆண்டுகள் நீடித்தும் கட்சிக்குள் ஒருமித்த கருத்து ஏற்படாத சூழலில் சி.பி.எம். என்ற மற்றொரு கட்சி உருவாவது தவிர்க்க இயலாது போயிற்று. பெரு முதலாளிகளின் தலைமையிலான முதலாளித்துவ - நிலபிரபித்துவ அரசு என்று இந்திய அரசை சி.பி.எம். கட்சித்திட்டம் சித்திரிக்கிறபோது ‘இந்திய அரசு ஒட்டுமொத்த தேசிய முதலாளிகளின் அரசென்றும், அரசு அதிகாரத்தில் பெருமுதலாளிகளுக்குக் கூடுதல் செல்வாக்கு உள்ளதாகவும், அரசிற்கும் நிலபிரபுக்களுக்கும் இடையில் வலுவான தொடர்புள்ளதாகவும்’ சி.பி.ஐ.-இன் கட்சித் திட்டம் வரையறுக்கிறது. ஆக சி.பி.எம்., ஆளும் வர்க்கத்தின் தலைமையாக பெருமுதலாளிகள் இருக்கிறார்கள் என்று சொல்கிறபோது சி.பி.ஐ. பெரு முதலாளிகளை ஆளும் வர்க்கத்தின் தலைமையாகப் பார்க்கவில்லை. அது போல நிலபிரபுக்களை ஆளும் வர்க்கத்தின் அங்கம் என்ற சி.பி.எம். வரையறுப்பில் இருந்து சி.பி.ஐ. வேறுபடுகிறது.

இரண்டு கட்சிகளும் புரட்சியின் இன்றைய கட்டத்தை ஜனநாயக புரட்சிக் கட்டம் என்று சொல்கின்றன; சோசலிச புரட்சிக்கான முன்தேவையாக ஜனநாயக புரட்சியை முன்வைக்கின்றன; சி.பி.எம். அதனை மக்கள் ஜனநாயக புரட்சி என்றழைக்கிறபோது சி.பி.ஐ. அதனை தேசிய ஜனநாயக புரட்சி என்கிறது. ஆனால் ஆளும் வர்க்கம் குறித்துள்ள வேறுபட்ட கணிப்பின் காரணமாக ஜனநாயக புரட்சியை முன்னெடுத்துச் செல்கிற அணியின் தலைமை யார் என்பதில் இரண்டு கட்சிகளும் வேறுபடுகின்றன. தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் மக்கள் ஜனநாயக புரட்சி நடைபெறும் என்று சி.பி.எம். கட்சித்திட்டம் சொல்கிறது. தொழிலாளி, விவசாயி, தேசிய முதலாளி உள்ளிட்ட அனைத்து முற்போக்கு வர்க்கங்களின் தலைமையில் தேசிய ஜனநாயக புரட்சி நடைபெறும் என்றது, சி.பி.ஐ. கட்சித்திட்டம். இந்த தவறான கணிப்புத்தான் சி.பி.ஐ. கட்சியை அவசரநிலை உள்ளிட்ட சில நேரங்களில் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கவும், இந்திய ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதியான காங்கிரஸ்



தலைமையிலான கூட்டணி அரசில் பங்கேற்கும் நிலைக்கும் இட்டுச்சென்றது. 1964 வாக்கில் இறுதி செய்யப்பட்ட கட்சித் திட்டத்தை இரு கட்சிகளும் - 1989-இல் சி.பி.எம்., 2015-இல் சி.பி.ஐ. மேம்படுத்தின. இந்திய அரசு பெரு முதலாளிகளின் தலைமையிலான முதலாளித்துவ-நிலபிரபுத்துவ அரசு என்பதையும் நிலபிரபுக்கள் இந்திய ஆளும் வர்க்கத்தின் ஒரு பகுதி என்பதையும் சி.பி.எம்.-இன் மேம்படுத்தப்பட்ட கட்சித்திட்டம் உறுதி செய்கிறது.

இந்திய அரசு 'கார்ப்பொரேட் வணிகங்கள் மற்றும் ஏக போகங்களின் தலைமையிலான முதலாளித்துவ அரசு' என்றும் அது நிலபிரபுக்களோடு வலுவான தொடர்பு கொண்டுள்ளது என்றும் சி.பி.ஐ.-இன் மேம்படுத்தப்பட்ட கட்சித்திட்டம் ஆளும் வர்க்கம் மற்றும் இந்திய அரசு குறித்த வரையறையில் ஒரு சில மாற்றங்களைச் செய்துள்ளது. இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது என்றாலும் இப்புதிய கணிப்பு நிறைவானதாக இல்லை என்றும் குறிப்பாக ஆளும் வர்க்கத்தின் ஓர் அங்கமாக நிலப்பிரபுக் களைப் பார்க்காத பலவீனம் தொடர்வதாகவும் சி.பி.எம். சுட்டிக் காட்டுகிறது. 'ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு அமையக் கூடிய (தேசிய) ஜனநாயக அரசிற்கு தொழிலாளிகள், விவசாயிகள், சிறு முதலாளிகள் உள்ளிட்ட கூட்டு வர்க்கம் தலைமைதாங்கும்; சோசலிச மாற்றத்திற்கு இட்டுச் செல்லும் இந்நிலை முடிவுறுகிறபோது காலப்போக்கில் தலைமை பொறுப்பு தொழிலாளி வர்க்கத்தின் கைகளுக்கு வரும்' என்ற சி.பி.ஐ.-இன் நிலைப்பாடு சரியல்ல என்று சொல்கிற சி.பி.எம்., தொழிலாளி வர்க்கத்தின் தொடர்ச்சியான தலைமையே சோசலிச மாற்றத்திற்கு இட்டுச் செல்லும் வலிமையுடையது என்று சுட்டிக்காட்டுகிறது.

## விலைபோகாத வன்முறைப் பாதை:

1964-இல் சி.பி.எம். உருவான ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்னர், இந்திய பெரு முதலாளிகள் பன்னாட்டு நிதி மூல தனத்தோடு இணைந்தும், தங்களின் தேவைக்கேற்ப முரண்பட்டும் செயல்படுகிறார்கள் என்ற கணிப்பை ஏற்காத ஒரு சிறு பிரிவினர் சி.பி.எம்-இலிருந்து விலகி சி.பி.எம்.எல். என்ற கட்சியைத் தொடங்கினர். இந்திய பெருமுதலாளிகள் எப்போதும் தரகு முதலாளிகளாகவே செயற்படுகிறார்கள் (இது தவறு என்பதை டாட்டா, அதானி உள்ளிட்ட ஒரு சில இந்திய பெருமுதலாளிகள் இலங்கை, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் முதலீடு செய்து பன்னாட்டு முதலாளிகளாக மாறியுள்ள வளர்ச்சிப் போக்கு உறுதி செய்கிறது) என்று சொன்ன அக்கட்சி ஆளும் வர்க்கத்தைத் தூக்கி எறிய, மக்கள் ஆயுதமேந்திப் போராடத் தயாராகிவிட்டனர் என்று முடிவு செய்து, ஆயுதமேந்திய போராட்டத்தை நக்சல்பாரி என்ற இடத்தில் தொடங்கி சில பகுதியில் முன்னெடுக்கவும் செய்தது. அதன் காரணமாக நக்சல்பாரி இயக்கம் என்று பெயர் பெற்ற சி.பி.எம்.எல். கட்சி சமூக மாற்றத்திற்கு நாடாளுமன்ற தேர்தல் பாதையை ஒட்டுமொத்தமாக எதிர்த்தது. மக்களை அணி திரட்ட நாடாளுமன்ற தேர்தல் முறையையும் பயன்படுத்த வேண்டும் என்று சொன்ன பிற இடதுசாரிகளை 'ஓட்டுப் பொறுக்கிகள்' என்று கடுமையாக விமர்சித்து அவர்களை முதலாளித்துவ கட்சிகளோடு ஒரே தட்டில் வைத்தது. அது முன்னெடுத்த வன்முறை கலாசாரம் மக்களிடம் பெரிய செல்வாக்கு பெறவில்லை என்பதோடு காலப்போக்கில் அக்கட்சி சி.பி.ஐ.எம்.எல். (விடுதலை), மக்கள் அதிகாரம் உள்ளிட்ட சிறு சிறு அணிகளாக சிதறுண்டு போனது. தேர்தலை புறக்கணிக்கிற 'மக்கள் அதிகாரம்' அணி 'ஓட்டுப்பொறுக்கிகள்' என்ற கடுமையாக விமர்சிப்பதைத் தொடர்கிறது. எனவே பிற இடதுசாரி இயக்கங்களோடு அது இணைந்து பயணிப்பதற்குக்கூட சாத்தியமில்லை. ஆனால் தேர்தல் பாதையை புறக்கணிக்காத சி.பி.ஐ.எம்.எல். கட்சி, சி.பி.ஐ. மற்றும் சி.பி.எம்.-மோடு இணைந்தும் தனித்தும் பல மக்கள் இயக்கங்களை நடத்தி வருகிறது.

## விவாதங்கள் தொடரட்டும்...

CPI,CPM,CPIML(L) கட்சிகளுக்கிடையில் அண்மைக் காலமாக ஒன்றுபட்ட பல அரசியல் இயக்கங்கள் நடத்துவ தற்காகக் கூடுதல் விவாதங்கள் நடைபெறகின்றன. அதைப்போல கட்சித் திட்டங்கள் குறித்தும் விவாதங்கள் நடைபெற்றால் அது இடதுசாரி ஒற்றுமைக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த இந்திய அரசியலுக்கே நன்மை பயக்கும்.



ponnuraj.v@thaiveedu.com

# இந்தியத் திருநாட்டில் மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் அவலம்

நெல்லை ஜெயசிங்



141 கோடி மக்கள் வாழும் இந்தியாவில், மனிதக் கழிவுகளை அகற்றும், தூய்மைப் பணியானது மிகப்பெரும் சவாலான ஒன்றாகும். மனிதக் கழிவுகளை அகற்றுவதற்கு முறையான திட்டம் இந்தியாவில் நடைமுறையில் இல்லை. சுதந்திரம் அடைந்து 75 வருடங்கள் கடந்து விட்டன. பொருளாதார வலிமையில் இந்தியா விரைவில் உலக நாடுகளில் மூன்றாவது இடத்தை அடைந்து விடும் என, தான் செல்லும் நாடுகளில் எல்லாம் இந்தியப் பிரதமர் கூறத் தயங்குவது இல்லை. நடைமுறையில் ஏற்றத் தாழ்வு நிறைந்து, சாதிய கட்டமைப்பினை ஆழமாகக் கொண்டுள்ள இந்தியாவில், மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் அவல நிலை சுதந்திரம் அடைந்து 75 வருடங்கள் ஆனபோதும் நீங்கவில்லை. இக் கொடிய கொடுமை ஒழிக்கப்படும் என ஆட்சியாளர்கள் அவ்வப் போது கூறி வநத போதும் அது முற்றாக நீங்கவில்லை.

இந்திய தேசம் சாதிய படி நிலைக் கட்டமைப்பை இறுக்கமாகக் கொண்டிருப்பதால் அதன் வழியே, ஒரு குறிப்பிட்ட சாதியினர் மீது காலம் காலமாக இப் பணி திணிக்கப்பட்டு வந்துள்ளது. ‘மனிதக் கழிவுகளை மனிதனே சுத்தம் செய்வது அவர்களது கண்ணியத்திற்கும் உரிமைக்கும் எதிரானது’ என உயர் நீதிமன்றங்கள் பலமுறை கூறி வந்த போதும், இப்பணியில் இருந்து குறிப்பிட்ட சமூகம் இன்று வரை விடுதலை பெறாமல் இருந்து வருவதைக் காண முடிகிறது. ‘டிஜிட்டல் இந்தியா, டிஜிட்டல் இந்தியா’ என நொடிக்கு நூறு தரம் கூறும் பாஜக ஆட்சியில், மலக் குழி மரணங்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. அதில் உத்தரப் பிரதேசம் முதல் இடத்திலும், தமிழ்நாடு இரண்டாம் இடத்திலும் இருப்பதாக கூறப்படுகிறது.

## மனிதக் கழிவுகளின் வெளியேற்றம்:

21-ஆம் நூற்றாண்டில் ஒரு மனிதனின் கழிவை இன்னொரு மனிதன் கையால் அள்ள வேண்டிய அவல நிலை நீடிப்பது மிகப் பெரிய கொடுமையாகும். ‘Septic tank’ எனப்படும்

**மனிதக் கழிவுகளை அகற்றும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 1931-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 20 இலட்சம் பேர் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் 1961-இல் இது 8.2 இலட்சமாகவும், 1981-இல் 6.18 இலட்சமாகவும், 1989-இல் 4 இலட்சமாகவும், 2011-இல் 80 ஆயிரமாகவும் படிப்படியாகக் குறைந்து... 2018-ஆம் ஆண்டு தேசிய தூய்மைப் பணியாளர்கள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் கணக்கெடுப்பின்படி 87,913 ஆகவும். அண்மைக் கால புள்ளி விபரம் ஒன்றின் படி 2019-ஆம் ஆண்டு 53,130 மலக்குழி பணியாளர்கள் இருப்பதாக அறியப்படுகிறது.**

கழிவு நீர் (மலம் உட்பட) தொட்டி, 'Drainage' எனப்படும் கழிவு நீர் வடிகால் என்பன நிரம்பி வெளியேறும்போது அல்லது வெளியேறாமல் தடைப்படும்போது அதில் இறங்கி, போதிய பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாமல், கைகளால் சுத்தம் செய்பவர்களாக இருப்பவர்கள், அவை சார்ந்த தூய்மைப் பணியாளர்களே. பாதாளச் சாக்கடைகளை மனிதர்களே இறங்கி சுத்தம் செய்யும் நிலை மாறவில்லை. நகரங்களில் மட்டுமே உள்ள பிரச்சினை அல்ல இது. மக்கள் வாழும் அனைத்து இடங்களுக்கும் இது பொதுவான பிரச்சினையாகும். பொது முடக்க காலத்தில் இந்திய கிராமங்களில் உலர்ந்த கழிவறைகளின் மனிதக் கழிவுகளை, மனிதர்களே அகற்றும் இழிநிலை இருந்தன. அண்மைக்கால தரவுகளின் படி 665000 கிராமங்கள் இந்தியாவில் இருக்கின்றன. 2011-இல் 26 இலட்சம் தண்ணீர் இல்லா உலர் கழிப்பறைகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. மேலும் கிராமப் புறங்களில் கழிப்பறைகள் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அமைக்கப்படாததுடன் இயந்திரப் பயன்பாடு குறைவாகவே இருப்பதால் மனிதர்களே சுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

தனியார் வீடுகளிலும், தனியார் நிறுவனங்களிலும் மனிதர்களே கழிவு நீர் அகற்றும் பணிகளை செய்வதுடன் மட்டுமல்லாமல் இந்திய தொடருந்து, மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிலும் கூட மனிதர்களே மலம் அகற்றும் அவல நிலை நீடிக்கிறது. இன்று வரையிலும் இந்திய பயணிகள் பயணிக்கும் தொடருந்துகளின், 25 வீத கழிப்பறைகள்கூட, உயரிய தொழில்நுட்பத்தோடு கூடிய கழிப்பறைகளாக மாற்றம் பெறவில்லை என்பது, கவனிக்கத்தக்க விடயமாகும். இதனால் இந்திய தொடருந்து துறையில் அதிக அளவில் மலம் அள்ளும் தொழிலாளர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. தினமும் 14000-க்கு மேற்பட்ட தொடருந்துகள் இயக்கப்படுகின்றன. இலட்சக்கணக்கான கிலோமீட்டருக்கு விரிந்து செல்லும் தொடருந்துப் பாதைகளில் மனிதக் கழிவுகளை அள்ளும் பணி இதுவரை முழுமையாக ஒழிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னரும் பின்னரும் இலட்சக்கணக்கான தூய்மைப் பணியாளர்கள் கழிவுநீர் அகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். 1931-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 20 இலட்சம் பேர் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. 1961-இல் இது 8.2 இலட்சமாகவும், 1981-இல் 6.18 இலட்சமாகவும், 1989-இல் 4 இலட்ச மாகவும், 2011-இல் 80 ஆயிரமாகவும் படிப்படியாகக் குறைந்து வந்ததாகவும் கூறப்படுகிறது. 2018-ஆம் ஆண்டு தேசிய தூய்மைப் பணியாளர்கள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் கணக்கெடுப்பின்படி மனிதக் கழிவுகளை அகற்றும் துப்புரவு பணி யாளர்களின் எண்ணிக்கை 87913 என கூறப்படுகிறது. அண்மைக் கால புள்ளி விபரம் ஒன்றின் படி 2019-ஆம் ஆண்டு 53130 மலக்குழி பணியாளர்கள் இருப்பதாக அறியப்படுகிறது. இவ்விடயத்தில் அரசிடம் வெளிப்படைத் தன்மை இல்லாததால், வெளியிடப்படும் தரவுகளில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. இப்பணியில் ஈடுபடுபவர்களில் அதிக அளவினர் உத்தரப் பிரதேசத்தில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. அங்கு மட்டும் 5125 பேர் கைகளால் கழிவுகளை அகற்றும் பணியில் உள்ளனர். மகாராஷ்டிரா மாநிலத்தில் 5269 பேர் இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மனிதக் கழிவுகளை மனிதனே கைகளால் அள்ளுவதைத் தடுக்கும் வகையில் பல்வேறு சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. முதற் கட்டமாக தேசிய துப்பரவு பணியாளர் ஆணையம் ஒன்று 1994-இல் உருவாக்கப்பட்டது. அதன் பின்பும் கைகளால் மலம் அள்ளுவது தொடர்ந்தும் இருந்து வந்தது. மேலும் இதனை மீறுவோருக்கு சிறைத் தண்டனையும், பணியாளர்களுக்கு மறுவாழ்வு சட்டமும் 2013 டிசம்பர் 6 அன்று கொண்டு வந்த மத்திய அரசு, இதனை மிகக் கடுமையாக அமுல்படுத்தப் போவதாகவும் கூறியது. ஆனால் நடைமுறையில் கடுமையாக அமுல்ப்படுத்தப்படுவதில்லை. இச்சட்டத்தின் பின்னர், 'மனிதக் கழிவுகளை மனிதனே கைகளால் அள்ளுவது நாட்டில் நடைபெற்றதாக தகவல் இல்லை' என இணை அமைச்சர் ராம்தாஸ் அத்வாலே, அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இன்று வரையும் அக் கொடுமை நடைபெற்று வருவதைக் கண்கூடாகக் காணலாம்.

## உயிரிழப்புகள்:

மலக்குழி, மற்றும் கழிவுநீர் தொட்டி, கழிவுநீர் கால்வாய் என்பவற்றில் இருந்து வெளியேறும் விஷ வாயு காரணமாக, பல அப்பாவித் தொழிலாளர்கள் மரணமாவதும் இந்தியாவில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. துப்பரவுப் பணி தேசிய ஆணைய அறிக்கையின் படி, 2013 தொடங்கி 2017 வரையில், 608 பேர் மலக் குழி விஷ வாயு தாக்குதலில் மரணமடைந்துள்ளனர். 2017 முதல் ஓகஸ்ட் வரையில் 123 பேர் மரணித்துள்ளனர். இதே காலகட்டத்தில் டெல்லியில் மட்டும் 429 பேர் இறந்ததாக சபாய் கரம் சாரி அந்தோலன் அறிக்கை கூறுகிறது. வளர்ந்த தமிழ்நாடும் இதற்கு விதிவிலக்கல்ல.

இங்கு கடந்த 30 வருட காலத்தில் 250 பேர் இறந்துள்ளதாக அறியப்படுகிறது. கடந்த 2022 வருடத்தின் எட்டு மாத காலத்தில் 16 பேர் வரை மலக்குழி விஷ வாயு தாக்கி மரணித்துள்ளனர்.

மத்திய மாநில அரசுகளின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் என்ற காரணத்தால், மலக்குழி விஷ வாயு தாக்கி உயிரிழப்போர் பற்றிய தகவல்கள் வெளி உலகிற்கு அறிவிக்கப்படுவதில்லை. இறப்போர் மிகவும் அப்பாவிகளாக, படிப்பறிவு இல்லாதவர்களாக, விளிம்பு நிலையில் வாழ்வதால் மறைமுகமான இழப்பீட்டுடன், மரணமடைவோர் தகவல் மூடி மறைக்கப்படும் நிகழ்வுகளும் நடந்தே வருகின்றன. நடைமுறையில் உள்ள சட்ட திட்டங்களைப் பயன்படுத்தி இந்த இழி நிலையை தடுக்க, அரசும் அரச அதிகாரிகளும் முன் வந்தால் மட்டுமே இதனை முற்றாக தடுக்க முடியும்.

**கோவிட் பெருந் தொற்றுக் காலத்தில் மட்டும் ஆட்சியாளர்கள் இவர்களின் பாதம் தொட்டு வணங்கினார்கள். பரிசுகளை அள்ளிக் கொட்டினார்கள். அது ஒரு நாள் காட்சிப் படமாக, விளம்பரமாக மட்டுமே இருந்தது. இன்று வரை அவர்களின் இருண்ட வாழ்க்கையில் மாற்றம் நிகழ்ந்து விடவில்லை**

சட்ட ரீதியான தடைச் சட்டங்கள் இருந்த போதும் அவை நேர்மையான வகையில் அமுல்ப்படுத்தப்படுவதில்லை. கடந்த மாதம் சென்னை உயர்நீதிமன்றம், கழிவுநீர் தொட்டிகளையும் பாதாளச் சாக்கடைகளையும் சுத்தம் செய்ய மனிதர்கள் பணியமர்த்தப்படுவதை முற்றிலுமாகத் தடைசெய்து உத்தரவிட்டது. ஆனால் அதனால் எந்தப் பயனும் கிடைக்கவில்லை. மலக் குழி மரணச் செய்திகள் வந்த வண்ணமே உள்ளன. நாமும் அவ்வப்போது கனத்த இதயத்தோடு கடந்து செல்கிறோம். விண்வெளிக்கு நவீன கருவிகளுடன் மனிதனை அனுப்பும் நவீன இந்தியா, அடித்தட்டு என அடையாளப்படுத்தும் மனிதர்களை வெறுங்கையுடன் நிலத்துக்கு அடியில், மலக்குழிக்குள் இறங்கச் செய்கிறது.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்த, தானியங்கி உபகரணங்களை உபயோகிக்க அறிவுரை கூறும் அரசாங்கம் அதனை சரிவர அமுல்ப்படுத்துவதில்லை. சட்டத்தை மீறி பணியில் அமர்த்தும் அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படு வதில்லை. 'தூய்மை இந்தியா' என்ற இயக்கம் சில வருடங்களுக்கு முன்பு பிரதமரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அது வெறும் சுலோகமாக மாறியது மட்டுமல்லாமல், தூய்மைப் பணியாளர்கள் பணி மேம்படவும் இல்லை. கொடுமையான இப் படுகுழியில் இருந்து இவர்கள் மீட்கப்படாமல் இருப்பதற்கு, அடிப்படைக் காரணமாக இருப்பது, இந்திய சாதிய கட்டமைப்பு என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

## சாதிய கட்டமைப்பு:

கையால் மலம் அள்ளும் பணி என்பது பல பணிகளில் இதுவும் ஒன்று என கடந்து போய்விட முடியாது. அனைத்து சமூகங்களும் போட்டி போட்டுக்கொண்டு இப்பணிக்கு வருவதில்லை. இத் தொழில் நீண்டகால சமூக அநீதியின் விளைவாக, ஒதுக்கீடு செய்யப்பட்டு வேரூன்றியுள்ளது. ஆழமான சமூக மற்றும் பொருளாதார காரணிகள் இதற்கு அடிப்படையாக அமைந்துள்ளன. வெளிப்படையாக கூறுவதாயின், இது சாதி அடிப்படையிலான தொழில் பாகுபாடாகும். பல நூறு ஆண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்டு ஒதுக்கி வைக்கப்பட்ட குறிப்பிட்ட சமூகத்தவர்கள் இத்தொழிலை செய்திட தள்ளப்பட்டனர். வறுமை, வருமானத்திற்கு வழி தெரியாமை, போதிய கல்வி அறிவு இன்மை என பல்வேறு சமூக காரணிகளால் இவ்வகைப்பட்ட தாழ் தொழில் இவர்களை நோக்கி திரும்பி உள்ளது. நீண்டகால சாதிய கட்டமைப்பு காரணமாக சமூகப் பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்ள முடியாமல் இவர்கள் திணறி வருகின்றனர்.

சாதிய கட்டமைப்பு காரணமாக, ஏழ்மையான நிலையில் வாழும் குறிப்பிட்ட சமூகத்தவர்கள் மட்டுமே இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். உயர் சாதியினர் என அழைக்கப்படுவோர் மட்டுமல்லாமல், இடைச் சாதியினர்கூட இத்தொழிலைச் செய்திட முன்வருவதில்லை. இத்தொழிலைச் செய்து வருகின்றவர்களில் 95 வீதத்திற்கும் அதிகமானோர், சாதிய கட்டமைப்பின் அடித்தளத்தில் இருக்கின்ற விளிம்பு நிலை சமூகம் சார்ந்த தலித் மக்களாவர். அடிப்படை உரிமை மீறல், சமத்துவம் இல்லாத நிலை, கொடுந்தீண்டாமை, தனிப்பட்ட சுதந்திரம் இன்மை, சுரண்டல், சக மனிதராகப் பார்க்கப்படாத மனநிலை, ஒதுக்குப்புறமான, அடிப்படை வசதிகள் இல்லாத குடியிருப்பு என எண்ணற்ற மனிதாபிமானமற்ற தன்மைகள் இருந்த போதிலும், இத்தொழிலைத் தொடரவேண்டிய கட்டாயத்தில் இம்மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

விரும்பி அவர்கள் இப்பணிக்கு வருவதில்லை. சமூக நிர்ப்பந்தம், அதிகார நிர்ப்பந்தம் மட்டுமல்லாமல் அவர்களுக்கு, வேறு விரும்பிய தொழில் கிடைப்பதில்லை என்ற அவல நிலையும் நாட்டில் நிலவுகிறது. விரல் விட்டு எண்ணக்கூடிய புதிய சந்ததியினர், இட ஒதுக்கீடு காரணமாக, இதிலிருந்து விடுபட்டாலும், பெரும்பாலான வட இந்திய மாநிலங்களில் இவர்கள் இச்சூழ் நிலையிலேயே சுழன்றுகொண்டு இருக்கின்றனர்.

கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் மட்டும் ஆட்சியாளர்கள் இவர்களின் பாதம் தொட்டு வணங்கினார்கள். பரிசுகளை அள்ளிக் கொட்டினார்கள். அது ஒரு நாள் காட்சிப் படமாக, விளம்பரமாக மட்டுமே இருந்தது. இன்று வரை அவர்களின் இருண்ட வாழ்க்கையில் மாற்றம் நிகழ்ந்து விடவில்லை. நாட்டின் பல பகுதிகளில் கையால் மலம் அள்ளும் தொழில் இன்றும் நடைமுறையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்திய அரசாங்கம் பல்வேறு சட்டதிட்டங்களையும் நடவடிக்கைகளையும் அறிமுகப்படுத்தியது. ஆனால் அவை உறுதியாக அமுல்ப்படுத்தப்படவில்லை.

## தீர்வுகள்:

இவர்களுக்கான, இத்தொழிலுக்கான தீர்வு சுலபமானதல்ல. சாதிய கட்டமைப்பின் ஆதிக்கம் இந்திய மண்ணில் இருக்கும் வரை அவர்களால் அப்படுகுழியில் இருந்து விடுபட முடியாது.

அதிகார வர்க்கம் அவர்களுக்கு விடுதலை அளிக்காது. மறுபுறம் இதை விட்டால் வேறு வேலையும் அவர்களுக்குக் கிடைக்காது. இந்நிலையில் சமூக ஆர்வலர்கள், முற்போக்கு சிந்தனையாளர்கள், இடதுசாரி கருத்தாளர்கள் என பலரது அழுத்தம், மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக இத்தொழில் புரிவோருக்கு சில சலுகைகளை வழங்கிட அரசுகள் முன்வரலாம். முன்வர வேண்டும்.

முதலில் பாதுகாப்பான வேலைச் சூழலை ஏற்படுத்தப்பட வேண்டும். இவர்களின் தொழில் அசுத்தம் தொடர்பானது மட்டுமல்ல அபாயகரமானதும் கூட. பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டியது மிகவும் அவசியம். ஆனால் நடைமுறையில் கையுறைகூட அணியாமல் தூய்மைப் பணி செய்வோரை இந்திய தெருக்களில் நாம் அன்றாடம் காணலாம். இதனால் அவர்கள், கடுமையான தொற்று நோய்க்கு ஆளாகும் நிலையும் ஏற்படுகிறது. அரசாங்கமும் சமூக அமைப்புகளும் அவர்களின் உடல் நலனில் விசேட கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். தொழில்நுட்ப வளர்ச்சியில் பெருமை கொள்ளும் இந்திய அரசாங்கம் தூய்மைப் பணிகளில் தானியங்கி கருவிகளைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். வளர்ந்த நாடுகளின் ஆலோசனைகளைப் பெற்று அதனை அமுல்ப்படுத்த முன்வர வேண்டும்.

சமூக அங்கீகாரம் இல்லாத சமூகமாக தூய்மைப் பணியாளர்கள் வாழ்ந்து வருகின்றனர். அனைத்து இடங்களிலும் அவர்கள் சாதியின் பெயரால் கடைசி வரிசையில் நிறுத்தப்படுகிறார்கள். பல ஆலயங்களின் கதவுகள் இவர்களுக்கு திறக்கப்படு வதில்லை என்பது காலம் காலமாக உள்ள ஆகம விதி, இட ஒதுக்கீடு, முன்னுரிமை என சலுகைகள் இருந்த போதும் அதனை முழுமையாகப் பெறும் வாய்ப்பும் கிடைப்பதில்லை. மேலை நாடுகளில் இத் தொழில் புரிவோர், முத்திரை குத்தப்பட்டு, சமூகத்தால் ஒதுக்கிவைக்கப்படுவதில்லை. அந்நிலையை அடைய இந்தியா இன்னும் பல நூறு வருடங்கள் காத்திருக்க வேண்டி இருக்கும். சமூக அங்கீகாரம் இருப்பின், ஏனைய சாதியினரும் பணி செய்யக் கூடிய ஒரு தொழிலாக இது பார்க்கப்படும்.

கோடிக்கணக்கானவர்கள் வேலை இல்லாத நிலை நீடிக்கும் நாட்டில், குறிப்பிட்ட சமூகம் இத்தொழிலைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. விருப்பத்தின் அடிப்படையில் யாரும் இத்தொழிலுக்கு வருவதில்லை. வேறு தொழில் கிடைக்காத சூழலே, இத்தொழிலை ஏற்க காரணமாகிறது. இவர்களுக்கான ஊதியமும் திருப்திகரமானதாக இல்லை. இவர்களின் சமூக சூழல் அறிந்து, அரசாங்கம் கணிசமான ஊதிய உயர்வை அளிக்க முன்வர வேண்டும். பெரும்பாலான தூய்மைப் பணியாளர்கள் மிகவும் ஏழ்மையான நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர, ஊதிய உயர்வும் ஒரு காரணமாக அமையும் என்பதால் கவர்ச்சிகரமான ஊதியம் வழங்க அரசு முன்வர வேண்டும்.

பல்வேறு நலத்திட்ட உதவிகளைச் செய்து வரும் அரசாங்கம் தூய்மைப் பணியாளர்கள் விடயத்தில் கூடுதலான அக்கறை கொள்ள முன்வர வேண்டும். மருத்துவ காப்பீடு திட்டம் உட்பட மருத்துவ சேவைகளை இச்சமூகம் உரிய வகையில் பெற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். தூய்மைப் பணியின்போது நிகழும் மரணங்களுக்கு, உரிய இழப்பீடுகளைக் காலம் தாழ்த்தாது வழங்கிட வேண்டும். இழப்பீடுகளை பணமாக மட்டுமல்லாமல், குடும்ப உறுப்பினர்களில் ஒருவருக்கு அரசு வேலை வழங்குவதாக இருப்பதும் அவசியமாகும்.

தூய்மைப் பணியில் இருந்துகொண்டு தங்களுக்கான வீடுகளை அமைத்துக்கொள்வது சாத்தியமற்றது. இந்நிலையில் அரசாங்கம் முன்னுரிமை அடிப்படையில் இவர்களுக்கு வீட்டு வசதிகளைச் செய்து கொடுப்பதும் மிகவும் அவசியமான ஒன்றாகும். அவ்வாறான வீடுகள் நகரத்தின் அல்லது கிராமத்தின் ஒதுக்குப் புறமாக இல்லாமல், சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் வகையில் பொது இடங்களில் அமைவது வரவேற்கத்தக்க விடயமாகும்.

வேறு தொழில் செய்வதற்கான வாய்ப்பு இவர்களுக்குக் கிடைப்பதில்லை. விரிவான மறுவாழ்வு நடவடிக்கைகளும் இல்லை. மனிதாபிமானமற்ற நடைமுறையை ஒழித்து, முறையான மறுவாழ்வு நடவடிக்கைகளை அரசு உறுதிப்படுத்த வேண்டும். வேறு தொழில்களில் ஈடுபடுவோர், தொழில் பாதிக்கப்படும்போது மாற்று வேலைகளில் ஈடுபட முனைவதைப் போன்று கழிவுநீர் அகற்றும் தொழிலாளர்கள் மத்தியிலும், மாற்று வாழ்வாதாரத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டிய பொறுப்பை அரசு மேற்கொள்ள வேண்டும். இவர்களைப் பாதிக்கும் சட்டங்களை கடுமையாக அமுல்ப்படுத்தவும் அரசு முன்வர வேண்டும்.

கல்வி மற்றும் அறிவியல் ஊடாக விழிப்புணர்வுக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசியல் சட்டங்களால் வலி யுறுத்தப்படும் சமூக அரசியல் பொருளாதார சமத்துவம் அனைவருக்கும் பொதுவானது என்ற உணர்வு ஊட்டப்பட வேண்டும். இவர்களும் சமூகத்தில் ஓர் அங்கம் என்பதை அனைவரும் புரிந்து செயற்பட வேண்டியது கட்டாயமாகும். இந்தியா பெற்ற சுதந்திரம் அனைவருக்குமானது. ஆண்டான் அடிமை என்ற பாகுபாடு ஒழிக்கப்பட வேண்டும். சுதந்திரம் பெற்று 75 வருடங்கள் கடந்தும் குறிப்பிட்ட சில சமூகங்கள், கழிவுநீர் தொட்டிகளைத் தாங்கிப் பிடிக்கும் அவல நிலை மாறவில்லை.

கழிவுநீர் தொழிலில் இருந்து விளிம்பு நிலை மக்களை விடுவிக்க, வெற்று வாக்குறுதிகள், நாடாளுமன்ற மசோதாக்கள் மட்டுமே தீர்வாகாது. கழிவு நீர் மேலாண்மை மறுபரிசீலனைக்கு உட்படுத்தி, கழிவுநீர் முறைமை முற்றாக மாற்றி அமைக்கப்பட வேண்டும். இந்தியாவில் கழிவுநீர் வெளியேற்றம் நவீனப்படுத்தப்பட வேண்டும். மக்கள் தொகைக்கும் அவர்களின் குடியிருப்புகளுக்கும் ஏற்ப கழிவுநீர் தொட்டிகள், கழிவுநீர் வடிகால் அமைக்கப்பட வேண்டும். கழிவுநீர் அகற்றும் முறைமையில் (under ground drainage system) மாற்றம் கொண்டுவர வேண்டியது மிகவும் அவசியம். வளர்ச்சி அடைந்த நாடுகளில் உள்ளதைப் போன்ற நீண்டகாலத் திட்டத்தைப் பின்பற்றினால் மட்டுமே தீர்வு கிடைக்கும். இதிலிருந்து விடுபட மீண்டும் ஒரு சுதந்திரப் போர் வேறு வடிவில் வர வேண்டும்.



jeyasingh@thaiveedu.com

# கருப்பை நார்த்திசுக் கட்டிகள்

## Uterine Fibroids

போல் ஜோசேப்



ஒரு பெண்மணி மருத்துவ ஆலோசனைக் காக வந்திருந்தார். அவருக்கு வயது நாற்பது, ஒரு நிறைமாதக் கர்ப்பிணிபோல இருந்த அவ ரைப் பார்த்துக் கேட்டேன் எத்தனை மாதம் என்று, அதற்கு அவர் கருப்பையில் ஒரு பெரிய கட்டி இருப்பதாகவும் அது புற்று நோய் அல்ல என்ப தையும் தெரிவித்தார்.

ஆம், நாவல் பழம் அளவு முதல் தர்பூசணி பழத்தின் அளவு வரை கட்டிகள் கருப்பையில் உருவாகலாம். ஏன் இவை உரு வாகுகின்றன என்பது இன்னும் மருத்துவ அறிவியலுக்குப் புரியாத புதிராக இருந்தாலும் பல்வேறு காரணங்களை முன் வைக்கிறார்கள். கருப்பை நார்திசு கட்டிகள் பலரில் எந்த விதமான உடல் அறிகுறிகளும் உபாதைகளும் இல்லாமல் காணப்படலாம். சிலரில் இது பாரிய உடல்நல ஊறுகளை ஏற்படுத்திவிடலாம். வேறு ஏதோ ஒரு மருத்துவ காரணங்க ளுக்காக வயிற்றுப் பகுதியை ஸ்கேன் செய்து பார்க்கும் போது கருப்பையில் கட்டிகள் இருப்பது மருத்துவர்களால் பெரும்பாலும் கண்டுபிடிக்கப்படுகிறது.

இதன் தாக்கம் பெண்ணின் வயது, மாதவிடாய் பிரச்சினை கள் மற்றும் குழந்தைப்பேறின்மை போன்ற பல காரணிகளை அடிப்படையாகக் கொண்டே இவற்றின் விளைவுகளை ஆராய்வதும் முடிவுகளை எடுப்பதும் மருத்துவர்களால் தீர் மானிக்கப்படுகின்றது. அண்மைக் காலங்களில் சிறுமிகள் பூப்பெய்தியது முதலே இவ்வகையான கட்டிகள் உருவாகத் தொடங்கிவிடுகின்றன, அவர்களின் உடலில் பல்வேறு காரணி களால் ஏற்படும் ஹோமோன்ஸ் மாற்றங்களினாலும் உணவு மற்றும் வாழ்வியல் முறைகளினாலும் இனப்பெருக்க மண் டலத்தில் நோய்கள் பல உருவாகின்றன.

இத்தகைய கட்டிகள் கருப்பையில் தனியாகவோ கொத்துக் கொத்தாகவோ உருவாகலாம். இவை கருப்பையின் உள்பகு தியிலும் கருப்பையின் சுவர்ப்பகுதியான தசைகளுக்குள்ளும் கருப்பையின் வெளிப்புறத்திலும் காணப்படலாம். இவை கரு வறையில் எந்த இடத்தில், எந்த அளவில், எவ்வளவு கட்டிகள் காணப்படுகின்றன என்பதைப் பொறுத்து நோய் அறிகுறிகள் வேறுபடும். ஐம்பது வீதமான பெண்களில் பெரும்பாலும் இவை மரபணு ரீதியாக அடுத்த தலைமுறைக்கு கடத்தப் படுவதற்கான வாய்ப்புகள் உண்டு என்பது ஆய்வுகளின் முடிவாகும். ஆகவே, இது பரம்பரையாக வரும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை, ஆனாலும் பெண்களில், குறிப்பாக இளம்வயதில் ஈஸ்ற்ரோஜன் மற்றும் புரோஜெஸ்ற்ரோன் என்ற பெண்மையூக்கி ஹோமோன்களில் உண்டாகும் ஏற்றத்தாழ்வுகளால் இந்தக் கட்டிகள் உருவாகலாம் என்பது ஒரு கருத்தாக மருத்துவத்தில் பார்க்கப்படுகிறது, ஆனாலும் உறுதி செய்யப்படவில்லை.

பெண்களில் ஹோமோன்களில் மாற்றங்களை ஏற்படுத்தும் பலவிதமான துரித உணவுகள் (Fast food), நிறமூட்டிகள் சேர்த்த உணவு வகைகள் மற்றும் கருத் தடை மாத்திரைகளை இளம் வயதிலேயே உட் கொள்ளுவது, கருவறைக்குள்ளே நீண்ட காலம் கருத்தடை சாதனங்களை பொருத்தி வைப்பது போன்றவை இந்தக் கட் டிகளுக்கு ஒரு காரணமாக இருக்குமோ என்ற வகையிலும் மருத்துவ உல கில் ஒரு கருத்து நிலவுகிறது.

இந்த கருப்பை நார்த்திசுக்கட்டி உள்ளவர்களில், நான் முன்பு குறிப்பிட்டது போல பெரும்பாலானவர்களில் எந்த அறிகுறி களும் இல்லை என்றாலும் சிலருக்கு கடுமையான வயிற்று வலி, குறிப்பாக மாதவிடாய் காலங்களில் தாங்க முடியாத வலி, அதிக இரத்தப் போக்கு, அதனால் உண்டாகும் அனிமியா என்ற இரத்தச் சோகை போன்றவை ஏற்படலாம். இந்தக் கட்டி கள் கருவறையில் உருவாகி இருக்கும் இடம், அளவு, இவற்றைப் பொறுத்து பலவிதமான பிரச்சினைகளை உண் டாக்கலாம். குறிப்பாக முதுகுவலி மற்றும் நாரிவலி, தாம்பத் திய உறவின்போது அதிகமான வலி, அதுமட்டுமல்ல இவை சற்று பெரிய கட்டிகள் ஆகும் போது அருகில் உள்ள மலக் குடல் மற்றும் சிறுநீர்ப்பை இவற்றை அழுத்துவதால் அது தொடர்பான கோளாறுகளும் ஏற்படலாம். உதாரணமாக மலச் சிக்கல் அல்லது அடிக்கடி வயிற்றுப்போக்கு மற்றும் சிறுநீர்



கழிப்பதில் உள்ள சிக்கல்கள் பெரும்பாலான பெண்களில் உணரப்படுகிறது.

குறிப்பாக கட்டிகள் சற்றுப் பெரிதாக வளரும்போது கருப்பை இறக்கம் (Prolapse of Uterus) என்ற இன்னொரு பிரச்சினை உருவாக வாய்ப்புகள் உண்டு. அதனால் பெண்களில் சிறுநீர் கழிப்பதில் பல்வேறு உடல்நலக் கோளாறுகளை இவை ஏற்படுத்திவிடும். பல பெண்களில் ஒழுங்கற்ற மாதவிடாய் அல்லது மாதவிடாய் வராமல் இருத்தல், அதற்கும் அப்பால் குழந்தை பேறின்மைக்கும் இது ஒரு முக்கிய காரணியாக அமைந்துவிட வாய்ப்புகள் உண்டு. ஆனாலும் இந்தக் கட்டிகள் கருவறையின் உள்பகுதியில் அதிகம் காணப்பட்டால் குழந்தை உருவாகுவதில் - தாய்மை அடைவதில் கண்டிப்பாக பல சிக்கல்களை ஏற்படுத்தும். கருச்சிதைவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் உண்டு. மேலும் இத்தகைய கட்டிகள் உடல் பருமனுக்குக் காரணமாக அமைவதோடு மட்டுமல்ல, உடல் பருமனாய் இருப்பவர்களுக்கும் இந்தக் கட்டிகள் வளர்வதற்கான வாய்ப்புகள் அதிகம். புள்ளி விபரங்களின் அடிப்படையில் ஆசிய நாடுகளைவிட மேற்கத்திய நாடுகளிலேயே இந்த பிரச்சினை சற்று அதிகமாக இருப்பதற்கு வாழ்க்கை முறையும் உணவு முறையும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

மெனோபாஸ் என்கிற நிலையில் மாதவிலக்கு முற்றாக நின்ற பின்பு, இந்த கட்டிகள் சிறிது சிறிதாக அளவு குறைந்து சுருங்கிப் போவதுண்டு. சாதாரணமாக அல்ட்றா சவுண்ட் என்ற ‘ஸ்கேன்’ பரிசோதனை மூலம் இலகுவாக இந்தக் கட்டிகளைப் பற்றியும் அதனுடைய அளவு மற்றும் கருப்பையில் எந்த இடத்தில் இருக்கிறது, அது அருகில் உள்ள மற்ற உறுப்புகளை எவ்வாறு பாதிக்கிறது என்பதையும் அறிந்து கொள்ள முடியும். அது மட்டுமல்ல இதற்கான சிகிச்சை முறைகள் அந்த நோயாளியின் தேவையைப் பொறுத்து அமைகிறது, உதாரணமாக: இளம் வயதில் தாய்மை அடைவதில் ஏற்படும் சிக்கல்களுக்கு இது ஒரு காரணமாக அமையும் என்றால் அறுவைச் சிகிச்சை மூலம் இந்தக் கட்டிகளை அகற்றி விடமுடியும். மேலும் இதனுடைய பாதிப்பு அதிக இரத்தப் போக்கிற்கு ஒரு காரணமாக அமையும் பட்சத்தில் அதை மருத்துவர்கள் கருத்தில் கொண்டு அதற்கான சிகிச்சை முறைகளை மேற்கொள்வதுண்டு. வயதைப் பொறுத்து மெனோபாஸ் நிலைக்குப் பிறகும் கட்டிகள் பெரிதாக இருந்தால் அது பல்வேறு துன்பங்களை ஒரு பெண்ணுக்கு ஏற்படுத்துமானால் கர்ப்பப்பையை அகற்றி விடவும் சிபாரிசு செய்யப்படுகிறது.

என்னுடைய அனுபவத்தில் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் கருப்பை நார்த்திசுக் கட்டிகள் சற்று சிறியவையாக இருந்தால் அவற்றை மருந்துகள் மூலம் சுருங்கச் செய்ய முடியும். அது மட்டுமல்ல அவர்களுக்குரிய உணவு மற்றும் வாழ்க்கை முறை ஆலோசனைகளையும் ஹோமோன்களை எவ்வாறு சமநிலையில் வைத்துக்கொள்வது பற்றிய மருந்துகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மூலமும் இந்தக் கட்டிகளை ஓரளவு குணப்படுத்த இயலும், அல்லது மேலும் வளர்வதைத் தடுக்கவும் முடியும்.



paul.joseph@thaiveedu.com



# தற்கால உலகில் முதியோரின் உணவு முறைகள்

– ப. விஸ்வகோகிலன்



மனித வயது சட்டகத்திலே நாம் முதியோர் என்று மதிப்பிடுகையில் அண்ணளவாக 60 வயதினைக் கடந்த ஆண், பெண் இரு பாலாரையும் குறிப்பிடலாம். எனவே இவ் வயதெல்லையினை எட்டுகின்ற முதியவர்களின் இயல்புக்கு மாறாக அவர்களின் உடலியல் தொழிற்பாடுகளில் சிறு சிறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக அவர்களின் சமிபாட்டுத் தொகுதியில் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக அவர்களின் உணவு உட்கொள்ளும் பழக்க முறையிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதன் காரணமாக அவர்களின் உணவுப்பழக்கத்தில் சூழலுக்கேற்ப சில மாற்றங்களை நாம் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது. காரணம் அவசரமான இந்த உலகத்திலே எவர் ஒருவருக்கும் போதிய நேரம் கிடைப்பது கடினமானதாகவே அமைகின்றது. இதன் காரணமாக உணவிற்கோ, பொழுதுபோக்கிற்கோ நேரம் ஒதுக்குவதென்பது இயலாத காரியமாக அமைகின்றது. இது உடல், உள ரீதியில் மனிதனுக்குப் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

உணவு எமது உடல் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது. உணவானது உயிரினங்களின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் அளப்பரிய பாங்காற்றுகின்றது என்பதில் ஐயமில்லை. அவ்வாறான உணவு பல்வேறுபட்ட நிலைகளில் பல்வேறு வகையில் உடல் வளர்ச்சிக்கும் அதன் தொழிற்பாட்டிற்கும் துணைசெய்கின்றது. முதியோர்களைப் பொறுத்தமட்டில் உணவின் பிரயோகம் அதன் பக்கவிளைவுகள் சற்று மாறுபட்ட தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அது, அவர்களுக்குச் சாதக, பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றது. இந்தத் தொகுப்பில் நாம் முதியவர்களின் உணவுப் பழக்கமுறைகள் மற்றும் ஆரோக்கிய உணவுக் கட்டமைப்புக்கள் தொடர்பில் ஆராய்வோம்.

அந்தவகையில் நாம் உட்கொள்ளும் உணவானது பின்வரும் கட்டமைப்புகளைக் கொண்டுள்ளது.

- மாப்பொருள் - Carbohydrate
- புரதம் - Protein
- கொழுப்பு - Fat
- விற்றமின்கள் - Vitamins
- கனியுப்புக்கள் - Minerals

மேற்குறிப்பிட்ட மூலக்கட்டமைப்புக்கள் மனிதர்களின் உயிரியல் தொழிற்பாடுகளில் பல்வேறு வழிகளில் பங்கு கொள்கின்றன. ஏனைய வயதுப்பிரிவினருடன் ஒப்பிடுகையில் முதியோரின் உடலியல் தொழிற்பாட்டு மாற்றங்கள் சற்று மாறுபட்டுக் காணப்படுகின்றன. குறிப்பாக உடல் தளர்வு மற்றும் உள் உறுப்புக்களின் தொழிற்பாடு என்பன ஏனைய வயதினர் போல் இருப்பதில்லை சற்றுப் பின்தங்கியே நிற்கின்றது.

- உணவுக்கால்வாயின் முதிர்ச்சித்தன்மை அதன் சீரான சுரப்பு, சமிபாடு, அகத்துறிஞ்சும் தன்மை போன்ற உடலியல் தொழிற்பாடுகளைச் சீராக மேற்கொள்ளமுடியாதிருக்கும். அத்துடன் சமிபாட்டுத் தொகுதியில் ஏற்படுகின்ற குடல் அசைவுத் தன்மை சீரற்றுக் காணப்படலாம்.
- சில வேளைகளில் சமிபாட்டுத் தொகுதியினால் சுரக்கப்



படும் நொதியங்களின் (Enzymes) சீரற்ற தன்மையும் காரணமாக அமையும்.

மேற்குறிப்பிட்ட அசாதாரணத் தன்மை காரணமாக எல்லா உணவு வகைகளும் இளம் வயதினர் போன்று முதியவர்களின் சமிபாடு அடைதல் செயற்பாட்டில் சீரான தன்மையினைக் கொண்டிருப்பதில்லை.

உணவூட்டும் தன்மையின் அடிப்படையில் முதியவர்களை இரண்டு வகைகளில் ஆராயலாம்.

- நோய்கள் ஏதும் அற்ற முதியவர்கள்.
- நோய்களுடன் காணப்படும் முதியவர்கள்.

அந்தவகையிலே நோய்கள் ஏதும் அற்ற முதியவர்கள் இலகுவில் சமிபாடு அடையக்கூடிய வகையில் உணவினைத் தயார் செய்தல் வேண்டும். விசேடமாகக் கொழுப்புக் குறைவான உணவுகள், மாப்பொருள் உணவுகள், புரதம் சற்று அதிகமான உணவுகள், ஆரோக்கியமான பழவகைகள் மற்றும் அதிகளவான நார் உணவுகள் போன்றவற்றினை அன்றாட உணவில் சேர்த்தல் முதியவர்களின் உடலிற்கு ஆரோக்கியமாக அமையும். இவை அவர்களின் உடலிற்குத் தேவையான சக்தியினை வழங்குவது மட்டுமன்றி சமிபாட்டினையும் இலகுபடுத்தும்.

மேலும் இம் முறையில் தயாரிக்கப்பட்ட உணவுகளைச் சிறிதளவில் அடிக்கடி கொடுப்பதன் மூலமும் குறைந்த அளவில் அதேநேரம் கூடிய ஊட்டச்சத்து அடங்கிய உணவு வகைகளை அவர்களுக்கு வழங்கக்கூடியதாக இருக்கும். முதியோர்களுக்கு 'மலச்சிக்கல்' ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் 'நார் உணவுகளை' அதிகம் கொடுப்பதன் மூலமாக அந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்துகொள்ளலாம். அத்துடன் 'நீரையும் நீர் ஆகாரங்களையும்' கூடுதலாக வழங்க வேண்டும். பெரும்பாலான முதியோர்க்குப் பற்களின் கட்டமைப்புக்கள் சீர்குலைந்திருக்கும் வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கலாம், அவ்வாறான சந்தர்ப்பங்களில் நீர்த்தன்மையான உணவுகள் அவர்களுக்கு சிறந்ததாக இருக்கும். மேலும் எண்ணெய்த் தன்மையற்ற மற்றும் எண்ணெய் குறைவான உணவுகள், காரம் குறைவான உணவுகளை உட்கொள்வது மிகச்சிறப்பு. குறிப்பாக சீரான இடைவெளியில் தினமும் உணவு உட்கொள்ளும் வழக்கத்தை முதியோர்கள் பேணுவது சிறந்தது. மற்றும் 'கனியுப்புக்கள்' அதிகமான பழவகைகளை அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ளுதல் அவசியமாகும்.

ஏனைய நோய்களுடன் காணப்படும் முதியவர்களை நோக்கும் பொழுது அதில் பெரும்பாலானவர்கள் 'சர்க்கரைநோய்' (Diabetes Mellitus), உயர்குருதி அமுக்கம் (High Blood Pressure), இருதய நோய் (Ischaemic Heart Disease) ஆஸ்துமா (Bronchial Asthma)' போன்ற நீண்ட கால நோய்களினால் பீடிக்கப்பட்டவர்களாக இருக்கலாம். இவ்வாறான நோய்களினால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் தினமும் அந்நோய்களுக்குரிய மாத்திரைகள், மருந்துகளுடன் வாழ்கின்றார்கள். இந்நிலைக்குக் காரணமாக ஆரம்ப காலகட்டங்களில் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களில் கவனமின்மை, நாளாந்த உடல் சார்ந்த அசைவுகளில் கவனம் செலுத்தாமை மற்றும் உடல் மற்றும் நோய் தொடர்பான அலட்சியப்போக்கு போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

விசேடமாக சக்கரை நோய் உள்ளவர்கள் இனிப்புப்பண்டங்கள் மற்றும் அவை சார்ந்த உணவுகளைத் தவிர்த்தல், உயர் குருதி அழுத்தம் உள்ளவர்கள் உப்பு அதிகம் உள்ள உணவுகள், கொழுப்பு உணவுகள் போன்றவற்றைத் தவிர்த்தல் மற்றும் ஆஸ்துமா நோயாளிகள் கிரந்தி உணவு அதாவது ஒவ்வாமையான உணவுகளை உட்கொள்வதைத் தவிர்த்தல் உகந்தது. மாறாக உட்கொள்ளும் பட்சத்தில் இயல்பாகவே அவர்களுக்கு நோய் அதிகரித்துக்கொள்ளும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

எனவே முதியோர்களுக்கு உணவு வழங்கும் போது அம்முதியவர் ஒவ்வொருவரின் உடல் நிலைமையினைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஏற்றாற்போல் உணவுகளைத் தயார் செய்து வழங்க வேண்டும். ஏற்ற உணவு, உணவின் அளவு, நேர இடைவெளி மற்றும் சூழல் காரணி, நோய்க்கேற்ற உணவு போன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டு உணவினைத் தயார்செய்வது நன்று. இவ்வாறான நிலையின் போதுதான் அதிகரித்துச்செல்லும் முதுமை மற்றும் முதியவர்களின் நலனை உறுதி செய்யமுடியும். இது பலராலும் பேசப்படுகின்ற விடயம்தான். 'உணவே மருந்து மருந்தே உணவு' எமது முன்னோர்களின் வேதவாக்கு. எமது முன்னோர்கள் இக்கூற்றினைக் கடைப்பிடித்து வாழ்ந்தார்கள் அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட நோய்த்தாக்கம் குறைவு, அவர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தார்கள். இதனைக் கருத்தில் கொண்டு முதியோர்க்குச் சீரான உணவு வழங்குவதனை உறுதிசெய்வதன் மூலம் சிறந்த உடல், உள நலமுள்ள முதியோர்களை நாம் சமூகத்தில் வாழ்வதற்கு உறுதிசெய்யலாம்.



vishvakohilan.p@thaiveedu.com

# ஒன்ராறியோவில்
# விலைகூடிய வாகனக்காப்புறுதி



**– செந்தூரன் புனிதவேல்**

கனடாவிலே வாகனக் காப்புறுதிக் கட்டணம் மிக அதிகமாக உள்ள மாகாணமாக ஒன்ராறியோ உள்ளது. இதற்கு முக்கிய காரணம் வாகனத் திருட்டும் மற்றும் வாகனத் திருத்தச் செலவுமாகும். நீங்கள் ஒரு புது வாகனம் வாங்குவதானால் அல்லது என்ன வாகனம் கூடிய காப்புறுதி கட்டணம் உடையது. என அறிய விரும்பினால் கட்டுரையை தொடர்ந்து வாசியுங்கள். இங்கு எத்தகைய வாகனத்திற்கு எவ்வளவு கட்டணம் அறவிடப்படுகிறது என விளக்கமாக தரப்பட்டுள்ளது.

எல்லாருடைய மனதிலும் உள்ள ஒரு முக்கிய கேள்வி, ஏன் சில வாகனங்களுக்கு அதிகமாகவும் சிலவற்றிற்கு குறை வாகவும் அறவிடப்படுகிறது என்று. அதற்கான ஐந்து காரணிகளை இங்கு தருகிறேன்.

- சில வாகனங்கள் மற்றவையிலும் பார்க்க அதிகமாகத் திருடப்படுவதால் அதற்கான காப்புறுதிக் கட்டணம் அதிகமாகும்.
- சில வாகனங்களின் உதிரிப்பாகங்கள் அதிக விலை உடையதாய் இருப்பதுடன் அவற்றைத் திருத்துவதற்கான செலவும் அதிகமாகையால் அதற்கான காப்புறுதிக் கட்டண மும் அதிகமாகும்.
- சில வேகமாக ஓடும் வாகனங்கள் சிறியதாய் இருப்பினும் பெரிதளவு விபத்துகள் அடைவதனால், அவற்றின் காப் புறுதி தொகையும் அதிகமாகும்.
- சில பழைய வாகனங்கள் போதிய பாதுகாப்பு அம்சங்கள் இல்லாதிருப்பின் இழப்பு அதிகமாகையால் அவற்றிற்கான காப்புறுதிக் கட்டணத் தொகையும் அதிகமாகும்
- விலை கூடிய வாகனங்களுக்கு திருத்துவதற்கான செலவும், வேறு வாகனம் அதுபோல் வாங்குவதற்குமான செலவதிகமாக இருப்பதனால் காப்புறுதிக் கட்டணச் செலவும் அதிகமாகவே இருக்கும்.

அடுத்ததாக ஆடம்பரமானதும் உயர் செயல் திறம் உடையதுமான வாகனங்களைக் கவனிப்போம்.

- B.M.W - M தொடர் வாகனங்கள் (M3, M4, M5...) இவைகள் சக்தி வாய்ந்த இயந்திரங்களால் அமைந்துள்ளதால் அதிகம் களவாடப்படுவதும், திருத்துவதற்கும் செலவு அதிகமாய் இருக்கும். அவற்றின் சராசரி வருடாந்த காப்புறுதிக் கட்டணம் $4,000 முதல் $6,000 வரை உடையதாய் இருக்கும்.
- Mercedes Benz வாகனங்களில் AMG மாதிரி (Model) வாகனங்கள் (C63, E63, GT...) இவைகள் உயர்ந்த செயல்திறன் வாகனங்கள் என்பதுடன் உதிரிப்பாகங்கள் விலை கூடியதாயிருப்பதுடன் அடிக்கடி இழப்புக் கோரிக்கைகள் உடையன. இந்த வாகனங்களுக்கு வருடாந்த காப்புறுதிக் கட்டணம் $4,500 முதல் $7,000 வரை செலவாகும்.
- Audi RS Models (RS5, RS7, RS8...) இந்த ஆடம்பரமான கார்கள் வெகுவேகமாக ஓட்டக்கூடியது என்பதுடன் திருத்துவதற்கான செலவும் அதிகம். இவற்றிற்கான வருடாந்த காப்புறுதிக் கட்டணம் $4,000 முதல் $8,000 வரைச் செல்லலாம்.
- D. Porsche 911 & Taycan. இது பெரு மதிப்பான விலை உயர்ந்த வாகனம் என்பதுடன் சிறப்பாக இயங்கும் அதேவேளை இதற்கு வரும் காப்புறுதி கேட்பனவுகளின்

தொகையும் பெரிதாக இருக்கும். இந்த வாகனத்தின் வருடாந்த காப்புறுதிக் கட்டணம் சராசரியாக $5,000 முதல் $9,000-ஆக உள்ளது.

- டெஸ்லா மொடல் S. பிலெயட் & மொடல் (E.Tesla Model S Plaid & Max) இவை திருத்துவதற்குச் செலவு அதிகம். குறிப்பாக பட்டரிகளும் கணினி உதிரிப்பாகங்களும். சராசரி வருடாந்த காப்புறுதி கட்டணத் தொகை $4,500 முதல் 7,000 வரை முடியும்.

அடுத்ததாக அடிக்கடி களவு போகும் வகனங்களைக் கவனிப்போம்.

## அதிகம் களவுபோகும் வாகனங்கள்

ஒன்டாரியோ மாகாணத்தில் வாகனத் திருட்டு அதிகம் இடம் பெறுவது யாவரும் அறிந்ததே. அதிலும் விலை உயர்ந்த வாகனம் என்பதிலும் வேறு சில வாகனங்களே திருட்டுப் போகிறது. அவற்றை இங்கு பார்ப்போம். காரணம் காப்புறுதி அமைப்புகள் அதை ஒத்த மற்ற வாகனங்களிலும் இவற்றிற்கு கூடிய கட்டணத்தை அறவிடுகிறார்ள்.

- கொண்டா CRV (Honda Civic CRV. இது தான் 2023-இல் அதிகம் திருடப்பட்ட வாகனம். அதற்கு காரணம் இவற்றின் உதிரிப்பாகங்கள் திருட்டு விற்பனவுச் சந்தையில் பெருமளவு கொள்வனவு செய்யப்படுகிறது. $3,500 - $5,000
- லெக்சஸ் RX350 (Lexus RX350). இது கடல் கடந்த கள்ளச்சந்தையில் பெருமளவு பெற்றுக்கொள்ளப்படுகிறது. இவற்றின் காப்புறுதிக் கட்டணம் $4,000 முதல் $6,000 வரை அறவிடப்படும்.
- Ford F-50. இது கனடாவில் அதிகமாக விற்பனையாகும் வாகனம் என்பதுடன், கள்வர்களின் கவனத்தை ஈர்க்கும் வாகனமாகும். இதன் சராசரி வருடாந்த கட்டணம் $3,800 முதல் $5,500 வரை ஆகும்.
- Toyoto Highlander. இதுதான் மிக பிரபல்யமான SUV ஆகும். இவ்வாகனத்தில் இருந்து களவெடுக்கும் உதிரிப்பாகங்களுக்கு மிகுந்த ஈர்ப்பு உள்ளது. இந்த வாகனங்களுக்கு சராசரி வருடாந்த காப்புறுதிக் கட்டணம் $3,600 முதல் $5,200 வரையாகும்.

## சுப்பர் கார்களும் கவர்ச்சியான கார்களும்:

சில வாகனங்கள் கவர்ச்சியான வாகனமாகப் பலராலும் கருதப்படுகிறது. அத்தகைய வாகனங்களுக்கு காப்புறுதிக் கட்டணம் மிகையாகக் கொடுக்கத் தயாராய் இருப்பது அவசியமாகும்.

- Lamborghini Huracan. இவை வெகு வேகமாக செலுத்தப்படும். மிக விலை உயர்ந்த வாகனம் என்பதுடன், இவற்றில் காப்புறுதி கேட்பனவுகள் பல மில்லியன் டொலர்களாய் இருப்பதனால் காப்புறுதிக் கட்டணங்களும் மிகவும் அதிகமாய் இருக்கும். சராசரியாக காப்புறுதிக் கட்டணம் வருடம் ஒன்றிற்கு $15,000 முதல் $30,000 வரை இருக்கலாம்.
- Ferrari 488/F8 Tributo. இவற்றின் உதிரிப்பாகங்கள் கிடைப்பது அரிது என்பதுடன், விலையும் அதிகம். மேலும், இந்த ரக வாகனங்கள் களவு போவது மிக அதிகம், இவ்வாகனங்களின் சராசரி வருடாந்த காப்புறுதி கட்டணங்கள் $12,000 முதல் $25,000 வரை இருக்க இடம் உண்டு.
- மக்லேன் (C.Mc Laren). இவை காபன் பைபர் (Carbon Fiber) திருத்தங்கள் மிக அதிகம். அதனால், அதன் வருடாந்த காப்புறுதிக் கட்டணத் தொகையும் $10,000 முதல் $20,000 வரை இருக்கலாம்.
- நிஸ்ஸான் (D. Nissan GT-R). இவை சிறப்பாக இயங்குவதுடன் பல மாற்றங்கள் செய்து கூடிய விலைக்கும் விற்கப்படுவதால் இவற்றிற்கு வருடாந்த காப்புறுதிக் கட்டணம் $6,000 முதல் $10,000 வரை இருக்கலாம்.

## மாற்றம் செய்த வாகனங்கள்:

சில சாதாரணமான வாகனங்கள் மாற்றங்கள் செய்து வீதிகளில் போட்டிக்குச் செலுத்தப்படுவதால் அவற்றைக் காப்புறுதி செய்யும் அமைப்புகள் காப்புறுதி செய்ய விரும்புவதில்லை. பார்வைக்கு சாதாரணமாக இருப்பினும், வீதியில் போட்டிக்கு வேகமாகச் செலுத்தப்படுவதால் கட்டணமும் சற்று அதிகமாயிருக்கும்.

சுபறு (Subaru WRX ST). பொதுவாக இது போட்டிக்கு வேகமாக ஓட்டுபவர்களால் விரும்பப்படுகிறது. இவையின் சராசரி காப்புறுதிக் கட்டணம் வருடத்திற்கு $5000 முதல் $8,000 வரை இருக்கலாம்.

- மிட்சுபிசி லான்ஸ்சர் (Mitsutishi Lancer Evolution). இதுவும் பொதுவாக போட்டிக்கு ஒடுவதனாலும் ஆபத்தாகச் செலுத்தப்படுவதாலும் கட்டணம் அதிமாய் இருக்கும். சராசரி வருடாந்த காப்புறுதிக் கட்டணம் $4,000 முதல் $7,000 வரை இருக்கலாம்.
- டொஜ் சாஜா / சலெஞ்சர் (Dodge Charger / Challenger). இவை அதிகம் வேகம் கூட்டும் தன்மையுடையதால் (Horse Power) பல வேளைகளில் அவசரமாக மற்ற வாகனங்களை முந்துவதற்கு முயற்சித்து விபத்துகளுக்குள்ளாகும் தன்மை உடையது. இந்த வாகனங்களுக்கு வருடம் ஒன்றிற்கு காப்புறுதிக் கட்டணம் $6,000 முதல் $12,000 வரை இருக்கலாம்.

இங்கு நான் பல வாகனங்களுக்கான கட்டணங்களைத் தந்துள்ளேன். எந்த வாகனம் வாங்குவது என்பதை முடிவு செய்வது உங்கள் விருப்பம்.

சுரைக்காய் காற் பணமும் சுமை கூலி முக்காற் பணமுமாய் இருப்பதை அறிந்து கொள்ளுங்கள்.



senthuran.p@thaiveedu.com

# பாவனையும் பராமரிப்பும் 04

- வேலா சுப்ரமணியம்

## சமையலறை தொட்டி (Kitchen Sink):



ஒரு வீட்டில் மிக அதிகமாகப் பாவிக்கப்படும் ஒரு பொருள் என்றால் அது சமையலறையில் பொருத்தப்பட்டிருக்கும் கழுவும் தொட்டியாகத்தான் இருக்கமுடியும். இத்தகைய தொட்டிகள் அடைக்காது இருக்கும் வீடுகளைக் காண்பது அரிது. ஆனால் மிகக் கவனமாக இதனைப் பாவித்து வந்தால் இத்தகைய இடரில் இருந்து விடுபட்டுக் கொள்ளலாம்.

உணவு எச்சங்கள், கழிவுகள், பாவித்த எண்ணெய், கோப்பிக் கட்டை (Coffee Grounds) முட்டை ஓடு, பழத்தோல், Paint Tissue... இத்தகைய பொருட்களைக் கவனமில்லாது தொட்டியில் போடுவதுதான் இது அடைப்பதற்கான காரணம் ஆகும். முக்கியமாக தொட்டியின் அடிப்பாகத்தில் இருக்கும் வடிகட்டியை (Filter) எப்போதும் பாவிக்கத் தவறக்கூடாது. சிறு துளைகள் உள்ள வடிகட்டிகள் பல பாவனையில் உள்ளன. அவற்றை வாங்கிப் பாவிப்பது அடைப்புகளைத் தவிர்க்க உதவும். பலரும் கழுவும் வேகத்தைக் கூட்டுவதற்காக, வடிகட்டியை எடுத்து வைத்துவிட்டு கழுவி முடிந்தபின் போடுவது எவ்வளவு ஆபத்தானது என்பதைப் புரிந்து கொள்வதில்லை.

இவ்வாறு ஏற்படும் அடைப்புகளை எவ்வாறு நீக்கலாம் என்பது மிக இலகுவானது. வீட்டில் வசிக்கும் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய ஆறு விதமான தீர்வுகளை நான் இங்கு பரிந்துரைக்க விரும்புகிறேன். முயற்சி செய்வதும் விடுவதும் உங்களைப் பொறுத்தது. அல்லது ஒவ்வொரு தடவையும் ஒரு வல்லுநரை அழைத்து குறைந்தது $200 டொலர்களை செலவு செய்ய வேண்டிய நிலை உருவாகும்.

## கொதிநீர் (Boiling Water):

தொட்டியில் தண்ணீர் மிகக் குறைந்த வேகத்தில் வடிவதை அவதானித்தால் உடனேயே இந்த முறையை பின்பற்றி பின்னர் ஏற்படப் போகும் பாரிய அடைப்பைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஒரு Kettle நிறைய தண்ணீரைக் கொதிக்க வைத்து, தொட்டியின் அடியில் இருக்கும் வடிகட்டியை எடுத்து விட்டு அதன் வாய்ப்பகுதியில் ஊற்றவேண்டும். கொதிநீரை ஊற்றமுன் சிறிதளவு Liquid Soab போட்டு விட்டு அதன் பின்னால் கொதிநீரை விடுவது நல்லது. பொதுவாக எண்ணெய், grease போன்றவை படிவதால் ஏற்படும் பொதுவான அடைப்பை இந்த முறையால் இலகுவில் போக்கலாம். ஒன்றிற்கு மேற்பட்ட தடவை இதனைச் செய்து, இதன் பலனை நீங்களே நேரடியாக உணர்ந்து கொள்ளமுடியும்.

## Check the Garbage Disposal:

சில சமையலறைத் தொட்டிகளில் உணவுக் கழிவுகளை அரைத்து திரவமாக்கி கழிவு நீருடன் அகற்றுவதற்காக ஒரு சிறு இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கும். ஒருசில வீடுகளில் மட்டுமே இதனைக்காண முடியும். இத்தகைய இயந்திரத்தின் மூலம் அடைப்புகள் ஏற்படுவது மிக அதிகம். எனவே மின்சார இணைப்பை நிறுத்திவிட்டு அதனைச் சுத்தம் செய்வதன் மூலம் அடைப்பை நீக்கிக் கொள்ளலாம்.

## Using a Plunger:



முதலில் குறிப்பிட்ட கொதிநீர் முறை வேலை செய்யாது விட்டால் அடுத்த இலகுவான வழி, ஒரு Plunger-ஐ பாவிப்பது.

மலகூட அடைப்புகளுக்குப் பாவிக்கும் Plunger ஒன்றை சமையலறைக்கென பிரத்தியேகமாக வைத்திருத்தல் சாலச்சிறந்தது. மலசல கூடத்திற்குப் பாவிக்கும் அதே Plunger-ஐ சமையலறைக்கும் பாவிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தொட்டியில் அரைப்பங்கிற்கு நீரை நிரப்பிய பின்னர் தொட்டியின் வாயில் Plunger மூலம் பலமான அழுத்தத்தை பலதடவை கொடுப்பதன் மூலம் அடைப்பை நீக்கலாம். இதுவும் கடினமான ஒரு செயல் அல்ல.

## Baking Soda & Vinegar:

ஒரு சமையலறையில் இருக்கக்கூடிய பொருட்களைப் பாவித்து அடைப்பை நீக்கக் கூடிய இலகுவான வழிகளில் இதுவும் ஒன்று. 1 cup baking Soda-ஐ தொட்டியின் அடியில் உள்ள வாயில் போட்டு விட்டு கணிசமான அளவு vinegar-ஐ ஊற்றிவிட்டு சுமார் 15 நிமிடங்கள் பொறுத்திருக்க வேண்டும். பின்னர் சுடு நீரைத் திறந்துவிட்டு தண்ணீர் கழிவடையும் வேகத்தை அவதானிக்கலாம்.

கடைகளில் விற்பனையாகும் Liquid Plumber, Clog Remover போன்ற இரசாயனத் திரவங்கள் மிக ஆபத்தானவை. தோலில் பட்டால் அதிக பாதிப்பை தரக்கூடியவை. உலோகத்தாலான தொட்டி, அதன் கீழ் பகுதியில் உள்ள Connertors-ஐக்கூட விரைவாக உக்க வைக்கக் கூடியவை இவை என்பதையும் தெரிந்து கொண்டால், இயற்கை முறையில் செய்வது எவ்வளவு நன்மை தரும் என்பது புலனாகும்.

## 5. Snake the Drain:

மேற்குறிப்பிட்ட முறைகள் செயற்படாமற்போகும் பட்சத்தில் அடுத்ததாக இம்முறையைச் செய்து பார்க்கலாம். நீண்ட பாம்பு போல இருக்கும் இக்கருவி பலவித தரங்களிலும் அளவுகளிலும் உள்ளன. டொலர் கடையில் வாங்கக் கூடிய சிறிய அளவில் தொடங்கி அடுத்த அடுத்த நிலைக்குப் போகலாம். Spring பொருத்தப்பட்டிருக்கும் இத்தகைய பாம்பு வடிவ கருவியை உட்செலுத்தி உரிய கைபிடியை சுழற்றுவதன் மூலம் பெரிய அளவிலும் கடினமாகவும் இருக்கும் அடைப்புகளை சிதைவடையச் செய்து கழிவு நீருடன் கலக்கச் செய்ய இந்த வழி உதவும்.

உரிய தொழில் நுட்ப வல்லுநர்களைச் சேவைக்காக அழைத்தாலும் கூட அவர்களும் இந்த முறையையே பின்பற்றுவதை அவதானிக்க முடியும்.



## 6. P– Trap:

ஒவ்வொரு சமையலறைத் தொட்டியின் அடியிலும் P-Trap பொருத்தப்பட்டிருக்கும். அதாவது P வடிவத்தில் இது இருக்கும். புவி ஈர்ப்பை மையமாக வைத்து இது செயற்படுகின்றது. அதாவது கழிவாகும் நீரின் ஒரு பகுதி எப்போதும் U வடிவில் உள்ள பகுதியில் இருந்து கொண்டு சாக்கடை மணம் உள்வராதவாறு பாதுகாப்பதே இதன் முக்கிய பணி. அதே வேளை நீர் தங்கி நிற்கும் அந்த வளைவான பகுதியில் காலப்போக்கில் படியும் அழுக்குகள் அதிகமாகும்போது கழிவுநீர் போவது தடைப்படுகின்றது.

தொட்டிக்கடியில் உள்ள Cupboard-ஐ திறந்து பார்த்தால் இப்பகுதி கழற்றிக் கழுவும் விதத்தில் பொருத்தப்பட்டி ருப்பதை அவதானிக்க முடியும். ஆயுதங்கள் இன்றி கையால் கழற்றும் விதத்தில் இருக்கும் இந்த கறுப்பு நிற PVC-ஆல் செய்யப்பட்டிருக்கும் P-Trap-ஐ கழற்றி சுத்தம் செய்து போடுவது அடுத்த வழி. தற்துணிவு, தன் நம்பிக்கை உள்ள எவராலும் செய்யக்கூடிய ஒருமுறை இது. இருந்ததை மீண்டும் அதே போல பொருத்துவதற்கு அவதானம் மட்டும் தேவை என்பது கருத்து.




மேற்குறிப்பிட்ட முறைகள் எதுவும் பலிக்காத பட்சத்தில் அல்லது நேரத்திற்குப் போராடுபவர்கள் அல்லது எதிலும் பங்கு கொள்ளாமலும் பழகிக்கொள்ள விருப்பம் இல்லாமலும் இருப்பவர்கள் இத்துறை சார்ந்த தொழில் நுட்ப வல்லுநரை அழைத்தால் அவர் வந்து அடைப்பை நீக்கி விடுவார். எல்லோரும் எல்லாவற்றையும் செய்தால் அத்தகைய தொழில் நுட்பவாளர்களது பிழைப்பும் கெட்டுவிடும் என்ற ஒரு பக்கமும் உண்டு.

## சமையலறை மேடை (Kitchen countertop):

பொதுவாகக் கூறுவதானால் ஒரு வீட்டில் மிக அதிகமாகத் தினமும் பாவிக்கும் பகுதி Kitchen Countertop என்று கூறுவதில் எந்த வித மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. இத்தகைய மேடைகள் ஆரம்பத்தில் Concrete, மரம் போன்ற மூலப்பொருட்களினால் ஆக்கப்பட்டாலும் தற்போது Granite Quarts, Marble, Laminate போன்ற மூலப்பொருட்



களைப் பாவித்து உருவாக்கப்படுவதைப் பலரும் அவதானித் திருக்கலாம். ஒப்பீட்டு ரீதியில் பார்க்கும்போது அதிக செலவு என்பதைக் கருத்தில் கொள்பவர்கள் Laminage மேடைகளைப் பாவிப்பதும், அதனைத் தவிர்ப்பவர்கள் Quarts மேடைகளைப் பாவிப்பதும் வழக்கமாகக் காணப்படுகிறது.

Quarts மேடைகள் மிக ஸ்திரமானவை என்பது மட்டுமல்லாது பலவித நிறங்களிலும் வடிவங்களிலும் (Pattern) கிடைக் கின்றன. அது மட்டுமன்றி இதனை மிக இலகுவாகப் பராம ரிக்க முடியும் என்பதோடு நீண்ட காலம் நிலைத்து நிற்கக் கூடியவை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## நாளாந்தப் பாவனையும் பராமரிப்பும்:

- எத்தகைய மேடையாக இருந்தாலும் அதிகளவு வெப்பம் இவற்றைப் பாரிய அளவில் பாதிக்கும். சூடான பாத்தி



ரங்களை அடுப்பில் இருந்து இறக்கி நேரடியாக மேடைகளில் வைப்பது தவிர்க்கப் படவேண்டும்.

- பாதுகாப்பிற்காக உரிய தட்டுகளை (Trivets & Coasters) பாவிக்க வேண்டியது மிக அவசியமானது.

- மரக்கறிகள் இறைச்சி, மீன் போன்றவற்றை வெட்டித் தயார் செய்வதற்கு Cutting Board-ஐ பாவிப்பது கட்டாயமானது. நேரடியாக மேடைகளைப் பாவிப்பது பல வித பாதிப் புக்களை ஏற்படுத்தும்.

- சிந்திய கழிவுப் பொருட்களையோ உணவு பதார்த்தங் களையோ உடனுக்குடன் சுத்தம் செய்வது மிக அவசிய மானது. சிந்தும் கழிவுப் பொருட்களினால் மேடைகளில் நிற மாற்றங்கள் ஏற்படுவதும், கறைகள் படிவதும் இந்த நடை முறையால் தவிர்க்கப்படும்.

- எமது சமையல் முறையில் மிகத்தாராளமாக எண்ணெய் வகைகளைப் பாவிக்கின்றோம். அதனைச் சிறிய அளவில் பாவித்தால்கூட அதனை மேடைகளில் சிந்திவிடாது பாது காப்பது மிக அவசியமானது குறிப்பாக Granite மேடைகள் எண்ணெயை மிக இலகுவாக உறிஞ்சி எடுக்கம் தன்மை கொண்டவை. அவ்வாறு எண்ணெய் உறிஞ்சப்படுவதால் ஏற்படும். கறைகளையோ பாதிப்புகளையோ எந்த வித இர சாயனப் பொருட்களாலும் சுத்தம் செய்யமுடியாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும். இறுதியில் மேடையை முற்றாக மாற்றுவதைவிட வேறு தெரிவு இருக்காது.

- மேடைகளைச் சுத்தம் செய்யும்போது மெல்லிய துணிகளைப் பாவிப்பதும் Mild Soap-ஐ உபயோகப்படுத்து வதும் சிபாரிசு செய்யக் கூடியவை. சுத்தம் செய்வதற்காகக் கடினமான இரசாயனப் பொருட்களைப் பாவிப்பது நிரந்த ரமான பாதிப்புகளை மேடைகளின் மேற்பகுதியில் ஏற்ப டுத்தி அவற்றின் அழகானதும் பளபளப்பானதுமான தன்மையைப் பாதிக்கும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

- கிருமிகளைக் கொல்லுவதற்காக White Vinegar, Mild Soap உட்பட வெப்பமான நீரையும் கலந்து இதமான துணிகளைப் பயன்படுத்தி (Soft Cloth) மேடைகளைத் தினமும் சுத்தம் செய்தல் மிகச் சிறந்த வழியாகும்.

எமது சமையல் முறையில் அதிகளவு மஞ்சள் போன்ற பலவித வாசனைத் திரவியங்களைப் பாவிப்பது வழமை. இவை நேரடியாகவோ சமைத்த பின்னர் உணவாகவோ மேடைகளில் சிந்தும் சந்தர்ப்பத்தில் அவை நிரத்தர கறைகளை ஏற்படுத்தி விடும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும். இதனைத் தவிர்ப்பதற்காக ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பாதுகாக்கும் பொருட்டு குறிப்பாக Quarts Granite மேடைகளுக்காக பலவித Clear Plastic Covers பாவனைக்கு வந்துள்ளன. Amazon போன்ற தளங்களில் இவற்றைப் பெற்றுப் பாவிப்பது பல விதத்திலும் பாதுகாப் பானது என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

**குறிப்பு:** சமையலறையின் சுவர்களைப் பாதுகாப்பதையும் இலகுமான பராமரிப்பை ஏற்படுத்துவதையும் கருத்திற் கொண்டு பார்த்தால் மேடைகளுடன் சேர்த்து BackSplash போடப்படுவது பலவித அனுகூலங்களைத் தரும் செயற்பா டாகும்.



velasubramaniam@thaiveedu.com

# கனவுகளின் அத்திவாரமும் யதார்த்தத்தின் இடைவெளியும்



யமீனா கிருஷ்ணசாமி

இலங்கை, கல்விக்கு நீண்டகாலமாகவே முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழக நிலைவரை இலவசக் கல்விக் கொள் கையை அமுல்படுத்தியதன் மூலம், கல்வி இலங்கையின் சமூக அமைப்பின் அடித்தளமாக மாறியுள்ளது. இந்தக் கொள்கை, குடும்பத்தின் பொருளாதார நிலையைப் பொருட் படுத்தாமல், ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி பெற உரிமை யுண்டு என்பதை உறுதி செய்துள்ளது. இது அறிவை ஜன நாயகமயமாக்கியதோடு, சமூக சமத்துவத்தையும் முன்னேற் றத்திற்கான வலுவான உந்துதலையும் ஏற்படுத்தியுள்ளது.

கல்வி என்பது ஒரு தனிநபரின் அறிவாற்றலை வளர்ப்பது மட்டுமல்ல; ஒரு நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத் திற்கான திறவுகோலுமாகும். இளைய தலைமுறையை முறையாக வழிநடத்தி, சமூகப் பங்களிப்பை ஊக்குவிப் பதிலும் இது முக்கியப் பங்காற்றுகிறது. மேலும், கல்வி என்பது அறிவு, திறன்கள் மற்றும் தொழில்முறை வாய்ப்பு களை வழங் குவதோடு, ஒருவரின் நெறிமுறை, அழகியல் மற்றும் உள ஆரோக்கியத்தையும் சீராக்கும் ஒரு சமூக நிறு வனமாகவும் விளங்குகிறது.

ஒருவரது ஆளுமை, அறிவாற்றல், திறன்களின் அடிப்படை யாக, வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்தையும் சிறப்பாக முகாமை செய்ய அவர் பெறும் கல்வி உதவுகிறது. கற்கும் வயதில் உள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி கற்க வாய்ப் புகளை வழங்குவது அவசியமானதொன்று. ஒவ்வொரு குழந் தையும் கல்வி பெற வேண்டும் என்பது உலக சமுதாயத்தின் முக்கிய குறிக்கோளாக உள்ளது. மனித உரிமைப் பிரக டனம் (1948), யுனெஸ்கோ ஆகியவை, கல்வி கற்கும் வயதி லுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் கல்வி உரிமை உண்டு என உறுதிபடுத்துகின்றன. இலங்கையில் உருவாக்கப்பட்ட இலவசக் கல்விச் சட்டம் மற்றும் அரசியலமைப்பு இந்த உரிமையை உறுதி செய்கின்றது. இலவசக் கல்விச் சட்டப் படி, 5-16 வயது வரையுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது. எனினும், நடைமு றையில் சமூக-பொருளாதாரக் காரணிகள் சிலருக்கு இந்த வாய்ப்பை முழுமையாகப் பெறுவதற்குத் தடையாக உள் ளன. 2023 யுனிசெஃப் அறிக்கை, ஏழ்மை மற்றும் போர்

> **“*ஒருவரது ஆளுமை, அறிவாற்றல், திறன்களின் அடிப்படையாக, வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்தையும் சிறப்பாக முகாமை செய்ய அவர் பெறும் கல்வி உதவுகிறது.*”**

பாதிப்புக்கு உள்ளான பகுதிகளில் 12% குழந்தைகள் இன் னும் பள்ளிக்குச் செல்வதில்லை எனத் தெரிவித்திருந்தது.

இலங்கையின் கல்வி அமைப்பு ஒரு சீரான படிநிலை அமைப்பைக் கொண்டுள்ளது. இது மாணவர்களை தொடக்கக் கல்வி (Grade 1-5), இடைநிலைக் கல்வி (Grade 6-11), உயர்நிலைக் கல்வி (Grade 12-13) மற்றும் பல்கலைக் கழகக் கல்வி என நான்கு முக்கிய நிலைகளில் வழிநடத் தப்படுகிறது. இந்த அமைப்பின் உச்சமாக கருதப்படுவது பொதுக் கல்வித் தராதர உயர்தரப் (G.C.E. A/L) பரீட்சை யாகும். க.பொ.த (உ/த) பரீட்சையானது இந்த உயர் போட் டித்தன்மை கொண்ட பல்கலைக்கழகங்களுக்கான நுழைவு வாயிலாக செயல்படுகிறது. 2022-2023 கல்வியாண்டு புள்ளி விவரங்களின்படி, தேர்வு எழுதியவர்களில் சுமார் 15% ஆன வர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களுக்குச் செல்ல முடிகிறது.

இலவசக் கல்வி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டாலும், மலையகத் தமிழர்கள் அதன் முழுப் பலனைப் பெற சுமார் 40 ஆண்டுகள் ஆனது. இதற்கு முதன்மைக் காரணம், 1948-இல் வந்த குடியுரிமைச் சட்டம் அவர்களை நாடற்றவர்களாக் கியது. இது ‘அனைவருக்கும் இலவசம்’ என்ற கல்வி அணு கல் உட்பட அடிப்படை உரிமைகளை மறுத்தது. பல தசாப்தங்களாக, தோட்டப் பகுதிகளில் தரமற்ற, வசதியற்ற பள்ளிகளே இருந்தன. இவை பெரும்பாலும் தோட்ட உரிமை யாளர்களால் கட்டுப்படுத்தப்பட்டு, தொழிலாளர் கல்வி முன்னேற்றம் தடுக்கப்பட்டது. 1970-களின் பிற்பகுதியிலும் 1980-களின் முற்பகுதியிலும்தான் அரசாங்கம் இந்தப் பள்ளி

களைத் தேசிய அமைப்பில் இணைக்கத் தொடங்கியது. எனினும், உள்கட்டமைப்பு, ஆசிரியர் தரம் மற்றும் வள ஒதுக்கீட்டில் சவால்கள் தொடர்ந்தன. இதன் விளைவாக, தோட்ட சமூகங்களின் கல்வியறிவு விகிதங்கள் மேம்பட்டிருந்தாலும், அவை இன்றும் தேசிய சராசரியை விடக் குறைவாகவே உள்ளன. இது, இச்சமூகத்திற்கு இலவசக் கல்விப் பலன்கள் கிடைப்பதில் ஏற்பட்ட நீண்டகாலப் புறக்கணிப்பைத் தெளிவாகக் காட்டுகிறது.

அரசாங்கத்தால் வழங்கப்படும் இலவசப் பாடப்புத்தகங்கள் மற்றும் பள்ளிச் சீருடைகள், குறிப்பாக கிராமப்புறப் பகுதிகளில் வாழும் குடும்பங்களின் பொருளாதார சுமையை பெருமளவில் குறைக்கின்றன. இது எதிர்காலத்தை வடிவமைக்கும் மாணவர்களுக்கு தரமான கற்றல் சூழல்கள், அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்கள் மற்றும் வலுவான பாடத்திட்டங்களை அணுகுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

இலங்கை அரசு, அரசுப் பள்ளிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் பல்துறை உதவித் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. மாணவர்களுக்கான ஊக்குவிப்புத் தொகைகள், தொழில்நுட்பக் கல்விக்கான விசேட பாடக் கற்கைகள், தேசிய மற்றும் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுகள், உயர்கல்வி நிறுவனங்களில் தொழில் சார்ந்த பாடநெறிகள், மாணவர்களுக்கான சத்துணவுத் திட்டங்கள், நவோதயா திட்டம் மற்றும் மகிந்தோதயா திட்டம் போன்றன இலங்கையின் கல்வித் தரத்தையும் அணுகல் திறனையும் கணிசமாக மேம்படுத்தியுள்ளன.

இலங்கையின் இலவசக் கல்வி முறை சமத்துவ கல்வி வாய்ப்புகளை உறுதி செய்யும் நோக்கில் உருவாக்கப்பட்டாலும், நடைமுறையில் பல சவால்களை எதிர்கொள்கிறது. பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுகளில் நிலவும் கடுமையான போட்டி மாணவர்களுக்கு அதிகரித்த மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது; கற்றலின் இயல்பான மகிழ்ச்சியையும் இது குறைக்கிறது. கல்வி இலவசமாக இருந்தாலும், விடுதி வசதிகள், போக்குவரத்து மற்றும் தனியார் பயிற்சி வகுப்புகள் போன்ற மறைமுகச் செலவுகள், குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு கூடுதல் சுமையாக உள்ளன. மேலும், நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பள்ளிகளுக்கிடையேயான வளங்கள் மற்றும் கல்வித் தரத்தில் உள்ள வேறுபாடுகள் இந்த ஏற்றத்தாழ்வுகளை மேலும் அதிகரிக்கின்றன. இந்தச் சிக்கல்களைத் தீர்க்க, அரசு மட்டத்தில் தெளிவான கொள்கைகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் அவசியமாகும். குறிப்பாக கிராமப்புறப் பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை, போதுமான வகுப்பறைகள் மற்றும் டிஜிட்டல் கல்வி உபகரணங்களின் பற்றாக்குறை போன்றவற்றை நிவர்த்தி செய்ய வேண்டியது அவசியம். இந்த முயற்சிகள் வெற்றிபெறும்போது மட்டுமே இலங்கையின் இலவசக் கல்வி முறை அதன் உண்மையான நோக்கத்தை அடைய முடியும்.

கல்வி முடித்த பிறகு வேலைவாய்ப்பு என்பது ஒரு முக்கிய கட்டமாகக் காணப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரை, கல்வித் துறையும் தொழில்துறையும் இரு வேறு துருவங்களாகச் செயல்படுவதைக் காணமுடிகின்றது. இலங்கையில் ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்கல்வி வரை இலவசக் கல்வி கொள்கையை மையப்படுத்தியதாகவே காணப்படுகின்ற போதிலும், கல்வித்துறைக்கும் தொழில்துறைக்கும் இடையில் ஒரு இடைவெளி நிலவுகிறது.

இலங்கை போன்ற நாடுகளில் கல்வியறிவு மட்டமும், கல்வி அறிவுடையவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகக் காணப்பட்டாலும், அதிகமான பட்டதாரிகள் வேலையின்றி இருப்பது ஒரு முரண்பாடான யதார்த்தமாகும். இலங்கையில் உயர் கல்விப் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு நிலை சவால் நிறைந்ததாகவே காணப்படுகிறது. இது நாட்டின் தொழில் துறையை நேரடியாகப் பாதிக்கும் ஒரு முக்கிய காரணியாகும். உதாரணமாக, சிவில் பொறியியலில் பட்டம் பெற்று, அதனுடன் தொடர்புடைய பிற பட்டப்படிப்புகளையும் முடித்த ஒரு பெண், சிவில் பொறியாளராகப் பணியாற்ற முடியாத நிலை பரவலாகக் காணப்படுகிறது. இது குறிப்பிட்ட துறை சார்ந்தவர்களுக்கு மட்டுமல்ல, அநேகப் பட்டதாரிகளுக்கும் பொதுவான ஒரு பிரச்சினையாக உள்ளது.

பல்கலைக்கழகங்களில் கற்பிக்கப்படும் கோட்பாட்டு அறிவுக்கும் தொழில்துறையின் நடைமுறைத் தேவைகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க இடைவெளி உள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது. பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் - கொழும்பு மற்றும் பிற நகர்ப்புறங்களில் 65% வேலைவாய்ப்புகள் குவிந்திருக்கும் நிலையில், கிராமப்புறப் பட்டதாரிகளுக்கு



“அரசாங்கத்தால் வழங்கப்படும் இலவசப் பாடப்புத்தகங்கள் மற்றும் பள்ளிச் சீருடைகள், குறிப்பாக கிராமப்புறப் பகுதிகளில் வாழும் குடும்பங்களின் பொருளாதார சுமையை பெருமளவில் குறைக்கின்றன.”




போக்குவரத்து மற்றும் வசிப்பிட வசதிகள் இல்லாதது கூடுதல் தடையாக உள்ளது. கல்வி-தொழில் இணைப்பின்மை - பாரம்பரிய பட்டப்படிப்புகளுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்படுவதோடு, தொழிற்கல்வி மற்றும் தொழிநுட்ப பயிற்சி நிறுவனங்களுக்கு போதிய முதலீடு இல்லாத நிலை தொழில் சார்ந்த கல்வியின் வளர்ச்சியை தடைப்படுத்து கிறது. இந்த மூன்று காரணிகளும் இணைந்து, பட்டதாரிகளின் வேலை வாய்ப்பு நெருக்கடியை மேலும் கடுமையாக்குகின்றன.

பட்டதாரிகள், தங்கள் கல்வித் தகுதிகளுக்குக் கீழ் உள்ள தொழில்களையும் மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். பலர், ஒரு வருடத்திற்கும் மேலாக வேலை கிடைக்காமல் தவிக்கின்றனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், வேலையின்மையால் விரக்தியடைந்த பட்டதாரிகள் போராட்டங்களை மேற்கொள்வதையும் நாம் காண்கிறோம். இது ஒரு வேலையின்மைச் சமூகத்தின் தோற்றத்திற்கு வழிவகுக்கும் என்பது மிகையாகாது.

வேலைவாய்ப்பின்மை அல்லது தகுதிக் குறைவான வேலைகள் சமூகத்தில் பல தளங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தனிநபர் மட்டத்தில், இது நிதி நெருக்கடி, மன அழுத்தம், தன்னம்பிக்கைக் குறைவு போன்ற உளவியல் சிக்கல்களுக்கு வழிவகுக்கிறது. சமூக மட்டத்தில், பட்டதாரிகளின் உழைப்பும் அறிவும் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படாமல் வீணாவது, தேசிய உற்பத்தித்திறன் மற்றும் புதுமையாக்கத்தைப் பாதிக்கிறது. மேலும், இது சமூக அமைதியின்மைக்கும், இளைஞர்கள் மத்தியில் விரக்திக்கும் வழிவகுக்கிறது.

ஆகவே, இலங்கையில் உயர் கல்விப் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புப் பற்றாக்குறை, தொழில்நுட்பத் திறன் குறைபாடு, கல்வி மற்றும் தொழில் துறைகளுக்கு இடையிலான இடைவெளி, நகர மற்றும் கிராமிய ரீதியிலான வேலைவாய்ப்பு வேறுபாடுகள், தொழில் மையக் கல்விக் கொள்கையின் குறைபாடு மற்றும் அதிக இடைவெளிகள் நிறைந்த கல்வித் திட்டம் போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்தப் பிரச்சினைகள், ஒருபுறம் பட்டதாரிகள் தங்கள் தகுதிக்கு ஏற்ற வேலைகளைப் பெறுவதற்கான தடைகளாகவும், மறுபுறம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான மனிதவளத்தின் முழுப் பயன்பாட்டைத் தடுக்கும் காரணிகளாகவும் அமைகின்றன.

இன்றைய போட்டி நிறைந்த வணிக உலகில், ஊழியர்கள் நிலைத்து நிற்பதற்கும், வெற்றிகரமாகச் செயல்படுவதற்கும் பல்வேறு ஆற்றல்களைப் பெற்றிருப்பது அவசியமாகிறது. இதற்குப் பொருத்தமான கல்வி அறிவு மற்றும் தொடர்ச்சியான, பொருத்தமான பயிற்சி என்பன அத்தியாவசியமானவை. இந்த வகையில், கல்வி உலகத்துடன் தொழில் உலகை ஒருங்கிணைப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

இதற்காக இலங்கையில் பல்வேறு கல்விக் கொள்கைகளும் திட்டங்களும் நடைமுறைப்படுத்த வேண்டும். குறிப்பாக, சிறு வயது முதல் டிஜிட்டல் கல்வி அறிவுகளை உள்ளீர்த்தல், மனனம் செய்யும் கல்வி முறைகளை குறைத்து செயல்பாட்டு முறையிலான கல்வி முறைமை நடைமுறைப்படுத்தல், தொழில்நுட்பத் திறன்களை மையப்படுத்திய கல்வி செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், செயற்திட்ட அடிப்படையிலான கற்றலை முன்னெடுத்தல், தொழில் வழிகாட்டலோடு இணைந்த வகையில் கல்வி செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், தொழில் மைய உலகிற்கு சிறு வயது முதல் பழக்கப்படுத்தல், கிராமம் மற்றும் நகர பாடசாலைகளுக்கு இடையிலான இடைவெளியை குறைத்தல், ஆங்கில கல்வி அறிவை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல், ஆரம்ப கல்வி முதல் ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்ப ரீதியான பாட அலகுகளை உட்புகுத்தல் போன்றவற்றை முதன்மைப்படுத்த வேண்டியவை.

கல்வி அறிவு வீதம் அதிகமாக காணப்பட்ட போதிலும் பின்தங்கிய பிரதேசங்கள் முதல் முன்னேறிய பிரதேசங்கள் வரையில் தொழில் வாய்ப்புகளினைப் பெற முடியாத சூழ்நிலையே அதிகமாக காணப்படுகின்றது. இவ்வாறான நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் தொழில்வாய்ப்பற்ற நிலையானது துரிதப்படுத்தப்படுவதோடு இலங்கையில் அதிகமான துறைகளில் வேலையற்ற பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புகளையும் பெறுவதற்கு ஏதுவாக காணப்படும்.

எனவே இலங்கையில் இனி வருகின்ற காலங்களில் தொழில் கல்வி நடைமுறைப்படுத்தப்படுமாக இருந்தால் வேலையற்றப் பட்டதாரிகளின் எண்ணிக்கையானது சடுதியாக குறைந்து விடுவதோடு இலங்கையானது மூளைசாலிகள் நிறைந்த ஒரு நாடாக மாற்றமடையக் கூடியதற்கான வாய்ப்புகளும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் கல்விப் பெருமையை உண்மையான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் பாலமாக மாற்ற, கல்வி மற்றும் தொழில்துறைக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பது காலத்தின் கட்டாயம். இந்த மாற்றத்தை நாம் எவ்வாறு சாதிக்கப் போகிறோம் ?



yameena.k@thaiveedu.com

# மாணவர்களின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் நல்லாசான்கள்



**- அகமட் பிஸ்தாமி**

ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் எண்ணற்ற மனிதர்கள் காத்திரமான செல்வாக்குச் செலுத்தும் தன்மையைக் கண்டு கொள்ளலாம். பலருக்கு வாழ்வின் திருப்பு முனையாக மிகச்சி றந்த ஆசான்கள் அமைவதுண்டு. வாழ்க்கைப் போக்கை, பாதையை, பயணத்தை, இலக்கை மாற்றிவிடக்கூடிய பேராற்றல் மிக்கவர்களாக அந்த ஆசான்கள் செயற்பட்டு இருப்பார்கள்.

அவர்களுடைய கற்பித்தல் முறைகள் மாத்திரமின்றி அவர் களது நடை, உடை, பாவனை, வாழ்க்கைமுறை, ஆகர்ஷணம், attraction and charismatic characters பிரச்சினைகளை அணுகும் விதம் (approaching pattern), அரவணைக்கும் விதம் கையாளும் விதம் (handling method), போன்றவை மாணவர்களின் வாழ்க்கைப் போக்கிலே தாக்கத்தை (impact), செல்வாக்கை (influence) மாற்றத்தை (change) ஏற்ப டுத்தும்.

இன்றைய இளம் தலைமுறை (new generation) சட்ட ரீதியாக (legally) தமது வாழ்வில் பெரும்பாலான (maximum) நேரங் களைக் கழிப்பதும் கடத்துவதும் பாடசாலையில்தான். ஆறு வயது தொடக்கம் கிட்டத்தட்ட 18 வயது வரை காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை அவர்களது முழு வாழ்வும் பாடசாலைகளில் தான் கழிகின்றன.

உடலியல் ரீதியாக (Physically), ஆன்மீக ரீதியாக (spiritually), சமூகவியல் (socially) ரீதியாக அவர்களில் பரிபூரண ஆளுமை உருவாக்கம் (perfect personality) நிகழும் பருவம் இதுதான். இவர்களது வாழ்வை நெறிப்படுத்திச் செப்பனிட்டு வடிவமைப்பதில் ஆசிரியர்களுக்குக் கணிசமான பங்களிப்பும் காத்திரமான பணிகளும் காணப்படுகின்றன.

எதிர்காலத் தலைமுறை வகுப்பறையில்தான் உருவாக்கப்படுகின்றது. அவர்களை உரு வாக்கும் தார்மீகக் கடப்பாடு ஆசிரியர்களுக்கு உண்டு என்பது மறுக்க முடியாத உண்மை.

மாணவர்களை உளவியல் (psychologically) ரீதியாக அணுகினால் மட்டுமே அவர்களுடைய திறன்களையும் திறமைகளையும் (skills and talents) முழுமையாக வெளிக்கொணர்ந்து அவை பற்றி விழிப்பூட்டி (awareness) அவற்றினூடாகப் பயன்களைப் பெறமுடியும். இதனைக் கனகச்சி தமாகச் செய்யக்கூடிய பொறுப்பு வாய்ந்தவர் களாக ஆசிரியர்கள்தான் காணப்படுகின் றார்கள்.

தமது பட்டம் பதவி செல்வாக்குக் கல்வி நிலை போன்றவற்றி லிருந்து சற்றுக் கீழ் இறங்கி வந்து நட்பு ரீதியாக (friendly approach) இளம் தலைமுறையினரை அணுகி அரவணைக்கின்ற பொழுது அவர்களை மிகச்சிறந்த பாதையில் இலக்குமையப் பட்ட ஆளுமைகளாக வடிவமைக்க முடியும்.

பொறுப்புணர்வோடும் கடமைப்பாட்டோடும் இளந்தலைமுறை யினரை உருவாக்கும் உள்ளார்ந்த ஊக்கிகளாக ஆசிரியர் கள்தான் காணப்படுகின்றார்கள். எதிர்காலத்துக்குத் தேவையான மிகச்சிறந்த தலைமைத்துவப் பண்பு (leadership qualities) கொண்ட புலமையாளர்களை (intellectuals), செயற் பாட்டாளர்களை (activist), புத்தாக்க சிந்தனை (innovation in creativity) கொண்டவர்களை உருவாக்கும் திடசங்கற்பம் கொண்டவர்கள் ஆசிரியர்கள் தான்

மாணவர்களின் திறன்களுக்கு ஏற்ப வரம்பு வரையறைகளோடு அவர்களை வழிநடத்தும் பொறுப்பும் ஆசிரியர்களைச் சார்ந்தது.

ஆசிரியப் பணி தொண்டா? சேவையா? என்பது ஒருபுறம் இருக்க அதன் மூலம் சமூகம் பெறத்தக்க பயன்கள் எக்கச்சக் கமானவை, ஏராளமானவை, தாராளமானவை.

மாணவர்களை மிகச் சிறப்பான முறையில் கல்வி (academically) சார்ந்தும் ஒழுகளாறு (discipline) சார்ந்தும் உருவாக்கு

வதென்பது அடுத்த தலைமுறை ஆரோக்கியமானவர்களாக, சிந்தனைச் செழுமை மிக்கவர்களாக, வளமானவர்களாக உரு வாக்குவதனை நோக்கமாகக் கொண்டதுதான். வெறுமனே காகிதத் தகைமைகள் (paper qualifications) கொண்டவர்க ளாகப் பரீட்சை மையப்பட்ட (exam oriented), மூளைச்சலவை (brain washed) செய்யப்பட்ட நபர்களாக மாணவர்களை உரு வாக்குவதில் எந்தப் பயனும் இல்லை.

வாழ்வை எதிர்கொள்வது எப்படி? (How to face critical challenges and over come them) வாழ்வின் நெருக்கடிகளை, சவால்களை சூட்சுமமான முறையில் கையாண்டு அவற் றுக்குத் தீர்வைக் கண்டு முன்னோக்கி நகர்வது எப்படி? என்று வாழ்வியல் பாடங்களை (practically) நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டியவர்கள் ஆசிரியர்கள்.



பரீட்சைகளில் உயர்ந்த பெறுபேறுகளை எட்டக்கூடிய எத்தனையோ திறமைசாலிகள் வாழ்க்கைப் பயணத்தில் அதன் நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழத் தெரியாது, நகரத் தெரியாது தற்கொலை வரை செல்கின்றனர். ஆனால் காகிதத் தகைமைகள் எதுவுமற்ற நிலையில் வாழ்க்கை நெருக்க டிகளை எதிர்கொள்ளும் திராணி கொண்ட இளம் தலைமுறை வாழ்வில் உயர்ந்து, உச்சம் தொட்டு சாதனைகளைப் புரிந்து உலகிற்கே எடுத்துக்காட்டாக இருந்துள்ளனர். வரலாறு படைத்துள்ளனர். இவர்களுக்குப் பின்னாலும் மிகச்சிறந்த நல் லாசான்கள் செயற்பட்டு இருப்பதை வரலாறு எமக்குத் தொடர்ந்து நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

எப்பொழுதும் மாணவர்களில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஆசிரியர்கள் உடன்பாடான கருத்துக்களை (positive thoughts and inspirations), சிந்தனைகளை ஊக்குவிப்பு களைக் கொடுத்துக்கொண்டே இருப்பார்கள். மாணவர்கள் தளர்வடைகின்ற (fed up) பொழுது, விரக்தி அடைகின்ற பொழுது, சோர்வடைகின்ற பொழுது அவர்களை அவர்களின் பாட்டில் விடாமல் அவர்களை அணுகி அரவணைத்து முன்னோக்கி இழுத்துச் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய நெஞ்சுரத்தை, வலிமையை ஆத்ம சக்தியை (self confident) அவர்களுக்குக் கொடுத்து முன்னோக்கி (motivate) தள்ளி விடுகின்றனர்.

கல்வி வாழ்வில், பரீட்சையில் சிலபோது சித்தியடையாமல் தோற்றுப் போனாலும் கூட வாழ்க்கையை எதிர்கொண்டு வெற்றி கொள்ளக்கூடிய ஆளுமைகளாக யுக புருஷர்களாக (heroes) வரலாறு படைக்கக் கூடியவர்களாக இளம் தலைமு றையினரை உருவாக்குவது தான் ஆசிரியர்களின் மகத்தான பணி.

வகுப்பறையில் நான்கு சுவர்களுக்குள் மாத்திரம் கற்றுக் கொள்வதை முன்னெடுப்பவர்கள் நல்லாசான்களாக இருக்க முடியாது. பாடசாலைக்கு வெளியில் கற்றுக் கொள்வதை நிறுத்துவதும் ஆரோக்கியமானதாக அமையாது. கல்விப் பணியும் பயணமும் தொடர வேண்டும். வாழ்நாள் நெடுகவும் கற்றுக் கொள்ள வேண்டும். நடை முறை வாழ்வில் இருந்து எதிர்கால வாழ்வைத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். வெற்றிப் பாதையை நோக்கி முன்னோக்கி நகர வேண் டும். இவை போன்ற உடன்பாடான கருத்துக்கள் வழியாக மாணவர்களது தனிப்பட்ட வாழ்வையும் சமூக வாழ்வையும் குடும்ப வாழ்வையும் அமைத்துக் கொள்வதற்கு வழிகாட்டக்கூடிய நல் லாசான்கள்தான் இன்றைய உலகில் நமக்குத் தேவைப்படுகின்றனர்.

மாணவர்களை மட்டம் தட்டி மண்டையில் குட்டி வாய்க்குப் பூட்டுப் போட்டு அவர்களது சிந் தனைக்கு முட்டுக்கட்டையாக இருக்கக்கூடிய ஆசான்கள் ஒருபோதும் நல்லாசான்களாக, திறமையான ஆசான்களாக இருக்க முடியாது. அவர்கள் தமது அறிவுச்செருக்கின் வழியாக மாணவர்களது சிந்தனையை முடக்கி விடக் கூடிய திணிப்பைத்தான் (by force) செய்வார்க ளேயொழிய மாணவர்கள் இயல்புக்கும் ஆற்ற லுக்கும் தேவைக்கும் ஏற்ற கல்வியைக் கொடுக்கும் ஆற்றல் அற்றவர்கள் என்று தான் கூற வேண்டும்.

சமகால வகுப்பறைகளும் வாழ்வியல் நெருக்கடிகளும் குடும் பவியல் பிரச்சினைகளும் சற்றேனும் தணிய வேண்டுமாயின் வளரிளம் தலைமுறையினரை ஆளுமை மிக்கவர்களாக வகுப்பறை வழியாக உருவாக்கக்கூடிய செல்வாக்கு மிக்க ஆசான்களை உருவாக்க வேண்டும் என்பதுதான் மறுக்க முடியாத உண்மையாக உள்ளது.

இதனை ஒட்டுமொத்த சமூகமும் உணர்ந்துகொண்டால் எண்ணற்ற சமூகவியல் சிக்கல்களை தோல்விகளை முடி வுக்குக் கொண்டுவர முடியும்.



bisthamy.ahamed@thaiveedu.com

# பிள்ளை வளர்ப்பில் பெற்றோருக்கும் சான்றிதழ் தேவை?

– த. சிவபாலு –



பிள்ளை வளர்ப்பு என்பது சாதாரணமான விடயமாக எமது பெற்றோர் கருதிவந்துள்ளனர். அவர்கள் தங்கள் பெற்றோர் மற்றும் உறவினர் சுற்றத்தவரின் வழிகாட்டலில் அவற்றைப் பின்பற்றியே வளர்த்து வந்துள்ளனர். இன்ன இன்ன உணவை கர்ப்பகாலத்திலும், பாலூட்டும் தாய்மார்களும் உண்ணக் கூடாது என்னும் வரையறைகள் ஊர் வைத்தியர்களாலும், அனுபவசாலிகளான பெற்றோராலும் ஆலோசனைகளாக வழங்கப்பட்டுள்ளன. இவற்றைக்கேட்டு, இன்ன உணவை உண்டால் பிள்ளைக்கு என்ன என்ன நோய்கள் வரும், இன்ன இன்ன உணவை கர்ப்பிணித்தாய் உண்ண வேண்டும் எனத் தேடித்தேடித் தந்த காலம் எமது பெற்றோர் வழிகாட்டிய காலம். ஒவ்வாமை வரும் என்பதனை அனைத்துத் தாய் மாரும் அறிந்திருந்தனர். சரக்கு அரைத்து பிள்ளை பெற்ற வரைப் பராமரிக்கும் முறையும் இருந்தது. பிள்ளை வளர்ப்புக் காகச் சிறப்புப் பாடநெறிகளுக்கோ அன்றி வகுப்பிற்கோ செல்லவேண்டிய தேவை அவர்களுக்கு இருந்ததில்லை. நாம் வளர்ந்த சூழ்நிலைகளைத் திரும்பிப்பார்க்கும் போது பிள்ளை வளர்ப்பு என்பது இன்று உள்ளதைப் போன்று பயப்படும்படி யானதாகவோ சிரமம் மிக்கதாகவோ அமைந்திருக்கவில்லை. ஒரு தாய் பல குழந்தைகளைப் பெற்றெடுத்து வளர்க்கும் நிலைமை வளர்முக நாடுகளில் சாதாரண விடயமாகவே இருந்து வந்துள்ளது. வசதிகள் குறைந்த கிராமப்புறங்களில் ஊரில் உள்ள அனுபவம் நிறைந்தவர்களின் வழிகாட்டல் அல்லது உதவியுடனேயே பிள்ளைப்பேறு இடம்பெற்று வந் துள்ளது. பிள்ளைப்பேறு முடிந்து இரண்டு வாரங்களுக்குள் ளாகவே தாய் தனது குடும்பத்திற்கான வழமையான செயல் களில் ஈடுபடத்தொடங்கிவிடுவர். பிள்ளை வளர்ப்பு அவர்க ளுக்கு ஒரு தனித்துவமான அல்லது கடினமான செயலாக ஒருபோதும் இருந்ததில்லை. அனுபவசாலிகளின் வழிகாட் டலே முக்கியமான பின்பற்றுதல் ஆகும். நாட்டு வைத்தியர்க ளிடம் பெறப்படும் மருந்து வில்லைகள் அவர்கள் குறிப்பிடும் உணவு வகைகள் என்பவற்றை தாயும் குழந்தையும் பெற்று வந்துள்ளனர். பெரும்பாலும் உணவே மருந்தாகப் பயன்படுத் தப்பட்டுள்ளது. குழந்தைகளுக்குத் தாய்ப்பாலே முக்கிய உணவாகக் கருதப் பட்டு பால் சுரக்கக்கூடிய உணவு வகைகளைத் தேடித் தாய்மார் களுக்குத் தந்தனர். இன்று சுகாதார நிலையங்கள், மருத்துவமனைகள் தாய்ப்பாலை முக்கியமாகக் குழந்தைக ளுக்கு கொடுப்பது அவசியம் என அறிவுறுத்தி வருவதைக் காணலாம். தாய்ப்பாலின் முக்கியத்துவம் அன்று உணரப் பட்டது போன்று இன்று தாய்மார் உணர்ந்துகொள்வதும் இல்லை, தாய்ப்பாலைக் கொடுக்க முன்வருவதும் இல்லை. இலகுவாகச் சமிபாடடையக்கூடிய பிஞ்சு முருங்கைக்காய், வெண்டைக்காய், தும்பங்காய், வல்லாரை, முசிட்டை, தூது வளை போன்றனவும் பால்சுறா, விளை மீன், மண்ணா, வாவல் போன்ற மீன் இனங்களும் குஞ்சுக்கோழியும் தாய்மாருக்கு முக்கியமானவையாகக் கொள்ளப்பட்டன. ஆனால் இன்று உணவுக்கட்டுப்பாடே இல்லாத நிலைமை காணப்படுகின் றது, சிலவகை உணவுகளை கர்ப்பிணித்தாயோ அன்றி பால் கொடுக்கும் தாயோ உண்பதனால் சொறி, சிரங்கு, கரப்பன், சளி, சுரம் போன்றன வரலாம் என எமது பெற்றோரும் அனு பவ ஆற்றல் மிக்க பெரியவர்களும் எச்சரித்தனர். கிராமங் களில் அனுபவம் மிக்கவர்களே மருத்துவிச்சிகளாகக் காணப் பட்டனர்.

வசதிபடைத்தவர்களின் குழந்தைகள் பராமரிப்புக்கு என ஆயா எனப்படும் 'நானி' முறையும் நீண்டகாலமாக இருந்து வந்துள்ளமை மறுப்பதற்கில்லை. 'செவிலித்தாய்' என்பவள் சங்க இலக்கியத்தில் முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம். குழந்தைப் பருவம் முதல் குமரிப்பருவம் வரை பெண் பிள்ளை களைக் கவனித்து வளரப்பவர்கள் அவர்களே.

தமிழ் அகராதி ஐவகைத்தாயர் எனத் தாய்மாரை வகைப்ப டுத்துகின்றது. ஈன்றதாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைந்தாய், செவிலித்தாய் என்போர் என வகைப்படுத்துவதன் மூலம் பிள்ளை வளர்ப்பின் முக்கியத்துவம் உணர்த்தப்படு கின்றது,

***'பாராட்டுந் தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய், ஐந்தெனக் கழறுவர்.'***

எனப் பிங்கல நிகண்டு குறிப்பிடுகின்றது. தாய்மையின் வகைகள், குழந்தைகளின் வளர்ப்பில் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் நிலையினை வேறுபடுத்திக் காட்டுவதாக காணப்படுகின்றது. குழந்தையை கருவில் சுமந்து பெற்றெடுக்கும் நிலைக்குப் பின்னர் ஒரு தாய் மறுபிறவி எடுக்கின்றாள். பால் ஊட்டும் பருவம் மாற்றமடைய குழந்தைக்கு ஏற்ற உணவினைத் தயாரித்து ஊட்டி ஊட்டி வளர்க்கும் தாயின் செயல்கள் மாறுபடுகின்றன. தாலாட்டி, ஆராட்டி உணவை ஊட்டும் கலையே தனித்துவமானது. அம்புலி காட்டி உணவூட்டிய இலக்கியக் கதைகளை நாம் கற்றிருக்கின்றோம். பெற்றெடுத்த தாய்க்கு வேறுபணிகள் நிமித்தமோ அல்லது சுகவீனமுற்ற காலங்களிலோ குழந்தைப் பராமரிப்பு இன்னுமொரு தாயிடம் செல்கின்றது. அவரே செவிலித்தாய் ஆவாள். குழுந்தை நடக்கத் தொடங்கும் பருவம் வரை ஏந்திப் பராமரிப்பவள் கைத்தாய் எனப்படுகின்றாள். குழந்தை வளர்ந்த பின்னர் மேற்கொள்ளும் முயற்சிகளைப் பாராட்டி உற்சாகமூட்டுபவள் பாராட்டுத்தாயாவாள்.

## பிள்ளை வளர்ப்பில் அன்னையின் பங்கு:

இன்று பிள்ளை வளர்ப்பு என்பது பெற்றோருக்குப் பெரும் சவாலாக உள்ளது. குழந்தைகளைச் சரியான முறையில் பராமரித்தல் மிக முக்கியமானதாக உள்ளது, பிள்ளைக்கு ஏதாவது தவறாகச் செய்துவிட்டால், பிள்ளைக்கு மட்டுமன்றி பெற்றோருக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். ஹியூ லாஃபொலெட் (Hugh LaFollette) என்னும் தத்துவவியலாளர் 'பெற்றோர்களுக்கு உரிமம் (license) வழங்குவதன் மூலம் நாம் குழந்தைகளைச் சிறப்பாகப் பாதுகாக்க முடியும். தத்தெடுத்த பெற்றோர் தகுதியுடன் இருக்க வேண்டும் என்பதை எப்படி உறுதி செய்கிறோமோ, அதுபோலவே குழந்தைகளை வளர்க்கும் உரிமையைப் பெற விரும்பும் எவரும் தங்கள் திறமையை நிரூபிக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டுள்ளமை இன்றைய நவீன உலகின் பிள்ளை வளர்ப்பில் அறிந்திருக்க வேண்டியவற்றையும், வளர்க்கும் முறை பற்றிய கல்வியின் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகின்றது.

பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பது என்பது ஒரு சாதாரணமான விடயம் என்பது பெரும்பாலான பெற்றோரிடையே நிலவும் பொதுமைக் கருத்து. ஆனால் உளவியல், மருத்துவ, கல்வியல் ஆய்வாளர்களின் கூற்றுப்படி மனிதப்பிறவியின் வளர்ச்சிப்பருவங்கள் ஒவ்வொன்றிலும் கற்றல் நடவடிக்கைகள் பாரிய தாக்கத்தினை உளத்தில் ஏற்படுத்துகின்றது. கல்வி என்பது உள்ளார்ந்த ஆற்றலைக் கல்லி எடுப்பது அல்லது வெளியே கொண்டு வருவது என்பது பொருளாயின், எல்லாக் குழந்தைகளும் கற்றுத் தேறமுடியும் என்பது உண்மை. உள்ளார்ந்த அறிவாற்றலை வெளியே கொண்டுவருவது கல்வியின் பணி என்பதால் கற்றலுக்குரிய அகப் புறத் தூண்டிகளின் செயற்பாடுகள் முக்கியம் வகிக்கின்றன. உளவிருத்தி என்பது குழந்தை, தாயின் வயிற்றில் இருக்கும்போதே ஆரம்பிக்கின்றது. எனவே கற்றல் நடத்தையும் அங்கேயே தொடங்குகின்றது என்பது வெளிப்படை. பெற்றோர், பிள்ளைகளின் உடலியல் வளர்ச்சிக்கு மாத்திரம் அல்ல, உளவியல் வளர்ச்சிக்கும் ஆதாரமானவர்கள்.



மனிதப் பிறப்பின் விந்தைகளில் மனித உயிராக்கம் வியப்பிற்கு உரியதொன்றாகும். குழந்தை, தாயின் கருவறையில் இருந்தே கற்றுக்கொள்ள ஆரம்பிக்கின்றது என்பதனை உளவியல் விஞ்ஞான ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. குழந்தை வளர்ச்சிப் படிகள் எவை? குழந்தைகளை நாம் பேணி வளர்க்கின்றோமா? அவர்களின் தேவைகளை நாம் சரிவரப் பூர்த்தி செய்கின்றோமா? என்பன போன்ற கேள்விகள் எம்முன்னே எழுகின்றன. குழந்தை ஒன்று, தான் பிறந்த உடனேயே யாரும் சொல்லித்தராமலே தானாகவே சுவாசித்து தனது சுவாசப் பையை நிறைத்துக் கொள்கின்றது. அதன் பின்னர் அழவும் தொடங்குகின்றது. குழந்தையின் அடிப்படை ஆளுமையின் தன்மை அல்லது வடிவம் அதன் ஆரம்ப ஆண்டுகளைப் பொறுத்ததாக அமைகின்றது. அதாவது குழந்தை மற்றவர் மீது கொண்டுள்ள நம்பிக்கை அல்லது சந்தேகம், தனது தகைமையைப் பற்றி உணர்தல், மூளையின் தொழிற்பாட்டுத் தரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் என்பனவற்றில் தங்கியுள்ளது. சுவாசித்தல், தொட்டு உணர்தல், பார்த்து அறிந்து கொள்ளுதல், உண்ணுதல், சுவையறிதல் என்பனவற்றைக் குழந்தை யாரும் சொல்லித்தராமல் தானாகவே கற்றுக்கொள்கின்றது. ஆனால் குழந்தை வாழும் புறச்சூழல் அகச் சூழலை விட பிள்ளையின் ஆளுமை விருத்தியில் தாக்கத்தைக் கொண்டுள்ளது.

'மனித வாழ்வில் மூளை அணுக்களுக்கிடையேயான தொடர்புகளின் மிக நெருங்கிய தொகுதி மிக உச்ச கட்டமான வளர்ச்சியினை பிறந்த முதலாவது மாதத்தில் கொண்டுள்ளது. அதாவது வளர்ந்தவர்களின் சராசரி மூளைத் தொகுதியின் வளர்ச்சியிலும் பார்க்க மிகக்கூடுதலான அளவு முதல் இரண்டு ஆண்டுகளிலுமே அதாவது மனித வாழ்வின் காலத்தில் அண்ணளவாக 50 விழுக்காடுகள் வரையான வளர்ச்சியினை அடைகின்றது. அது இரண்டு வயதிற்கும் பதினாறு வயதிற்கும் இடையில் மூளை வளர்ச்சிப்பாங்கு குறைவடைந்து செல்கின்றது. அதன் பின்னர் 72 வயது வரைக்கும் ஒரே சீரானதாக அமைகின்றது' என ஹவாட் காடினர் குறிப்பிட்டமையினை நாம் அவதானிக்க முடியும்.

எந்தவொரு மருத்துவத்திறனும் இல்லாத ஒருவர் உங்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய நீங்கள் சம்மதிப்பீர்களா? சட்ட அறிவு இல்லாத ஒருவர் ஒரு நீதிமன்ற வழக்கை நடத்துவது சாத்தியமா? ஓட்டுவதில் எந்த அனுபவமும் இல்லாதவருடன் நீங்கள் சாலையைப் பகிர விரும்புகிறீர்களா? இந்தக் கேள்விகளுக்கான நம்முடைய பதில்கள் இல்லை என்பதுதான். ஒரு செயல் பிறருக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய



தாக இருந்தால், அதைச் செய்யும் நபர் ஓர் அளவுக்குத் திறமையுடன் இருக்க வேண்டும் என்று நாம் நியாயமாக எதிர்பார்க்கிறோம். மற்றவர்களின் பாதுகாப்பிற்கும் நலனுக்குமான பொறுப்பு உள்ள எவரும் பயிற்சி பெற்றவராகவும் சோதிக்கப்பட்டவராகவும், உரிய சான்றிதழ் பெற்றவராகவும் இருக்க வேண்டும். இது ஒரு சாதாரண நுண்ணறிவு. அப்படியிருக்க, பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடிய செயல் என்று லாஃபொலெட் கூறும் பெற்றோர் பொறுப்பிற்கு, நாம் ஏன் தகுதியை சோதிக்க வேண்டியதில்லை?

'பெற்றோர் பொறுப்பு என்பது இதுபோன்ற செயல்களின் மாதிரிதான், ஏனெனில் ஒரே நபரால் ஏற்படும் பாதிப்பும், பாதிக்கப்படக் கூடிய மக்களின் எண்ணிக்கையும் அதிகம். மேலும், திறமையின் அவசியம் மிகவும் தெளிவாக இருக்கிறது'.

புதிய தலைமுறையை சரிவர வளர்ப்பது என்பது, நம்முடைய சமுதாயத்தின் மிக முக்கியமான பணியாக இருக்கலாம். தவறாகச் செய்யப்படும் பெற்றோரின் பங்கு, பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, எதிர்கால சமுதாயத்திற்கும் பாதிப்பை ஏற் படுத்தும்.

## சாதகமான பெற்றோரியம் (Positive Parenting) என்றால் என்ன?

சாதகமான பெற்றோரியம் என்பது வளர்ப்பு முறை மற்றும் விதிகளை மட்டும் உள்ளடக்கியது அல்ல. இது ஒரு நம் பிக்கை, ஒரு வாழ்வியல். பிள்ளைகள் மரியாதையுடனும், அவமானத்திற்கும் வன்முறைக்கும் உட்படாமல் அன்பான ஊக்குவிப்புடனும் வழிநடத்தப்பட வேண்டும். சீரான பெற்றோராக மாறுவதற்கு, முதலில் உங்களின் சிந்தனை அதாவது உங்கள் சொந்த அறிவு, அணுகுமுறைகள், நடத்தைகள் மற்றும் திறன்களை மேம்படுத்த வேண்டும். இதை அடைவதற்கு, பெற்றோர்கள் தங்களைப் பற்றியும் பெற்றோராகத் தங்களுடைய பங்கைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும். அனைத்து நடவடிக்கைகளையும் முடிக்க தங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். இவற்றோடு பிள்ளைகளுடன் தினமும் கதைக்கும்போது புதிய விடயங்களைக் கதைக்க வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் தொடர்ந்து உறவை உறுதிப்படுத்துவதற்கு தொடர்பாடல் ஒரு முக்கிய வழி என்பதை அறிந்து கொள்ள வேண்டும். சாதகமான பெற்றோரியம் பற்றிய கையேடுகள் இன்று உடல்நல அமைப்புகள் மற்றும் மகப்பேற்று மருத்துவ நிலையங்களில் கிடைக்கின்றன. உடல், உள ரீதியாக தீங்கு விளைவிக்காமல் அல்லது பாதிப்பை ஏற்படுத்தாமல் ஒரு பிள்ளையை எவ்வாறு வளர்ப்பது என்பதைப் பற்றி இக்கையேடுகள் தகவல்களைத் தருவதோடு புதிய பெற்றோரைச் சிந்திக்க வைக்கின்றது. இம்முறை சாதகமான அல்லது சீரான பெற்றோரியம் என்று அழைக்கப்படுகிறது.

## பெற்றோரியக் கையேடுகள் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துகிறது:

- பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள் தமது இலக்குகளை எவ்வாறு உருவாக்குவது.
- பெற்றோர்கள் பிள்ளைகளுடன் நேரத்தை எவ்வாறு ஆக்கபூர்வமாகச் செலவிடுவது.
- பெற்றோர்கள் எவ்வாறு தங்களை வெளிப்படுத்துவது என்பதுடன் பிள்ளைகள் அவர்களின் உணர்வுகளை சூழலிற்கேற்ப வெளிப்படுத்த வழிகாட்டுதல், பாராட்டு மற்றும் வெகுமதி வழங்குதலை எவ்வாறு கையாள்வது.
- நெறிமுறைகள் மற்றும் வீட்டு விதிமுறைகளை எவ்வாறு கையாள்வது.
- எதிரான நடத்தைகளை எவ்வாறு பொருத்தமான முறையில் கையாள்வது.
- விளைவுகளை எவ்வாறு முகாமை செய்வது மற்றும் ஆற்றுப்படுத்திக் கொள்வதற்கான காலத்தை வரையறுப்பது.
- முரண்பாடுகளை எவ்வாறு தீர்ப்பது.

இவ்வித கையேடுகள் முன் எப்போதுமில்லாத அளவிற்கு புதிய பெற்றோருக்குக் கிடைப்பது பெரும் வாய்ப்பாக உள்ளது. இவ்வித கையேடுகளைத் தாய்மை அடைந்துள்ள தாய்மார் மட்டுமல்ல தந்தையருக்கும் உரியதாகும். இவற்றைத் திரும்பத் திரும்ப இருவரும் வாசிப்பதன் மூலம், பிள்ளைகளை நெறிப்படுத்துவதற்கு வேண்டிய பல்வேறு முறைகளைப் பற்றிய நல்ல புரிதலைப் பெறுவதற்கான, குழந்தை வளர்ப்புப் பற்றியும் அவர்களின் வளர்ச்சிப் பருவங்கள், உள, உடல் வளர்ச்சி மாற்றங்கள் பற்றியும் அறிய முடியும்.

சாதகமான பெற்றோரியம் என்பது பிள்ளைகளின் சுய ஒழுக்கத்தை வளர்க்கும் ஒரு நீண்ட கால தீர்வு ஆகும். இவ்வகையில் சாதகமான (Positive) பெற்றோரியம் என்பது பெற்றோர்கள், பிள்ளைகளின் எதிர்பார்ப்புகள், விதிகள் மற்றும் வரைமுறைகள் பற்றிய தெளிவான தொடர்பாடலாகும்.

## சாதகமான பெற்றோரியம் பின்வருவனவற்றை நடைமுறைப்படுத்தும்:

- குழந்தைகளுடன் பரஸ்பரமான மதிப்புமிகு உறவை உரு வாக்குவதாகும்.
- பிள்ளைகளுக்கு வாழ்நாள் முழுவதிற்கான திறன்களைக் கற்பிப்பதாகும்.
- சவாலான சூழ்நிலைகளைக் கையாள்வதற்கான பிள்ளை களின் திறமை மற்றும் நம்பிக்கையை வலுப்படுத்துவதாகும்.
- மதிப்பளித்தல், மரியாதைசெய்தல், ஒப்பநோக்குதல், சாத் வீகம், ஒத்துணர்வு, சுயகௌரவம், மனித உரிமைகள் மற் றும் பிறருக்கு மதிப்பளித்தல் என்பவற்றைக் கற்பிப்பதாகும்.

## சாதகமான பெற்றோரியம் அல்லாதவை எவை:

- பிள்ளைகளின் அனைத்து செயல்களையும் அனுமதிப்பது நேரான பெற்றோரியம் அல்ல.
- பிள்ளைகளை அவர்கள் விரும்பிய அனைத்தையும் செயற்படுத்த அனுமதிப்பது.
- விதிகள், வரைமுறைகள் அல்லது எதிர்பார்ப்புகள் இல்லா தவையாகும்.
- குறுகிய கால விளைவுகள் அல்லது உடல் ரீதியாகத் தண் டிப்பதற்கான மாற்றுத் தண்டனைகள்.
- பிள்ளைகள் கீழ்ப்படிவாக இல்லை என்பன போன்ற பொதுவான முறைப்பாடுகள்.
- 'இந்தப் பிள்ளை கீழ்ப்படிவதே இல்லை.'
- 'சொல்லும் எதனையும் கேட்பதில்லை'
- 'வேண்டாம் என்று சொல்வதனையே செய்கிறார்கள். கீழ்ப்ப டிவதே இல்லை'.

இவ்விதமான சொற்கள் பிள்ளை வளர்ப்பில் சாதகமான விளைவுகளைத் தருவதற்குப் பதிலாக எதிர்விளைவு களையே தருகின்றன.

## பெற்றோர் அவதானிக்கவேண்டியவையும் செயற் படுத்தவேண்டியவையும்:

- உங்கள் குடும்பத்தில் இது போன்ற கூற்றுக்கள் கூறப்படு கிறதா?
- உங்கள் பிள்ளைகள் கீழ்ப்படியாதவர்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?
- உங்களது அவதானிப்பின்படி, கீழ்ப்படிவுள்ள பிள்ளையின் இயல்புகள் எவை?
- கீழ்ப்படிவற்ற பிள்ளையின் இயல்புகள் எவை?

என்பனவற்றை அவதானித்து அவற்றைத் தனித்தனியாகப் பட்டியலிடுக. கீழ்ப்படியாமை, கீழ்ப்படிதல். நீங்கள் குறிப் பிடும் பிள்ளையொன்றின் கீழ்ப்படிதல் தொடர்பான விடயங் களின் பட்டியலுடன், வேறொரு பெற்றோர் கீழ்ப்படிதல் என அவர் கருதும் விடயங்களின் பட்டியலுடன் ஒப்பிட்டுப் பார்த்து, கலந்துரையாடுங்கள். அந்த இரண்டு பட்டியல்க ளிலும் ஒத்த மற்றும் வேறான விடயங்களை நீங்கள் அவதா னிக்கக் கூடியதாக இருக்கும். உங்கள் சொந்த பெற்றோரிய முறைமைகளைப் பற்றிச் சிந்தித்து, பிள்ளையின் இந்த நடத் தைக்கு நீங்கள் எவ்வாறு பங்களிப்பு செய்கின்றீர்கள் என் பதை அவதானியுங்கள். கீழ்ப்படிதல் அல்லது கீழ்ப்படியாமை என நாம் சிந்திப்பதுடன் தொடர்புடைய காரணிகள் மற்றவர் அதைப் பற்றி சிந்திக்கும் விதத்திலிருந்து வேறுபட்டது என் பது தெளிவாகின்றது.

சில சமயங்களில், பிள்ளை வளர்ப்பு கடினமானதாக இருக் கலாம். எனவே, சாதகமான பெற்றோரியம் வெற்றிபெற நேர மும் பொறுமையும் அவசியமானது என்பதை மனதில் கொள்ள வேண்டும். இதனை ஒரே நாளில் அடைந்துவிட முடியாது. அவை இன்று பயனளிக்கவில்லை என்றால், மீண்டும் மறக் காமல் முயற்சிக்கவும். உங்கள் பெற்றோரியம் தொடர்பான அணுகு முறையில் உறுதியாகவும், சீராகவும் இருப்பது முக் கியம். இவ்வணுகுமுறை உங்கள் பிள்ளைக்கு நீங்கள் என்ன சொல்ல முயற்சிக்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ள உதவும்.

நாம் பிறந்த வளர்ந்த சூழலுக்கும் இன்றைய உலக மாற்றங் களுக்கும் இடையே பல்வேறு வேறுபாடுகள் உள்ளன. இன்றைய குழந்தைகளின் சூழல் மற்றும் சுற்றாடல் வேறு. முழுமையாக இயந்திரமயமாக்கப்பட்ட கணினி யுகத்தில் நாம் வாழ்கின்றோம் என்பதனைப் பெற்றோர் உணர்ந்து கொள்ள வேண்டிய தேவை தவிர்க்கமுடியாதது. பெற்றோ ரியம் என்பதைப் பற்றிக் கற்கவேண்டியவை அதிகமாகவே காணப்படுகின்றன. இன்று திருமணமாவதற்கு முன்பாகவே பிள்ளைகளைப் பெறலாமா? இல்லையா? அதனால் ஏற் படும் வாழ்வியல் சுமைகள் தங்களைப் பாதிக்கும் என்ற மன வழுத்தம் அவர்களைப் பின்தொடர்ந்து விரட்டுவதற்கு, பெற் றாரியம் என்றால் என்ன என்பதைப் பற்றி அறியாமலிருப்பதே காரணம் எனலாம்.

பிள்ளையைப் பெற்றுவிட்டால் போதுமா? பேணி வளர்க்க வேண்டும் தெரியுமா? என்பதை மனதிருத்தி பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற் கொள்ளவேண்டும். பிள்ளையைப் பெற்று வளர்த்தல் சுமை என்றால், எமது பெற்றோர் எம்மை இவ்வுலகிற்குத் தந்துதவும் தவறு என்று சொல்கின்றார்களா? அது சரியா? நியாயம் தானா? என்ற கேள்விளை இளந்தலை முறையினர் கருத்திற்கொள்ளுதல் பயன் தருவதாக அமையும்.

எமது பெற்றோர் ஒன்றும் தெரியாதாவர்களாகவா எம்மை எல்லாம் பெற்று வளர்த்தார்கள். அவர்களுக்கு சமூகம் பாடம் கற்றுத்தந்தது. இன்றைய சமூகம் அந்தப் பொறுப்புகளை ஏற் றுக்கொள்ள மறுத்து வருகின்றது. கூட்டுக்குடும்ப வாழ்வியல் தனிக்குடும்பங்களாகச் சிதறியுள்ளன. அந்தப் பயன் பண் பாட்டை அறியாதவர்களாக இன்றைய குழந்தைகள் வளர்க் கப்படுகின்றார்கள் என்பதற்கு, இன்றைய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக அமைவதோடு, குழந்தை களுக்குத் தாலாட்டுத் தாயாக தொலைக்காட்சி போன்றன மாறிவிட்டன. இது காலத்தின் கோலமா அல்லது குழந்தை வளர்ப்பு முறையின் பரிதாப நிலையா என்பதைச் சிந்திக்க வேண்டியுள்ளது, சிந்திப்பார்களா இன்றைய இளைஞர்கள்.

பிள்ளைகளைப் பெறுதல், வளர்த்தல் போன்றவற்றிற்கான கல்விச் சான்றிதழை எதிர்காலச் சமூகம் எதிர்பார்க்கின்றதா? அது அவசியமானதா? என்ற கேள்விகள் எம்முன்னே எழுகின்றன.



sivapalu@thaiveedu.com

# பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே - 4

## ஒப்புக்கொள்வதையும் அங்கீகரிப்பதையும் வேறுபடுத்துங்கள்!

**- எஸ்.கே.விக்னேஸ்வரன்**



ஒரு தந்தை கூறுகிறார்: 'எனது பதினாறு வயதுப் பையன் ஒரு அழகான பையன், ஆனால் அவள் ஒரு அசிங்கமான பெண். அவனுடைய நீண்ட சிகை அலங்காரம் என்னை மிகவும் கவர்ந்திழுக்கிறது. இது அபத்தமானது, ஆனால் நாங்கள் ஒவ்வொரு நாளும் அதற்காகச் சண்டைபிடிக் கிறோம்.'

ஒரு தாய் கூறுகிறார்: 'என் மகள் ஒரு ராணிக்கு ஏற்ற அல மாரியை வைத்திருக்கிறாள், ஆனால் அவள் இளஞ்சிவப்பு மணிகள் கொண்ட ஒரு அசிங்கமான ஆமைக்கழுத்து 'ஜேர்சி'யை அணிவதற்குத் தெரிவு செய்கிறாள். அவளை அந்த உடுப்புடன் பார்ப்பது எனக்குச் சகிக்க முடியவில்லை.

பதின்ம வயதினர் ஆயிரம் வழிகளில் கிளர்ச்சி செய்கிறார் கள். ஒரு பதினைந்து வயது பெண் மெட்ராஸ் பாவாடை களைக் கைவிட்டு, கிழிந்த 'டங்கரீசை' அணியப்போவதாகக் கிளர்ச்சி செய்கிறாள். பதினாறு வயதுச் சிறுவன் பழைய செருப்புகளுக்காகப் புதிய காலணிகளை நிராகரிக்கும் போது, அவன் கிளர்ச்சி செய்பவனாக இருக்கலாம். 'பொப் டிலான்' (Bob Dylan) வார்த்தைகளில் சொன்னதை உண்மை யில் அவர்கள் செயலில் காட்டுகிறார்கள். அவர் சொல்கிறார்:

***'இந்த நிலம் முழுவதும் வாழும் தாய்மார்களே தந்தையர்களே வாருங்கள். உங்களுக்குப் புரியாததை விமர்சிக்காதீர்கள். உங்கள் மகன்களும் மகள் களும் உங்கள் கட்ட ளைக்கு அப்பாற்பட்ட வர்கள்!'***

எங்களுடைய எதிர்வினை எப் போதும் பொறுத்துக் கொள்வ தற்கும் தடை செய்வதற்கும் இடையில் இருக்க வேண்டும்; ஏற்றுக் கொள்வதற்கும் அங்கீக ரிப்பதற்கும் இடையில் இருக்க வேண்டும். நாங்கள் பலவற்றைப் பொறுத்துக் கொண்டு சிலவற் றைத் தடை செய்ய வேண்டும். ஒரு வைத்தியர் நோயாளியை அவர் இரத்தக் கசிவுடன் வரு கிறார் என்பதற்காகக் கவனிக் காமல் விடுவதில்லை. தாங்க முடியாததாக இருந்தாலும், அத் தகைய செயல் சகிக்கப்பட வேண்டும். அது வரவேற்கக் கூடியதோ அல்லது ஊக்குவிக் கப்படக் கூடியதோ அல்ல. ஆயினும் அது வெறுமனே ஏற் றுக்கொள்ள ப்ப டுகிற து. அது போலவே பெற் றோர் விரும்பத் தகாத நடத்தையை தடைசெய்வதற்குப் பதில் சகித்துக் கொள்வதே பொருத்தமானது.

தனது மகனது நீண்ட தலைமுடி காரணமாக எரிச்சலடைந்த ஒரு தகப்பன் சொல்கிறார்: 'மன்னிக்க வேண்டும் மகனே..., இது உனது தலைமயிர்தான். ஆனாலும் இப்போது எனது சப்பாட்டு நேரம். காலை உணவு முடிந்த பிறகு இதைச் சகித்துக் கொள்ளக் கூடியளவு மனபலம் எனக்கு இருக் கிறது. ஆனால் அதற்கு முன் அப்படி என்னால் அதைத் தாங்கிக்கொண்டு இருக்க முடியாது. தயவு செய்து உனது காலைச் சாப்பாட்டை உன்னுடைய அறையில் போயிருந்து சாப்பிடு.'

இந்த எதிர்வினை உதவி செய்தது. தகப்பன் தனது சொந்த உணர்வை மரியாதையாக வெளிப்படுத்தினார். மகனுக்கு, இது மகிழ்ச்சியைத் தராது என்ற போதும், தனக்கு விருப்ப மான கிளர்ச்சியைச் சுதந்திரமாகச் செய்ய முடிந்திருக்கிறது. மாறாக தகப்பன் 'இந்தத் தலைமுடியை இப்படி நீ வளர்க் கக் கூடாது' என்று சொல்லியிருந்தால், அது அவனது சுதந் திரத்தையும் அவனது கிளர்ச்சி மனோபாவத்திற்கு அவன் கொடுக்கும் முக்கியத்துவத்தையும் குலைத்து ஊறுபடுத்தி யிருக்கும். அதுவே மிகக் கோபமுடனான தொனியுடன் சொல்லப்பட்டிருந்திருந்தால் அது ஒரு அருவருப்பான நடத் தையாக இருந்திருக்கும்; மகனையும் பதிலுக்கு ஆத்திரத் துடன் எதிர்த்துக் கத்தவைத்தி ருக்கும்.

கீழுள்ள ஒரு உதாரணம், எந்த நலனையும் சாதிக்காத ஒரு முடி வுக்கே இட்டுச் செல்வதைக் காட்டு கிறது:
திருமதி பி இவ்வாறு சொல்கிறார்: கடந்த வாரம் எனது கணவர் கோப மடைந்து, எங்கள் மகனின் கிற் றாரை உடைத்து, அவனது மன நிலைக்குப் பிடித்தமான சுவரொட் டிகளைக் கிழித்ததுடன் அவன் சேர்த்து வைத்திருந்த விதைமணி களை அள்ளி வெளியே வீசினார். பின்னர் அவனைக் குளிக்குமாறு கட்டாயப்படுத்தினார். நான் பயந்து, குழம்பிப் போனேன். எனக்கு என்ன செய்வது, என்ன சொல்வது என்று ஒன்றுமே தெரியவில்லை. பேசா மல் எனது படுக்கையறைக்குள் சென்று கதவைப் பூட்டிக்கொண் டேன். பிறகு நான் வெளியே வந்து பார்த்த போது மகன் இல்லை. அவன் எங்கோ போய்விட்டான். கணவர் கோபமாக இருந்தார்.

நான் கேட்டேன்: 'இப்ப நாங்கள் என்ன செய்வது ?'.

கணவர் கத்தினார்: 'எனக்குத் தெரி யாது, அதைப்பற்றி எனக்குக் கவலையும் இல்லை.'

ஆனால் அவர் கவலைப்படுகிறார், அவர் தன்னைத்தானே அநியாயத்துக்குக் கவலைப்படுத்திக் கொள்கிறார் என்பது எனக்குப் புரிகிறது.'

ஒரு பதின்ம வயதினருடன் சண்டையிடுவது, ஓடும் வெள்ளத்தை எதிர்த்து நிற்பது போன்ற அழிவைத் தரக்கூடியது என்பதைப் புத்திசாலித்தனமான பெற்றோர்கள் அறிவார்கள். ஒரு குறுக்கு நீரோட்டத்தில் சிக்கிக் கொள்ளும்போது, நிபுணர்களான நீச்சல் வீரர்கள் கூட அதனுடன் போராடுவதை நிறுத்துகிறார்கள். கரைக்குச் செல்லும் வரையில் அவர்களால் போராட முடியாது என்பதை அவர்கள் அறிவார்கள். அவர்கள் மிதக்கிறார்கள், அவர்கள் உறுதியானதாகக் கால்களைப் பதிக்கக் கூடிய இடத்தைக் கண்டுபிடிக்கும் வரை அலை தங்களைத் தூக்கிச் செல்ல அனுமதிக்கிறார்கள். அதேபோல், பதின்ம வயதினர்களின் பெற்றோர்களும் வாழ்க்கையுடன் ஓட வேண்டும், பாதுகாப்பான தொடர்பாடலுக்கான வாய்ப்புகள் கிடைக்கும்வரை எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

## அவரது மொழியையும் நடத்தையையும் பின்பற்றாதீர்கள்!

பதினாறு வயது பெலிண்டா கூறுகிறள்: 'என் அம்மா தானும் ஒரு பதின்ம வயதினராக இருக்கக் கடுமையாக முயற்சி செய்கிறாள். அவள் 'மினிஸ்கேர்ட்' (Mini Skirt) களை உடுத்தி, மணிகளை அணிந்து, கொண்டு நுனி நாக்கால் பேசுகிறாள். என் நண்பர்கள் பார்க்க வரும்போது, அவர்களைத் தன்னுடன் கைகுலுக்கக் கேட்கிறாள். புதினமானதும் குதுகலமளிப்பதுமான செய்திகளைச் சொல்லுங்கள் என்று அவர்களிடம் கேட்கிறாள். அவள் இவ்வளவு முட்டாள்தனமாக நடந்துகொள்வதைப் பார்ப்பது எனக்கு எரிச்சலூட்டுகிறது. என் நண்பர்கள் அவள் நம்மில் ஒருத்தி என்று பாசாங்கு செய்கிறார்கள், ஆனால் அவளது முதுகுக்குப் பின்னால் அவளைப் பார்த்து நெளித்துச் சிரிக்கிறார்கள், என்னையும் கேலி செய்கிறார்கள்.

குழந்தைகள் குழந்தைத்தனமானவர்கள், எனவே பெரியவர்கள் பெரியவர்களாக இருக்க வேண்டும். பதின்ம வயதினர் வேண்டுமென்றே நம்முடைய வாழ்க்கை முறையிலிருந்து வேறுபட்ட ஒரு வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்கிறார்கள். நாம் அவர்களின் பாணியைப் பின்பற்றும்போது, உண்மையில் நாங்கள் செய்வதெல்லாம் அவர்கள் எங்களை எதிர்ப்பதற்குக் கட்டாயப் படுத்துவது மட்டுமே.

திருமதி. A இப்படிக் கூறுகிறார்: 'இந்த வாரம் நான் சில விடயங்களைச் சரியாகவே செய்து வருகிறேன் என்பதைக் கண்டுபிடித்தேன். என் மகள், பொதுவாகத் தாய்மார்களும் அவர்களது மகள்களும் பற்றி என்னுடன் நீண்ட நேரம் பேசினாள். அவளுடைய நல்ல தோழியான ஹோலி மிகவும் மகிழ்ச்சியற்று இருக்கிறாள் என்று அந்த உரையாடலின் போது அவள் என்னிடம் சொன்னாள்: 'ஏனென்றால் அவளுடைய அம்மா, தன்னுடைய தோற்றத்திலும், 'ஃபஷன்'இலும் (fashion) ஹோலியுடன் போட்டியிடுகிறாள். அவள் மிகவும் கவர்ச்சிகரமானவள், சமீபத்திய பாணியில் ஆடை அணிகிறாள். அவள் ஹோலியை விட அழகாக இருக்கிறாள், சிறிய அளவிலான ஆடைகளை அணிகிறாள். அவளுடன் ஒப்பிடும்போது, ஹோலி ஒரு சாதாரண பெண் பிள்ளை தான்'. என் மகள் அப்போது எனக்கு ஒரு நல்ல பாராட்டும் தெரிவித்தாள். அவள் சொன்னாள்: 'தாய்மார்கள் ஒரு கட்டத்திற்கு மட்டுமே ஃபேஷன் உணர்வுடன் இருக்க வேண்டும். உதாரணமாக, நீங்கள் நன்றாக உடை அணிகிறீர்கள் அம்மா. ஆனால் நீங்கள் ஒரு தாயைப் போல இருக்கிறீர்கள், ஒரு தாயைப் போல நடந்துகொள்கிறீர்கள், ஒரு தாயைப் போலப் பேசுகிறீர்கள்.'

## முட்களைச் சேகரிக்காதீர்கள்!

பெற்றோர்கள் தங்களிடம் உள்ள குறைபாடுகளை உணரும்போது, தங்கள் குழந்தைகள் மீது அவர்களைப் பரிபூரணர்கள் ஆக்குவதாக எண்ணிக்கொண்டு பெரும்பாலும் அவற்றையும் (தம்மிடமிருந்த குறைபாடுகளைத் தவிர்ப்பதையும்) சேர்த்துத் திணிக்க ஆசைப்படுகிறார்கள். சில பெற்றோர்கள் அதை ஒரு தொழிலாகவே செய்கிறார்கள். அவர்கள் தங்களது பதின்ம வயதுப் பிள்ளைகளின் விரும்பத்தகாத நடத்தைகள் பற்றிய உண்மைகளை ஆராய்ந்து, அவர்களிடம் உள்ள சிறிய குறைபாடுகளையெல்லாம் தேடிக் கண்டு பிடிக்கிறார்கள். பிள்ளைகளின் சொந்த நலனுக்காக, அவர்களது குறைபாடுகளை அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும் என்று அந்தப் பெற்றோர்கள் நம்புகிறார்கள். அத்தகைய நேர்மை இறுதியில் பெற்றோருக்கும் பதின்ம வயதினருக்கும் இடையிலான உரையாடலையே கொன்றுவிடுகிறது. அவர்களது முகத்தை நோக்கி வீசப்படும் குறைபாடுகளால் யாரும் பயனடைவதில்லை. இது பதின்ம வயதினரை, தமது தனிப்பட்ட தவறுகள் வெளித்தெரிய வருகின்ற யதார்த்த நிலையைச் சமாளிப்பதற்கான வழிகளைத் தேடுவதை நோக்கி விரட்டுகிறது. அவற்றில் கவனம் செலுத்துவது அவர்களது நடவடிக்கைகள் மீது கடுமையான வெளிச்சத்தைப் பாய்ச்சுவது போன்றது. அப்படிச் செய்யும் போது, அவரது குறைபாடுகள் நமக்குத் தெளிவாகத் தெரியும், ஆனால் அவர்களுக்கு அல்ல; அவர்களது கண்கள் உடனடியாக மூடபட்டுவிடும். அவர்களது குணநலக் குறைபாடுகளில் கவனம் செலுத்துவது ஒருபோதும் உதவியாக இருக்கப்போவதில்லை. அத்தகைய தவறுகளை பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டிய கட்டாய நிலை வரும் போது பதின்ம வயதினர், அதைத் தனிப்பட்ட முறையில் சரிசெய்ய விரும்பாமலே போகலாம். குறைபாடுகள் வெளிப்படையாகத் தோன்றும் சூழ்நிலைகளில், அப்போதைய நெருக்கடிகளைச் சமாளிக்க அவருக்கு உதவுவதே நமது உடனடியான பணி. நமது நீண்டகாலப் பணி, குணத்தை சரிசெய்து ஆளுமையை வளர்க்கும் உறவுகளையும், அனுபவங்களையும் அவருக்கு வழங்குவதாகும். நமது முக்கிய நோக்கம், அவரது மனித ஆற்றலுக்கு ஏற்ப வாழ அவரைத் தூண்டுவதே. இந்த நோக்கம் அமைதியாகச் செயல்படுத்தப்பட வேண்டியது; பகிரங்கமாக, வெளிப்படையாக அறிவிக்கப்படும் ஒன்றல்ல.

(தொடரும்...)

vickneaswaran.sk@thaiveedu.com



நவீன இலத்திரனியல் சாதன உலகத்தில் பல்வேறு சாதனைகளை செயற்கை நுண்ணறிவு நுட்ப முறையின் மூலமாகவும் அதனுடன் தொடர்புடைய கணினி பொறிகளின் வாயிலாகவும் இளைஞர்கள் சாதித்து வருகின்றனர். இருப்பினும் சிறுவர்கள், அதில் காணப்படும் சாதக பாதக விளைவுகளை அறிந்து அதனை அணுகத் தெரியாத போது வாழ்க்கையினை கேள்விக்குறியாக்கும் நிலைக்கு ஆளாக்கிவிடுகின்றனர். இந்தியாவின் தமிழ்நாட்டில் ஒரு தந்தை பிள்ளைக்கு வீடியோ கேம் விளையாடுவதற்கு தனது தொலைபேசியை தரவில்லை என்பதற்காக அந்த சிறுவன் தற்கொலை செய்துகொண்டான் என்பது அண்மை யில் படித்த ஒரு செய்தி. வெறுமனே 12 வயது நிரம்பிய சிறுவன், அவனது எண்ணங்கள், செயற்பாடுகள் என அனைத்து விருப்பங்களும் அந்தத் தொலைபேசியின் வாயிலாக விளையாடுவதிலே இருந்திருக்கின்றது என்பது இதில் புலனாகின்றது. சிறுவர்களின் பாதுகாப்பு நலன்க ளிலும் சுகாதாரம்சார் அனைத்து விடயங்களிலும் அரசு, குடும்பம், பெற்றோர்கள், பாடசாலை உள்ளிட்ட சமூகத் தினர் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றனர். இந்த வரிசையில், நவீன யுகத்தில் இலத்திரனியல் நிகழ்நிலை சாதனங்களும் பிரதான அங்கம் வகிக்கின்றன. ஒரு பிள்ளையின் தேக ஆரோக்கியம் என்பது மனதளவில் மாத்திரம் அன்றி உடல், சமூக, ஆன்மீகம் சார்ந்தவற் றோடும் தொடர்புபட்டுள்ளன. இவற்றின் செல்வாக்கு பிள்ளையை பகுத்தறிவுமிக்க சமூக நற்பிரஜையாக கட்டி யெழுப்பும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சமூக சூழல் அமைப்பு, நகரமயமாக்கம், இலத்திரனியல் ஊடக பயன்பாடு என விரிந்த உலகமயமாக்கம் ஒரு கிரா மமாகச் சுருங்கி வருவது

இளையோரின் மத்தியிலும், குறிப்பாக சிறுவர்கள் மத்தி யிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. முத லாவது அவர்களின் எண்ணங்களிலும் பின் நடத்தை வழியிலான பழக்கவழக்கங்களிலும் செயற்பாட்டிலும் அதன் செல்வாக்கு எங்கோ ஒரு மூலையில் இருந்து முடக்கிக் கொண்டு தான் இருக்கிறது. அதனை விளங்கிக்

# சிறுவர்களும் நிகழ்நிலையும்

## ஓர் உளவியல் பார்வை

– சரவணன் லக்ஹரன்



கொள்ளாத பட்சத்தில் சாதாரணமான பிழைகள்கூட பெரிய அசம்பாவிதங்களைத் தோற்றுவிக்கக்கூடும். இதனை அடிப் படையிலிருந்து சரி செய்ய பல சமூக ஆர்வலர்களும் அமைப்புகளும் தொண்டு நிறுவனங்களும் அரசு, அரசு சார்பற்ற நிறுவனங்களும் பங்குதாரர்களாக பல்வேறு செயற் றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

டிஜிட்டல் உலகில் பல்வேறு தடைகள் மனதளவிலான பாதிப் புகளை சிறுவர்களுக்கு பெரிதும் ஏற்படுத்துகின்றன. அவர்கள் நிகழ்நிலை ஊடகங்களைப் பாவனை செய்யும் நேரம் (Screen timing), அதில் உள்ள நாட்டம், எதனைத் தேர்வு செய்து பார் வையிடுகின்றனர், பொருத்தமற்ற புகைப்படங்கள் காணொ ளிகள் அல்லது அவதூறான கருத்துகளைப் பகிர்தல், தனிப் பட்ட விபரங்களை இணையத்தளத்தின் நிகழ்நிலையில் சமர்ப்பித்து மோசடி நிலைக்கு ஆளாகும் தன்மை என பல் வேறுபட்ட இடர்பாடுகளை நிகழ்நிலையில் சந்திக்க நேர்கிறது. ஆய்வுகளின்படி சிறுவர்கள் வாரத்துக்கு சராசரியாக 24 மணி நேரத்திற்கும் மேலாக இணையத்தைப் பயன் படுத்துகின் றனர்.

உங்கள் பிள்ளைகளுக்கு நிகழ்நிலையில் பொருத்தமானது எது, பொருத்தமற்றது எது என்பதை எடுத்துச் சொல்லுங்கள். நிகழ் நிலையில் அறிமுகமானவர்களின் நோக்கம் உண்மையானதா கவும் நேர்மையானதாகவும் இருக்கும் எனக் கூறிவிட முடியாது. அவர்கள் உங்கள் பிள்ளைகளை ஏமாற்றி, அவர் கள் வலையில் விழ வைக்கப் பல்வேறு உத்திகளைக் கையாள்வார்கள். அவர்களின் நிகழ்நிலையில் செலவிடும் நேரத்தைக் கட்டுப்படுத்துங்கள், அத்தோடு அவர்கள் நிகழ் நிலையை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை அவதா னியுங்கள். உங்கள் பிள்ளைகளின் நிகழ்நிலைப் பாவ னையை கட்டுப்படுத்த வேண்டும் என்றால் நீங்கள் அவர்க ளுக்கு முன்மாதிரியாக இருப்பது அவசியம். உங்கள் பிள்ளைகள் நிகழ்நிலையில் விளையாட்டுக்கு அடிமையா கும்பொழுது உடலளவிலும் மனதளவிலும் பாதிப்படைகின் றனர். அவர்களில் ஏற்படும் மாற்றத்தையும் மன ஆரோக்கி யத்தையும் பாதுகாப்பதற்கு அவர்கள் நண்பர்கள் பாட சாலை மற்றும் வீட்டு சூழலில் எவ்வாறு நடந்து கொள்கின் றார்கள் என்பதைக் கவனிப்பது முக்கியமானதாகும். வீடியோ கேம்கள் சில சமயங்களில் சிறுவர்களை நிஜ வாழ்க்கையில் இருந்து தனிமைப்படுத்தும்.

உங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளில் மாற்றத்தை அவ தானித்து உள்ளீர்களா ?

- அவர்கள் வயதுக்கு மீறி அப்பாற்பட்ட, பொருத்தமற்ற பாலியல் நடத்தைகளில் ஈடுபடுதல்.
- அவர்கள் வழமைக்கு மாறாக நிகழ்நிலையில் குறைவான நேரத்தை அல்லது கூடுதலாக நேரத்தை இரகசியமாகப் பாவித்தல் போன்ற திடீர் மாற்றங்கள்.
- அவர்களது மனநிலை, நடத்தை மற்றும் உணவு பழக் கத்தில் மாற்றம்.
- கல்வி மற்றும் பாடசாலை செயற்பாடுகளில் மந்த நிலையும் வரவில் ஒழுங்கின்மையும்.

மேலே குறிப்பிட்டு ஏதேனும் அறிகுறிகள் உங்களின் பிள்ளை களிடம் வெளிப்பட்டால் உடனடியாக அவர்களுடன் கலந்து ரையாடுங்கள். அவர்களின் வயதுக்கு உகந்த விடயங் களைப் பற்றிப் பேசுங்கள். இது பிள்ளைக்கும் உங்களுக்கும் இடையிலான நல்ல நட்புறவை மேம்படுத்தும். உங்கள் பிள்ளை நிகழ்நிலை வன்முறையில் பாதிக்கப்பட்டிருந்தால் பிள்ளையினது உணர்வு மற்றும் உளவேதனையை பற்றி கவனத்தில் கொள்ளுங்கள். அவர்களைத் தூற்றி குற்றம் சாட்டி கடுமையாகக் கண்டிக்காமல் உளநல ஆலோசகரின் உதவியை நாடுங்கள். நிகழ்நிலையில் பாதுகாப்பை உறுதிப் படுத்திக்கொள்ள செயலிகள் மற்றும் கருவிகளில் தனி உரிமை (Privacy options) பாதுகாப்பு அமைப்புகளைப் பயன்படுத்துங்கள். உங்கள் பிள்ளைகளின் உணர்வைப் புரிந்துகொண்டு அவர்களை எப்பொழுதும் மரியாதைக்குரிய வர்களாக நடத்துங்கள். நிகழ்நிலையில் காண்பதெல்லாம் உண்மை இல்லை என்பதைச் சொல்லிக்கொடுங்கள்.

இலங்கையில் தற்போதைய சிறுவர் பாதுகாப்பு செயற்றிட் டங்கள் மற்றும் நடைமுறைகள் (Child Protection Programs and Practices) கீழ்வருமாறு செயற்பட்டு வருகின்றன. இவை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை (National Child Protection Authority - NCPA) மற்றும் பிற அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களால் முன்னெடுக்கப்படுகின்றன.

- பள்ளி மாணவர் தூதுவர் திட்டம் - Student Ambassa- dor Programme
- 1929 குழந்தை பாதுகாப்பு hotline - Childline 1929 இலவச மற்றும் 24/7 சேவை.
- Sithuvili Siththam - சிறுவர் கலை, ஓவியம் மற்றும் கார்ட்டூன் போட்டி (2025)
- NCPA வழிகாட்டும் பயிற்சி மற்றும் ஆலோசனைச் சலுகைகள்
- Inter-sectoral Collaboration (பகுதித் துறைகளுக்கிடை யிலான ஒத்துழைப்பு)
- Online Child Abuse Prevention - இணையதளத் துன்பு றுத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள்
- Special Needs Children - Inclusive Protection

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் முன்னெடுக் கப்படும் புதிய திட்டமானது மாணவர்கள் வழியாக பள்ளித் தளத்தில் சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்து கின்றது. அத்துடன் மாணவர்களின் எண்ணிக்கைப்படி பள்ளியில் மாணவ பாதுகாப்பு தூதுவர்கள் தெரிவு செய்யப்ப டுகின்றனர். தூதுவர்களுக்குப் பயிற்சி, ஊக்கம் செயல்முறை வழிகாட்டல் போன்றன வழங்கப்படுகின்றன. மாணவ தூதுவர் களைக் குழுக்களாகப் பிரித்து அதில் வயதிற்கு ஏற்ப பாது காப்புச் செயற்பாட்டை மேம்படுத்துவதற்கும் சமூக விழிப்பு ணர்வு ஏற்படுத்துவதற்கும் மாணவக் குழுக்கள் தம்மைத் தயார்ப்படுத்துகின்றன. ஒரே வயதைக் கொண்ட மாணவத் தொகுதி மூலமாக பிற மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங் கும்போது அது சர்வசாதாரணமாக, இலகுவாக புரிந்து கொள்ளும் வாய்ப்பினை அளிக்கும். மாணவர்கள் ஆசிரியர்க ளிடத்து கொண்டுள்ள கண்ணியம், கட்டுப்பாடு ஆகியன காரணமாக, பிரச்சினையை வெளிப்படையாக வெளிப்படுத் தும்போது ஏற்படும் பயம், அவர்களிடம் ஏற்பட்ட பிரச்சி னைக்கான உண்மையை வெளிக்கொண்டுவரச் சிக்கலாக அமையும். ஆகையால், மாணவ தூதுவர்களிடம் - சமவயதுக்

குழுக்களுடன் பழகுவதன் காரணமாக அவர்களது பிரச்சி னைகளை வெளிப்படுத்துவது இலகுவானதாக இருக்கும்.

பிள்ளைகளின் அறிவுக்கும் காட்சிப் புலத்திற்கும் தெளிவாக விளங்கக் கூடிய வகையில், தமது அவசர நேரத்தின்போது தொடர்பு கொள்ள வேண்டிய முக்கியமான நபர்கள் யார், தொடர்பிலக்கங்கள் எவை என்பது பற்றியும் தெளிவுபடுத் துவது அத்தியாவசியமானதாகும். தனக்கு மிகவும் நெருக் கமான நம்பத்தகுந்த நபர்களிடம் தனக்கு ஏற்பட்ட பிரச் சினையை வெளிப்படுத்துவது இங்கு பழக்கப்படுத்தப்படும். இருக்கின்ற தடைகளை எவ்வாறு முறியடிப்பது தொடர்பா கவும் தன்னால் முகம் கொடுக்க முடியாத சந்தர்ப்பத்தை எப்படி நீங்கிக் கொள்வது, அந்த இடத்திலிருந்து எவ்வாறு தப்பிப்பது தொடர்பாகவும் இத்தருணத்தில் சிறுவர்களை நாம் தெளிவுபடுத்த வேண்டும். குழந்தைகளுக்கு நேரும் பயம், அத்துமீறல், புறக்கணிப்பு போன்ற பிரச்சினைகளைத் தெரிவிக்கலாம். அனானிமஸ் (பெயர் வெளிப்படுத்தத் தேவையில்லை) முறையில் புகார் அளிக்கலாம். இந்தத் தொடர்புகளுடன் இணைந்தால் பிரச்சினைக்குரிய நபர்க ளுடைய தகவல்கள் அனைத்தும் இரகசியம் பேணப்படும்.

## Sithuvili Siththam
## சிறுவர் கலை, ஓவியம் மற்றும் கார்ட்டூன் போட்டி (2025):

சிறுவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் உரிமை குறித்த விழிப்பு ணர்வை கலை வழியாக ஊக்குவிக்கும் தேசிய போட்டியில் பல்கலைக்கழக மாணவர்களும் பங்கு பெறலாம். மாணவர் களின் அறிவுப் புலமைத்துவத்தை அடையாளப்படுத்தி அவர்களுக்கான கல்வி வழங்கப்படுதல் காரணமாக, அவர் களின் திறன் மற்றும் அடைவு தேர்ச்சிகள் கருத்தில் கொள்வ தில்லை. அதன் காரணமாக அவர்களுக்கு ஆளுமை சார்ந்த பின்னடைவுகள் ஏற்படுவதுடன் பிரச்சினைக்கு முடிவெ டுக்கும் தன்மை, சகிக்கும் தன்மை, பகுத்தறிவுடன் செயற்ப டுதல், சமூகத்திற்கு ஏற்ப இசைவாக்கம் அடையக் கூடிய தன்மை அற்ற ஓர் தலைமுறையினர் உருவெடுத்துள்ளனர்.

இதனால் சிறுவர்களின் மனநிலைசார் பின்னடைவுகள் (சமூக, உடல் மற்றும் உணர்ச்சி நிலைமைகளைப் பாதிக்கும் முக்கிய காரணிகள்) ஏற்படுகிறன. உதாரணமாக தற்கொலை வீதம் (Suicide Rate) புள்ளிவிபரங்கள் அடிப்படையில் பார்த் தோமேயானால் இலங்கையில் 10-19 வயதுக்குட்பட்ட சிறுவர் களிடையே தற்கொலை முயற்சிகள் கடந்த 5 ஆண்டுகளில் அதிகரித்துள்ளன. UNICEF Sri Lanka (2023) அறிக்கை யின்படி, மன அழுத்தம், பரீட்சை பயம், மீடியா அழுத்தம், மற்றும் குடும்ப சிக்கல்கள் முக்கிய காரணிகளாக உள்ளன. 2022-ஆம் ஆண்டு தனிமையினால், 1 லட்சத்தில் 8-10 சிறு வர்கள் தற்கொலைக்கு முயன்றதாகத் தகவல்கள் காட்டு கின்றன. நிகழ்நிலை விளையாட்டுகள் உடல் மற்றும் மனதை மழுங்கடித்து மூளையில் மகிழ்ச்சிக்குரிய டோப்பமினின் (Do-pamine) அளவை அதிகரிப்பதால் உள சமநிலை பாதிக்கப் படும். சிறுவர்களுக்கு அச்செயற்பாட்டில் ஈடுபடுவதே உண்மையான மகிழ்ச்சியாய் தோன்றும் அல்லது பழக்கமாகி விடும் என்பது உளநல மருத்துவர்களின் கருத்தாகும்.

அவதானிக்க வேண்டிய பக்கவிளைவுகளாவன உளவியல் சீர்கேடுகள் (Anxiety/ Depression), தற்கொலை எண் ணங்கள் (Suicidal Ideation), சமூக விலகல், தனிமை உணர்வு என்பன ஆகும்.

சிறுவர்களின் பிரச்சினையில் முக்கிய விடயம் மந்த போசணை (Malnutrition) ஆகும். வறிய குடும்பங்களின் பிள்ளைகள் ஒரு நேர உணவைக்கூட பெற்றுக்கொள்ளாது, தமது படிப்பைத் தொடர்கின்றனர். உணவுப் பற்றாக்குறை காரணமாக குழந்தை களுக்கு, மூளை வளர்ச்சி பாதிக்கப்ப டுகிறது. சுகாதார அமைச்சின் 2022 தரவுகளின் படி, 5 வய துக்குட்பட்ட குழந்தைகளில் 17 வீதமானவர்களுக்கு உடல் எடை குறைவு (wasting) ஏற்பட்டுள்ளது. 15 வீதமானவர்க ளுக்கு அலட்சியமான மூளை வளர்ச்சி காணப்படுகின்றது. Iron deficiency - கவனக்குறைவு மற்றும் தன்மையிழப்பு நில மைகளும் தொடர்கின்றன. இதனால் சிறுவர்களில் ஏற்படும் பின்னடைவுகள் பின்வருமாறு:

- கல்வி முறையில் பின்னடைவு,
- சுறுசுறுப்பின்மை,
- உடல் வளர்ச்சியின் குறைவு.

தேவையற்ற நிகழ்நிலை பதிவுகளால் பாலியல் நாட்டம் மற்றும் பாதிப்புகள் (Sexual Curiosity & Abuse Risks) சிறு வர்கள் மத்தியில் ஏற்படக்கூடும். குழந்தைகளிடம் உள்ள இயற்கையான ஆர்வம், தவறான வழிகளில் வெளிப்படலாம். இதன் காரணமாக பாலியல் கல்வி பற்றிய அறிவை முறையாக அணுக வேண்டும். சமூக ஊடகங்களின் தாக்கத் தினால் ஏற்படும் பாதுகாப்பற்ற சூழ்நிலைகளைப் பெற்றோர் மூலம் அல்லது நம்பத்தகுந்த உறவினர்கள் மூலம் தீர்த்துக் கொள்ள வழிப்படுத்தல் சிறந்தது. இவ்வாறான பிரச்சினை களைக் கண்டுகொள்ளாத பட்சத்தில் சிறுவர்களின் எதிர் காலம் கேள்விக்குறியாக லாம் அல்லது நன்னடத்தைப் பள்ளியில் பிள்ளையை வளர்க்கவேண்டிய சூழல் உருவாகும். இதனால் ஏற்படும் விளைவுகள் பிள்ளையை அதிகரித்த பாலியல் ஈடுபாடு, மன உளைச்சல் மற்றும் நம் பிக்கையிழப்பிற்கு ஆளாக்கும்.

சிறுவர்களின் மனநிலையை மேம்படுத்தும் தீர்வுகள் மற்றும் பரிந்துரைகள் சில பின்வருமாறு:

மனநலம் சார்ந்த கல்வி பள்ளி மட்டத்தில் முன்னெடுக்கப் படல் வேண்டும், உளவியல் ஆலோசனைகள் மற்றும் மனநல ஆலோசகர்கள் மூலம் அல்லது பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரிய ஆலோசகர்கள் மூலம் உளவளத்துணை வழங்கல், ஊட்டச் சத்து நலத்திட்டங்கள் (mid-day meal & vitamin support) அமுல்ப்படுத்தல், பாதுகாப்பு பரிசோதனை மற்றும் பாலியல் கல்வி (Child Protection Training) முறையாக வழங்குதல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டியது காலத்தின் கட்டாய மாகும்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகத் தலைவர்கள் ஆகியோ ருக்கான சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்குகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. பிள்ளை பராமரிப்பு, மனநல ஆலோசனை, சட்ட உதவி போன்றவை வழங்கப்படு கின்றன. கல்வி அமைச்சு, காவற்றுறையினர், சமூக நலன் துறை, மற்றும் மருத்துவர்களுடன் இணைந்து குழந்தை பாதுகாப்பு வழக்குகள் கையாளப்படுகின்றன.

குழந்தைகள் சமூக ஊடகங்களில் எதிர்கொள்ளும் ஆபத் துகளை குறைக்கும் வகையில் விழிப்புணர்வு செயற்பா

டுகள், பாதுகாப்பான இணைய உபயோகத்துக்கான வழிகாட்டல் மேற்கொள்ளப்படவேண்டும். இவ்வாறான பொதுமைப்பட்ட பிரச்சினையை இலகுவான முறையில் தீர்த்துக் கொள்வதற்காக அரசாங்கத்தின் தேசிய சிறுவர் அதிகார சபையின் (National child protection authority) முன்னெடுப்புகளை அனைத்து பாடசாலைகளும் உள்வாங்க வேண்டும் என்பதை மையக்கருவாக வைத்து இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. இதற்கு முக்கியமாக செய்ய வேண்டியது என்னவென்றால் www.childprotection.gov.lk எனும் தேசிய சிறுவர் அதிகார சபையின் உத்தியோப்பூர்வ இணையதளத்தினை அணுகுவதன் மூலம் பாடசாலை மாணவர் தூதுவர்களுக்கான விண்ணப்ப படிவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இதனைப் பூரணப்படுத்தி தேசிய அதிகார சபையின் முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் பாடசாலையின் அனைத்து விதமான செயற்பாட்டிலும் சிறுவர் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதுடன் மாணவர்களின் நலன் சார்ந்த விடயங்களையும் செயற்றிட்டங்களையும் ஆண்டுதோறும் முன்னெடுக்கமுடியும்.

இத்திட்டத்தினை இலங்கையில் காணப்படும் 17 பல்கலைக்கழகங்களிலும் மற்றும் திறந்த பல்கலைக்கழகங்களிலும் உள்ள மாணவர்கள் (University students Ambassadors on child protection) பல்கலைக்கழக மாணவ தூதுவர்களாக சிறுவர் பாதுகாப்பிற்கு அங்கீகாரம் பெற்று பிரதேச மட்ட ரீதியிலாக அனைத்து பாடசாலைகளையும் உள்வாங்குவதற்கு செயற்பட்டுவருகின்றனர். இவர்களின் செயற்பாட்டை வெளிப்படுத்துவதற்கான ஒரு சமூக ஊடகமாக முகப்புத்தகத்தில் அனைத்து பல்கலைக்கழகங்களும் University Students Ambassadors on child protection என பெயரிட்டு தமது சமூக சேவையை முன்னெடுக்கின்றனர். அவர்களின் பதிவுகளைப் பார்வையிட்டு உங்களுடைய பாடசாலை சமூகத்திற்கான சிறுவர் நலனை மேம்படுத்தமுடியும்.

Special Needs Children - Inclusive Protection மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கும் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பான தனிப்பட்ட அணுகுமுறை, அவர்களுக்கு ஏற்ற பயிற்சி, வழிகாட்டல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடக்கின்றன. எல்லாச் சிறுவர்களும் பாதுகாப்பாகவும், மரியாதையுடனும் வாழவும், அவர்களின் உரிமைகள் காப்பாற்றப்படவும் செய்வதே இந்தச் செயற்றிட்டங்களின் குறிக்கோள்.

நிகழ்நிலை துஸ்பிரயோகத்தினால் நீங்கள், உங்கள் நண்பர்கள் உங்களுக்கு தெரிந்த - தெரியாத ஒருவர் பாதிக்கப்பட்டிருந்தால், பாதிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருந்தால் அல்லது பாதிப்பை எதிர்கொண்டால், தாமதிக்காமல் கீழ் உள்ள அமைப்புக்களைத் தொடர்புகொண்டு உடனடியாகத் தெரியப்படுத்துங்கள்.



laksharan.sarawanan@thaiveedu.com



தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணையம்*(National Child Protection Authority - NCPA)* மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் துஸ்பிரயோக தடுப்பு பணியகம்

***1929***
இது இலங்கை முழுவதும் இலவசமாக, 24 மணி நேரமும், 7 நாட்களும் செயல்படும் சிறுவர் உதவி ஹெல்ப்லைன். இந்த சேவை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் கிடைக்கிறது.

***109 அல்லது 011 244 4444***
இவை மகளிர் மற்றும் சிறுவர் துஸ்பிரயோக தடுப்பு பணியகத்தின் தொடர்பு எண்கள்

# தாரே ஜமீன் பர்

## - மாதவி உமாசுதசர்மா



பூமியில் உள்ள நட்சத்திரங்களைப் போல குழந்தைகளின் உலகம் வித்தியாசமானது, அங்கே போட்டி பொறாமை இல்லை, நிஷ்களங்கமான ஒரு கடவுளுக்கு ஒப்பான பரந்த மனமாக இருக்கும். அந்த களங்கமில்லா மனதில் நாம்தான் போட்டி, ஒப் பீடுகளை விதைத்து 'நீ அவனைப் போல இல்லை, நீ அவளைப்போல கெட்டிக்காரி இல்லை, பரீட்சைப் புள்ளிகள் காணாது' என்று தேவையில்லாத வேதனைகளைத் திணிக்கின்றோம். எங்களுடைய பயங்களை அவர்களின் எதிர் காலம் மீது அழுத்தங்களாகப் பிரயோகிக்கின்றோம்.

மாற்றுத்திறனாளிப் பிள்ளைகள், கற்றலில் சிரமங்களை எதிர் நோக்கும் மெல்லக் கற்கும் பிள்ளைகள், சிறப்புத் தேவை உள்ள பிள்ளைகள் போன்றவர்களுக்கு நாம் எவ்வாறான சமூகச் சூழலை உருவாக்கியிருக்கின்றோம் என்பது இங்கு கவனிக்கத்தக்க விடயம். பெரும்பாலும் பெற்றோர், குடும்பங்களின் கௌரவத்தை நிலை நாட்டும் பொறுப்பையே அடுத்த தலைமுறைக்கு கடத்துகின்றார்கள்.

பிள்ளைகள் என்ன விருப்புகின்றார்கள்? என அவர்களின் பார்வையில் 'தாரே ஜமீன் பர்' (Taare Zameen Par - பூமியில் உள்ள நட்சத்திரங்களைப் போல) திரைப்படம் பேசுகிறது.

எழுதுவதில், எழுத்துக்கூட்டி வாசிப்பதில் சிரமத்தை எதிர்கொள்ளும் (Dyslexia) இஷான் என்ற எட்டு வயது சிறுவன் மற்றும் அவனுடைய வர்ணங்கள் நிறைந்த கற்பனைகளால் ஆக்கப்பட்ட உலகம், எவ்வாறு சுற்றியிருக்கும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் நண்பர்களால் நோக்கப்படுகின்றது என்பதைக் குறித்து ஆழமாகப் பேசுகின்றது இத் திரைப்படம். இஷானின் பிரச்சினையை சரிவரப் புரிந்துகொள்ளாத சக மனிதர்களால் அவன் இன்னமும் அழுத்தங்களுக்குள் தள்ளப்படுகின்றான். தொடர்ந்து வகுப்பேற்றப்பட முடியாத காரணத்தால் பாடசாலை மாற்றப்படுகின்றான், விடுதியில் சேர்க்கப்படுகின்றான். இதனால் தன்னை மாத்திரம் குடும்பத்திலிருந்து பிரித்து தனியாக விட்டு விட்டார்கள் என்று கல்வி மற்றும் வாழ்க்கையில் வெறுப்புத் தோன்றுகின்றது. இவற்றையெல்லாம் தன்னுடைய ஓவியம் மூலம் வெளிப்படுத்துகின்றான், தொடர்ந்தும் ஆசிரியர்களின் தண்டனை, ஏச்சுக்கள், கேலிகள் இவற்றையெல்லாம் தாங்க முடியாமல் தற்கொலை செய்ய முற்படுகின்றான், அப்போது அவனைத் தேடி வரும் மாற்றுத்திறனாளி நண்பன் தடுக்கி விழுவதைப் பார்த்து உதவ ஓடிவருகின்றான். அவனுடைய மனவிரக்தியை புரிந்துகொள்ளவோ, ஆலோசனை வழங்கவோ யாரும் இருக்கவில்லை.

தற்காலிகமாக பாடசாலைக்கு வரும் ஓவிய ஆசிரியரான அமீர்கானின் (ராம் சங்கர் நிகும்ப) வரவுடன் திரைப்படம் இன்னொரு கட்டத்தை அடைகின்றது, இங்கே ஒரு ஆசிரியரால் மாணவனின் தலைவிதி மாற்றி எழுதப்படுகின்றது. அதற்காக ஆசிரியர் எடுக்கும் முயற்சிகளும் அளப்பரியவை. வகுப்பில் முன்வரிசை மாணவர்கள் மட்டுமல்ல பின்வரிசை மாணவர்களுக்கும் வாழ்க்கை இருக்கின்றது, அதை எவ்வாறு வெற்றிகரமாக மாற்றுகின்றார்கள் என்பது ஆசிரியர்களின் கைகளிலே இருக்கின்றது என்பதை அழகாகக் காட்சிப்படுத்தியிருக்கின்றார்கள்.

கற்றல் என்பது வெறுமனே நான்கு சுவர்களுக்குள் பூட்டி வைத்து பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறுவது மட்டுமல்ல. அதைத்தாண்டி வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்துவது. வாழக் கற்றுக்கொடுப்பது, வெறுமனே பிள்ளைகளை, பந்தயக்குதிரைகளாகப் பார்க்காமல் அவர்களுக்கான உலகத்தை உருவாக்கவும், இரசிக்கவும் கற்றுக்

கொடுப்பதும் என்று சாத்தியமான நிறைய விடயங்களை அமீர்கான் வழியே பார்வையாளர்களுக்கு இயக்குநர் கடத்தியிருக்கின்றார். நிச்சயமாக பிள்ளைகளுடன் கூடியிருந்து கண்டுகளித்து, உரையாடப்பட வேண்டிய திரைப்படம்.

2007-இல் வெளியான இத்திரைப்படம் பற்றி இப்போது பேசப்படுவதற்கு காரணம் இத்திரைப்படத்தின் இரண்டாம் பாகமான சித்தாரே ஜமீன் பர் (Sitaare Zameen Par) அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பீட்டளவில் தமிழ் அல்லாத பிறமொழியில் சிறுவர்களுக்கான திரைப்படங்கள் மிகுந்த சிரத்தையுடன் கட்டமைப்படுகின்ற வேளையில், முரணாக நம்மிடம் காண்பிப்பதற்கு விரல்விட்டு எண்ணக் கூடியளவிலான திரைப்படங்களே இருக்கின்றன. ஒரு கலை வடிவத்தினூடாக அடுத்த தலைமுறைக்கு கடத்தப்பட வேண்டிய விடயங்கள் எண்ணிலடங்காதவையாக எம்மிடம் கொட்டிக்கிடக்கும் போதும், ஏன் அவை சரியான விதத்தில் உருப்பெறவில்லை? தனியே மேலைத்தேய கார்ட்டூன் சித்திரங்களையும், பிறமொழித் திரைப்படங்களையும் மொழி மாற்றம் செய்து திரையிடல் மட்டும் போதுமானதா? நம்முடைய கலை, கலாசாரம், பண்பாட்டுக்கூறுகளைக் கடத்தும் ஊடகமாக இல்லாமல் நாம் ஏன் இன்னும் பின்னிற்கின்றோம்? இன்னும் விசேடமான பிள்ளைகளுக்கான எதிர்கால வாழ்க்கைக்கு என்ன திட்டமிடல் எங்களுடைய அரசாங்கத்திடம் அல்லது சமூகத்திடம் இருக்கின்றது? அவர்கள் எப்போதும் பெற்றோரை நம்பியவர்களாவே இருக்க வேண்டியதில்லையே, சில மேலைத்தேய நாடுகளைப் போல, இலங்கை போன்ற தென்னாசிய நாடுகளிலும் கல்வி, தொழிற்பயிற்சி, வேலைவாய்ப்பு, கலையினூடான மருத்துவம் போன்றவற்றில் கவனம் செலுத்தலாமே?

திரைப்படம் பார்த்த பின், இவ்வாறான பல கேள்விகள் என்னை வாட்டியெடுத்தன.

நான் அறிந்த வரையில் சாவிகா இசை மற்றும் நுண்கலை அகாடமி, இலவசமாக மாற்றுத்திறனாளிப் பிள்ளைகளுக்கான இசை மற்றும் இசைக்கருவிகள் சார்ந்த வகுப்புகளைத் தொடர்ச்சியாக கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நடத்திவருகின்றனர் என்பது இங்கே குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும், மேலும் இந்த அகாடமியில் பணியாற்றும் பெரும்பாலானவர்கள் இளம் வயதினர் என்பது சிறப்பம்சமாகும்.

யாழ்ப்பாணத்திலும், அக்கரைப்பற்றிலும், திருகோணமலையிலும் தொடர்ச்சியாக புத்தகக் கண்காட்சிகள், கலை கலாசார பண்பாட்டுப் பெருவிழாக்கள், ஆவணப்படங்கள் திரையிடல், நாடகத் திருவிழாக்கள் பெருமளவிலும், ஆங்காங்கே சிறிய குழுக்களாகவும் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆனால் இவை தொடர்பான ஆவணப்படுத்தல், நிலைபேறுதன்மை, சிறார்கள் மத்தியில் எவ்வாறு தாக்கம் ஏற்படுத்துகின்றது என்பவை ஆராயப்படுகின்றதா, இவற்றின் எதிர்காலம் என்ன என்கின்ற பெரிய கேள்விகள் தொக்கி நிற்கின்றன. மேலும் இவ்வாறான சிறிய முயற்சிகள், மாற்றங்கள் ஏற்படுவது வண்ணத்துப் பூச்சி விளைவைப்போல உருப்பெறலாம்.



mathavi.u@thaiveedu.com





# செயற்கை நுண்ணறிவு

## Artificial Intelligence

**சேஷாத்ரி தனசேகரன்**

தற்காலத் தொழினுட்ப உலகில், 'பெரிய மொழி மாதிரிகள்' (Large Language Models - LLMs) செயற்கை நுண்ணறிவின் (Artificial Intelligence - AI) புரட்சிகரமான கண்டுபிடிப்புகளுள் ஒன்றாகும். 'பெரிய மொழி மாதிரிகள்' (Large Language Models - LLMs) என்பவை மனித மொழியைப் புரிந்து, பதிலளிக்கும் திறன் கொண்ட AI அமைப்புகளாகும். இவை பெரிய அளவிலான உரைத் தரவுகளைப் (text data) பயிற்சியாகப் பெற்று, கேள்விகளுக்குப் பதிலளிப்பது, உள்ளடக்கம் உருவாக்குவது, மொழிபெயர்ப்புச் செய்வது போன்ற செயற்பாடுகளைச் செய்யும் திறன் கொண்டவை. இவை மனித மொழியைப் புரிந்துகொள்ளவும், பதிலளிக்கவும், உருவாக்கவும் திறன் பெற்றவை. இந்த மாதிரிகள் இயற்கை மொழிச் செயலாக்கத் (Natural Language Processing) துறையில் பெரும் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

மாணவர்களுக்குப் படிப்பில் உதவுவதற்கு LLMs மிகச் சிறந்த கருவிகளாக உள்ளன. பாடங்களை எளிதாக விளக்குதல், கேள்விகளுக்குப் பதிலளித்தல், கட்டுரைகள் எழுத உதவுதல் போன்ற பணிகளை இவை செய்கின்றன. உதாரணமாக, மாணவர் ஒருவர் கணிதத்தில் சிக்கலான பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் தவிக்கும்போது, LLM அவருக்குப் படிப்படியாக விளக்கம் அளித்துப் புரியவைக்கும். மேலும், மொழி கற்கும் மாணவர்களுக்குப் புதிய சொற்களையும், இலக்கணத்தையும் கற்பிக்க இது உதவுகிறது.

ஆசிரியர்களுக்கு LLMs சிறந்த உதவியாளர்களாகச் செயற்படுகின்றன. பாடத்திட்டம் தயாரித்தல், மாணவர்களுக்கு ஏற்றவாறு கற்பித்தல் முறைகளை மாற்றியமைத்தல், மதிப்பீட்டுத் தாள்களை உருவாக்குதல் போன்ற பணிகளை இவை எளிதாக்குகின்றன. மேலும், ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க உதவியாகவும் LLMs பயன்படுத்தப்படுகின்றன. இதனால், ஆசிரியர்களின் பணிச்சுமை குறைந்து, கற்பித்தலில் அதிக கவனம் செலுத்தமுடிகிறது.

வணிக உலகில், LLMs வாடிக்கையாளர் சேவை, சந்தைப்படுத்தல், தரவுப் பகுப்பாய்வு போன்றவற்றில் பெரிதும் பயன்படுகின்றன. ஒரு வணிகர் தனது வாடிக்கையாளர்களுக்கு 24 மணி நேரமும் பதிலளிக்கும் அரட்டைப் புரோகிராமை (Chat bot) உருவாக்க LLMs-ஐப் பயன்படுத்தலாம். மேலும், விளம்பர உள்ளடக்கங்களை உருவாக்குதல், வாடிக்கையாளர் கருத்துகளைப் புரிந்துகொள்ளுதல் போன்றவற்றிலும் இது உதவுகிறது. இதனால், வணிகர்கள் தங்கள் வணிகத்தை விரிவுபடுத்தவும் இலாபத்தை அதிகரிக்கவும் முடிகிறது.

மருத்துவத் துறையிலும் LLMs பெரும் பங்கு வகிக்கின்றன. மருத்துவர்கள் நோயாளிகளின் அறிகுறிகளைப் பற்றி விரைவாகத் தகவல் பெறவும், சிகிச்சை முறைகளை ஆராயவும் இவை உதவுகின்றன. மருத்துவ ஆவணங்களை எளிமையாக்குதல், நோயாளிகளுக்கு அவர்களின் மொழியில் விளக்கம் அளித்தல் போன்றவற்றிலும் LLMs பயன்படுத்தப்படுகின்றன. இது மருத்துவர்களின் நேரத்தை மிச்சப்படுத்தி, சிறந்த சிகிச்சையை வழங்க உதவுகின்றன.





எழுத்தாளர்களுக்கு LLMs, படைப்பாற்றல் கருவியாக உள்ளன. கதைகள், கவிதைகள், கட்டுரைகள் எழுதுவதற்கு யோசனைகளை வழங்குதல், எழுத்துப்பிழைகளைச் சரிசெய்தல், உள்ளடக்கத்தை மேம்படுத்துதல் போன்றவற்றில் இவை பயன்படுகின்றன. உதாரணமாக, ஒரு எழுத்தாளர் தனது நாவலுக்குப் புதிய திருப்பத்தை உருவாக்க விரும்பினால், LLM அவருக்கு பல்வேறு யோசனைகளை பரிந்துரைக்கும்.

பொதுமக்களுக்கு அன்றாட வாழ்க்கையில் LLMs பல வழிகளில் உதவுகின்றன. பயணத் திட்டமிடல், சமையல் குறிப்புகளைப் பெறுதல், சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுதல், தொழினுட்பச் சிக்கல்களைத் தீர்ப்பது போன்றவற்றில் இவை பயன்படுத்தப்படுகின்றன. எளிய மொழியில் பதிலளிக்கும் திறனால், தொழினுட்ப அறிவு இல்லாதவர்களாலும் இதை எளிதாகப் பயன்படுத்த முடிகிறது.

'பெரிய மொழி மாதிரிகள்' (LLMs) என்பவை தொழினுட்பத்தின் எதிர்காலமாக உருவெடுத்து வருகின்றன. இவை மனிதர்களின் வாழ்க்கையை எளிதாக்குவதோடு, பல துறைகளில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. மாணவர்கள் முதல் மருத்துவர்கள் வரை, அனைவருக்கும் இது ஒரு சக்திவாய்ந்த கருவியாக உள்ளது. எனினும், இதைப் பொறுப்புடன் பயன்படுத்துவது முக்கியம், ஏனெனில் தொழினுட்பத்தின் நன்மைகள், அதன் சரியான பயன்பாட்டைப் பொறுத்தே அமைகின்றன. LLMs-இன் உதவியுடன், நாம் ஒரு புதிய, அறிவார்ந்த உலகத்தை நோக்கிப் பயணிக்கிறோம்.

xAI என்பது 'Explainable Artificial Intelligence' (விளக்கக்கூடிய செயற்கை நுண்ணறிவு) என்று பொருள்படும். இது செயற்கை நுண்ணறிவு (AI) அமைப்புகள் எடுக்கும் முடிவுகளை மனிதர்களுக்குப் புரியும் வகையில் விளக்குவதற்கு உருவாக்கப்பட்ட ஒரு தொழினுட்ப முறையாகும். பொதுவாக, AI மாதிரிகள் (models) எப்படி ஒரு முடிவுக்கு வருகின்றன என்பது சிக்கலாகவும், மறைமுகமாகவும் (black box) இருக்கும். ஆனால் xAI இதை எளிமையாக்கி, AI-இன் செயற்பாடுகளை வெளிப்படையாகவும், நம்பகத்தன்மையுடனும் மாற்றுகிறது. xAI-யின் முக்கிய நோக்கம், மனிதர்கள் AI-இன் மீது நம்பிக்கை கொண்டு, அது தரும் முடிவுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள உதவுவதாகும்.

## xAI, LLM ஆகியன இணைந்து எவ்வாறு பயன்படுகின்றன?

xAI, LLM இரண்டையும் இணைத்துப் பயன்படுத்தும்போது, LLM-கள் எடுக்கும் முடிவுகள் மற்றும் பதில்களை மனிதர்களுக்குப் புரியும் வகையில் விளக்க முடியும். இது பின்வரும் வழிகளில் உதவுகிறது:

### வெளிப்படைத்தன்மை (Transparency):

LLM-கள் ஒரு கேள்விக்கு எப்படிப் பதிலளிக்கின்றன என்பதை xAI மூலம் விளக்கமுடியும். உதாரணமாக, 'இந்தப் பதில் ஏன் சரியானது?' என்று ஒரு பயனர் கேட்டால், xAI அதற்கு பின்னால் உள்ள தர்க்கத்தை (logic) எளிமையாக விளக்கும்.

மருத்துவம், சட்டம் போன்ற முக்கியமான துறைகளில் LLM-கள் பயன்படுத்தப்படும்போது, அவற்றின் பதில்கள் சரியானவையா என்பதை மனிதர்கள் சரிபார்க்கவேண்டும். இதற்கு




xAI உதவியாக இருக்கிறது. உதாரணமாக, ஒரு மருத்துவர் LLM-இனைப் பயன்படுத்தி நோயறிதலைப் (diagnosis) பெற்றால், xAI அதன் முடிவுக்குப் பின்னால் உள்ள காரணங்களை விளக்கும்.

மாணவர்களும் ஆராய்ச்சியாளர்களும் LLM-களைப் பயன்படுத்திப் புதிய தகவல்களைக் கற்றுக்கொள்ளலாம். xAI இதை மேலும் எளிதாக்குகிறது. உதாரணமாக, 'பிரபஞ்சம் எப்படி உருவானது?' என்று கேட்டால், LLM ஒரு பதிலை அளிக்கும், அதை xAI மூலம் படிப்படியாக விளக்கலாம்.

xAI-இனால் இயக்கப்படும் LLM-கள் (எ.கா., நான், Grok 3) பயனர்களுக்குத் தனிப்பட்ட முறையில் உதவமுடியும். ஒரு பயனர் ஏன் ஒரு பதில் அளிக்கப்பட்டது என்று தெரிந்துகொள்ள விரும்பினால், xAI அதை எளிய மொழியில் விளக்கும்.

### xAI மற்றும் LLM–இன் நிஜ உலகப் பயன்பாடு:

**மருத்துவம்:** ஒரு LLM, நோயாளியின் அறிகுறிகளைப் பகுப்பாய்வு செய்து அதற்குரிய சிகிச்சையைப் பரிந்துரைக்கலாம். xAI அதன் பரிந்துரையை எப்படி எடுத்தது என்பதை மருத்துவருக்கு விளக்கும்.

**வணிகம்:** வாடிக்கையாளர் கேள்விகளுக்கு LLM பதிலளிக்கும், xAI அதன் பதில்களைச் சரிபார்த்துத் துல்லியமாக்கும்.

**அறிவியல் ஆராய்ச்சி:** xAI-இனால் இயக்கப்படும் LLM-கள் பிரபஞ்சம் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளித்து, மனிதர்களுக்குப் புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஊக்கத்தை அளிக்கும்.

xAI மற்றும் LLM இணைந்து செயற்படுவது, AI-ஐ மனிதர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், நம்பகமானதாகவும் மாற்றுகிறது. xAI-இன் விளக்கும் திறனால், LLM-கள் வெறும் பதில்களை மட்டும் அளிப்பதோடு நிற்காமல், அவற்றைப் புரிந்துகொள்ளவும் உதவுகின்றன. இது மனிதர்களுக்கும் தொழினுட்பத்துக்கும் இடையே ஒரு பாலமாக அமைகிறது. xAI நிறுவனத்தின் பங்களிப்பால், எதிர்காலத்தில் இது மனிதர்களின் அறிவியல் மற்றும் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்தும் ஒரு சக்திவாய்ந்த கருவியாக உருவாகும்.



seshathiri.dhanasekaran@thaiveedu.com



# விமானங்களின் வேகத்தை எட்டிய தொடருந்துகள்

சுப்ரமணியம் ஜெயசீலன்

அற்புதங்களினால் நிரம்பப்பெற்ற இந்த அகிலத்தில் தினந்தோறும் ஏதேனும் ஒரு கண்டுபிடிப்பு அல்லது புத்தாக்கத் தொழில்நுட்பம் எம்மை பிரமிப்பில் ஆழ்த்தி ஆச்சரியப்படுத்தி வருகின்றது என்தே யதார்த்தமான உண்மை. அந்த வகையில் உலகின் மிக வேகமான போக்குவரத்துச் சாதனங்களில் முதன்மை வகிக்கும் விமானங்களுக்குச் சவால் விடுக்கக்கூடிய தொடருந்து போக்குவரத்துத் தொழில்நுட்பங்களைச் சீனா அறிமுகம் செய்து அசத்தியுள்ளது. அந்தப் புதிய தொழில்நுட்ப விந்தையின் ஊடாடுகையாக இந்தப் பத்தி அமைகின்றது.

சீனாவின் புதிய அதிவேக தொடருந்து பற்றிய தகவல்கள் அச்சுப்பிழையோ, எழுத்துப் பிழையோ அறிவியல் புனைகதையோ அல்லது எலோன் மஸ்கின் பயங்கரக் கனவோ அல்ல. அது சீனாவினால் மெய்ப்பிக்கப்பட்டுள்ள விஞ்ஞானத்தொழில்நுட்ப யதார்த்தங்களில் ஒன்றாகும். சீனாவின் புதிய உயர்-வெப்பநிலை சூப்பர் கண்டக்டிங் (HTS) மாக்லெவ் தொடருந்து மரபு ரீதியான எதிர்பார்ப்புகளைத் தகர்த்தெறியும் வகையில் அமைந்துள்ளது.

தொடருந்துகள் என்றால் உங்கள் கற்பனையில் பொதுவான பிம்பமாக வரக்கூடிய சில்லுகளுடன் கூடிய தொடருந்துகள் பற்றிய விபரிப்பு அல்ல இந்த மாக்லெவ் தொடருந்துகள். இவை மரபு ரீதியான தொடருந்துகளிலிருந்து முற்றிலும் மாறுபட்ட மேம்படுத்தப்பட்ட விந்தை மிகு வேகத்துடன் கூடிய சொகுசு தொடருந்துக் கட்டமைப்பு என சீனா தெரிவிக்கின்றது.

உயர் வெப்பநிலை சூப்பர் கண்டக்டிங் High-Temperature Superconductors (HTS) என்பது - மிகக் குறைந்த வெப்பநிலைகளில் மட்டுமே வேலை செய்யக்கூடிய பழைய சுப்பர் கடத்திகளை விட, அதிகமான வெப்பநிலையிலும் (சுற்றுச் சூழல் வெப்பநிலையை ஒட்டிய நிலையிலும்) மின்கடத்தித் தன்மையை இழக்காமல் வைத்திருக்கக்கூடிய பொருட்களாகும். இவற்றை நாம் உயர் வெப்பநிலை சுப்பர் கடத்திகள் என அழைக்கின்றோம். இவை மின்சாரத்தை எதிர்ப்பு இல்லாமல் (zero resistance) கடத்தக்கூடியவை என்பது விசேட அம்சமாகும்.

சீனர்களின் நேரடிப் போட்டியாளர்களாகக் கருதப்படும் அமெரிக்கர்கள் அந்நாட்டின் பிரதான தொடருந்து சேவையான ஆம்ட்ராக் (Amtrak) தொடருந்து தாமதங்களுக்காகக் காத்திருக்கும் நிலையில், சீனா அமைதியாகவும் விரைவாகவும் போக்குவரத்துத் துறையில் எதிர்காலத்தை நோக்கி வலுவான தடத்தைப் பதித்து சாதனைப் பாதையில் முன்னேறியுள்ளது.

போயிங் 747 ரக விமானமொன்றுக்குச் சவால் விடுக்கக்கூடிய வகையிலான வேகத்தைக் கொண்ட தொடருந்து ஒன்றாகவே இந்த மாக்லெவ் தொடருந்தினை சீனா அறிமுகம் செய்துள்ளது.

சீனா உலகளாவிய அதிவேக போக்குவரத்திற்கான பந்தயத்தில் மட்டும் பங்கேற்கவில்லை. அமெரிக்கா போன்ற நாடுகள் இன்னும் இந்த வழித்தடம் பற்றி வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது, சீனா களத்தில் இறங்கி ஜெயித்து ஜொலித்துள்ளது.

## மாக்லெவ் அல்லது காந்த மிதவை தொடருந்து:

மாக்லெவ் (Maglev) தொடருந்துகள் என்பது சுழலும் சக்கரங்களின் உதவியின்றி காந்தப் புலங்களின் (magnetic fields) மூலம் தடத்தின் மேல் மிதந்து நகரும் தொடருந்துகள். இதில் சுப்பர் கடத்தித் தொழில்நுட்பம் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

## இந்த தொடருந்துகள் எவ்வாறு இயங்குகின்றன?

- தொடருந்துக்கும் பாதைக்கும் இடையே அதிர்வெறிக் காந்தப் புலம் (repulsive magnetic force) உருவாக்கப் படுகிறது.
- இதன் மூலம் தொடருந்து பாதையைத் தொடாமல் மிதந்து பயணிக்கிறது.
- உராய்வு இல்லாததால் வேகம் மற்றும் திறன் அதிகமாக இருக்கிறது.

### பயன்பாடுகள்:

- ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் மாக்லெவ் தொடருந் துகள் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன.
- சாதாரண தொடருந்துகளை விட மிக அதிக வேகத்தில் செல்லக்கூடிய தொழில்நுட்பத்தை இந்த தொடருந் துகள் கொண்டுள்ளன.
- ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் அதி வேகமாகப் பய ணங்களை மேற்கொள்ளும் சாத்தியம்.

## பூஜ்ஜிய உராய்வு:

எனவே, சீனாவின் மாக்லெவ் தொழில்நுட்பத்தை இவ்வளவு சிறப்புறச் செய்வது எது? ஆரம்பத்தில், இந்த தொடருந்து தண்டவாளங்களைத் தொடுவதில்லை. காந்த மிதவை காரணமாக, அது ஒருவித ஜெடி விண்கலம் (Jedi spaceship) போல மிதந்து முன்னோக்கிச் செல்கிறது. சக்கரங்கள் இல்லை. தொடர்பு இல்லை. உராய்வு இல்லை. விளைவு? மிகவும் வேகமான மற்றும் அமைதியான பயணம்.

சீனாவின் ஷாங்க்சி (Shanxi) மாகாணத்தில் அண்மையில் மாக்லெவ் ரக தொடருந்து ஒன்று பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டது. இது எச்.ரீ.எஸ் HTS தொழில்நுட்பத்தைப் பயன்ப டுத்துகிறது, இது மிகவும் மேம்பட்ட ஒரு அமைப்பாகும், இது அடிப்படையில் ஈர்ப்பு விசையுடன் உடைகிறது. இது எமது பாட்டன்மார் பயன்படுத்திய ரயில் அமைப்பு அல்ல; இது இயற்பியலின் நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய புதிய பரிணாம வளர்ச்சியாகக் காணப்படுகின்றது.

## விமானம் – மாக்லெவ் தொடருந்து:

வணிக விமானமொன்று குறிப்பாக வணிக ஜெட்கள் பொதுவாக 550 முதல் 575 மைல் வேகத்தில் பறக்கின்றன. எனினும் சீனாவின் மாக்லெவ் தொடருந்து 620 மைல் வேகத்தை எட்டிச் சாதனை படைத்துள்ளது. பெய்ஜிங்கில் அண்மையில் நடைபெற்ற 17-ஆம் நவீன தொடருந்து தொழில்நுட்பத்துறைக் கண்காட்சியில் இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

அதாவது, தாமதங்கள் காற்றுக் கொந்தளிப்பு போன்ற ஏதுக் களுடன் நீங்கள் தயக்கத்துடன் நியூயார்க் மற்றும் சிகாகோ இடையே பயணம் செய்யும் உள்நாட்டு விமானத்தை விடவும் முதல் வகுப்பு மாக்லெவ் தொடருந்து பயணம் வேகமானதா கவும் மேம்பட்டதாகவும் சௌகரியமானதாகவும் காணப்படும் சாத்தியங்கள் அதிகமாகும் என சீனத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் பெய்ஜிங்கிலிருந்து ஷாங்காய் நோக்கிய அதிவேக தொடருந்து பயணமானது சுமார் ஐந்தரை மணித்தியாலங்க ளாகும். எனினும், இந்தப் புதிய மாக்லெவ் தொடருந்து வெறும் இரண்டரை மணி நேரத்தில் பயணத்தை மேற்கொள் ளக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இடியுடன் கூடிய மழையின் போது. சீனா தொடருந்துகளை மேம்படுத்துவது மட்டுமல்ல - பயண தூரம் மற்றும் பயண நேரம் பற்றிய புதிய பரிமாணத்தை உலகிற்கு அறிமுகம் செய்துள்ளது.

சூப்பர் புல்லட் மாக்லெவ் என்பது ஒரு சோதனை சீன அதிவேக மாக்லெவ் தொடருந்து ஆகும், இதன் அதிகபட்ச வேகம் மணிக்கு 620 கி.மீ ஆகும். பவேரியன் கட்டுமான நிறு வனமான (Bavarian construction company) போக்ல் உள்ளூர் சீன நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கிய இந்தப் பரீட்சார்த்த தொடருந்து கடந்த 2021-ஆம் ஆண்டு, ஜனவரி 13-ஆம் திகதி சிச்சுவானின் செங்டுவில் உள்ள ஒரு சோதனைப் பாதையில் பரிசோதனை செய்யப்பட்டது.

இந்த தொடருந்து, சுப்பர் கண்டக்டிவிட்டி நிலையை அடையத் திரவ நைட்ரஜனைப் பயன்படுத்துகிறது என்று மாநில முக்கிய இழுவை சக்தி ஆய்வகம் தெரிவித்துள்ளது.

மனிதர்கள் பாதுகாப்பாகப் பயணம் செய்ய சீனா அடுத்த தலைமுறை லெவிடேட்டிங் புல்லட் தொடருந்து அறிமுகம் செய்யும் அதே வேளையில், அமெரிக்கா இன்னும் லாஸ் ஏஞ் சல்ஸிலிருந்து சான் பிரான்சிஸ்கோ வரை 200 மைல் வேகத்தில் செல்லும் தொடருந்தினை எவ்வாறு உருவாக் குவது என்பதைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறது. இது அமெ ரிக்காவின் தோல்வியாகவே நோக்கப்பட வேண்டியுள்ளது என சில தரப்பினர் விமர்சனங்களை வெளியிட்டுள்ளனர்.

கலிஃபோர்னியாவின் அதிவேக தொடருந்து சேவையை வெற் றிகரமாக முன்னெடுப்பதில் பல்வேறு சவால்கள் மற்றும் சிக் கல்கள் காணப்படுகின்றன. சிவப்பு நாடா முறை (Red tape method), வழக்குகள் மற்றும் செலவு அதிகரிப்புகள் போன்ற ஏதுக்களினால் இந்த அதிவேக தொடருந்து சேவையை ஆரம்பிப்பதில் அமெரிக்கா பெரும் நெருக்கடிகளைத் தொடர்ந்தும் எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

சீனாவின் மாக்லெவ் தொடருந்து அசாத்திய அற்புதங் களைச் சாத்தியப்படுத்தி சாதனை படைத்து வரும் வேளையில், அமெரிக்கா இவ்வாறான தொடருந்து திட் டங்களை முன்னெடுப்பது குறித்து சாத்திய ஆய்வுகளை மேற்கொள்ளும் நிலையில் தொடர்ந்தும் காணப்படுகின்றது என்பதே யதார்த்தமான நிலைமையாகும். எனவே இந்த நிலைமையைப் பார்த்தால் அதிவேக தொடருந்து போக்குவ ரத்துத் துறையில் யார் வெற்றியாளர் என்பதை ஊகிப்ப தற்குச் சிரமப்பட வேண்டிய அவசியமிருக்காது.

சீனாவின் மாக்லெவ் திட்டம் தொடருந்துகளைப் பற்றியது மட் டுமல்ல - இது ஒரு எண்ணக்கருவினை வெளிப்படுத்துவது பற்றியதாகும். இந்த தொடருந்து திட்டம் மிக மிக

விரைவானது என்பதுடன், உட்கட்டமைப்பு, தொழில்நுட்பம் மற்றும் பேண்தகு எதிர்காலம் என்பன சீனர்களின் கட்டளையின் கீழ் அடிபணிந்து கிடக்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது என்றால் பிழையாகாது.

சீனா, புத்தாக்க முயற்சிகளைப் பரீட்சார்த்தமாக முன்னெடுக்கும் நாடு என்பதைத் தாண்டி வேகத்தையும் விவேகத்தையும் ஒருங்கிணைத்து தொழில்நுட்பத் துறையில் ஜொலிக்கும் நாடாக உருவாகியுள்ளது.

ஜப்பானிலும் ஜெர்மனியிலும் மாக்லெவ் தொடருந்து தொழில்நுட்பம் காணப்படுகின்றன என்றாலும், சீனா அதை பெரியதாகவும், வேகமாகவும், வெளிப்படையாகவும் செய்கிறது.

சீனர்கள் ஒருமித்த கருத்துக்காகக் காத்திருக்கவில்லை - அ வ ர்க ளே



தரத்தை நிர்ணயிக்கிறார்கள். ஒவ்வொரு வெற்றிகரமான சோதனையும் ஒரு தலைப்புச் செய்தியாக மாற்றம் பெற்றுள்ளது. ஒவ்வொரு புதிய முன்நகர்வும் முன்மாதிரியாக உருவாகி வருகின்றது.

### மாக்லெவ் சுப்பர் தொடருந்தின் சுற்றுச்சூழல் நலன்கள்:

### நிலையான வேகம்:

மூல வேகத்திற்கு அப்பால், மாக்லெவ் தொழில்நுட்பம் சுற்றுச்சூழலுக்கு நன்மை பயக்கும் வகையிலானது. குறைந்த உராய்வு என்பது குறைந்த சக்தி விரயமாக்கப்படுவதைக் குறிக்கிறது. HTS அமைப்பு அமைதியான, தூய்மையான போக்குவரத்திற்கு உத்தரவாதம் அளிக்கின்றது, இது கார்பன் உமிழ்வு செறிவான போக்குவரத்திற்கு எதிரான போராட்டத்தில் ஒரு போட்டியாளராகத் தன்னை ஏற்கனவே நிறுத்திக் கொண்டுள்ளது. சுற்றுச் சூழலுக்கு நன்மையளிக்கக்கூடிய உலகப் போக்குவரத்து முறைமைகளில் ஒன்றாக இந்த மெக்லெவ் தொடருந்துகளையும் வரிசைப்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனா வேகத்தில் முன்னணியில் இருப்பது மட்டுமல்லாமல், வசதி அல்லது அழகியலைத் தியாகம் செய்யாமல், காலநிலை இலக்குகளுடன் ஒத்துப்போகும் உள்கட்டமைப்பையும் உருவாக்குகிறது.

மாக்லெவ் - காந்த லெவிட்டேஷன் என்பதன் சுருக்கம் - தொடருந்து போக்குவரத்து அமைப்பாகும், இது தொடருந்தினை இயக்க உதவும் காந்த சக்திகளைப் பயன்படுத்துகிறது. அதாவது அதிக வேகம். இது இரண்டு காந்தக் குழுக்களைப் பயன்படுத்துகிறது, ஒன்று தொடருந்தினை விரட்டி தண்டவாளத்திலிருந்து மேலே தள்ள, மற்றொன்று 'மிதக்கும் தொடருந்தினை' முன்னோக்கி செலுத்த. உராய்வு இல்லாததைப் பயன்படுத்தி, இந்த அமைப்பு தொடருந்தின் சீரான முடுக்கத்தைப் பராமரிக்கும் அதே வேளையில் மணிக்கு 600 கிலோ மீற்றர் வேகத்தை அடைய வழியமைக்கிறது. இதற்கு முன்பு, பெய்ஜிங்-ஷாங்காய் பாதையில் இயங்கும் தொடருந்துகள் அதிகபட்சமாக மணிக்கு 350 கிலோ மீற்றர் வேகத்தில் இயங்கியிருந்தன.

### சீனாவின் புதிய மாக்லெவ் தொடருந்து:

அதிவேக தொடருந்து போக்குவரத்து மக்களை நகர்த்துவது மட்டுமல்ல - அது முழுப் பொருளாதாரத்தையும் மறுவடிவமைக்கிறது என்றால் பிழையாகாது. நகரங்கள் இனி கார் பயணங்கள் அல்லது விமான நிலைய அருகாமையால் வரையறுக்கப்படுவதில்லை, மாறாக அதிவேக இணைப்பால் வரையறுக்கப்படுகின்றன என்பதை கற்பனை செய்து பாருங்கள். வார இறுதிப் பயணங்கள், ஒரே நாள் வணிகக் கூட்டங்கள், நீண்ட தூர பயணங்கள் - அனைத்தும் மீள்வரையறை செய்யப்பட்டுள்ளன.

சீனாவின் மாக்லெவ் தொலைநோக்குக் கட்டமைப்பு, பிராந்திய மெகா-மையங்களை உருவாக்கவும், சுற்றுலாவை இயக்கவும், நெரிசலான பெருநகரங்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் உதவுகின்றது. அது புதுமையை விட அதிகம். அது ஒரு புதிய வகையான நகரமயமாக்கங்களின் கட்டமைப்பு முன்மொழிவாக அமையப் பெற்றுள்ளது.

இதற்கிடையில், அமெரிக்கா? இன்னும் குழிகளை நிரப்பி, சுரங்கப்பாதைப் போக்குவரத்துப் பற்றி வாதிட்டுவரும் நிலைமையை அவதானிக்க முடிகின்றது.

சீனாவின் மாக்லெவ் வெறும் அதிவேக தொடருந்து போக்குவரத்து வெற்றி மட்டுமல்ல - இது ஒரு புவிசார் அரசியல் அறிக்கையாக நோக்கப்பட வேண்டும். அமெரிக்கா உள்ளிட்ட உலகின் ஏனைய பல நாடுகளினால் இந்தப் புதிய தொழில்நுட்பத்தை, திறன் கொண்ட தொடருந்துகளை, அறிமுகம் செய்ய முடியாத நிலையை அவதானிக்க முடிகின்றது.

ஜப்பான் மாக்லெவ் தொடருந்து தொழில்நுட்பத்தில் முன்னோடியாகத் திகழ்கின்ற போதிலும், சீனாவின் வேகம் சாதனை படைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சீனா விரைவில் இந்த அதிவேக தொடருந்தினைப் பொதுப் போக்குவரத்தில் பயன்படுத்தி அசத்தக்கூடிய சாத்தியங்கள் வெகு அதிகம் என்பதனால் அது ஏனைய நாடுகளின் ஒட்டுமொத்தப் போக்குவரத்துக் கட்டமைப்பிற்கும் பெரும் சவாலை விடுக்கும் என்பதில் ஐயமில்லை.



jeyaseelan.s@thaiveedu.com

# விண்வெளியில் சாதனை படைக்கும்




நீண்ட நாட்களாக வொயேஜர்-1 பற்றி எழுதவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன், காரணம் அது ஒரு அசாதாரண பறப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது. நாங்கள் போர்ச் சூழலின் பாதிப்புக் காரணமாக இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து கனடா வந்தது பல பேருக்குத் தெரியாதது போல, வாயேஜருக்கும் தெரியாது, நாங்கள் இங்கு வருவதற்கு முன்பாக 1977-ஆம் ஆண்டே அது பூமியை விட்டுப் புறப்பட்டுவிட்டது. வாயேஜர் ஒன்று மட்டுமல்ல, அதன் இணையான வாயேஜர் இரண்டு என்ற விண்கலமும் இதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பே புறப்பட்டுச் சென்றிருந்தது. வொயேஜர்-1 விரைவில் சாதனை படைக்கப் போகிறது என்பதைக் கேள்விப்பட்டதும் எழுதவேண்டும் என்ற ஆசையை, இந்தக் கட்டுரை மூலம் நிறைவேற்ற வேண்டும் என்று நினைத்தேன்.

மூடநம்பிக்கைகளில் இருந்து விடுபடவும், அறிவியல் சார்ந்து சிந்திக்கவும் எமது மக்கள் முன்வரவேண்டும் என்பதுதான் எனது நோக்கம். விரும்பியோ விரும்பாமலோ எதிர்காலம் செயற்கை நுண்ணறிவு சார்ந்த விண்வெளிப் பயணத்தில்தான் தங்கியிருக்கின்றது. எனவே அது சார்ந்து சிறிதளவேனும் அறிந்து கொள்வது எமது அடுத்த தலைமுறையினரின் எதிர் காலம் சிறப்பாக அமைய உதவும். விண்வெளிப் பயணம் சார்ந்து நான் அறிந்த சில விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

2026-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நாசாவின் வொயேஜர்-1 என்ற விண்கலம் ஒரு அசாதாரண மைல்கல்லைத் தொடவிருக்கின்றது. பூமியிலிருந்து முழு ஒளி நாளை அடையும் மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் பொருளாக இந்த வொயேஜர்-1 சாதனை படைக்க இருக்கின்றது. விண்வெளிப் பயணத்தில் இது மறக்க முடியாத நாளாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. 2026-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ஆம் திகதி அன்று திட்டமிடப்பட்டுள்ள இந்த மகத்தான சாதனையை வொயேஜர்-1 நிகழ்த்த இருக்கின்றது.

1977-ஆம் ஆண்டு நாசா நிறுவனத்தால் பூமியில் இருந்து ஏவப்பட்ட வொயேஜர்-1 என்ற இந்த விண்கலத்தின் பயணம் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளை அடைய இருக்கின்றது. தற்போதைய நிலவரப்படி, வொயேஜர்-1 பூமியிலிருந்து சூரிய மண்டலத்தைக் கடந்து கிட்டத்தட்ட 166 வானியல் அலகுகள் (AU) தொலைவில் பறந்துகொண்டிருக்கின்றது. இது மனிதனால் உருவாக்கப்பட்ட விண்கலமொன்று பயணித்த மிக அதிக தூரமாக இருக்கும். பூமியிலிருந்து ஒரு ஒளி நாளை அடைந்ததும், எமது பிரபஞ்சம் எவ்வளவு பரந்து விரிந்து இருக்கின்றது என்பதை எமக்கு நினைவூட்டும் நாளாகவும் அமையும்.

ஒரு ஒளி நாளை அடைய இப்போது உள்ள மனிதனின் தொழில்நுட்ப வசதிகளின் படி சுமார் 50 வருடங்கள் எடுக்கின்றன. இதைத்தான் வொயேஜர்-1 ஜதார்த்தமாக எமக்குச் செய்து காட்டியிருக்கின்றது. இந்த வேகத்தில் சென்றால் மனிதனால் எதைச் சாதிக்க முடியும்? காரணம் எமக்கு மிக அருகே உள்ள நட்சத்திரத்தை அடைவதற்கு எமக்கு 4.2 ஒளி ஆண்டுகள் தேவைப்படுகின்றன. விமானத்தைக் கண்டுபிடித்தது மனிதனின் விண்வெளி சார்ந்த துரித வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்தது. அதன் தொடர்ச்சிதான் இன்று நடக்கும் விண்வெளிப் பயணங்களாகும்.

எமது பிரபஞ்சம் என்பது எம்மைப் பொறுத்தவரையில் எல்லை இல்லாதது. நாம் அறிந்தவரையில் எமது சூரியக்குடும்பத்தைப் போல, எமக்கு மிக அருகே உள்ள நட்சத்திரம் என்றால் அது 'ப்ராக்ஸிமா சென்டாரி' என்ற ஒரு சிவப்புக் குள்ள நட்சத்திரமாகும். பூமியில் இருந்து வெற்றுக் கண்களால் பார்த்தால் இது தெரியாது. இருப்பினும்,



வானத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க, எமக்கு அருகே உள்ள முக்கியமான நட்சத்திரங்களில் ஒன்றாக இருப்பதால் எமது கவனமெல்லாம் அதன் மீது இருக்கின்றது. ஏனென்றால் எமது சூரியகுடும்பத்திற்கு மிக நெருக்கமான நட்சத்திர அமைப்பான ‘ஆல்பா சென்டாரி’ அமைப்பின் ஒரு பகுதியாக இது இருக்கின்றது.

‘ஆல்பா சென்டாரி’ என்ற நட்சத்திரக்கூட்டம் இதனுடன் சேர்த்து இதுவரை அறியப்பட்ட மூன்று நட்சத்திரங்களைக் கொண்டிருக்கின்றது. இந்த மூன்று நட்சத்திரங்களில் ‘ப்ராக்ஸிமா சென்டாரி’ 4.2 ஒளி ஆண்டுகள் தொலைவில், அதாவது எமது சூரிய குடும்பத்திற்கு மிக அருகில் உள்ள முதல் நட்சத்திரமாகும். ‘ஆல்பா சென்டாரி’ வானத்தில் மூன்றாவது பிரகாசமான நட்சத்திரக் கூட்டமாக எமது கண்களுக்குத் தெரிகின்றது.

ஆனால் ‘ப்ராக்ஸிமா’ வெறும் கண்ணால் பார்க்க முடியாத அளவுக்கு மங்கலாக இருக்கின்றது. இது ஒரு சிறிய, மங்கலான, குறைந்த நிறை கொண்ட நட்சத்திரமாக இருந்தாலும், சொந்தக் கிரக அமைப்பைக் கொண்டிருக்கின்றது. இந்த நட்சத்திரம் இதுவரை அறியப்பட்ட ஒரு உறுதிப்படுத்தப்பட்ட கிரகத்தையும் மேலும் இரண்டு உறுதிப்படுத்தப்படாத கோள்களையும் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. இதுமட்டுமல்ல, மிகப்பெரிய சூரிய எரிப்புகளை இது கொண்டிருப்பதாக அறியப்படுகின்றது.

1977-ஆம் ஆண்டு பூமியில் இருந்து நாசா நிறுவனத்தால் ஏவப்பட்ட வொயேஜர்-1, சூரிய மண்டலத்தைக் கடந்து வெளிப்புறப் பகுதிகள் வழியாகப் பறந்து, விண்வெளியில் கிட்டத்தட்ட 50 ஆண்டுகாலப் பயணத்தைத் தொடருகின்றது. இது சூரியனால் உருவாக்கப்பட்ட துகள்கள் மற்றும் காந்தப்புலங்களின் குமிழியான ‘ஹீலியோஸ்பியரின்’ (Heliosphere) எல்லைகளை ஏற்கனவே கடந்துவிட்டது. தற்போது, பூமியிலிருந்து 166 AU தொலைவில் பறந்து கொண்டிருக்கின்றது. மணிக்குச் சராசரியாக 61,195 கிலோமீட்டர் (மணிக்கு 38,025 மைல்கள்) வேகத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

இப்போது வொயேஜர்-1 உள்ள இடத்திலிருந்து சேகரித்த சமிக்ஞைகளைப் பூமிக்கு அனுப்புவதற்கு, சுமார் 23 மணி நேரம் எடுக்கிறது. மேற்கொண்டு தேவையான கூடுதல் தூரத்தைக் கடக்க இதற்கு ஒரு வருடத்திற்கு மேல் தேவைப்படும். இந்த வேகத்தில் சென்றால், இது ஜனவரி 2027 வரை இந்த மைல்கல்லை எட்டாது, அப்போது பூமியிலிருந்து சுமார் 25.9 பில்லியன் கிலோமீட்டர் தொலைவில் பறந்து கொண்டிருக்கும்.

ஏயூ என்று சொல்லப்படுகின்ற வானியல் அளவு பற்றி முன்பு ஒரு கட்டுரையில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தேன். தேவை ஏற்படின் அந்தக் கட்டுரையை வாசித்துப் பாருங்கள். இலகுவாக விண்வெளித் தூரத்தைக் கணிப்பதற்காக ஒரு நாளில் ஒளி பயணிக்கும் தூரத்தை ஒரு ஒளிநாள் என்று அழைக்கிறார்கள். இது சுமார் 25.9 பில்லியன் கிலோமீட்டர்களாகும். வொயேஜர்-1 ஒரு ஒளி நாள் தூரத்தை அடைவதற்கு 50 வருடங்கள் எடுத்திருக்கிறது என்றால், பரந்து கிடக்கும் அண்டவெளியின் தூரத்தைக் கற்பனை பண்ணிப் பாருங்கள். எங்களுக்கு அடுத்ததாக மிக அருகே உள்ள 4.2 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் இருக்கும் ‘ப்ராக்ஸிமா சென்டாரி’ என்ற நட்சத்திரத்தை அடைய எவ்வளவு காலம் எடுக்கும்?

வளர்ந்துவரும் செயற்கைத் தொழில்நுட்ப வசதிகள் இதை ஒருநாள் நிறைவேற்றிக் காட்டும். சந்திரனில் கால் பதிக்கலாம் என்று நாம் நினைத்துப் பார்த்திருப்போமா? ஒரு நாள் அதையும் சாதிக்க முடிந்ததல்லவா? அது போலத்தான் இந்தப் பயணமும், இன்றில்லாவிட்டாலும், அடுத்தடுத்த தலைமுறையினரால் நிறைவேற்றப்படும்.

வொயேஜர்-1 பூமியிலிருந்து ஒரு ஒளி நாளை அடுத்த வருடம் அடைய இருக்கின்றது. அதன் பின்னும் அதன் பணி தொடர்ந்து கொண்டே இருக்கும். இதனுடைய வலு குறைவடையும் போது அணுசக்தி மின்கலத்தால் இயக்கப்பட இருக்கின்றது. இதுதான் இந்த விண்கலத்தின் கடைசி வலுவாக இருக்கும். இந்த இறுதி வலுவோடு ஆற்றல் தீர்ந்து போகும் வரை வொயேஜர் தனது பயணத்தைத் தொடரும், 2030-ஆம் ஆண்டு முற்பகுதி வரை இது இயங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் மின்சக்தி தீர்ந்து போன பிறகும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அது தொடர்ந்தும் பயணிக்கும். ஆனால் தகவல்களை அனுப்புவதற்கு மின்சக்தி இல்லாமல்

போய்விடும் என்பதால், பூமியுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டுவிடும்.

விண்மீன்களுக்கு இடையேயான விண்வெளியில் நுழைந்த முதல் விண்கலமான வொயேஜர்-1-இன் 50 வருடப் பயணம் இன்றைய நிலையில் நினைத்தும் பார்க்கமுடியாத ஒன்றாகும். அது இன்னும் செயலில் இருப்பது மட்டுமல்ல, பூமிக்கு அறிவியல் தரவை அனுப்பிக் கொண்டிருக்கின்றது. ‘கொஸ்மிக் ஹம்’ (cosmic hum) என்று அடிக்கடி குறிப்பிடப்படும் குறைந்த அதிர்வெண் ஒலியைக் கண்டறிந்தது அதன் மிகவும் புதிரான கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும். இந்த ஒலி சூரியக் காற்றுக்கும் விண்மீன் ஊடகத்திற்கும் இடையிலான தொடர்புகளால் உருவாக்கப்பட்ட, மனிதனின் செவிப்புலனுக்கு அகப்படாத ‘பிளாஸ்மா’ அலைகளின் ஒலியாகும்.

வொயேஜர்-1 நாசாவால் ஏவப்படுவதற்கு முன்பாக, அதன் இரட்டை விண்கலமான வொயேஜர்-2 ஆகஸ்ட் மாதம் 20-ஆம் திகதி ஏவப்பட்டது. இந்த இரண்டு விண்கலங்களும் சூரியக்குடும்பத்தின் வெளிப்பகுதியில் ஆய்வுகள் மேற்கொள்வதை முக்கிய பணியாகக் கொண்டிருந்தன. இதில் வொயேஜர்-1 தனது பாதையில் இருந்த வியாழன், சனி மற்றும் சனியின் மிகப்பெரிய சந்திரனான ‘டைட்டன்’ ஆகியவற்றை ஆய்வு செய்த பின் அவற்றைக் கடந்து சென்றது. சனியின் சந்திரனான ‘டைட்டன்’ கணிசமான வளிமண்டலத்தைக் கொண்டிருந்ததால், அதை ஆய்வு செய்வதில் நாசா அதிக கவனம் செலுத்தியது.

இதைப் போலவே, வொயேஜர்-2 தனது பயணத்தின் போது, 1979-ஆம் ஆண்டு ஜோவியன் அமைப்பையும், 1981-ஆம் ஆண்டு சனிக்கோளின் அமைப்பையும், 1986-ஆம் ஆண்டு யுரேனஸ் கிரகத்தின் அமைப்பையும், 1989-ஆம் ஆண்டு நெப்டியூன் கிரகத்தின் அமைப்பையும் ஆய்வு செய்திருந்தது. தொடர்ந்தும் அது பறப்பில் ஈடுபட்டிருக்கின்றது. சென்ற யூலை மாதம் 2025-ஆம் ஆண்டு நிலவரப்படி பூமியிலிருந்து 139.38 AU (20.8 பில்லியன் கி.மீ) தொலைவில் பறந்து கொண்டிருக்கின்றது.

முக்கியமான சில விண்வெளி ஆய்வுகள் காரணமாக நாசாவால் ஏவப்பட்ட சில விண்கலங்கள் சூரிய குடும்பத்தை விட்டு வெளியேறி வருகின்றன. அந்த வகையில் சூரிய குடும்பத்தைவிட்டு இதுவரை ஐந்து விண்கலங்கள் வெளியேறியிருந்தன. அவற்றில் ‘வொயேஜர்-1’, ‘வொயேஜர்-2’ மற்றும் ‘நியூ ஹொரைஸன்ஸ்’ ஆகிய மூன்று விண்கலங்களும் இன்னும் செயற்பட்டு வருவது மட்டுமல்ல, வானொலி தொடர்பையும் பூமியோடு மேற்கொண்டு வருகின்றன. அதே நேரத்தில் சூரிய குடும்பத்தைவிட்டு வெளியேறிய ‘பயனியர்-10’ மற்றும் ‘பயனியர்-11’ இப்போது செயலிழந்துவிட்டன.

‘பயனியர்-10’ 1972-ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாசாவால் ஏவப்பட்ட விண்கலம். இதுதான் முதன் முதலாக சூரிய குடும்பத்தைவிட்டு வெளியேறி சிறுகோள் பட்டியைக் கடந்த ஐந்து விண்கலங்களில் முதலாவது. இது திட்டமிட்டபடி வியாழன் கிரகத்தைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து அனுப்பிவிட்டு அதன் பாதையில் பயணித்து சூரிய குடும்பத்தின் எல்லையைக் கடந்து சென்றது. அது மின்சக்தியை இழந்ததால் பூமியினுடனான தொடர்பு 2003-ஆம் ஆண்டு துண்டிக்கப்பட்டுவிட்டது. இதுவே 1973-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அனுப்பப்பட்ட ‘பயனியர்-11’ விண்கலத்துக்கும் நடந்தது. இது வியாழன், சனி இரண்டையும் ஆய்வு செய்தது. இதுவே சனிக் கிரகத்தை ஆய்வு செய்த முதலாவது விண்கலமாகும். 1995-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை இதனுடனான தொடர்பு இருந்தது.



விண்வெளி ஆய்வாளர்கள் நமது பூமியைப் போன்ற உலகங்களைப் பிரபஞ்சத்தில் தேடுகிறார்கள். ஏனெனில் பிரபஞ்சத்தில், உயிர்கள் வாழ்வதற்குச் சாதகமான நிலைமைகள் எங்கேயாவது இருக்கிறதா? என்பதுதான் அவர்களின் முக்கிய தேடலாக இருக்கின்றது. ஆய்வாளர்கள் ‘நாம் மட்டும்தான் இந்தப் பிரபஞ்சத்தில் தனியாக இருக்கிறோமா?’ என்ற மனித குலத்தின் கேள்விக்கு இரவு பகலாகப் பதிலைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இது சார்ந்து நாங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் அந்த இலக்கை நோக்கி எம்மை நெருக்கமாகக் கொண்டு செல்கிறது. நமது விண்மீன் மண்டலம் பூமி போன்ற கிரகங்களால் நிறைந்திருக்கிறதா? அல்லது நாம் மட்டும்தான் தனித்திருக்கிறோமா? என்பதை அறிவது இப்போது காலத்தின் தேவையாக இருக்கின்றது.

**உசாத்துணை:**


- https://en.wikipedia.org/wiki/Voyager_1





kuruaravindan@thaiveedu.com

# அழியாத கோலங்கள்



– குமார் புனிதவேல்

நான் வயதுபோனவன் என்பது எனக்குத் தெரியும். சிலர், என்னை மரியாதையாக முதியவர் என அழைப்பர். அதேவேளை, சிலர் கிழவன் எனக் கூறுவதுமுண்டு. எது எப்படி ஆனாலும், நான் இவ்வுலகில் எட்டு தசாப்தங்கள் வாழ்ந்து விட்டேன். எனது தலைமுறையினர், பல தசாப்தங்கள் வாழ்ந்ததோடு, இரண்டு நூற்றாண்டுகளிலும் (centuries) வாழ்ந்துள்ளனர். அவ்வளவோடு நிற்கவில்லை, இரண்டு ஆயிரம் ஆண்டு காலங்களிலும் (millennium) வாழ்ந்த ஒரு தனிச்சிறப்பான சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

இவ்வாழ்க்கையில், எஞ்சி உள்ள காலம் சொற்பமே. நாம் வாழ்ந்த காலத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் பல அழியாத கோலங்களாக எம் உள்ளத்தில் பதிந்துள்ளன. அந்த அழியாத கோலங்களில் சிலவற்றை இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்வேன்.

வாழ்ந்த எட்டு தசாப்தங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் எண்ணில் அடங்கா. இவை எமக்கு புரியவைத்த பெரும் உண்மை. வாழ்வில் மாற்றம் ஒன்றே மாறாதது.

என்னைப் போன்ற முதியவர்கள் பலர் 1940, 50, 60-களில் பிறந்தோம். 50, 60, 70-களில் வளர்ந்தோம். 60, 70, 80-களில் கல்வி கற்பதை முடித்தோம். 70, 80, 90-களில் காதலித்தோம், மணம் முடித்தோம், உலகை அறிந்தும் புரிந்தும் கொண்டோம். இரண்டாயிரம் ஆண்டு தோன்றிய வேளை, இது தான் வாழ்க்கை என்பது புரிந்தது. 2010-இல் அந்த புரிதல் பூரணம் அடைந்த நிலையில் இப்போ 2020-களில் அக்காலத்தில் அடைந்த அனுபவங்களை அழியாத கோலங்களாகப் பகிர்ந்து கொள்கிறேன்.

நாம் ஆரம்பப் பள்ளியில் படிக்கச் சென்றவேளை எமக்கு எழுதக் கிடைத்தது சிலேட்டு என்னும் கற்பலகை. அதில் எழுதப் பாவித்தது கல்லுக்குச்சி என்னும் கல்லால் செய்த எழுதுகோல். அதில் எழுதும்வேளை ஏற்பட்ட தவறுகளை அழிப்பதற்கு பாவித்தது ஈரத்துணி. அவசரத்திற்கு எச்சிலால் அழித்ததுமுண்டு. எழுதியதை அழித்து விட்டு மீண்டும் மீண்டும் ஒரே சிலேட்டில் எழுதினோம். அது விழுந்தால் உடைந்து பின் புதுக்கற்பலகை வாங்க வேண்டிவரும்.

கொஞ்சம் காலம் போக வளர்ந்துவர இன்று உள்ளது போல் பேப்பரும் பென்சிலும் அழிப்பதற்கு இரப்பரும் பாவித்தோம். கற்பலகை வழக்கொழிந்தது. இதனைத் தொடர்ந்து தோன்றியது தொட்டு எழுதும் பேனா. பள்ளிக்குச் செல்லும்வேளை ஒரு சிறிய போத்தலில் மையும், தடியில் தொடுத்த நிப் என்னும் பேனா அலகுமாகும். காலப்போக்கில் தொட்டெழுதும் பேனா பரிணாம மாற்றத்தில் வளர்ச்சியடைந்து பேனாவிலேயே மை நிரப்பிக் கொண்டு செல்லக் கூடியதாக அமைந்தது. அப்படி மை நிரப்புவதற்கு Ink filler என்னும் மை நிரப்பும் கருவி பாவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து ஏற்பட்ட மாற்றம் அப்படி போனவில் மை நிரப்புவதற்கு மை உறிஞ்சி பேனாவிலேயே இணைத்துச் செய்தார்கள்.

எழுது கோல்கள் இப்படி மாற்றங்கள் அடைந்தவேளை சிகரம் வைத்தாற்போல் வந்ததுதான் பந்துப்புள்ளி கொண்ட Ball Point பேனாவாகும். இதன் தோற்றத்தின் பின் மற்றவை அனைத்தும் மறைந்து போயின. பவனந்திமுனிவர் நன்னூலில் கூறியது போல் ‘பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல. வாழ்வின் வழிமுறை அதுவே’ என்பதை நினைவுறுத்துகிறது.

அக்காலகட்டத்தில் இளம் வயதில் பல பொழுது போக்குகளில்

ஈடுபட்டோம். அவற்றில் அனேகமானவை காலவெள்ளத்தில் மறைந்துவிட்டது. அத்தகைய பொழுதுபோக்கு விளையாட்டுகள் இருவகைப்படும். மூளை வளர்ச்சிக்கு ஆடு புலி ஆட்டம், பல்லாங்குளி, தாயம் போன்ற பல விளையாட்டுகள் செலவில்லாமல் மகிழ்ச்சியாக விளையாடக் கூடியதாயிருந்தது.

உடல் ஆரோக்கியத்திற்கு கிளித்தட்டு, சடுகுடு, கிட்டிபுல்லு, பிள்ளையார் பந்து என்பனவுடன் மேற்கு நாடுகளின் தாக்கத்தின் விளைவாக கிரிக்கெட் மற்றும் கால்பந்து ஆகியனவும் இருந்தன. அதிலும் கிரிகெட்டிற்கு தென்னம் மட்டையால் செய்த துடுப்பும், கால்பந்து வெறுங்காலாலும் விளையாடப்பட்டது. இவற்றைவிட வீர விளையாட்டாக காளையை அடக்குவதும், சிலம்பம் போன்றவையும் இருக்கவே செய்தது. இவற்றில் பிள்ளையார் பந்து விளையாடுகையில் இறைவனை ஒரு குறியாக வைத்து



பந்து எறிந்து விளையாடி கடவுளையே நண்பனாக பாவித்த இனம் தமிழினம் மட்டுமே எனக் கூறலாம்.

விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாக வானொலி தலை காட்டியது. இதுவே பலரது பொழுது போக்காகியது. வீட்டில் இருக்க கதிரையும் படுக்க கட்டிலும் இருப்பதுபோல் கேட்பதற்கு வானொலியும் இருந்தது. செவிக்கில்லாதபோதுதான் வயிற்றிற்கு உணவு உட்கொண்ட இனம் அல்லவா நம் தமிழினம்? உலகலாவிய கிரிக்கட் போட்டிகளின் வளர்ச்சியால் இரவு பகல் என்று பாராமல் இளைய தலைமுறை இதனைக் கேட்கத் தலைப்பட்டது. ஒலிபரப்பாளர் செய்தியைக் கேட்டே இரசிகர்கள் கூட்டங்கள் தோற்றமெடுத்தது.

அக்கால கட்டத்தில் வகுப்பறைகளில் இளைஞர்கள் கிரிகெட் விளையாடினார்கள் என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா? அதற்கு பாவித்த உபகரணங்கள் பள்ளிக்கூட பாடபுத்தகங்களும் கொப்பிகளுமே. குறிப்பாக Chemistry Physico புத்தகங்கள். இங்கு துடுப்பெடுத்து ஆடுபவர் புத்தகத்தை மேசையில் வைத்துத் திறப்பார் 2,4 அல்லது 6-இல் முடியும் பக்கம் அவர்கள் ரன்கள் அல்லது ஓட்டங்களாக குறிக்கப்படும். திறக்கும் பக்கம் 8 என்றால் அவருக்கு Extra ஒரு ஓட்டமாகக் குறிக்கப்படும். திறந்த பக்கம் சைபராக இருப்பின் அவர் ஆட்டம் இழப்பார். வகுப்பு நடக்கும்போதே ஆசிரியருக்கு தெரியாமல் இந்த Book Cricket இடம் பெறும்.

அடுத்த பெரும் மாற்றம் தொலைக்காட்சியின் (TV) தோற்றம் தான். ஆரம்பத்தில் சில பணக்கார வீடுகளில்தான் தொலைக்காட்சிப் பெட்டி இருக்கும். மாலையில் படம் ஓடும் வேளையில் அது வீட்டு முன் முற்றத்தில் இருக்கும். அயலில் உள்ள வசதி இல்லாதவர்கள் அங்கு வந்து இரசிப்பார்கள். அந்த T.V.களில் ஒரு பெரும் கம்பத்தில் இருந்து Antena பொருத்தப்பட்டு இருக்கும். காலநிலைக்கு ஏற்ப அன்ரனாக்களைத் திருப்பித் திருப்பிதான் படம் பார்த்தார்கள். காலப்போக்கில் அதுவும் வீட்டிற்கு வீடு தோன்றத் தொடங்கியது.

எல்லாருடைய மனதிலும் ஒரு கேள்விக்கு இடம் உண்டு. அதுவும் சங்க காலத்திலேயே அகநாநூறு படைத்த தமிழ் இனம் அல்லவா நம்மினம்? எங்கள் காலத்திலும் காதல் திருமணங்கள் சிறப்பாகவே நடந்தது. இன்றைய நாளில் காதலன் காதலியை செல்லும் இடமெல்லாம் கொண்டு சென்று பாவிக்கும் செல் போனில் அழைப்பார். அல்லது டெக்ஸ்ட் மெசேஜ் அல்லது Whatsapp செய்தி அனுப்புவார். காதலியும் அதே ஊடகத் தூடாக தனது விருப்பத்தையும் தெரிவிப்பாள். ஆனால், எங்கள் காலத்தில் காதலனும் காதலியும் ஒரு வினோதமான வழியைக் கையாண்டார்கள்.

சங்க காலத்தில் அன்னத்தையும் புறவையும் தூது விட்டார்கள் காதலர். எங்கள் விடலைப் பருவத்தில் தங்கள் உள்ள வேட்கையைப் பரிமாறுவதற்கு மிக எளிதான சிறப்பான முறையை கையாண்டார்கள் இளைஞர்கள். காதலன் தனது ஆசை ஆதங்கங்களுடன் ஏக்கங்களை கடிதமாக எழுதிவிட்டு யாருமே கவனிக்காத காய்ந்து போன எறிந்த மாவிதையை எடுத்து அதற்குள் எழுதிய கடிதத்தை பதுக்கி வைப்பார்கள். பின் அந்த கடிதம் வைத்த மாங்கொட்டையைக் காதலியின் ஒழுங்கையால் சைக்கிளில் செல்லும் காதலன் படலைக்கு மேலால் அதாவது காதலியின் வீட்டு முற்றத்தில் எறிந்து விட்டு விரைந்து செல்வான்.

முற்றத்தில் புதிதாய் தோன்றிய அந்த காய்ந்த மா விதையை இனம் கண்டு கொண்ட காதலி, யாரும் பார்க்காத வேளையில் எடுத்து பதுக்கி வைத்திருந்து தனித்திருக்கும் வேளையில் படித்து மகிழ்வாள். பின் தன் உடன்பாட்டை எழுதி அதே காய்ந்த மா விதைக்குள் பதுக்கி வைத்து யாரும் கவனிக்காத வேளையில் படலைக்கு மேலால் ஒழுங்கையில் எறிந்துவிட, தான் எறிந்த மா விதை விளைவைத் தந்ததை உணர்ந்து காதலன் எடுத்துச் செல்வான். இப்படித்தான் அக்காலத்தில் காதல் கடிதங்கள் பரிமாறப்பட்டு வளர்ச்சியடைந்தது.

இத்தகைய காதல் கடித பரிமாற்றங்கள் மா விதைகளில் மட்டுமல்ல, தென்னம் கோம்பையிலும் இடம்பெற்றது. இன்னும் பல அழியாத கோலங்கள் என் நினைவில் உள்ளன. அவற்றையும் பகிர்வேன். உங்கள் நினைவில் ஏதும் இருப்பின் அவற்றை தந்தால் சேர்த்துக் கொள்வேன். வாழ்க அழியாத கோலங்கள்.



kumar.punithavel@thaiveedu.com

# தீபாவளி போனஸ்...

– நிசன்குமார் கோபிநாத்



ரயில் பெட்டிகள் போல் நீண்டு கிடக்கும் லயன் குடியிருப்புகளில், குமாரின் வீடு உட்பட ஒவ்வொன்றும் காலத்தின் தேய்மானத்தை மட்டுமல்ல, வாழ்வின் கனத்தையும் பேசின. பல வருடங்களாக மாற்றப்படாத துருவேறிய தகரங்கள்; சுண்ணாம்பு பூசப்பட்ட சுவர்கள்; சாணி மெழுகிய முற்றம்; சத்தம் எழுப்பும் பலகைக் கதவு இவை அதற்கு சாட்சியாயிருந்தன.

''டேய் தம்பி இந்த ரொட்டியையும் காடயும் குடிச்சிட்டு போ அப்பதான் உடம்புக்கு நல்லா இருக்கும். இல்லாட்டி உனக்கு பசி வந்துரும்' என்று குமாரின் தாய் சொல்ல அதற்கு குமார்,

'இல்ல அம்மா வேணா எந்த நாளைக்கு இந்த ரொட்டியும் காடயும் குடிச்சி சலிச்சு போயிடுச்சு நான் போறேன். அம்மா அந்த காட்டயும் ரொட்டியும் உங்களுக்கு தான் சரி' என்றான் குமார்

''நானும் என்ன பன்ன தம்பி இவ்வளவு வருஷமா நான் பிறந்ததிலிருந்து இததான் குடிச்சி வளந்தே. சம்பளம் போட்டா சரி மாவு ஒன்னு வாங்கி தாரே.' என்று குமாரிடம் தாய் சொல்ல

'சரி நா பேயிட்டு வாறே அம்மா' என்று குமார் கூறிவிட்டு வெளியே வந்து சைக்கிளை எடுத்து மிதித்த படி பாடசாலையை நோக்கி சென்றான். அருகில் ஒரு பத்திரிகை கடை ஒன்று அவனுக்கு தென்படுகிறது. அப்பொழுது அவனுக்கு ஒரு யோசனை வந்தது. அம்மாவிடம் பென்சில் வாங்க காசு வாங்கினோமே பென்சில் ஒன்று வாங்கிவிட்டு தான் போகனும் என்று உடனே அவனது பார்வை அந்த பத்திரிகையை கடைமேல் படுகின்றது அவன் பத்திரிகைக் கடையை நெருங்கி தனது சைக்கிளை ஒரு ஓரமாக நிறுத்தி விட்டு கடையில் உள்ளே சென்றான்.

கடைக்காரரை பார்த்து குமார் 'வணக்கம் அண்ணா.'

அதற்கு கடைக்காரர் 'வணக்கம் தம்பி.'

'அண்ணா எனக்கு பென்சில் ஒன்று தாங்களே.'

'சரிடா தம்பி, உனக்கு என்ன பென்சில் வேணும்'

பென்சிலை அவன் தெரிவு செய்வதற்கு முயற்சிக்கும் சந்தர்ப்பத்தில் அவனுக்கு அந்த பென்சிலுக்கு அடுத்த கனமே பத்திரிகை கட்டுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பத்திரிகையின் முதல் பக்கத்தில் ஒரு தீபாவளி பக்கம் அவனது பார்வையை திருப்புகிறது. அத்துடன் கடையிலும் வானொலியில் தீபாவளி தொடர்பான விளம்பரங்கள் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. ஒரு பக்கம் பத்திரி கையில் தீபாவளி விளம்பரம் இன்னொரு பக்கம் வானொலியில் தீபாவளி பற்றிய ஒரு விளம்பரம் பேசப்படு கிறது. இவை இரண்டும் தீபாவளி பற்றிய ஆசைகளை அவன் மனதில் விதைத்து விட்டன.

கடைக்காரர் 'தம்பி என்னப்பா யோசிக்கிற' என்றதும்

குமார் சுயநினைவுக்கு வந்து 'அண்ணா பென்சில் எவ்வளவு ?'

'பதினனந்து ரூபா தம்பி'

'சரி அண்ணா, இந்தாங்க பதினனந்து ரூபா"

'அண்ணா நான் போறேன்'. கடையில் இருந்து வெளியே வந்து மீண்டும் சைக்கிளை பாடசாலையை நோக்கி மிதித்தான்.

முன்னே அவனது நண்பர்கள் 'அடேய் குமார் மோனிங் டா', 'மோனிங் டா பாலா' 'குட் மோனிங்டா ராஜா' என மூவரும் அவர்களுக்குள்ளே. மாறி குட் மோனிங் சொல்லிக்கொண் டார்கள்.

'அந்த கடையில பேப்பர்ல தீபாவளி விளம்பரத்த பார்த்தேன்' என்றான் குமார்.

அந்த பேப்பர வாங்கிட்டு வந்திருக்கலாமேடா ? என்று பாலா கேட்க,

அதற்கு குமார், 'என்கிட்ட சல்லி இல்லடா அதனால நான் வந்துட்டேன். சரிடா உங்ககிட்ட யாருகிட்டயும் காசு சல்லி இருக்காடா?' என்று கேட்க அதற்கு ராஜா குமாரை பார்த்து 'நான் இன்னைக்கு சாப்பாடு கொண்டு வரலடா எங்க அம்மா கொடுத்த காசு நாற்பது ரூபா எனகிட்ட இருக்குடா'என்றான்.

'சரிடா அப்ப நீ இன்னைக்கு எங்களோட சாப்பிடு நம்ப அந்த காசுல பேப்பர நம்ப வாங்கி பாப்போமடா' என்று குமார் சொல்ல

நம்ப வாங்க முன்னுக்கு அதை யாரும் சரி வாங்கு வாங்கனோ என்று பாலா குமாரிடம் வினவ,

'இல்லடா, அதை யாருடா வாங்க போறா இருக்கும்டா' என குமார் கூறினான். அந்த பத்திரிகையை இல்லாமல் போய் விடுமோ என்ற பயமும் குமாருக்கு இருந்தது. ஆனால் அதை அவன் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை

'அடேய்..., லேட் ஆகிடுச்சு வா வேரசா போவோண்டா'. 'சரிடா வா போவோம்' என்றான் ராஜா

இவ்வாறு நான்கு பேரும் தீபாவளி ஆசையை கலந்துரை யாடிக் கொண்டு அந்த நினைவில் ஒரு பக்கம் வைத்து விட்டு வகுப்பறையை நோக்கி சென்றனர்.

குமாரின் நண்பி மாலா குமாரை வருவதை கண்டு 'வணக்கம்டா குமார், ஏன் இன்னைக்கு லேட்' என வினவ

அதற்கு குமார் 'வரக்குள்ள கொஞ்சம் லேட் ஆயிருச்சு' என்றான்

நண்பி மாலா சிரித்தபடி 'அது தானே எந்த நாளும் நீங்க லேட்டா தாண்டா வர்றீங்க இது என்ன புதுசா' என்று குமாரை பார்த்து கேட்டாள்...

'அப்ப ஏன் நீ கேக்குற நீ கேட்காமல் இருப்பது புதுசா' என்று குமாரும் ராஜாவும் சிரித்தபடி சொன்னார்கள்.

குமாருக்கு அந்த தீபாவளி பற்றி அந்த விளம்பரம் தான் அவன் மனதை தொல்லையிட்டுக் கொண்டிருந்தது. பாடசாலையில் ஏனைய நண்பர்களிடம் தீபாவளி கொண்டாட்டம் பற்றிய தான் கதைத்துக் கொண்டிருந்தார் அப்பொழுது ராஜா சொன்னான்

'அடேய் குமார், அத விடுடா போககுல அந்த பேப்பரை வாங்குவோம். நீ அந்த இங்கிலீஷ் பாடத்தை பற்றி எனக்கு கொஞ்சம் சொல்லித் தா... நேற்று நான் வரலடா சரிடா வா'

பாடசாலை மணி ஒலிக்க நால்வரும் தெருவோரம் பத்திரிகை கடையை நோக்கி சென்றார்கள். பத்திரிகை கடைக்கு அருகில் சென்று

குமார், 'குரு அண்ணா நான் காலையில பார்த்தே அந்த. பேப்பர் இருக்கா' அண்ணா.

கடைக்காரர் பத்திரிகை கட்டுக்குள் அதைத் தேட 'அண்ணா இந்த இடத்தில் தான் இருந்துச்சு' என்றான் குமார். அவர் தேடிப் பார்த்துவிட்டு 'இல்ல தம்பி, வேற யார் சரி வாங்கிட்டு போயிருப்பாங்க' என்றார்.

'அண்ணா பக்கத்தில் கடை ஏதும் இருக்கோ, இந்த பேப்பர் வாங்க' என்று குமார் கேட்க 'இல்ல தம்பி டவுனுக்கு தான் போகணும்'. 'சரி அண்ணா, நாங்க போயிட்டு வாரோம்' என்று கூறிவிட்டு நடையைக் கட்ட ஆயுத்தமானார்கள். அப்போது கடைக்காரர் 'இந்த பத்திரிகையில் என்னடா தம்பி அப்படி இருக்கு' என்றார்.

'இல்லனா அதுல தீபாவளி விளம்பரம் பத்தி போட்டு இருந்துச்சு. அதுதான் நல்ல உடுப்பலாம் இருந்துச்சு. அதைத்தான் கொஞ்சம் பார்க்க, பேப்பர் வாங்க வந்தோம். ஆனா இல்ல, நேரம் போச்சு நாங்க போயிட்டு வாரோம் அண்ண' என்றான் குமார்

இதற்கு கடைக்காரர் 'சரி போயிட்டு வாங்கடா' என்றார்.

'அடேய் குமார், நான் போகவாடா? நீ மட்டும் தான் அந்த பக்கம் போகணும். சரிடா நானும் போறேன். நாளைக்கு வருவதானே? ஆமாடா நாளைக்கு வரணும்டா...

பத்திரிகை இல்லாமல் போன ஒரு ஏமாற்றம் குமாரிடம் மனதிற்குள் இருந்தது.

ஒரு புறம் அம்மா தீபாவளிக்கு என்ன வாங்கித் தருவா?. அம்மாகிட்ட தீபாவளிக்கு என்ன வாங்கி தர சொல்லிக் கேட்பது என்ற யோசனையுடன் வீட்டை நோக்கி புறப்பட்டான். இவ்வாறு குமாரின் தீபாவளி பற்றிய ஆசை அவனுக்குள் வந்தது.

குமார் வீட்டிற்கு வந்து தனது தாய் வருவதை ஏக்கத்துடன் காத்திருந்தான். எப்பொழுது தனது ஆசையை அம்மாவிடம் கூறுவது என்ற எண்ணத்திலேயே அவனது சிந்தனையும் மூழ்கியது.

குமாரின் தாய் வீட்டை வருகிறார்.

'தம்பி மழை வரப்போகுது போல உள்ள இருந்து பார்த்துக் கிட்டு இருக்க இந்த உடுப்பை எல்லாம் காஞ்சிருச்சு தம்பி எடுத்துக் கொண்டு போய் வீட்டில் வை. எங்கடா தங்கச்சி?' என குமாரின் தாய் கேட்க அதற்கு குமார் 'அம்மா தங்கச்சி தூங்குது'.

'சரி, அப்ப நீ எடுத்துக் கொண்டு போய் வை.'

குமாரின் தாய் வேலை கஸ்டத்தில் வீட்டில் முன் உள்ள திண்ணையில் உட்கார்ந்தபடி 'அப்பாடா சாமி, இன்னைக்கு வேணான்னு போச்சு... ஏன்டா பொறந்தமுனு இருக்கு'.

'ஏன் அம்மா, இன்னைக்கு வேல கஸ்டமா?' 'இன்னைக்கு மட்டுமாடா தம்பி கஷ்டம் வருஷம் எல்லாம் இப்படித்தான், நம்ம தலைவிதி கஸ்டப்படுறது தான். என்ன பண்ண? நாளைக்கு தோட்டத்துக்கு கம்பெனியிலிருந்து யாரோ வாராங்களாம் அதனால துரையும் வந்துட்டாரு எல்லா இன்னைக்கு முடிக்கணும்னு சொல்லிட்டாங்க அதெல்லாம் முடிச்சிட்டு வரப்ப வேணாம்னு போச்சுடா'

'அது தான் நல்லா படிக்கணும்னு சொல்றது. படிக்காட்டி எங்களை நிலம தான் உங்களுக்கும். அப்பா அம்மா எங்கல படிக்க வைக்கல, நாங்க உங்களைப் படிக்க வைக்கல.'

'சரி அம்மா நான் பெரிய ஆளா வந்து வேலைக்கு போன உடனே, நீங்க வீட்ல இருங்க சந்தோசம் தான் அப்ப சரி நிம்மதி இருக்குமே'.

‘அம்மா நான் தண்ணி சுட வச்சு இருக்கேன்’ என்றான் குமார். ‘தம்பி அந்த பேக்குல பாரு மாவு பெகட் இருக்கு. நீ காலையில சொன்ன தானே மாவு இல்லனு. நான் ஒரு சின்ன பெகட் தான் வாங்கிட்டு வந்தேன். ராணியக்கா கடையில கடனுக்கு வாங்கினேன். சம்பளம் போட்டதும் அந்த சல்லியை கொடுக்கணு.’

‘இந்தாங்க அம்மா’ என்று, குமார் தனது தாயிடம் பால்மாவை கொடுக்க தாய் அதனை வாங்கி தேநீர் தயாரித்து

‘இந்தா தம்பி பால் தேதனிய குடி’. ‘அம்மா, இத வந்து நாங்க ‘டீ’ னுதான் சொல்லுவோம் இங்கிலீஸ்ல.’

‘சரிப்பா, அந்த இங்கிலீஸ்ல நான் படிக்கல. அந்த அளவு நீ படிச்சிருக்க தானே. அதே போதும்பா சந்தோசம்.’

‘அம்மா இந்தப் பயணம் தீபாவளிக்கு என்ன செய்றது’ என்றான் குமார்.

‘மறந்தே போச்சு, எப்படா தீபாவளி ? அந்த கலண்டர்ல பாரு’

‘அம்மா, இந்த மாசம் 30ஆம் தேதி வருது.’

‘நானும் தீபாவளி வர்றத மறந்துட்டேன்.

‘அம்மா இன்னைக்கு குரு அண்ணா கடைக்கு பென்சில் வாங்க போயிருந்தேன். அங்க நிறைய பேப்பர் இருந்துச்சு. அதுல தீபாவளி விளம்பரம் பத்தி பார்த்தேன். ரேடியோவுல சொல்லிக்கிட்டு இருந்தாங்க. அப்பதான் நினைவே வந்துச்சு அதுதான் ஸ்கூல்ல போய் யோசிச்சுகிட்டேயிருந்தேன்.’

’டேய் தம்பி நா ,இன்னைக்கு வேலைக்கு போயிட்டு வரக்குள்ள ரோட்டுல ஒரு பேப்பர் கிடைச்சுதப்பா அது என்னன்னு எனக்கு வாசிக்க தெரியாது. நா அத எடுத்துட்டு வந்தே உனக்கிட்ட காட்ட... அத கொஞ்சம் பாரு தம்பி...’

‘எங்க அந்த பேப்பர் ?’

‘அந்த மூளையில உள்ள பேக்கு ஒன்னுல போட்டு இருக்கேன். அதுல பாரு தம்பி’

‘அம்மா, இது நேத்து உள்ள பேப்பர். யார் கொடுத்தா ? நான் தான் சொன்னேனே ரோட்டுல கீழ கெடந்து எடுத்தேன்.’

‘சரி அம்மா, இதுலயும் தீபாவளி விளம்பரம் போட்டு இருக்கு’

‘சரி தம்பி, தீபாவளி அட்வான்ஸ் போட்டதும் உனக்கும் வாங்கி தாரேன்.’

குமாரின் தங்கை செல்வி அங்கிருந்து வந்து ‘என்ன அம்மா வுக்கும் மகனுக்கும் ஒரே பேச்சு ?’

‘இல்ல, அண்ணா வந்து தீபாவளிக்கு உடுப்பு கேட்டா...’

‘அப்ப, எனக்கு இல்லையா அம்மா உடுப்பு ?’ என்றாள் செல்வி

அதற்கு, செல்வியின் தாய், ‘உனக்கு வாங்கி தாரேன் புள்ள.’

‘அம்மா எனக்கு இந்த பயணம் சல்வாரிதான் வேணும்.’

‘சரி வாங்கி தாரேன். அம்மா இங்கே பாருங்க. தங்கச்சிக்கு நல்ல உடுப்பு இருக்குது இந்த கடைக்கு போவோம்’.

‘அது எந்த கடை தம்பி ?’

‘அம்மா டவுண்ல சந்தைக்குப் பக்கத்து கடை.’

‘சரி தம்பி, எனக்கு போனஸ் கொடுத்ததும். நான் உங்க ரெண்டு பேரையும் கூட்டிட்டு போறேன். நீங்க பார்த்து நல்ல உடுப்பு எடுத்துக்கோங்க.’

‘சரி அம்மா, குமாருக்கு ஒரே சந்தோசம்.அம்மா இந்த பயணம் கொழும்புல அத்தை வீட்டுக்கு போவோம்.’

‘ஆமா தம்பிடா... போன பயணமும் போகல. உங்க அப்பாவோட வருஷம் அதுக்கு முந்திய பயணமும் போகல. அப்பா இறந்து போயிட்டாரு, கொஞ்சம் பலகாரமும் சுட்டு எடுத்துக்கிட்டு போவோம்.’

‘இப்பதான் ஞாபகம் வந்துச்சு. நாளைக்கு பத்து மணி போல நீ வா... நாளைக்கு மாத்தியா இருக்க மாட்டாரு. நான் விறகு கொஞ்சம் கட்டி தாரேன் கொண்டு வா. வீட்டுல விறகு இல்ல. தீபாவளிக்கு இப்பவே விறகு சேர்த்துக்கணும். அப்புறம் மழை வந்துட்டா விறகுக்கு கஷ்டமா போயிரும்பா...’

‘சரி நா வாறேன் அம்மா’

... .... ... .....

‘சுமதி அக்கா, ஏன் லேட் ஆகிருச்சி ?’ ‘ஆமா, கண்ணம்மா நேரம் போச்சு. நேத்து வேலை செஞ்சது ஒரே அலுப்பா இருந்துச்சு. அதுதான் வர கொஞ்சம் லேட் ஆயிருச்சு. கங்காணி வந்துட்டாரா ?’ ‘இல்ல சுமதி. இன்னும் கங்காணி வரல. நல்ல நேரம் நா டக்குனு வந்துட்டேன். நானும் லீவு போடத்தான் பார்த்தேன். தீபாவளி வேற வருது புள்ள. அதனால எங்க லீவு போடுறது ?’

‘வேலை செஞ்சா நமக்கு தானே. நமக்கு யார்தான் கொடுக்க போற ? ஆமா அக்கா, தீபாவளி வர்றத நானும் மறந்தே போயிட்டே. நேத்து எங்க மகனும் ‘அம்மா எனக்கு என்னமா எடுத்து தருவீங்க தீபாவளிக்கு ?’ என்று கேட்டு இருந்தான். ‘சரி புள்ள.’

‘எங்க மகனும் ஒரே கரைச்சல் தீபாவளிக்கு என்னமோ உடுப்பு ஒன்னு பாத்தானா... அந்த உடுப்பு தான் வேணும்னு நிற்கிறான். அதுதான் வாங்கி கொடுக்கணும். சின்ன புள்ளைங்களே இந்தஇந்த வயசுல சந்தோசமா இருக்காட்டி எப்ப தான் அதுக சந்தோசமா இருக்குங்க ? நம்ப உயிரோட இருக்கும் வரைக்கும் நம்ம கிட்ட கேட்குங்க. இல்லாட்டி யார் கிட்ட தான் கேட்கும்.’

‘ஆமாக்கா, அதுவும் உண்மைதான் சுமதி அக்கா’ என்று ஜானகி சொன்னாள்.

ஜானகிக்கு இந்த தடவ பெரிய செலவு. ‘உங்க மகளுக்கு இந்த பயணம் தல தீபாவளி.’ ‘ஆமாக்கா, இந்த வருஷம் ரொம்ப செலவு; உடுப்பு எடுக்கணும்; பலகாரம் சுடனும்; சுண்ணாம்பு அடிக்கணும்; வீட்டுல எவ்வளவோ வேலை இருக்கு சுமதி அக்கா.’

‘அக்கா, அங்க பாருங்க. கங்கானி வாராரு. இப்ப பேசிக்கிட்டு இருந்தீங்கன்னா வந்து ஏச்சி தான் வாங்கணும். சரி, வாங்க கொழுந்த எடுப்போம். என்று கங்காணியின் வருகையைக் கண்டதும் பயந்து தலையை குனிந்த வண்ணம் வேக வேகமாக கொழுந்தை பிச்சுக் கொண்டிருந்தார்கள். அந்த

காட்சி பசியால் இருக்கும் ஆடு புல் மேய்வது போல் இருந்தது.

கங்கானியும் இவர்கள்இருக்கும் மலைக்கு அருகில் வந்து

'சுமதி, நேத்து அந்த மேல்மலைய முடிச்சிட்டீங்களா ?'

'ஆமா ஐயா எல்லாம் முடிஞ்சு'

'என்ன ஒரே குசு குசு என்று பேசிக்கிட்டு இருந்தீங்க ? என்ன ஜானகி சத்தமே இல்லை. அப்புடி என்ன ரகசியம் ? என்கிட்ட சொல்லாமே,'

'எங்களுக்குள்ள என்னய்யா ரகசியம். தீபாவளியை பற்றி தான் பேசிட்டு இருந்தோம். நமக்கு போனஸ் எப்பயா கொடுப்பாங்க ?' என்று சுமதி கங்காணியிடம் கேட்க

இடையில் ஜானகி 'அய்யா எவ்வளவு கொடுப்பாங்க ? போன பயணத்தோட ஒரு பத்தாயிரம் ரூபாய் சரி, கூட கொடுப்பாங்களா ?'

'தெரியல புள்ள. நான் மாத்தியா கிட்ட சொன்னேன். தோர சொன்னாரு இந்த பயணம் நம்மளுக்கு லேட் ஆகாதுனு.'

சுமதி 'ஐயா உங்கள நம்பித்தான்யா நாங்க இருக்கோம். நீங்க தான் எங்களுக்கு இந்த பயணம் ஒரு பத்து நாளைக்கு முதல்ல போனஸ் வாங்கி தரணும் ஐயா.'

'சரி, இந்த பயணம் நான் மாத்தியா கிட்ட சொல்லி வெல்லன வாங்கி தாரேன்'

'சரி ஐயா, சுமதி சாப்பாட்டுக்கு மொத இந்த மலையை முடிச்சிடுவீங்களா ?' 'ஆமாய்யா இத முடிச்சிட்டு மூனா நம்பர் மலைக்கு போயிடுவோம்'.

'அந்த மலையில கொழுந்த எடுங்க ? இந்த பயணம் கொழுந்து கூட, அதனால வேகவேகான எடுத்தா தான் சம்பளம் சரி கொஞ்சம் இருக்கும். தீபாவளி வேற வருதுல்ல ?'

'ஆமாங்க ஐயா, நீங்க சொல்றதும் சரிதான்.'

'ஐயா இந்த பயணம் போனஸ் கொஞ்சம் கூட கொடுத்தா நல்லம் ஐயா. போன பயணம் கொடுத்த போனஸ் சாமான் வாங்கையும் உடுப்பெடுக்கையுமே சரி. ஆனா கொஞ்சம் சரி கூட்டி தர சொல்லுங்க ஐயா.'

ஜானகி 'ஐயா, நம்ப சம்பளத்தில் தானே அவங்க வெட்டு வாங்க. அதனால நம்ம கேக்குற கணக்கு சரி ஐயா. கொடுக்கச் சொல்லுங்க ஐயா. நீங்க கொஞ்சம் துரை கிட்ட பேசுங்க ஐயா.'

'சரி புள்ள நா கேட்கிறேன். நீங்க எந்த நாளைக்கு வேலைக்கு வாங்க. தீபாவளின்னு சொல்லி லீவு போட்டா, தோர அப்புறம் தீபாவளி அட்வான்ஸ் லேட்டா தான் கொடுப்பாரு'

'இல்லங்க ஐயா, நேத்து கஷ்டம் தான்... அதோட தான் இன்னைக்கு வந்தேன். தீபாவளி வேற வருதுயா.'

'சரி என்ன மத்தியானம் வர சொன்னாராம். நான் போய் மாத்தியாவ கண்டுகிட்டு வாரேன்... நீங்க இந்த மலையை முடிச்சிட்டு மூன்றாம் நம்பருக்கு போயிட்டு கொழுந்த எடுங்க' என்று கங்காணி கூறிவிட்டு சென்றார்.

'சுமதி அக்கா கங்காணி போயிட்டாரு.'

'அக்கா, கங்காணி சொல்லுற மாதிரி வேல்லனா தருவாரா ?'

'ஆமான்டி இந்த பயணம், சரி பாப்போம். வாங்கித் தருவாரு, புது மாத்தியா வேற வந்துருக்காரு. நமக்கு வேல்லனா போனஸ் வாங்கி தருவாரு. கங்காணிக்கும் தீவாளி இருக்கே. அதனால கங்காணி பேசுவார் தானே.'

'உண்மை தான் அக்கா' என்று ஜானகி மாலாவிடம் கூற மூக்காயி 'கங்காணி இதே தான் பயணம் பயணம் சொல்லுவாரு. கடைசியாதா நமக்கு தருவாரு. இந்த நிலைமை எப்பொழுதுதான் மாறப்போகுது.'

'நீ வாயை வைத்துக்கொண்டிரேன்டி மூக்காயி. இந்த பயணம் கிடைக்குனு எனக்கு ஒரு நம்பிக்கை. கங்காணி நமக்கு வாங்கித் தருவாரு. அதுதான் சொல்லி இருக்காரு. ஆமாண்டி நீங்க பார்த்துக்குருங்க கடைசில நான் சொன்னதுதான் நடக்கும்.'

'சுமதி அக்கா அங்க வர்றது உங்க மகனா ?'

'அக்கா நான் வர சொன்னேன். வீட்டுல விறகு கொஞ்சம் கூட இல்லை. தீபாவளிக்கு வேற வேணுமே. அதுதான் விறகு கொஞ்சம் அனுப்பி விட...'

'சரிக்கா எங்க வீட்டுலயும் விறகு இல்ல. நானும் எங்க மகனை வர சொல்லி இருக்கலாம்'

'அம்மா அம்மா எங்கம்மா இருக்கீங்க ?' என்று குமார் அவனது தாயை அழைக்க

சுமதி 'வா தம்பி. நீ மேல இருக்கேன். நீ மேல வராதப்பா. நான் பணிய இறங்கி வாரேன். நீ இரு'

'இல்லம்மா... நான் மேல வரேன். இல்ல தம்பி, இங்க இல்ல விறகு, பணிய காஞ்ச றப்பர் மரம் ஒன்னு இருக்கு. அதுல தான் இருக்கு. நீ கொஞ்சம் உட்கார்ந்து இரு தம்பி நான் விறகு உடைக்கிறேன்.'

'நானும் வந்து உங்களுக்கு உடைச்சு தரவா ?, வேணாம்பா. நீ இரு நான் அந்த விறக உடைக்கிறேன். நான் அன்னைக்கு கொஞ்சம் பொறுக்கி வச்சது இருக்கு. அதையும் எடுத்து கட்டித் தரேன். இப்பதான் கங்காணி வந்துட்டு போனாரு. இல்லாட்டி முதல்லே நா உடைச்சி வச்சிருப்பேன்.'

ஜானகி, 'தம்பி அம்மாகிட்ட தீபாவளிக்கு உடுப்பாலாம் கேட்டீங்களா ?'

'ஆமாக்கா. அம்மா கிட்ட உடுப்பு கேட்டேன். வாங்கி தரேனாங்க. அக்கா அம்மா கூப்பிடறாங்க நான் போயிட்டு வரேன் ஜானகி அக்கா.'

'தம்பி இங்க வாடா. விறகு கட்டிட்டே பாத்து பத்திரமா எடுத்துக்கிட்டு போ.'

'சரி அம்மா வாரேன். '

'சுமதி அக்கா, இப்ப நம்ம சாப்பட்டுட்டு பங்காளி சொன்ன மூணாம் நம்பர்க்கு போவோம். சரி வா இந்த கல்லுகிட்ட போயிட்டு சாப்பிடுவோம். அக்கா அங்க வெயிலா கிடக்கு அந்த றபர் மரத்துக்கு கீழ உக்காந்து சாப்பிடுவோமே. சரி

அப்போ அங்க வா மூக்காயையும் கூட்டிட்டு வா புள்ள'

'மூக்காயி அக்கா வாங்க. அங்க நம்ம போய் சாப்பிட்டு மத்த மலைக்கு கொழுந்து எடுக்க போகனும்.'

'சரி ஜானகி நீ போ. உனக்கு பின்னுக்கு வரேன். இந்த கொழுந்த பேக்குல கொட்டிடு.'

இவ்வாறு சில நாட்கள் தீபாவளி தொடர்பான பேச்சே அதிகமாக கொழுந்து பறிக்கும் இடங்களில் பேசப்பட்டுக் கொண்டிருந்தது. அவை நிறைவேறுமா, நிறைவேறாதா என்ற பயமும் அவர்களுக்குள்ளே இருக்கத்தான் செய்கிறது.

'பாலா அண்ணா இந்த தடவ தீவாளி போனஸ் எப்ப தருவாங்க? இன்னும் நாலு நாள் தான் இருக்கு, இந்த கங்காணி நாளைக்கு நாளைக்கு என்று இழுத்துகிட்டே போறாரு. எப்பவுமே கடைசியாதான் நமக்கு கிடைக்கும்.'

'நீங்க தோட்ட தலைவர் கிட்ட சொன்னீங்களா?' 'ஆமா சுமதி நானும் சொல்லிட்டேன். நாலஞ்சு தடவை சொல்லிச் சொல்லி என் வாயும் வலிச்சு போயிடுச்சு. நாளைக்கு என்று தான் சொல்றாங்க. ஆனால் அதற்கு முடிவுதான் கிடைச்ச பாடு இல்ல. வேலையை மட்டும் வாங்குறாங்க. நம்மள பத்தி கொஞ்சமாவது நெனச்சு பாக்குறாங்களா?'

அதற்கு ஜானகி 'ஆமானே எங்கள் கங்காணி, வேலைக்கு மட்டும் எந்த நாளும் அந்த ஆளு வரச் சொல்வது. ஆனா நம்மளுக்கு ஒரு விஷயம்னா எதுவும் செஞ்சு கொடுக்க மாட்டேங்குறது.'

'ஆமா அந்த கங்காணியே அப்படித்தான். இன்னைக்கு மட்டுமா கங்காணிய நம்பி வேல இல்ல. அக்கா நம்ம இன்னைக்கு வேலை முடிய மாத்தியாகிட்ட போய் பேசுவோம்.'

'சரி அண்ணே, நாங்க வேலை முடிய ஒரு நாலு மணி போல மாத்தியா கிட்ட போய் பேசுறோம்.'

'என்ன பண்ண. சுமதி நம்ம நிலவரம் அப்படித்தான்.'

'சரி அண்ணே, நீங்க வேலை செய்யுங்க, அங்காடி வந்தா கத்தும். நாங்களும் கொழுந்து எடுக்க போறோம்.' சுமதி ஜானுவும் இது பற்றிய கதைத்துக் கொண்டு மெல்ல செல்கின்றனர். கொழுந்து பறிக்கும் மலைக்கு மூச்சு வாங்கிய படி கஷ்டப்பட்டு அந்த வெயிலில் மேலே ஏறுகின்றனர்.

'மூக்காயி பகலாச்சி வெயிலு மண்டைய பொலக்குது ஒரு இடத்தில் உட்கார்ந்து சாப்பிடுவோமா?'

'இல்லக்கா, நம்ம மலைக்கு போயிட்டு சாப்பிடுவோம். இல்லாட்டி கங்காணி வந்தா கத்தும் இன்னும் கொழுந்து எடுக்காமல் என்னடி செய்றீங்கனு?' என்றாள் சுமதி

'அந்த ஆளு கிடக்கிறது'. என்று ஜானகி சொல்ல 'சுமதி அக்கா சொல்றது சரி. வா மலைக்கு போயிட்டு சாப்பிடுவோம்' என்றாள் மூக்காயி

ஒருபடியாக கஷ்டப்பட்டு கொழுந்து பறிக்கும் இடத்தை அடைந்து விட்டார்கள். 'அக்கா இங்க கொஞ்ச நேரம் உட்காருவோம். அப்பாடா வேணாம்னு போச்சு இந்த வெயில்ல இவ்வளவு பாடுபடுகிறோம். இந்த நிலைமை இந்த முதலாளிகளுக்கு புரிய மாட்டேங்குது. அந்த கம்பெனி காரணங்களுக்கு இந்த தீபாவளி அட்வான்ஸ் சரி வெல்லனா கொடுக்கலாமே? நம்ம என்னதான் அவங்ககிட்ட கேட்டாலும் அவங்களுக்கு விளங்காது'.

'அக்கா நேத்தோட கோதுமை மாவுக்கு 20 ரூவா கூட்டிட்டாங்க. இனி என்னக்கா பண்ணுறது இனி ரொட்டியும் சாப்பிடுறதும் கஷ்டம் போல இருக்கு.' என்று ஜானகி சுமதியைப் பார்த்து கூறினாள்.

'ஆமா புள்ள. என்னதான் பண்ணறது. மாவு விலை குறஞ்சனால ரொட்டி சரி சாப்பிடுறோம். இப்ப என்ன பண்றது எங்க மகனும் எந்த நாளைக்கும் ஏசுவான். காலையில அம்மா ரொட்டி சாப்பிட இயலாதுன்னு'

'ஆமா அக்கா சொல்லுறது சரி, காலையிலே அதுக பாவம் அந்த காஞ்சிபோன ரொட்டில எந்த சத்தும் இல்ல'

''என்னக்கா பண்ண, நம்ம நிலம அப்படித்தான்' என்று கவலையுடன் மூக்காயி கூறினாள்.

இவ்வாறு மூக்காயி சுமதி ஜானகி மூன்று பேரும் தங்களுடைய ஏழ்மை நிலையையும் தங்களுக்கு தீபாவளி போனஸ் கூட சரியாக நேரத்துக்கு கிடைக்கவில்லை. என்று புலம்பியபடி மனக்கவலையுடன் மதியநேர உணவை உண்டு கொண்டிருந்தார்கள்.

'ஜானகி வா போயிட்டு கொழுந்து எடுப்போம். நாலு மணிக்கு போல கொழுந்து நெறுக்க போகலாம். மாத்தியாவ கண்டு நம்ம போய் பேசுவோம்.'

'ஆமாக்கா நம்ம போய் பேசுவோம்.' என்று ஜானகி கூறினாள்.

மூக்காயி சுமதி ஜானகிய பார்த்து 'அடியே அங்க பாரு கங்காணி வாரது டக்குனு கேட்குது. எந்திரிங்கடி எந்திரிச்சு கொளுந்து எடுங்க கண்டா கத்துவது'

'ஆமா இந்த கண்காணிக்கு இதே தான் தெரியும். நம்மகிட்ட வேலையை மட்டும் சரியா வாங்குவது. இந்த போனஸ் கொஞ்சம் வேல்லனா கேட்டா அதை வாங்கி தர மாட்டது.'

சுமதி ஜானுவை பார்த்து 'ஜானு வாய மூடு. கங்காணி காதுல விழுந்துச்சுன்னா நம்மள தொலை தொலைச்சிடும்'.

'என்ன ஜானகி அந்த மலையை முடிச்சிட்டீங்களா?'

'ஆமாயா முடிச்சுட்டோம். இப்பதான் வந்தோம். இனி சாப்பிட்டு அடுத்த மடி எடுக்க போறோம்'.

'சுமதி, ஐயா எங்களுக்கு இன்னுமே தீபாவளி போனஸ் கொடுக்கலையா? இன்னும் நாலு நாள் தான் இருக்கு, நாங்க இன்னைக்கு மாத்தியாவ கண்டு பேசலாம்னு இருக்கோம்.'

'இல்ல தேவல. மாத்தியாட பேசி வேல இல்ல. இன்னும் கம்பெனிக்காரன் போனஸ் போடலையாம், திங்கட்கிழமை தான் உங்களுக்கு கிடைக்குமாம்.'

அதற்கு ஜானகி 'திங்கட்கிழம போனஸ் கொடுத்து என்ன செய்ய ஒரு நாள் தானே இருக்கு. அதுக்குள்ள எப்படி நாங்க எல்லாம் சாமான்களையும் வாங்குறது? வேலைக்கு வரனும், என்ன செய்றது ஐயா? எல்லா தடவையும் இதே தான் சொல்றீங்க. எப்போ சரி எங்களுக்கு தீபாவளி

போனஸ் வேல்லனா கொடுத்திருக்காங்களா ?' என்று கங்காணியிடம் வினவ அதற்கு கங்காணி 'நீங்க மாத்தியாவ கிட்ட எதுவு  கேகாதீங்க. அப்புறம் மாத்தயாவ என்னத்தான் ஏசுவது நான் சொன்னேனு'.

'சரி நான் கொஞ்சம் ஸ்டோருக்கு போயிட்டு வரேன். நீங்க கொழுந்த எடுத்துட்டு அத கொண்டு வந்துருங்க'

'ஐயா, இங்கே இருந்து எப்படி ஸ்டோருக்கு தூக்குறது. எவ்வளவு தூரம், நாங்க மடுவத்துக்கு கொண்டு போறோம்.' என்றாள் சுமதி

அதற்கு கங்காணி 'வேனாம் மடுவத்துல யாருமே இல்ல. அந்த டெக்டரி வேற ஒடஞ்சுருச்சு. அதனால ஸ்டோருக்கே தூக்கிட்டு வாங்க' என்று கூறிவிட்டு விடை பெற ஆயுத்த மானார்.

'எப்படியா, தூங்கிட்டு வர  கஷ்டமே.'

'என்ன பண்ண, இன்னைக்கு மட்டும் தூக்கிட்டு வாங்க, நான் மத்தியா கிட்ட சொல்லி இந்த டெக்டரிய செய்ய சொல்றேன்.' என்று சொல்லிவிட்டு கங்காணி சென்றுவிட்டார்.

ஜானகி சுமதியை பார்த்து 'இந்த கங்காணிய பாத்தீங்க தானே அக்கா. இந்த ஆளு மனுஷன் தானே. கொஞ்ச கூட நம்ம மேல அக்கறை இல்ல.'

'ஆமா புள்ள, அந்த ஆளு அவங்கட  வேலைய மட்டு தா பார்ப்பது. நம்மள பத்தி கனக்கெடுக்க மாட்டது புள்ள.'

'நீங்க ஏன் அக்கா மாத்தியா கிட்ட போறோம்னு சொன்னிங்க ?' என்று ஜானகி சுமதியைப் பார்த்து கேட்டாள்

'அதற்கு சுமதி சொல்லாம போனா  நம்ப நல்லா வாங்கி கட்டிகனும் இந்த ஆளு கிட்ட. அப்புறம், எந்த நாளைக்கும் ஏசிக்கிட்டேதா இருப்பது.'

'வா ஜானகி போவோ' என்று கூறி விட்டு தீபாவளி போனஸ் கிடைக்காததை என்னியும் பிள்ளைகளின் ஆசையைகூட நிறைவேற்ற முடியவில்லை என  மனதில் புலம்பிய வன்னம் கொழுந்து மூட்டையை சுமந்த செல்கிறாள் சுமதி.

ஜானகி சுமதியைப் பார்த்து, 'வேகமா வாங்க அக்கா. என்ன யோசிக்கிறீங்க ?'

அதற்கு சுமதி ஜானகியை பார்த்து  'என்ன பன்னுறது புள்ள ? சந்தோசமா தீவாளிய கூட கொண்டாட ஏலாம இருக்கு. நா எங்க புள்ளய்ங்கட என்னா சொல்லுறதுனு தெரியல' என்று மனவருத்தத்துடன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினாள்.



kobinath.n@thaiveedu.com



# சூழலைப் பாதுகாக்க
# பழங்குடியினரைப் பாதுகாக்கவேண்டும்

## (உலகப் பழங்குடியினர் நாள்)

– சி. நற்குணலிங்கம்

உலகில் 90 நாடுகளில் வாழும் ஏறக்குறைய 37 கோடி பழங்குடியினர் ஐயாயிரத்துக்கு மேலான கலாசாரங்களையும் ஏழாயிரத்துக்கு மேற்பட்ட மொழிகளையும் கொண்டுள்ளனர். உலக மக்கள் தொகையில் பூர்வீகக் குடிகள் 6.2%-ஆக உள்ளனர். உலகத்தில் உள்ள மொத்த ஏழைகளின் எண்ணிக்கையின்படி சுமார் 15%-ஆன மக்கள் பூர்வீகக் குடியினரே. ஒப்பீட்டளவில் குறைவான மனிதர்களாக இருந்தாலும் உலகில் பேசப்படும் மொழிகளில் பெரும்பாலான மொழிகள் இவர்களால்தான் பேசப்படுகின்றன. உலகில் ¼ பங்கிற்கும் அதிகமான பழங்குடிகள் இந்தியாவிலேயே வாழ்கிறார்கள். தமிழகத்தில் 36 பட்டியல் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த சுமார் 71/2 இலட்சம் பேர் வாழ்கிறார்கள். இயற்கைதான் எங்கள் இறைவன், பூமி தான் எங்கள் கோவில் என்று சொல்லித்தான் இன்றும் வாழ்கிறார்கள் மலைவாழ் பூர்வீகக் குடிமக்கள். பழங்குடி மக்களுக்கு மலைதான் தாய்மடி. இவர்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்கிறார்கள். பழங்குடி மக்கள், தலைமுறை தலைமுறையாக தங்களின் கலாசாரங்களையும் வாழ்வியலையும் இயற்கையுடன் இணைந்து காப்பாற்றி வாழ்கின்றனர். ஆகவே இவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்.

தொல்குடிகள், முதுகுடிகள், ஆதிக்குடிகள், பழங்குடிகள், திணைக்குடிகள், பூர்வீகக்குடிகள் என்றெல்லாம் அறியப்படும் இவர்கள் உலகளாவிய நிலையில் பரந்து வாழ்கிறார்கள். பழங்குடிகள் என்போர் தொன்றுதொட்டோ, பன்னெடுங்காலமாகவோ அதாவது ஏறக்குறைய 10000 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு நிலப்பகுதியில் வாழ்ந்து வருபவர்கள். இவர்கள் தங்களுக்கென தனிப் பழக்க வழக்கங்களும், மொழியும், நிலமும்கொண்டு அதனைச் சார்ந்த செடி, கொடி, மரம், விலங்குகளைக் கொண்டு தங்கள் வாழ்க்கையை தன்னிறைவோடு வாழ்பவர்கள். இயற்கை சார்ந்த அறிவு, பருவநிலை மாற்றங்கள் குறித்த தெளிவு என்று ஒவ்வொரு பழங்குடியும் ஒவ்வொரு விதமான தனித்திறன் பெற்றுள்ளனர். பாரம்பரிய முறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றுவதிலிருந்து இவர்கள் விலகுவது இல்லை.

காடுகளையும், இயற்கை வளங்களையும் பாதுகாக்க பழங்குடியினர் மேற்கொள்ளும் தீரமிக்க செயற்பாடுகள் பிரமிக்கவைக்கின்றன. வனத்தைக் காக்க உயிர்களைத் தியாகம் செய்த பழங்குடியினரின் வரலாறு உலகெங்கிலும் உண்டு. எனவேதான் சூழலியலைப் பாதுகாக்க நாம் பழங்குடியின மக்களைப் பாதுகாக்கவேண்டும்.

1900-ஆம் ஆண்டில் சராசரி ஆயுட்காலம் 32 ஆண்டுகளாக மட்டுமே இருந்தது. ஆனால் பாகிஸ்தானில் ஒரு மர்மமான சமூகம் உள்ளது. அங்கு பெண்கள் 150 ஆண்டுகளுக்கு மேலாக ஆயுட்காலம் கொண்டுள்ளனர். பாகிஸ்தானின் வடக்குப் பகுதியில் உள்ள யாசின், ஹன்சா மற்றும் நகர்ப்பள்ளத்தாக்குகளைச் சேர்ந்த பழங்குடி இனக்குழுவான ஹன்சா இனப்பெண்கள்தான் இந்த அசாதாரணமான ஆயுட்காலம்கொண்ட சமூகத்தின் பெண்கள். அவர்கள் 60 மற்றும் 70 வயதுகளில்கூட இளமையாகத்தான் தெரிகிறார்கள். தனித்துவமான தன்னிறைவு பெற்ற மற்றும் விவசாய வாழ்க்கை முறைக்கு பெயர்பெற்ற ஒரு பழங்குடிக் குழுவான ஹன்சுகுச் அல்லது புருஷோ

> **“90 நாடுகளில் ஏறக்குறைய 37 கோடி பழங்குடியினர் ஐயாயிரத்துக்கு மேலான கலாசாரங்களையும் ஏழாயிரத்துக்கு மேற்பட்ட மொழிகளையும் கொண்டுள்ளனர். உலக மக்கள் தொகையில் பூர்வீகக் குடிகள் 6.2%ஆக உள்ளனர்.”**



மக்கள் என்றும் அழைக்கப்படும் ஹன்சா மக்கள் வடக்குப் பாகிஸ்தானின் யாசின், ஹன்சா மற்றும் நகர்ப்பள்ளத்தாக்கு களில் வாழ்கிறார்கள்.

ஹன்சா மக்களுக்கு உள்ள தனித்துவமான மற்றொரு பண்பு, அவர்களில் யாருக்குமே புற்றுநோய் பாதிப்பு இல்லை. இது அவர்கள் பூமியில் நீண்டகாலம் வாழும் ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான சமூகமாக இருப்பதற்கு முக்கிய காரணமாகும். எந்த ஒரு ஹன்சாவும் இதுவரை புற்றுநோயால் பாதிக்கப்பட்டதாகவோ புற்றுநோயால் இறந்ததாக ஆவணப் படுத்தப்பட்டதாகவோ சாட்சிகள் எதுவும் இல்லை என அறிக்கைகள் கூறுகின்றன. மேலும் ஹன்சா இனப்பெண்கள் 65 வயதில்கூட குழந்தை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிக்கைகள் கூறுகின்றன.

பழங்குடியினர், அவர்கள் வாழும் பகுதிகளிலிருந்து வெளி யேற்றப்படுவார்களாயின் அதன் விளைவு பாதிப்பாகத்தான் இருக்கும். 1974-இல் தன்சானியாவின் கோரோங்கோரோ கிரேட்டர் வனப்பகுதியிலிருந்து மாசாய்ப்பழங்குடி மக்கள் வெளியேற்றப்பட்ட பின்னர் அப் பகுதியில் வனவிலங்கு வேட்டை அதிகரித்தது. 19-ஆம் நூற்றாண்டில் அமெரிக்கா வின் யெல்லோஸ்டோன் பூங்காப் பகுதியிலிருந்து பூர்வகுடி யினர் வெளியேற்றப்பட்ட பின்னர் எல்க் எனப்படும் காட்டு மான்களாலும் மற்றும் பைசன் என்றழைக்கப்படும் காட்டு எருமைகளாலும் அதிக அளவு மேய்ச்சலுக்கு உட்பட்டு அப்பகுதி நிலங்கள் பாழாகின. ஒவ்வொரு நாடு உருவான கதையும் அதன் பழங்குடிகளின் இரத்தத்தைக்கொண்டு எழுதப்பட்டுள்ளது. செவ்விந்தியர்களை அழித்து உருவான அமெரிக்கா, அமேசன் பழங்குடியின அழிப்பு, அவுஸ்தி ரேலிய அடக்குமுறைகள் என உலக நாகரிக மனிதனின் வரலாறே பழங்குடியின் அழிப்பில்தான் தொடங்கியது என்று சொன்னால் மிகையாகாது.

அதிகளவான பூர்வீக இனங்கள் வேகமாக அழிந்துவருகின் றன. அவற்றில் ஒன்றுதான் அவுஸ்திரேலிய பூர்வகுடி இனங் கள். வெள்ளையர்களால் பல்வேறு அடக்குமுறைகளுக்கு உள்ளான அந்தப் பூர்வகுடி இனங்களின் அழிவு குறித்து ஒரு புத்தகம் வெளிவந்தது. அதில், அவுஸ்திரேலியாவில் 1998-ஆம் ஆண்டுமுதல் ஒவ்வோர் ஆண்டும் மே 26-ஆம் திகதி 'தேசிய மன்னிப்புதினம்' அனுசரிக்கப்படுகிறது. இதற்குப் பின்னால் வரலாற்றின் மாபெரும் தவறு அடங்கி இருக்கிறது. அவுஸ்திரேலியாவில் வெள்ளையர் வருகைக்கு முன் 3 இலட்சம் முதல் 8 இலட்சம் வரையிலான எண்ணிக்கையில் பூர்வகுடியினர் இருந்ததாகக் கூறப்படுகிறது. அந்தப் பூர் வீகக் குடிகளுடன் வெள்ளையர் ஏற்படுத்திக்கொண்ட தொடர் பால் பல்வேறு பூர்வகுடியின மக்கள் வேகமாக உயிர் இழந்தனர். இப்படியேவிட்டால் ஒரு கட்டத்தில் பல பூர்வகுடி இனங்கள் அற்றுப்போகக்கூடிய ஆபத்து இருக்கிறது என்று உணர்ந்து அவுஸ்திரேலிய அரசு ஒரு திட்டத்தைத் தீட்டியது. பூர்வ குடிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளை வலுக்கட்டா யமாக அவர்களிடமிருந்து பிரித்து குழந்தை இல்லாத வெள்ளையர்களுக்குத் தத்துக்கொடுக்கப்பட்டன. அவ்வா றான பிள்ளைகள் வெள்ளையர்களின் வீடுகளில் கொத்தடி மைகளாக நடத்தப்பட்டனர். அந்தக் குழந்தைகளுக்கு 18 வயதாகும்வரை உண்மையான தாய், தந்தையர் தங்களு டைய குழந்தைகளைத் தேட எந்த முயற்சியும் மேற்கொள்ளக் கூடாது. இத் திட்டம் அவுஸ்திரேலியாவில் ஒரு சட்டமாகவே இருந்து வந்தது. தத்தெடுக்கப்பட்ட குடும்பத்தில் ஒட்டவும் முடியாமல் ஒடுக்குதலுக்கு ஆளாகி, இரு அடையாளம் என மிகக் குழப்பமான ஒரு தலைமுறை 1910-1970 வரை வாழ்ந்து வந்தது. இந்த தலைமுறையை அவுஸ்திரேலியாவில் திருடப் பட்ட தலைமுறை என்று குறிப்பிடுகிறார்கள்.



இன்றைய உலக சூழலில்கூட பெருமளவிலான பாதிப்பை அடையும் வாழ்க்கையை வாழ்பவர்கள் இந்தப் பூர்வீகக்குடி யினரே. அரசாங்கத்தின் வளர்ச்சித் திட்டங்களினாலும் பெருமுதலாளிகளின் அழுத்தம் காரணமாகவும் இந்த மக்கள் தங்கள் ஆதி நிலத்தைவிட்டு வெளியேற வேண்டிய நிலை கடந்த சில நூற்றாண்டுகளாக உள்ளது. பூர்வீகக் குடியினர் பெரும்பாலும் கிராமங்களில்தான் இருப்பார்களெனும் பொது வான நம்பிக்கையை பொய்யாக்கும் வகையில் இவர்களில் பல இனக்குழுக்கள் நகரங்களிலும் வாழ்ந்துவருவது கண்டறி யப்பட்டுள்ளது.

ஐ.நா.-வின் தகவலின்படி ஒட்டுமொத்த இலத்தீன் அமெரிக் காவில் உள்ள 40% பூர்வகுடியினர் நகரப்பகுதிகளில்தான் வசிக்கிறார்கள். இப்படி நகரப்பகுதிகளுக்கு புலம்பெயரும் பெரும்பாலானவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைத்தாலும் இவர்கள் இனவெறியையும், தீண்டாமையையும் பெருமளவில் சந்திக்கவேண்டி இருக்கிறது என்பது கசப்பான ஓர் உண் மையாகும். தங்களின் அடையாளத்தை இழந்தோ அதை மீட்பதற்காகவோ இன்றைய நவீன உலகில் பூர்வீகக்குடி யினர் பல சவால்களைச் சந்தித்து வருகிறார்கள்.

ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மலைமீதும், காடுகளுக் குள்ளும் இனக்குழுக்களாகவும் வாழ்ந்த பழங்குடியினரிடம் சென்று இனி இந்த மலையும், காடும், மண்ணும் உங்களுக் குச் சொந்தம் இல்லை. நீங்கள் மிருகங்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறீர்கள், இயற்கையை காயப்படுத்துகிறீர்கள் அத னால் இந்த இடத்தைவிட்டு வெளியேறுங்கள் என்று யாராவது சொல்லியிருந்தால் ஈட்டியை எடுத்து கொன்றிருப்பார்கள், அல்லது சிரித்துவிட்டு குடிலுக்குத் திரும்பியிருப்பார்கள். ஆனால் இன்று இதே வாசகங்களைச் சொல்லி பூர்வீகக் குடிகளை துரத்திவிட்டு அதே காடுகளை சூறையாடிக் கொண்டிருக்கிறது நாகரிக சமூகம். காடுகளைவிட்டு



விரட்டப்பட்டும் வலுக்கட்டாயமாக மறுகுடிய மர்வு செய்யப்பட்டும் வாழ்வாதாரத்தைத் தேடிச்சென்றும் என பழங்குடியினர் இனம் கொஞ்சம், கொஞ்சமாக அழிந்துவருவது வேதனைக்குரியதாகும்.

பழங்குடிகளுக்கான சிக்கல்கள் அது நம் எல்லோருக்குமான சிக்கல்கள். இயற்கை வளங்களுக்கான சிக்கல் என புரிதல்வேண்டும். உலகெங்கிலும் பழங்குடியினர் நலனில் அக்கறை கொண்ட அமைப்புகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் பழங்குடிமக்கள் தொடர்பான கண்காட்சிகள், கருத்தரங்கு, கலைநிகழ்ச்சிகளை முன்னெடுக்க வேண்டும். சூழலியலைப் பாதுகாக்க நாம் பூர்வீகக்குடிகளைப் பாதுகாக்க வேண்டும். இது நமது எல்லோரதும் கடமையாகும். பழங்குடிகள் நமக்கு நிறைய கற்றுக் கொடுக்கும் நிலையில் உள்ளனர்.

> ***"இலத்தீன் அமெரிக்காவில் உள்ள 40% பூர்வகுடியினர் நகரப்பகுதிகளில்தான் வசிக்கிறார்கள். நகரப்பகுதிகளுக்கு புலம்பெயரும் பெரும்பாலானவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைத்தாலும் இவர்கள் இனவெறியையும், தீண்டாமையையும் பெருமளவில் சந்திக்கவேண்டி இருக்கிறது என்பது கசப்பான ஓர் உண்மையாகும்."***

பழங்குடிகளை போற்றும் வகையில் அவர்களுக்கான ஒரு சர்வதேச தினம் அவசியம் என்பதை ஐ.நா. சபை உணர்ந்தமை வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். இயற்கை அழிவடைந்து செல்லும் இக்காலத் தில் அதனைப் பாதுகாப்பவர்களை ஏன் உரிமைகளுடன் பாதுகாக்கக்கூடாது. உலகின் காடுகளும், மரங்களும், இயற்கைப் புல்வெளிகளும் உருவாகியதில் இயற்கையின் பங்கிற்கு இணையாக ஆதிக்குடிகளின் பங்கும் உள்ளது. அத்தகைய பழங்குடியின மக்களின் உரிமைகளைப் பாது காத்து அவர்களது சாதனைகளை அங்கீகரிக்கும் நோக்கில் ஐ.நா. சார்பில் பன்னாட்டு பழங்குடியினர்தினம் கடைப்பிடிக் கப்படுகிறது.

ஐ.நா. பொதுச்சபை பூர்வகுடியினரின் உரிமைகள் என்ற தீர்மானத்தின் மூலம் 2019-ஆம் வருடத்தை பூர்வீகக்குடிகளின் மொழிகளுக்கான சர்வதேச வருடமாக அறிவித்துள்ளது. 1993-ஆம் ஆண்டு டிசம்பர் 21-ஆம் திகதியன்று ஐ.நா. பொதுச்சபை 1994-ஆம் ஆண்டு டிசம்பர் 23-ஆம் திகதி அன்று மேற்கொண்ட தனது தீர்மானத்தின் மூலமாக ஆகஸ்ட் 9-ஆம் திகதியை உலக பூர்வீகக் குடிகளுக்கான சர்வதேச தசாப்தத்தின் தொடக்கமாக அறிவித்தது.

இத்தினத்தின் நோக்கம் மனித உரிமைகள், சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் சமூக மேம்பாடு போன்ற பகுதிகளில் பூர்வகுடிகள் சந்திக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துவதே ஆகும். அவர்களைப் போற்றும் வகையில் ஐ.நா.-வினால் ஆண்டுதோறும் இத்தினம் முன்னெடுக்கப்படுவது மிகச்சிறப்பு. இதன்மூலம் சூழலியல் பாதுகாக்கப்படுவதும் சிறப்பே.



natkunalingam@thaiveedu.com



# செம்மீன்: சில நினைவுகள்

ஓவியர் ஜீவா

மலையாள இலக்கிய உலகில் மிகப் புகழ் பெற்ற புதினம் என்றால் உடனே நினைவுக்கு வருவது செம்மீன்தான். தகழி சிவசங்கரன் பிள்ளை, கேரள மீன வர்களின் வாழ்க்கையை பின்னணியாக வைத்து எழுதிய இந்த நாவல், மலையா ளிகளின் உள்ளம் கவர்ந்த நாவல். தமிழில் பிரபல எழுத் தாளர் சுந்தர ராமசாமி மொழி பெயர்ப்பில் வெளியானது என்பது இன்னொரு செய்தி. இதை திரைப்படமாக எடுத்தால் அந்த எழுத்துப் படைப்புக்கு நியாயம் செய்யுமா என்ற அச் சத்தினாலேயே பல இயக்குநர்கள் தயங்கிய கதைக்கரு இது. ராமு காரியாத்துக்கும் இது ஒரு பெருங்கனவாக இருந்திருக் கிறது.

> **"கம்யூனிஸ்ட் கலைப்பிரிவான கே.பி.ஏ.சி. நாடகக் குழுவில் பயணத்தை தொடங்கிய ராமு காரியாத் இதற்கு முன் சில படங்களை வேறு இயக்குநர்களுடன் இணைந்து இயக்கியவர்."**



கம்யூனிஸ்ட் கலைப்பிரிவான கே.பி.ஏ.சி. நாடகக்குழுவில் பயணத்தை தொடங்கிய ராமு காரியாத் இதற்கு முன் சில படங்களை வேறு இயக்குநர்களுடன் இணைந்து இயக்கி யவர். பி. பாஸ்கரனுடன் சேர்ந்து இயக்கிய 'நீலக்குயில்' மலையாள கல்ட் திரைப்படங்களில் ஒன்றாக பேசப்ப டுகிறது. சத்யனும் குமாரியும் இணைந்து நடித்த இந்தத் திரைப்படம் மலையாள சினிமாவில் ஒரு புதிய தரத்தையும் கலையழகையும் கொண்டு வந்த திரைப்படமாகக் கருதப்படு கிறது. பி. பாஸ்கரன் பின்னர் பிரபல இயக் குநராகவும் கவிஞராகவும் திகழ்ந்தார். இதன் ஒளிப்பதிவாளர் ஏ. வின்சென்ட் சென்ற உயரம் மிகப்பெரிது.

செம்பன்குஞ்சுவின் மகள் கருத்தம்மா வுக்கு இளம் மீன் மொத்த வியாபாரி பரீக் குட்டி மீது காதல். செம்பன்குஞ்சுவுக்கு சொந்த படகு வாங்க ஆசை. பரீக் குட்டி கடன் தந்து உதவு கிறான், பிடிக்கும் மீன்களையெல்லாம் தனக்கே விற்றுவிட வேண்டும் என்ற நிபந் தனையுடன். கருத்தம்மாவின் தாய் சக்கிக்கு இந்த காதல் விவகாரம் தெரியவருகிறது. சமூக கட்டுப்பாடுகளையும் விதி களையும் மீறக்கூடாது என்று வலியுறுத்தி காதலுக்கு தடை விதிக்கிறாள். பரீக்குட்டி ஓர் இஸ்லாமியர் என்பதும் இன் னொரு காரணம்.

எங்கிருந்தோ வந்த பழனியின் சுறுசுறுப்பு செம்பன்குஞ்சு வுக்கு பிடிக்கிறது. கருத்தம்மாவை அவனுக்கு திருமணம் செய்து வைக்கிறான். திருமணத்திற்கு பின் பரீக்குட்டி சோக கீதம் பாடிக்கொண்டு திரிகிறான்.

சக்கி நோய்வாய்ப்பட்டு இறந்து போக, முதலில் தனக்கு படகை விற்ற முதலாளியின் மனைவியையே திருமணம் செய்து கொண்டு வருகிறான் செம்பன்குஞ்சு. கூடவே வாலிபனாக அவள் மகனும். கருத்தம் மாவின் தங்கை பஞ்சமிக்கு இவர்களைப் பிடிக்கவில்லை. ஒரு நாள் பணத்தைத் திருடி மகனுக்கு புதுமனைவி தரும்போது அப்பனிடம் போட்டுத்தருகிறாள் பஞ்சமி. அவர்களையும் விரட்டி விடுகிறான் செம் பன்குஞ்சு. வாங்கிய கடனைத் திருப்பித் தராமல் பரீக்குட்டியையும் ஏமாற்று கிறான் அவன். அதன் பிறகு மனம் பேதலித்து கடற்கரை யில் பித்தனாக அலை கிறான் செம்பன்



குஞ்சு. பழனியும் கருத்தம்மாவும் தனியான வாழ்க்கையை வாழ்கிறார்கள். ஊரார் பேசுவதை பழனி காதில் வாங்குவதில்லை. அவர்கள் இவனை தொழிலில் ஒதுக்கி வைத்தாலும் தனியாகவே படகைச் செலுத்தி மீன் பிடிக்கச் செல்கிறான். ஆனால் ஒரு நாள் கருத்தம்மா தன் தங்கையிடம் பரீக்குட்டியை பற்றி விசாரிப்பதைப் பார்த்துத் கடும் கோபம் கொள்கிறான். அதைத்தொடர்ந்து கொந்தளிக்கும் கடலுக்குள் தனியே மீண்டும் செல்கிறான். இதற்கிடையில் கருத்தம்மாவும் பரீக்குட்டியும் மீண்டும் சந்திக்கும் ஒரு வாய்ப்பு நேர்கிறது. பழைய காதல் பற்றிக் கொள்கிறது. பழனி பெரும் சூறாவளியில் ஒரு பெரிய சுறா மீனைப் பிடிக்க முனைகிறான். பெரும் அலைகள் அவனை உள்வாங்கிக் கொள்கின்றன. புயல் ஓய்ந்து பார்க்கையில், பரீக்குட்டியும் கருத்தம்மாவும் கடற்கரையில் உயிரற்ற சடலங்களாக ஒதுங்கிக் கிடக்கிறார்கள். இன்னொரு புறம் அந்த மாபெரும் சுறாவும் இறந்து போய் ஒதுங்கிக்கிடக்கிறது. பஞ்சமி கருத்தம்மாவின் குழந்தையுடன் தனியாக நிற்கிறாள்.

தகழி உயிர்ப்புடன் எழுதிய நாவல் இது. கேரள மீனவ மக்களின் வாழ்க்கை குறித்த பல நம்பிக்கைகளில் ஒன்று கற்பு குறித்தது. கணவன் கடலுக்கு சென்றபோது மனைவி வேறொரு ஆடவனுடன் உறவு கொண்டால், அந்த கணவனை கடலம்மா கொண்டு போய் விடுவாள் என்பது ஒரு கர்ண பரம்பரை நம்பிக்கை. கடற்கரையோர மீனவ மக்களின் வாழ்க்கையையும் நெறிமுறைகளையும் திறம்பட பார்வையிட்டு எழுத்து வடிவில் தந்தார் தகழி. எஸ்.எல்.புரம் சதானந்தன் நாவலுக்கு திரைக்கதை அமைத்தார். ராமு காரியாத் சிறந்த நடிகர்களைத் தேர்ந்தெடுத்து நடிக்க வைத்தார்.

மலையாளத்தின் உச்ச நடிகனாக திகழ்ந்தவர் சத்யன். இன்றும் மலையாளிகள் அவரை விட்டுத்தரமாட்டார்கள். வெகு இயல்பான நடிகர். அப்போதைய திருவாங்கூர் ராஜ்யத்தில், இப்போதைய கன்யாகுமரி மாவட்டத்தில் பிறந்தவர் இந்த சத்யேந்திர நாடார். ராணுவம், காவல் துறையில் எல்லாம் பணியாற்றிவிட்டு நடிக்க வந்தவர். சத்யன் மாஸ்டர் என்று மலையாளிகளால் அழைக்கப்பட்டவர். நீலக்குயில் படத்தில் ராமு காரியாத்துடன் பணியாற்றிய சத்யன், செம்மீன் படத்துக்காக பழனி வேடத்தில் நடிக்க தேர்ந்தெடுக்கப்பட்டார். அலட்சியமான கருத்தமேனித் தோற்றம், முரட்டு சுபாவம் என்ற அடையாளங்களுடன் பழனி வேடத்தில் நடித்தார்.

கோவை போன்ற நகரங்களில் தமிழ் நாடகங்களில் நடித்து வந்தவர் ஷீலா. தமிழ் திரைப்




**இந்திய தேசிய திரைப்பட விருதுகளில் சிறந்த திரைப்படத்திற்கான தங்கப் பதக்கத்தை பெற்ற முதல் தென்னிந்தியத் திரைப்படம் என்ற பெருமையை பெற்றது. சிகாகோ உலகத் திரைப்பட விழாவில் சான்றிதழும், கான் திரைப்பட விழாவில் தங்கப் பதக்கமும் பெற்றது.**

படங்களில் அறிமுகமாகி பின்னர் மலையாளத்தில் உச்ச நடிகையாகத் திகழ்ந்தவர். ரெக்கார்டு களை உடைக்கும் அளவுக்கு பிரேம் நசீருடன் நூற்றுக்கணக்கான படங்களில் ஜோடி சேர்ந்தவர். அவரை கருத்தம்மா வேடத்தில் நடிக்க வைத்தனர். வாளிப்பான உடல் கொண்ட வெளுத்தம்மாவான அவர் எந்த குறையும் வைக்காமல் கருத்தம்மாவாக அற்புதமாக நடித்தார். முள் மீது நடப்பது போன்ற வேடம், ஆனாலும் நடித்தார். 'மானஸ மைனே வரு' என்று சோகமாகப் பாடிக்கொண்டு கடற்கரையில் அலையும் காட்சிகள் மறக்க முடியாதவை!

படத்தின் இன்னொரு முக்கியமான நடிகர் கொட்டாரக்கர ஸ்ரீதரன் நாயர். பேராசை பிடித்த செம்பன்குஞ்சுவாக இவரது நடிப்பு மறக்கமுடியாதது. இந்தப் படத்தில் அனைத்துவிதமான உணர்ச்சிகளையும் கொட்டும் வாய்ப்பு இவருக்கு வாய்த்தது. வேலுத் தம்பி தளவா, பழசி ராஜா, தொம்மண்டே மக்கள் போன்ற பழைய படங்களில் முக்கிய வேடங்களில் நடித்த இவரை 'மை டியர் குட்டிச்சாத்தான்' படத்தில் பயங்கர மந்திரவாதியாக தமிழ் மக்கள் பார்த்திருக்கிறார்கள்.

கருத்தம்மாவின் பக்கத்து வீட்டுக்காரர் அச்சன்குஞ்சுவாக எஸ்.பி. பிள்ளையும், அவர் மனைவி நல்ல பெண்ணுவாக அடூர் பங்கஜமும் செம்மீன் ரசிகர்களால் மறக்க முடியாத அற்புத நடிகர்கள்.

செம்மீன் படத்தை உருவாக்க, தயாரிப்பாளர்களைத் தேடி அலைந்த போது ராமு காரியத்துக்கு கிடைத்தவர் பாபு இஸ்மாயில் சேட். முப்பது வயது கூட ஆகாத இளைஞரான இவர்தான் முதலீடு போட்டு இந்தப் படத்தைத் தயாரித்தார்.

செம்மீன் படத்தின் பாடல்கள் இன்றும் அழியாப்புகழுடன் திகழ்கின்றன. வயலார் ராமவர்மா இயற்றியப் பாடல்களுக்கு இசையமைத்தவர் சலீல் சவுத்திரி. பள்ளிப்பருவத்திலேயே இசையில் பெரும் ஆழமும் பயிற்சியும் கொண்ட சலீல்தா அனைத்து வாத்தியங்களையும் வாசிக்கக்கூடியவர். பாடல்களும் இயற்றத் தெரிந்திருந்தது. கதைகளும் எழுதுவார். இளம் வயதில் வங்கப் பெரும் பஞ்சத்தை அனுபவித்தும், பல அவலங்களைப்



பார்த்தும் அவர் கொள்கை ரீதியாக கம்யூனிஸ்ட் இயக்கங்க ளுடன் நெருக்கமானார். சில வங்கத் திரைப்படங்களுக்கு இசையமைத்த பின் பாம்பே திரையுலகத்துடன் அவருக்கு ஏற்பட்ட தொடர்பின் காரணம் சுவையானது. சலீல்தா எழுதிய திரைக்கதையான 'தோ பிகா ஜமீன்' தன் இரண்டு 'பிகா' நிலத்தை கடனிலிருந்து மீட்க நகரத்திற்கு செல்லும் ஓர் ஏழை விவசாயி குடும்பத்தின் கதை. இது இயக்குநர் பிமல் ராய்க்கு அவரது எடிட்டர் ரிஷிகேஷ் முகர்ஜி மூலம் செல்ல, பிமல்ராய் இந்தத் திரைக்கதையை அதே பெயரில் படமாக்கினார். பால்ராஜ் சஹானி, நிருபர் ராய் நடித்த இந்தத் திரைப்படம் உலகளவில் நிறைய விருதுகளை பெற்றது. செம்மீன் மூலம் சலீல்தா மலையாளத் திரையுலகிற்கு வந்தார்.

கடலினக்கரே போனோரே, மானஸ மைனே வரு, பெண் ணாளே பெண்ணாளே கறிமீன் கண்ணாளே, புத்தன் வலக் காரே என்று அனைத்துப் பாடல்களும் ஹிட் ஆயின. மானஸ மைனே வரு பாடலுக்கு புதிய சுவை சேர்க்க வங்க / ஹிந்திப் பாடகர் மன்னா டே பயன்பட்டார். வங்கக்கரை இசை லயங்களை கேரளக் கரையோரத்துக்கு பயன்படுத்தி அனை வர் மனதையும் கொள்ளை கொண்டார் சலீல்தா.

இந்தத் திரைப்படத்தின் இன்னொரு பெரும் பலம் இதன் ஒளிப்பதிவு. பாதாள பைரவி, மிஸ்ஸியம்மா, மாயா பஜார் போன்ற விஜயா வாகினி திரைப்படங்களுக்கு அற்புதமான ஒளிப்பதிவைத் தந்த ஆங்கிலோ இந்தியரான மார்கஸ் பார்ட்லே ஒளிப்பதிவு செய்த முதல் மலையாளப்படமும் வண் ணப்படமும் செம்மீன்தான். இதில் நடிகர்களை விட வெளிப்பு றங்களுக்கும் கடலலை களுக்கும் முக்கியம் தந்து படமாக் கினார். முழுவதும் அவரால் ஒளிப்பதிவு செய்யமுடியாமல், யு. ராஜகோபால் படத்தை முடித்துத் தந்தார். இதனால் சிறந்த ஒளிப்பதிவாளருக்கான தேசிய விருது மார்கஸ் பார்ட்லேக்கு கை தவறிப் போனது.

இந்த படத்தின் உருவாக்கத்தில் இன்னொரு பிரபல தொழில் நுட்பக் கலைஞரும் இடம்பெற்றார். புகழ் பெற்ற இந்தி இயக் குநரும் படத் தொகுப்பாளருமான ரிஷிகேஷ் முகர்ஜி படத்தின் தொகுப்பைக் கவனித்தார். படத்தின் உணர்ச்சியை, அலைகளின் சீற்றத்தையும் அமைதியையுமே வைத்து பார் வையாளனுக்கு தந்தார். ஒரு குறிப்பிடத்தக்க இயக்குநராக திகழ்ந்தபோதே சில முக்கியமான திரைப்படங்களின் தொகுப்பையும் கவனித்து வந்தவர் ரிஷிகேஷ். செம்மீனுக்கு முன் அவர் தொகுத்த சில திரைப்படங்கள் தோ பிகா ஜமீன், தேவதாஸ், மதுமதி, கங்கா ஜம்னா என்று பெரும் புகழ் பெற்றவை. செம்மீனுக்கு பின்னும் ராமு காரியாத் இயக்கிய 'நெல்லு' திரைப்படத்தையும் அவரே தொகுத்தார். பாலு மகேந்திரா இந்தப் படத்தில்தான் ஒளிப்பதிவாளராக அறிமுக மானார்.

ஏராளமான விருதுகளை வென்றது செம்மீன். இந்திய தேசிய திரைப்பட விருதுகளில் சிறந்த திரைப்படத்திற்கான தங்கப் பதக்கத்தை பெற்ற முதல் தென்னிந்தியத் திரைப்படம் என்ற பெருமையை பெற்றது. சிகாகோ உலகத் திரைப்பட விழா வில் சான்றிதழும், கான் திரைப்பட விழாவில் தங்கப் பதக் கமும் பெற்றது. இந்தியில் டப் செய்யப்பட்டது மட்டுமல் லாமல், இதன் தொடர்ச்சியாக ஒரு திரைக்கதையை உரு வாக்கி படமாக்கினார்கள். கருத்தம்மா என்ற பெயரை பாரதி ராஜா தன் நாயகிகளில் ஒருவருக்கு சூட்டினார். பஞ்சமி என்ற பெயரை பீட்டர் செல்வகுமார் தன் வெளிவராத படத்திற்கு வைத்தார்.

இன்றும் செம்மீன், ரசிகர்களின் மனங்களில் வாழ்கிறது.



jeeva@thaiveedu.com




# ரொறன்ரோ சர்வதேசத் திரைப்படவிழா

– ரதன்

‘ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழா என்பது வெறும் திரைப்படங்களைக் காட்சிப்படுத்தும் விழா அல்ல, அதற்கு மேலாக திரைப்படக் கலையையும் கதை சொல்லும் ஆற்றலையும் கதை சொல்லிகளையும் கொண்டாடும் விழா’. இவ்வாறு பிரபல சினிமா விமர்சகர் பீற்றர் ரவர்ஸ் தெரிவித்தார்.

ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா 1976-ஆம் ஆண்டு Bill Marshall, Henk Van der Kolk, Dusty Cohl ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது. இம்மூவரும் திரைப்பட ஆர்வலர்கள் மட்டுமல்ல, உப தொழிலாக திரைப்படத் தயாரிப்பிலும் ஈடுபட்டிருந்தார்கள். டஸ்ரி ஹோல் ஒரு வழக்கறிஞர். 1960-ஆம் ஆண்டு உல்லாசக் கப்பலில் பயணம் செய்தபோது, கப்பல் கான் துறைமுகத்தில் தரித்து நின்றது. கான் பாரிசிலிருந்து சுமார் 908 கி.மீற்றர் தூரத்தில் இத்தாலிய எல்லையை அண்டி அமைந்துள்ளது. கான்-இல் இறங்கிய ஹோலுக்கு ஒரே ஆச்சரியம். அங்கு ஒரு திரைப்பட விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அடுத்த 16-ஆண்டுகள் ரொறன்ரோவிலிருந்து நேரடியாக கான்க்கு திரைப்பட விழாவைக் காணப் பயணமானார். அப்பொழுதெல்லாம் அவருக்கு ஒரு கனவு. தனது சொந்த நகரமான ரொறன்ரோவிலும் இது போன்ற ஒரு விழாவை நடத்த வேண்டும் என்று. இவரைப் போன்றே கனவுகளுடன் உலாவிய பில் மார்சல், ஹென்க் வன் டிர் ஹோல்க் ஆகியோருடன் இணைந்து முதலாவது ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா ‘The Festival of Festivals’ என்ற பெயரில் உதயமானது.

இவர்களுக்கு அப்போதிருந்த பெரும் சவால் பணம். ரொறன்ரோ மாநகரத்திடம் பணம் இல்லை. ஒன்ராரியோ அரசும் கையை விரித்துவிட்டது. புளோர் வீதி சி.ஐ.பி.சி வங்கி முகாமையாளர் 125,000 வழங்கினார். தம்மிடமிருந்த பணத்துடன் சுய கடனாக பெற்ற பணத்தையும் வைத்து, 1976-ஆம் ஆண்டு ஒக்ரோபர் 18 முதல் 26 வரை, 30 நாடுகளைச் சேர்ந்த 127 படங்களுடன் விழாவை வெற்றிகரமாக நடத்தி முடித்தனர். மொத்தமாக சுமார் 35,000 பார்வையாளர்கள் இத்திரைப்பட விழாவில் படங்களைப் பார்வையிட்டனர். முதலாவது விழாவின் நிறைவேற்று இயக்குநர் Piers Handling.

டஸ்ரி ஹோல், ரொறன்ரோ திரைப்பட விழாவின் 40-வது ஆண்டு நிறைவையொட்டி நெசனல் போஸ்ட் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் பின்வருமாறு கூறுகின்றார். 'ஹென்க் வான் டெர் கோல்க்கும் பில்லும் நானும் திரைப்படங்களை மட்டுமே உருவாக்க விரும்பினோம். இந்த நாட்டில் திரைப்ப டங்களை உருவாக்குவது சற்று கடினமான போராட்டமாக இருந்தது. நீங்கள் (கனடிய மக்கள்) திரைப்படங்களை எடுக் கவில்லை, அமெரிக்க திரைப்படங்களைப் பார்க்கச் சென் றீர்கள். கனடாவில் திரைப் படங்களை எடுக்க முயற்சித்த எவரும் அடிப்படையில் ஒரு தொடக்கக்காரராகக் கருதப்பட் டனர், அவர்களை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்ளப்பட வில்லை. நாங்களும் அவதானிக்கப்படவேண்டும், கவனிக்கப் படவேண்டும். நாங்களும் திரையுலகில் உள்ளோம் என்பதை உலகிற்கு உணரவைப்பது எப்படி? கனடிய திரைப்படத் துறையை எவ்வாறு உருவாக்குவது?' கனடா திரை வணி கத்தைப் பொறுத்தவரை ஹொலிவூட்டின் ஒரு பகுதியாகவே கருதப்படுகின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் ஹொலிவூட், ரொறன்ரோ திரைப்பட விழாவை நிராகரித்தது. அவர்களது வணிகத்துக்குள் ரொறன்ரோ விழா செல்வதாக கருதினார்கள். அவர்கள் அமெரிக்காவில் தங்களது கட்டுப்பாட்டுக்குள் நடைபெறும் விழாக்களையே விரும்பினார்கள். ஹொலிவூட் விற்பன்னர்கள், மன்னர்கள். 'இது எங்களது வியாபாரம், நீங்கள் என்ன செய்கின்றீர்கள்' என்பதே அவர்களது கேள்வியாகவும், விமர்சனமாகவுமி ருந்தது'. இது ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவின் 40-ஆவது ஆண்டு நிறைவையொட்டி, ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவின் ஆரம்பஸ்தர்கள், நெசனல் போஸ்ட் பத் திரிகைக்கு செப்ரம்பர் 3, 2015-இல் அளித்த செவ்வியில் Henk Van Der Kolk கூறிய கருத்தாகும்..

மற்றொரு ஆரம்பஸ்தரான பில் மார்சல் ஹொலிவூட்: 'விழா விற்கு விநியோகஸ்தர்கள் திரைப்படங்களை அனுப்ப மறுத் துவிட்டார்கள். விழாவிற்கு வருவதாக உறுதி கூறிவிட்டு, பின்னர் ஒருவரும் வரவில்லை' எனக் கூறினார்.

1976-இல் முதல் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா நடை பெற்றது. 263 யங் வீதியில் அமைந்துள்ள இம்பீரியல் சினிமா (இப்பொழுது எட் மேவிஸ் அரங்கு), New Yorker Theatre (651 Yonge St), Ontario Place Cinesphere உட்பட்ட சில அரங்குகளில் நடைபெற்றது.

இதுவரை 1976-2023 வரை ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் 13,600 திரைப்படங்கள் திரையிடப்பட்டுள்ளன.

1978-இல் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா என்ற பெயர் உப பெயரானது. அது வரை பெஸ்ரிவல் ஒப் பெஸ்ரிவல் எள்ற பெயரிலேயே ரொரன்ரோ விழா நடைபெற்றது. ஆனால் 1994-இல் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா என்ற பெயரை முதன்மையாகக் கொண்டு விழா நடத்தப்பட்டது.

2010-ஆம் ஆண்டு கனடிய இயக்குநர் Ivan Reitman அன்ப ளிப்பாக வழங்கிய அவரது சொந்த நிலத்தில் (350 கிங் வீதி) ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவின் தலைமையகம் திறக்கப்பட்டது. உலகின் நடைபெறும் முக்கிய திரைப்பட விழாக்களில் ரொறன்ரோ திரைப்படவிழா மட்டுமே நடுவர்கள் தேர்வு செய்யாமல், பார்வையாளர்கள் சிறந்த விருதுகளை தெரிவு செய்கின்றார்கள்.

ஆரம்பத்தில் திரைப்பட அனுமதி பத்திரத்துக்கான பெறுமதிக்குள் திரைப்படமும், உணவும் அடங்கும். சிறந்த உணவை வழங்கு வதற்கு பல்வேறு வழிகளையும் ஆரம்ப அமைப்பாளர்கள் மேற்கொண்டிருந்தார்கள். David Overbey போன்ற மிகச் சிறந்த திட்டமிடளாளர்கள், மிகச் சிறந்த படங்களைத் தேர்வு செய்தனர். மற்றைய திரைப்பட விழாக்களில் கவனம் பெறாத நல்ல திரைப்படங்களைத் தேர்வு செய்து திரையிட்டனர். இவ்வாறான படங்கள் பலரின் கவனத்தைப் பெற்றன. உதார ணத்துக்கு Diva (1981) பிரென்ச் படம்.

விழா அமைப்பினர் சகல அமெரிக்க ஊடகவியலாளர்க ளையும் விழாவிற்கு அழைத்தனர். தரமான மற்றும் சுயாதீன சர்வதேச திரைப்படங்கள் வட-அமெரிக்காவில் திரையிடமுடி யாமலிருந்தது. அதனை ரொறன்ரோ சர்வதேச திரைப்ப டவிழா நிவர்த்தி செய்தது. ரொறன்ரோ விழாவின் வளர்ச்சி, பல சர்வதேச திரைப்படங்களை விநியோகஸ்தர்கள் வாங்கு வதற்கு ஏதுவாகியது. சந்தோஸ் சிவனின் 'ரெரரிஸ்ட்' படம் ரொறன்ரோ விழாவின் பின்னரே சர்வதேச அரங்கிற்கு சென்றது. 2008-ஆம் ஆண்டு ஈராக் போரை மையப்படுத்திய ஹொலிவூட் படமான 'The Hurt Locker' அமெரிக்காவில் விற் பனையாகவில்லை. ரொறன்ரோ விழாவில் திரையிடப்பட்ட பின்னர், அமெரிக்க விமர்சகர்களின் கவனத்தை ஈர்த்தது. அதன் பின்னரே இப்படத்தை விநியோகஸ்தர்கள் வாங்கி னார்கள். இப்படம் அவ்வாண்டிற்கான ஒஸ்காரின் சிறந்த பட விருதையும் பெற்றது.

ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவின் வளர்ச்சியானது பல வழிகளில் ரொறன்ரோ மைய நகர வணிக நிறுவனங்க ளுக்கும், அரசு சார்ந்த பொது நிறுவனங்களுக்கும் (போக்கு வரத்து கழகம்) வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கின்றது. திரையிடலுக்கு அப்பால், ரொறன்ரோ மைய நகரமே ஒரு விழாக்கோலம் பூண்டது போல் காட்சிப்படுத்தப்படுகின்றது. ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா 50 வருடங்களாக நடைபெறுவதாயின் அவ்வமைப்பானது ஒரு நிலையான வரு மானத்தைத் தொடர்ந்து பெற்றிருக்க வேண்டும். கனடாவின் பழைமையான சர்வதேச திரைப்பட விழாவான வன்கூவர் திரைப்பட விழா 1958-இல் ஆரம்பிக்கப்பட்டு 1969-இல் தனது கடைசித் திரைப்பட விழாவை நடத்தி முடிவுக்குக் கொண்டுவந்தது. பின்னர் மீண்டும் 1982-இலேயே ஆரம்ப மானது. திரைப்பட விழாக்களின் பின்னால் அவற்றின் நிதி வளம் என்பது ஒருபொழுதும் ஆரோக்கியமானதாக இருப்ப தில்லை. ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவும் அதற்கு விதிவிலக்கானதல்ல. 2018-2023 வரையிலான வருமானம் மற்றும் செலவுகளுக்கான அட்டவணை கீழேயுள்ளது. 2020, 2021 காலங்கள் கொரோனாக் காலங்கள் என்பதை நாம் கவனத்திற்கொள்ளவேண்டும்.

ரொறன்ரோ திரைப்பட விழாவிற்கு ஒன்ராரியோ மாகாண அரசு, கனடிய மத்திய அரசு, ரொறன்ரோ மாநகர அரசு ஆகியன நிதி வழங்குகின்றன. இந்த நிதியின்றி ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா அமைப்பினரால் வருடா வருடம் விழாவை நடத்த முடியாது.

நட்டத்தை தவிர்க்க வேண்டுமாயின் பல மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். பார்வையாளர்களின் எண் ணிக்கையை அதிகரிக்க வேண்டும். எவ்வாறு? ஆங்கி லத்தில் மூன்று G-க்களை குறிப்பிடுவார்கள். Glamour, Glitz and Gossip. மிகப் பெரிய நடிகர்கள் வரவேண்டும். அப்படியாயின்

| வருடம் | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|---|---|
| வருமானம் | 39,637,871 | 48,565,817 | 29,611,720 | 6,261,202 | 45,323,874 | 45,255,429 |
| செலவு | 46,167,494 | 40,191,469 | 24,190,633 | 23,753,458 | 41,182,774 | 45,313,131 |
| நிகர லாபம் / நட்டம் | -6,529,623 | 8,374,348 | 5,421,087 | 2,507,744 | 4,141,100 | -57,702 |
| நுழைவுக் கட்டண வருமானம் | 40.10% | 28.76% | 15.46% | 13.37% | 43.99% | 43.50% |
| உறுப்பினர் கட்டணம் % | 3.16% | 1.60% | 1.60% | 2.96% | 3.33% | 3.28% |

அவர்கள் படங்களும் திரையிடப்பட வேண்டும். சாதாரண பார்வையாளர்களையும் இந்த கவர்ச்சி உலகத்திற்குள் இழுக்க வேண்டும். திரைப்படங்கள் திரையிடப்பட்ட பின்னர் இரவு நேர விருந்துகள் நடைபெறுகின்றன. படங்களின் தரத்தில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஐரோப்பிய, அமெரிக்க நகரங்களின் திரைப்பட விழாக்களில் பொலிவூட் படங்கள் அலங்கரிக்கின்றன. அங்கு வாழும் இந்தியர்களை (இந்தியர்கள், இலங்கையர், பங்களாதேசிகள், பாகிஸ்தானியர் அனைவரும் இதில் அடங்கும்) கவருவதற்காக இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. அல்லது ஐஸ்வரராய்க்கு திரைப்பட விழாவில் என்ன தேவையுள்ளது ? சிவப்புக் கம்பள வரவேற்பு. ஸ்ரீதேவியின் இங்கிலிஸ், விங்கலிஸ் போன்ற படங்கள்கூட திரைப்பட விழாக்களில் காண்பிக்கப்படுகின்றன. அதுவும் GALA (அதிகூடிய) நிகழ்வுகளில் காண்பிக்கப்படுகின்றன. இதற்கான நுழைவுக் கட்டணங்கள் இரு மடங்காக இருக்கும்.

ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா ரொறன்ரோ மைய நகரில் நடைபெறுவதனால், நடைபெறும் பத்து நாட்களில் சுமார் 200 மில்லியன் டொலர்கள் வருமானத்தை ரொறன்ரோ மைய நகர தங்குமிட விடுதிகள், உணவகங்கள், அரச போக்குவரத்து கழகம், தனியார் வாகனங்கள் போன்றவை வருமானமாகப் பெறுகின்றன. இக்காலத்தில் மக்கள் கூட்டம் அதிகமாகவிருப்பதனால், பல்வேறு பொருட்களும், சேவைகளும் விளம்பர பலகைகள் மூலம் கவனத்தைப் பெறுகின்றன.

ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா இன்று உலகின் ஐந்து பெரிய திரைப்பட விழாக்களுக்குள் ஒன்றாகவுள்ளது. இதன் வளர்ச்சிக்கு பல படிமுறைகளை விழா அமைப்பாளர்களும் நிர்வாகிகளும் மேற்கொண்டிருந்தார்கள். வட-அமெரிக்காவின் முக்கிய திரைப்பட விழா ரொறன்ரோ விழா. அதிகளவு பார்வையாளர்கள் ரொறன்ரோ விழாவைப் பார்க்கின்றார்கள். ஒப்பீட்டளவில் கனடிய டொலர் அமெரிக்க டொலரை விட பெறுமதி குறைவாக இருப்பதனால் அமெரிக்க பார்வையாளர்கள் விழாவிற்கு வருகை தருவது அதிகமாகவுள்ளது.

கனடாவின் மூன்று சிறந்த திரைப்பட விழாக்கள்: முறையே ரொறன்ரோ, வன்கூவர், மொன்றியல் ஆகிய இடங்களில் நடைபெறுகின்றன. வட-அமெரிக்காவில் ரொறன்ரோவுக்கு அடுத்து யுற்றா மாநிலத்தில் அமைந்துள்ள பார்க் நகரத்தில் நடைபெறும் Sundance Film Festival சிறந்த விழாவாகும். விவரணத் திரைப்படங்கள் அதிகளவு திரையிடப்படும் மிச்சிக்கன் மாநிலத்தில் அன் ஆபர் நகரத்தில் நடைபெறும் Ann Arbor Film Festival ஒரு குறிப்பிடத்தக்க திரைப்பட விழாவாகும். ஒப்பீட்டளவில் இவ் விழாக்களை விட ரொறன்ரோ திரைப்பட விழா அதிகளவு பார்வையாளர்களையும், அதிகளவு கவர்ச்சியையும் கொண்டுள்ளது.

பல பிரிவுகளில் இங்கு படங்கள் திரையிடப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் இதில் சில மாற்றங்களைக் காணலாம். GALA பிரிவில் சிறந்த படங்களே காட்டப்படவேண்டும். ஆனால் சில சமயங்களில் மிக மோசமான படங்களும் காட்டப்படுகின்றது. உதாரணத்துக்கு மீரா நாயரின் காம சூத்திரா... Platform - இப்பிரிவில் காட்டப்படும் படங்களில் சிறந்ததுக்கு விருதும் வழங்கப்படுகின்றது. Contemporary World Cinema, Wavelengths - பரீட்சார்த்த படங்களுக்கான களம், Primetime, TIFF Cinematheque: Discovery, Midnight Madness, TIFF Docs, Short Cuts என பல பிரிவுகளில் சுமார் 300-க்கும் மேற்பட்ட படங்கள் திரையிடப்படுகின்றன.

ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவின் சீரிய பாதைக்கு முக்கியமானவர்கள் பலர் இருப்பினும், மூவரைக் குறிப்பிடுவது வழமை. கமரோன் பெய்லி (Cameron Bailey): இவர் ஆரம்பத்தில் ஆசிய ஆபிரிக்க படங்களின் தேர்வாளராகவும் இயக்குநராகவும் செயற்பட்டார். அப்போது ஒவ்வொரு வருடமும் ஐந்து மாதங்கள் ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு பயணம் செய்து சுயாதீன படங்கள் பலவற்றைத் தேர்வு செய்துள்ளார். இப்பொழுது ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவின் தலைமை நிர்வாகியாக (CEO) உள்ளார். Piers Handling: இவர் 1982-இல் விழாவின் நிர்வாகக் குழுவில் இணைந்தார். 1994-இலிருந்து 2018 வரை தலைமை நிர்வாகியாகச் செயற்பட்டார். Helga Stephenson: 1986-இலிருந்து 1994 வரை தலைமை நிர்வாகியாகச் செயற்பட்டார். இவர்கள் மூவரும் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவை இன்றைய நிலைக்கு கொண்டுவந்துள்ளார்கள்.

பெரு நகரங்களை மையப்படுத்திய திரைப்பட விழாக்கள், சுற்றியுள்ள சிறு நகரங்களையும் பிரதிநிதிப்படுத்த வேண்டும். குறிப்பாக ரொறன்ரோ விழாவின் அனைத்து அரங்கங்களும் ரொறன்ரோ நகர மையத்துக்குள்ளேயே உள்ளது. ரொறன்ரோ விழாவின் வளர்ச்சியில் பெரும்பான்மை ஊடகங்களுடன் Now, Eye போன்ற பத்திரிகைகளும் பெரும்பங்காற்றியுள்ளன. நவ் பத்திரிகை தொடர்ச்சியாகப் பல வருடங்கள் தங்களது செப்ரெம்பர் இதழுடன், ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவின் வருடாந்த இதழையும் இலவசமாக இணைத்துள்ளது. நவ் ஒரு இலவச பத்திரிகை.

### ரொறன்ரோ – திரைப்பட நகரம்:

ரொறன்ரோ நகரம் ஒரு திரைப்பட நகரமாகவே வளர்ந்துள்ளது. ஹொலிவூட் படங்கள் உட்பட பல படங்கள் இங்கு படமாக்கப்படுகின்றன. கனடாவில் படமாக்கப்படும் படங்களுக்கான வரிவிலக்கு மற்றும் நிதியுதவி போன்றவை பல தயாரிப்பு நிறுவனங்களை கனடாவை நோக்கி நகரச் செய்கின்றது. குறிப்பாக ரொறன்ரோ, வன்கூவர் போன்ற நகரங்களின்


Festival of Festivals

ENTERTAINMENT

Hollywood studios promise to attend next film festival

THREE FILM FESTIVALS TO GET CANADIAN MOVIES

Eye on Entertainment
By Sid Adilman

Success more

வணிக நிறுவனங்கள் திரைப் படமாக்கலால் பெரும் வருமானத்தைப் பெறுகின்றன. ரொறன்ரோவில் ஒரு திரைப் படம் தயாரிப்பதற்கான அனைத்து வசதிகள், அரங்குகள், எடிட்டிங் வசதிகள் போன்ற அனைத்தும் உள்ளன. தயாரிப்பு நிறுவனங்கள், விநியோகஸ்த நிறுவனங்கள் ரொறன்ரோவில் உள்ளன. 900 மில்லியன் டொலர்களுக்கு மேற்பட்ட வருமானத்தை ரொறன்ரோ வணிக நிறுவனங்கள் ஒவ்வொரு வருடமும் மொத்தமாக பெறுகின்றன.

## விருதுகள்:

1978-ஆம் ஆண்டிலிருந்து மக்கள் தெரிவு விருது (People Choice Award) வழங்கப்பட்டது. 2009-ஆம் ஆண்டிலிருந்து விவரணத் திரைப்படங்கள், Midnight Madness ஆகியவற்றில் திரையிடப்படும் திரைப்படங்களுக்கு மக்கள் தெரிவு விருது தனித்தனியாக வழங்கப்பட்டுவருகின்றது. 2015-இலிருந்து சிறந்த பத்து கனடிய படங்களுக்கான தெரிவும், விருதும் வழங்கப்பட்டு வருகின்றது. மக்கள் தெரிவு விருது பெற்ற பின்வரும் திரைப்படங்கள் ஒஸ்காரின் சிறந்த பட விருதைப் பெற்றுள்ளன. 1981 - Chariots of Fire, 1999 - American Beauty, 2008 - Slumdog Millionaire, 2010 - The King's Speech, 2012 - Argo (Runner Up - People Choice Award), 2013 - 12 Years a Slave, 2018 - Green Book, 2019 - Parasite (Runners Up), 2020 - Nomadland, 2024 - Anora (Runners Up). சிறந்த ஒஸ்காரின் வெளிநாட்டு (சர்வதேச) திரைப்பட விருதுபெற்ற திரைப்படங்கள் 1985-The Official Story (La historia oficial), 1995 - Antonia, 2000 - Crouching Tiger, Hidden Dragon, 2004 - Tsotsi, 2011 - A Separation (Runners UP), 2018 - Roma (Runners Up). சிறந்த ஒஸ்காரின் விவரணத் திரைப்பட விருதுகள் பெற்ற திரைப்படங்கள் 1979 - Best Boy, 2002 - Bowling for Columbine.

ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட படங்கள், ஒஸ்காரின் பல்வேறு பிரிவுகளுக்கான விருதுகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. ஒஸ்காரின் ஒரு காட்சியறையாக ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா உள்ளது என அமெரிக்க ஊடகங்கள் புகழாரம் சூட்டுகின்றன. இது ஆரோக்கியமானதா என்ற கேள்வி எழாமல் இல்லை.

## கனடிய திரைப்படங்களும், ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவும்:

இவ்விழா தொடங்கிய பின்னர் கனடிய திரைப்படங்கள், சர்வதேச கவனத்தைப் பெற்றனவா ? இவ்விழாவில் கனடிய திரைப்படங்களுக்கு எவ்வாறான முக்கியத்துவம் வழங்கப்படுகின்றன ?

ஒவ்வொரு வருடமும் திரையிடப்படும் கனடிய படங்களின் எண்ணிக்கை மாறுபடுகின்றது. பல்வேறு பிரிவுகளில் கனடிய படங்கள் திரையிடப்படுகின்றன. Canada First!, Short Cuts Canada, Canadian Features போன்ற பிரிவுகளில் திரையிடப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் இப்பிரிவுகள் மாற்றம் பெறும்.

1898-இல் முதல் கனடிய படம் தயாரிக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. படத்தின் பெயர் Ten Years in Manitoba. Cameron of the Royal Mounted என்ற திரைப்படம் 1921-இல் தயாரிக்கப்பட்ட முதல் முழுநீளத் திரைப்படம். இதற்கு முன்பாக தயாரிக்கப்பட்டவை விவரணத் திரைப்படங்களும் குறும்படங்களுமாகும். சுமார் 55 வருடங்களுக்கு பின்னரே ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் கனடிய திரைப்படங்களை உலகறியச் செய்வதாகும். ஆனால் இன்று இவ்விழா ஹொலிவூட் படங்களுக்கான சர்வதேச கண்காட்சி அரங்காகவே உள்ளது. ரொறன்ரோ விழாவில் 18-20 வீதமான படங்களே கனடிய படங்கள். அதே சமயம் வன்கூவர் சர்வதேச திரைப்படவிழாவில் 35 வீதமான படங்கள் கனடிய படங்கள்.

Tpoh அமைப்பினர் கனடிய படங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து காட்சிப்படுத்துவதில்லை. கனடிய ஊடகங்களும் கனடிய படங்களைப் பெரும்பாலும் கண்டுகொள்ளப்படுவதில்லை. ரொறன்ரோ விழாவிற்கு முன்பாக நடைபெறும் கான், வெனிஸ் விழாக்களில் பாராட்டுக்கள், விருதுகள் பெறும் படங்களையே ஊடகங்கள் முன்னிலைப்படுத்துகின்றன. அற்றம் எகோயன், டேவிட் கொரன்பேக், Denys Arcand போன்ற பல கனடிய இயக்குநர்கள் சர்வதேச அரங்கிற்கு கான், வெனிஸ் போன்ற படங்களினூடாகவே அறிமுகமாகின்றார்கள்.

National Film Board of Canada, Telefilm Canada போன்ற பல இலாப நோக்கமற்ற அமைப்புகள் கனடிய திரைப்பட வளர்ச்சிக்காகப் பெரும் பங்காற்றுகின்றன. ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா அமைப்பானது ஒரு இலாப நோக்கமற்ற பதிவு செய்யப்பட்ட அமைப்பு. இவ்வமைப்பு வருடாவருடம் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா நடத்துவதுடன் நின்று விடாமல், கனடிய மற்றும் சர்வதேச சுயாதீன படைப்பாளிகளை ஊக்குவிக்கவும் செய்கின்றது. இதன் முதல் கட்டமாக (Film Reference Library) திரைப்பட நூலகம் மற்றும் TIFF Cinematheque-யை ஆரம்பித்தது. TIFF Cinematheque - திரைப்படக் கலையை சுயாதீன படைப்பாளிகளிடமும், பார்வையாளர்களிடமும் கொண்டுசெல்வதில் பெரும் பங்காற்றியது. தொழில்நுட்ப கருத்தரங்கங்கள், சிறந்த இயக்குநர்களுடன் உரையாடல்கள், சிறந்த திரைப்படங்கள் காட்சிப்படுத்தல் போன்ற பல்வேறு திரைக்கல்வி சார்ந்த விடயங்களை செய்துவருகின்றது.

திரைப்பட நூலகம் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவின் தலைமையகத்தின் நான்காவது தளத்தில் இயங்குகின்றது.

இங்கு 19,000-க்கு மேற்பட்ட திரைப்பட நூல்கள், 700 சஞ்சிகைகள், 60,000 திரைப்பட தயாரிப்பு விபரங்களடங்கிய கோப்புக்கள், 2,000 திரைக்கதை - வசன நூல்கள், 11,000 திரை ப்பட விளம்பர சுவரொட்டிகள், 6,000 திரைப்பட இசை கோப்புகள், 300,000 திரைப்பட நிழல் படங்கள், 11,000 திரைப்படங்கள், திரைப்பட தயாரிப்பு நிதி நிறுவனங்கள் மற்றும் நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் பற்றிய விபரங்கள் உள்ளன. இங்கு இப்படங்களைப் பார்ப்பதற்கான வசதிகளும் உள்ளன. தலைமையகத்தில் உள்ள திரையரங்கில் பல சர்வதேச திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. வணிகத் திரைப்படங்களும் திரையிடப்படுகின்றன.




*

## அரசியல் அழுத்தங்களில் ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழா:

**சில அரசியல் நிகழ்வுகள்:**

கடந்த வருடம் (2024) ரொறன்ரோ விழாவில் ரஷ்ய-உக்ரேன் போரை மையப்படுத்தி எடுக்கப்பட்ட படமான Russians at War படம் திரையிடப்படவில்லை. முற்று முழுதாக இஸ்ரேல் ஆதரவுப் படமான Bliss (Hemda) திரையிட்டது. டொனால்ட் ரம்ப்பின் ஜனவரி ஆறு சம்பவத்தை மையமாகக் கொண்ட 'த லாஸ்ட் றிப்பப்ளிக்கன்' திரைப்படத்தை திரையிட்ட ரொறன்ரோ, The Apprentice படத்தை திரையிடவில்லை. இப்படம் டொனால்ட் ரம்ப்பின் வாழ்க்கையை மையப்படுத்தியது.

கடந்த ஐம்பது வருடங்களில் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா பல அரசியல் படங்களை காட்சிப்படுத்தாமல் தவிர்த்துள்ளது. அதே சமயம் இஸ்ரேலுக்கும் பாசிசத்துக்கும் சார்பான படங்களையும் திரையிட்டுவருகின்றது. பல யூத நிறுவனங்கள் நிதியுதவி வழங்குவதனால், அவர்களால் ஏற்படுத்தும் அழுத்தம் இவ்விழாவின் சுயாதீனத்தை பாதிக்கின்றது.

மறுபுறத்தில், 2013-இல் காசாவிற்கு ஒரு விவரணத் திரைப்படம் எடுப்பதற்குச் சென்ற ரெரிக் லொபானி மற்றும் ஜோன் கிரேசன் ஆகியோர் எகிப்தில் ஒரு இரவு தங்கியபோது கைது செய்யப்பட்டனர். இவர்களது விடுதலைக்காக ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா அமைப்பு குரல் கொடுத்தது. ஒரு மாத சித்திரவதையின் பின்னர் இவர்கள் இருவரும் விடுதலையானார்கள். அதே போல் அல்-ஜசீரா ஊடகவியலாளர் Mohamed Fahmy ஒரு கனடியர். இவரும் வேறு மூன்று அல்-ஜசீரா ஊடகவியலாளர்களும் எகிப்து நீதிமன்றத்தால் மூன்று ஆண்டு சிறைத்தண்டனை பெற்றனர். இதனை எதிர்த்து ஹொலிவூட் நடிகர் இயக்குநர் ஜோர்ஜ் குலனி மற்றும் அவரது மனைவி அமல் குலனி ஆகியோர் குரல் கொடுத்தனர். 2015-ஆம் ஆண்டு ரொறன்ரோ சர்வதேச திரைப் பட விழா ஊடக மாநாட்டிலும் ஜோர்ஜ் குலனி குரலெழுப்பியிருந்தார். கனடிய அரசை தலையிடுமாறும் வற்புறுத்தினார். Tpoh ஊடக மாநாடு நடைபெற்று சில நாட்களின் பின்னர் இவர்கள் விடுதலையானார்கள்.

2009-ஆம் ஆண்டு அதாவது 2008-2009 காசா-இஸ்ரேல் போர் முடிந்து எட்டே மாதங்கள் முடிந்திருந்த போது, ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழா City of City என்ற பிரிவில் ரெல் அவியுவை மையப்படுத்திய படங்கள் திரையிடப்பட்டன. இதனை கனடாவில் உள்ள இஸ்ரேலிய தூதரகம், Brand Israel பிரச்சாரம் எனத் தெரிவித்திருந்தது. இதனை எதிர்த்து, இவ்விழாவில் திரையிடப்படவிருந்த Covered என்ற குறும்படத்தை ஜோன் கிரேசன் அனுமதிக்கவில்லை. இது அவர் இயக்கிய குறும்படமாகும்.

2016-ஆம் ஆண்டு த பேர்த் ஒவ் த நேசன் (The Birth of a Nation) படத்தின் நடிகர் இயக்குநர் நேட் பார்க்கர் மீது பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அமெரிக்காவில் இப்படம் திரையிடுவது நிறுத்தப்பட்டது. ஆனால் ரொறன்ரோ விழா இப்படத்தை திரையிட்டது.

2009-ஆம் ஆண்டு விழாவில், எகிப்திய இயக்குநர் அகமட் மகரின் The Traveller என்ற படம் இயக்குநரால் மீளப் பெறப்பட்டது. இஸ்ரேலிய படங்களுக்கு களம் அமைத்துக்கொடுத்து பாலஸ்தீனியத்துக்கு எதிராக பிராச்சாரத்தை மேற்கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இப்படம் மீளப் பெறப்பட்டது. இப்படம் எகிப்திய கலாசார அமைச்சினால் தயாரிக்கப்பட்டது. கெய்ரோ சர்வதேச விழாவிலும் இஸ்ரேலிய படங்களுக்கு அனுமதி இல்லை. கென் லோச் போன்ற பல படைப்பாளிகள் 2009 ரொறன்ரோ விழாவை கடுமையாகக் கண்டித்துள்ளார்கள்.

பல சர்ச்சைக்குரிய படங்களையும் ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழா திரையிட்டுள்ளது. மைக்கல் மூரின் அமெரிக்காவை விமர்சிக்கும் விவரணத் திரைப்படங்கள் ரொறன்ரோ விழாவில் திரையிடப்பட்டுள்ளன. அற்றம் எகோயனின் அரசியல் திரைப்படங்கள் இவ்விழாவில் திரையிடப்பட்டுள்ளன. இவரது படங்கள் பெரும்பாலும் ஆர்மேனிய மக்களை, துருக்கி படுகொலை செய்தமையை மையப்படுத்திய படங்களாகும். இவர் ஒரு கனடிய இயக்குநர் என்பது குறிப்பிடத்தக்கது.

ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழாவின் தெரிவுகளையும் கனடிய அரசியல் போக்கையும் இணைத்துப் பார்க்க

வேண்டிய அவசியம் உள்ளது. 1970-களில் பியறி எலியட் ரூடோ கனடாவை அமெரிக்காவிலிருந்து வேறுபடுத்த விரும்பினார். இது சர்வதேச அரசியல் ரீதியாகவும், வணிக ரீதியாகவுமாகவிருந்தது. அக்காலகட்டத்தில் பியறி எலியட் ரூடோ இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தினார். சிலியில் அல்லண்டே அமெரிக்க உதவியுடன் கொல்லப்பட்ட பின்னர், சுமார் ஏழாயிரம் அகதிகளை கனடா ஏற்றுக்கொண்டது. அதே சமயம் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவும் அதிகளவு இலத்தீன் அமெரிக்க படங்களைத் திரையிட்டது. இது இலத்தீன் அமெரிக்க படங்கள் சர்வதேச கவனத்தைப் பெற ஏதுவாகின. 1980-களில் திரையிடப்பட்ட சுமார் 35 வீதமான படங்கள் இலத்தீன் அமெரிக்க படங்களாகவிருந்தன. 1976-2023-க்குமிடைப்பட்ட காலப்பகுதியில் ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் 67 கியூபா நாட்டுப் படங்கள் திரையிடப்பட்டுள்ளன.
*

## ரொறன்ரோ விழாவும் தமிழ்த் திரைப்படங்களும்:

எண்ணிக்கையில் மிகக் குறைவான தமிழ்ப் படங்களே ரொறன்ரோ திரைப்பட விழாவில் திரையிடப்பட்டுள்ளன. மணிரத்தினத்தின் படங்கள் திரையிடப்பட்டுள்ளன. காஞ்சிவரம் போன்ற படங்களும் திரையிடப்பட்டுள்ளன. சந்தோஸ் சிவனின் ரெரறிஸ்ட், மல்லி போன்ற திரைப்படங்களும் திரையிடப்பட்டுள்ளன. (என் நினைவிலிருந்தவை இவையாகும்).

புலம் பெயர் கனடிய இலங்கைத் தமிழர்களில் ஒருவரது படமே இது வரையில் திரையிடப்பட்டுள்ளது. வி.ரி. நயனின் This Place 2022-இல் திரையிடப்பட்டது. 2024-இல் லிற்றில் யப்னா என்ற சர்ச்சைக்குரிய படமும் திரையிடப்பட்டது. இதனை பிரான்ஸ் வாழ் தமிழர் இயக்கியிருந்தார்.

கனடா வாழ் தமிழர்கள், திரைப்படங்களைப் பார்க்கும் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் பொழுது, ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவின் திரைப்படங்களைப் பார்த்தவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் மண்ணில் ஒரு சர்வதேச விழா, அதுவும் உலகின் மிகச் சிறந்த ஐந்து திரைப்பட விழாக்களில் ஒன்று நடைபெறுகின்றது. இதனை நாம் புறந்தள்ளிவிடுகின்றோம். எமக்கான சினிமாவை நாம் உருவாக்கவேண்டுமாயின் நாம் நிச்சயமாக இவ்விழாவில் சென்று படங்களை பார்த்து, எம்மை மெருகேற்ற வேண்டும். கனடாவில் திரைப்படம் தயாரிப்பவர்கள், கலைஞர்கள், இயக்குநர்கள் கூட இவ்விழாவில் படங்களை பார்ப்பது குறைவு. தமிழ்ப் படங்கள் திரையிடப்படும் பொழுது மட்டும் தமிழ் முகங்களை காணக்கூடியதாகவுள்ளது. எமது பங்களிப்பு இவ்விழாவில் குறைவாகவிருக்கின்றது. அதே சமயம் ‘லிற்றில் ஜப்னா’ போன்ற படங்கள் திரையிடப்பட்ட போது எதிர்க்குரல்கள்கூட எழுப்பப்படவில்லை. தாய்வீடு தவிர்ந்த எந்த ஒரு ஊடகமும் இதனை எதிர்க்கவில்லை. அமைப்புகள் அமைதி காத்தன. பல அமைப்புகளுக்கு இப்படம் திரையிடப்பட்டதே தெரியாது.

ஊடகங்கள் ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழாவிற்கு தமிழ் மக்கள் சென்று பார்வையிடுவதை ஊக்கப்படுத்த வேண்டும்.

## ஐம்பது வருடங்கள் – 13,600 திரைப்படங்கள்:

திரைப்பட விழாக்கள் நீண்ட காலமாக சினிமா உலகில் கலை வெளிப்பாடு, படைப்பாற்றல் மற்றும் கலாசார பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் தளங்களாகக் கொண்டாடப்படுகின்றன. இருப்பினும், திரைப்படங்களை வழங்குதல் என்ற அவற்றின் முதன்மைப் பணிக்கு அப்பால் இந்த நிகழ்வுகள், அரசியல் கருப்பொருள்கள், சித்தாந்தங்கள் மற்றும் சர்ச்சைகள் முன்னணியில் வரும் அரங்கங்களாகவும் செயற்படுகின்றன.

கலை, குறிப்பாக சினிமா, எப்போதும் அரசியல் சார்ந்தது. அது ஒவ்வொரு நாட்டிலும் நிலவும் அரசியல் யதார்த்தங்களின் கலாச்சார்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும். அது வழக்கமாக ஒரு உணர்ச்சியற்ற திசைதிருப்பும் கருவியாக அல்லது இருக்கும் அதிகார அமைப்பிற்கு சவால் விடுவதாகவும் அமையும். மேற்கத்தேய ஏகாதிபத்தியத்திற்கு சவாலாக இருக்கும். பிற நாடுகளின் படங்கள் திரையிடப்பட்டாலும் உள்ளடகத்துக்காக வடிகட்டப்படுகின்றன. அதாவது தெரிவில் மிகக் கவனமாக இருக்கின்றார்கள். சோசலிச நாடுகளிலிருந்து வெளிவரும் படங்கள் மேற்கு நாடுகளுக்கு எதிரானதாக இருக்கவேண்டும். கியூபாவிலிருந்து இது வரை 67 படங்கள் திரையிடப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் கியூபா அரசியலையும், சமூக, கலாச்சார சிக்கல்களையும் வெளிப்படுத்துவதாகவே உள்ளன. அவ்வாறான படங்களே தேர்வு செய்யப்படுகின்றன. பாசிசத்துக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான குரல்கள் அதிகளவில் ரொறன்ரோ திரைப்பட விழாவில் ஒலிக்க வேண்டும், ஒளிர வேண்டும். ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழா ஹொலிவூட்டின் காட்சியறையாக மட்டும் நின்றுவிடக்கூடாது.

## பிற்குறிப்பு:

ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவின் ஐம்பதாவது ஆண்டு விழா செப்ரெம்பர் 4-இலிருந்து 14 வரை நடைபெறுகின்றது. கடந்த பல வருடங்களாக ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழாவில் இது வரை காட்டப்பட்ட ஐம்பது சிறந்த படங்கள் மீண்டும் திரையிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. சந்தர்ப்பம் கிடைத்தால் இம்முறை ஆகக் குறைந்தது ஒரு படத்தையாவது பாருங்கள். நுழைவுச் சீட்டுகளைக் கணினியின் ஊடாகவே பெற்றுக்கொள்ளலாம்.

நுழைவுச் சீட்டுகளுக்கு:
https://am.ticketmaster.com/tiff/

(இக்கட்டுரையை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட எவ்வகை ஊடகத்திலும் தாய்வீட்டின் அனுமதியின்றி மீள்பிரசுரிக்கக் கூடாது)



rathan@thaiveedu.com

# நவீன உலகும் உறவுகளின் சிதைவும்

# அன்டோனியோனியின் இருத்தலியல் சினிமா

- சொர்ணவேல்



### நவீன மாந்தரின் அக உலகம்: அந்நியமாதலும் இருத்தலியல் தாகமும்



அவற்றின் சுருக்கமான, தியானநிலை போன்ற பாணிக்கு அடியில், அன்டோனி யோனியின் படங்கள் அரசியல் மற்றும் சமூக விமர்சனத்தின் வளமான இழையைக் கொண்டுள்ளன; இருப்பினும் அவை ஒரு நுட்பமான, சிந் தனையைத் தூண்டும் தன்மையுடன் வெளிப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, அவரது படைப்புகள் நவீன உலகில் தனிநபர்களின் அந்நியமாதல், அவரது கதாபாத்திரங்களைப் பீடித்திருக்கும் இருத்தலியல் அர்த்த நெருக்கடிகள், மற்றும் சமகால முதலாளித்துவ சமூகத்தின் ஆன்மீக வெற்றிடம் பற்றிய ஓர் ஆழமான பார்வையை முன்வைத்த பட்சத்திலும் அன்டோனியோனியின் படங்கள் வெளிப்படையாக அரசியல் சார்ந்தவையோ அல்லது போதனை ரீதி யானவையோ அல்ல எந்த மேடைப் பேச்சுகளோ அல்லது தெளிவான கருத் தியல் செய்திகளோ அவற்றில் இல்லை - ஆயினும் அவை நவீனத்துவமும் அதன் அதிருப்திகளும் பற்றிய ஆழ்ந்த நோயறிதலை வழங்குகின்றன. வெறுமை, துண்டிப்பு, மற்றும் அர்த்தத்திற்கான தேடல் என்ற கருப்பொ ருள்கள் மூலம், அன்டோனியோனி தனது காலத்தின் அரசியல்-தத்துவ சிக்கல் களில் ஈடுபடுகிறார்: பாரம்பரிய மதிப்புகளின் அரிப்பு, நுகர்வோர் கலாசாரம் மற்றும் வெகுஜன ஊடகங்களின் எழுச்சி, மற்றும் போருக்குப் பிந்தைய பூர்ஷ்வா சமூகத்தின் நிலையற்ற தன்மை.



அந்நியமாதல் என்பது அன்டோனியோனியின் கதாநாயகர்களின் வாழ்வை வரையறுக்கும் ஒரு நிலையாகும். உணர்ச்சி ரீதியாக, அவர்கள் தங்களைச் சுற்றியுள்ளவர்களிடமிருந்து - காதலர்கள், நண்பர்கள், குடும்பத்தினர் - அந்நியமாகியுள்ளனர்; மேலும் பெரும்பாலும் தங்களிலிருந்தும் கூட (தெளிவான நோக்கம் அல்லது ஆசை இல்லாதவர்களாக). இந்தப் பரவலான அந்நியமாதல், அன்டோனியோனியை சினிமா மூலம் இருத்தலியல் தத்துவவாதிகளுடன் ஒருங்கிணைவராக ஆக்கியுள்ளது. அவரது கதாபாத்திரங்கள், ஆல்பர் காமு அல்லது ழான்-பால் சார்த்தரின் நாவல்களில் வரும் நோக்கம் இல்லாத உருவங்களைப் போலவே வாழ்க்கையில் அலைந்து திரிகின்றன; இது "இருத்தலியல் சோர்வு" என்று அழைக்கப்படலாம். அவர்களால் பெரும்பாலும் தங்கள் ஆழமான உணர்வுகளை வெளிப்படுத்தவும் உண்மையான தொடர்புகளைக் கண்டறியவும் முடிவதில்லை.



உதாரணமாக, 'லாவென்டூரா'வில், கிளாடியாவும் சாண்ட்ரோவும், அன்னா மாயமான பிறகு ஒருவரையொருவர் தேற்றிக்கொள்ளவும் அன்பைக் கண்டறியவும் முயற்சிக்கின்றனர்; ஆனால் அவர்களின் நெருக்கம் நிலையற்றதாகவும், குற்ற உணர்ச்சி மற்றும் நிச்சயமற்ற தன்மையால் சூழப்பட்டதாகவும் உள்ளது. ஒரு காட்சியில், கிளாடியா தன்னால் கூட வெளிப்படுத்த முடியாத காரணங்களுக்காகக் கண்ணீர் விடுகிறார்; இது ஒரு பரவலான பதட்டத்தை வெளிப்படுத்துகிறது. 'லா நோத்தே'-யில், லிடியா (ழான் மொரோ) தனது கணவரின் துரோகங்களாலும், விருந்தினர்களின் மேலோட்டமான அரட்டையாலும் அந்நியப் படுத்தப்பட்டு, இரவு விருந்தில் அலைந்து திரிகிறார். விடியற்காலையில், அவர் இனி அவனை நேசிக்கவில்லை என்று ஒப்புக்கொள்கிறார்; இது ஒரு வேதனையான நேர்மையான தருணம்; ஆயினும், அத்தருணம் எந்த விமோசனத்தையும் கொண்டு வரவில்லை, வெறுமையின் ஒப்புதலை மட்டுமே அளிக்கிறது. பீட்டர் வெல்லர் (அன்டோனியோனியின் படங்களில் நடித்தவர்) அவதானித்தபடி, அன்டோனியோனி "மக்களுக்கு இடையிலான வெற்றிடத்தின் யதார்த்தம் மற்றும் நவீன காலத்தில் காதலர்களுக்கு இடையிலான இந்த இடைவெளியைக் கடப்பதில் உள்ள சிரமத்தைப் பற்றி உண்மையான திரைப்படங்களை உருவாக்கத் தொடங்கிய முதல் நபர்... மேலும் அவர் ஒருபோதும் உங்களுக்கு ஒரு பதிலைக் கொடுப்பதில்லை - அதுதான் அழகான விஷயம்." இந்த "மக்களுக்கு இடையிலான வெற்றிடம்" அன்டோனியோனியின் அரசியல் பார்வையின் மையத்தில் உள்ளது: இந்த நவீன சமூகம், அதன் அனைத்து முன்னேற்றங்களுடனும், மனித உறவுகள் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் ஒரு வெற்றிடத்தை எவ்வாறு விட்டுவிடுகிறது என்பதன் கூர்மையான அவதானிப்புடன் இணைந்த ஒரு விமர்சனமாகும்.

அன்டோனியோனியின் படைப்புகளின் இருத்தலியல் பரிமாணம், அவரது கதாபாத்திரங்கள் (மற்றும் அதன் நீட்சியாகப் பார்வையாளர்கள்) அனுபவிக்கும் தெளிவான அர்த்தம் அல்லது தீர்வு இல்லாததில் தெளிவாகத் தெரிகிறது. அவர்கள் பெரும்பாலும் நிகழ்வுகளின் அபத்தத்தை அல்லது தங்கள் சொந்த செயல்களின் அர்த்தமின்மையை எதிர்கொள்கின்றனர். 'ப்ளோ-அப்'-பில், புகைப்படக் கலைஞர்-கதாநாயகன் ஒரு கொலை நடந்ததை நிரூபிக்கத் தன்னை வருத்தி சோர்வடையச் செய்த பிறகு, சாத்தியமான உடல் மறைந்துவிடுகிறது; மேலும் வேறு யாரும் அவருடைய செய்கையில் எதுவும் தவறு என்று சுட்டவில்லை. அத்தகைய சூழலில் அவர் தனது சொந்த யதார்த்தத்தைச் சந்தேகிக்கிறார். ஒரு பாவனை டென்னிஸ் போட்டியை அவர் பார்த்து இறுதியாக அவர் அவ் "விளையாட்டில்" பங்கேற்கும்போது படம் முடிகிறது; இது குறியீட்டு ரீதியாக நிச்சயமற்றதன்மைக்கு அடிபணிவதைக் காட்டுகிறது - உண்மை அறிய முடியாததாக இருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஓர் இருத்தலியல் சைகையைப் போன்றது அவரது அபத்த நடவடிக்கை.





போலவே, 'லெக்லிஸே' ஒரு சோகமான மறுசந்திப்பு அல்லது ஒரு நாடகப் பிரிவுடன் முடிவடையவில்லை; மாறாக ஒரு காதல் உறவு அமைதியாக ஆவியாக பரிணாமம் அடைகிறது; இது வாழ்க்கை சில சமயங்களில் நாம் ஏங்கும் தீர்வுகள் அல்லது நமக்கு வேண்டிய முக்கியத்துவத்தை வழங்கத் தவறிவிடுகிறது என்று கூறுவது போல உள்ளது. இத்தகைய சித்தரிப்புகள் இருத்தலியல் தத்துவத்தை எதிரொலிக்கின்றன; அங்கு தனிநபர்கள் அலட்சியமாகவோ அல்லது உள்ளார்ந்த அர்த்தமற்றதாகவோ தோன்றும் ஒரு உலகில் வாழ வேண்டும் அல்லது வாழபழகிக் கொள்ளவேண்டும். அன்டோனியோனியின் வடிவம், கதை இயக்கவியல் அல்லது ஒழுக்கவியல் மூலம் செயற்கை அர்த்தத்தைத் திணிக்க மறுப்பதன் மூலம் இந்த இருத்தலியல் கருப்பொருளை வலுப்படுத்துகிறது. மாறாக, கதாபாத்திரங்களைப் போலவே பார்வையாளர்களும் தெளிவின்மையை எதிர்கொள்கின்றனர்; மேலதிகமாக, அப்பொருளின்மையுடன் போராட வேண்டும். ரோலண்ட் பார்த் அன்டோனியோனியின் இந்தக் குணத்தைப் பாராட்டியுள்ளார்: "இயக்குநர் ஓர் ஒழுக்கவியலாளர் அல்லது சித்தாந்தவாதி அல்ல, மாறாக ஒரு வகையான "கற்பனாவாதி... வரவிருக்கும் புதிய உலகைக் கண்டறிய முயல்கிறார்" என்றும், அன்டோனியோனியின் கலை "அர்த்தத்தின் பாதையை எப்போதும் திறந்ததாகவும், தீர்மானிக்கப்படாததாகவும் விட்டுவிடுவதில் உள்ளது" (பார்த்). வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பதில்களை நிறுத்தி/ஒத்தி வைப்பதன் மூலம், அன்டோனியோனி நம்மை ஒரு இருத்தலியல் நிலைக்குத் தள்ளுகிறார் - நாம் விளக்கமளிக்க வேண்டும், சந்தேகிக்க வேண்டும், மற்றும் நம் சொந்த அர்த்தத்தைக் கண்டறிய வேண்டும்; அவரது கதாபாத்திரங்கள் தங்கள் வாழ்க்கையில் செய்ய முயற்சிப்பது போலவே.



அன்டோனியோனியின் படங்களில் அந்நியமாதல், ஒரு பிந்தைய மத, பிந்தைய பாரம்பரிய சூழலுடனும் இணைக்கப்பட்டுள்ளது. வெக்ஸ்மேன் அன்டோனியோனியை ஒரு "பிந்தைய மத, மார்க்சிஸ்ட் மற்றும் இருத்தலியல் அறிவாளி" என்று விவரிக்கிறார். அவரது உலகப் பார்வை என்பது நாம் வாழும் உலகம் பழைய நிச்சயத்தன்மைகள் (மதம் அல்லது பாரம்பரிய ஒழுக்கம் போன்றவை) மறைந்துவிட்ட ஒரு வெளியாகும் என்று பரிந்துரைக்கிறது. அன்டோனியோனி 1960-இல் பேசியபோது, ஒரு விஞ்ஞான, நவீன காலத்திலும் கூட, "மனிதகுலம் இன்னும் ஒரு கடுமையான மற்றும் ஒரே மாதிரியான ஒழுக்கத்தால் வாழ்கிறது... நாம் [அந்த ஒழுக்க மனப்பான்மைகளை] சோர்வடையச் செய்துவிட்டோம்... ஆனால் நம்மால் புதிய வற்றைக் கண்டு பிடிக்க முடியவில்லை" என்ற உண்மையை விமர்சித்தார். இந்தக் கூற்று, அவரது கதாபாத்திரங்கள் வாழும் ஒழுக்க மற்றும் இருத்தலியல் வெற்றிடத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது: அவர்கள் பழைய மதிப்புகளை நம்பவில்லை; ஆயினும் புதிய வழிகாட்டும் கொள்கைகள் அவர்களிடத்தில் இல்லை; இது குழப்பம் மற்றும் செயலற்ற நிலைக்கு வழி வகுக்கிறது.



'லா நோத்தே'-யில், உதாரணமாக, கதாபாத்திரங்கள் சிதைந்த சமூகக் வெளிகளில் எந்த ஒழுக்க நெறிகளும் அல்லது நேர்மையான உணர்ச்சிப் பிணைப்புகளும் இல்லாமல் அலைந்து திரிகின்றனர் - திருமண வாக்குறுதிகள் மிகக் குறைவாகவே உள்ளன; நட்புகள் மேலோட்டமானவை; ஆன்மீக நம்பிக்கை இல்லை. அந்நியமாதல் தனிப்பட்டது மட்டுமல்ல, நாகரிகமானது: தங்களின் கடந்தகால கூட்டமைப்பை இழந்த ஒரு சமூகத்தில் அலைந்து திரியும் மக்களிடை இருத்தலியல்/அந்நியமாதல் இவ்வாறு ஒரு பகுதியளவு-அரசியல் கருப்பொருளாக வெளிப்படுகிறது; இது நூற்றாண்டின் நடுப்பகுதியில் நவீன மனித குலத்தின் நிலையை பிரதிபலிக்கிறது - பாரம்பரியத்திலிருந்து துண்டிக்கப்பட்டு, விரைவான மாற்றத்தால் அமைதியற்று, ஒன்றிணைவதற்கான அவகாசமற்ற நெருக்கடியை எதிர்கொள்கிறது. அன்டோனியோனியின் சினிமா இந்த நிலையை வெளிப்படையான வர்ணனை இல்லாமல் காண்பியல் மொழியின் மூலம் ஆவணப்படுத்துகிறது; பார்வையாளர்களை அதன் மையத்தில் அமர வைத்து அதன் விளிம்புகளை உணர அனுமதிக்கிறது.

## அன்டோனியோனியின் பார்வையில் சமகால சமூகத்தின் ஆன்மீக வெற்றிடமும், தொழில்நுட்பத்தின் தாக்கமும்



அன்டோனியோனியின் கவனம் தனிப்பட்ட உளவியல் மற்றும் உறவுகள் மீது இருந்தாலும், அவரது நவீன உலக சித்தரிப்பில் ஓர் அடிப்படை சமூக மற்றும் அரசியல் விமர்சனம் இழையோடுகிறது. அவரது படங்கள் பெரும்பாலும் போருக்குப் பிந்தைய காலத்தின் பூர்ஷ்வா மற்றும் அறிவாளிகளின் சூழலை ஆராய்கின்றன; இது செல்வசெழிப்பின் கீழ் மறைக்கப்பட்ட அதிருப்தியின் உலகம் என்பதை வெளிப்படுத்துகிறது. ரிசர்ட் ப்ரோடி தனது நியூ யார்க்கர் கட்டுரையில் குறிப்பிட்டபடி, அன்டோனியோனி "ஒரு புதிய பூர்ஷ்வா சமூகத்தைப் படம்பிடித்தார்; அது உடல் ரீதியான படைப்பிலிருந்து அறிவுசார் படைப்புக்கு, திடப்பொருளிலிருந்து அதன் சாரத்திற்கு, விஷயங்களிலிருந்து உருவங்களுக்கு மாறியது; மற்றும் [அதனுடன்] தனிப்பட்ட அடையாளத்தின் மற்றும் சுய சம்மத நெருக்கடி ஏற்பட்டது" (நியூ யார்க்கர்). மோனிகா விட்டியுடன் அவரது 1960-களின் படங்களைக் குறிக்கும் இந்த அவதானிப்பு, அன்டோனியோனியின் கதாபாத்திரங்கள் துரிதமாக மாறிக்கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது: ஒரு நவீன, நகர்ப்புற, முதலாளித்துவ சமூகம், அங்கு பாரம்பரிய உற்பத்தி (உடல் உழைப்பு, உறுதியான படைப்பு)யிலிருந்து நவீன ஊடகம், நிதி மற்றும் தொழில்நுட்ப உலகிற்கு வழிவிடுகிறது. 'லாவென்டூரா'வில் சாண்ட்ரோ கட்டடங்களைக் கட்டாத ஒரு கட்டடக் கலைஞர், ஆனால் ஊக வணிகம் செய்கிறார். 'லா நோத்தே'-யில் ஜியோவானி, அறிவுசார் ரீதியாக வெறுமையாக உணரும் ஒரு வெற்றிகரமான நாவலாசிரியர். 'லெக்லிஸே'-இல் பியரோ, பணம் என்ற சுருக்கமான காகிதத் தொகைகளை வர்த்தகம் செய்யும் ஒரு பங்குத் தரகர், மற்றும் 'ப்ளோ-அப்'பில் தாமஸ், உருவங்களால் ஆட்கொள்ளப்பட்ட ஒரு ஃபேஷன் புகைப்படக் கலைஞர். இந்தத் தொழில்கள், கதாநாயகர்களை நவீனமயத்தின் குறியீடாக அல்லது அந்நியமாதலின் சாத்தியங்கள் நிறைந்த நிரந்தரத் தன்மை அற்ற உருவங்களாக அரங்கேற்றி, அன்டோனியோனியின் கதையாடல் உலகத்தின் திரவத்தன்மையை குறிக்கின்றன.



அன்டோனியோனியின் படங்களில் நவீனத்துவம் உற்சாகமானதும் கூட. மற்றும் ஆழமானதும் அமைதியற்றதுமானதுமான ஒன்று - இது புதிய சுதந்திரங்களையும் வாழ்க்கை முறைகளையும் வழங்குகிறது; ஆயினும் வாழ்க்கையை நம்பகத்தன்மையற்றதாகத் தோன்றச் செய்கிறது. அன்டோனியோனியின் விமர்சனம் நுட்பமானது: இந்த சிறப்புரிமை பெற்ற வேட்கை நிறைந்த கதாபாத்திரங்களில், சலிப்பு மிகுந்த மற்றும் இலக்கு இல்லாத அவர்களின் நிலையில், நாம் பிந்தைய முதலாளித்துவ சமூகத்தின் ஆன்மீக வெற்றிடத்தின் வேறு ஓர் உருவத்தைக் காண்கிறோம். அன்டோனியோனியின் அரசியல், தொழில்நுட்பம் மற்றும் ஊடகம் உணர்வை வடிவமைக்கும் மேலாதிக்க அதிகார அமைப்பு என்ற கருப்பொருளுடனும் ஈடுபடுகின்றன.
ரிசர்ட் ப்ரோடியின் பார்வையில், அன்டோனியோனியின் படங்கள் எவ்வாறு "புதிய தகவல்தொடர்பு முறைகள், முக்கியமாக வெகுஜன ஊடகம், மற்றும் உயர் தொழில்நுட்பத் தொழில்களான, கட்டடக்கலை, இசை, அரசியல் மற்றும் ஃபேஷன் உட்பட, அவற்றை உருவாக்கும் கல்வி பெற்ற வெள்ளை காலர் சிந்தனையாளர்கள் மீது ஒரு பின்னூட்ட விளைவைக் கொண்டுள்ளன" என்பதை ஆராய்கின்றன.



வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவரது கதாபாத்திரங்கள் நவீன உலகின் தொழில்நுட்பத்தின் படைப்பாளர்களும் பாதிக்கப்பட்டவர்களும் ஆவர். 'ப்ளோ-அப்' இந்த சுயம்சார்ந்த பொறி பற்றி வெளிப்படையாகக் கூறுகிறது: ஒரு புகைப்படக்காரர் (பிம்பங்களை உருவாக்குபவர்) தான் எடுத்த ஒரு படத்தின் கைதியாக மாறுகிறார்; தனது சொந்த கலைப்படைப்பிலிருந்து யதார்த்தத்தை வேறுபடுத்த முடியவில்லை. இந்தப் படம் 1960களின் "ஸ்விங்கிங் லண்டன்" பண்பாடைப் பற்றிய ஒரு விமர்சனமாக வாசிக்கப்படலாம். பாப் கலை, நவீன ஃபேஷன் மற்றும் ராக் இசை ஆகியவற்றின் ஒரு கவர்ச்சிகரமான மேற்பரப்பிற்கு அடியில் ஒரு வெற்றிடமும் யதார்த்த இழப்பும்/புறக்கணிப்பும் உள்ளது என்று பரிந்துரைக்கிறது. போலவே, 'ரெட் டெசர்ட்' தொழில்துறை நவீனத்துவம் மற்றும் மனித ஆன்மாவின் மீதான அதன் தாக்கம் பற்றியது: இது சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட உலகில் தொழிலாளர்களின் அந்நியமாதல் பற்றி நுட்பமாக எதிர்வினையாற்றுகிறது.



ரெட் டெசெர்ட்டில் ஜுலியானாவின் நரம்பியல் பிரச்சினை அவளது தனிப்பட்ட விசித்திர சிக்கலாகக் காட்டப்படவில்லை; மாறாக ஆன்மா அற்ற தொழிற்சாலைகள் மற்றும் இடைவிடாத தொழில்நுட்பச் சத்தத்தின் மத்தியில் வாழ்வதன் ஒரு அறிகுறியாகக் காட்டப்படுகிறது. ஒரு காட்சியில், தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கின்றனர் அல்லது இயந்திரங்கள் பழுதடைகின்றன; இது தொழில்துறை சூழலில் சமூக இணக்கமின்மையைக் குறிக்கிறது. ஜுலியானாவின் தனிப்பட்ட அச்சம், தொழில்நுட்பத்தின் மனிதத்தன்மையற்ற விளைவுகளைப் பற்றிய பரந்த பதட்டங்களுடன் ஒத்திருக்கிறது. அன்டோனியோனி இந்தப் பிரச்சினைகளைப் பற்றிப் பிரசங்கிக்கவில்லை; மாறாக பார்வையாளரின் உணர்ச்சி அனுபவத்தைக் கதாபாத்திரங்களுடன் சீரமைப்பதன் மூலம், அவர் நவீன வாழ்க்கையை உள்ளிருந்து விமர்சிக்கிறார் - பிந்தைய நவீனத்துவம் உருவாக்கும் அந்நியமாதலை நாம் உணர்கிறோம்.



அன்டோனியோனியின் பாலினம் மற்றும் உறவுகள் பற்றிய அணுகுமுறையும் சமூக வர்ணனையைக் கொண்டுள்ளது. பல படங்களில், மைய உணர்வோட்டம் ஒரு பெண்ணுடையதாக (பெரும்பாலும் மோனிகா விட்டியின் கதாபாத்திரங்களுடையதாக) இருக்கிறது; மேலும் அவரது கண்ணோட்டத்தின் மூலம் நாம் ஆண்களின் மற்றும் சமூகத்தின் முட்டாள்தனங்கள் அல்லது இரக்கமற்ற தன்மையைக் காண்கிறோம். ‘லாவென்டுரா’-வில், கிளாடியா ஆண்களை விட மிகவும் நேர்மையானவராகவும் இயல்பிலேயே தேடுதல் நிறைந்தவராக இருக்கிறார். ‘ரெட் டெசர்ட்’ ஒரு பெண்ணின் நிலையற்ற உள் உலகத்தை ஆழமாக ஆராய்கிறது. பெண்களின் அகநிலை அனுபவத்தில் கவனம் செலுத்துவதன் மூலம், அன்டோனியோனி தனது காலத்தின் பாலின இயக்கவியல் மற்றும் எதிர்பார்ப்புகளை, அடியில் அமைதியாகப் பாதிக்கப்படுபவர்களின் கண்ணோட்டத்தில் இருந்து வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்.



நுகர்வோர் மற்றும் முதலாளித்துவம் பற்றிய விமர்சனம் அன்டோனியோனியின் ‘ஜப்ரிஸ்கி பாயிண்ட்’ (1970) படத்தில் மிகவும் வெளிப்படையாக இருக்கிறது. 60-களின் பிற்பகுதியில் வடக்கு அமெரிக்காவை களமாகக் கொண்ட இந்தப் படம், அமெரிக்க நுகர்வோர் சமூகத்தின் வெற்றிடத்துடன் எதிர்கலாசாரத்தின் சாத்தியங்களைக் கொண்டு போராடுகிறது. அதன் புகழ்பெற்ற வெடிப்பு உச்சக்கட்டம் - ஒரு நவீன வீடு மற்றும் அதன் அனைத்து நுகர்வோர் பொருட்களுடன், ரெஃப்ரிஜெரேடர் உட்பட, ஸ்லொமோஷனில் மிக மெதுவாக, வெவ்வேறு கோணங்களில் வெடித்துச் சிதறுகிறது. அது விமர்சகர்கள் குறிப்பிட்டபடி பொருள் முதல்வாதத்தின் ஒரு காட்சி ரீதியான கவிதை குற்றச்சாட்டு. ‘ஜப்ரிஸ்கி பாயிண்ட்’ தன்னளவில் முரண்பாடானது என்றாலும், அன்டோனியோனியின் அரசியல் துணிச்சலை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இதேபோல், ஜாக் நிக்கல்சன் நடித்த ‘தி பேசஞ்சர்’



(1975), தன்னிலை மற்றும் அடையாளம் பற்றிய ஒரு பிரத்தியேக கதை என்றாலும், ஆப்பிரிக்க விடுதலைப் போர்கள் மற்றும் ஆயுதக் கடத்தல் தொடர்பான பின்னணியைக் கொண்டுள்ளது. கதாநாயகனின் இருத்தலியல் நெருக்கடியை உலக அரசியல் மோதல் மற்றும் வெளிநாடுகளில்/கீழைத்தேய நாடுகளில் மேற்கத்திய/அமெரிக்க இடையீட்டின் பின்னணியில் அமைக்கிறது. இந்த எடுத்துக்காட்டுகள் அன்டோனியோனி தனது காலத்தின் அரசியலுக்கு இசைவாக இருந்தார் என்பதை விளக்குகின்றன, அவர் அவற்றை மறைமுகமாகக் கையாண்டாலும் கூட.



சுருக்கமாக, அந்நியமாதலை தனது கருப்பொருளாகக் கொண்டு, அன்டோனியோனி ஓர் இருத்தலியல்/அரசியல் விமர்சனத்தை வைக்கிறார்: நவீன சமூகம், அதன் அனைத்து தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாதனைகளுடன் மனித ஆன்மாவை வறியதாக்குகிறது; உறவுகளைக் காலி செய்கிறது; மேலும், தனிநபர்கள் ஒழுக்க மற்றும் உணர்ச்சி தெளிவின்மை நிறைந்த ஒரு நிலப்பரப்பில் வாழ்வின் உட்பொருளைத் தேடுகிறார்கள். அவரது படங்கள் “நவீனத்துவத்தின் அதிருப்திகளை” ஒரு வாதத்தால் அல்ல, நுணுக்கமான அவதானிப்பால் பதிவு செய்கின்றன. இதன் விளைவாக, பல்லடுக்குகள் கொண்ட அன்டோனியோனியின் சினிமா தனது “ஆழ்ந்த நிலையில் நவீனத்துவமானது” என்று விவரிக்கப்பட்டுள்ளது; இது அதன் காலத்தின் நோய்களை பல தசாப்தங்களுக்குப் பிறகு எதிரொலிக்கும் வகையில் சித்தரித்துள்ளது.

## உருவமும் உள்ளடக்கமும்: கலையின் பிரிக்க முடியாத ஆன்மா

அன்டோனியோனியின் மிகச்சிறந்த கலைமரபு, வடிவத்தையும் உள்ளடக்கத்தையும் அவர் ஒன்றிணைத்த விதத்தில் உள்ளது – சினிமா மொழியை (காட்சி அமைப்பு, படத்தொகுப்பு, கால அளவு, ஒலி வடிவமைப்பு) தனது கருப்பொருள்களை வலுப்படுத்தவும், தெளிவுபடுத்தவும் அவர் பயன்படுத்திய நுட்பம் அபாரமானது. அன்டோனியோனியின் படங்களில், பாணி என்பது கதைக்கு ஓர் அலங்காரச் சேர்க்கை மட்டுமல்ல; அதுவே கதைசொல்லலின் ஒரு பிரிக்க முடியாத அங்கம். அவரது படைப்புகளின் உணர்ச்சி மற்றும் அறிவுசார் உள்ளடக்கம், உரையாடல் அல்லது கதை நகர்வின் மூலம் மட்டுமல்லாமல், காட்சி மற்றும் கால ரீதியான வடிவங்களின் மூலமும் பார்வையாளருக்குக் கடத்தப்படுகிறது. இந்தப் பகுதி, அன்டோனியோனியின் முறையான நுட்பங்கள் எவ்வாறு அவரது படங்களின் உள்ளடக்கத்துடன் ஆழமாகத் தொடர்புறுகின்றன, சில சமயங்களில் உள்ளடக்கமாகவே மாறுகின்றன என்பதற்கான சில முக்கிய உதாரணங்களை ஆராய்கிறது.



## லாவென்டூரா: இல்லாமையும் புறக்கணிப்பும்



‘லாவென்டூரா’-வில் அன்னாவின் காணாமல் போவதும், அந்தக் கதை இழப்பைத் தீர்க்க மறுப்பதும் அன்டோனியோனியின் திரைக்கதையாடலின் மிகவும் பிரபலமான உத்தியாகும். இந்தக் நேரியல் கதைமுடிச்சுகளின் நீக்கம், ஒரு துணிவான முடிவு; இது ஆரம்பத்தில் பார்வையாளர்களைக் குழப்பியது (கேன்ஸ் திரைப்பட விழாவில் படம் கேலி செய்யப்பட்டது), ஆனால் இறுதியில் புரட்சிகரமாகக் கொண்டாடப்பட்டது. ஒரு மர்மம் தீர்க்கப்பட வேண்டும் என்ற பார்வையாளரின் எதிர்பார்ப்பை மீறுவதன் மூலம், அன்டோனியோனி நமது கவனத்தை வெளிப்புற நிகழ்வுகளிலிருந்து கதாபாத்திரங்களின் உள்மன நிலைகள் மற்றும் படத்தின் மற்ற பகுதிகளை வியாபித்துள்ள நிச்சயமற்ற சூழ்நிலைக்கு மாற்றுகிறார்.

உள்ளடக்கம் (ஒரு பெண் காணாமல் போனதற்கும் இலக்கற்ற அவளைச் சூழ்ந்துள்ளவர்களின் உள்ளீடற்ற வாழ்க்கையும்) வடிவத்துடன் (முழுமையற்ற தேடலாக விரியும் இலக்கற்ற கேமரா அசைவுகள் சட்டகத்தின் சீர்மையை பரிட்சார்த்தமாக முக்கிய தருணங்களில் மீறுவது) சரியாகப் பொருந்துகிறது. அன்னாவின் இல்லாமை படத்தில் ஒரு புலப்படும் இருப்பாக மாறுகிறது. அன்டோனியோனி அவள் காணாமல் போனபிறகு தனது கேமரா யுக்திகளின் மூலம் இல்லாமையை வலியுறுத்துகிறார்: வெற்றுத் தீவு நிலப்பரப்பின் நீண்ட, நிலையான காட்சிகள், அல்லது பின்னர், கிளாடியா ஒரு கூட்டத்தில் அன்னா இருக்கிறாள் என்று ஒரு கணம் நினைக்கும் அல்லது நினைவுக்கும் யதார்த்தத்திற்கும் உள்ள எல்லைகள் மங்கும் காட்சிகள், ஆனால் இறுதியில் அன்னாவின் உருவம் மறைந்துவிடும். இந்த முறையான அழகியல் கூறுகள் (வெற்று இடத்தில் கேமரா நீண்ட நேரம் இருப்பது, தவறான பார்வைக் கோணங்கள் மற்றும் விடுபடல்கள்) இல்லாமையை ஒரு புலப்படக்கூடிய பொருளாக ஆக்குகின்றன. ரோலண்ட் பார்த் குறிப்பிட்டபடி, அன்டோனியோனி இயக்குநராக “இருப்பதை தவிர்த்து இல்லாததை வலியுறுத்துகிறார்.”





அன்டோனியோனியின் சினிமாவில், பெரும்பாலும் காட்சிகளின் கட்டமைப்பும் பொருட்களும் நடிகர்களைப் போலவே கதையை முன்னகர்த்துகின்றன. 'லெக்லிஸே'-இன் இறுதி காட்சியில் ஒரு குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டு நிகழ்கிறது. சுமார் ஏழு நிமி டங்கள், அன்டோனியோனி EUR எனப்படுகிற ரோமானியப் புறந கரின் ஒரு தொகுப்பை அந்தி நேரத்தில் காட்டுகிறார்: அமைதியான தெருக்கள், நடைபாதையைத் தெளிக்கும் ஒரு தண்ணீர் வண்டி, ஒளிரும் ஒரு தெரு விளக்கு, முடிக்கப்படாத கட்டடத் தளம், ஒரு பீப்பாயின் நெருக்கமான காட்சி மற்றும் பிற சாதாரண விவரங்கள். இதற்கு முன்பு இங்கு சந்திக்க ஒப்புக் கொண்ட இரண்டு முக்கிய காதலர்களாகிய கதாபாத்திரங்களும் இந்த முக்கியமான் இறுதிக் காட்சிகளில் தோன்றவில்லை.



இந்த எதிர்மறையான தேர்வு படம் முழுவதும் மெதுவாகக் கட்ட மைக்கப்பட்ட மனித உறவின் தோல்வியை வெளிப்படுத்துகிறது. மனிதநேயமற்ற சூழலை மட்டும் காட்டுவதன் மூலம், தனிநபர் களின் உணர்ச்சி மற்றும் ஏமாற்றங்களுக்கு உலகம் அலட்சி யமாக இருப்பது நிதர்சனமானது என்பதை அன்டோனியோனி மறைமுகமாகக் கூறுகிறார். உள்ளடக்கம் (ஒரு உறவின் முடிவு, அல்லது இன்னும் துல்லியமாக அதன் சாத்தியக்கூறின் மறைதல்) முற்றிலும் வடிவத்தின் மூலம் வழங்கப்படுகிறது. பீடர் ப்ராட்ஷா மற்றும் பெனெலொபி ஹுஸ்டன், தி கார்டியனில் சரியாகக் குறிப்பிட்டது போல, அன்டோனியோனி கதைகளைச் சொல்வதில்லை, "அவரது முக்கியத்துவம் முற்றிலும் முறையான சொற்களை வெளிப்படுத்துவதிலிருக்கிறது." படம் முழுதும் காத் திருந்த காண்பியல்மொழி சொற்கள் வந்தமரும் நேரமாக லெக் லீஸேயின் மனிதர்களின் சொற்களை முழுவதுமாக வடிகட்டப் பட்ட க்ளைமேக்ஸைச் சொல்லலாம். சினிமொழியில் நவீனத்து வத்தை கூர்மையாக வடித்த விமர்சித்த காட்சிக்கோர்வை பிறி தொன்றில்லை.



நிறமும் அகவய அனுபவமும் ('ரெட் டெசர்ட்'): 'ரெட் டெசர்ட்' மூலம், அன்டோனியோனி காட்சி வடிவம் (குறிப்பாக நிறம் மற்றும் கலை வடிவமைப்பு) மற்றும் உளவியல் உள்ளடக்கத்தை இணைக்கும் புதிய வழிகளை சினிநவீனத்துவத்தின் நிகரில்லாத முன் னோடியாக உருவாக்கினார். அவருக்கு இணையாக விமர்சகர்கள் வாசிக்கும் ஒரே இயக்குநர் பிரஞ்சு (அபத்த) நகைச்சுவை மாஸ்டரான ழாக் டாட்டி ஆகும். அவரது ஆசிரியத்துவம் நவீன மானுடர்களின் தொழில்நுட்பத்துடனான போராட்டத்திலுள்ளது. உதாரணத்திற்கு, மன்சூர் ஹுலோட்டை மைய நாயகனாக கொண்ட "மன்சூர் ஹுலோட்ஸ் ஹாலிடே (1953), மோனோன்கிள/மை அன்கிள் (1958), ப்ளே டைம் (1967), மற்றும் ட்ராஃபிக் (1971).



அன்டோனியோனி அவர் விரும்பிய நிற விளைவுகளை அடைய நிலப்பரப்புகளையும் பழங்க ளையும் கூட மீண்டும் வண்ணங்களைத் தீட்டி வரைந்தார் என்பது பிரபலமானது. படத்தின் இயல் புக்கு மாறாக துணிச்சலான அல்லது மௌனமான வண்ணங்களின் பயன்பாடு, ஜுலியானாவின் உள் கொந்தளிப்பின் ஒரு குறிகாட்டியாகச் செயல்படு கிறது. உதாரணமாக, ஒரு காட்சியில் ஜுலியானா கூர்மையான வெள்ளை நிறத்தில் வரையப்பட்ட பெரிய தொழில்துறை சிலோக்களின்/குதிர்களின் வரிசை மற்றும் சிவப்பு கோடுகளை பிரதானமாகக் கொண்ட ஒரு கட்டடத்தின் அருகில் நிற்கிறார். அந்நிய சூழலால் மூழ்கடிக்கப்பட்ட உணர்வை காட்சி ரீதியாக வெளிப்படுத்தும் வகையில் அவரது சிறிய உருவம் இந்தக் வண்ணத் தொகுப்புகளுக்கு இடையே சிக்கியுள்ளது. காட்சிக்குக் காட்சி வண்ணச் செறிவையும் நிறத்தையும் மாற்றும் முறையான தேர்வு, ஜுலியானாவின் உணர்ச்சி ஏற்ற இறக்கங் களின் உள்ளடக்கத்தைத் நேரடியாகத் தொடர்புறுத் துகிறது. அறிஞர் டேவிட் ஃபோர்காஸ் ரெட் டெசர்ட்டில், "நிறம் தானே கதையாக மாறுகிறது," ஜுலியானாவால் சொல்ல முடியாததை இது நமக்குச் சொல்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

## ‘ப்ளோ-அப்’: உணர்வும் யதார்த்தமும்



‘ப்ளோ-அப்’பில் அன்டோனியோனியின் பரிட்சார்த்த முறைமை, யதார்த்தத்தின் தன்மையைக் கேள்வி கேட்க, புகைப் படம், தொகுப்பு மற்றும் ஒலி (அல்லது அதன் இல்லாமை) ஆகியவற்றைச் சுற்றி செயல்படுகிறது. ஒரு முக்கிய காட்சியில், கதா நாயகன் தாமஸ் தனது புகைப்படங்களை இருட்ட றையில் பெரிதாக்குவதைக் காட்டு கிறது; புல்லில் ஓர் உடலைக் காண் பிக்கும் ஒரு குறிப்பிட்ட பகுதியை அவர் வெறித்தனமாகப் விரிவாக்கு கிறார். உருப்பெருக்கிகளில் கேமரா கவனம் செலுத்தும்போது, அதன் குவி மையத்தில் படங்கள் கூர்மையிழந்து மணல் துகள்களைபோல உள்ளடக்கம் அற்ற வடிவங்களாக சுருங்கி சாம்பல் நிறப் புள்ளிகளாக மாறுகின்றன. இந்தக் காட்சியில் தொழில்நுட்பம் சார்ந்த விரிவாக்க முன்னேற்றம் (அல்லது பின்னடைவு) உண்மையின் விவரிக்க முடியாத ஓர் உருவகமாக அன்டோனியோனியின் கையொப் பமாக, நவீனத்துவத்தின் சினிதத்து வத்தின் சொல்லாடலாக திரண்டு நிற்கிறது. இறுதியாக, முடிவடையும் காட்சியின் புகழ்பெற்ற பாவனை டென்னிஸ் போட்டி உருவஉள்ளடக்க ஒத்திசைவைச் சொல்கிறது. பாவனை யாளர்கள் “விளையாடும்போதும்” தாமஸ் அதைப் பார்க்கும்போதும், உண்மையில் இல்லாத ஒரு துள்ளும் டென்னிஸ் பந்தின் சுற்றுப்புற ஒலியை அன்டோனியோனி மெதுவாகக் கொண்டு வருகிறார்; இது தாமஸின் அகநிலைக் கற்பனையுடன் படத்தின் புறநிலை யதார்த்தத்தைக் கலக்கிறது. அறிஞர் மில்லிசென்ட் மார்கஸ் கூறி யுள்ளபடி, “ப்ளோ-அப்பில், அன்டோ னியோனி சினிமா வடிவத்தின் மூலம் பார்வையாளர்களை அறிவாய்வியலின் நிச்சயமற்ற தன்மையை உணர வைக்கிறார்.”



## அன்டோனியோனியின் ‘தி பேசஞ்சர்’: ஒரு அடையாளப் பயணமும் அதன் மௌனமான முடிவும்



தி பேசஞ்சரிலிருந்து ஒரு காட்சி:

“அந்தப் பெண்: நிகழ்வுகள் எப்படி அரங்கேறுகின்றன என்பது விசித்திரமாக இல்லையா? நாம் வரைவது எண்ணற்ற கோலங்கள். விழியற்ற வாழ்வு எவ்வளவு கொடியது அல்லவா?

டேவிட் லாக்: விழியிழந்த ஒருவரை நான் அறிவேன். அவருக்கு ஏறக்குறைய நாற்பது வயதிருக்கும்போது, ஒரு மருத்துவ முயற்சியால் மீண்டும் உல கத்தைக் கண்டார்.

அந்தப் பெண்: அது எப்படியிருந்தது, சொல்லுங்களேன்?

டேவிட் லாக்: ஆரம்பத்தில் அவர் ஆனந்தத்தின் உச்சியில் இருந்தார்... மெய்யாகவே மிதந்தார். முகங்கள்... வண்ணங்கள்... விரிந்த நிலக்காட்சிகள். ஆனால் பின்னர், யாவும் மாறத் தொடங்கின. அவர் எண்ணியிருந்ததை விட இவ்வுலகு மிகவும் வறியதாக இருந்தது. எவ்வளவு அசுத்தம் இங்குள்ளன என்று எவரும் அவருக்கு எடுத்துரைக்கவில்லை. எவ்வளவு மாசுகள் என்றும். எங்கும் எதிலும் அவருக்கு கசடுகளே தென்பட்டன. அவர் பார்வையற்றிருந்த காலத்தில்... ஒரு ஊன்றுகோலின் துணையுடன் தனித்தே வீதியைக் கடப்பார். ஒளி மீண்ட பிறகோ... அச்சம் அவரை ஆட்கொண்டது. இருளிலேயே வாழத் தலைப்பட்டார். தன் அறையை விட்டு அவர் நீங்கியதே இல்லை. மூன்றாண்டு களுக்குப் பின் தன் உயிரை மாய்த்துக் கொண்டார்.”



மைக்கேலேஞ்சலோ அன்டோனியோனியின் இயக்கத்தில் 1975-ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் ‘தி பேசஞ்சர்’ (The Passenger), தனிமனிதனின் அடையாளம், இருத்தலியல் தேடல்கள், மற்றும் அந்நியமாதல் போன்ற ஆழமான கருப்பொருள்களை ஆராய்கிறது. இத்திரைப்படம், டேவிட் லாக் (ஜாக் நிக்கல்சன்) என்ற ஒரு தொலைக்காட்சி நிருபரைச் சுற்றி நகர்கிறது. ஆப்பிரிக்காவில் ஓர் ஆவணப்படம் எடுக்கும் முயற்சியில் சோர்வுற்று, அங்கு இறந்துபோன ராபர்ட்சன் என்பவரின் அடையாளத்தை தனதாக்கிக்கொண்டு தனது பழைய வாழ்க்கையிலிருந்து தப்பிக்க முயல்கிறார் லாக். இந்த அடையாள மாற்றம் அவரை ராபர்ட்சனின் மர்மமான வாழ்க்கைக்குள் இட்டுச் செல்கிறது. அங்கு அவர் ஆயுத வியாபாரியாகவும், புரட்சியாளர்களுடன் தொடர்பு உடையவராகவும் மாறுகிறார். இந்தப் பயணம், லாக் தனது சுயத்தை இழந்து, ஒரு புதிய, ஆனால் அபாயகரமான வாழ்க்கையை ஏற்றுக் கொள்வதைக் காட்டுகிறது.

தொடரும்...



Swarnavel@thaiveedu.com



# புத்தள மாவட்ட முஸ்லிம்களின் மரபும் மாற்றமும்

# பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸின் வாழ்வை முன்வைத்து ஓர் உசாவல்

– இக்பால் அலி

பேராசிரியர் கலாநிதி எம்.எஸ்.எம். அனஸ் அவர்கள் பல்வேறு ஆளுமைப் பண்புகளைக் கொண்டவர். கல்விப் புலமையால் வளர்ந்து ஆய்ந்து ஓர்ந்து சாதனைகளால் நிறைந்த பெருமைமிக்க அறிஞர்களுள் பேராசிரியர் அனஸ் அவர்களுக்குத் தனிச்சிறப்பு உண்டு. கல்வியலாளர், இலங்கை முஸ்லிம்களினது வரலாற்றாசிரியர், இஸ்லாமிய நுண்கலையாளர் எனப் போற்றிப் பழகக்கூடியவரும் அவர்தான். மெய்யியலின் அழகியலையும் இலக்கிய இன்பத்தையும் எந்தளவுக்கு மகிமைப்படுத்தி மேன்மைபடுத்தலாம் என்பதற்கு அனஸ் அவர்களுடைய வாழ்வியல் வரலாறு தக்க சான்றாக அமைகிறது.

1967- 2025 வரையிலான காலப்பகுதியில் எம்.எஸ்.எம். அனஸினால் மேற்கொள்ளப்பட்ட கல்விப் பணிகள், இஸ்லாமிய கலை இலக்கியப் பணிகள், இலங்கை முஸ்லிம்களது வரலாற்று ஆய்வுகளை அடையாளப்படுத்துவதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டது. இத்துறைகளுக்காக அனஸ் ஆற்றிய பங்களிப்பை கவனத்திற் கொள்வதன் மூலம் நாம் கடந்து வந்த சமூகநிலைகளையும் அறிந்து கொள்ளலாம். அந்நிலைமைகளை ஆய்ந்தறிந்து வரலாற்று ஆவணமாக அனஸ் தந்துள்ள நூற்களைப் படித்து அதன் தீர்வுகளை எட்டுவதற்கான அவருடைய ஆய்வுமுறைமைகளைக் கண்டறிவதற்கான கட்டுரையாகவும் இது அமைகிறது. இவ்வாறான ஆய்வுக்கட்டுரையினை மிக விரிவாக எழுத வேண்டியிருந்தாலும் முடிந்தளவு ஒரு பதிவினை கொண்டு வரும் ஆரம்ப முயற்சியாகவே இக்கட்டுரை எழுதப்படுகிறது.

**இலங்கையில் முஸ்லிம் நுண்கலை:** ஒரு விமர்சன ஆய்வு, புரட்சிநாயகன் அல் ஆப்கானி, 1982-இல் சங்கமும் சமூகமும், 1982-இல் சேர் செய்யத் அஹமத்கான் அரசியல் பங்களிப்பு, 1986-இல் ‘ஏ.எம். மதார் மரைக்காரின் அபிவிருத்திப் பணிகளில் கல்வியும் சமூகமும்’, 1994-இல் ‘மெய்யியல் ஓர் அறிமுகம்’, 1994-இல் செய்கு இஸ்மாயில் புலவர், 1995-இல் மேனாள் முதல் முஸ்லிம் சபாநாயகர் எச்.எஸ். இஸ்மாயில் ஒரு சமூக அரசியல் ஆய்வு, 1999-இல் வரகவி செய்கு அலாவுதீன், 1996-இல் விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானங்களும், 1997-இல் இஸ்லாத்தின் தோற்றம் ஒரு சமூக பண்பாட்டியல் ஆய்வு, 2000-இல் ஷிக்வா - முறையீடு கவியரங்கக் கவிதை தொகுதி (பாதிப்பாசிரியர்), 2022-இல் தொடக்க கால இஸ்லாம் ஒரு சமூக-பண்பாட்டு பார்வை, 2004-இல் இலங்கையில் இனக்கலவரங்களும் முஸ்லிம்களும், 2004-இல் எஸ்.ஏம்.ஏ. ஹஸன்: தற்கால முஸ்லிம் சமூக பண்பாட்டியல் வரலாற்றில் ஓர் அத்தியாயம், 2008-இல் முஸ்லிம் நாட்டாரியல் தேடலும் தேவையும், 2009-இல் புத்தளம் முஸ்லிம்கள் வாழ்வும் வாழ்வியலும், 2010-இல் ஈரானிய சினிமா: சமயவாதங்களும் திரைப்படங்களும், 2012-இல் தற்கால இஸ்லாமிய சிந்தனை: முதன்மையான செல்நெறிகள் பற்றிய அறிமுகமும் விமர்சனமும், 2012-இல் மெய்யியல் கிரேக்கம் முதல் தற்காலம் வரை, 2014-இல் அரபு இசை, 2014-இல் ஆ.வி. மயில்வாகனன் புரவலாற்றுப்படை - 1949 (பதிப்பாசிரியர்), 2016-இல் ஏ.எம்.ஏ. அஸீஸ்

இலங்கையில் இஸ்லாம் (பதிப்பாசிரியர்), 2017-இல் அரபுலக மக்கள் எழுச்சி (அரபு வசந்தம்), 2017-இல் முஸ்லிம் அரசியல் முன்னோடி, 2018-இல் இஸ்லாமும் அறிவியலும், 2022-இல் சோக்கரடீஸ் மெய்யியலின் பெருங்கனவு சோக்ரடீஸ், 2024 -இல் முகமிழந்தவர்கள், 2024-இல் மெய்யியலின் திருப்பு முனை: மொழி மெய்யியல் - உலக மெய்யியல் தின ஆய்வு, 2024-இல் புகழ்பெற்ற தமிழ் இஸ்லாமிய அறிஞர் பேருவளை எனும் பர்பரீன் எஸ்.எம். கமால்தீன் - 1979 (கட்டுரைத் தொகுப்பு - பதிப்பாசிரியர்) என்று அவரால் எழுதியும் பதிப்பிக்கப்பட்டதும் சுமார் 35-க்கும் மேற்பட்ட நூல்களாகும். ஈழத்து இலக்கியப் பரப்பில் குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு அவரின் அறிவுஞானம் வான்மேவி நிற்கிறது. அவற்றைச் சுவைத்து நுகர்ந்து அறிவு இன்பம் பெருகிட கருத்துக்களைப் பரிமாறி தத்துவத் தளத்தை விதைப்பதும், அவற்றை தரிசன நோக்கில் தங்களுடைய வாழ்வில் இரண்டறக் கலந்து இன்பம் பெறுவதும் ஒரு வரமாக அனஸ் அவர்களுடைய எழுத்துகள் பெரும் வீச்சாய் பெருமையுடன் எழுந்து நிற்கின்றன.

பேராசியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்கள் ‘இந்த உலகத்தில் எந்த மனிதராக இருந்தாலும் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும்’ என்று அல்லமா இக்பாலின் கூற்றறையும் எழுத்தையும் இணைத்து தனது ஆய்வுத் திறனையும் கல்வி நடவடிக்கைகளையும் வளர்த்துக் கொண்டவர். ஆதலால் தான், அவருடைய காலத்தில் பல்வேறுபட்ட இலக்கிய வரலாற்று ஆய்வு நூல்களையும், கல்விப் புலமை சார்ந்த நூல்களையும் எழுதி தன் ஆளுமையின் அடையாளத்தைப் பதிவு செய்துள்ளார்.

முஹம்மது ஸாலிஹ் முஹமட் அனஸ் (எம்.எஸ்.எம். அனஸ்) அவர்களின் வாப்பா புத்தளம் மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்துறையைச் சார்ந்தவர். உம்மா கல்பிட்டியில் பிறந்தவர். அவருடைய தனித்துவமான பண்பாட்டுப் பார்வைகளுக்கு மிக முக்கிய காரணம் அவருடைய தந்தையாகும். தமிழ் நாட்டில் காயல்பட்டிணம் என்று கூறுவதைப் போன்று கல்பிட்டியும் அந்த மாதிரியான புகழ் பெற்ற பிரதேசங்களாகும்.

அதோ அந்த மாதியான பெருங்கடலும் கல்பிட்டி லெகுனும் சந்திக்கின்ற இடத்தில் இருக்கின்றது. முதலில் போர்த்துக்கேயர் கோட்டை கட்டி விட்டு இடையில் விட்டுப் போய்விட்டனர். பிறகு ஒல்லாந்தர் கோட்டை கட்டி முடித்தார்கள். அருகிலேயே துறைமுகம் இருந்தது. இவ்விடம் பழைய புராதான நகரமாகும். மரைக்கார் வசம்சா வழியைச் சேர்ந்தவர்கள் இலங்கையில் இருக்கிறார்கள் என்றால் அதன் பூர்வீகத்தவர்கள் கல்பிட்டியில்தான் இருக்கிறார்கள். பள்ளிவாசல் துறை, ஆலங்குடா, திகழி ஆகிய பெயர் பெற்ற ஊர்களில் மரைக்கார் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் ஓர் ஊரில் நான்கு ஐந்து குடும்பங்கள் இருப்பார்கள். ஏனைய மக்களும் அங்கு வாழ்ந்து வந்தனர்.

அவருடைய குடும்பம் மரைக்கார் வம்சாவழியைச் சேர்ந்த குடும்பமா என்று சொல்ல முடியாது. ஆனால் மரைக்கார் பெயர்கள் இருக்கின்றன. அவருடைய தந்தையின் தந்தையார் பெயர் அபூபக்கர் மரைக்கார். அவர் தாய் கல்பிட்டி. தாயாரின் தந்தையின் பெயர் முஹம்மது அலி மரைக்கார். ஆனால் அவர் மரைக்கா வம்சமா என்பது ஆய்வுக்குரியது. பொதுவாக கல்பிட்டியில் உள்ள மரைக்கார் பிரிவில் அவர்கள் இணைந்து கொள்ளப்படவில்லை. மானிடவியல் பின்னணியில் இவற்றையெல்லாம் படிக்க வேண்டியுள்ளது. இவை ஆராயப்பட வேண்டிய விடயங்கள். நாங்கள் இவற்றை எல்லாம் கையில் எடுத்து விட்டு நேரம் இல்லாமல் தற்போது யோசித்துக் கொண்டு இருக்கின்றோம். அவர் தாயாரின் குடும்பத்திலே மதார் மரைக்கார், பாவுலெவ்பை மரைக்கார் என்ற பெரும் செல்வாக்குமிக்க குடும்பப் பரம்பரையைச் சார்ந்தவர்களும் இருக்கின்றார்கள். அவருடைய தந்தை கல்பிட்டியில் திருமணம் செய்தார்.

அப்பொழுது மணாளனின் இல்லத்தில்தான் பெண்கள் வாழ்க்கை நடத்துவார்கள். இப்பொழுதும் அந்த நடைமுறை இருக்கிறது. ஆனால் புத்தளம் நகரில் வீடுகள் காணிகள் நகை நட்டுகள் எனச் சீதனம் கொடுக்க வேண்டும். இப்பொழுது அதில் மாற்றங்கள் வந்துள்ளன. கல்பிட்டியைச் சூழவுள்ள பிரதேசங்களில் அந்தச் சீதனப் பிரச்சினை இல்லை. மணப் பெண்ணுக்கு எவ்வளவு வசதிகள் இருந்தாலும் அவர்கள் மணாளன் வீட்டில் சென்றுதான் வசிக்க வேண்டும். அதே போன்றுதான் அனஸ் அவர்களுடைய தாயார் அவரின் தந்தையை விட வசதி கூடியவர். பெரிய வசதிகள் இருந்தன. இப்போதும் அந்த வீடு இருக்கிறது. அந்த நேரத்தில் அப்படியான வீடுகள் கல்பிட்டியில் நான்கு ஐந்து வீடுகள்தான் இருந்தன. அதில் ஒன்று அவர் தாயுடைய வீடு. அப்பொழுது அங்குள்ள மாடி வீட்டுக்கு ‘மச்சி’ வீடு என்று சொல்வார்கள்.

அனஸ் குடும்பத்தில் முதலாவது பிள்ளை. அவர் 1949-களில் பிறந்தார். அவர் தந்தை அபூபக்கர் மரைக்கார். இவர் விவசாயியாகவும் சிறுவர்த்தகராவும் இருந்துள்ளார். அவரின் தந்தை சிறு தோட்டச் சொந்தக்காரர். இவர் முத்துச் சிற்பி வியாபாரம் செய்தார். மன்னாரில் இருந்து கல்பிட்டிக்கு முத்துச் சிற்பி எடுத்துச் சென்று வியாபாரம் செய்வார். அவர் மொத்த வியாபாரியும் ஆவார். தந்தையின் தந்தை பெரியளவில் தென்னம் தோட்டம் வைத்திருந்தார். இப்பொழுதும் அந்த தோட்டங்கள் இருக்கின்றன. அந்த வரலாற்றை அவர் எழுதிக் கொண்டும் இருக்கின்றார். முஸ்லிம்கள் என்றால் எல்லா இடங்களிலும் இரவு பகல் பாராமல் மிகவும் சுறுசுறுப்பாக உழைப்பவர்கள். அவர்களைப் போல் பிறரைக் காண்பது அரிது.

அவரின் தாயின் தந்தைக்கு அறுவாக்காட்டில் காணி இருந்தது. அறுவாக்காட்டில் குப்பைகள் கொட்டப்படுவது தொடர்பான பிரச்சினைகள் எழுந்த இடம் அதுவாகும். அந்த குப்பை கொட்டிய இடம் அவருடைய காணிதான். அது 2000 ஏக்கர். அவர்கள் அங்கு சென்று தென்னை பயிர்ச் செய்கை மேற்கொண்டுள்ளார்கள். கல்பிட்டி இருந்து கடல் வழி ஊடாக சென்று அங்கு தெங்கு செய்கை மேற்கொண்டுள்ளார்கள். இப்பொழுது அங்கு யாருமே செல்ல முடியாது. ஆனால், அப்பொழுது அங்குள்ள நிலங்களை பதப்படுத்தி தென்னந்தோட்டங்களை உருவாக்கி இருந்தார்கள். அந்த இடத்தில் விவசாயம் செய்தவர்கள் தராதாயம் என்று சொல்லி நெல் மூடைகளை அவரின் வீட்டுக்குக் கொடுத்து விட்டுச் செல்வார்கள்.

அவர் தந்தை சாலிஹ், அவர்களுடைய தந்தைக்கு தலைவில் என்ற இடத்தில் பெரியளவில் காணிகள் இருந்தன. கொஸ்தாத் தோட்டம் என்று அதற்குப் பெயர். அவர்களுக்கு அங்கு 12 ஏக்கர் காணி இருந்தது. தொலை தூரம் என்று

பாராமல் எங்கெல்லாம் வேகமாகச் சென்று காணி பூமிகளை வாங்கி விவசாயம் செய்ய முடியுமோ அங்கெல்லாம் சென்று எமது மூதாதையர்கள் விவசாயம் செய்து நாட்டுக்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளமை என்பதற்கு இவை உதாரணங்க ளாகும்.

அவர் தந்தை பள்ளிவாசல்துறைப் பகுதியில் விதானையாக் கடமையாற்றினார். அது ஏழு எட்டுக் கிராமங்களைக் கொண்ட பிரதேசம். வெள்ளைக்காரர் காலத்தில் வழங்கப்பட்ட பதவி யாகும். கண்டியின் வரலாற்றை இலகுவாக எழுதலாம். புத்தள வரலாற்றை எழுதுவது கடினம். கண்டி மன்னராட் சியின் கீழ்தான் கல்பிட்டி இருந்தது. மன்னர் அவ்வளவு தூரம் வந்து அந்த இடங்களை பார்க்க முடியாது. நாவற்காட்டுக்கு இரண்டு தடவை மன்னர் வந்து விட்டுச் சென்றதாக வரலாறு இருக்கிறது. வெள்ளைக்காரன் கோட் டையைக் கட்டியது கூட மன்னனால் தாகக்கப்படுவோம் என்ற அச்சத்தி னால்தான். கல்பிட்டி, கொட்டியாரம், மட்டக்களப்பு ஆகிய இந்த மூன்றும் தான் கண்டி மன்னரின் கீழ் இருந்த இடங்களாகும். ஏனைய துறைமு கங்கள் வெள்ளையரின் ஆட்சியின் கீழ் இருந்தன. வெள்ளையர்கள் ஒரு கட்டத்தில் மட்டக்களப்பையும் கைப்பற்றி விட்டார்கள். ஆதலால் கண்டி மன்ன ருக்கு மிஞ்சிய பகுதி கல்பிட்டி, கொட்டியாரம் மட்டும்தான்.

> மணாளனின் இல்லத்தில்தான் பெண்கள் வாழ்க்கை நடத்துவார்கள். இப்பொழுதும் அந்த நடைமுறை இருக்கிறது. ஆனால் புத்தளம் நகரில் வீடுகள் காணிகள் நகை நட்டுகள் எனச் சீதனம் கொடுக்க வேண்டும். இப்பொழுது அதில் மாற்றங்கள் வந்துள்ளன. கல்பிட்டியைச் சூழவுள்ள பிரதேசங்களில் அந்தச் சீதனப் பிரச்சினை இல்லை. மணப் பெண்ணுக்கு எவ்வளவு வசதிகள் இருந்தாலும் அவர்கள் மணாளன் வீட்டில் சென்றுதான் வசிக்க வேண்டும்.

உப்பு, கருவாடு, உடைகள், ஆயு தங்கள், தளபாடங்கள், உணவு வகைகளை இந்தியாவில் இருந்து கண்டி மன்னருக்கும் மற்றும் உள் நாட்டு மக்களுக்கும் இவர்கள்தான் கொண்டு வந்து கொடுப்பார்கள். பாக்கு போன்றவை இந்தியாவுக்கு கொண்டு செல்வார்கள். கல்பிட்டி ஒரு செழிப்பான பகுதி. அங்கு பெரிய களஞ்சியசாலை இருந்தது. இடையில் புத்தளமும் இணைகிறது. புத்தளம் பெரிய பள்ளிவாசலுக்கு அருகில் சிறிய துறைமுகம் இருந்தது. அங்கு இருந்துதான் கல்பிட்டிக்குப் பொருட்கள் கொண்டு செல்லப்படும். கல்பிட்டிக் கோட்டை இறங்குது றைக்குள் அது இருக்கிறது. வெள்ளைக்காரர்கள் கோட்டையைப் பயன்படுத்தவில்லை. கொஞ்சம் காலம் பாவனை செய்து விட்டு அதிலுள்ள பெறுமதியான ஓடு, கூரை, பொருட்கள் போன்றவற்றை எல்லாம் பிடுங்கி எடுத்து விட்டு மொட்டை யாக அவற்றை விட்டுச் சென்று விட்டார்கள். அதில் ஒரு சில கதவுகள்தான் எஞ்சியுள்ளன.

அனஸ் அவர்களுடைய அப்பா அவர்களைக் கோட்டை மரைக்கார் என்று அழைப்பார்கள். கோட்டையை நிர்வாகம் செய்யும் பொறுப்பு முதலில் புகழ்பெற்ற சைமன் காசிச் செட்டிக் குடும்பத்திற்கு இருந்தது. அனஸ் அவர்களுடைய தாயாரின் தந்தையிடமும் கோட்டையின் மேற்பார்வை பொறுப்பும் வழங்கப்பட்டிருந்தது. அவரைக் கோட்டை மரைக்கார் என்றுதான் சொல்வார்கள். இத்தகைய பெரும் செல்வாக்குமிக்க குடும்பத்தில் பிறந்த மகான்தான் எம்.எஸ்.எம். அனஸ். அப்பொழுது உம்மம்மா, உம்மாவாப் பாவைப் பார்ப்பதற்கு அனஸ் அவர்கள் பள்ளிவாசல் துறையில் இருந்து கல்பிட்டிக்கு போகவேண்டும். அவருடைய தலைமை வீடு கல்பிட்டியில்தான் இருந்தது. அவர் அங்கு சென்றாலும் அங்குள்ள சூழலில் சின்னப் பிள்ளைகளுடன் சேர்ந்து அனஸ் அவர்கள் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

அனஸ் அவர்கள் பள்ளிவாசல் துறையில் கல்வி கற்றார். 1929-ஆம் ஆண்டு பள்ளிவாசல் துறைப் பாடசாலை ஆரம் பிக்கப்பட்டது. 1917-ஆம் ஆண்டு அவர் தந்தை பிறந் துள்ளார். அவர் தந்தை அங்கு படித்தாரா இல்லையா என்பது அவருக்குத் தெரியாது. அனஸ் அவர்கள் தன் தந் தையிடம் அது பற்றிக் கேட்கவே மறந்து விட்டார். அவர் இன்று கவலைப்படுகின்றார். ஆனால், அவர் படித்தவரா கத்தான் இருக்கவேண்டும். ஏனென் றால், அவருக்கு விதானைவேலை வழங்கப்பட்டுள்ளது. அதற்காக ஊரில் இருந்து ஐந்து பேர் சென்றார்கள். அதன்போது அவர் தந்தையும் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

பள்ளிவாசல்துறை ஆரம்பப் பாட சாலை 1929-ஆம் ஆண்டு இரு ஆசி ரியர்களுடன் இருபதுக்கும் குறை வான மாணவர்களுடன் தொடங்கப் பட்ட பாடசாலையாகும். அப்பாடசா லையில் ஆறாம் வகுப்பு வரையும் படிக்கலாம். அதனால், அனஸ் ஆறாம் வகுப்புவரை அங்கு கல்வி கற்றார். அப்பொழுது புத்தளத்தைச் சேர்ந்த ஜெய்னுலாப்தீன் என்பவர் அதிபராகக் கடமையாற்றினார். அக் காலகட்டத்தில் பாடசாலைகளில் விடுதி கள் இருக்கும். அவர் அங் கேயே தங்கி யிருந்து அப்பாடசாலையை முன்னேற் றுவற்கு அர்ப்பணிப்புடன் செயற் பட்டார்.

கண்டக்குழி, திகழி, முதளைப்பாளி, நுரைச்சோலை, குறிஞ்சிப் பிட்டி, பள்ளிவாசல்துறை ஆகிய அனைத்துக் கிராமங்களில் பாடசாலைகள் இருந்தன. ஒரு பிரதான வீதியோடுதான் எல்லாக் கிராமங்களும் அமைந்தி ருந்தன. பெரிய படிப்பு என்றால் கல்பிட்டிக்குத்தான் செல்ல வேண்டும். ஒரே பஸ்ஸில் சென்றால் எல்லாக் கிராமத்திற்கும் சென்று வரலாம். கிழக்கு மாகாணம் மாதிரியான இடம். தென்னம் தோப்பு சூழ்ந்த கிராமம். நம்நெஞ்சில் பல உணர்வ லைகளை எழுப்பி மகிழ்விக்கும் இடம். அதன் பின்பு அவர் தந்தை கல்பிட்டி அல் அக்ஷா பாடசாலையில் அனஸ் அவர் களைச் சேர்த்துவிட்டார். அங்கு அவர் 1967-ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரம் வரையிலும் கல்வி கற்றார்.

அதன் பின்பு யாழ்ப்பாணம் ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு சாஹிராக் கல்லூரி ஆகிய பாட சாலையில் ஏதாவது ஒன்றில் சேர்ந்து அவர் கல்வி கற்ப தற்கான பல தெரிவுகள் இருந்தன. ஆனாலும், யாழ்ப்பாணம் தூரம் என்ற வகையில் 1967-இல் கொழும்பு ஸாஹிராக் கல் லூரியிலே உயர் கல்வியைத் தொடர்வதற்காக இணைக்கப்

பட்டார். அப்பொழுது புத்தளம், கல்பிட்டி போன்ற பகுதிகளில் கொழும்பு சாஹிராக் கல்லூரி பற்றி மிகவும் கவர்ச்சிகரமாகப் பேசப்பட்டது.

அனஸ் அங்கு செல்லும் சமயம் கல்பிட்டியைச் சேர்ந்த 15 மாணவர்கள் அங்கு கல்வி கற்று வெளியேறி இருந்தார்கள். அவர்கள் பெரியளவில் கல்வியில் பிரபல்யமாகப் பேசப்படாவிட்டாலும் 9, 10 வகுப்புகள் வரையிலும் கற்று விட்டு ஆங்கில மொழிப் புலமையோடு வெளியே வந்தவர்கள் ஆவார்கள். அங்கு குறிப்பாக பணக்காரப் பிள்ளைகளே கல்வி கற்கச் சென்றார்கள். அதுவும் புத்தளத்தைச் சேர்ந்தவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கற்றார்கள். முன்னாள் அமைச்சர் நெயினா மரைக்கார் கூட அங்குதான் கற்றார். அக்காலத்தில் ஆங்கிலக் கல்வி கல்பிட்டியிலும் இருந்தது. கிராமத்து மக்கள் ஆங்கிலம் தேவை என்று ஆசைப்பட்டு கற்றார்கள். எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயகவின் ஆட்சி வரையிலும் இலங்கையிலுள்ள எல்லா கல்லூரிகளிலும் ஆங்கிலமொழி மூலம் கல்வி போதிக்கப்பட்டன.

கல்பிட்டி மக்கள் கல்வி விடயத்தில் தனித்துவமாக இயங்கினார்கள். தம் ஊர்ப் பாடசாலை மத்திய பாடசாலையாக தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக கடுமையாக உழைத்தார்கள்.அப்பொழுது காலியில் இருந்து வந்த அப்துல் காதர் ஆசிரியர் அவர்கள் அப்பாடசாலையினை ஆங்கில மொழி மூலப் பாடசாலையாக மாற்றினார். அவரின் மூலம் கல்பிட்டி மாற்றங் கண்டது. எல்லோரும் ஆசிரியர்கள்; எல்லோரும் அரச உத்தியோகத்தர்கள். கல்பிட்டி மக்களுக்கு கூலித் தொழில் வாய்ப்பு இல்லை. பழைய கால வாழ்க்கை முறையிலான கலாசாரச் சூழல் இல்லாமற் போய் விட்டது. இறங்குதுறைக்கு கப்பல்கள் வருவதில்லை. தவளத்தில் பொருட்கள் செல்வது இல்லை. அவைகள் தான் அவர்களுக்கு தெரிந்தவை. பொருளாதார நெருக்கடியால் தோட்டங்களை விற்பனை செய்தார்கள். மாற்த்திற்குப் பின் கல்விதான் பொருளாதாரம் என்று கருதினார்கள்.

> கல்பிட்டி மக்களுக்கு
> கூலித் தொழில் வாய்ப்பு இல்லை.
> பழைய கால வாழ்க்கை முறையிலான
> கலாசாரச் சூழல் இல்லாமற் போய்
> விட்டது.
> இறங்குதுறைக்கு கப்பல்கள்
> வருவதில்லை.
> தவளத்தில் பொருட்கள் செல்வது
> இல்லை.
> அவைகள் தான் அவர்களுக்கு
> தெரிந்தவை.
> பொருளாதார நெருக்கடியால் தோட்
> டங்களை விற்பனை செய்தார்கள்.
> மாறறத்திற்குப் பின் கல்விதான்
> பொருளாதாரம் என்று கருதினார்கள்.

அனஸ் கொழும்பு சாஹிராவில் கல்வி கற்கும் போது அதிபர் மசூர் ஓய்வு பெற்றார். அதிபர் மசூர் அவர்களால் அப்பாடசாலையை தொடர்ந்து நிர்வகிக்க முடியாமல் போனது எனலாம். சாபி மரைக்கார் புதிதாக அதிபர் பொறுப்பை ஏற்று நடத்தினார். உயர்தரம் கற்கின்ற மாணவர்களில் அனஸ் வகுப்பு மாணவர்கள்தான் முதல் பிரிவினர். ஆங்கிலத்திலும் தமிழ் பிரிவுகளிலும் மாணவர்கள் இருந்தனர். அதிபர் சாபி மரைக்கார் அவர்களுடைய கல்விப் பணிகளுக்கு வகுப்பு மாணவர்களுடன் சேர்ந்து அனஸ் அவர்கள் பெரும் பங்களிப்பு ஆற்றியுள்ளார். அதே போன்று அங்கு அவருக்கு கற்பித்த ஆசிரியர்களான மேனாள் சாஹிரா அதிபர் ஜிப்ரி, திருமதி பாலசுந்தரம்பிள்ளை, சிவப்பிரகாசம் முதலிய ஆசிரியர்கள் மிக முக்கியமானவர்கள் ஆவர். இந்த ஆசிரியர்களை இன்னும் அவர் தன் மனதில் இருந்து மறக்கவில்லை.

எம்.எஸ்.எம். அனஸ். 1968-இல் க.பொ.த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றினார். அப்பொழுது எல்லாப் பிரிவுகளில் இருந்து பதினைந்து பேர் அளவில் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டனர். அது நீண்ட இடைவெளிக்குப் பின் அப்படியான தொகை மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றமை ஒரு பெரு விழாவாகக் கொண்டாடப்பட்டது. அதில் அனஸ் அவர்களும் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டிருந்தார். அவை அதிபர் சாபி மரைக்கார் அவர்களுக்கு பெயரையும் புகழையும் ஈட்டிக் கொடுத்தது.

பல்கலைக்கழகத்தில் முன்னணிமிக்க பேராசிரியர்களுக்கும் அனஸ் அவர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாக உள்ளது. பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் வேலுப்பிள்ளை, பேராசிரியர் பூலோகசிங்கம், பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் அமீர் அலி, பேராசிரியர் சி. தில்லைநாதன் பேராசிரியர் பாலகிருஸ்ணன். மெய்யியல் துறை ஆசான்களாக கலாநிதி. செ.வே. காசிநாதன், பேராசிரியர் கிருஸ்ணராஜா. பேராசிரியர் இராமகிருஸ்ணன் உள்ளிட்ட பல புகழ்பெற்ற பேராசிரியகளுடைய மாணவர் அனஸ் ஆவார். இந்த பேராசான்களுடைய தொடர்பை வலுவுள்ளதாக அனஸ் மாற்றிக் கொண்டார். இந்த ஆசிரியர்களிடம் கல்வியைக் கற்ற போதிலும் அவர்களுடைய நேசத்திற்குரிய மாணவனாகவும் அவர்கள் மனத்தில் இடம்பிடித்துக் கொண்டார். இவர்களுடன் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்கும் புறம்பாக அவர் களுடன் கலை இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொள்வதன் ஊடாக இவருக்கும் பேராசிரியர்களுக்கும் இடையிலான தொடர்பு மேலும் வலுப்பெற்றிருந்தது.

அனஸ் அவர்களிடம் இயல்பிலேயே விடாமுயற்சி அமைந்திருந்தது. அவரைச் சுற்றியுள்ள சூழல் செல்வச் செழிப்புமிக்க விவசாயத்தை தொழிலாகவும் கொண்டது. ஊரை நிர்வகித்த பெருங்குடி குடும்பப் பரம்பரையின் பின்னணியில் இவர் பிறந்தார். அந்தச் சூழலில் இவருக்கான ஊக்கம் எங்கியிருந்து கிடைத்தது என்பது முக்கியமான கேள்வியாகும். அந்த விடாமுயற்சியின் பிறப்பிடம் தனித்தன்மை வாய்ந்தது. இளமைக் காலத்தில் தன் இலட்சியத்தை விதைத்தவர் தன் தந்தைதான் என்கிறார் அனஸ். நுண்கலையில் அனஸ் நாட்டம் கொள்வதற்கு அவர் தந்தைதான் அடித்தளத்தை அமைத்துக் கொடுத்துள்ளார். நாட்டார் இலக்கியம் பற்றிய தேடல்களை மேற்கொண்டார். நல்ல ஆய்வுக் கட்டுரைகளையும் நல்ல நூல்களையும் வெளிக்கொணர்ந்தார்.

அனஸ் அவர்கள் பல்கலைக்கழகம் பிரவேசித்தமையின் பிற்பாடு நாட்டார் இலக்கியம், நுண்கலைகள் பற்றி மெல்ல

மெல்ல கேட்பதற்கும் அறிவதற்கும் அவருக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சங்கீத நாட்டிய சங்கம் உருவாக்கம் மிக முக்கியமானது. அது இப்பொழுது இயங்குவது மிகக் குறைவு. அவருடைய ஆசான் பேராசிரியர் செ.வே. காசிநாதன் அவர்கள்தான் அதைத் தொடங்கி வைத்தார். அவர் பருத்தித்துறையைச் சோந்தவர். இந்த வரலாறு எங்கேயும் எழுதப்படவில்லை. எந்தவொரு இலக்கியப் பதிவுகளில் கூட இதனைக் காணமுடியாது. அவர் இந்தச் சங்கத்தை ஆரம்பித்தமையினால் அவருடைய மாணவனாக இருந்த அனஸ் அவர்களுக்கும் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது,



1976-1983 வரையிலும் காசிநாதன் தலைமையில் இக்கலையை வளர்த்தெடுப்பதற்குப் பங்களிப்புச் செய்தார். இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் பேராதனை பல்கலைக்கழகத்தில் மெய்யியல் துறைக் கற்கை பீடத்தில்தான் நடைபெற்றது. இதற்குப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை தாங்கினார். அதேபோல் இது தமிழ் செவ்வியல் இசையாகும். பரதநாட்டியம் முதலான தமிழ் செவ்வியல் இசை நடனங்கள் அடிக்கடி பல்கலைக்கழகத்தில் மேடையேற்றப்படும்.

இந்தச் சங்கத்தின் ஆரம்ப நிகழ்வில் இதன் நோக்கம் பற்றி பேராசிரியர் காசிநாதன் உரையாற்றும் போது 'தமிழ் கலாசாரத்தில் மங்கி மறைந்து போய்க் கொண்டிருக்கின்ற கலையினை இளைஞர்களிடையே புத்துயிர்வூட்டலை மேற்கொள்வதற்கும் பல்கலைக்கழகத்தில் அதற்கு ஓர் அறிமுகத்தை வழங்குவதற்கும், மலிவான இசைகள் வந்து தமிழ் இசை மரபை ஆக்கிரமிப்பதைத் தடுப்பதற்கும் மற்றும் இளம் சமுதாயம் தமிழ் செவ்வியல் இசை மரபுகளில் மிகுந்த ஆர்வம் கொள்வதற்கும் இந்தச் சங்கத்தை ஆரம்பித்துள்ளோம்' என்று அவர் கூறினார். அதன் பின்னர் ஒவ்வொரு வாரமும் ஒன்றுகூடி டேப் ரொக்கோடரில் அந்த இசை கானங்களைக் கேட்பார்கள். இந்த இசை வடிவம் தமிழின் செவ்வியல் இசை மரபுக்கு உயிர்ப்பை வழங்கி அதன் மூலம் பேரானந்தத்தை அடையும் பல்கலைக்கழக மாணவர்களின் மனவுலக்கு மத்தாய்பாய் இருந்தது.

மகாராஜபுரம், எம்.எஸ். சுப்புலட்சுமியின் பாடல்கள் என்பன ஒவ்வொரு வாரமும் ஒலிபரப்பப்படும். அதேபோல் மூன்று நான்கு மாதங்களுக்கு ஒருமுறை அரங்கு நிகழ்வுகள் நடைபெறும். இதில் அனஸ் அவர்கள் சளைக்காமல் தொடர்ந்து ஈடுபட்டமையால் பின்னாளில் இஸ்லாமிய நுண்கலைகளில் தன் பெயரைப் பதிவு செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவர் பள்ளி மாணவராகப் படிக்கின்ற காலத்தில் கொழும்பில் நடைபெறும் எந்தவொரு தமிழ் நூல்களின் வெளியீட்டு விழாக்களையும் விட்டு வைப்பதில்லை. கொட்டாஞ்சேனையில் முதல் வெள்ளவத்தை, மருதானை போன்ற பகுதிகளில் தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்களுடைய நூல் வெளியீட்டு விழாக்கள், இலக்கிய நிகழ்வுகள், சங்கீத இசை நடனங்கள், நர்த்தன நிகழ்வுகள் ஆகிய சகல நிகழ்வுகளில் கலந்து கொள்வார். சங்கீத இசை நடனம் என்றால் அவற்றைக் கண்டுகளிக்க வேண்டும் என்பதற்காக பெரு அவாவுடன் எந்த இடமாக இருந்தாலும் சரி, வெகு தூரமானாலும் சரி அங்கு சென்று அதனை நேரடியாகப் பார்த்து ரசித்து பேரானந்தம் அடைவார். அது மட்டுமல்ல அவர் மாணவராக இருந்த காலத்தில் ஒரு தடவை ஒரு புத்தக வெளியீட்டு விழாவுக்குச் சென்று இருந்தார். கையில் காசு இருக்கவில்லை. பஸ் பிரயாணத்திற்காக கடைசியாக வைத்திருந்த பணத்தைக் கொடுத்து புத்தகத்தை வாங்கி விட்டு நடந்து வந்துள்ளார். அந்தப் புத்தகம் காசி ஆனந்தன் எழுதிய புத்தகம் ஆகும். இதன் மூலம் கலை இலக்கியம் தொடர்பிலான ஆர்வத்தை அவர் இயல்பாகவே பெற்றுக் கொண்டார். புத்தகங்களை நிறைய வாசிக்கத் தொடங்கினார். இவை எல்லாம் நல்லதொரு ஆளுமைமிக்க கல்வியலாளராக அவர் வெளிப்பட பயன்பட்டன.

எம்.எஸ்.எம். அனஸ் ஆரம்பத்தில் பேராதனை பல்கலைக்கழகத்தில் மெய்யில்துறையில் தற்காலிக விரிவுரையாளராக நியமனம் பெற்றார். அங்கு இரண்டு வருடம் கடமையாற்றுகின்ற கால கட்டத்தில் களனி பல்கலைக்கழகத்தில் 1977-இல் மெய்யயில்துறை விரிவுரையாளருக்கான விண்ணப்பம் கோரப்பட்டது. அதற்கு விண்ணப்பம் செய்து தெரிவு செய்யப்பட்டார். பின்பு அங்கேயே அவருக்கு ஆறு மாதத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

அவ்வாறு அவர் களனிப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற கால கட்டத்தில் அங்குள்ள தமிழ் மொழி மூல கற்கை நெறிகள் இல்லாமற் செய்யப்பட்டது. அது அப்போது சக்தி வாய்ந்த இனவாத நடவடிக்கைகளின் பின்னணியில் அரசியல் குழுவினர் இதை அகற்ற வேண்டும் என்று முனைந்தனர். அந்தவகையில் அங்குள்ள தமிழ் மொழி கற்கை நெறிகளை எல்லாம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டது. அதன் பிறகு 1978-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் அனஸ் அவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக இணைந்து கொண்டார். தமிழ் மொழி மூல விரிவுரையாளர்கள் எல்லோரும் யாழ். பல்கலைக்கழகம் சென்று இணைந்து கொண்டனர். 1985-ஆம் ஆண்டு வரையிலும் அங்கு கல்வி கற்பித்தார்.

அவர் அங்கு கடமையாற்றிய காலம் மிக முக்கியமான காலமாகும். அவற்றை அவரால் இலகுவில் மறந்து முடியாது. அப்பொழுது உப வேந்தராக பேராசிரியர் சு. வித்தியானந்தன் இருந்தார். பேராசிரியர் கைலாசபதி அவர்கள் பீடாதிபதியாக இருந்தார். அவர் சகபாடிகளாக முன்னாள் விரிவுரையாளர் மு. நித்தியானந்தன், சித்திரலேகா மௌனகுரு முதலானோர் இருந்தனர். அதேபோல் அடிக்கடி மௌனகு

ருவும் அங்கு வந்து போகின்றவராக இருந்தார். வீரேகேச ரியின் முன்னாள் ஞாயிறு இதழின் பிரதம ஆசிரியர் வி. தேவராஜ் அவர்களும் யாழ். பல்கலைக்கழகத்தில் வர லாற்றுத் துறை விரிவுரையாளராகக் கடமையாற்றினார். அனஸ் அவர்களும் வி. தேவராஜ் அவர்களும் ஒரே விடுதி அறையில் தங்கியிருந்தார்கள். இந்த இருவருக்கிடைலான நட்பு மிகவும் ஆத்மார்த்தமானதாகவே நிலவியது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் களனிப் பல்கலைக்கழ கத்திலும் யாழ். பல்கலைக்கழகத்திலும் படிப்பித்தார். அவர் அங்கு வருகை தரும் விரிவுரையாளராக இருந்தார். அவர் அங்கு தமிழில் புதிய பாடத்தை அறிமுகம் செய்து வைத்தார். அதில் ஒன்று வெகுசனத் தொடர்பு சாதனம். அந்தப் பாடத்தைத் தொடங்கி அவர்தான் படிப்பித்தார். அதேபோல் அவர் யாழ் பல்கலைக்கழகத்திற்கும் வந்தால் இவர்கள் இருவரும் தினமும் அவரைச் சந்திப்பது வழக்கம். அரசியல் இலக்கியம் தொடர்பான கருத்துகளைப் பரிமாறிக் கொள் வார்கள். அதுவும் அவர் முஸ்லிம் அரசியலுக்கு வழிகாட் டியாக இருந்துள்ளார். அனஸைப் பார்த்து முஸ்லிம் அரசியல் குறித்த கட்டுரைகளை வாசிக்கச் சொல்லித் தூண் டுபவராக இருந்துள்ளார். அவருடனான உறவு மிகவும் நெருக்கமானதாக இருந்தது.

அதேபோல் அங்கு போரசிரியர் கே.எம்.எச். காலிதீன், சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.ஆர்.ஏ ரசாக், பேராசிரியர் எம்.ஏ நுஹ்மான், விரிவுரைளர் எம்.ஐ.எம். சித்தீக் ஆகிய குழுமத்தினர் கல்விப் பணி புரிந்தார்கள். இவர்களோடும் அனஸ் மிக நெருக்கமாக சேர்ந்து இருந்தார். எனினும் இவர்கள் எல்லோரையும்விட அவருக்கு மிக நெருக்கமான நண்பர் மு. நித்தியானந்தன் தான். அவருடைய மனைவி நிர்மலா நித்தியானந்தன், இணுவில் ஆனந்தநடராஜா ஆகிய இருவருடனும் நெருக் கமாக இருந்தார். நிர்மலா நித்தியானந்தன் ஆங்கில துணைத்துறை விரிவுரையாளராக இருந்தார். ஜவ்னா கல்லூ ரியின் முன்னாள் அதிபர் இராஜசிங்கம் அவர்களுடைய மகள்தான் நிர்மலா நித்தியானந்தன். அக்காலத்தில் யாழ்ப்பா ணத்தில் அதிபர்மார்களுக்குத்தான் மதிப்பு. நல்லூரில் அவர் களுடைய இல்லம் இருந்தது. அனஸ் அவர்கள் இவருடைய இல்லம் செல்வது, அக்கடி உணவு அருந்துவது வழக்கமாக இருந்தது. மு. நித்தியானந்தனும் அனஸ் அவர்களுடைய விடுதிக்கு வந்து போவதுமுண்டு, தொடர்ந்து இருவரும் நட்பு ரீதியிலான உறவுகளோடு பழகி வந்தார்கள். அப்பொழுது போர்க்காலம் ஆரம்பித்து விட்டது. ராஜினி திரனகம துப்பாக்கி சூட்டுக்கு இலக்கானார். அனஸ் அவர்கள் நான்கு வருடம் யாழ். பல்கலைக்கழத்தில் கற்பித்தார். அங்கு தொடர்ந்து கடமையாற்ற வேண்டும் என்ற மனோ நிலை அவருக்கு இருக்கவில்லை.

அவர் பல்கலைக்கழக விரிவுரையாளராக தொடங்கிய காலத் திருந்தே அதனுடைய அனைத்து செயல்களிலும் அவர் தன்னைக் கரைத்துக் கொண்டவர். பேராதனை பல்கலைக்க ழகம், களனி பல்கலைக்கழகம் யாழ் பல்கலைகழகம் ஆகிய பல்லைக்கழகங்களில் மெய்யியல் துறைத் தலைவராகவும் விரிவுரையாளராகவும், அதேபோல் கிழக்கு மற்றும் தென்கி ழக்குப் பல்கலைக்கழங்களில் பாடவிதான ஆலோசகராவும் இன்று வரை மெய்யியல் துறையில் பேரறிஞராக இருந்து கற் பித்தல் பணிகளில் இடையாறாது இற்றைவரையிலும் செயற் பட்டுக் கொண்டிருக்கும் இவர், ஒரு பெருமை தரும் ஆல விருட்சம்.

ஆய்வு ஆராய்ச்சி தொடர்பில் பல நாடுகளுக்குச் சென்று சர்வதேச மாநாடுகளில் கலந்து கொண்டு ஆய்வுக் கட்டு ரைகள் சமர்ப்பித்துள்ளார். மலேசியா, இந்தியா, லண்டன், கனடா போன்ற நாடுகளுக்குச் சென்று தம் திறன் வாய்ந்த ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார். அதேபோல் 1999-2000-களில் லண்டனிலுள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழ கத்தில் ஆசியா, ஆபிரிக்கா ஒன்றியத்தின் ஆய்வுக் கற்கைத் துறையில் கல்வியளராகக் கடமையாற்றியுள்ளார். கனடா ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் கல்வியளராகக் பணியாற் றியுள்ளார். இவ்வாறு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்க ளிலும் கற்பித்தல் பணிகளில் ஈடுபட்டு உலக நாடுகளில் ஆற்றல்மிக்க மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதற்கு ஒரு காரணகர்த்தாவாக இருந்துள்ளார் என்று இங்கு ஈண்டு குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.



மெய்யியல் கல்வித்துறையில் அதிகளவு மாணவர்களை உருவாக்கிய பெருமையும் அனஸ் அவர்களைச் சாரும். மெய்யியல் துறையில் புதிய தலைமுறையை உருவாக் குவதில் மிகுந்த கவனம் எடுத்தார். அவருடைய புதிய தலைமுறைதான் இன்றைய பேராதனை பல்கலைக் கழக சிரேஷ்டப் பேராசிரியர் பி.எம். ஜமாஹீர். இது மட்டு மல்லாது, யாழ். பல்கலைக் ழகப் பேராசிரியர் ஞானகு மரன், தென்கிழக்குப் பல்க லைக்கழகப் பேராசிரியர் கே. கணேஸ்ராஜா, பேரா சிரியர் ஏ.எல்.எம். றியால், பேராசிரியர் எம்.எல்.எம். மாஹீர், அட்டாளைச் சேனை கல்வியற் கல்லூரி விரிவு ரையாளர் ஏ.ஜே.எல். வஸீல் உள்ளிட்ட இன்னும் எத்த னையோ பெயர்களைக் குறிப்பிடலாம்.

பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழத்தில் மெய்யியல் துறையில் ஆற்றிய பங்களிப்பும் கணிசமானதாகும். அதன் தலைவ ராகவும் அப்பல்கலைக்கழகத்தின் முஸ்லிம் மஜ்லிஸின் பொருளாளரா கவும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ‘பல் கலை’ என்ற ஆய்வு சஞ்சிகையின் பதிப்பாசிரியரா கவும் இருந்து பெரும் பங்களிப்பு ஆற்றியுள்ளார். அவர் 35-க்கும் மேற்பட்ட நூல்களைத் தந்துள்ளார். அதில் இவர் எழுதிய இஸ்லாத்தின் தோற்றம் சமூகப் பண்பாட்டியல் ஆய்வு நூலுக்கு அரச சாஹித்திய விருது வழங்கப்பட்டது. தமிழ் இலக்கியத்தின் மீது கொண்ட ஆறாத்தாகமும்

இலங்கை இஸ்லாமிய வரலாற்று ஆய்வு தொடர்பான திறனும் மற்றும் நுண்கலை பற்றிய தேடலும் இவரைச் சிறந்த புகழ் மிக்க ஆய்வறிஞராக மதிப்பீடு செய்ய வைத்துள்ளன.

1976-இல் பேராதனை பல்கலைக்கழத்தில் இருந்து கலாநிதி எம்.ஏ சுக்ரி அவர்கள் மேல்படிப்புக்காக வெளிநாடு சென்று விட்டார். பல்கலைக்கழக மாணவர்களுக்கு அடிப்படைப் பாடநெறி, அதில் சர்வதேச அரசியல், இலங்கைப் பொருளாதாரம், சர்வ சமயங்கள் என்பன கற்பிக்கப்படும். அந்தப் பாடப் பரப்பில் நுண்கலையும் ஒன்று. அதில் ஒரு பிரிவு முஸ்லிம் நுண்கலை. அதைப் படிப்பது என்றால் கலாநிதி சுக்ரி அவர்கள் தான் படிப்பிக்க வேண்டும். ஆனால் அவர் இல்லை. சிங்கள மொழியியல் துறைப் பேராசிரியர் விதானாச்சி அவர்கள் அதன் தலைவராக இருந்தார். இரண்டாம் நிலையில் பேராசிரியர் காசிநாதன் அவர்கள் இருந்தார். அப்பொழுது அனஸ் அவர்கள் அங்கு உதவி விரிவுரையாகராகக் கடமையாற்றினார். பேராசிரியர் விதானாச்சி முஸ்லிம்களுடைய நுண்கலையைப் பற்றி கற்பிப்பதற்கு ஆளில்லை என்று சற்றுத் தடுமாற்றம் அடைந்திருந்தார். அப்பொழுது கலாநிதி காசிநாதன் அவர்கள் மெய்யியல் துறையில் கற்பிக்கின்ற அனஸ் இருக்கிறார். அவர் மூலம் அதைப் படிப்பிக்கலாம், அவர் செய்யக் கூடியவர் என்று அவரிடம் தெரிவித்து விட்டு, காசிநாதன் அவர்கள் அனஸிடம் வந்து அந்தப் பாடத்தை எடுக்க வேண்டும் என்றார். இஸ்லாமிய ஓவிய மரபும் முகலாய கட்டடக்கலையும் என்ற தலைப்பில் கற்பிக்க வேண்டும். இது ஐந்து மணித்தியாலயம் படிப்பிக்க வேண்டும். ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு மூன்று வாரம் அல்லது ஒரு மாதம் வரையும் கற்பிக்கின்ற பாடம். அவருக்கு இதனை முற்கூட்டி அறிவித்தமையால் அவர் அதற்கு தயாராகிவிட்டார். பேராதனை பல்கலைக்கழகத்தில் நுண்கலைப் பிரிவு மிகப் பிரமாண்டம். அன்று பிள்ளைகளுக்காகப் படிப்பிப்பதற்காக தயாரான அவர், பொதுவாகவே நுண்கலையில் ஆர்வமிக்கவராக இருந்தார். பின்னர் இஸ்லாமிய நுண்கலைக்குள் ஆழத்தடம்பதித்தவராக மாறுகின்றார். அதற்கு முக்கிய காரணம் கலாநிதி செ.வே. காசிநாதன் அவர்களே ஆவார். பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவருக்கு கலைமெய்யியலும் அழகியலும் என்னும் தனிப் பாடப்பரப்பு ஒன்று இருக்கிறது. அவர் கலை இலக்கியம் என்று அவாக் கொண்டு இளம் துடிப்புமிக்க ஒருவராக செயற்பட்ட காலத்தில் இப்பாடத்தையும் காசிநாதனிடம் கற்று இருந்தார். தத்துவம் கோட்பாடு மற்றும் நுண்கலைகள் என்று படித்த போது மேடைகளில் மிகச் சிறந்த நாடகங்களும் அரங்கேற்றப்பட்டன. அனஸ் அவர்களுக்கு பல்கலைக்கழகச் சூழல் எல்லாம் ஒன்றுக்கொன்று பொருத்தமாக அமைந்தது.

அதே நேரம் கொழும்பில் தமிழ் அவைக்காற்றுக் கழகத்தின் மூலம் பல நாடகக் கலைஞர்கள் இணைந்து நடத்திய நாடக எழுச்சிக் காலம் தோற்றம் பெறுகிறது. 'Performing Arts' என்று அதற்கு பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் புதிய நாமம் ஒன்றைச் சூட்டினார். அப்பொழுது நாடகம் பார்ப்பதற்கென்று அனுமதி சீட்டு எடுத்து வைத்திருந்தால் வருடத்திற்கு ஐந்து நாடகங்கள் பார்க்கலாம். சரஸ்வதி மண்டம் போன்ற பல இடங்களில் இந்த நாடங்கள் அரங்கேற்றம் செய்யப்படும். அவை மட்டுமல்ல சிங்கள, தமிழ் ஆங்கில ஆகிய மொழிகளிலும் நாடகங்கள் மிகப் பிரபல்யமான விளம்பரங்களுடன் அரங்கேற்றம் செய்யப்பட்டன. இவை பேராதனை பல்கலைக்கழகத்திலும் கொழும்பு தலைநகரிலும் மிகக் களைகட்டியிருந்தன. நாடகத்தின் மூலம் சமுதாயத்தின் பண்பாட்டு மரபினை உணர்ந்துகொள்ள அனஸ் அவர்களுக்கு அது ஒரு வாய்ப்பு இருந்தது. புதிய சிந்தனைகள், புத்தாக்கங்கள் அவருக்கொரு தூண்டுதலாகவும் இருந்தது. இந்த அடிப்படையில் அனஸ் அவர்கள் நுண்கலை அறிவியலில் பயணிக்க சிறப்பாக்க இந்த நாடக அரங்குகள் உதவி இருக்கலாம் என்று எண்ணத்தோன்றுகிறது.

அனஸ் அவர்களுடைய இன்னுமொரு காத்திரமான செயற்பாடாக அரச நுண்கலைப் பிரிவில் செயலாற்றியமை. 2004-களில் அரச இஸ்லாமிய நுண்கலைக் குழுவில் உறுப்பினராகவும் அனஸ் இருந்தார். அதன் தலைவராக ஆய்வறிஞர் எஸ்.எச்.எம். ஜெமீல் இருந்தார். 2015-களில் அரச நுண்கலை குழுவில் உறுப்பிராக அனஸ் இருந்தார். அதேபோல் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைப் பிரிவு ஒன்றை ஆரம்பிப்பதற்கான முன்னோடி முயற்சிகளில் ஈடுபட்டவர்களில் அவரும் ஒருவர். அதற்கான செயற்றிட்டத்தை வரைந்தவர் அனஸ் அவர்களே. ஆனால், இன்னும் அது ஆரம்பிக்கப்படவில்லை என்பது ஒரு துரதிஷ்டமான செய்தியாகும்.

ஆழ்ந்த அறிவு, பரபரப்பற்ற தன்மையும், தன்னைச் சூழவுள்ள எதிலும் ஓர் ஒழுங்கமைதியைப் பேணும் செப்பம், தன்னை முனைப்புப்படுத்திக்கொள்ளாத அடக்கம், தத்தம் மாணவர்களைத் தட்டிக் கொடுத்து வளர்க்கின்ற பெருந்தன்மை இவற்றின் கலவைதான் பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ். அவர் கல்வித்துறையில் தொடங்கி புத்தளம் முஸ்லிம் மக்களின் வாழ்வியல் வரலாறு, இஸ்லாமிய நுண்கலை என்று பரிணாமம் பெற்று இன்று பன்முக ஆளுமையின் உச்சமாகவே தோன்றுகிறார்.

அவருடைய இலக்கிய நடவடிக்கையோடு எனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அவருடன் இணைந்து பல இலக்கிய நடவடிக்கைகளில் நானும் ஈடுபட்டுள்ளேன். அன்று முதல் இன்று வரை அவருடைய ஆளுமை மிகவும் வசீகரமிக்கதாகவே காணப்படுகின்றது. அவருடன் இணைந்து அல்லாமா இக்பால் மாநாடு பற்றிய நிகழ்வுகளிலும் பங்குபற்றியுள்ளேன். அவர் எழுதிய நூல்களின் வெளியீட்டு விழாக்களை நடத்துவதற்கும் ஓர் உந்து சக்தியாக இருந்துள்ளேன். அனஸ் அவர்கள் ஆய்வறிஞராக மட்டுமின்றி ஓர் இலக்கியச் செயற்பாட்டாளராகவும் இருந்துள்ளார் என்பவைகளுக்கப்பால் அவருடைய எழுத்துகளும் பேச்சுகளும் ஈழத்து இஸ்லாமிய நுண்கலையியல் மற்றும் ஈழத்து இஸ்லாமிய வரலாற்று ஆய்வியல் பெட்டகத்தைத் தட்டித் திறக்கும் திறவுகோலாகவும் அமையும் என்றால் அது மிகையாகாது.



Iqbal.ali@thaiveedu.com



# நடனச் சுடரொளி
# விஜயாம்பிகை இந்திரகுமார்

- நவஜோதி ஜோகரட்னம்

தஞ்சாவூர் ஆஸ்தான நட்டுவனார் எண்கண் ரி.சி. கோவிந்தராஜபிள்ளையிடம் பரதநாட்டியக்கலை பயின்ற டாக்டர் விஜயாம்பிகை இந்திரகுமார், கலாஷேத்திராவில் தொடர்ந்து பயின்று தனது பரதநாட்டியத்திற்கு மேலும் மெருகு சேர்த்தவர். பரதநாட்டியத்துடன், குச்சுப்புடியிலும் இவர் ஆளுமை மிகுந்தவர். கண்டி 'சைவ மகாசபையில்' நடன ஆசிரியையாகப் பணி புரிந்த டாக்டர் விஜயாம்பிகை இந்திரகுமார், 'விஜய நர்த்தனாலயா' என்ற நடனப்பள்ளியை இலங்கையிலும் 1985-ஆம் ஆண்டு தொடக்கம் லண்டனிலும் நடாத்தி தனது நாட்டியத் திறமையை வெளிப்படுத்திப் பெருமை சேர்த்தவர்.

கொழும்பு 'தேசாபிமானி' பத்திரிகையின் ஆசிரியரும், இலங்கைக் கொம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான பி.இராமநாதன் அவர்களின் இல்லத்தில் எனது அன்புத்தந்தை அகஸ்தியருடன் பாடசாலை விடுமுறை நாட்களில் நானும் சென்று தங்குவதுண்டு. அவ்வேளைகளில் டாக்டர் இந்திரகுமார் அவர்களை அங்கு சந்தித்திருந்தேன். மனநலம் பேணும் வைத்தியர்; 'வாடைக்காற்று' என்ற திரைப்படத்தின் மூலம் நடிகராகப் புகழ் பெற்றவர்; சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர் என எனது தந்தை எனக்கு இவரை அறிமுகம் செய்திருந்தமை இப்போதும் நினைவில் ஊஞ்சல் ஆடுகின்றது. அவ்வேளையில் எனது தந்தை கண்டியில் அரசுப் பணியில் ஈடுபட்டிருந்தமையால், கண்டிக்கு நாம் குடும்பமாகவும் அதிகமாகச் செல்வதுண்டு. அச்சந்தர்ப்பத்தில் தான் விஜயாம்பிகை இந்திரகுமார் அவர்களையும் முதன்முதலில் கண்டியில் அவர் இல்லத்தில் சென்று சந்தித்து அறிமுகமாகியமை மறக்க முடியாது என் நினைவில் வந்து போகின்றது. நீண்ட காலத்தின் பின்னர் லண்டனில் டாக்டர் இந்திரகுமார் அவர்களின் இறுதி நிகழ்வில் 2008-ஆம் ஆண்டு டிசம்பரில் அவருக்கான அஞ்சலி உரையை நான் வழங்கிய போதுதான் விஜயாம்பிகை இந்திரகுமார் அவர்கள் மீண்டும் என்னை இனங்கண்டுகொண்டார். அதன் பின்னர் அவருடனான உறவு நீடித்தது.

விஜயாம்பிகை அவர்கள், மூன்று நான்கு வயதுச் சிறுமியாக இருந்த காலத்தில் சினிமாவைப் பார்த்துவிட்டு வந்து, அதில் உள்ள நடனத்தை வீட்டில் ஆடிப்பார்ப்பாராம். அவ்வேளை, குமாரி கமலாவின் பாம்பு நடனத்தைப் பார்த்துவிட்டு அதேமாதிரி வளைந்து ஆடும்போது கீழே விழுந்ததும் உண்டு என்பார். அவரது நடன ஆர்வம் இப்படி இயல்பாக எழுந்தபோது, அவரது அம்மாவே முதற் குருவாகி அவருக்கு நடனத்தைக் கற்றுக் கொடுத்திருக்கிறார். தஞ்சாவூரிலிருந்து கொழும்பு வந்திருந்த தஞ்சாவூர் ஆஸ்தான நட்டுவனார் எண்கண் கோவிந்தராஜ பிள்ளை அவர்களிடம் நடனத்தைப் பயின்று, ஐந்து வயதாக அவர் இருக்கும்போதே மேடைகளில் அலாரிப்பு, ஜதிஸ்வரம் போன்றவற்றை அடம்பிடித்து ஆடுவதுண்டு. அவரது தாத்தா அவருக்கு பக்கபலமாக இருந்து உற்சாகம் கொடுத்திருக்கிறார். அக்காலத்து பிரபல சினிமா நடிகையும் நர்த்தகியுமான ஈ.வி. சரோஜாவின் பெரியப்பாவான அவரது குரு தஞ்சாவூரிலிருந்து சிறந்த நாதத்துடன் கூடிய சலங்கையை வரவழைத்து பூஜை செய்து, 'குமாரி கமலா போல் பெயர் எடுப்பாய்' என வாழ்த்தி, அவரது காலில் கட்டிவிட்டார். இப்படி ஒரு அதிர்ஷ்ட சூழ்நிலையிலேயே அவரது நடன வாழ்வு ஆரம்பமானது என்பதை 'மகரந்தச் சிதறல்' நிகழ்ச்சியில் (பாமுகம் FA TV-யில் இன்றுவரை நான் தயாரித்து வழங்கும்) நான் மேற்கொண்ட நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

அவரது குடும்பம் ஐந்து தலைமுறையாகவே கலைக் குடும்பமாகத் தொடர்ந்து வந்திருக்கின்றது. அவரது தந்தை ராமசாமி, அவரது தாய் சொர்ணவள்ளி, அவரது தங்கை கனகாம்பிகை, தம்பி கிருபராஜ் முதலியோர் கலையில் ஈடுபாடு கொண்டவர்களாகவே காணப்பட்டனர். அவரது தந்தை தொழில் நிமித்தமாக இலங்கைக்கு வந்து மிகவும் வசதியான பிரபலம் வாய்ந்த தொழிலதிபராகவும் வாழ்ந்தவர். பிரபல நடிகர் எம்.ஆர்.ராதாவுடன் தஞ்சாவூரில் ஒரே தெருவில் வாழ்ந்து, நாடகத்

துறையில் நெருங்கிய நண்பராகத் திகழ்ந்தவர். பின்னர், இலங்கையிலும் நாடகக் கம்பனியை நடாத்தி வந்தார்.

ஒலிபெருக்கிகள் அறிமுகம் இல்லாத காலங்களில் அவரது தாய் மாமன் மார்களான ஆர்.ராமநாதன், ஆ. சோமநாதன் ஆகியோர் அவரது தாயாருடன் பாடி நடித்துப் புகழ் பெற்றவர்கள். விஜயாம்பிகையின் தாயாரும் பெரிய மாமாவும் இனிமையாகப் பாடி நடித்ததைப் பார்வை யிட்ட பிரபல பாடகியான கே.பி. சுந்தராம்பாள், அவர்களை 'சினிமாவில் நடிக்கலாம்' எனப் பாராட்டியிருந்தாராம். அவரது பெரிய மாமனார் மதுரையில் மோர்சிங், கெஞ்சிரா போன்ற தாள வாத்தியங்களைப் பயின்று, பின்னர் இலங்கை வானொலி நிலையத்தில் தாள வாத்தியக் கலைஞராகத் பணியாற்றியவர்.

விஜயாம்பிகை அவர்கள், கலாஷேத்திராவில் நாட்டியத்தைப் பயின்று கொண்டிருந்தபோது, அவரது நாட்டியத்தின் திறமையை முதல் வரு டத்தில் நாட்டியத்தாரகை ருக்மணிதேவி பரீட்சித்துப் பார்த்தார். அவரது நாட்டியத்தைக் கவனித்த அவர், வீணை வாத்தியத்தை முதற் பாடமாகக் கற்கச் சென்ற விஜயாம்பிகையைக் கூப்பிட்டு பரதநாட்டியத்தை முதற்பா டமாகவும் வீணை வாத்தியத்தை இரண்டாவது பாடமாகவும் பயிலுமாறு பணித்தார். வீணையை அவர் வீட்டில் வைத்துப் பயிற்சி எடுத்துக் கொண் டிருந்தவேளை, மைசூர் வாசுதேவாச்சாரியாரின் பேரனான ராஜாராம் அவர் களைச் சந்திக்க நேர்ந்தது. வீணையோடு பாடலின் முக்கியத்துவத்தை உணர்ந்த அவர், லிஜயாம்பிகையைப் பாடும்படி கேட்டிருக்கிறார். அவரது பாடலின் சாரீரத்தை அவதானித்த ராஜாராம் அவர்கள், வாய்ப்பாட்டையும் கற்றுத் தருவதாகக் கூறி விஜயாம்பிகை அவர்களுக்கு வாய்ப்பாட்டையும் கற்றுக்கொடுத்திருக்கிறார்.

அதே போன்று, ருக்மணிதேவிக்கு பாவம் கற்பித்த கௌரிபாட்டி அவர்க ளையும் சந்தித்தபோது அவரிடம் மேலும் நாட்டிய நுணுக்கங்களை பயிலும் வாய்ப்பு ஏற்பட்டது. நான்கு வருடம் அடையார் லஷ்மணனிடம் நிறைய உருப்படிகளைக் கற்றுக்கொண்டார் விஜயாம்பிகை. குச்சுப்புடி யையும், மோகினி ஆட்டத்தையும் சின்ன சத்தியம் அவர்களிடம் கற்றுக் கொண்டார். வீணை, வாய்ப்பாட்டு, நாட்டியம் போன்ற கலைகளை இந்தி யாவின் பெரும் ஜாம்பவான்களிடம் பயிலும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதுவதாகக் கூறியிருந்தார். அவரது பரதநாட்டிய அரங்கேற்றம் அப்போதைய தமிழக முதல் அமைச் சராக இருந்த கலைஞர் கருணாநிதியின் தலைமையில் இடம்பெற்றதா கவும், அவரது கச்சேரியை முழுவதுமாகப் பார்த்த கலைஞர் விஜ யாம்பிகை பாராட்டிப் பேசியதையும் மகிழ்வுடன் என்னிடம் தெரிவித்தி ருந்தார். உண்மையில் அவை மிகப்பெரும் பாராட்டுக்குரிய விடயம் என எண்ணுகின்றேன்.

இந்தியா சென்று கலைகளைப் பயின்று பன்னிரண்டு வருடங்களின்பின் இலங்கை திரும்பியிருந்த விஜயாம்பிகை இந்திரகுமார் அவர்கள் கொழும்பில் உள்ள 'சங்கீத நாட்டிய சங்கம்' நடாத்திய கச்சேரியில் கலந்து கொண்டு சிறப்பித்தார். அரங்கேற்றத்தின் பின்னர் நடந்த முதலாவது கச்சேரி இதுவாகும். அதற்கு அப்போதைய கலாசார அமைச் சராக இருந்த எஸ்.எஸ். குலதிலக தலைமை தாங்கியிருந்தார். கொட்டாஞ் சேனையில் 'இந்து இளைஞர் சங்கம்' ஒவ்வொரு வருடமும் அங்கேயே நடனக் கச்சேரியை வழங்குவதற்கு விஜயாம்பிகைக்கு களம் அமைத்துக் கொடுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் இடம்பெற்ற கலை விழாக்களில் விஜயாம்பிகையின் நடனம் இல்லாத நிகழ்ச்சிகள் இல்லை யென்றே கூறலாம். 1970-ஆம் ஆண்டு முதல் 1983-ஆம் ஆண்டு வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சிகளில் அதிகமாகப் பங்கெ டுத்து ஆடி வந்திருக்கின்றார். அப்பொழுது ஜெய்சங்கர், நாகேஷ் போன்ற பிரபல நடிகர்களும் அவரைப் பாராட்டி, பரிசில்கள் வழங்கியிருந்திருந் தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



கண்டியில் விஜயாம்பிகையின் பரதநாட்டிய மாணவிக்கு முதல் அரங்கேற்றம் இடம்பெற்றது. அம்மாணவி கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒரு இந்துப் பெண்ணாக விஜயாம்பிகை இருந்தும், யேசுவின் வாழ்க்கை குறித்த கிறிஸ்தவ பாடலை இயற்றி மாணவி ஆடும்படி 'பதமாக' நடனம் அமைத்து அவ்வரங்கேற்றத்தைச் சிறப்பாகவே செய்திருந்தார். அவ் அரங்கேற்றத்திற்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த தனிநாயகம் அடிகளார் நடனத்தை மிகவும் ரசித்துப் பார்த்து அதில் தவறுகள் எதுவும் இல்லாது அமைந்ததைப் பாராட்டியதுடன் நில்லாது விஜயாம்பிகையை ஆசிர்வதித்தும் சென்றார்.

கண்டி, நாவலப்பிட்டி போன்ற இடங்களில் இடம்பெறும் கச்சேரிகளின்போது விஜயாம்பிகை சென்று ஆடுவதுண்டு. தாகூரின் 'சண்டாளிக்கா' என்ற கதையை நாட்டிய நாடகமாக கொழும்பில் மேடையேற்றி மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தார். அந்நாடகத்தில் மந்திரவாதி ஏவிவிட்ட மாய எலும்புக்கூடுகள் ஆடுவதைக் குச்சுப்புடி , பரதத்தில் ஜதிகளை அமைத்து, மிகப் பயங்கரமாக நடன அமைப்புச் செய்திருந்திருந்தார். அவ்வேளை டாக்டர் இந்திரகுமார் எழுப்பிய மேடை அறிவிப்பும் ஒளியும் பார்க்கும் மக்கள் மனங்களில் பயங்கரத்தை உண்டாக்கியது எனக் கூறுவர். சிறுவர்கள் நிஜமாகவே பயந்து கத்தினார்களாம். இவ்விழாவிற்கு அமைச்சர் திரு.எஸ். தொண்டமான் அவர்கள் தலைமை வகித்திருந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

வீடமைப்புத் திறப்பு விழா ஒன்றின்போது இவரது நாட்டியத்தை அப்போது பிரதம மந்திரியாகவிருந்த பிரேமதாசா அவர்களும் கண்டுகளித்ததோடு நில்லாது அதனை ரசித்துப் பாராட்டினாராம். அப்போது இலங்கை வங்கி, தனது கலண்டரில் விஜயாம்பிகையின் படத்தைப் போட்டு வெளியிட்டு இருந்தமை அவருக்குக் கொடுத்திருந்த பெரிய கௌரவமாக எண்ணத்தோன்றுகின்றது.

1970-களில் ரஷ்ய பலே நடனத்தைத் தழுவி பரதநாட்டியத்தில் சில பரீட்சார்த்த முயற்சிகளை மேற்கொண்டிருந்தார் விஜயாம்பிகை. டாக்டர் இந்திரகுமாரின் நண்பர் கே.எம்.வாசகர் என்பவரின் வேண்டுகோளின்படி, சோவியத் ரஷ்யாவின் நிகழ்ச்சி ஒன்றிற்கு விஜயாம்பிகை அவர்கள் சென்றிருந்தார். அங்கு புதிய முறைகளைக் கையாண்டு 'சாந்திபுறாவும் பாசிச ஜடாமுனியும்' என்ற நாட்டிய நாடகத்தை வழங்கியிருந்தாராம். அந்த நாட்டிய நிகழ்வைப்பார்த்தவர்கள் 'அன்றைய கால கட்டத்திற்கே - அதாவது இரண்டாம் உலகப்போருக்கே நாங்கள் சென்று விட்டோம்' என்று கூறி விஜயாம்பிகை அவர்களைப் பாராட்டியிருக்கின்றார்கள். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் இடம்பெற்ற நாட்டிய நாடகத்தில் தமிழ்மொழி மூலம் இடம்பெற்ற அவர்களது நாட்டிய நாடகம் வெற்றியீட்டி விஜயாம்பிகைக்கு பெரும் நிறைவைக் கொடுத்திருந்தமையை மகிழ்வுடன் நேர்காணல் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இதே போன்று ரஷ்யாவின் புகழ்மிக்க 'அன்னத் தடாகம்' (Swan Lake) என்ற பலே நடனத்தைப் பார்த்துவிட்டு, அதேபாணியில் 'விஜய நர்த்தனாலயா' மாணவிகளுடன் விஜயாம்பிகை முக்கிய பாத்திரம் வகித்து, அதனைக் கொழும்பில் மேடையேற்றியிருந்தார். 'அன்னத் தடாகம்' என்ற பலே நாடகத்தினை நூற்றாண்டை முன்னிட்டு, அதனை நாட்டிய நாடகமாக மேடையேற்றியிருந்தார். 'கோல்தரங்கம்' என்ற புதிய உருப்படியை உருவாக்கி அதனைத் தரங்கத்தில் அமைத்து வெளிப்படுத்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து ரஷ்யாவிற்கு அரசாங்கச் சிறப்பு விருந்தினராகச் செல்லும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. ரஷ்யாவின் பலே பாடசாலைகளையும், நடனங்களையும், நடன விடயங்களையும், பிரபல்யமான 'போல்சாய் தியேட்டரையும்' பார்வையிட்டு அறிந்ததோடு, அங்குள்ள அரசாங்க மாளிகையில் விருந்துண்ணும் பாக்கியத்தையும் விஜயாம்பிகை பெற்றிருந்தார். இது எமக்கெல்லாம் பெருமை சேர்க்கின்ற விடயமாகும்.

விஜயாம்பிகை அவர்கள் சினிமாத்துறையிலும் பங்குபற்றியிருந்திருக்கின்றார். 'மீனவப் பெண்' என்ற தமிழ்ப்படத்திலும் 'சத்தப்பணாய்', 'மறுவாள் சமக வாசய', 'மேம ஹரித', 'சிறீ விக்ரம ராஜசிங்க' போன்ற சிங்களப்படங்களிலும் பங்குபற்றி அவரே நடன அமைப்புகளைச் செய்து ஆடியிருந்திருக்கின்றார். பதினைந்திற்கும் மேற்பட்ட மேடை நாடகங்களில் கதாநாயகியாகவும் நடித்திருக்கின்றார்.

விஜயாம்பிகை அவர்களின் கலைவளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக டாக்டர் இந்திரகுமார் அவர்கள் செயற்பட்டவர். அவரது கலையின் கலாரசிகன் என இந்திரகுமாரைக் கூறுவார். விஜயாம்பிகையின் கலை நிகழ்ச்சிகளுக்கு அவர் அறிவிப்புச் செய்வதுடன், மேடை அமைப்புகள், ஒலி, ஒளி என்பவற்றுக்கும் தம்மால் முடிந்த உதவிகளைச் செய்வார். அவரது நாட்டிய, நாடக நிகழ்ச்சிகளின் கதை வடிவங்களுக்குக்கூட கருத்துக்கள் கூறி மாற்றியமைப்பதில் உதவி செய்ததையும் பெருமையுடன் விஜயாம்பிகை நினைவு கூர்கிறார்.

விஜயாம்பிகை அவர்கள் 1985-ஆம் ஆண்டு லண்டனுக்கு வந்தநாள் தொடக்கம் 'விஜய நர்த்தனாலயா' நடனப்பள்ளியை லண்டனில் தொடர்ந்தும் நடாத்தி இருந்தார். அவ்வேளை பி.பி.சி. ஆனந்தி சூரியப்பிரகாசம் அவர்கள் விஜயாம்பிகை அவர்களுக்கு மாணவர்களை ஒழுங்கு செய்து கொடுத்து உதவிகளை வழங்கியிருந்தார். லண்டன் தமிழ் பாடசாலைகளிலும் நாட்டியத்தை கற்பித்திருந்ததோடு அவரது மாணவர்களுடன் இணைந்து லண்டன், பேர்மிங்காம் போன்ற இடங்களில் பல்வேறு நாட்டிய நிகழ்ச்சிகளை அளிக்கை செய்திருக்கின்றார்.

மெற்ரோபொலிற்றன் பொலிஸும் ஸ்கொட்லன்யார்ட் பொலிஸும் இணைந்து அவர்களது தலைமையகத்தில் கலை நிகழ்ச்சிகளை நடாத்துவதுண்டு. ஒன்பது ஆண்டுகள் தொடர்ந்து அவரது மாணவர்கள் அதில் பங்குபற்றி இருந்தார்கள். 'சித்திரா' என்ற தொலைக்காட்சித் தொடர் நாடகத்தின் ஆரம்பப் பாட்டுக்கு நடன அமைப்புச் செய்து அவரது மகள் மற்றும் மாணவிகளுடன் அவரும் ஆடியிருந்தார். அத்தொடரில் டாக்டர் இந்திரகுமார் அவர்களும் நடித்திருந்தார்.

இலங்கையில் மக்கள் எழுத்தாளர் முன்னணியால் 'ஜன நர்த்தகி' என்ற விருதும், இந்து இளைஞர் சங்கத்தால் 'ஆடும் கலாப மயில்' என்ற பட்டமும், அமெரிக்காவில் டாக்டர் பட்டமும், கனடாவில் 'நாட்டிய ரத்னா' என்ற விருதும் என பல விருதுகள் விஜயாம்பிகை அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. தமிழகத்தில் தமிழக முதல்வர் கருணாநிதி 'நடனச் சுடரொளி' என்ற பட்டத்தினை வழங்கி அவரை பெருமைப்படுத்தி இருந்த அதேவேளை, மதுரை தமிழிசைச் சங்கம் அவருக்கு 'ஆடல்கலை அரசி' கௌரவித்தது. விருதுகளால் பெருமைப் பெற்றுத் திகழ்ந்த டாக்டர் விஜயாம்பிகை இந்திரகுமார் அவர்கள் இன்று எம்மிடம் இல்லை என எண்ணும்போது நெஞ்சு வலிக்கின்றது.



navajothy@thaiveedu.com

# கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர்

# பேராசிரியர் மா. செல்வராஜா

## - து. கௌரீஸ்வரன்



இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தராகச் செயலாற்றிய பேராசிரியர் மா. செல்வராஜா அவர்கள் தனது 77- ஆவது வயதில் இயற்கை எய்தியுள்ளார்.

அன்னாரது மறைவின் பின்னர் கிழக்கிலங்கையின் கல்வித் துறையினைச் சார்ந்த பலரும் கிழக்கின் கல்வித் துறையின் அபிவிருத்திக்கு இவர் ஆற்றியுள்ள காத்திரமான பங்களிப்புகள் குறித்து நினைவுகூர்ந்து வருகிறார்கள்.

மட்டக்களப்பின் படுவான்கரைப் பெருநிலப்பரப்பிலுள்ள முனைக்காடு என்னும் பழம்பெரும் ஊரில் 1948-இல் பிறந்த மா. செல்வராஜா அவர்கள் இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் தனது இளங்கலைப் பட்டத்தைப் பெற்று இலங்கையின் பல்வேறு பாடசாலைகளிலும் ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றியதுடன் இங்கிலாந்தில் கல்வியியலில் முதுகலைப் பட்டப்படிப்பையும் பெற்றார்.

இவர் இலங்கைத் தேசிய கல்வி நிறுவகத்தில் பணியாற்றியதுடன், இலங்கைக் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தில் கல்வியியல் பாடத்திற்கான விரிவுரை யாளராக இணைந்து கொண்டார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தில் பொதுப் பட்டத்தைப் பெறும் மாணவர்களுக்கான ஒரு பாடத்துறையாகவே கல்வியியல் காணப்பட்டது. இதனால் கல்வி யியலில் மேற்படிப்புகளுக்கான வாய்ப்புகள் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்ளும் நிலைமையே இருந்து வந்தது. கல்வியியலைச் சிறப்புப் பாடமாகக் கற்கும் வாய்ப்புகள் இருக்கவில்லை. இதனை உணர்ந்து, கல்வி யியலை ஒரு தனித்த துறையாக வளர்த்தெடுத்ததில் பேராசிரியர் மா. செல்வராஜா அவர்கள் மேற்கொண்ட அயராத உழைப்பு மதிப்புமிக்கதாகும்.

கல்வியியலை ஒரு தனித்த துறையாக மாற்றுவதற்கான ஆதரவுத் தளத்தையும் தேவையான உதவிகளையும் பெறுவதில் முன்னின்று செயலாற்றி ‘கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை’ என்ற புதிய துறையினை வடிவமைத்து அதன் தலைவராகப் பொறுப்பேற்றதுடன் அதன் மேலதிக விருத்திக்காகவும் பேராசிரியர் அயராது உழைத்தார்.

இதனால் கிழக்கிலங்கையிலிருந்து வரும் மாணவர்களில் கணிசமானோர் கல்வியியலில் சிறப்புக் கற்கையினைப் (B.Ed) பெற்றுக் கல்விமாணிப் பட்டதாரிகளாக வெளியேறு வதற்கான வாய்ப்பு வசதிகள் உருவாகின.

இவ்வாறு கிழக்குப் பல்கலையிலிருந்து வெளியேறும் கல்வி யியல் பட்டதாரிகள் ஆசிரிய நியமனத்தின்போது தரம் இரண்டிற்குள் உள்வாங்கப்படுகின்றார்கள் என்பது குறிப்பி டத்தக்கதாகும்.

இத்தோடு இலங்கையில் தமிழ் மொழி பேசும், கல்வியியல் துறையினைச் சார்ந்த பலரும் தமிழில் கல்வி முதுமாணி (M.Ed), கல்வியில் முது தத்துவமாணிப் (M.Phil) பட்டப் படிப்புகளைப் பெறுவதற்கேதுவாகக் கிழக்குப் பல்கலைக்க ழகத்தின் கல்வி மற்றும் பிள்ளை நலத் துறையினைத் திட்டமிட்டுக் கட்டுருவாக்கஞ் செய்ததோடு, கல்வியியல் துறை சார்ந்த ஒரு நிபுணத்துவ ஆளுமையாகவும் தனது பங்களிப்பை பேராசிரியர் மா. செல்வராஜா அவர்கள் வழங்கிவந்தார்.

ஆசிரியராக, அதிபராகப் பல ஆண்டுகள் சேவையாற்றிய அனுபவங்களுடன் உயர்கல்வித் துறையில் கல்வியியல் ஆய்வறிஞராகப் பரிமாணம் பெற்ற பேராசிரியர், இலங்கையின் பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் தனது நிபுணத்துவ அறிவை வழங்கி வந்தார் என்பதும் கல்வித்துறை சார்ந்து காத்திரமான பங்களிப்பினை மேற்கொண்டிருந்தார் என்பதும் கவனத்திற்குரியதாகும்.

தான் சார்ந்த கல்வியியல் துறையினை மேம்படுத்தும் நாட்டம் பேராசிரியர் மா. செல்வராஜா அவர்களிடம் இயல்பாகவே இருந்துள்ளது. 1978-இல் படுவான்கரை யினைச் சேர்ந்த இளந்தலைமுறையினரின் கல்வி விருத்திக்காக இவர் உருவாக்கிய 'ஒளிக்கல்லூரி' எனும் அமைப்பும் அதன் செயற்பாடுகளும் இதற்குச் சான்றாகும்.

ஒளிக்கல்லூரியால் பயனடைந்த நபர்கள் மூலம் அதன் முக்கியத்துவம் வெளிப்படும்போது பேராசிரியர் மா. செல்வராஜாவின் பணிகளினது கனதி இன்னும் வெளிச்சமாகும்.

படுவான்கரைப் பிரதேசம் ஏனைய நகரங்களுடன் இலகுவில் தொடர்பாடல் மேற்கொள்ள முடியாதவாறு போக்குவரத்து வசதிகள் விருத்தியடையாது தனிமைப்பட்டிருந்த ஒரு காலகட்டத்தில், 1978-இல் சூறாவளியால் மட்டக்களப்பு பேரழிவிற்கு உள்ளாகிய பின்புலத்தில், படுவான்கரை யினைச் சேர்ந்த பிள்ளைகளின் நவீன கல்வி விருத்திக் காகச் சிந்தித்துச் செயலாற்றிய பேராசிரியரின் பணிகள் கவனத்திற்குரியன.

பேராசிரியர் மா. செல்வராஜா அவர்கள் பேராசிரியர் விபுலா னந்தரின் கல்வியியல் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்து உலகின் கல்விச் சிந்தனையாளர்களின் வரிசையில் விபுலானந்த அடிகளுக்கான இடத்தை நிரூபிப்பதில் ஆர்வஞ்செலுத்தியுள்ளமையும் இங்கு நினைவுகூரத்தக்கது.

தென்னாசியப் பின்காலனியச் சூழலில் தமிழ் ஆய்வறிவுச் செயற்பாட்டாளராக இயங்கிய பேராளுமையான சுவாமி விபுலானந்தரின் புலமைத்துவச் செயற்பாடுகளும் அவற்றின் முக்கியத்துவமும் மிக நுணுக்கமாகப் பரவலாக்கம் பெறவேண்டியுள்ள இன்றைய கால கட்டத்தில், விபுலானந்தர் பற்றிய பேராசிரியர் மா. செல்வராஜாவின் ஆய்வு கவனிப்பிற்குரியதாகத் தெரிகிறது.

இது குறித்து பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி அவர்கள் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

'கல்வித்துறைப் பேராசிரியர் மா. செல்வராஜா அவர்கள் உலகக் கல்விச் சிந்தனையாளர் வரிசையில் 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த செக்குடியரசு நாட்டைச் சேர்ந்த நவீன கல்வியின் தந்தை எனக் கருதப்படும் ஜோன் எமொஸ் கொமினியஸ், 20-ஆம் நூற்றாண்டில் அமெரிக்கக் கல்விச் சிந்தனையாளர் ஜோன்டியூவி ஆகிய இருவருடன் சுவாமி விபுலானந்தரின் கல்விக் கருத்துகளை ஒப்பீட்டாராய்ந்து, அவர்களுக்கு ஒப்பாகச் செயற்பட்டு, சுவாமி விபுலானந்தர் உயரிய கல்விச் சிந்தனைகளுடன் அரிய சாதனைகளைப் புரிந்துள்ளார் என்பதைத் தெளிவாக நிறுவியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது'.

இவ்வாறு கிழக்கிலங்கையின் நவீன கல்வி வரலாற்றில் குறிப்பாகப் பல்கலைக்கழகஞ் சார்ந்த கல்வியியல் துறையின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் தனது காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ள பேராசிரியர் மா. செல்வராஜா அவர்கள் இலங்கை கிழக்குப் பல்கலைக்க ழகத்தின் வேந்தராகப் பதவி வகித்தமை அவரது புலமைக்குக் கிடைத்த கௌரவமாகும்.

கிராமத்தில் பிறந்து, தனது கடினமான முயற்சியாலும் காத்திரமான உழைப்பாலும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளாலும் ஆசிரியர், அதிபர், விரிவுரையாளர், முதுநிலை விரிவுரையாளர், துறைத் தலைவர், பீடாதிபதி, பேராசிரியர், வேந்தர் என்று இலங்கையின் உயர்கல்வித் துறையில் தடங்கள் பலவும் பதித்துள்ள பேராசிரியர் மா. செல்வராஜா அவர்களின் வாழ்வும் பணிகளும் நமது கற்கைக்குரியதாக உள்ளன எனலாம்.



gowrieeswaran@thaiveedu.com



" கிழக்கிலங்கையின் நவீன கல்வி வரலாற்றில் குறிப்பாகப் பல்கலைக்கழகஞ் சார்ந்த கல்வியியல் துறையின் உருவாக்கத்திலும், வளர்ச்சியிலும் தனது காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ள பேராசிரியர் மா. செல்வராஜா அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தராகப் பதவி வகித்தமை அவரது புலமைக்குக் கிடைத்த கௌரவமாகும் "



# காரிருளில் பிரகாசித்து ஒளிர்ந்த நட்சத்திரம் பேராசிரியர்

# மா. செல்வராஜா

## - சி. ரமேஷ்

பூமியில் பிரகாசமாக ஒளிர்ந்து கொண்டிருந்த நட்சத்திரம் அணைந்துவிட்டது. அன்பாலும் கருணையாலும் நிறைந்திருந்த அத்திருவுருவம் கண்முன்னே சூரியனைக் கண்ட பனிபோல விலகிச் செல்கிறது. வீடு செல்லும் போதெல்லாம் புன்னகை மலர என்னை வரவேற்ற அப்பூ முகத்தை இனிக் காணமுடியாது என நினைக்கும்போது கண்களில் கண்ணீர் பனிக்கிறது; உள்ளம் கனக்கிறது; நெஞ்சு பொரும எனது ஆசானுக்கு விடை பகர்கிறேன்.

எனக்கும் செல்வராஜா சேருக்கும் உள்ள உறவு பேராசிரியர் செ. யோகராசா அவர்களின் ஊடாக ஏற்பட்டது. 2002-ஆம் ஆண்டு இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் நான் Postgraduate Diploma in Education (PGDE) செய்து கொண்டிருந்த காலமது. கற்பித்தல் திறனை மேம்படுத்த அல்லது கற்பித்தல் தொழிலில் நுழைய விரும்பும் ஆசிரியர்களுக்கான கற்றைநெறியாக இது காணப்பட்டது.

பட்டப்படிப்பு முடித்துவிட்டு வேலையில்லாமல் நூலகமும் வீடுமாக அலைந்து திரிந்த அக்காலப்பகுதியில் ஆசிரியர் அல்லாதவர்களும் பட்டப் பின் இக்கற்கை நெறியைத் தொடரலாம் என கேள்விப்பட்டு நானும் தொடர்ந்தேன். அக்கற்கை நெறியை முழுமையாகக் கற்று பரீட்சைக்குத் தோற்ற முன்னர் எனது கற்பித்தல் திறனை மதிப்பீடு செய்வதற்கான பணி செல்வராஜா சேரிடம் ஒப்படைக்கப்பட்டது. குறித்த திகதியில் மட்/வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயத்திற்கு செல்லுமாறு பணிக்கப்பட்டேன். ஆனால் அக்காலப்பகுதியில் திருமணம் முடித்து யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தமையால் உரிய காலப்பகுதியில் அங்கு செல்லமுடியவில்லை. ஏனெனில் என்னை அப்பாடசாலைக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்ட கடிதமும் உரிய காலப்பகுதியில் எனக்கு வந்து சேரவில்லை. திடீரென என்ன செய்வது என்றும் தெரியவில்லை. அப்போது தொலைபேசி வாயிலாக பேராசிரியர் செ. யோகராசா சேரோடு தொடர்பு கொண்டேன். செல்வராஜா சேரோடு கதைத்துவிட்டு சொல்வதாகக் கூறினார். செ. யோகராசா சேர் பல சோலிக்காரர். சில நேரங்களில் சில விடயங்களை மறந்துவிடுவார். ஆனால் இவ்விடயத்தை அவர் அவ்வாறு மறக்கவில்லை. பின்னேரம் அழைப்பெடுத்து விடயத்தைக் கூறினார். தான் கதைத்ததாகவும் உடனே புறப்பட்டு மட்டக்களப்புக்கு வந்து தன்னைச் சந்திக்கும்படி செல்வராஜா சேர் தன்னிடம் கூறியதாகவும் தெரிவித்தார். பலமுறை சேருக்கு நன்றி கூற, அதனைச் சிறிதும் பொருட்படுத்தாத யோகராஜா சேர் சீக்கிரம் வந்து சேரைச் சந்தி எனக் கூறினார். நான், அடுத்த நாளே மட்டக்களப்புக்குச் சென்று, அன்றிரவே கல்லடியில் உள்ள செல்வராஜா சேரைச் சந்தித்தேன். அவருக்கு ஆச்சரியம். அவர் கூறி, அடுத்த நாளே நான் வருவேன் என்பதை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. என்னை அன்போடு கூப்பிட்டு அமரச் செய்தோடு, தேநீரும் தந்து உபசரித்தார். நான் இரவு எட்டுமணி போலவே

அவரைச் சந்தித்தேன். உங்களுக்கு எப்போது பாடசாலைக்கு வர நேரமிருக்கு எனக் கேட்டார். உண்மையில் உரிய நேரத்துக்கு நான் வருகை தராததையிட்டு என்னைக் கண்டித்திருக்கவேண்டும். தான் ஒரு திகதியைக் கூறி அந்நாளுக்கு வரும்படி எனக்கு கட்டளையிட்டிருக்கவேண்டும். ஆயினும் இரண்டையும் செய்யாது என்னிடம் எப்போது வருவாய் எனக் கேட்கிறார். நான் ஆர்வக் கோளாரினால் 'நாளை வரட்டே' எனக் கூற 'நீங்கள் பயணத்தால் வந்தனிங்க, ஆற, அமர இருந்து வலு கிளீனா பிறிப்பெயார் பண்ணிவிட்டு இரண்டு நாள் கழித்து பத்து மணிக்கு வாருங்கள்' எனக்கூறினார். நான் கண்கலங்கி நின்றேன். கடவுள் இன்னமும் உள்ளார். அவர் சேரைப்போன்று மனித வடிவில் வாழ்கிறார் என்பதை உணர்ந்து கொண்டேன். நான் சிறியவனாக இருந்தும் என்னை ஒருமையில்கூட அவர் விளிக்கவில்லை. கண் கலங்க அவருக்கு நன்றி கூறிவிட்டு, வீடு திரும்பினேன்.

உடனே வீடு சென்று ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் யோகேந்திரன் சேரின் உதவியுடன் எனக்குரிய ஆசிரியர் குறிப்புக்களையும் கையேடுகளையும் கற்பித்தல் கருவிகளையும் தயாரித்தேன். பின்னர் குறித்த நாளில் யாவற்றையும் எடுத்துக் கொண்டு மட்/வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயத்திற்கு சென்றேன். அதிபரிடம் விடயத்தை தெரிவித்தேன். அதற்கு அதிபர், செல்வராஜா சேர் ஏலவே என் வருகையைத் தன்னிடம் கூறியதாகக் கூறி, சேர் வந்தவுடன் தரம் எட்டாம் வகுப்புக்கு வரலாற்றையும் தரம் பதினொராம் வகுப்புக்குத் தமிழையும் கற்பிக்கும்படி பணித்ததோடு நில்லாது, எனது ஆசிரியர் குறிப்பையும் வாங்கிப் பார்த்து விட்டு புன்முறுவல் மிளிர கையொப்பமும் இட்டுத் தந்தார். அவ்வேளை செல்வராஜா சேரும் வர அவரோடு அளவளாவி விட்டு எனக்கு வகுப்பைக் காட்டி, ஒரு ஆசிரியரிடம் அழைத்துச் செல்லுமாறு பணித்தார். நானும் மகிழ்ச்சியோடு சென்றேன். அப்போது அங்கு வந்த செல்வராஜா சேர் நான் உள்ளே வரவில்லை. ஏனெனில் நான் உள்ளே இருந்தால் உங்களுக்கு கற்பிக்க பயமாக இருக்கும். அத்தோடு நீங்க டீச்சிங்குக்கு புதுசு. ஆதலால் உம்மால் ஒழுங்காகக் கற்பிக்க முடியாமல் போகும். நான் வெளியில் நின்றபடி நீங்கள் படிப்பிப்பதை அவதானிக்கிறேன் எனக்கூறினார். நான் அவரை நன்றியுடன் பார்த்தபடி வகுப்பினை எடுத்தேன். இரு வகுப்புகளில் நான் எடுத்த பாடத்தை முழுமையாக அவதானித்த செல்வராஜா சேர், வகுப்பறைக் கற்பித்தல் முடித்து நான் வெளியில் வந்தபோது யாரிடம் தமிழ் கற்றாய்? என ஒருமையில் அழைத்து வினாவினார். நான் வித்துவான் குமாரசாமியிடம் தமிழ் கற்றதைக் கூறினேன். தோளில் தட்டி நல்லது என்று கூறிவிட்டு சென்றார். பின்னர் நான் அதிபரிடம் விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பினேன். 2003-இல் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின. ஒரு நல்ல மனிதர் எனக்கு மேற்பார்வையாளராக வாய்க்கப்பெற்றமை எனது பாக்கியம் என்றே கருதுகிறேன்.

மட்டக்களப்பு, முனைக்காடு கிராமத்தில் பிறந்த அவர் தன் மண்ணுக்காக உழைத்தார். படித்து ஒரு நிலைக்கு வந்த பின், தான் பிறந்த கிராமத்தையே மறந்துவிடும் இன்றைய சூழலில், தன் மண்ணை நேசித்தவராகவும் மண்ணில் உள்ள மைந்தர்கள் பயனுறும் வகையில் கல்வி நிலையம் ஒன்றை அமைத்து தொண்டாற்றினார். குறிப்பாக 1978-ஆம் ஆண்டு சூறாவளியால் கிழக்கு மாகாணமே முடங்கிப்போன சூழலில் படுவான் கரைப் பிரதேசம் கல்வியில் பின்தங்கிப் போயிருந்தது. தன்னிலையை இழந்து ஸ்திரத் தன்மையற்று அப்பிரதேசம் ஆட்டம் கண்டநிலையில் முப்பது வயது நிரம்பிய துடிப்புள்ள இளைஞனான செல்வராஜா அவர்கள் ஆசிரியராக வலம் வந்து படுவான்கரை கல்வித்துறைக்கு ஒளியூட்டினார். 'ஒளிக் கல்லூரி'யை முனைக்காடு கிராமத்தில் ஸ்தாபித்து வயது வித்தியாசமின்றி கல்வியில் ஆர்வமுள்ள அனைத்து மாணவருக்கும் கற்பித்தார். ஒளிக்கல்லூரிக்கு வர முடியாது போக்குவரத்து பிரச்சினையால் இன்னலுற்ற மாணவர்களுக்குக் கல்வி புகட்ட அவர்களது கிராமங்களுக்கு சைக்கிளில் சென்று கற்பித்தவராகவும் காணப்பட்டார். கிராம மாணவரின் கல்வித் தாகத்தை தீர்க்கும் ஆறா அமுதாக இருந்து அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்தார். கிழக்கு மாகாணத்தில் விபுலானந்தருக்குப் பின்னர் கல்விக்கு உயிரூட்டியவர் இவர் என பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்களின் கருத்து இதனை உறுதிப்படுத்தி நிற்கின்றது.

மட்டக்களப்பிலுள்ள, முனைக்காடு கிராமத்தில் பெரு மதிப்பு வாய்ந்த குடும்பத்தில் 14.10.1948-இல் மானாகப்போடிக்கும் சங்குபதிக்கும் புதல்வராகப் பிறந்த இவர் இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்/தாழங்குடா பாடசாலையில் கற்றார். பின்னர் உயர் கல்வியைக் கல்லடி சிவானந்தா வித்தியாலயத்தில் கற்று, பல்கலைக்கழகத்துக்கு தெரிவானார். மட்டக்களப்பின் தனித்துவம் மிக்க கல்வியலாளராக அறியப்படும் இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் விசேட இளமாணிப் பட்டத்தையும் (B.ED.Hons), கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் முதுமாணிப் பட்டத்தையும் (M.E.d), அதே பல்கலைக்கழகத்திலேயே கல்வித் தத்துவ முதுமாணிப்பட்டத்தையும் பெற்றார். இலங்கைத் தேசிய கல்வியியல் நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா பட்டத்தையும் பெற்ற இவர் குருநாகல் பொல்கஹயாய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் சேவையிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். பின்னர் கொழும்பு டி.எஸ். சேனநாயக்கா கல்லூரியிலும் கற்பித்தவர். மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றிய செல்வராஜா அவர்கள், மட்டக்களப்பு

**கலை இளமாணியில் கல்வியியலை ஒரு பாடமாகவும் உருவாக்கினார். கல்வியியலில் இளமாணி, முதுமாணி போன்ற சிறப்புத் துறைகளையும் தோற்றுவித்து வெளி இடங்களிலுள்ள பேராசிரியர்களைக் கொண்டு அதனை முன்னெடுத்து இரு தடவைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட வாண்மைத்துவ புலமையாளர்களை உருவாக்கினார்.**

சிவானந்தக் கல்லூரியில் அதிபராகவும் கடமையாற்றியவர். பின்னர் கொத்தணி அதிபராகவும் கடமையாற்றியவர். 1982-இல் இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் பதவி உயர்வு பெற்று இரத்மலானை இந்துக்கல்லூரியிலும் அதிபராகக் கடமையாற்றினார். 1983-ஆம் ஆண்டு யூலைக் கலவரத்தில் இவர் குடும்பம் பாதிக்கப்பட்ட நிலையில் சிங்களக் குடும்பம் ஒன்றே இவருக்கும் இவர் குடும்பத்தினருக்கும் ஆதரவு வழங்கிக் காப்பாற்றியது.

கல்வி, நிருவாகம் முகாமைத்துவத்தில் புலமை பெறுவதற்காகப் பிரித்தானியா சென்று லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிப் பட்டத்தையும் (M.E.d. M.GT. and Administration) பெற்றவர். பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள், 'எனக்குத் தெரிந்தவர்களில் கல்வியியல் துறையில் அதிக பட்டங்களைப் பெற்றுக் குவித்தவர் இவர் ஒருவர் தான்' என மா. செல்வராஜா அவர்களைக் குறிப்பிடுவார். பாடசாலைகள் பலவற்றில் ஆசிரியராகவும் அதிபராகவும் கடமையாற்றியதால் பாடசாலைக் கட்டமைப்பு, அவை இயங்கும் பாங்கு, அதில் உள்ள பிரச்சினைகள் என்பவை குறித்தான நிறைவான விளக்கத்தையும் அவர் கொண்டிருந்தார். இதனால் இவை குறித்த நூல்களையும் எழுதினார்.



எதிர்காலத் தேவைகளையும் கருத்திற்கொண்டு கல்விச் செயற்பாடுகளைத் திட்டமிடவும் கல்வியின் ஆக்கக்கூடிய பயனைப் பெறவும் முகாமைத்துவக் கல்வி இன்றியமையாததாகும். தமிழ் மூலக் கல்வியினைப் பரிபாலிப்பவர்களுக்கும், பிறர்க்கும் பயன்படும் வகையிலும் முகாமைத்துவக் கோட்பாடுகளையும் சிந்தனைகளையும் விளக்கும் வகையிலும் பேராசிரியரால் எழுதப்பட்ட நூலே 'அபிவிருத்திக்கான முகாமைத்துவ சிந்தனைகளும் செயற்பாடுகளும்' என்ற நூல். இந்நூல் புகழ்பூத்த முகாமைத்துவ சிந்தனையாளர் சிலரின் ஆய்வுகளையும், கருத்துகளையும். செயற்பாடுகளையும் தமிழ்கூறும் நல்லுலகுக்கு எளிதாகவும், தெளிவாகவும் எடுத்துரைக்கிறது. இந்நூல் குறித்து தில்லைநாதன் அவர்கள் விதந்து கூறுவார். 'கல்வியறிவினை வளர்க்கவும், பரிமாறிக் கொள்ளவும், பயனுடைத்தாகவும் பொருத்தமான வகையில் எமக்குள்ள சகலவகை வளங்களையும் வாய்ப்புகளையும் உபயோகப்படுத்துவதற்கும், உற்பத்தித் திறன், சமூகப் பொறுப்பு, புதியவற்றை ஆக்கும் ஆற்றல் முதலானவற்றை விருத்தி செய்வதற்கும் வேண்டிய வழிமுறைகளை இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் தொட்டுக்காட்டுகின்றன' என்பார் பேராசிரியர் சி. தில்லைநாதன். பிரடெரிக் டபுள்யூ ரெயிலர், ஹென்றி பயோல், எல்ரன் மாயோ, மேரி பொலெற், டக்ளஸ் மக்றேகர், பிரடெரிக் ஹேஸ்பேர்க், ஏபிரகாம் மாஸ்லோ, பீற்றர் றக்கர், தியோடோர் லெவிற் முதலான விஞ்ஞான முகாமைத்துவவாளர்கள் குறித்த செய்திகளைத் தரும் இந்நூல் முகாமைத்துவச் சிந்தனைப் பிரிவுகள், அதன் அணுகுமுறைகள், முகாமைத்துவத் தொழிற்பாடுகள், திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், தீர்மானம் செய்தல் முதலான விடயங்கள் குறித்தும் பேசுகிறது.

கல்வியியலை ஒரு பாடமாக் கற்கும் மாணவர்களுக்கென பேராசிரியரால் எழுதப்பட்ட 'கல்வியியல் அடிப்படை எண்ணக் கருக்கள்' என்ற நூல் மரபு வழிக் கல்விச் சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இந்நூல் 'கல்வியின் வரைவிலக்கணம்', 'கல்வியின் நோக்கம்', 'கல்வியின் தத்துவ அடிப்படை', 'ரூசோவின் கல்வித் தத்துவம்', 'கல்வியில் இயற்கை வாதம்'. 'கல்வியில் பண்பாட்டு வாதம்', 'கல்வியில் இலட்சிய வாதம்', 'கல்வியில் ஜோன் டியூவின் சமூகச் சிந்தனைகள்', 'கல்வியில் உளவியல் அடிப் படை', 'கல்வியில் முன்பிள்ளைப் பருவம்', 'ஜோன் டியூவியும் சுவாமி விபுலாநந்தரும்' என்னும் பகுதிகளை உள்ளடக்கியது.

கிழக்கு மாகாணத்தின் தவிர்க்க முடியாத கல்வி சக்தியாகத் திகழ்ந்த இவர், கல்வி அறிவிலும் சமூக சேவையிலும் மேம்பட்டுத் துலங்கினார். தூர நோக்கும் சமய ஈடுபாடும் கொண்ட இவர் தன் குடும்பத்தின் உயர்ச்சிக்காகவும் தன் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காகவும் ஏணிப்படியாக நின்று உழைத்தவர். குணலெட்சுமி என்பவரைக் கைப்பிடித்து கிரிதரன் (பொறுப்பு வைத்திய அதிகாரி பிரதேச வைத்தியசாலை, பாலமுனை), கௌரி (Lead IT and Biomedical Engineer, London), ரிபுசுதன் (ஆசிரியர்) ஆகிய மூவரின் தந்தையாகவும் விளங்கினார்.

ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்த செல்வராஜா அவர்கள் கல்வியியல் துறையிலே சாதனை படைத்தவர். தேசிய கல்வி நிறுவகத்தில் செயற்றிட்ட அதிகாரியாகப் பின் தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். பின்னர் கல்வியியல் விரிவுரையாளராகத் தம் வாழ்வைத் தொடங்கினார். பின்னர் பேராசிரியராக, தன்னை நிலைப்படுத்திக் கொண்ட செல்வராஜா அவர்கள், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய கற்கைகள் துறைத் தலைவராகவும் கல்வி, பிள்ளைநலத் துறைத் தலைவராகவும் கடமையாற்றினார்.

பேராசிரியர் பிலிபைன்ஸ், தாய்லாந்து, இஸ்ரேல், ஐக்கிய அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்று கல்விசார் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டதுடன் கல்வி, நிருவாகம், முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுகளையும் சமர்ப்பித்தவர். கல்வி முகாமைத்துவம் சாரந்த பல நூல்களையும் கட்டுரைகளையும் ஆய்வறிக்கைகளையும் எழுதி வெளியிட்டதோடு நில்லாது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உயர்ச்சிக்காக அயராது பாடுபட்டவர். சமூகத்தின் கல்வி மேம்பாட்டிலும் கிழக்குப் பல்கலைக்கழக எழுச்சியிலும் பேராசிரியர் கொண்டிருந்த ஈடுபாடும் அக்கறையும் அளவிடற்கரியது. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அளப்பெரிய சேவை செய்த இவர் கலை இளமாணியில் கல்வியியலை ஒரு பாடமாகவும் உருவாக்கினார். கல்வியியலில் இளமாணி, முதுமாணி போன்ற சிறப்புத் துறைகளையும் தோற்றுவித்து வெளி இடங்களிலுள்ள பேராசிரியர்களைக் கொண்டு அதனை முன்னெடுத்து இரு தடவைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட வாண்மைத்துவ புலமையாளர்களை உருவாக்கினார். கொழும்புப் பல்கலைக்கழகத்துக்கு அடுத்ததாக தமிழ் மொழி மூலம் கல்விமாணிக் கற்கைநெறியை கிழக்குப் பல்கலைக்கழகம் முன்னெடுத்து வருவதற்கும் அடித்தளமிட்டுக் கொடுத்தவர்.

வெளிநாட்டு நிதியுதவிகொண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பிள்ளை நலப் பிரிவை ஆரம்பித்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கி அவர்கள் சான்றிதழ் பெறுவதற்கும் மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளைத் தொடர்வதற்கும் ஆவன செய்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் BEd in Pre-School and Primary Education ஆரம்பிக்க வேண்டும் என்ற பேரவா அவர் மனதில் இருந்தது. ஆயினும், அது சாத்தியமற்றுப் போனது மிகுந்த இழப்பாகும்.

மட்டக்களப்பின் தனித்துவ அடையாளமாகவும் கல்வித்துறையின் அணையா விளக்காகவும் அறியப்படும் பேராசிரியர் மா. செல்வராஜா அவர்கள் கிழக்கின் கல்வி மேம்பாட்டுக்காகத் தன்னலங் கருதாது உழைத்தவர். எழுபத்தேழாவது வயதில் அவர் இயற்கை எய்தினாலும் அவர் முன்னெடுத்த சேவைகளும் அவரின் புகழை காலமுள்ள வரைக்கும் நினைவுகொள்ளும். அவருடைய மாணவர்களும் புலமைத்துவவாதிகளும் தம்முடைய உயர்ந்த சிந்தனையாலும் அன்பாலும் அவரை என்றும் நிலைபெறச் செய்வர்.



ramesh.s@thaiveedu.com









# நுகி வா தியாங்கோவுக்கு அஞ்சலி - 2
# காலனியாதிக்க சிந்தனையிலிருந்து விடுபடல்

- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**தொடக்கக் குறிப்புகள்:**

அண்மையில் காலமான ஆபிரிக்காவின் தலைசிறந்த சிந்தனையாளர்களில் ஒருவரான நுகி வா தியாங்கோ வுக்கான அஞ்சலிக் குறிப்பின் இரண்டாவது பகுதி இது. தியாங்கோ நீண்டகாலமாக எழுதி வந்தாலும் அவரது ‘காலனியாதிக்க சிந்தனையிலிருந்து விடுபடல்: ஆபிரிக்க இலக்கியத்தில் மொழியின் அரசியல் (De Colonizing the Mind: The Politics of Language in African Literature) என்ற நூல்தான் அவரை உலகக் கவனம் பெற வைத்தது. தியாங்கோ 1986-இல் வெளியிட்ட இந்நூல் ஆபிரிக்க இலக்கியம் எவ்வாறு காலனியாதிக்கச் சிந்தனையிலிருந்து வெளிவராமல் அதற்குள் ளேயே அகப்பட்டுக் கிடக்கிறது என்பதை விளக்குகிறது. ஆபிரிக்கக் கண்டத்தின் காலனியா திக்க மொழிகளான ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் எழுதப்படுவதுதான் ஆபிரிக்க இலக் கியம் என்றும் ஆபிரிக்க மொழிகளில் எழுதப்படுப வையெல்லாம் ஆபிரிக்க இலக்கியத்தினுள் அடங்காது என்றும் உலகெங்கும் காலனியாதிக்கவா திகளால் பரப்பப்படும் பிரச்சாரங்களைப் பற்றிச் சொல்கிறார். ஆபிரிக்க இலக்கிய வாதிகளே இதற்குப் பலியாகி ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் எழுதித் தொலைப்பதாக விசனப்படுகிறார் தியாங்கோ.

ஆபிரிக்காவின் சிறந்த இலக்கியவாதிகளாக கரு தப்படும் சினுவா அச்சிபே, செங்கோர் ஆகியோர் இந்த மாயையில் உழன்று கிடப்பதாகக் குற்றம் சாட்டுகிறார். பிரெஞ்சு இலக்கியத்திற்கு ஆற்றிய தொண்டுக்காக செங்கோருக்கு வழங்கப்பட்ட விருதானது காலனியாதிக்க மொழியைத் தொடர்ந்து பேணி வந்ததற்குச் செங்கோருக்கு வழங்கப்பட்ட விருது என்று விமர்சிக்கிறார் தியாங்கோ. ‘ஆங்கி லத்தில் எழுதப்படும் இலக்கியம் தேசிய இலக் கியம், சுதேசிய மொழிகளில் எழுதப் படுவது இனக்குழு இலக்கியம்’ என்ற அச்சிபேயின் கூற்றை மறுதலிக்கிறார் தியாங்கோ. தன்னுடைய தொடக்ககால

எழுத்துக்கள் ஆங்கிலத்தில் அமைந்ததென்றும் அப் போது தனக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்படவில்லை யென்றும் தான் தன் தாய்மொழியான கிகுயுவில் எழுதத் தொடங்கியபோதே அரசால் கைதுசெய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டதாகவும் சொல்கிறார். 'ஒருவர் தாய்மொழியில் எழுதும் போது அப்படைப்பு சார்ந்த மக்களை இலகுவாகச் சென்று சேர்கிறது. இவ்வாறு மக்களுக்குக் கருத்துக் களைச் சொல்வதை ஆட்சியாளர்கள் விரும்புவதில்லை என்பதால் தாய்மொழியில் எழுதுபவர்கள் அரசாங்கத்தின் தண்டனைக்காளக வேண்டிவரும், இது தாய்மொழியில் எழு தவேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது' என்கிறார்.

இந்த நூல் காலனித்துவ கால மற்றும் காலனித்துவத் திற்குப் பிந்தைய ஆய்வுகளை ஆழமாக வடிவமைத்த ஒரு முக்கிய படைப்பாகும். தான் ஆங்கிலத்தில் எழுதுவதில் இருந்து விடைபெறும் விதமாக தியாங்கோவால் எழுதப் பட்ட இந்தப் புத்தகம், காலனித்துவத்தின் கலாசார மற்றும் அறிவுசார் மரபுகளை சவாலுக்குள்ளாக்குகிறது. தனது சொந்த கிகுயு மொழியில் இலக்கியத்தை உருவாக்குவ தற்கான தியாங்கோவின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்து கிறது. தனிப்பட்ட கதை, வரலாற்றுப் பகுப்பாய்வு மற்றும் இலக்கிய விமர்சனத்தின் கலவையின் மூலம், மொழி என்பது வெறும் தகவல் தொடர்புக்கான ஒரு கருவி மட்டு மல்ல, கலாசாரம், அடை யாளம் மற்றும் அதிகாரத்தின் கருவி என்று வாதிடுகிறது. காலனித்துவத்திற்குப் பிந்தைய சிந்தனையில் இந்தப் புத்தகம் ஏன் ஒரு அடையாளமாக உள்ளது, அதன் முன்னோடியான பங்களிப்புகள், காலனித் துவத்திற்குப் பிந்தைய ஆய்வுகளுக் கான அதன் முக்கி யத்துவம் மற்றும் உலகளாவிய தெற்கிற்கான அதன் உத்வேகம் ஆகியவற்றை இக்குறிப்பில் பார்க்கலாம்.

**காலனியாதிக்க சிந்தனையிலிருந்து விடுதலை:**

காலனியாதிக்கச் சிந்தனையிலிருந்து விடுபடல் என்பது கலாசார மற்றும் அறிவுசார் விடுதலைக்கான ஒரு தெளிவான அழைப்பாகும். இது காலனித்துவ ஆதிக் கத்தை நிலைநிறுத்துவதில் அல்லது அகற்றுவதில் மொழியின் பங்கை வலியுறுத்துகிறது. காலனித்துவத்தின் மிகவும் நயவஞ்சகமான மரபு, அரசியல் அல்லது பொருளா தாரம் மட்டுமல்ல, மனரீதியானது என்று தியாங்கோ வாதிடு கிறார் - காலனித்துவத்திற்கு ஆட்பட்ட மக்களிடமிருந்து அவர்களின் மொழிகள் பறிக்கப்பட்டன, இதனால் அவர் களின் கலாசாரக் கட்டமைப்புகள், ஆங்கிலம், பிரஞ்சு மற்றும் போர்த்துகீசியம் போன்ற ஐரோப்பிய மொழிக ளுக்கு சலுகை அளித்த கல்வி முறைகள் மூலம் பறிக்கப் பட்டன. இந்த மொழியியல் இடப்பெயர்ச்சி ஆபிரிக் கர்களை அவர்களின் வரலாறுகள், மதிப்புகள் மற்றும் அறியும் வழிகளிலிருந்து அந்நியப்படுத்தியது, காலனித்துவ படிநிலைகளை நிலைநிறுத்திய ஐரோப்பிய மையக் கண் ணோட்டங்களால் அவர்களை மாற்றியது.

தியாங்கோ புத்தகத்தில் இவ்வாறு சொல்கிறார்:
'நமது இலக்கியத்தில், பண்பாட்டில், அரசியலில் ஆங்கி லத்தின் அசைக்க முடியாத நிலை' என்பதை விதி என்னும் கருத்தாக்கம் மூலம் ஏற்றுக்கொள்ளும் மனப்போக்கை நாம் எப்படி அடைந்தோம் என்பதை ஆழமாக நோக்கியாக வேண்டும். துப்பாக்கிக் குண்டு மற்றும் வாளின் துணை கொண்டு 1884-ஆம் ஆண்டு பெர்லின் கூட்டுச்சதி இதை சாதித்தது. ஆனால் வாளும் துப்பாக்கிக் குண்டுகளும் கொண்ட இரவை, கரும்பலகையும் வெண் கட்டித் துண்டும் கொண்ட பகல் தொடர்ந்து வந்தது. போர்க்களத்தில் நடைபெற்ற உடல் ரீதியான வன் முறையை உளவியல் ரீதியான வகுப்பறை வன்முறை தொடர்ந்தது. ஆனால் முன்னது பார்வைக்கு மிருகத்தன மானது, பின்னது பார்வைக்கு மிகவும் மென்மையானது மரி யாதைக்குரியது. இதனால் எம்மால் அதனை இயல்பாக ஏற்க முடிந்தது. இன்னும் சரியாகச் சொல்வதானால் காலனியாதிக்கத்தால் இலகுவாக எம்மை வெற்றிகொள்ள முடிந்தது. கறுப்புக் கண்டத்தின் மீது, தங்களின் உண் மையான அதிகாரம் நிலை கொண்டிருப்பது, முதல் காலையின் பீரங்கிகளில் அல்ல, ஆனால் பீரங்கிகளைத் தொடர்ந்து என்ன வருகிறதோ அதில்தான் அது அடங்கி உள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளத் தொடங்கி னார்கள். ஆகையினால்தான் பீரங்கிகளுக்குப் பின்னால் புதிய பள்ளிக்கூடம் வந்தது. அந்தப் புதிய பள்ளி, பீரங்கி மற்றும் காந்தம் ஆகிய இரண்டின் இயல்பையும் கொண்டி ருந்தது. பீரங்கியிலிருந்து போரிடும் கருவியின் திறமையை அது எடுத்துக் கொண்டது. ஆனால் பீரங்கியைவிட பள் ளிக்கூடம், ஆக்கிரமிப்பை நிலையானதாக்குகின்றது. பீரங்கி உடலைக் காயப்படுத்துகின்றது. பள்ளிக்கூடமோ ஆன்மாவை அடிமை கொள்கிறது.'

இந்தப் புத்தகத்தின் முக்கியத்துவம், இந்தப் பண்பாட்டு ஏகாதிபத்தியம் மற்றும் அதன் நடைமுறை ரீதியான பதில் மீதான அதன் கடுமையான விமர்சனத்திலும், தன் தாய் மொழியான கிகுயுவில் எழுத தியாங்கோ எடுத்த முடிவிலும் மையப்படுத்தப்பட்டு உள்ளது. அவ்வாறு செய் வதன் மூலம், காலனித்துவ நீக்கம் என்பது ஒரு தத்து வார்த்த பயிற்சி மட்டுமல்ல, ஓர் உயிரோட்டமான நடை முறை என்பதையும் அவர் நிரூபிக்கிறார். இந்தப் புத்தகம், மொழியை அடையாளம், சக்தி மற்றும் எதிர்ப்புடன் இணைப்பதால், கல்வி, இலக்கியம் மற்றும் கலாசார உற் பத்தியில் காலனித்துவ மரபுகள் எவ்வாறு நீடிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்வதற்கான ஒரு கட்டமைப்பை வழங்குவதால், இது மூன்றாமுலக நாடுகளின் சிந்த னையை, மனக்குறையை எதிரொலிக்கிறது. மிகுந்த அரசி யல் தெளிவுடனும் ஆர்வத்துடனும் எழுதப்பட்ட அதன் அணுகுமுறையானது, காலனித்துவ மரபுகளை அகற்ற விரும்பும் ஆர்வலர்கள், அறிஞர்கள் மற்றும் கல்வியாளர்க ளுக்கு ஒரு சக்தி வாய்ந்த கருவியாக அமைகிறது.

இந்தப் புத்தகம், ஆபிரிக்க இலக்கியத்தின் நோக்கம் மற்றும் போக்குக் குறித்த துணிச்சலான மறுவரையறைக்கு முன்னோடியாக உள்ளது. தியாங்கோ உட்பட பல ஆபிரிக்க எழுத்தாளர்கள், தனது முந்தைய படைப்பு களில், உலகளாவிய பார்வையாளர்களை அடையவும் இல க்கிய ஸ்தாபனத்துடன் ஈடுபடவும் காலனித்துவ மொழி களில் எழுதினார்கள். ஐரோப்பிய மொழிகளில் எழுதுவது பழங்குடி மொழிகளையும் அவற்றின் பேச்சாளர்களையும் ஓரங்கட்டுவதன் மூலம் காலனித்துவ அதிகார கட்டமைப்

புகளை வலுப்படுத்துகிறது என்று வாதிடுவதன் மூலம், தியாங்கோ இந்த நடைமுறையை இந்தப் புத்தகத்தின் வழி சவாலுக்குட்படுத்தியிருக்கிறார். கிகுயு மொழியில் எழுதுவது என்ற முடிவுக்கு அவர் மாறியது புரட்சிகரமானது, ஏனெனில் அது ஆபிரிக்க பார்வையாளர்களுக்கு முன்னுரிமை அளித்தது மற்றும் இலக்கிய வெளிப்பாட்டிற்கான முறையான வாகனங்களாகப் பூர்வீக மொழிகளை உறுதிப்படுத்தியது.

இந்தப் புத்தகத்தின் முன்னோடித் தன்மை அதன் பலதுறை அணுகுமுறையிலும் உள்ளது. காலனித்துவ கல்வி முறைகள் 'சிந்தனையைக் காலனித்துவப்படுத்த' மொழியை எவ்வாறு பயன்படுத்தின என்பதைப் பகுப்பாய்வு செய்ய, தியாங்கோ இலக்கிய விமர்சனம், சுயசரிதை மற்றும் அரசியல் கோட்பாட்டை ஒன்றாக இணைக்கிறார். ஆங்கிலம் உயர்த்தப்பட்ட, ஆபிரிக்க மொழிகள் இழிவுபடுத்தப்பட்ட காலனித்துவ பள்ளிகளில் தனது சொந்த அனுபவத்தை அவர் விபரிக்கிறார், இது கலாசார அந்நியப்படுத்தலின் உளவியல் வன்முறையை விளக்குகிறது. மொழியைப் போராட்டத்தின் தளமாக வடிவமைப்பதன் மூலம், அறிவு உற்பத்தி எவ்வாறு காலனித்துவத்தை நிலைநிறுத்தலாம் அல்லது எதிர்க்கலாம் என்பதை ஆராயும் பிற்கால காலனித்துவ சிந்தனையாளர்களுக்கு தியாங்கோவின் சிந்தனைகள் அடித்தளம் அமைத்தது.

> “ சிந்தனையை காலனித்துவத்திலிருந்து நீக்குதல் என்பது கலாசார இறையாண்மைக்கான ஒரு செயற்பாட்டின் முதற்படியாகும். இலக்கியம் மற்றும் கல்வியில் ஆபிரிக்க மொழிகளுக்கான தியாங்கோவின் வாதங்கள், ஆங்கிலம் மற்றும் பிற காலனித்துவ மொழிகள் மீதான உலகளாவிய இலக்கிய சந்தையின் சார்பை சவால் செய்தன ”

மேலும், சிந்தனையை காலனித்துவத்திலிருந்து நீக்குதல் என்பது கலாசார இறையாண்மைக்கான ஒரு செயற்பாட்டின் முதற்படியாகும். இலக்கியம் மற்றும் கல்வியில் ஆபிரிக்க மொழிகளுக்கான தியாங்கோவின் வாதங்கள், ஆங்கிலம் மற்றும் பிற காலனித்துவ மொழிகள் மீதான உலகளாவிய இலக்கிய சந்தையின் சார்பை சவால் செய்தன. அவரது இந்தப் புத்தகமும் அது தூண்டிய சிந்தனையும் புதிய தலைமுறை ஆபிரிக்க எழுத்தாளர்களைப் பழங்குடி மொழிகளில் பரிசோதனை செய்யத் தூண்டியது, இது ஆபிரிக்க மொழி இலக்கியத்தின் மறுமலர்ச்சியை வளர்த்தது. இந்த மொழியியல் மறுசீரமைப்பு, ஆபிரிக்க கலாசாரங்கள் புறம்பானவை அல்ல, மாறாக உலகளாவிய இலக்கியக் கதையாடலின் மையமானவை என்பதை வலியுறுத்தும் ஒரு தீவிரமான காலனித்துவ நீக்கச் செயலாகும்.

### காலனித்துவ நீக்க ஆய்வுகளுக்கான முக்கியத்துவம்:

காலனித்துவ நீக்க ஆய்வுத் துறையில், மனதைக் காலனித்துவ நீக்கம் செய்வது என்பது காலனித்துவ அறிவியலை அகற்றுவதற்கான ஒரு நடைமுறையை வெளிப்படுத்துவதால் அடித்தளமானது. வால்டர் மிக்னோலோ (Walter Mignolo), அனிபால் குய்ஜானோ (Aníbal Quijano) போன்ற அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட காலனித்துவ நீக்க ஆய்வுகள், அறிவு உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்தும் ஐரோப்பிய மையக் கட்டமைப்புகளைக் கட்டமைப்பதில் கவனம் செலுத்துகின்றன. காலனித்துவ மொழிகள் 'கலாசார அடிபணிதல்' என்று அவர் அழைப்பதை எவ்வாறு நிலைநிறுத்துகின்றன என்பதை அம்பலப்படுத்துவதன் மூலம் தியாங்கோவின் புத்தகம் இந்த நோக்கத்துடன் ஒத்துப்போகிறது. ஆபிரிக்க மொழிகளில் இலக்கியம் அறிவியலின் முகமையை மீட்டெடுக்க முடியும், இது ஆபிரிக்க மக்கள் தங்கள் சொந்த வரலாறுகளையும் எதிர்காலத்தையும் விபரிக்க அனுமதிக்கிறது என்று அவர் வாதிடுகிறார்.

கலாசாரத்தின் காவியாக மொழியின் முக்கியத்துவம், அறிவியலின் கீழ்ப்படியாமை மற்றும் கீழ்நிலை அறிவு அமைப்புகளை மீட்டெடுப்பது போன்ற முக்கிய காலனித்துவ நீக்கக் கருத்துக்களை முன்னறிவிக்கிறது. மனம் காலனித்துவத்திற்கான ஒரு கருவியாக காலனித்துவ கல்வியைப் பற்றிய தியாங்கோவின் விமர்சனம், மேற்கத்திய நிறுவனங்கள் மேற்கத்தேயரல்லாத அறிவு முறைகளை எவ்வாறு ஓரங்கட்டுகின்றன என்பதை ஆராயும் காலனித்துவ நீக்க அறிஞர்களுடன் எதிரொலிக்கிறது. ஆபிரிக்க அறிவுஜீவிகள் தங்கள் சமூகங்களுடன் தங்கள் சொந்த மொழிகளில் ஈடுபட வேண்டும் என்ற அவரது அழைப்பு, ஆங்கிலம் பெரும்பாலும் இயல்புநிலை ஊடகமாக இருக்கும் பிந்தைய காலனித்துவ கல்வித்துறையின் மேட்டுக்குடித்தனத்தையும் சவாலுக்குட்படுத்துகிறது.

இது குறித்து புத்தகத்தில் இவ்வாறு தியாங்கோ எழுதுகிறார்:
'நாங்கள், அவைகளின் பொருளுக்காகவும் சொல்லழகுக்காகவும் சொற்களை மதிப்பதற்குக் கற்றுக் கொண்டோம். மொழியென்பதும் வெறும் சொற்களின் கோவையல்ல. அது உடனடியான மற்றும் அகரவரிசையிலான பொருளைத் தருவதற்கும் மேலாகக் குறிப்புணர்த்தும் ஆற்றலும் கொண்டது. மொழியின் குறிப்புணர்த்தும் மந்திர ஆற்றலை நாம் மதித்துப் பாராட்டுவது என்பது, புதிர்கள், பழமொழிகள், சொல்லசைகளை மாற்றியமைத்தலின் ஊடாக விளையும் சொற்களோடு நாம் விளையாடும் விளையாட்டுக்களால் மறுகட்டமைக்கப்படுவது அல்லது நடைமுறைப்படுத்துவது தான். எமது கல்வியின் மொழி என்பது எம் பண்பாட்டின் மொழியாக இல்லை.

1952-இல் கென்யாவின் மீது நெருக்கடி நிலைமை அறிவிக்கப்பட்ட பிறகு, எல்லாப் பள்ளிக்கூடங்களும் காலனிய ஆட்சியால் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆங்கில மொழி மற்றெல்லா மொழிகட்கும் மேலானதாக மாறிற்று. அது ஒன்றுதான் மொழி, மற்றவையெல்லாம் சாரமற்றதாக அதன் முன் பணிந்து நிற்க வேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டது. தாய்மொழி பேசுபவர்கள் குற்றவாளிகளாக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள். ஆசிரியர்கள் இக்குற்றவாளிகளை எப்படிப் பிடிப்பார்கள் ? பிடிபடப்போகும் தன் தாய்மொழியைப் பேசும் ஒருவனிடம் சேர்ப்பிப்பதற்காக, முதலில் ஒரு பொத்தான் ஒருவனிடம் கொடுக்கப்படும். நாளின் இறுதியில் யார் பொத்தானை வைத்திருக்கிறானோ அவனே குற்றவாளி. இப்ப

டியாக, சிறுவர்கள் சூனியக்காரர்களை வேட்டையாடுபவர்களாக மாற்றப்பட்டனர். இப்போக்கினால் தன் சொந்தச் சமூகத்திற்கே துரோகியாக இருப்பதன் மதிப்புக் கற்பிக்கப்பட்டது.

ஆங்கிலம் குறித்த நடவடிக்கைகள் அதற்கு நேர்மாறாக இருந்தன. ஆங்கிலத்தில் பேசுவதிலோ எழுதுவதிலோ படைக்கப்படும் சாதனைகள், உயர்ந்த முறையில் பாராட்டப்பட்டுப் பரிசளிக்கப்படும் பரிசுகள், கௌரவம், பாராட்டுக்கள், உயர்ந்த அரசுப் பணியிடங்களுக்கான பரிந்துரை மடல்கள், ஆங்கிலம், அறிவுக்கூர்மையையும் கலைகள் அறிவியல் துறைகள் மற்றும் பிற எல்லா கல்வித்துறைகளிலும் உள்ள திறமையை அளக்கும் அளவுகோலாகக் கருதப்பட்டது. முறைசார்ந்த கல்வி ஏணியில் மேலே மேலே போவதற்கு ஒரு குழந்தையின் முன்னேற்றத்தில் ஆங்கிலமே முழுமையான ஒரே தகுதியாகிப்போனது. ஆங்கிலம் என்பது காலனியை உயர்மட்ட வாழ்க்கை முறைக்கு ஆட்சி முறையிலான வாகனம், மாயச்சூத்திரம். மேலாண் மையை ந டைமுறைப்ப டுத்துவ தோடு கூடவே, மேலாண்மை மொழியே இலக்கையும் கல்வியையும் இப்போது தீர்மானிக்கின்றது. கென்ய மொழியில் சொற்பொழிவாற்றுவது நிறுத்தப்பட்டது.'

மனதைக் காலனித்துவ நீக்கம் செய்வது, காலனித்துவ நீக்க சிந்தனையின் ஓர் அடையாளமான கோட்பாடு மற்றும் நடைமுறையை இணைக்கிறது. தியாங்கோ வெறும் விமர்சனம் மட்டும் செய்யவில்லை. அவர் கிகுயுவில் இலக்கியங்களை உருவாக்குவதன் மூலமும், தம் சமூகத்திற்கான கல்வி மற்றும் கலாசாரத் திட்டம் போன்ற சமூக அடிப்படையிலான கலாசாரத் திட்டங்களுக்காக வாதிடுவதன் மூலமும் தனது கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுகிறார். கலாசார மற்றும் அறிவுசார் விடுதலைக்கான உறுதியான உத்திகளைத் தேடும் காலனித்துவ நீக்க அறிஞர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கு இந்தப் புத்தகம் ஒரு உரைகல்லாக அமைகிறது.

### உலகளாவிய தெற்கிற்கான உத்வேகம்:

மனதைக் காலனித்துவ நீக்கம் செய்வது உலகளாவிய தெற்கில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது பூர்வீக மொழிகள், கலாசாரங்கள் மற்றும் அறிவியலை மீட்டெடுக்க இயக்கங்களை ஊக்குவிக்கிறது. ஆபிரிக்கா, ஆசியா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் அதற்கு அப்பால், கலாசார ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்கான ஒரு வரைபடமாக இந்தப் புத்தகம் செயற்படுகிறது. உதாரணமாக, இந்தியாவில், எழுத்தாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் தியாங்கோவின் கருத்துக்களைப் பயன்படுத்தி, பிந்தைய காலனித்துவ இலக்கிய இடங்களில் ஆங்கிலத்தின் ஆதிக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளனர். இதேபோல், இலத்தீன் அமெரிக்காவில், பூர்வீக இயக்கங்கள் கல்வி மற்றும் இலக்கியத்தில் Quechua, Aymara போன்ற மொழிகளை ஊக்குவிப்பதற்கு தியாங்கோவின் பணிகளை மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

புத்தகத்தின் உலகளாவிய ஈர்ப்பு அதன் அடிப்படையான செய்தியில் உள்ளது: காலனித்துவத்திற்கு ஆட்பட்ட மக்கள் தங்கள் சொந்த மொழிகளையும் கதைகளையும் மையப்படுத்துவதன் மூலம் தங்கள் கலாசார நிறுவனத்தை மீட்டெடுக்க முடியும். காலனித்துவ மரபுகள் கல்வி, ஊடகம் மற்றும் கலாசார உற்பத்தியைத் தொடர்ந்து வடிவமைக்கும் உலகளாவிய தெற்கில் இது ஆழமாக எதிரொலிக்கிறது. ஆங்கிலத்தில் எழுதுவதிலிருந்து கிகுயுவைத் தழுவுவது வரையிலான தியாங்கோவின் தனிப்பட்ட பயணம், உலகளாவிய அங்கீகாரத்திற்கும் உள்ளூர் நம்பகத்தன்மைக்கும் இடையிலான பதற்றத்தை வழிநடத்தும் எழுத்தாளர்கள் மற்றும் அறிவுஜீவிகளுக்கு ஒரு தொடர்புடைய மாதிரியை வழங்குகிறது.

"காலனித்துவத்திற்கு ஆட்பட்ட மக்கள் தங்கள் சொந்த மொழிகளையும் கதைகளையும் மையப்படுத்துவதன் மூலம் தங்கள் கலாசார நிறுவனத்தை மீட்டெடுக்க முடியும். காலனித்துவ மரபுகள் கல்வி, ஊடகம் மற்றும் கலாசார உற்பத்தியைத் தொடர்ந்து வடிவமைக்கும் உலகளாவிய தெற்கில் இது ஆழமாக எதிரொலிக்கிறது."

இவ்விடத்தில் தியாங்கோவின் அறிவுரை மனங்கொள்ளத்தக்கது: 'காலனிய அந்நியமாதல் ஒன்றோடொன்று தொடர்புடைய இரண்டு வடிவங்களை எடுக்கின்றது. முதலாவது தன்னைச் சுற்றியுள்ள யதார்த்தத்திலிருந்து விலகி நின்று கொள்வது. மற்றது தமது சூழலுக்கு மிகவும் தூரமான ஒன்றுடன் தன்னை அடையாளம் காண்பது, அது பொதுக் கருத்தியலை உருவாக்கும் மொழியிலிருந்தும், சிந்தனையிலிருந்தும், முறைசார்ந்த கல்வியிலிருந்தும், அறிவு வளர்ச்சியிலிருந்தும், வீட்டிலும் வெளியிலும் அன்றாடம் வழங்கும் மொழியிலிருந்தும் வேண்டுமென்றே தொடர்பை முறித்துக் கொள்வதில் தொடங்குகிறது. உடலிலிருந்து மன தைப் பிரிப்பதைப் போன்றது, அவையிரண்டும் ஒரே மனிதனுக்குள் ஒன்றோடொன்று தொடர்பற்ற இருவேறு தளங்களில் இருப்பதைப் போன்றது. இதுவே சமுதாய அளவில் தலையில்லாத உடல்களையும் உடலில்லாத தலைகளையும் உற்பத்தி செய்வதைப் போன்றது.

எனவே நான் மொழியின் அனைத்துக் கூறுகளுக்கும் பிரிவுகளுக்கும் இடையேயான ஒத்திசைவை மீட்டெடுப்பதன் மூலம் கென்யக் குழந்தையை அதன் சூழலுக்கு அழைத்துச் செல்வதன் மூலம் அதனை முழுமையாகப் புரிந்துகொண்டு பொது நன்மைக்கேற்ற மாற்றம் செய்யும் திறன் படைத்ததாகச் செய்ய விரும்புகிறேன். கென்ய மக்களின் தாய்மொழிகள் (நமது தேசிய மொழிகள்) குழந்தையின் வாய்மொழியின் சந்தத்தை மட்டுமல்லாது, இயற்கையுடனான அதன் போராட்டங்களையும் அக்குழந்தையின் சமூகத் தன்மையையும் பிரதிபலிக்கின்ற இலக்கியங்களைப் பெற்றிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இவ்வாறு தனது மொழி, சுற்றுச்சூழல் ஆகியவற்றுடன் தன்னை இணைத்துக்கொள்ளும் ஒத்திசைவை தொடக்கப் புள்ளியாகக் கொண்டபின் அவன் மற்ற மொழிகளைக் கற்கலாம். அம்மொழிகளின் இலக்கியத்திலுள்ள சிறந்த மனித நேயமிக்க ஜனநாயக மற்றும் புரட்சி

கரக் கூறுகளைத் தனது சொந்த மொழியைப் பற்றியோ, தன்னைப் பற்றியோ தன் சூழல் பற்றியோ எந்தத் தாழ்வு மனப்பான்மையும் இன்றி அனுபவிக்கலாம்.

நமது மொழியில் எழுதுவதால் மட்டுமே - அது மிக அவசியமான முதல்கட்ட நடவடிக்கையாக இருந்த போதிலும் ஆபிரிக்க இலக்கியத்தில் அந்நிய ஆதிக்கத்திலிருந்து தமது உற்பத்தி சக்திகளை விடுவிக்க மக்கள் நடத்தும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களை உள்ளடக்கமாகக் கொள்ளாத வரை மறுமலர்ச்சி ஏற்பட்டுவிடாது. தாம் உற்பத்தி செய்யும் செல்வத்தின் மீதான கட்டுப்பாட்டைத் தாமே பெறுவதற்கும், உள்நாட்டு வெளிநாட்டு ஒட்டுண்ணிகளிடமிருந்து அவற்றை விடுவிப்பதற்குமான அனைத்துத் தேசிய இனங்களின் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் போராட்டத்திற்குத் தேவையான ஒற்றுமையின் தேவையை உள்ளடக்கமாகப் பெற்றிருக்க வேண்டும்.




சுதேசிய மொழிகளை விவசாயிகள் மற்றும் தொழிலாளிகளின் போராட்டங்களுக்குத் திறக்க முயலும் பொழுதுதான் எழுத்தாளர்கள் தமது மிகப் பெரிய சவாலை சந்திக்கப் போகின்றனர். ஏனெனில், தரகு முதலாளித்துவ ஆளும் கும்பலுக்கு உண்மையான எதிரி, விழிப்புணர்வு பெற்ற விவசாயத் தொழிலாளி வர்க்கம்தான். மக்களின் மொழிகளில் புரட்சிகர ஒற்றுமையையும் நம்பிக்கையையும் பரப்ப முயலும் எழுத்தாளன் கலகக்காரனாகக் கருதப்படுவான். அவன் சுதேசிய மொழிகளில் எழுதுவது ஒரு கலகமாக அல்லது தேசத்துரோகமாகக் கருதப்பட்டு, அந்த எழுத்தாளன் சிறையிடப்படலாம், நாடு கடத்தப்படலாம் அல்லது மரணத்தைச் சந்திக்க நேரலாம். அவனுக்குத் தேசிய விருதுகளோ, புதுவருட மரியாதைகளோ கிடைக்கப்போவதில்லை மாறாக அமெரிக்கத் தலைமையிலான ஏகாதிபத்தியத்திற்காக ஆட்சி நடத்துகின்ற, ஜனநாயகத்தை ஓர் அச்சுறுத்தலாகப் பார்க்கின்ற ஆயுதம் தாங்கிய சிறுபான்மை ஆளும் கும்பலின் வாய்களிலிருந்து ஏச்சுக்களும் பேச்சுக்களும் எண்ணற்ற வசவுகளுமே பரிசாகக் கிடைக்கும். தங்களது வாழ்வை வடிவமைத்துக் கொள்வதற்கான மக்களின் ஜனநாயகப் போராட்டத்தில் பங்கெடுக்கும் தங்களுக்கும், தங்களுக்குப் புரிகின்ற மொழியில் தங்களது வாழ்வைப் பற்றி விவாதித்தலும் ஒரு நாட்டின் முறையான அரசுக்கும் அதன் நிறுவனங்களுக்கும் ஆபத்தானதாகக் கருதப்படுகின்றது. மக்களின் வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்ற ஆபிரிக்க மொழிகள் நவகாலனிய அரசுக்கு எதிரிகளாகிவிடுகின்றன.

மனதைக் காலனித்துவ நீக்கம் செய்வது அடிமட்ட கலாசார இயக்கங்களை ஊக்குவிக்கிறது. சமூக ஈடுபாடு மற்றும் வாய்மொழி மரபுகள் மீதான அதன் முக்கியத்துவம் கலைஞர்கள் மற்றும் கல்வியாளர்களை அவர்களுடைய மக்கள் வாழ்ந்த அனுபவங்களைப் பிரதிபலிக்கும் படைப்புகளை உருவாக்க ஊக்குவிக்கிறது. உதாரணமாக, தென்னாபிரிக்காவில், இவரின் கருத்துக்கள் பள்ளிகளில் இசிசுலு மற்றும் இசிசோசா இலக்கியங்களை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இது கற்பவர்களிடையே ஆபிரிக்க அடையாளங்களில் பெருமையை வளர்க்கிறது. உலகளாவிய தெற்கு முழுவதும், மனதை காலனித்துவ நீக்கம் செய்வதற்கான இந்தப் புத்தகத்தின் அழைப்பு, கலாசார ஒருமைப்பாட்டை எதிர்ப்பதற்கும், பல்வேறு அறிவியலின் மதிப்பை வலியுறுத்துவதற்கும் முயற்சிகளை ஊக்குவித்தது.

## நிறைவுக் குறிப்புகள்:

தியாங்கோவின் மனதைக் காலனித்துவ நீக்கம் செய்வது என்பது இலக்கியம், கலாசாரம் மற்றும் விடுதலையில் மொழியின் பங்கை மறுவரையறை செய்யும் ஓர் உருமாற்றும் படைப்பாகும். அதன் முக்கியத்துவம் கலாசார ஏகாதிபத்தியத்தின் மீதான கூர்மையான விமர்சனத்திலிருந்தும், ஆபிரிக்க மொழிகளை எதிர்ப்பின் கருவிகளாக ஆதரிப்பதிலிருந்தும் உருவாகிறது. ஒரு முன்னோடி உரையாக, இது உலகளாவிய இலக்கியத்தின் ஐரோப்பிய மைய சார்புகளை சவாலுக்குட்படுத்திக் காலனித்துவ நீக்க ஆய்வுகளுக்கான அறிவுசார் அடித்தளத்தை அமைக்கிறது. உலகளாவிய தெற்கைப் பொறுத்தவரை, இது எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் சமூகங்கள் தங்கள் மொழிகளையும் கதைகளையும் மீட்டெடுக்க வலியுறுத்தும் ஒரு சக்திவாய்ந்த உத்வேக ஆதாரமாக உள்ளது. வெளியிடப்பட்டுக் கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களுக்குப் பிறகும், மனதைக் காலனித்துவ நீக்கம் செய்வது தொடர்ந்து எதிரொலிக்கிறது. உண்மையான காலனித்துவ நீக்கம் நமது மனதின் விடுதலையுடனும், நம் கதைகளைச் சொல்ல நாம் பயன்படுத்தும் குரல்களுடனும் தொடங்குகிறது என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

(தொடரும்)



meenilankco@thaiveedu.com

# ‘பொற்கலை’

## யாழ் . பல்கலைக்கழகத்தின்

# 50

## ஆண்டு நிறைவு வெளியீடு




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு, ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெற்றதனைக் கொண்டாடும் வகையில், வெளிவந்த ஆவணப் பதிவாக ‘பொற்கை’ வெளிவந்துள்ளது. பொன் விழாவிலுள்ள ‘பொன்’ என்னும் சொல்லையும் கலைப்பீடத்தில் உள்ள ‘கலை’ என்னும் சொல்லையும் இணைத்து, ‘பொற்கலை’ எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதனை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடப் பழைய மாணவர் சங்கம் வெளியிட்டுள்ளது.

**– வே. விவேகானந்தன்.**

கடந்த ஜூன் மாதம் நான் யாழ்ப்பாணத்தில் நின்றபோது, சில கல்விசார் சமூகத்தினரோடு தொடர்பு கொண்டு இதனைப் பெறுவதற்குப் பெருமுயற்சி செய்தபோதிலும், அது பயனளிக்கவில்லை. ஜூன் மாதம் 22-ஆம் திகதி, கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில், ‘எங்கட புத்தகங்கள்’ அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த மூத்தோர் ஒன்று கூடல்-2025 நிகழ்வில், எதிர்பாரா விதமாகக் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. அங்கு இடம்பெற்ற புத்தகக் கண்காட்சியில் இரண்டு பிரதிகளைக் கண்டு மனமகிழ்ந்து ஒன்றை வாங்கிக் கொண்டேன். ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டதாகவும் ஒரு பிரதியின் விலை 2500 ரூபாய் எனவும் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

Viii பக்கத்தில் யாழ் . பல்கலைக் கழகத்தின் தலைவர்களாகவும், உப வேந்தர்களாகவும் பணியாற்றியவர்களின் விபரங்கள் கால வரிசையில் இடம் பெற்றுள்ளன. அதனைத் தொடர்ந்து 2025-ஆம் ஆண்டுக்கான கலைப்பீட மாணவர் சங்க நிவாகக் குழு, பொன்விழாக்குழு, பொன்விழா மலர்க்குழு, பொன்விழா நிதிக்குழு, பொன்விழா கௌரவிப்புக்குழு, பொன்விழாக் கலைக் குழு, பொன்விழா விளையாட்டுக்குழு என்பவற்றின் உறுப்பினர்களது வர்ணத்திலான புகைப்படங்கள் காணப்படுகின்றன.

அருளாகும் ஆசி, வழிகாட்டும் வாழ்த்து, பல்கலையின் பாதை, பனுவலின் பல்சுவை, கவினுறு கவிதை, அஞ்சலிக்கும் அமரத்துவம், புனைவு சொல்லும் படங்கள் என ஏழு பகுதிகளாக பொற்கை வகுக்கப்பட்டுள்ளது.

‘அருளாகும் ஆசி’ என்னும் முதலாவது பகுதியில் சைவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த மதத் தலைவர்களின் ஆசியுரை அமைந்துள்ளது.

‘வழிகாட்டும் வாழ்த்து’ என்னும் இரண்டாவது பகுதியில் வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன், யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா, மற்றும் முன்னாள் துணைவேந்தர்கள் பொன். பாலசுந்தரம்பிள்ளை, எஸ். மோகனதாஸ், இ . குமாரவடிவேல், என். சண்முகலிங்கன், திருமதி வசந்தி அரசரத்தினம், பீடாதிபதிகள் சி. ரகுராம், சிவரூபன், என். கெங்காதரன், வைத்தியக் கலாநிதி விவியன் சத்தியசீலன், பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன், கலைப்பீட பழைய மாணவர் சங்கத் தலைவர் இமானுவல் ஆனல்ட், செயலாளர் அ. பௌனந்தி, இதழாசிரியர் ச. மார்க்கண்டு ஆகியோரது வாழ்த்துச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

‘பல்கலையின் பாதை’ என்னும் மூன்றாவது பகுதியில் இருபத்தொன்பது கட்டுரைகள் காணப்படுகின்றன. இவை பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், முன்னாள் விரிவுரையாளர்கள் போன்றவர்களால் எழுதப்பட்ட பல்வேறு தகவல்களைக் கொண்ட கனமான கட்டுரைகளாக உள்ளன. யாழ்ப்பாணத்திலே இருநூறு வருடங்களுக்கு முற்பட்ட கல்விநிலை முதல் தற்போதைய கல்விநிலை வரை ஏற்பட்ட முன்னேற்றங்களை அல்லது வளர்ச்சியை ‘பல்கலைக்கழகத்தை நோக்கி நீண்ட பயணம்’ என்னும் தலைப்பில் கலாநிதி கா. இந்திரபாலா விரிவான கட்டுரையினை எழுதியுள்ளார்.

சுருங்கக் கூறின் 'யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழ கத்தினை நோக்கி 150 வருடங்களுக்கு முன்பு தொடங்கிய பயணம் 1974 நடுப்பகுதியில் முடிவுறும் கட்டத்தை அண்டியது'. எனக் குறிப்பிட்டுள்ளார்.

'பொன்விழாக் காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடம்' என்னும் தலைப்பில் முன்னாள் துணைவேந்தர் P. பால சுந்தரம்பிள்ளை யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட் டபோது, மானுடவியல் என அழைக்கப்பட்ட தமிழ், சிங்களம், வரலாறு, சமஸ்கிருதம் போன்ற சில துறைகளே காணப்பட்டன. இன்று 17 துறைகளைக் கொண்ட கலைப் பீடமாக வளர்ச்சிய டைந்துள்ளது என கலைப் பீடத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி விபரமாகத் தனது கட்டுரையில் பதிவு செய்துள்ளார்.

இலண்டனில் வாழ்ந்துவரும் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளர் மு. நித்தியானந்தன் 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்: ஒரு மகோன்னதம்' என்னும் தலைப்பில் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம், அதன் தோற்றம், வளர்ச்சி பற்றி விபரமாகப் பதிவு செய்துள்ளார். மேலும் ஐம்பதுகளில் எழுந்த தமிழ்ப் பல்கலைக்கழக கோரிக்கைக்கு மக்கள் மத்தியில் பரந்த ஆதரவு இருந்தது: அது ஒரு இயக்கமாக மலர்ந்திருந்தது. எழுபதுகளில் உருவான யாழ்ப்பாணப் பல்க லைக்கழகம் என்ற கருத்துருவாக்கம் அரச மட்டத்தில் மேலிருந்து கொண்டுவரப்பட்டது எனக் குறிப்பிட்டு, இறுதியாக யாழ். பல்கலைக்கழகத்தில் தனது அனுபவத்தினையும் நினைவு கூர்ந்து கட்டுரையினை நிறைவு செய்துள்ளார்.

கனடாவிலிருந்து றொறன்ரோ (Toronto) பல்கலைக்கழக பேரா சிரியர் A.J.V Chandrakanthan 'University of Jaffna 1974-1994 The Four Pillars of the First Twenty Years' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு முதல் இரு தசாப்தங்களில் அதன் வளர்ச் சிக்காக அரும்பணி புரிந்த பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி, சுப்பிரமணியம் வித்தியானந்தன், பேராசிரியர் அழகையா துரைராஜா, பேராசிரியர் கந்தையா குணரட்ணம் ஆகியோரது அயரா முயற்சிகள் குறித்து விபரமாகப் பதிவு செய்துள்ளார்

இலங்கை நிர்வாகசேவை தரம் ஒன்றில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவரும், 1979-1980 யாழ். பல்கலைக்கழக ஒன்றியத் தலைவருமான ம. செல்வின் இறேநேயூஸ் 'யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் ஐம்பது வருட யாத்திரையில் ஆழப்பதிந்த சில காலச்சுவடுகள்' என்னும் தனது கட்டுரையில், 'யாழ்ப் பாணம் பரமேஸ்வராக் கல்லூரியும், வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரியும் பலிப்பொருட்களாக ஆகுதியாக்கப் பட்டன. அந்த விலை மிக அதிகம். ஏனெனில் அந்த இரண்டு கல்லூரிகளும் ஈழத் தமிழ் சமுகத்தின் கல்விப் பாரம்பரி யத்தின், இரண்டு தூண்களாக வரலாற்றில் மிளிர்ந்திருந்தன. என்பதை இன்றைய தலைமுறை வெறும் தகவலாகவே அறியும். இவ்வாறு இரண்டு பெரும் கல்லூரிகளையும் தாரை வார்த்து ஒரு பல்கலைக்கழக வளாகம் கிடைத்தபோதும் அதனைக் கொண்டாட முடியாத வரட்டுத்தனம் கொண்டதாக அன்றைய தமிழ்த்தேசிய அரசியல் கறுப்புக் கொடியேந்தி நின் றிருந்தது என்பதும் வரலாறு சொல்லும் மற்றுமொரு தகவல்.

யாழ்ப்பாண வளாகத்தின் பிரசவமே நெருக்கடி மிகுந்ததா கவும், சவால்கள் நிறைந்ததாகவுமே இருந்தது. தமிழ் தேசி யத்தின் பத்திரிகை அன்றைய வார இதழில் 'கையாலாகாதப தியும் சிங்களபாலாவும்' என மகுடம் சூட்டி யாழ்ப்பாண வளா கத்தின் முதலாவது தலைவரான பேராசிரியர் க. கைலாசபதி யையும் முதலாவது பீடாதிபதியான கா. இந்திரபாலாவி னையும் ஏளனம் செய்தபோதும், முன்னோடிகளாகப் பொறுப் புக்களை ஏந்திய அவர்கள், தோழமைகளின் உறுதியுடனும் தொலைநோக்கான பார்வையுடனும் யாழ்ப்பாண வளா கத்தின் எதிர்கால செல்நெறி பற்றிக் கனவு கண்டார்கள், என்பது பலரால் அறிந்திருக்க முடியாத ஒன்றாக இருக்கும்.

எவ்வாறு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்விப்பாரம்ப ரியம் ஒரு 'பேராதனை சிந்தனைப்பள்ளி' (Peradeniya School of Thought) மரபினைக் கட்டியெழுப்பியிரு ந்ததோ அதுபோன்று யாழ்ப்பாண வளாகமும் எதிர்காலத்தில் ஒரு 'யாழ்ப்பாண (பல்கலைக்கழக)ச் சிந்தனைப்பள்ளி மரபினை (Jaffna School of Thought) கொண்ட மாண்புமிகு அறிவுத்த ளமாக மாறவேண்டும் என்பது அவர்களது கனவாக இருந்தது'. என விபரித்துச் செல்கிறார். இவ்வாறு இப்பிரிவில் உள்ள இருபத்தொன்பது கட்டுரைகளும் கனதியான தகவல் களைக் கொண்டதாகக் காணப்படுகின்றன.

'பனுவலின் பல்சுவை' என்னும் நான்காவது பகுதியில் இரு பத்தேழு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவை தமிழ், சமய, சமூக, அரசியல், கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், மனைப் பொருளாதாரம், மற்றும் காலநிலை, கடல்வளம் போன்ற பல்துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளாகக் காணப்படு கின்றன. இப்பகுதியில் 'யாழ். பல்கலைக்கழக பொன்விழாவும் அதனால் புலம்பெயர் தேசத்து பழைய மாணவர்களின் விழிப் புணர்வும், எதிர்கால வாய்ப்புகளும் ஒரு நோக்கு', 'புலம்பெயர் மண்ணில் தமிழ்க் கல்வியும் அதன் மேம்பாடும்' ஆகிய புலம் பெயர் தொடர்பான ஆக்கங்களும் இடம் பெற்றுள்ளன. யாழ். பல்கலைக்கழகத்துடன் தொடர்புடைய சிலர் தமது அனுபவங் களைக் கட்டுரைகளாக வடித்துள்ளனர். குறிப்பாக கனடா மொன்றியல் நகரில் வாழ்ந்து வரும் யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறை முன்னாள் விரிவுரையாளர் அந்தோனி முத்து 'University of Jaffna at 50:Some Personal Reflec- tions' என்னும் கட்டுரையில் தனது ஆரம்பகால அனுபவத் தினைப் பகிர்ந்துள்ளார்.

'கவினுறு கவிதை' என்னும் ஐந்தாம் பகுதியில் கவிஞர்கள் வ.ஐ.ச. ஜெயபாலன், சோ. பத்மநாதன், த. ஜெயசீலன் ச. முகுந்தன் ஆகியோர் யாழ். பல்கலைக்கழகம் குறித்து தமது உள்ளக் கிடக்கையினைக் கவிதைகளால் வெளிப்படுத்தியுள் ளனர். யாழ். பல்கலைக்கழக முன்னாள் மாணவர் அமைப்புத் தலைவர் கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலனின் கவிதை ஒன்று 'வேர் இல்லா மனிதனின் பாடல்' என்னும் தலைப்பில் பின்வருமாறு அமைந்துள்ளது.

***'நாற்பது வருடங்களுக்குப் பின்னும்
எங்கள் பல்கலைக்கழக மலைவேம்புகள்
முட்டி மோதித் தலையிடாதும்
சோடி பிரியாதும்
வேர்கள் கோர்த்த காதலுடன்
இன்னும் அருகருகாய்
விடைபெறும் காதலரை வாழ்த்த
புதியவர்களுக்குக் குடை விரித்தபடி***

***அன்று கண்கோர்த்தும் மனம் கோர்த்தும்***
***புகலின்றி அலைந்தோமே***
***இப்புனித நிழல்களைக் காணும் வரை...'***
என விரிந்து செல்கிறது.

'அஞ்சலிக்கும் அமரத்துவம்' என்னும் ஆறாவது பகுதி மனத்தைக் கனதியாக்கும் பகுதியாகும். இப்பகுதியில் யாழ். பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்துக்கும் தன்னலம் கருதாது, தம் வாழ்க்கையை அர்ப்பணித்து அமரத் துவம் அடைந்த, தலைவர்கள், துணைவேந்தர்கள், மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நூலகர்கள் என ஏறக் குறைய ஐம்பது பேரின் வாழ்க்கைக் குறிப்புகளும் அவர்கள் ஆற்றிய பணிகளும் தொகுக்கப்பட்டுள்ளன.

இறுதியாக 'புனைவு சொல்லும் புகைப்படங்கள்' என்னும் பகுதியில் யாழ். பல்கலைக்கழக ஆரம்பத்திற்கு ஆணி வேறாக இருந்தவர்கள், தலைவர்கள், துணைவேந்தர்கள், நிதிப்பங்களிப்புச் செய்த மாணவக் குழுவினர், பரமேஸ்வரன் ஆலயம் அன்றும் இன்றும் எனப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள் காணப்படு கின்றன.

இந்த வெளியீட்டில், பொற்கலையுனுள் என்னும் அட்டவ ணையில் ஐந்தாவது பக்கம் (V) வரவேண்டிய இடத்தில் ஆறாவது பக்கமும் (VI) ஆறாவது பக்கம் வரவேண்டிய இடத்தில் ஐந்தாவது பக்கமும் இடம் பெற்றிருப்பதால் வாசகர் களுக்கு சிறு தடுமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

550 பக்கங்களைக் கொண்ட 'பொற்கலை' யாழ்ப்பாணத்தில் இருநூறு வருடங்களுக்கு முற்பட்ட கல்விநிலை, யாழ். பல்க லைக்கழகத்தின் தோற்றம், அது எதிர்கொண்ட சவால்கள், அரசியல் சூழ்நிலைகள் அதன் சமூக பொருளாதாரத்தாக் கங்கள், அதன் இன்றைய நிலை போன்றவற்றை அறிந்து கொள்வதற்கான, கனதியான தகவல்களைக் கொண்ட ஒரு சிறந்த ஆவணமாகும். வரலாற்றுப் பெருமை மிக்க 'பொற் கலை'யினை வெளியிட்ட யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பழைய மாணவர் சங்கத்துக்கு எனது வாழ்த்துகளையும் நன்றி யையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



vivekananthan.v@thaiveedu.com



# கானல் நீர்:

## *வாழ்க்கையின் மாய வெளிச்சம்*

**மேரி றெசோதா**

இன்றைய இளையோரிடம் வாசிப்பு ஆர்வம் குறைந்து வருகின்றது என்ற விமர்சனங்கள் அதிகரித் துள்ள நிலையில், எங்கட புத்தகங்கள்' வெளியீடாக வெளி வந்துள்ள 'கானல் நீர்' போன்ற நாவல்கள் இளைஞர்களின் மனத்தில் சமூகப் பொறுப்புணர்வை ஊட்டும் திறனுடன், இலக்கியத்தில் ஈடுபாட் டையும் உருவாக்கக் கூடியவை. இவ்வகைப் படைப்புகள் இன்றைய காலத்தின் தேவையை நிறைவேற்றுகின்றன.




ஈழத்தில் பிறந்து, தற்போது ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து வரும் சியாமளா யோகேஸ்வரன் இந்த நூலை எழுதி யுள்ளார். இலக்கியத்தின் மீது ஆழமான ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட பெண் எழுத்தாளர்களில் ஒருவரான இவரது 'கானல் நீர்' நாவல் வெளிப்படுத்தும் சமூக யதார்த் தங்கள், குறிப்பாக இளவயது திருமணம் மற்றும் அதன் தாக்கங்கள், பெற்றோர்களின் ஏக்கங்களும் - அச்சங்களும் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

கிராமங்களில் மட்டுமல்லாமல் நகர்ப்புறங்களிலும் இந்தச் சூழ்நிலை அதிகரித்து வருவது கவலைக்கிடமான விடயம். இந்நாவல், வாசகர்களின் உள்ளத்தில் மாற்றத்தைக் கிளப்பும் சக்தி கொண்டது என்பதையும் நாம் நிச்சயமாக கூறலாம்.

இந்நாவலின் கதை பல தசாப்தங்களுக்கு முன் உருவானது என்றாலும், அதன் உள்ளடக்கம் இன்றைய சமூகவாழ்வுடன் தொடர்பானது. காலத்துக்கு காலம் வாழ்க்கைச் சூழல்கள் மாறியுள்ளநிலையில், சமூக யதார்த்தங்களைத் தழுவி எழுதப்பட்டுள்ள இந்நாவல் மூன்று தலைமுறைகளாக நீடிக்கும் வாழ்வியல் போராட்டங்களையும், ஏக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் பேசுகின்றது.

மனநலச் சிக்கல்கள், உறவுநட்பின் மாறுபட்ட வெளிப்பாடுகள், அனுபவத்தால் வருணிக்கப்படும் வாழ்க்கைப் பாடங்கள் போன்றவைகள் வாசகரை ஆழமாகத் தொடுகின்றன. 31 அத்தியாயங்களாகக் கட்டமைக்கப்பட்ட 271 பக்கங்கள் கொண்ட இந்நாவல், நிகழ்வுகளைச் சீராக நகர்த்தும் எழுத்துப்பாங்குடனும், இலக்கிய நயத்துடனும் வடிவமைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. வாசகர்களின் மனதில் நெருக்கமாகப் பதியும் உரையாடல்கள், உறவுச்சிக்கல்கள், உணர்வுப்பூர் வமான நிகழ்வுகள் ஆகியவை நாவலின் உணர்ச்சிச் செழுமையை மேம்படுத்தி, அதன் இலக்கிய மதிப்பை உறு திப்படுத்துகின்றன.

இந்நாவல், ஒரு சாதாரண குடும்பத்தின் வாழ்க்கைச் சூழ லுக்குள் நம்மை அழைத்துச் செல்கிறது. சுமதி எனும் கதா பாத்திரம், குடும்பத் தலைவியாகச் சித்தரிக்கப் படுகிறார். கணவன் மாறனுடன் வாழும் அவர், இரு ஆண் பிள்ளைக ளுக்குப் பிறகு பிறந்த பெண் குழந்தையான அபிரா மியையே அவரது வாழ்வின் ஆதாரமாகக் கருதுகிறார்.

உள்நாட்டு யுத்த சூழ்நிலைகளால் உயிரைப் பாதுகாப்பதற் காகக் கடன்பட்டேனும் மூத்த மகனை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட வேண்டும், பெண் பிள்ளைக்காக ஆடம்பர செலவுகள் செய்ய வேண்டும். குழந்தைப் பராயத்தில் இருக்கும் மகளுக்கென்று புதிய வீடு கட்ட வேண்டும் என்று... மாறனின் ஆசைகள் பல. தங்களுடைய சக்தியை மீறி அப்பால் அவற்றைச் செய்ய முனைந்ததால் வாழ்வின் நிம்மதியை இழக்கச் நேரிடும் என்பதை இந்நாவலில் தரிசிக்கலாம். இறுதியில் கடன்வலைக்குள் சிக்கி, உள நெருக்கீட்டுக்குள்ளாகி அம்னீசியா நோய்த் தாக்கத்திற்கும் மாறன் உள்ளாகியதால் குடும்பப் பொறுப்பினை சுமதி ஏற்கிறாள். இரு ஆண் பிள்ளைகளும் வெளிநாட்டில் வசித்த போதும் சுமதியால் வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்கமுடிய வில்லை.

ஒரேயொரு பெண் குழந்தை அபி. அளவுக்கு அதிகமான பாசம். இறுதியில், அத்தனை பாசத்தையும் வேரோடு இல்லாதெழிக்கும் அபியின் சுபாவம் எல்லை தாண்டிச் செல்கின்றது. வளரும் பருவத்தில் தன்னிச்சையாகச் செயல்படும் அபியின் நடத்தைப் பாங்குகள் சுமதியின் மன ஆறுதலுக்கு தடைபோடுகின்றது.

இன்றைய இளம் சமுதாயம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகள் - குறிப்பாக இளவயது திருமணமும் அதனாலேற்படும் விளைவுகளும் குடும்பத்தை மட்டுமின்றி சமூகத்தையும் பாதிக்கின்றது. பதின்ம வயது பிள்ளை களைக் கொண்ட பெற்றோர்கள் பயத்தோடும், அச்சத்தோடும் ஒருவித ஏக்கத்தோடும் வாழ்ந்து வருவது, கிராமங்களில்



மட்டுமின்றி நகர்ப்புறங்களிலும் அதிகரித்துள்ளன. உண்மையில் இந்நாவலை வாசிக்கும் ஒவ்வொருவரினதும் மனங்களிலும் மாற்றம் மலரும் என்பதில் ஐயமில்லை.

பெற்றோரின் கனவு, பிள்ளைகள் நன்றாக படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என்பதுதான். ஆனாலும், பிள்ளைகள் வாழுகின்ற சூழல் இவர்களின் வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. பிள்ளைகள் வழிதவறிச் செல்வதற்கு முக்கிய விளைவுக் காரணியாகக் குடும்பம் காணப்படுகின்றது. குறிப்பாக, குடும்பத்தில் இருந்து ஒரு குழந்தை நன்கு சரியாக வளர்க்கப்படாவிட்டால் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகும். இந்த சமூக யதார்த்தத்தினை இந்நாவல் வெளிப்படுத்துகின்றது.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பினால் சரி; உண்பதற்கு உணவு கொடுத்தால் சரி; அணிவதற்கு ஆடை கொடுத்தால் சரி என்று பெற்றோர்கள் நினைக்கிறார்கள். நாளாந்தம் பிள்ளைகளின் வாழ்வில் நடப்பதனைக் கேட்டுத் தெரிந்து கொள்ளாதிருக்கும் பெற்றவர்கள், பிள்ளைகளால் அதிகளவு துன்பங்களைச் சந்திக்க நேரிடும் என்பதனை இந்நாவல் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது. பெற்றோர் - பிள்ளைகள் இடையிலான உண்மையான பரஸ்பர நட்புறவைப் பேணுவதில் சுமதியும் தவறிவிடுகின்றாள்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்கும் அதீத பாசமும் அதீத கண்டிப்பும் பிள்ளைகளின் எதிர்காலத்தை மிகவும் பாதித்துவிடும் என்பதனைப் பெற்றவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. இதனாலேயே பிள்ளைகளின் வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் தங்களது பேச்சினைப் பிள்ளைகள் கேட்பதில்லை என்றும், அவர்களைத் திருத்த முடிவதில்லை என்றும் எண்ணிப் பல பெற்றோர்கள் கண்ணீரோடும் கவலையோடும் வாழ்ந்து வருகின்றனர். இங்கும் அதீத செல்லம் கொடுக்கப்பட்டு சிறுவயதில் வளர்க்கப்பட்டதால் அபி யாருடைய பேச்சினையும் கேளாது செயல்படுவதனை நாவல் எடுத்துக் காட்டுகின்றது.

பிள்ளைகளின் வாழ்வியல் சிக்கல்களைப் புரிந்து கொண்டு, அவர்களோடு ஆற அமர இருந்து கதைத்து, பிள்ளைகளுக்கு வாழ்க்கைப் படிப்பினைகளை கற்றுக்கொடுக்கும் பெற்றோர்கள் அரிது. அபியின் மாறுபட்ட நடத்தையினைச் சுமதியினால் புரிந்துகொண்டு மனதுக்கு இதமான முறையில் அபியின் தவறுகளைச் சுட்டிக்காட்டி திருத்துவதற்கு சுமதியால் முடியவில்லை. வீட்டிற்கு வந்தாலே நிம்மதி இல்லை என்று நினைக்கும் அபியின் சிந்தனைகள் மாறுபட்டுச் செல்வதற்கு சந்தர்ப்பமாக தாயுடனான பரஸ்பரமற்ற உறவுநிலை அமைவது தெளிவாகின்றது. பெற்ற மனம் உள்ளுக்குள் குமுறுவதும் வெளிப்படையாக திட்டித் தீர்ப் பதும் தன் மகளை நல்ல முறையில் வளர்க்க முடியவில்லை என்ற ஆதங்கத்தின் வெளிபபாடடையே காட்டுகின்றது.

பாடசாலைக் காலத்தில் ஓர் இளைஞனுடன் நிகழ்ந்த எதிர் பாராச் சந்திப்பு, அபியின் கல்வியை பின்தங்கச் செய்வதோடு, அவர்களிடையே காதலாக மாறுகிறது. ஒரு தாயாக மகளின் எதிர்கலத்தை நல்வழிப்படுத்த முயன்ற சுமதி, இறுதியில் தோல்வியுறுகிறாள். சுமதியின் கனவு பொய்த்துப் போகிறது. அபியின் பிடிவாதமான இயல்பால், அவர்களின் நெருக்கம் தூரவிலகிச்செல்கிறது. இந்த நிகழ்வே வாழ்வில் சுமதிக்கு பெரும் தலையிடியாக மாறுகின்றது.

ஆனால், வாழ்வின் கஸ்ர-துன்பங்கள் எவற்றையும் அனுபவிக்க விடாது, பாசத்தை மட்டும் ஊட்டி வளர்த்ததினால்த்தான் அபி சிறுவயதில் இருந்தே இவ்வாறு செயற்படுகின்றாள் என்று சுமதி உணர்ந்து கொள்ளவே இல்லை. அபியின் முன்னைய நடத்தைகளில் மாற்றத்தைக் காணாத சுமதி, கல்யாணம் கட்டிக்கொடுத்து அவளை ஒரு நல்ல வாழ்வில் சேர்த்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு வந்து, திருமண ஏற்பாடுகளைச் செய்ய தொடங்கையில், அபி தன்முடி வின்படி முரளியை பதிவுத் திருமணம் செய்து, பின்னாளில் இலண்டனுக்குச் சென்று வசிக்கின்றாள். அன்றிலிருந்து தாயின் தீராக் கோபத்திற்கு அபி ஆளாக நேரிடுகின்றது.'

ஒரு பெண் கல்வி கற்காவிடின் வாழ்வில் எத்தகைய துன்பங் களைச் சந்திக்க நேரிடும் என்பதனை இந்நாவல் உணர்த்து கின்றது. எத்தகைய நிலையில் இருந்தாலும் கல்வியால் மாற்றத்தை கொண்டு வர முடியும். இங்கு அபி முறையான கல்வியைப் பெற்றுக்கொள்ளாது, சிறிய வயதில் திருமணம் செய்ததால் வாழ்வில் வலிகளைச் சந்திக்க நேரிடுகிறது. இன்றைய சமூகச் சூழலிலும் இவை போன்ற சம்பவங்கள் பல இடம்பெற்று வருகின்றன. காலம் கடந்த ஞானம் என்பது போல் இளமைப்பருவத்தினை இழந்து, தாயாருக்கு கொடுத்த துன்பங்களையும் வேதனைகளையும் எண்ணி எண்ணி அபி இறுதியில் துவண்டு போகின்றாள். பெற்ரோரை எதிர்த்து இளம் வயதில் எடுக்கும் தவறான முடிவுகள் அழகான திருமண வாழ்வை அர்த்தமற்றதாக்கிச் செல்கின்றது.

பல வருடங்கள் ஓடிக்கடந்தாலும், அபி தனது தாயின் அரவணைப்புக்காக ஏங்குகிறாள். தன் தவறை உணர்ந்து, வருந்தி தாயிடம் மன்னிப்புக் கேட்கவும் அவளது மனம் அங்கலாய்க்கிறது. எத்தனை உறவுகள் இருந்தாலும் அவ்வுறவுகள் தாய் போன்ற உறவுக்கு ஈடாகாது என்பதனைக் கதையோட்டம் துல்லியமாக பதிவு செய்துள்ளது. கடன் வலைக்குள் மூழ்கி மன அழுத்தத்தினால் உண்டான அம்னீசியா நோயினால் பாதிக்கப்பட்ட, கணவனை இழந்த சுமதியின் வாழ்வும், இளவயதில் காதலித்து திருமணம் செய்த மகளான அபியின் வாழ்வும் ஒற்றைப்பெற்றோர் என்ற நிலையிலேயே நாவலில் சித்திரிக்கப்படுகிறது.

இளவயதில் திசை மாறும் வாழ்க்கையானது நிம்மதியை இழக்கச் செய்து துன்பங்களைத் தனதாக்கிக் கொள்கிறது. சமூகத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் மற்றும் மதுபாவனை, குற்றச்செயல்கள், இளவயது திருமணங்கள் இவையெல்லாம் இளம் சமுதாயத்தினைச் சின்னாபின்ன மாகும் கூரிய ஆயுதங்களாகும். பிள்ளைகள் நன்றாகக் கல்வி கற்று, வாழ்வில் வெற்றி பெற வேண்டும். இளம் சமுதாயத்தினர் பிரச்சினைகளுக்குள் சிக்குண்டாது ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி பயணிப்பதற்கு இளமைப்பருவத்தினை முறையாகக் கட்டமைக்க வேண்டும். இளம் பருவத்தினர் தங்களது வாழ்வினைப் புரிந்து கொள்ளும் வகையில் சிறப்பான சமூக விழிப்புணர்வு சார்ந்த கருத்துகளை உண்மைச் சம்பவத்தின் வாயிலாக தத்ரூபமாகப் பொறித்த நாவலாசிரியருக்கு எனது பாராட்டு.



meryresotha.a@thaiveedu.com




# தீபச்செல்வனின் ‘சயனைட்’ நாவல்

## ஒரு காலத்தின் சாட்சி

தாமரைச்செல்வி

கடந்து வந்த காலமும் மனிதர்களின் வாழ்க்கை முறையும் இலக்கியங்களின் வழியே எமக்கு அறியக் கிடைக்கிறது. ஒவ்வொரு காலத்தினதும் எழுத்துகளே அவற்றின் சாட்சிகளாகவும் இருக்கி ன்றன. எழுத்துகளின் பெறுமதி இந்த விதமாகவே உணரப்படுகிறது. அதனால் தான் நேர்மையான எழுத்துகள் காலம் தாண்டியும் நிலை கொள்கின்றன. எமது காலத்தின் கதையைச் சொல்லும் தீபச்செல் வனின் ‘சயனைட்’ நாவலும் முக்கியமானதொரு ஆவணமாகத் திகழும் என்று சொல்லத் தோன்றுகிறது.

தீபச்செல்வன் நாடறிந்த எழுத்தாளர். சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை எனப் பல துறைகளிலும் பங் களிப்புச் செய்து வருபவர். கிளிநொச்சியைச் சேர்ந்த இவர் தற்போது ஓர் ஆசிரியராகவும் பணிபுரிகிறார். இச்சமூகத்தை இவர் பார்க்கும் விதம் தனித்தன் மையானது. நீண்ட நெடிய போர்க்கால வாழ்வைச் சந்தித்துக் கடந்த மனிதர்களின் நடுவேதான் இவரது வாழ்க்கையும் இருந்திருக்கிறது. கடின மான அந்த சூழலைக் கடந்து போக முடியா தவாறு அவரை எழுத வைத்திருக்கிறது, ஈர மனதோடு மனிதர்களை அணுக வைத்திருக்கிறது. தனது படைப்பிலக்கியத்தின் வெளிப்படையான பேசுபொருளாக தான் பிறந்து வளர்ந்த மண்ணின் வாழ்வனுபவங்களை எடுத்துக் கொள்கிறார். அவற்றை யுத்த அவலங்களுக்கூடாகப் பதிவு செய்கிறார்.

இந்த மண்ணில் தமது சுகங்களைத் துறந்து போராடப் போனவர்களின் வாழ்க்கையை எழுதும்போதே வீடு வாசல் சொத்து சுகம் இழந்து அகதிகளாய் இடம் பெயர்ந்து அலைந்து திரிந்த மக்கள் கூட்டத்தின் அந் தரிப்புகளையும் எழுதி ஆவணப்படுத்தும் பெரும் பணியையும் இவர் செய்கிறார். போர்க்கால வாழ்வு என்பது தியாகமும் துயரமும் நிறைந்தது. எத்த னையோ வலிகளைக் கடந்துதான் இன்று மனிதர்கள் மீண்டு வந்திருக்கிறார்கள். உறவுகளை இழந்த வலி இன்னமும் தீராமலேதான் இருக்கிறது. இழந்தவற் றுக்கான நியாயங்கள் கிடைக்கப் பெறாத நிலையில் தொடர் துன்பங்களையே தாங்க வேண்டியிருக்கிறது. இன்றைய புள்ளியில் வந்து நிற்கும் வாழ்வின் கோர முகத்தின் ஒரு வெட்டுமுகமாகவே இந்நாவலைப் பார்க்க முடிகிறது. இந்த எழுத்து அடுத்த சந்ததிக்கான ஆவண மாகவும் அமைகிறது. இந்தப் பொறுப்பை உணர்ந்தே தீபச் செல்வன் ஒவ்வொரு படைப்பையும் தந்திருக்கிறார்.

ஏற்கனவே நடுகல், பயங்கரவாதி என இரண்டு நாவல்களை எழுதி இவர் வெளியீடு செய்திருக் கிறார். உலகம் முழுவதும் இருக்கும் பல வாச கர்களை அவை சென்றடைந்திருக்கின்றன. தந்தை யால் கைவிடப்பட்ட குடும்பத்தில் தாய் தன் குழந் தைகளுடன் வாழும் நிலை யையும் அதன் விளைவுக ளையும் சொல்லும் நாவல் ‘நடுகல்’. ஒரு மாணவன் போராட்ட காலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினை

களைச் சொல்லும் நாவல் 'பயங்கரவாதி'. இரண்டும் எடுத்துக் கொண்ட கதைக்கும் களத்துக்கும் உரியதான விஷயங்களைப் பேசியிருந்தன. இப்போது வெளிவந்திருக்கும் மூன்றாவது நாவலான சயனைட், போர்க்கள வாழ்வையும் சமகால சமூக நிலமையையும் சமமான தளத்தில் பதிவு செய்திருக்கிறது.

ஒட்டுசுட்டான், காதலியார் சமளங்குளம் எனும் கிராமத்தில் பிறந்து வளர்ந்த சாத்வீகன் எனும் சிறுவன் கால மாற்றத்தில் வளர வளர வளவனாக உருமாறிய கதை இது. எத்தனையோ பேரின் பிரதிநிதியாகவே வளவன் எனும் பாத்திரம் கட்டமைக் கப்பட்டிருக்கிறது. கால்களில் புழுதி படிய ஓடித்திரிந்தும், புலுணிக்குஞ்சுகளோடு கதை பேசி அரிசிக் குறுணி போட்டு மகிழ்ந்தும் வாழ்ந்த சிறு வயதுக் காலம் அது. கினியாப் பற் றைகளுக்குள் தோளில் மாட்டிய வாழைத்தண்டு கோல்சரும், வாழை நாரால் கட்டப்பட்ட கொழுவும் பட்டியும், கடதாசிப் பெட்டி வோக்கியும், கினியாக் கிளையின் உருமறைப்பும், துப்பாக்கி முனை யாக நீண்டிருக்கும் தடியால் வான் நோக்கிச் சுட்டும் விளையாடிய அவனது குழந்தைப் பருவம் எத்தனை அழகானது. அத்தனை சந் தோஷங்களையும் வானில் பறந்து திரிந்த குண்டுவீச்சு விமானங்கள் ஒரு நொடியில் அழித்துவிட்டுப் போயின. ஆழ்மனதில் ஏற் பட்ட வலிகளே அவனை சுற்றிலும் பார்க்க வைத்தது. ஏன் இப்படி என்ற கேள்விகளே அவனை வளர்த்தெடுத்தது. சக மனிதர்களை நேசிப்பவனாக மாற்றியது. வளவனாக அவ னைப் பயணிக்க வைத்தது. சாதாரணமான ஒரு போராளியாக இணைந்த அவன் தனது ஆற்றலாலும் அர்ப்பணிப்புள்ள மனத்தாலும் ஒரு தளபதியாக மாற்றம் பெற்றான். இந்த மாற்றம் சாதாரணமாக அமையவில்லை. அவனின் அயராத உழைப்பு அதற்குள் அடங்கி யிருந்தது. மண் ணையும் மனிதர்களையும் தாண்டி வேறு சிந்தனை இல்லாத அவனு க்கும் ஒரு பெண் மீது காதல் வந்தது. தனக் கென எந்த ஆசையுமின்றி இளம் வயதுக்கே யுரிய உணர்வுகளைக் கடந்து வாழ்ந்தவன் திடீரென்று உள்ளே விரிந்து கொள்ளும் மலரின் வாசனையையும் உணர்ந்தான். திருமணம் செய்து ஒரு குழந்தைக்கும் தந்தையானான். அப்படி அவ னைத் துரத்தித் துரத்தி காத லித்தவள் பின் நாளில் அவனை ஒதுக்கி வைப்பதை வாசக மனம் அதிர்வோடு பார்த்தது. ஏற்க மறுத்தது. எல்லாம் இழந்து புனர்வாழ்வு பெற்றுத் திரும்பி வரும் நிலையில் அவன் அன்பு மறுக்கப்படும்போது ஏற்படும் மனச்சிதைவு... அந்த நிராகரிப்பின் வலி... நாம் பார்த்த அந்த கம்பீரமான மனிதன் உடைந்து கலங்கிய தருணம் அது. அந்த நிலை இந்த சமூகத்திற்கான கேள்வி யாக மிஞ்சி நிற்கிறது.

**சண்டைக் களத்தில் நின்று இரு கண்களையும் இழந்த ஒருவர் புலம்பெயர் நாட்டிலிருந்து தனக்குக் கிடைத்த உதவியை இரு கால்களையும் இழந்த சக தோழனுக்குப் பகிர்ந்து கொடுத்த மனிதநேயத்தை நான் பார்த்திருக்கிறேன். அந்த மனநிலையில்தான் அவர்கள் இன்றும் இருக்கிறார்கள்.**

மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதைப் போல இவர் களின் இன்றைய நிலை இருக்கிறது. மீண்டு வந்த இவர்கள் ஒவ்வொருவரிடமும் ஆயிரமாயிரம் கதைகள் கொட்டிக் கிடக் கின்றன. எமது வலிகளை நாமேதான் எழுதிக் கடக்க வேண் டும் என்ற கூற்றில் உறுதியாக இருக்கும் தீபச்செல்வன் கடந்து வந்த காலத்தையும் சமகாலத்தையும் இணைத்து எழுதி இந்நிலை ஏன் வந்தது என்ற கேள்வியையும் முன் வைக்கிறார். போராடும் சூழலுக்கு மக்கள் எப்படித் தள்ளப்ப டுகிறார்கள் என்பதையும் போராளியாக வாழ்வதில் வரும் அனுபவங்களையும் அதன் பின்னரான இன்றைய காலத்தில் இன்னொரு போராட்ட வாழ்வை எதிர்கொள்ளும் நிலை யையும் இந்த முந்நூற்றைந்து பக்கங்களிலும் பகிர்ந்திருக் கிறார்.

போராட்டக் களத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட பகுதி கள் பலருக்கு புதிய அனுபவங்களைத் தரக்கூடியவை. ஏற்கனவே பல போராளி எழுத்தாளர்கள் இக்களத்தை வைத்து தங்களது அனுபவங்களைக் கதைகளாக்கித் தந்தி ருக்கிறார்கள். மலரவனின் 'போர்உலா' இன்றளவும் பேசப்படு கின்ற நூலாகும். தவிர மலைமகளின் 'யார் உன்னை அழைத்தார்', தமிழினியின் 'மழைக்கால இர வொன்றில்', அலையிசையின் 'என்றாவது ஒரு நாள்', சூரிய நிலாவின் 'சுமைதாங்கி', போன்ற சிறு கதைகள் இன்றைக்கும் நெஞ்சை உலுப்பிக் கொண்டு தான் இருக்கிறது. வெற்றிச்செல்வி, அன்றிலிருந்து இன்றுவரை தனது போராட்ட வாழ்வின் அனுபவங்களுக்கூடாகப் பல கதை களைத் தந்திருக்கிறார். இன்னும் பல போராளிப் படைப்பாளர்களின் சிறந்த சிறுகதைகள் இருக் கின்றன. மருத்துவப் போராளிகள் பலரின் பல்வேறு படைப்புகள் களம் சார்ந்து வெளிவந்தி ருக்கின்றன. இவையெல்லாம் அவர்கள் பங்கு கொண்ட போர்க்கள வாழ்வின் அனுபவங்களை விபரிப்பன. அந்த அனுபவங்கள் அவ்வெ ழுத்து களுக்கு வலு சேர்த்தன. அந்த எழுத்துக ளுக்கு சிறிதும் குறையாத அளவுக்கு தீபச் செல்வனும் அந்த போர்க்கள வாழ்வை இயல் பாகப் பதிவு செய்திருக்கிறார்.

அவர்களிடையே படர்ந்திருக்கும் அன்பு, சீண்டிக் கொள்ளும் குறும்புத்தனங்கள், ஒருவ ருக்கொருவர் ஓடிச் செய்யும் உதவிகள், செல்லச் சண்டைகள், உயிர் போகும் நெருக்கடி நேரத் திலும் தோழர்களுக்கு உதவி நிற்கும் மனித நேயம் என்று அவர்களின் வாழ்க்கை எழுத்து களில் உயிர் பெற்றிருக்கிறது. சிறை வாழ்வின் துயரங்கள் தாங்கி விடுதலையாகி வரும்போது இன்னொரு உலகம் அவர்களை எதிர் கொள்கிறது. அவர்களின் வாழ்வின் அடுத்த பாகம் அது. அதை அவர்கள் எப்படி எதிர்கொள்கி றார்கள் என்பதைச் சொல்லும்போதே பெரும் துயர் எம்மை ஆட்கொள்கிறது. ஆனால் இன்றைய கடின வாழ்விலும்கூட அவர்கள் தோழமையுடன் இருப்பதையும், உதவி செய்து கொள்வதையும் பார்க்க முடிகிறது. அவர்களுக்குள்ளி ருக்கும் ஈரமனதின் வெளிப்பாடு அது. காய்ந்து போகாத அந்த ஈரமனம்தான் அவர்களை ஆற்றுப்படுத்துகிறது. வாழ்த லுக்கான நம்பிக்கையையும் தருகிறது.

சண்டைக் களத்தில் நின்று இரு கண்களையும் இழந்த ஒருவர் புலம்பெயர் நாட்டிலிருந்து தனக்குக் கிடைத்த உதவியை இரு கால்களையும் இழந்த சக தோழனுக்குப் பகிர்ந்து கொடுத்த மனிதநேயத்தை நான் பார்த்திருக்கிறேன். அந்த மனநிலையில்தான் அவர்கள் இன்றும் இருக்கிறார்கள்.

சமூகம் கை விட்டபோதும் தெரிந்தவர்களே புறக்கணித்தபோதும் தமக்குள் தாமே தோள் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கி றார்கள். இந்நாவலின் முடிவில் பெரும் துயரம் நம் மனதைச் சூழ்ந்து கொள்கிறது. பலரின் நோய்களுக்கும் மரணங்களுக்கும் காரணமாய் பின்னணியில் இருக்கும் மர்மத்தின் மீது எழும் கேள்வி அது. அதன் விடையையும் தெரிந்து கொண்டே இழப்புக் களுக்குத் தயாராக இருக்கும் நிலையை மாற்றி அமைக்க முடி யாதிருப்பதே பெரும் துயர் தருவது.

இந்நாவலில் உலவும் பாத்திரங்கள் நம் கண் முன்னே வாழ்ந்த வர்கள். வளவன், நிலவன், குயிலன், சீராளன், வரதன், ஆதவன், பருதி என இவர்கள் எல்லோருமே ஒரு கடினமான வாழ்வை சுயந லமற்று மனதார ஏற்றுக் கொண்டவர்கள். இந்தப் பிள்ளைகளை அனுப்பிவிட்டு வயிற்றில் நெருப்புப் பந்தம் சுமந்தபடி வீட்டில் அல்லலுறும் தாய்மாரின் துயரம் நாகராணியின் பாத்திரத்தை வைத்துச் சொல்லப்படுகிறது. பிள்ளையின் நினைவை நெஞ்சிலே சுமந்திருக்கும் தாய்மை உணர்வு அது. சிறையிலிருந்து திரும்பும் மகனை நெஞ்சம் நெகிழ தலை தடவி வரவேற்கும் அவளின் மனம் மகனின் நல்வாழ்வுக்காக ஏங்குகிறது. மருமகளிடம் கெஞ்ச வைக்கிறது. ஒரு தாயின் கையறு நிலையை அழகாகப் பதிவு செய்திருக்கிறார்.

வேழினியின் மாற்றம் மனதுக்கு அதிர்ச்சியையே தருகிறது. இந்தப் போர்ச்சூழலும் அதன் பின் விளைவுகளும் மனித மனங்க ளுக்குள் எத்தகைய பிறழ்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை இந்த மாற்றம் சுட்டிக் காட்டுகிறது. கலாசாரம், பண்பாடு எல்லாமே அடித்துக்கொண்டு போகுமளவிற்கு யதார்த்தம் இங்கு ஆதிக்கம் செலுத்துகிறது என்ற கசப்பான உண்மையையும் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. எனினும் வேழினியின் வெறுப்புக்கும் ஒதுக்கலுக்கும் வலுவான காரணம் ஏதும் சொல்லப்பட்டிருக்கலாமோ என்று மனம் அலைவுறுவ தையும் இங்கு சொல்லவேண்டியிருக்கிறது.

தீபச்செல்வன் ஒரு கவிஞராக இருப்பதனால் எழுத்து நடையில் கவித்துவமும் கலைநயமும் மின்னித் தெறிக்கிறது. போகிற போக்கில் நயமிகு வார்த்தைகளை அள்ளித் தெளித்துக் கொண்டே போகிறார். அது புறச்சூழலை வர்ணிக்கும் போதா கட்டும் அக உணர்வுகளை எழுதும் போதாகட்டும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவருக்குக் கை கொடுத்துக்கொண்டே வரு கின்றன. இன்று வரைக்கும் எத்தனையோ அனுபவங்களையும் வலிகளையும் கடந்துதான் மக்கள் வந்திருக்கிறார்கள். அத்தனை வலிகளையும் இலக்கியத்தில் பதிவு செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகிறது. இதுவரையில் சொல்லப்பட்ட கதைகள் கொஞ்சமே. இன்னும் சொல்வதற்கு நிறைய கதைகள் இருக்கின்றன. அவைகள் சொல்லப்பட வேண்டும். ஒரு காலத்து வாழ்வின் வசீகரங்கள், இழப்புகள், துயரங்கள் மேன்மேலும் ஆவணப்படுத்தப்பட வேண்டும். அந்த ஆவணப்படுத்தலின் ஒரு பகுதியே இந்த ‘சயனைட்’ நாவல்.

தீபச்செல்வனுக்கு வாழ்த்துகள்.















thamaraichelvi@thaiveedu.com





# ஈழத்துத் தாகூரின் பார்வையில் கவியரசர் தாகூரின் வாழ்க்கை

## மல்லியப்புசந்தி திலகர்

1934-ஆம் ஆண்டு வெளிவந்த சி.வி. வேலுப்பிள்ளையின் ஆங்கில கவிதை நாடக நூலான 'விஸ்மாஜினி' 90 ஆண்டு களுக்கு முன்னர் வெளிவந்தது. அதே சமகாலத்தில் 1935-ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வீரகேசரியில் சி.வி. வேலுப்பிள்ளை தமிழில் எழுதிய கட்டுரை ஒன்று 1982-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ஆம் திகதி வீரசேகரியில் 'இக்கட்டுரைக்கு வயது 47' எனும் உப தலைப்போடு மறுபிரசுரமாகியுள்ளது. ஆக, 1935-ஆம் ஆண்டு சி.வி. வேலுப்பிள்ளை கவியரசர் தாகூர் குறித்து தமிழில் கட்டுரைகள் எழுதியுள்ளார். அந்த கட்டுரை இவ்வாறு அமைகிறது:

ஒரு தேசத்தின் சக்தியை அதனுடைய வெற்றிகளில் இருந்தோ அல்லது விஸ்தீரணங்களில் இருந்தோ நாம் மதிப்பிட்டு விட முடியாது. அதேபோல் ஒரு தேச மக்களின் மேன்மையும் தாழ்மையும் நவநவமான யுத்த தளபாடங்களைக் கண்டுபிடிப்பதையோ அல்லது பலவகைப்பட்ட பாஷாண புகைகளை கண்டுபிடிப்பதையோ கொஞ்சமும் சார்ந்திருக்கவில்லை. ஒரு நாட்டின் உண்மையான உயர்வு அதனுடைய அறிவு வளர்ச்சியையும் கலைகளின் விருத்தியையுமே பொறுத்து இருக்கிறது. எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் அதனுடைய எதிர்காலத்தை நிர்ணயிப்பவர்கள் கவிஞர்களும் கலைஞர்களும் எழுத்தாளர்களுமாகவே இருப்பதை சுலபமாக நாம் காணலாம். எதிர்கால வாழ்க்கைப் பாதையில் தேச மக்களை இட்டுச்செல்கின்றவர்கள் இவர்கள்தான். கலை என்பது எல்லா பாஷைகளையும் தழுவி நிற்கின்றது. எல்லா நாடுகளுக்கும் எல்லா நிறத்தவர் களுக்கும் இது பொதுவானது. எவருக்கும் இது ஏகபோக உரிமை அல்ல.

'தாகூர், பாரதியார் முதலிய மாபெரும் கலைஞர்களை குறிப்பிட்ட ஒரு காலத்தைச் சேர்ந்தவர்களென்றோ அல்லது ஒரு தேசத்தையோ அல்லது ஜாதியோ சேர்ந்தவர்கள் என்றோ கூற முடியாது. அகில உலகமெல்லாம் அவர்களுடைய வீடு. உலக மக்கள் அனைவரும் அவர்களுடைய பந்துக்கள், நண்பர்கள். மாபெரும் கலைஞர்களான இவர்கள் எங்களுக்குச் சொந்தமானவர்கள் என்று எல்லா தேசத்தவர்களும் பொதுவாக சொல்லிக் கொள்கிறார்கள். என்றாலும் உண்மையான பெருமை இந்த கவிஞர்களை உற்பத்தி செய்த நாட்டிற்கே உரியதாகும். கவிச்சக்கரவர்த்தியான தாகூரும் பாரதியாரும் இந்தியாவுக்கு இணையற்ற இரு திலகங்களைப் போன்றவர்கள். அவர் களை உற்பத்தி செய்த பாரத நாடு எவ்வளவு தூரம் பெருமை பாராட்டிக் கொண்டாலும் அது மிகையாகாது. கம்பர், பிராட்டியார், வள்ளுவர், இளங்கோ முதலான பெரியவர்களை உற்பத்தி செய்து இந்திய தேசம் தனது கலைப் பெருமையை அவ்வப்போது நிலைநாட்டிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பெருமையை பாரதியின் கவிதைகளும் தாகூரின் கவிதைகளும் இருபதாம் நூற்றாண்டில் மறுபடியும் ஊர்ஜிதம் செய்கின்றன. நவீன காலத்துத் தமிழ் இலக்கியங்களுக்குள் பாரதியின் கவிதைகளுக்கு இணையாகச் சொல்லக்கூடியது ஒன்று கூட இல்லை. பாரதியாரின் திருநாமம் தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் கிணீர்... கிணீர்... என்று ஒலிக்கிறது. சுருங்கச் சொல்லுங்கால் வங்காளிகளுக்கு தாகூர் எப்படியோ அதே போன்றுதான் தமிழர்களுக்கு பாரதியார். தமிழ் பாஷை பிற்போக்கடைந்து கொண்டிருந்த தருணத்தில் பாரதியார் தோன்றினார். அவருடைய கவிகள்தான் தமிழுக்கு மறுமலர்ச்சி அளித்தன. இத்தகைய பெரியாராகிய பாரதியார் இன்றுதான் உலகை நீத்தார் ,இந்தத் தினத்தை இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரு தேசிய தினமாக கருதி கொண்டாடுவார்கள் என்பதில் ஐயமில்லை'

'பாரதி தினத்தை தேசிய தினமாகக் கொண்டாட வேண்டும்' எனும் தலைப்பிலான மேற்படி கட்டுரையை 1935-ஆம் ஆண்டிலேயே சி.வி. வேலுப்பிள்ளை எழுதியுள்ளார். இந்தக் கட்டுரையை வாசிக்கும்போது தனது மானசீக குருவான ரவீந்திரநாத் தாகூர் மீது மட்டுமல்லாமல் அதே சமகாலத்தில் வாழ்ந்த தமிழ்க் கவிஞரான மகாகவி பாரதியார் குறித்தும் சி.வி. வேலுப்பிள்ளை அதீத பற்றுக் கொண்டுள்ளார் என்பது தெரிகிறது.

'கவியரசர் தமது மன தேக ஆரோக்கியங்களைக் கூட கவனிக்காமல் அந்தக் காலத்தில் ஆயிரக்கணக்கான தேசிய கீதங்களை எழுதி வெளியிட்டார். மனதை உருக்கும் அந்தத் தேசிய கீதங்கள் மக்கள் மனதைக் கவர்ந்த பான்மை அறிந்து போற்றத்தக்கதாகும். அவரது கஷ்டங்களின் கொடிய வாளாயுதத்தை விட அவரது பேனா முனை அத்தனை வல்லமை பெற்றதாக இருந்தது. அதாவது அவர் தமது பேனாவினால் தனது கஷ்டங்களை வேரறுத்தார்.

தாஸ்டீகமும் வீரத்தன்மை பொருந்திய அந்தக் கண்ணியமும் அவருடைய பேனா படையை சமாதான களத்துக்கு இட்டுச் சென்றன. 1912-ஆம் வருடம் அவருக்கு தேக அசௌகரியம் உண்டாயிற்று. தேக அசௌசரியத்தை போக்கிக் கொள்ளும் பொருட்டு அவர் அந்த வருடம் இங்கிலாந்து சென்றார். அங்கு தமது மைந்தனுடன் தாமதித்தார். மனிதனுக்கு இயற்கையாக ஏற்படும் அந்த மனவிஷனம் அவருக்கு ஏற்பட்டது. அந்த மனவிஷனமானது அவருடைய கவிகளின் மொழிபெயர்ப்பை அவருடைய கலா நண்பர்களுக்குக் காட்டவிடாதபடி தடுத்தது. ஆனால் வில்லியம் பட்லர் பீச் எனும் ஐரிஷ் கவிஞர் கீதாஞ்சலியின் மொழிபெயர்ப்பை எப்படியோ பெற்றுக்கொண்டுவிட்டார். அந்த கீதாஞ்சலி மொழிபெயர்ப்பு ஆங்கில பாஷையிலேயே ஒரு புதிய வழியை கண்டுபிடித்து இருப்பது போல் அந்த கவிஞருக்குப்பட்டது. அதன் தாஸ்ட்டீகமும் அழகும் சொற்பொருள் அமைப்பும் பாஷையின் உயர்வும் அவருக்கு நூதன உணர்ச்சியைக் கொடுத்தன. கீதாஞ்சலியும் சாதனாவும் பின்னால் பிரசுரம் ஆயின. அதன் பின் கவியரசரின் பிரசங்கங்கள் வழியாக அடுத்த வருடம் நமது கவிக்கு நாயகர் அமெரிக்காவில் இருந்தார். அவ்வருட கோடை காலத்தில் 'தோட்டக்காரன்', 'தேய்பிறை' எனும் அரிய நூல்களை அவர் எழுதினார். இந்தியாவுக்கு அவர் திரும்பி வரும்போது அவருக்கு 52 வயது ஆகிவிட்டது.

இதனைத் தொடர்ந்து 1937-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ஆம் தேதி 'செம்மண் பாதையின் சிறப்பு மாலை' எனும் தலைப்பில் ரவீந்திரநாத் தாகூர் எழுதிய கீதாஞ்சலியை முன்வைத்து 'உள்ளம் கிளர்ந்து உண்டான உணர்ச்சி' எனும் தலைப்பில் வீரகேசரியில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார் கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளை. அந்தக் கட்டுரை இவ்வாறு அமைகிறது:

'கவியரசர் தமது மன தேக ஆரோக்கியங்களைக் கூட கவனிக்காமல் அந்தக் காலத்தில் ஆயிரக்கணக்கான தேசிய கீதங்களை எழுதி வெளியிட்டார். மனதை உருக்கும் அந்தத் தேசிய கீதங்கள் மக்கள் மனதைக் கவர்ந்த பான்மை அறிந்து போற்றத்தக்கதாகும். அவரது கஷ்டங்களின் கொடிய வாளாயுதத்தை விட அவரது பேனா முனை அத்தனை வல்லமை பெற்றதாக இருந்தது. அதாவது அவர் தமது பேனாவினால் தனது கஷ்டங்களை வேரறுத்தார். ஊடகமான அந்த அவரது கலா வன்மைக்காக அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. கல்கத்தா சர்வகலாசாலையார் அவருக்கு டாக்டர் பட்டத்தை உகந்து அளித்தனர். அதற்குப்பின் சர்க்காரும் அவரது திறமையை வியந்து அவருக்கு சேர் பட்டம் அளித்தார்கள். அவர் அடைந்த நோபல் பரிசு மதிப்பு எட்டாயிரம் பவுண்ஸ்கள் ஆகும். அந்த ஊதியத்தை அவர் அப்படியே உலகம் புகழும் சாந்தி நிகேதன் சர்வதேச கலா நிலையத்திற்கு ஒதுக்கி வைத்து விட்டார். பின்னர் அவர் நான்காவது தடவையாக வெளிநாட்டு பிரயாணத்தின் பொருட்டு புறப்பட்டார். இந்த முறை அவர் ஜப்பான் தேசத்திற்கு சென்றார். அங்கு அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் இரண்டு பகுதிகளாகப் பிரசுரம் ஆகின. அவைகளின் மகுடம் முறையே 'தேசியம்', 'பிரமுகர்கள்' என்பதாகும். 'தப்பிய பறவைகள்', 'காதலர் கொடை', 'பழமை சேகரித்தல்' என்ற கவிதைகளும் 'மாஷி' என்ற கதையும் அந்தக் காலத்தில் தான் எழுதப்பட்டன.

1918-ஆம் வருடத்தில் அமிர்ததசராஸில் ஜாசியன்வாலா பாக்கில் நடந்த கொடிய சம்பவம் கவிக்கு நாயகரை உலுக் கிவிட்டது. அந்த சம்பவத்தை எதிர்க்கும் பொருட்டு அவர் தமது சேர் பட்டத்தை வாபஸ் செய்துவிட்டார். மகா யுத்தத் திற்கு பின் அவர் மேல்நாட்டவருக்கும் கீழைத்தேசத்தா ருக்கும் உறவை உண்டாக்க வெளி தேசங்களில் யாத்திரை செய்ய அவரது மனம் விரும்பியது. அந்த ஆசையால் உந்தப் பட்டவராக அவர் 1921-ஆம் வருடம் வெளித்தேச யாத்திரை தொடங்கினார். அவர் சென்ற இடமெல்லாம் அவரை மக்கள் குதூகலத்துடன் வரவேற்று உபசரித்தனர். அவர் புறப்பட்ட யாத்திரை நோக்கம் சர்வதேச அளவில் நிறைவேற வேலை செய்தது. அந்த பயணத்தின்போது 'நினைவுச் சின்னம்', 'சிருஷ்டி ஐக்கியம்' என்ற இரண்டு நூல்களை வெளியிட்டார். ரவீந்திரர் யாத்திரையில் சலிப்பது கிடையாது. முடிவில்லா ஒரு யாத்திரிகர் என்றால் அவரே அதற்குப் பொருத்தமானவர். தூரத்தில் இல்லை இன்னும் வெகு தூரத்துக்கு அப்பால் உள்ள விஷயங்களை படிப்பதில் அவருக்குத் தாகம் அதிகம். அவர் ஒரு பயணப் பறவை. இந்தப் பறவை பாடிக் கொண்டே இன்னும் பறந்துகொண்டிருக்கிறது. இன்னும் பறந் துகொண்டே பாடிக்கொண்டிருக்கிறது. அதாவது இவருக்கு எவ்வளவு யாத்திரை செய்தாலும் திருப்தி ஏற்படு வதில்லை. அவரது கவிநயத்தை இங்கு சற்று நோக்குங்கள்.

*அந்தக் கிராமத்துக்கு அப்பால் தெரிகிறதே*
*அந்தச் செம்மண் பாதை*
*அது என்னுடைய யாத்திரை*
*மனதை பிடித்து இழுக்கிறது*
*தொலைவில் தூசியில் பொதிந்து கிடக்கும்*
*அந்தக் கண்காணாத இடத்தை*
*அடைய நான் ஆவல் கொள்கிறேன்*
*எனது ஒவ்வொரு காட்சியும்*
*எனது வீட்டுக்கு பிரிவு உபசாரம் கூறுகின்றது.*
*அந்தக் கண்காணாத இடத்தை*
*எனது ஒவ்வொரு அடியும் நாடி செல்கின்றது*
*அந்த இடம் ஒருக்கால்*
*அழிவை உண்டாக்குவதாக இருக்கலாம்*
*இந்த யாத்திரையில் ஏற்பட்டிருக்கும்*
*எனது சுவடுகள் திரும்ப மார்க்கத்தில்*
*என்ன பொக்கிஷங்கள் மறைந்து கிடக்கின்றனவோ*
*அல்லது என்ன ஆபத்துகள் திரண்டு கிடக்கின்றதோ*
*அந்த பாதை எங்கு போய் எப்படி முடியுமோ*
*இவைகள் ஒன்றும் எனக்கு தெரியாது*
*ஆனால் வளைந்து வளைந்து செல்லும்*
*அந்த செம்மண் பாதை என் கிராமத்தை அடுத்து*
*(அந்த என் தாய் நாட்டுப் பாதை)*
*என் மனதைக் கூவி அழைக்கின்றது.*

சாந்தி நிகேதன் யாத்திரை பறவையை போல ஓர் ஆங்கிக் கவியோ இந்திய கவியோ உலகைச் சுற்றிப் பார்த்தது கிடையாது. உலகில் எந்தப் பகுதியில் நமது கவிக்கு நாயகர் அடி எடுத்து வைத்தாலும் சரி அங்கெல்லாம் அவர் குதூக லத்துடன் உலக மக்களால் வரவேற்கப்படுகிறார்.

1931-ஆம் வருடம் நமது கவியரசர் ஐரோப்பாவுக்கு பதினொ ராவது தடவையாக பயணமானார். அப்போதுதான் அவர் ஒரு சைத்ரிகர் என்பது வெளியாயிற்று. அவர் கரங்களால் வரையப் பெற்ற உயிர் ஓவியங்களை அவர் அப்போதுதான் காட்சிக்கு வைத்தார். அவரது ஓவியத் திறமை அந்தப் படங் களில் பிரதிபலித்தது. மேல்நாட்டுக் கலை வல்லுநர்கள் அந்தத் திறமையைக் கண்டு பாராட்டினார்கள். அவர் தமது எழுபதாவது பிறந்த தினக் கொண்டாட்டத்தை பாரிஸ் மாநகரில் கொண்டாடினார். அப்போது அவரைச் சூழ்ந்து அவரது கலா நண்பர்களும் கலா ரசிகர்களும் அமர்ந்திருந் தனர். இந்தச் சமயத்தில் கல்கத்தாவில் இந்தக் கொண் டாட்டம் எப்படிக் கொண்டாடப்பட்டது என்கிறீர்கள் தெரியுமா? அங்கு தேசிய சர்வதேசிய முறையில் இக்கொண்டாட்டம் உருப்பெற்றது. அக்காலத்தில் அவரைப் பாராட்டுபவர்கள், அவரது சிஷ்ய கோடிகள், அவரது மாணவர்கள் ஆகிய வர்கள் 'தாகூரை பற்றிய தங்க நூல்' என்னும் புத்தகம் வழியாக கவியரசருக்கு தங்களுடைய மரியாதையை செலுத்திக் கொண்டார்கள்.

கவியரசர், விஸ்வ பாரதியில் ஆசிரியர்கள், மாணவர்கள் அடங்கிய பெரிய குழாத்தின் நடுவே தமது வாழ்க்கையை இது காலம்வரை கழித்துக்கொண்டு வருகிறார். அவர் யாருடனும் சௌஜன்யமாக பேசுபவர், பழகுபவர். அங்கு யாரும் அவர் அன்பிற்கு பாத்திரமானவர்களே. அதனாலேயே எல்லோரும் அவரை நேசிக்கிறார்கள். அவர் ஒரு சன்யாசி. அவர் ஒரு சன்யாசி ஆவதற்கு அஞ்சாத சன்னியாசி ஆவார். அதுமட்டுமா உலகில் நடக்கும் எந்த சாதாரணமான பொது விஷயங்களிலும் இந்த யோகி தைரியமாகப் பங்கெடுத்துக் கொள்வார். அத்துடன் அவர் ஒரு பெரிய கவிஞராகவும் இருந்து கொள்வார். அவர் உலகத்தோடு ஒட்ட ஒட்ட அவரை அந்த மானிட அன்பு சொர்க்கத்திற்கு அருகிலேயே உயர்த் திக்கொண்டு போகிறது. இத்தகைய கவிக்கு நாயகனான தாகூரின் கவிகளின் நயத்தை இன்னும் அடுத்த வாரம் தொடர்ந்து நோக்குவோம்' என கவியரசர் ரவீந்திரநாத் தாகூர் குறித்த தொடர் கட்டுரையிலே சி.வி. வேலுப்பிள்ளை குறிப் பிட்டுள்ளார்.

கவியரசர் ரவீந்திரநாத் தாகூரின் மாணவர்கள் ஒன்றுகூடி 'தாகூரை பற்றிய தங்க நூல்' என்னும் புத்தகம் வழியாக கவி யரசருக்குத் தங்களுடைய மரியாதையைச் செலுத்திக் கொண்டார்கள் எனக் குறிப்பிடும் கவிஞர் சி.வி. வேலுப் பிள்ளை, தனது பங்கிற்கு Tagore at a Glance எனும் கவிதையை எழுதி அவருக்குச் சமர்ப்பணம் செய்ததோடு அவரது இலங்கை பயணத்தின் போது தனது படைப்பான விஷ்வாஜினியை கொடுத்து ஆசி பெற்றதுபோல கவியரசர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களை வாழ்த்தி Tagore at a Glance எனும் வாழ்த்து மடலையும் வழங்கியுள்ளார். கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளையின் தாகூர் குறித்த பதிவுகளும் 'கீதாஞ்சலி' குறித்தான நினைவுகளும் தொடரும்.



thilagar@thaiveedu.com

# அஷ்ரஃப் சிஹாப்தீன் கவிதைகள்: அரசியலும் அழகியலும்

– ஜிஃப்ரி ஹாசன்



கிழக்கிலங்கையின் ஓட்டமாவடியிலிருந்து 1980-களில் உருவாகி வந்த கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீன். 1980-களில் ஈழக்கவிதையின் மொத்த பண்புகளோடும், அழகியலோடும் அவர் ஒரு கவிஞராக முகிழ்த்தார். எண்பதுகளில் எழுதத் தொடங்கியவர் என்ற வகையில், அந்தக் காலகட்டத்து ஈழக் கவிதைப் போக்கினதும், மொழி அழகியலினதும் செல்வாக்கு இவரது கவிதைகளில் பதிவாகியுள்ளது. அந்தவகையில் பார்த்தால் ஓரளவு மரபின் சாயலும், நவீனத்தின் அழகியலும் கொண்டவை இவரது கவிதைகள் என்று முடிவு செய்யலாம். பல கவிதைகளின் வாசிப்புச் சுவை (pleasure of text) மிக ஆழமானது. இந்த விடயங்கள் குறித்து இந்தக்கட்டுரையின் பிற்பகுதியில் விரிவாக ஆராயவுள்ளேன்.

1980-களில் இலங்கைக் கவிதைகள் எத்தகையை உள்ளீட்டைக் கொண்டிருந்தன என்றால் சமூகம், அரசியல், சமூகச் சிக்கல்கள், அரசியல் நெருக்கடிகள், இன வன்முறைகள், போர், ஒடுக்குமுறைகள் என பல்வேறு துன்பியல் நிகழ்வுகளையும் அவற்றை அனுபவித்த மக்களின் வாழ்க்கை அனுபவங்களையும் பாடுபொருளாகக் கொண்டிருந்தன. ஈழச் சமூகவெளியில் இருண்ட பக்கமாக இந்தக் காலகட்ட வாழ்வு அமைந்தது. இன்னொரு பக்கம், இந்த வாழ்வியல் ஈழத் தமிழ்ச் சூழலில் குறிப்பிடத்தக்க பல படைப்பாளிகளை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்தது. இந்த இருண்ட கால வாழ்வின் கசப்பான அனுபவங்களை ஈழப்படைப்பாளிகள் நம்பிக்கையுடனும், மொழி ஆற்றலுடனும் படைப்புருவாக்கம் செய்தனர். இந்த வாழ்வு ஈழத்தில் தமிழர்களுக்கு ஒருவிதமாகவும், முஸ்லிம்களுக்கு ஒருவிதமாகவும் அன்றி கிட்டத்தட்ட இருசாராருக்கும் ஒரேவிதமாகவே அமைந்திருந்தது.

இதனால் இந்த இருண்ட காலகட்ட ஈழக்கவிஞர்களின் கவிதைகள் பல்வேறு கோணங்களில் இன ஒடுக்குமுறையையும், மானுடத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளையும் தனிநபர் அனுபவங்களினதும், சமூக அனுபவங்களினதும் அடிப்படையில் பேசின. போரும் அதன் நெருக்கடிகளும் முஸ்லிம்களையும் ஊடறுத்துச் சென்ற போது போர், அடக்குமுறைகள், இன்னபிற வன்மங்கள் அனைத்துக்கும் முஸ்லிம்கள் மத்தியிலிருந்தும் தீவிர எதிர்வினையாற்றும் ஆற்றலுடன் கவிதைவெளியில் பலர் உருவாகி வந்தனர். அஷ்ரஃப் சிஹாப்தீன் இத்தகைய சூழலிருந்து, இந்தப் போக்குக்கு எதிர்வினையாக உருவாகி வந்த கவிஞர்களுள் முக்கியமான ஒருவர்.

அவரது முதல் கவிதைத் தொகுப்பான ‘காணாமல் போனவர்கள்’ தொகுப்புக் கவிதைகளை நுணுக்கமாகப் பரிசீலித்தால் இந்த உண்மையைக் காணலாம். ஈழத் தமிழ்க் கவிதைவெளியில் முஸ்லிம் சமூக அரசியல் குரலை ஆழமாகப் பதிவுசெய்த கவிதைகள் அவை. போரின் முஸ்லிம் பரிமாணம், மற்றும் முஸ்லிம் சமூக அரசியல் பண்பாட்டுச் சிக்கல்களினை கவனப்படுத்தும் முயற்சியாக இலக்கியவெளியில் அவரது கவிதைகள் அமைந்தன. இந்தத் தொகுப்பிலுள்ள அவரது ஸெய்த்தூன் என்கிற கவிதை முஸ்லிம் குரலை தனித்து எடுத்துக்காட்டிய மிக முக்கிய கவிதைகயாக அப்போது அடையாளம் காணப்பட்டது. ஸெய்த்தூன் ஈழத்தமிழ் அரசியல் மற்றும் போர்க்கவிதைப் போக்கில் முஸ்லிம் பாதை என்று தனியான பயணத்துக்கு தயாரானாலும் அதற்கு முன்னரான அவரது கவிதைகள் தமிழ்-முஸ்லிம் உறவை ஆழப் படுத்துவதாகவும், அதற்கான நம்பிக்கையை வெளிப்படுத்துபவையாகவும் அமைந்தன. இரு சமூகங்களுக்கு மத்தியில் இருந்த வரலாற்றுரீதியான பிணைப்பையும், அது தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்கிற அவாவையும் அவர் கொண்டிருந்தார்.

அவரது கவிதையில் சொல்வதானால், ஒரு **பாய்த்துண்டில் ஒன்றாய் உறங்கியவர்கள், ஒரே கலயத்தில் ஒன்றாய் உண்டவர்கள்** எந்த சூழ்நிலையிலும் தமிழர்களும்-முஸ்லிம்களும் தங்களது இருப்பை ஒற்றுமையாக வெளிப்படுத்த வேண்டும் என்பதை அவர் தீவிரமாக விரும்பி இருந்ததன் சாட்சியமாக நிற்கின்றன இந்த வரிகள்.

‘நெருடும் நினைவுகள்’ என்கிற கவிதையில் அவர் எழுதுகிறார்-

*‘சின்னஞ் சிறிய எங்கள் வீட்டைச்*
*சிதைக்க யாரும் சேர்ந்து வந்தால்*
*உதைப்பது என்று உறுதிகள் செய்தோம்...*
*இயலாமையால் இடர்பட நேர்கையில்*
*சாவது என்று சத்தியம் செய்தோம்...’*

திடீரென்று எழுந்த தீ நாக்கினால் (இலங்கை அரசியலின் சில திட்டமிட்ட அரங்கேற்றங்களால்) இவர்கள் தீண்டப்பட்ட போது தமிழர்கள், முஸ்லிம்கள் எனத் தனித்தனியே இருவேறு தேசங்களாக, துருவங்களாக இரு தரப்பாரும் மாறிய வரலாற்றுத் துயரமும் நிகழ்ந்தது. விளைவு சின்னஞ் சிறிய இவர்களின் வீடு போர்க்களமானது. அடிக்கடி புகைந்தது. தொடக்கத்தில் ஒரு கவிஞனாக அவர் கண்ட கனவு பொய்த்துப் போனது.

*‘எத்தனை தூரம் அன்பாய் இருந்தோம்*
*சின்னஞ் சிறிய எங்கள் வீட்டைச்*
*சிதைக்க யாரும் சேர்ந்து வந்தால்*
*உதைப்பது என்று உறுதிகள் செய்தோம்...*

என்ற உறுதிமொழிகள் உதிர்ந்து போயின. மோசமான நிலைப்பாடுகளை நோக்கி எல்லோரும் நகர்ந்து சென்றனர்.

‘விடுதி வளவுள் ஒரு வேம்பு’ தமிழர்-முஸ்லிம் உறவை மேலும் ஆழமாக பேசும் கவிதை. சமூக உறவு சார்ந்து அவர் கண்ட கனவின் மற்றொரு உரு இந்தக் கவிதை. விடுதியில் தங்கி இருந்து பயிலும் மாணவர்களிலிருந்து உதயமாகும் ஐக்கியத்தின் குரலை இந்தக் கவிதையில் கேட்கிறோம்.

*‘அதிகாலை எழுந்து*
*உடற்பயிற்சி செய்து விட்டு*
*தினமதிலோர் குச்சியுடைத்துக் குடைவான்*
*எங்கள் கமல்!*
*பின்னால் கணேஷ் வருவான்...*
*பல் துலக்கிக்கொண்டே*
*மதிலில் மாறி மாறி நடப்பான்*
*கண்டு கூச்சலிடுவான் நஸார்*
*நாற்றிசையும் நடுங்க.*
*பரமுக்கும், பரீதுக்கும்*
*பல்துலக்க*
*குச்சியுடைத்துக் கொடுப்பான்...’*

ஆனால், யதார்த்தத்தில் இந்தக் கனவு ஒரு கவிஞனுடையது மட்டுமல்ல. பெரும்பாலும் வடக்கு கிழக்கில் ஒரு சாமான்யனின் கனவும் அப்படித்தான் இருந்தது. போர் அரசியல் அதனைச் சிதைத்தது பற்றிய மிகப் பெரிய ஏமாற்றத்தை அவரது இந்தக் கவிதை பகிர்ந்துகொள்கிறது.

ஆனால் தீ நாக்குகள் தீண்டி உறவில் வெடிப்புகள் நிகழ்ந்த பின் கள நிலவரம் மிக மோசமானதாக மாறி வன்மம் வெளிப்பட்டது. இந்த அபத்தமான சூழலை எதிர்கொள்ளவும், மானுட நேய சூழலை ஏற்படுத்துவதற்கான எத்தனங்களையும் படைப்பாளிகள் மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தை காலம் உருவாக்கி வைத்தது. ஒரு கவிஞனாக அஷ்ரஃப் சிஹாப்தீன் இந்த உண்மையை உணர்ந்திருந்தார். அவரது ‘அறிவிப்பு’ கவிதை இதற்குச் சான்றாக இருக்கிறது. கவிதையில் கவிஞர் இந்தக் கவிதையில் சில கோரிக்கைகளை அவர் அழுத்தமாக முன்வைப்பதைக் காண்கிறோம். வரிகள் சற்றுக் கடுமையாக மாறி இருந்தன.

அவர் சொல்கிறார்-

*‘எந்தத் தெருக்களிலிருந்தும் நீ*
*என்னைத் துரத்தக்கூடாது*
*எல்லாத் தெருக்களும் எல்லோருக்கும்*
*சொந்தமானவையே...*
*வெளிச்சத்தை விட்டு விழிகளைத்*
*திருப்புமாறு நீ கேட்கக் கூடாது..*
*எனது பயணம் இருட்டை நோக்கியதல்ல’*

இத்தகைய கோரிக்கைகளை நம்பிக்கையுடன் அவர் முன்வைக்கிறார். ஒரு கவிஞன் மனிதநேயத்தை, மானுட உறவை நேசிப்பவனாகவும், பிளவை அன்றி, உறவை

நாடுபவனாகவுமே எப்போதும் இருக்கிறான் என்பதற்கான சமிக்ஞைகளை மேலும் அவரது கவிதைகளுக்குள்ளிருந்து கண்டுகொள்ள முடிகிறது. ஒரு கவிஞனாக அவர் காண விரும்பிய சமூக உறவு பெரியவர்கள் அவருக்கு ஏமாற்றமளித்தாலும் குழந்தைகளிடம் அவர் ஒரு நிறைவைக் காண்கிறார். அது எதிர்காலத் தலைமுறையின் மீது அவர் கொண்டிருந்த உறுதியான நம்பிக்கையை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

‘குழந்தைகளுக்கு மாத்திரம்’ என்கிற கவிதைக்குள் அவரது நம்பிக்கையின் குரலைக் கேட்கலாம். உதயதேவி ரயிலில் ஏறி கவிஞர் பயணம் செய்யும் நாளொன்றில் புகையிரத நிலையத்தில் ஒரு குழந்தை அவரைப் பார்த்து கையசைக்கிறது. கவிஞருக்குள் அந்த கையசைப்பு கிளர்த்தும் உணர்வுகள் இன முரண்பாட்டுச் சூழலில் வாழ நேர்ந்த ஒட்டுமொத்த மனித குலத்துக்கும் உரைத்த பாடமாகத் தோன்றுகிறது.

‘அதிகம் செய்த பயணங்களிலே
அனேக கைகளின் அசைவைக் கண்டவன்...
அவற்றுக்கெல்லாம் அளித்த பதில்கள்
காற்றுடன் அன்றே கலைந்து போயின...
ஆனாலும் சிறு மனித அரும்பே,
விநோதப் பார்வைகள் வியூகம் வகுக்க
உன்றன் சின்னக் கையின் அசைவில்
உன்றன் மலர்ந்த முகத்துச் சிரிப்பில்
பொருளைத் தேடிப் புதைந்து மீண்டேன்!
யாரோ எழுதிய புதிய கவிதை நீ-
எந்த இனத்துச் செடியின் மலரோ?
காற்றை அறுத்துக் காற்றாய்ப் பறக்கும்
கடுகதி ரயிலில் நீ கண்டவர் யாரும்
இரத்த உறவோ இனத்து உறவோ
இருத்தல் இயலா...
இருந்தாலும் நீ இனம் பிரித்தறியாய்...
இழித்து விலக்காய்...
ஆனாலும் நீ கள்ளம் இன்றிக் கனியச் சிரித்தாய்
ரோசாச் செண்டாய் கையை அசைத்தாய்!...’

அந்தக் குழந்தை ஏன் கையை அசைத்தது? என்கிற கேள்வியை அவரது கவிதை மனம் ஆழமாகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறது.

‘உனது தாயைத் தந்தையைப் போல
உனது சூழலில் உள்ளவர் போல
மனித முகங்களைக் கண்டாய்
அதனால் சந்தோஷத்தைச் சமாதானத்தை
நெஞ்சில் இருந்து நிறையக் களித்து
கையில் ஏந்தி காற்றில் அசைத்தாய்...’

இந்த மகத்தான தருணத்தை, நிகழ்வைத்தான் சதாவும் அவரது மனம் கோருகிறது. இது குழந்தைகளிடமிருந்து மட்டுமன்றி பெரியவர்களிடமிருந்தும் வெளிப்பட வேண்டும் என்பதேயே ஒரு கவிஞனாக அஷ்ரஃப் சிஹாப்தீன் காண விரும்புகிறார். அவரது நெருப்பு யுகங்கள் கவிதையில் அவர் சொல்வதைப் போல...

‘இன்னும் சில காலத்தில்
இலங்கை மண்ணில் எங்கு வெட்டினாலும்
இரத்தம் ஊறும்!
இங்கே-
வீடுகளைக் கொளுத்துவதும்
மனிதர்களைத் துண்டாடுவதும்
பள்ளிக்கூடத்தில் படித்துக் கொடுக்கப்படாத
பரம்பரைப் பாடமாகிவிட்டது!...’

இந்தப்பாடம் கற்றுத் தந்த பாடம் இலங்கையர் எவருக்கும் மறக்க முடியாதது. புரிந்துணர்வை நோக்கிய ஓர் அழைப்புப் போன்றது இந்தக் கவிதை.

(தொடரும்...)



jiffry.hassan@thaiveedu.com



# ஒரு நூலின் உருவாக்கம்

## ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல்

18

- என். செல்வராஜா

இத்தொடர் முன்னர் 'ஈழத்தவரின் சமகால நூல்வெளியீடுகள்: ஒரு நூலியல் சார்ந்த பார்வை' என்ற தலைப்பில் பதினாறு மாதங்களாக ஞானம் சஞ்சிகையில் இதழ் 183-இல் தொடங்கி இதழ் 198 வரையில் வெளிவந்திருந்தது. ஒகஸ்ட் 2015 முதல் நவம்பர் 2016 வரையில் இடம்பெற்ற இத்தொடர், ஈழத்தின் தமிழ் எழுத்தாளர்களிடையே நூலொன்றை ஒழுங்குபடுத்தும் முறை பற்றிய பல்வேறு தகவல்களைத் தருகிறது. எம்மவரால் வெளியிடப்பெற்ற நூல்கள் குறித்த தகவல்களை உதாரண விளக்கங்களுடன் முன்வைக்கும் இந்நூல் இத்துறையில் முன்னோடியாக ஒரு சிந்தனைப் பாதையினை அமைத்திருந்தது. இத்தொடரினைத் தொடர்ந்து ஈழத்துத் தமிழ் வெளியீட்டுத் தளத்தில் இரண்டு நூல்களின் வருகையைக் காணமுடிந்தது. இவை இந்நூல் பேசும் விடயத்தை வெவ்வேறு கோணங்களில் வாசகர்களிடம் கொண்டுவந்து சேர்த்தன. எனது கட்டுரைத் தொடரின் இறுதிக்கட்டத்தை நெருங்கியிருக்கிறேன். கடந்த 17 இதழ்களில் தொடர்ச்சியாக வாசித்து முடித்திருக்கும் உங்களுக்கு அவ்விரு நூல்களையும் வாசிக்கும் ஆர்வமும் ஏற்படக்கூடும்.

நூல் ஒன்றை ஒழுங்குபடுத்தும் முறை என்ற முதலாவது நூல், இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் வெளியீடாகும். 1-வது பதிப்பு, 2016-இல் வெளிவந்திருக்கிறது. (viii, 9-39 பக்கம் விலை: ரூபா 150., அளவு: 21x14 சதம மீற்றர் (cm) ISBN: 978-955-7544-08-)

நூல் ஒன்றின் ஆரம்பப் பக்கங்கள், உள்ளடக்கம், அதைத் தொடர்ந்துவரும் பக்கங்கள் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதற்கானதொரு சுருக்க வழிகாட்டியாக இதனை எழுதியிருக்கிறார்கள். ஒரு தேசிய நூலகம் என்ற வகையில் இவ்வமைப்பு வழங்கும் ஆலோசனைகள் வெளியீட்டாளர்களால் கருத்துக்கெடுக்கப்படவேண்டியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. ஆரம்பப் பக்கங்கள், உள்ளடக்கப் பகுதி, பின்னிணைப்புப் பக்கங்கள், எழுத்துக்களின் அளவு, பக்கங்களுக்கு இலக்கமிடல், வெளிப்புற அட்டை தயாரித்தல் ஆகிய ஆறு பிரதான இயல்களில் இந்நூல் விளக்கப்பட்டுள்ளது. தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் நிதி உதவியுடன் தமது நூலை அச்சிட்டு வெளியிட விரும்பும் எமது தமிழ்ப் படைப்பாளிகள் கைகளில் இந்தக் கைந்நூல் இருப்பது நல்லது. இந்நூல் தேசிய நூலக நூல் விற்பனை நிலையத்தில் விற்பனைக்குள்ளது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை (தேசிய நூலகம்) விண்ணப்பங்களின் மூலம் இலங்கைப் படைப்பாளர்களின் கையெழுத்துப் பிரதிகளைப் பெற்றுப் பார்வையிட்டு அவர்கள் தேர்ந்தெடுக்கும் நூல்களின் அச்சீட்டுச் செலவின் கணிசமான பங்கைப் படைப்பாளிகளுக்கு வழங்குகின்றது. இதனால் தென்னிலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகள் பலர் தொடர்ந்து நன்மையடைந்து வருகின்றார்கள். வட-கிழக்கில் உள்ள எழுத்தாளர்களில் ஒரு சிலரின் நூல்களும் இத்திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளன. கையெழுத்துப் படிகளை அனுப்பும் படைப்பாளிகளின் நன்மை கருதி தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினர் கையெழுத்துப் பிரதியை எவ்வாறு தம்மிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற சில சிறப்பு நடைமுறைகளை இக்கைந்நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். அதனை சுருக்கமாக இங்கு தருகின்றேன்.

**தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை (தேசிய நூலகம்) விண்ணப்பங்களின் மூலம் இலங்கைப் படைப்பாளர்களின் கையெழுத்துப் பிரதிகளைப் பெற்றுப் பார்வையிட்டு அவர்கள் தேர்ந்தெடுக்கும் நூல்களின் அச்சீட்டுச் செலவின் கணிசமான பங்கைப் படைப்பாளிகளுக்கு வழங்குகின்றது.**

- நூலுக்கு உபதலைப்பு அல்லது சமாந்தர நூல் தலைப்பு (Half Title Page) இருந்தால் அதை நூலின் பிரதான தலைப்புப் பக்கத்திலிருந்து இலகுவாக வேறுபடுத்தி இனம்கண்டு கொள்ளத்தக்க வகையில் அச்சிடவேண்டும் என்கிறார்கள். இப்பக்கத்தின் நடுப்பகுதியில் ஓரளவு உயரத்தில், நூலின் தலைப்பைக் குறிப்பிடுமாறும், மேலிருந்து கீழ்நோக்கியோ, கீழிருந்து மேல்நோக்கியோ நூலின் தலைப்பினைக் குறிப்பிடக் கூடாது என்கிறார்கள்.

- இந்த உபதலைப்பின் பின்புறத்தில் குறிப்பிட்ட நூலின் ஆசிரியரது பிற நூல்கள் 'ஆசிரியரின் ஏனைய நூல்கள்' என்ற தலைப்பின்கீழ் வெளியீட்டு ஆண்டு கால ஒழுங்கில் (Chronological order) நூல்தலைப்பு, வெளியிட்ட ஆண்டு ஆகிய தகவல்களுடன் குறிப்பிடவேண்டும் என்கிறார்கள். இப்பக்கத்தை நூலாசிரியர் பக்கம் அல்லது விளம்பரப் பக்கம் என்று குறிப்பிடுகிறார்கள்.

- தேசிய நூலக அனுசரணையுடன் அந்நூல் வெளியிடப்பட்டிருந்தால் தலைப்புப் பக்கத்தின் பின்பக்கத்தில் (Verso Page) கீழ்க்கண்டவாறு 10 பொயின்ட் அளவுள்ள எழுத்தில் குறிப்பிடப்படவேண்டும் என்கிறார்கள்.

  ‘இந்நூலானது தேசிய நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டதாகும். இதன் உள்ளடக்கமானது சபையின் எண்ணக்கருத்தை எடுத்துக்காட்டுவதாக அமையாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.’

- நூலின் ஒரு பகுதியை பிரதிபண்ணுவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விபரத்தையும் இப்பக்கத்தில் குறிப்பிடும்படி கோரும் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினர் அதனை 6-8 பொயின்ட் எழுத்துருவில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடக் கோருகின்றார்கள்.

  ‘இந்நூலின் பதிப்புரிமை நூலாசிரியரைச் சார்ந்ததாகும். நூலாசிரியரின் எழுத்துமூல அனுமதியைப் பெறாமல் இதில் எதையும் எந்த முறையிலும் பிரதிபண்ணுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்’

- ஐ.எஸ்.பீ.என். (ISBN) இலக்கம் குறிப்பிடப்படும் பொழுது அது 12 பொயின்ட் எழுத்துக்களில் நூலின் பின்னட்டையில் வலது புறத்தில் கீழிருந்து ஒரு அங்குல உயரத்தில் பதிவுசெய்யப்படுவதுடன், வேர்சோ பக்கத்திலும் 12 பொயின்ட் எழுத்துக்களில் குறிப்பிடப்படவேண்டும் என்கின்றனர்.

- நூலின் வேர்சோ பக்கத்தில் இடம்பெறும் பட்டியல் அட்டையை (Cataloging in Publication - CIP Data) தேசிய நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையின் பட்டியலாக்கப் பிரிவில் பெற்றுப் பதிவுசெய்யலாம் என்கின்றனர். இத்தகவலை 8x4 சதம மீற்றர் அளவில் அமைந்த பெட்டிக்குள் 8 பொயின்ற் அளவிலான எழுத்துருவில் அச்சிட வேண்டும் என்கின்றனர்.

- நூலின் விடயங்கள் என்ன ஒழுங்கில் அச்சிடப்படவேண்டும் என்பதையும் இந்நூலில் அவர்கள் குறிபபிட்டுள்ளனர். அவ்வகையில்:

  - சமர்ப்பணம் - சுருக்கமாகவும் எளிமையாகவும் எடுத்துக் காட்டப்படவேண்டும். இப்பக்கத்தில் வேறு விபரங்களைக் குறிப்பிடலாகாது. இப்பக்கத்துக்கு மறுபக்கம் வெற்றுப்பக்கமாக இருத்தல் வேண்டும்.
  - முகவுரை / முன்னுரை - இது நூல் பற்றிய இலக்கிய ஆய்வுரையாகும். இதை நூலாசிரியரின் வேண்டுகோளுக்கிணங்க அத்துறையில் குறிப்பிடத்தக்க துறைசார் அறிஞர் ஒருவர் எழுதியிருப்பார். முகவுரையை எழுதிய நபரின் பெயர், முகவரி, திகதி போன்றவற்றை முகவுரையின் இறுதியில் குறிப்பிடவேண்டும். தேவை ஏற்படின் மின்னஞ்சல் முகவரி மற்றும் இணையத்தளத்தையும் குறிப்பிடலாம்.
  - அறிமுகம் - இது நூலாசிரியர், பதிப்பாசிரியர், மொழிபெயர்ப்பாளர் அல்லது தொகுப்பாசிரியரினால் எழுதப்படுவதுடன் நூலை எழுதுவதற்குப் பின்புலமாக அமைந்த விடயம் மற்றும் அதற்கு உதவிய நபர்கள் பற்றிய விபரங்களும் இதில் உள்ளடக்கப்படும். அறிமுகம் ஒரு பக்கத்திலோ அல்லது இரு பக்கங்களிலோ அமைவது பொருத்தமாக இருக்கும்.
  - பொருளடக்கம் - முன்னுரை, அறிமுகம் மற்றும் ஏனைய அத்தியாயங்களின் தலைப்பு மற்றும் அவற்றின் பக்க இலக்கங்கள் என்பன இங்கு குறிக்கப்படும். பிரதான அத்தியாயம், உப அத்தியாயம் போன்றவற்றை விபரமாக பொருளடக்கப் பக்கத்தில் காட்டுவது மிகவும் பொருத்தமானது என்கின்றனர். தேசப்படங்கள், புகைப்படங்கள், வரைபடங்கள் போன்றவற்றை பக்க எண்களுடன் புறம்பாக பொருளடக்கப் பக்கத்தில் குறிப்பிடவேண்டும் என்கின்றனர்.

தேசிய நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையின் இந்நூலில் பக்க வடிவமைப்பு பற்றியும், பக்கங்கள் எண்ணிடல் பற்றியும் பக்கத்தின் கரைகளின் நீள அகலங்கள் பற்றியும் சில வரையறைகளைக் குறிப்பிட்டுள்ளனர். இவை யாவும் தமது அனுசரணையுடன் வெளியிடப்படும் நூல்களுக்கு விதிக்கப்பட்ட வரன்முறையாகக் குறிப்பிடுகின்றனர்.

ஒரு நூலின் மகத்துவம்: தரமான நூலொன்றை ஒழுங்கமைப்பதற்கான வழிமுறைகள் என்ற தலைப்பில் *புஷ்பகுமார விதானகே* என்பவர் சிங்கள மொழிமூலம் வெளியிட்டுள்ள நூலினை *லறீனா அப்துல் ஹக்* அவர்கள் தமிழாக்கம் செய்திருக்கிறார்கள். இதுவும் கொழும்பு, குமரன் புத்தக இல்ல வெளியீடாக 2017-இல் வெளிவந்தது. (xvi, 61 பக்கம், விளக்கப்படங்கள், விலை: ரூபா 350., அளவு: 21.5x14.5 சதம மீற்றர் ISBN: 978-955-659-569-7).

அழகும் நேர்த்தியும் கொண்ட தரமான நூலொன்றை உருவாக்குவதற்கான வழிமுறைகளை இந்நூல் வழங்குகின்றது. நூலின் முதற் பக்கங்கள், நூலின் உள்ளடக்கம், நூலின் பின் பக்கங்கள், நூலின் கட்டமைப்பு ஆகிய நான்கு அத்தியாயங்கள் கொண்ட இந்நூலின் முதலாவது அத்தியாயம்,



நூலொன்றின் முன்பக்கங்களில் இடம்பெறவேண்டிய அம்சங்கள் தொடர்பாகவும், இரண்டாவது அத்தியாயம், நூலின் உள்ளடக்கத்தின் தரத்தினை நிர்ணயிப்பதில் கவனத்திற்கொள்ளவேண்டிய அம்சங்கள் குறித்தும் வாசகருக்குத் தேவையான வழிகாட்டலைப் பெற்றுத்தருகின்றது. மொழிநடை, சொற்றொகுதி, உறுதிப்பாடு எனும் அம்சங்கள் குறித்து அதிகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மூன்றாவது அத்தியாயத்தில் உள்ளடக்கத்தோடு பொருந்தும் வகையில் இணைக்கப்பட வேண்டிய பின் பக்கங்கள் யாவை என்பது பற்றித் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது. நான்காவது அத்தியாயத்தில் பௌதீக ரீதியில் ஒருநூல் சக்திவாய்ந்ததாக, நீண்டகால இடையறாத பாவனைக்கு ஏற்ற வகையில் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது பற்றியும் சர்வதேசத் தரநிர்ணய நியமங்களுக்கு அமைவாக அதனை எவ்வாறு அச்சிடுவது என்பது குறித்தும் உரிய உதாரணங்களுடன் விளக்கப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையினைச் சேர்ந்த புஷ்பகுமார விதானகே, கல்வி அமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்திப் பிரிவில் உதவிப் பணிப்பாளராகப் பணியாற்றி வருகின்றார். கொழும்பு இசிப்பத்தான கல்லூரியின் முன்னாள் அதிபரான இவர், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தனது கல்வியியல் முதுமாணிப் பட்டத்தினையும் நூலகவியல் பட்டப்பின் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றவர். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றுகின்றார்.

மேற்கண்ட இரு நூல்களும், இலங்கையில் தமிழ்மொழியில் நூல்களை எழுதும் எழுத்தாளர்களுக்கும் வெளியீட்டாளர்களுக்கும் மேலதிகமாக சில தகவல்களைத் தரக்கூடும்.

எனது முக்கிய நோக்கம், ஈழத்துப் படைப்புலகத்தின் நூல் வடிவமைப்பு, நூலுருவாக்கல், வெளியீடு பற்றிய போதிய தகவல்களை வழங்குவதாகும். இத்தகவல்கள் அடிப்படையானவை. அழகியல் நோக்கம் கருதி சிற்சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், அடிப்படைத் தகவல்களை ஒவ்வொரு நூலிலும் இடம்பெறச் செய்யவேண்டியது ஆசிரிய / வெளியீட்டாளரின் மிக முக்கியமான கடமையாகும்.

பதிப்பகங்கள் அதனைப் பார்த்துக்கொள்ளும் என்று வாளாவிருப்பது தவறாகும் பெரும்பாலான அச்சக உரிமையாளர்கள் தொழில்நுட்ப ரீதியில் அச்சுத் தொழிலைக் கற்றோ, பயிற்சிபெற்றோ இருப்பார்கள். ஒரு நூலை எவ்வாறு அத்தியாவசிய தகவல்களுடன் உருவாக்குவது என்பது தொடர்பான பயிற்சியையோ அனுபவத்தையோ அவர்கள் நிச்சயமாகக் கொண்டிருப்பார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்காதீர்கள். உங்கள் தேவை எதுவென்று திட்டவட்டமாக அறிந்துகொண்ட பின்னரே பதிப்பகங்களை நாடவேண்டும். மேலதிகமாக அவர்களது ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதென்பது படைப்பாளிகளின் சொந்த விருப்புவெறுப்புக்கேற்ப தீர்மானிக்கப்படுபவை.



selvarajah.n@thaiveedu.com



# கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்

3

நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

திராவிட மொழிக் குடும்பத்தின் பண்புகள் என்று பார்க்கின்றபோது முதலில் திராவிட மொழிக் குடும்பத்தினைத் தென் திராவிடம், நடுத்திராவிடம், வடதிராவிடம் என மூன்று வகைப்படுத்தி ஒவ்வொன்றின் பண்புகளையும் அதனுள் உள்ளடக்கப்படும் மொழிகளையும் இம்மூன்றும் எவ்வாறு நில அடிப்படையில், காலநிலை அடிப்படையில் வேறுபட்டு நிற்கின்றன என்பதை மிகத்தெளிவாக மொழியியல் அறிஞர்கள் விளக்கி உள்ளனர். இம்மூன்று பிரிவிற்கும் அடிப்படையாக உள்ள திராவிட மொழிகளின் சில பொதுப் பண்புக் கூறுகள் மொழியியலாளர்களால் எவ்வாறு கூறப்பட்டுள்ளன என்று பார்க்கின்ற போது: பல்வேறு மொழிகள் தனிநிலை மொழிகளாகவும் (சீனம்) (synthetic Languages) பகுப்பு நிலை மொழி(Analytical Languages)களாகவும் (ஐரோப்பிய) அமைய திராவிட மொழிகள் மட்டும் ஒட்டுநிலை மொழிகளாக (Agglutinative Languages) காணப்படுகிறது. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று காலத்தைக் காட்டும் உருபுகளும், ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின் பால், பலர்பால் என பாலைக் குறிக்கும் விகுதிகளும் வினையடிகளுடன் சேர்ந்து வருகின்றன. அவை தனித்து வருவது இல்லை என்பது திராவிட மொழிக்கான பண்பாகவும் சிறப்பாகவும் பார்க்கப்படுகின்றன.

**உ+ ம்:**

| | |
|---|---|
| வந்தான் | - வா+ ந் + த் +ஆன். |
| வா | - வினையடி |
| ந் | - சந்தி |
| த் | - காலம் காட்டும் உருபு |
| ஆன் | - ஆண்பால் |

சொற்களின் முக்கிய பகுதி வேர்ச்சொல் (Root Word) அடிச்சொல் (Basic Vocabulary) எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களைப் பரிசீலித்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக அமைந்துள்ளது. வழக்கில் அதிகமாக பயன்பாட்டில் வரும் பொருட்களைக் குறிக்கும் அடிப்படைச் சொற்கள் மொழிக்கு மொழி மாறுபட்ட போதிலும் திராவிட மொழிகள் அனைத்திலும் அவை பொதுவாக மாறாமல் ஒன்று போல் அமைகின்றன.

**உ+ ம்:**

| | |
|---|---|
| அடிச்சொல் | - திராவிட மொழிகள் |
| கண் | - தமிழ் |
| கண்ணு | - மலையாளம் |
| கன்னு | - தெலுங்கு |
| ஃகன் | - குரூக் |
| கென் | - பர்ஜி |

அது போல எண்ணுப்பெயர்களும் அனைத்து திராவிட மொழிகளிலும் அதிக மாறுதல்களின்றி ஒன்று போலவே காணப்படும்.

**உ+ ம்:**

| | |
|---|---|
| மூன்று | - தமிழ் |
| மூனு | - மலையாளம் |
| முன்னு | - தெலுங்கு |
| மூறு | - கன்னடம் |

ஆங்கிலம் போன்ற மொழிகளில் பெரும்பாலான சொற்கள் மெய்யொழுத்துகளை கொண்டே முடியும். ஆனால் திராவிட மொழிகளில் அதிகமான சொற்கள் உயிரொழுத்துகளை கொண்டே முடிகின்றன. மெய்யைக் கொண்டு முடியும் சொற்கள் கூட ஒலித்துணையாக உயிரைப் பெற்று நிற்கின்றன.

**உ+ ம்: நாள் - நாளு**

- திராவிட மொழிச் சொற்கள் நாமடி ஒலியங்களைக் கொண்டு தொடங்குவதில்லை. (ண, ட, ன)
- திராவிட மொழிச் சொற்கள் மருங்கொலிகளைக் கொண்டு தொடங்குவதில்லை. (ழ, ள, ல)
- திராவிட மொழிச் சொற்கள் வல்லொலியங்களைக் கொண்டு முடிவதில்லை. (க, ச, ட, த, ப, ற)
- திராவிட மொழிச் சொற்களில் மொழி முதலிலும் மொழி இறுதியிலும் மெய்மயக்கம் வருவதில்லை. ஆனால் இடையில் மெய்மயக்கம் வரும். புல் + தரை -புற்றரை இதில் ல் மற்றும் த் ஆகிய இரண்டு மெய் எழுத்துகள் சேர்ந்து 'ற்' என்ற மெய் எழுத்து உருவாகிறது.
- உலக மொழிகள் எத்தனையோ இருந்த போதிலும் 'ழ' எனும் ஒலியன் தமிழ், மலையாளம் ஆகிய இரண்டு திராவிட மொழிகளில் மட்டுமே தற்போது காணப்படுகிறது.



- திராவிட மொழிகளில் உயிர் எழுத்துக்களில் குறிலும் நெடிலும் அடிப்படை ஒலியன்களாக உள்ளன. இக்குறில் நெடில் ஒலியங்கள் பொருளை வேறுபடுத்தி நிற்கின்றன. உ+ ம் மலை, மாலை
- வாக்கிய அமைப்பை பொறுத்த வரை எழுவாய், செயற் படுபொருள், வினைச்சொற்கள் வாக்கியத்தின் எந்த ஓர் இடத்தில் நின்றாலும் பொருள் மாற்றம் ஏற்படுவதில்லை. உ+ ம் இராமன் இராவணனைக் கொன்றான்.

## திராவிட மொழிக் குடும்பத்தின் முப்பெரும் பிரிவுகள்:

மொழிநூல் அறிஞர்கள் திராவிட மொழிகளை அவை பேசப் படும் இடத்தின் அடிப்படையிலும், அவைகளுக்கிடையே காணப்படும் அடிப்படைப் பண்புகள் மற்றும் பொதுமைப் பண்புகளின் அடிப்படையிலும் அம்மொழிகளை நிலப் பரப்பின் அடிப்படையில் வகைப்படுத்தினர். அந்த வகை யில் திராவிட மொழியினை

1) தென் திராவிட மொழிகள்
2) நடுத் திராவிட மொழிகள்
4) வட திராவிட மொழிகள்

என மூன்று வகையாக திராவிட மொழிக் குடும்பத்தின் மொழிகளை வகைப்படுத்தினர்.

## தென் திராவிடம்:

தென் திராவிட மொழிகளில் தமிழ், மலையாளம், கன்னடம், படகா, துளு, கொடகு, இருளா, கோடா, தோடா என ஒன்பது மொழிகள் உள்ளடங்குகின்றன. இத்தென் திராவிட மொழி கள் ஒன்பதில் தமிழும் மலையாளமும் மிகத் தொன்மையான காலத்தில் பிரிந்ததால் ஒன்றோடு ஒன்று நெருக்கமான உறவுடையனவாக உள்ளன. தமிழ், மலையாளத்திற்கு அடுத்த நிலை கோடா, தோடா போன்ற மொழிகள் நெருங் கிய உறவு கொண்டுள்ளதாக பேராசிரியர் எமனோ அவர் களது கருத்தினை எல்.வி இராமசாமி ஐயர் மறுத்து கொடகு மொழியே தமிழ், மலையாள மொழிக்கு அடுத்த நிலையில் உள்ளது என்று நிலைநாட்டினார். தென் திராவிட மொழி களுள் துளு மொழி ஏனைய மொழிகளிலிருந்து வேறுபடு வதால் இம்மொழியினை நடுத்திராவிட மொழிகளோடு இணைத்துவிட வேண்டும் என்று பேராசிரியர எமனோ அவர் களும், பேராசிரியர் பி. எச். கிருஷ்ணமூர்த்தி அவர்களும் கூறிய கருத்தினை பேராசிரியர். பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் மறுத்து துளு ஒரு தென் திராவிட மொழி என்றும் மூலத்திராவிட மொழியிலிருந்து துளு முதலில் பிரிந்த காரணத்தால் தமிழ், மலையாளம் போன்ற மொழிகளி லிருந்து வேறுபடுகின்றது என்றும் விளக்கிக் கூறினார்.

## தென் திராவிட மொழிகளின் சிறப்புகள்:

தென் திராவிட மொழிகளின் பொதுவான சிறப்புகள் என்று பார்க்கின்ற போது

- பெயர்ச்சொற்கள், பாலினம், எண், வேற்றுமை என்பவற்றையும், வினைச்சொற்கள் காலம், திணை, எண் மற்றும் பால் ஆகியவற்றைக் குறிக்கின்றன.
- தென் திராவிட மொழிகளில் சில ஒலிகள் பொதுவானவை. ஆனால் சில ஒலிகள் இடத்திற்கு இடம் வேறபடுகின்றன. உ+ம் தமிழ் மொழியிலுள்ள 'ழ' மற்றும் 'ற' போன்ற ஒலிகள் சில தென் திராவிட மொழிகளில் இல்லை.
- பல சொற்கள் பொதுவானாக இருந்தாலும் ஒவ்வொரு மொழியிலும் பிரத்தியேகமான சொற்கள் உள்ளன. உ+ம் தமிழ் மொழியிலுள்ள சில சொற்கள் கன்னடம் அல்லது மலையாளத்தில் வேறு வடிவங்களில் காணப்படுகின்றன.
- ஒரு சொல் மெய்யொலியைக் கொண்டு முடியுமென்றால் அச் சொல்லுக்கு ஒலித்துணையாக அது உகர ஒலியைப் பெறுகின்றது. இத்தகைய ஒலியினை ஒலித்துணை உயிர் என்பர். உ+ம் பால் - பாலு தேன் - தேனு
- தென் திராவிட மொழிகளுள் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் வரும் 'இ'கர 'உ'கர ஒலிகள் தெலுங்கு கன்ன டம் போன்ற மொழிகளில் 'எ'கர 'ஒ'கர ஒலிகளாக மாறி விடுகின்றன. உ+ம் இலை - எலை உரல் - ஒரல்
- தென் திராவிட மொழிகளிலும், வட திராவிட மொழிகளி லும் மூலத் திராவிட வேற்றுமை ஏற்கும் வடிவங்களான யன், யம் என்பவை என், எம் என்று மாறிவிடுகின்றன.
- ஏனைய திராவிட மொழிகளில் இறந்தகால இடைநிலை கள் மிகக் குறைவாக உள்ளன. ஆனால் தென் திராவிட மொழிகளில் மூலத் திராவிட இடைநிலைகளான த், ந்த், த்த் எனும் இடைநிலைகள் காணப்படுகின்றன.
- வியங்கோள் விகுதிகளைப் பொறுத்த வரையில் 'க' எனும் விகுதி தென் திராவிட மொழிகளில் மட்டுமே உள்ளது.
- 'ண், 'ள்' ஆகிய வளைநா ஒலிகள் தென் திராவிட மொழிகளில் மட்டுமே விளக்கமாக உள்ளன. ஏனைய மொழிகளில் அவை திரிந்தும் மயங்கியும் காணப்படு கின்றன.

இவ்வாறான பல்வேறுபட்ட பொதுப் பண்புகளை தென் திராவிட மொழிகள் தன்னகத்தே கொண்டு காணப்படு கின்றன.

(தொடரும்...)



nageswary@thaiveedu.com



## வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக

# காமன் கூத்து

- அருணாசலம் லெட்சுமணன் -

08

காமன்கூத்தில் இந்திரனின் தூதோலையை மதனின் கரங்களில் ஒப்படைக்கும் தருணமாக அமையும் காட்சிகள் ரசிக்கத்தக்கவகையில் அமைந்திருக்கும். காமன் கூத்து இடம் பெறும் களத்தில் ரதி மதன் ஆட்டத்தை நிறைவு செய்யும் நிலையில் தூதுவரின் வருகை களத்தை விறுவிறுப்பாக்கும். காமன் கூத்து இடம் பெறும் வெளியில் தூதனும் மதனும் அருகருகே இருக்கும் காட்சி இடம்பெறும். கதையோட்டத்தில் மதனின் அரண்மனையில் இடம்பெறும் இக்காட்சி பொது வெளியில் இடம் பெறுகிறது. காமன் மாஸ்டர் பாட்டிசைத்து மதன் தூதனுக்கு இடையிலான உரையாடல் பாங்கினை நெறிப்படுத்துவதை அவதானிக்கலாம். தூதன் மிக அமைதியாக வர வேண்டிய களம் என்ற போதிலும் மிக ஆக்ரோசமாக ஆடி வருவதும், தூதனின் அருளைக் கட்டுப்படுத்தும் நோக்கம் கருதி தூதன் வேடமிட்டவரை சூழ்ந்து பிடித்து வரும் செயற்பாடும் இடம்பெறும். அவ்வாறே தூதனின் மருள் ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் மதனுக்கும் மருள் வந்துவிடும். இதனைப் பார்த்துக்கொண்டிருக்கும் சபையோருக்கும் மருள் வந்துவிடும். ஏலவே தூதன் வேடத்தை தரித்தவர்களுக்கு இவ்வாறு மருள் வருவதுண்டு. திருநீறு அணிவித்து அவர்களைக் கட்டுப்படுத்தும் செயற்பாடு மிகுந்த பரப்பரப்பிற்குரியதாக அமையப்பெறும். தூதன் வேடமிட்டவரின் மருள் நிலையைக் கட்டுப்படுத்தி அவரின் உடலில் அணிவித்திருந்த பந்தங்களைக் கழட்டி அவரைச் சாதாரண நிலைக்கு கொண்டு வருவதற்கு மிகுந்த சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும். பந்தங்களை மிக இலாவகமாக உடம்பில் இணைத்திருக்கும் நுட்பம் அவதானத்திற்குரியதாகும்.

தூதனின் வெளியேறுகையின் பின்னர் மதன், ரதியின் ஆட்டம் தொடங்கப்பெறும். இந்திரலோகமே தனது சிறப்பை அறிந்து தன்னை அழைத்திருக்கும் நிலையால் மதன் மகிழ்வு கொள்கிறான். அந்த மகிழ்ச்சி நிலையை ரதியிடம் முன் வைக்கும் முனைப்பு தொடர்கிறது. அண்மையில் இல்லற பந்தத்தில் இணைந்த நிலையில் தன்னை இருத்தி விட்டு பயணிப்பதை ரதி அனுமதிக்கமாட்டாள் எனத் தெரிந்தும் ரதியிடம் மிக நாசூக்காக இவ்விடயத்தை எடுத்துரைப்பதை அறிய முடிகிறது. அவ் விடயத்தை எடுத்துக் கூறும் பாடல் பின்வருமாறு ஒலிக்கப்படுகிறது.

***‘ஆரநத்தி காரநத்தி சீரநத்தி நாரநத்தி***
***அம்பாள் ஜெகதாம்பாள் மீனாம்பாள் சாரதாம்பாள்***
***ஆதிசக்தி பத்தினியாள் ஜோதி கதிநின்று***
***அம்பிகை பெண்வாளையவள் இன்பமுடன் ஈன்றெடுத்த***
***அரிவையே சிகாமணியே பரிவையே சிரோன்மணியே***
***அழகு மனோன்மணியே திகழுமென் கண்மணியே***
***அன்னமே ரதிக்கிளியே வர்ணமயிலே வுனது***
***அதைத்தசித்ர ஆபத்தைநான் மதித்துக்கவி***
***சொல்வனடி...’***

என மன்மதன் சார்பான குரலாக காமன் மாஸ்டரின் குரலில் பாடல் இசைக்கப்படும். அப்பாடல் ரதியின் உடல் அங்கங்களின் அழகு குறித்த முன்வைப்புகளைக் காணலாம். ரதியின் கூந்தல் பூத்துக் குலுங்கும் கொன்றை மரத்துக்கு உவமிக்கப்படுகிறது. கொன்றை மஞ்சள்நிற பூக்களைப் பூக்கச் செய்யும் மரமாகும். முல்லை நிலத்துக்குரிய தாவரமாக விளங்கும். கொன்றை மரத்துப் பூக்களைச் சிவனும் சூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்விடயத்தை வலியுறுத்தும் வகையில் ‘மின்னார்செஞ்சடை மேல் மிளிர் கொன்றை அணிந்தவனே’ என்ற சுந்தரரின் சித்திரிப்பும் கவனத்திற்குரியதாகும். ஏப்ரல், மே மாதங்களில் பூத்துக் குலுங்கும் இத்தாவரம் மூலிகையாகவும் பயன்படுத்தப்படுகிறது. ரதியினது நெற்றி புருவத்தின் அழகை மூன்றாம் பிறைக்கு உவமிப்பதோடு, உண்ணுவதும் தெரியாத வகையில் மெதுவாக மெல்லும் குறைவாக பேசும் ரதியினுடைய இதழ் குறித்தும் மதன் சார்பான குரல் ஒலிக்கும். நாசி முதல், செவிகள், கன்னங்கள், பல்வரிசை எனச் சகல உறுப்புகள் மீதான வர்ணனைப் பாடலாக இவைகள் இசைக்கப்பெறும். பாடலின் தாளக்கட்டுக்கு ஏற்ப தப்பிசையும் இசைக்கப்படும். அண்மைக் காலங்களில் ஒலிவாங்கிகள் மூலம் பாடல் இசைக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் தப்பிசையை விஞ்சும் வகையில் ஓங்கி ஒலிக்கும் குரலாகவே காமன் மாஸ்ட்டர்களது குரல் ஒலிக்கப்பட்டன.

இந்திரன் அனுப்பியுள்ள ஓலையின் குறிப்புகளை ரதிக்கு எடுத்துரைக்கும் முனைப்பு தொடர்கிறது. இவ்வழைப்பை ஏற்று போவதற்கு முடிவை எடுத்த நிலையிலையே ரதியிடம் சம்மதம் வாங்கும் முனைப்பில் பாடல் தொடர்கிறது. மதனை மாத்திரம் வருகைத்தர சொல்லி ஓலையில் குறிப்பிட்டுள் ளதை வலியுறுத்தி மதன் ரதிக்கு எடுத்துரைக்கின்றான். தேவ லோகமே தனது ஆளுமையை உணர்ந்து தனக்கு அழைப்பு விடுப்பதை பெருமையாக மதன் எண்ணுகிறான். அதிகார வர்க்கம் தங்கள் நலன் சார்ந்த விடயத்தில் மாத்திரமே கவனத்தைச் செலுத்துவார்கள் என்பதற்கு இச்சந்தர்ப்பம் தக்க சான்றாக அமைகிறது. மதனின் கோரிக்கையை செவிம டுத்த ரதியானவள் தன்னைப் புகழ் மொழியால் ஆராதிக் கின்ற மதனின் வார்த்தைகளுக்கு மயங்காத நிலையில் யதார்த்த நிலையை சிந்தித்தவளாகத் தீர்க்கமான பதிலினை மதனுக்கு முன்வைக்கிறாள். சுயநலம் கொண்ட இந்திரனின் கோரிக்கை செவிமடுத்து, என்னை இங்கே தனியாக விட்டுச் செல்வது முறையாகுமோ? சொற்ப நேரத்தில் கூட உன் னைப் பிரிந்தால் எனது நிறை குறைந்திடும். உனது மொழி களை ஞாபகப்படுத்திக் கொண்டே வாழ்ந்திடுவேன் என மன்றாடி மதனுக்கு எடுத்துரைக்கிறாள். தொடர்ந்து மதன் ரதி உரையாடல் பாங்கும் தொடர்கிறது.

***'மதன் :***
***அழகை படைத்தவளே புகழை யணிந்தவளே***
***அல்லி மலர்ச்சரமே மல்லிகை பூமணமே***
***அமிர்த மொழியாளே குமுத விழியாளே***
***அன்ன நடையழகி என்னுடனே பழகி***
***ஆசைமிகுந்த பெண்ணே பாசமிகு கண்ணே***
***ஆயிரம்பொன் மாற்று பெற்ற நேய பதுமையொன்று...'***

என ரதியை நோக்கிப் புகழ் மொழிகள் தொடர்ந்த மதனுக்கு ரதி பதிலுரைக்கிறாள்.

***'ரதி:***
***காம ராஜேந்திரனே பூமானே சீமானே***
***அல்லி மலர்ச்சரமே மல்லிகை பூமணமே***
***கட்டழகனே மதனே எனை தொட்டனைத்த கோமானே***
***கன்னி பிராயமதில் சின்னஞ்சிறு வயதில்***
***கல்யாணம் செய்துவிட்டு இலகுபருவத்தி லென்னை***
***கட்டி யணையாமல் இஸ்டமுடன் வாழாமல்***
***அந்தகருது மிந்திரனுப்பும் பெருந்தூதர் கொண்டுவந்த***
***காகிதத்தை நீர்பார்த்து ஆயுதங்களை எடுத்து***
***காரணரே போரேனென்று ஆரணத்தி லில்லாமல்***
***கருத்தை யுரைக்கலுற்றீர் ஒருத்தி தானிருக்க...'***

என்றவாறு தொடர்கிறது. தொடர்ந்து மதனைப் பிரிந்திருந் தால் தன்னுடைய நிலை எப்படி இருக்கும் என்பதனை பின் வருமாறும் எடுத்துரைக்கிறாள்.

பிணை மான் தன்னுடைய துணையான கலை மானைப் பிரிந்து தவிப்பது போல எனது தவிப்பும் அமைந்து விடும். வீடோன்றின் மீது மலை விழுந்து விட்டால் வீடு உடைந்து சிதறிக் கிடக்கும் நிலையைப் போல், முறையாக வித்தை யொன்றைக் கற்காத நிலையைப் போலவும், ஒழுங்கு சிதறிய வரிசையைப் போலவும், கணவரில்லாப் பெண்ணைப் போல், வாசமில்லாத பூவைப் போல, சூரியன் உதிக்காத வானத் தைப் போல, மழையில்லாமல் வாடும் பயிரைப் போல, விருப்மற்ற துணையை ஏற்கும் பெண்ணைப் போல, அணையில்லாத குளத்தைப் போல, கோயிலில்லாத ஊரைப் போல, காவலில்லாத பயிரைப் போல, பாவலர்கள் இல்லாத சபையைப் போல என்றவாறு ரதியின் தன் நிலைமையை பலவாறெல்லாம் உவமித்துக் கூறுகிறாள். அவளின் குரலாக முன் வைக்கும் பாங்கு இங்கு சிறப்பிற்குரியதாகும். இயற்கையோடும், யதார்த்தத்தோடும் இயைந்த உதாரணங்களையும் முன்வைத்து ரதியின் வேத னைக் குரலை சித்தரித்திருப்பது சிறப்பிற்குரியதாக அமை கிறது. அப்பாடல்களை கையாளும் பாவலர்களின் கவித் துவப் புலமையையும் பாடலிசைக்கும் திறமையையும் எடுத்து ரைக்கும் சந்தர்ப்பமாகவும் இப்பாடலடிகள் காணப்படுகிறது.

தம்பதியினரிடையேயான கலந்துரையாடல் இருவரிடையே பரஸ்பர புரிதலுக்கு வலு சேர்ப்பதாக அமையுமென்பார்கள். இந்திரனின் கோரிக்கையை முழு மனதுடன் ஏற்றுக்கொண்ட நிலையில் அதனை முன்னெடுப்பதற்கு ரதியிடம் அனுமதி வாங்கும் முனைப்பு மாத்திரமே மதனில் நிலைப்பெற்றுள் ளது. இதனாலேயே மதன், ரதி ஆகியோரிடையே உரை யாடல் வாதமாக தொடர்கிறது. இவ்வுரையாடல் முறைமை யினை இலாவணிப் பாடல்கள் என அழைக்கப்பர். இக்கூத் தின் அடுத்த கட்ட நகர்வுகள் பெரும்பாலும் இலாவணி முறையாகவே நகர்த்தப்படுகின்றமை கவனத்திற்குரியதாகும்.

இலாவணி மத்திய இந்தியாவின் பழம் பெரும் இசை வடிவ மாகப் பயிலப்பட்டு வருகிறது. கிழக்கு மகாராஸ்டிரா, சத் தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் செல்வாக்குப் பெற்ற இசை வடிவமாக இலாவணி திகழ்கிறது. இப்பிரதேசத்தில் இந்தி மொழியின் ஆதிக்கமே காணப்படுகிறது. கூத்துக்களில் ஆரி யர்களின் செல்வாக்குநிலை காணப்படுகின்ற நிலையில் தஞ்சாவூர் பகுதிகளில் மராட்டிய மன்னர்களின் ஆட்சிக்கா லத்தின்போது இவ்விசை வடிவம் தமிழகத்திற்கும் ஊடுகடத் தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மத்திய இந்தியாவின் ஹோலித்திருவிழாவின்போது இவ்வ டிவம் பாடப்படுகிறது. குழந்தை பிறந்து எட்டு நாட்கள் வரை வீடுகளில் இசைக்கப்படுகிறது. இவ்விசை வடிவத்தைப் பாடி னால் தீய சக்திகள் அண்டாது என்பது இம் மாநில மக்களின் நம்பிக்கையாகும்.

இலாவணி கலைத் தொடர்பில், ஆய்வா ளர்கள் சங்ககாலத் துக்கு முன்னரே இக்கலை வேறு பெயரில் செல் வாக்குப் பெற்று



நிலைப் பெற்றிருந்ததாகவும் கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள். இலாவணி என்ற சொல் மராட்டி மொழியில் நாற்று நடுதல் எனப் பொருள்படுகிறது. வயல்வெளிகளில் வேலை செய்யும் பெண்கள் களைப்பு தெரியாமல் இருக்க கிண்டல், கேலி செய்யும் விதமாக கிராமிய பண்புகளுடனான இலாவணிப் பாடல்களைப் பாடியுள்ளார்கள். இதுவே இலாவணி கலையின் தொடக்கமாகக் கருதப்படுகிறது. இப்பண்புகளை மலையக நாட்டுப்புறப் பாடல்களிலும் அவதானிக்க முடிகிறது. கொழுந்துக் களத்தில் பல நையாண்டிப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அந்நாட்டார் பாடல்களே மலையக சமூகத்தின் முக்கிய ஆவணங்களாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். வேலைத்தளத்தில் வேலைத் தொடங்கும் நேரத்தில் பொலியோ பொலி பாடல்கள் மிகப் பிரசித்திப் பெற்றதாக விளங்குகின்றன. இவ்வணுகுமுறையில் இலாவணி இசை தொடர்பான பரிச்சயத்தில் காமன்கூத்து கலையிலும் இலாவணி வடிவத்தைப் பிரயோகித்துள்ளதை அறிய முடிகிறது. கதை அம்சத்தை விறுவிறுப்பாக எடுத்துச் சொல்வதற்கு இலாவணி அமைப்பு பெரிதும் துணை நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. ரதியை நோக்கி மதனின் நியாயப்படுத்தலும், ரதிதேவியின் யதார்த்தபூர்வமான கருத்து நிலைகளும் கவனத்திற்குரியதாகும்.

***'அன்னமே தாரமே என் அமுத பசுங்கிளியே
அழகுமணி கோகிலமே அரும்பான மல்லிகையே
அற்புத சிங்காரமே அரும்ப வழி ரத்தினமே...'***

எனத் தொடர்கிறது. இந்திரன் செந்தமிழில் எழுதிய வாசகத்தை பெண்ணே நீ செவிமடுப்பதற்காகச் சொல்கிறேன் கேள், உலக இயக்கத்தின் முக்கிய அங்கமாக திகழும் தேவர்களுக்கு பாதிப்பு வந்துவிடும். உன் தந்தை கொண்டுள்ள நிலைத் தொடருமானால் உலகிற்கே பெரும் பாதிப்பு வந்து விடும். தேவர்களே நம்பிக்கை வைத்துள்ள ஆளுமை பொருந்தியவன் யான், பரம்பொருளின் அருளாட்சியும் என்னிடம் உள்ளது. எந்த பாதிப்பு ஏற்படாது. ஈசனின் தபசை அழித்து தொடரவுள்ள பாதிப்பு நிலையை அழித்து விட்டு வருகிறேன். போவதற்கு நம்பிக்கையோடு விடை கொடுக்க வேண்டும், என்றவாறு மதனின் கோரிக்கை அமைகிறது. அவ்வாறே இக்கோரிக்கைக்கு அமைவாக மதன் செயற்படாவிட்டால் பெரும் துரோகமாய் பார்ப்பார்கள். அது தனக்கு கௌரவ குறைச்சலை ஏற்படுத்தும் என்பதாகவும் எடுத்துரைக்கப்படுகிறது. அதனைப் பின்வரும் அடிகள் வலியுறுத்தி நிற்கின்றன.

***'ஆண்டிக்கு நாம் பயந்து அமரருக்கு துரோகம் செயதால்
வேண்டிய பழி நேரும் வித்தகியே, போகாதிருந்தால்
பங்கம் ஒன்று நேராது பாவையே நீ அஞ்சாதே
மங்களமுடன் நான் வருவேன் மயிலிணமே துஞ்சாதே!
அல்லலை விட்டடடி அங்கஜன் பெயர் விளங்க'***

மதனின் கோரிக்கையை செவிமடுத்த நிலையில் மதனை நோக்கி ரதியானவள் மிக நிதானப் போக்கில் தனது நிலைப்பாட்டை எடுத்துரைக்க முனைவதைக் காணலாம். நாம் எமது நிலைப்பாட்டில் வாழ்க்கையை வாழ்ந்து விடலாம். பிறருக்காக வாழ்தல் என்பது வேறு. பிறர் இப்படி நினைத்து விடுவார்களே என நினைத்து வாழ்வதில்தான் பலவின அம்சங்களே குடிகொள்கின்றன. இக்கோரிக்கையை நிறைவேற்றாவிட்டால் தன்னைப் பற்றி இவ் ஊர் என்ன நினைக்கும்? என்ற எண்ணத்தில்தான் தனது மனைவியின் கோரிக்கையை தட்டிக்கழிக்க விளைகிறான். இன்றும் பிறரைத் திருப்தி படுத்த எடுக்கும் பிரயத்தனங்கள்தான் பல்வேறு சிக்கல் நிலைகளை தோற்றுவிக்கின்றன எனலாம். இந்நிலையில் ரதியின் நிலைப்பாடோ மாறுவதாக இல்லை.

***'அரசுக்கரசே எந்தன் அமர சூடாமணியே
ஆயனார் ஈன்றெடுத்த என் அன்புள்ள என் கணவா
அமரலோகம் நீ போனால் அநர்த்தம் வந்து நேர்ந்து விடும்
அபகேடு செய்திடுவார் ஆகாது என் கணவா
ஆருமில்லை எந்தனுக்கு அனாதியாய் நின்றிடுவேன்...'***

என ரதியின் நிலைப்பாடு தொடர்கிறது. சூழ்ச்சியில் சிக்குண்டிருக்கும் என் மன்னவனே, இந்திரனின் கோரிக்கையைச் செவிமடுத்து இமயமலைக்கு நீர் போவது மிகுந்த ஆபத்தை தரவல்லது. உனது கிளி வாகனத்தில் நீர் ஆவேசமாகப் பறக்கலாம். உங்கள் தேரில் மிக வேகமாகப் பயணிக்கலாம். தபசில் இருக்கும் சிவனை நோக்கி நீங்கள் கணை தொடுக்கும் போது நிச்சயமாக சிவனின் அனல் உங்கள் மீது பற்றி எரியப்போவது உறுதியானதே! உங்கள் செப்படி வித்தையெல்லாம் அந்த ஏகனிடம் பலிக்காது. உங்கள் வீரத்தனம் அரணிடம் செல்லாது. நாம் மகிழ்வாக நடமாட ஆரோக்கியபுர நந்தவனம் இருக்கிறது. கூடி மகிழ அந்தப்புரமும் மிக அம்சமாக இருக்கிறது. காலமெல்லாம் இன்ப பெற்று நாம் இருப்போம். மன்னவனே என்னை விட்டு போகாதீர்கள் எனக் கெஞ்சுகிறாள். உறுதியாக தன் தந்தையின் நிலைப்பாட்டை பின்வருமாறு பாடலினூடாக எடுத்துரைக்கிறாள். தம்பதியினரின் வாத முன் வைப்புகள் விவாத களமாக உருமாறியுள்ளது. தங்கள் தந்தையர்கள் மீதான பலம், பலவீனமான விடயங்களை முன்வைத்து இவ்வுரையாடல் வளர்த்துச் செல்லப்படுகிறது. இந்நிலை சைவ, வைணவ மதங்களுக்கிடையிலான ஒப்பீட்டு பார்வையைச் செலுத்துகிறது.

மத வாதங்கள் தத்தம் மத மேன்மைகளை முன்னிறுத்தும் பணியை வலியுறுத்துவதாக அமைகின்றன. அவ்வாறே புராண இதிகாச கதைகளை எடுத்துரைக்கும் பணியும் மதன், ரதி பாத்திரங்கள் ஊடாக முன் நகர்த்தப்படுகின்றன. பாமர மக்களிடையே அறிவியலையும் ஒழுக்கவியலையும் போதிக்கும் ஓர் பாடத்திட்டமாகக் காமன்கூத்து அமைக்கப்பட்டுள்ளமையை அறியலாம். தன் பேச்சுக்களைக் கேளாமல் செல்ல முனையும் மதனுக்கு செல்வாக்கு நிலையை இழந்த நளமகராஜனின் வரலாற்றை ரதி எடுத்துரைக்கும் பகுதி முதற் கட்டமாக இடம்பெறுகிறது.

***'நால்வேத சாஸ்த்திரத்தால் நூலால் வலியுறுத்தி
நளராஜன் கேளாமல் ஸ்ரமாய் வந்துதித்து
நாடு நகர்வர ஓடுமுதல்
நஸ்டமாய் சூதாடி இஸ்டமாய் தோற்றுவிட்டு
நாயகியும் பிரிந்து நேயர்களிடம் போயி
கஸ்டங்களைப் பெற்று வந்தார்...'***

என நளனின் வரலாற்றை ரதி எடுத்துக் கூறுகிறாள். இப்பகுதி கவனத்திற்குரியதாகும்.

நளன் தமயந்தி கதை மகாபாரதத்தில் இடம்பெறும் ஒரு கிளைக்கதையாகும். மகாபாரதத்தில் கௌரவர்களுடன் தோற்ற பாண்டவர்கள் மிகுந்த வேதனையுடன் வனவாசம் புரிகிறார்கள். பாண்டவர்களைப் பிரகதசுவர் எனும் முனிவர் பார்வையிடச் செல்கிறார். பாண்டவர்களின் மனக்கவலை நிலை

யைப் போக்கும் வகையில் ஆறுதலான வார்த்தைகளையும் நம்பிக்கைத் தரும் வார்த்தைகளையும் எடுத்துரைக்கிறார். அவர்களின் மனக்குறையைத் தேற்றும் வகையிலேயே பிரகத சுவர் முனிவரால் நளதமயந்தி கதை கூறப்படுகிறது. நிடத நாட்டின் மன்னன் சனியின் பீடிப்பினால் பல்வேறு துன்பநி லைகளை அனுபவித்த நிலையில், மீளவும் விதியின் வசத் தால் தன் வாழ்வில் மீட்சிப்பெற்ற விடயத்தை வலியுறுத்தி உங்களுக்கும் இவ்வாறான வாய்ப்பு ஏற்படும் என நம் பிக்கையை ஏற்படுத்தும் முனைப்பு அவதானத்திற்குரிய தாகும். இக்கதை பல மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டு ளளது. வட மொழியில் ஸ்ரீஹர்சர் என்பவர் இதனை நைடதம் எனும் பெயரில் எழுதியுள்ளார். தமிழில் புகழேந்திப் புலவர் ‘நளவெண்பா’ எனும் பெயரில் இதனை எழுதியுள்ளார். காமன் கூத்தில் இக்கதை மனைவியின் பேச்சை செவிமடுக்காது கணவன் பாதிப்புற்ற நிலையை விளக்கவே எடுத்துரைக்கப்ப டுகிறது. நள தமயந்தியினுடைய கதையை கேட்கும் போது சனி பகவானுடைய பாதிப்பு நிலை குறையும் என்ற நம்பிக் கையும் மக்கள் மத்தியில் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நளதமயந்தியின் கதையம்சம் இரண்டு ஜென்மங்களோடு தொடர்புபடுகிறது. அதனை முதலில் நோக்குவது சிறப்பு. ஆகுகன், ஆகுகி என்ற காதல் தம்பதியினர் காட்டில் வசித்து வருகிறார்கள். வேடுவ குலத்தைச் சேர்ந்த இவர்கள் காட்டில் குகையொன்றிலேயே வாழ்கிறார்கள். ஒரு நாள் இவர்களை சந்திப்பதற்காக முனிவர் ஒருவர் வருகிறார். இரண்டு பேர் மாத்திரமே தங்கக்கூடிய வகையில் குகை சிறியதாகவே இருக்கிறது. முனிவர் மீது கொண்டிருந்த பக்தியால் அவரைக் குகையினுள்ளே நித்திரை செய்வதற்கு பணித்துவிட்டு, தம்ப தியினர் இருவரும் குகைக்கு வெளியில் படுத்துக்கொள்கி றார்கள். சிறிது நேரத்தின் பின்னர் கடுமையான மழை பெய்கிறது. மழையில் நனைந்த நிலையில் குளிர்தாங்க முடியாது தவிக்கும் மனைவியை குகையினுள்ளே உறங்கச் செய்துவிட்டு ஆகுகன் தான் குகைக்கு வெளியில் நித்திரை செய்கிறான். காலையில் எழுந்து விடயத்தை அறிந்த முனிவர், ஆகுகன் தனது மனைவி மீது வைத்திருக்கும் நம் பிக்கையை பெரிதாக எடுத்து கூறுகிறார். கதை இவ்வாறு செல்கையில் நாளடவில் ஆகுகன் விலங்கொன்றின் தாக்கு தலால் இறந்து விடுகிறான். தொடர்ந்து அவன் இறந்த கவலையில் ஆகுகியும் இறந்து விடுகிறாள். முனிவரும் இறந்து விடுகிறார். மறுஜென்மம் நோக்கி வாழ்க்கை நகர் கிறது. ஆகுகன் நளனாகவும், ஆகுகி தமயந்தியாகவும், முனிவர் அன்னப்பறவையாகவும் பிறப்பெடுக்கிறார்கள். இரண்டாவது ஜென்மத்தின் கதை நளன், தமயந்தி பாத்திரங் களோடு அன்னப்பறவையையும் பிரதானப்படுத்தி நகர்கிறது.

நிடத நாட்டு மன்னனாக நளன் விளங்குகிறான். நளன் அழகிலும் வீரத்திலும் சிறந்தவன். தமயந்தி விதர்ப்ப நாட்டு மன்னன் பீமனின் மகள். நளனுக்கு ஏற்றவளாக அழகிலும், அறிவிலும் சிறந்நவளாக விளங்குகிறாள். அன்னப்பறவை யின் தூதோடு நளன், தமயந்தியின் காதலும் உறுதியாகிறது. தேவர்களின் சூழ்ச்சி இடம்பெற்ற போதிலும் சுயம்வரத்தில் தமயந்தி நளனையே தனது கணவராகத் தெரிவு செய்கிறாள். சனிபகவானின் கோரப்பிடியால் நளன் சூதாட்டத்தில் நகரம் நாடு முழுவதையும் இழக்கிறான். தனது மனைவியையும் பிள் ளைகளையும் பிரிந்து காட்டுக்குச் செல்கிறான். நளன் பாம் பின் தீண்டுதலால் யாரும் காணமுடியாதவாறு கறுப்பாக மாறுகிறான். தமயந்தி நளனை தேடி அழைகிறாள். நளனை எங்குத் தேடியும் கிடைக்காத நிலையில் தமயந்தி தன் குழந் தைகளுடன் அயோத்தியை அடைகிறாள். அங்கும் நளனைத் தொலைந்த நளனைத் தேடிய தமயந்திக்கு ஏமாற்றமே மிஞ்சு கிறது. ஆனால், நளன் அயோத்தி மன்னன் ரிதுபர்ணனின் தேரோட்டியாக வேலை செய்கிறான். இருந்த போதிலும் தம யந்தியின் கண்களுக்கு நளன் அகப்படவில்லை. தமயந்தி நளனை கண்டுபிடிக்க தந்தையின் மூலம் மறு சுயம்வரத் துக்கு ஏற்பாடு செய்கிறாள். அச்சமயத்தில் நளன் கார் கோடன் கொடுத்த உடையை அணிந்து தனது பழைய உரு வத்தைப் பெறுகிறான். தமயந்தியின் இரண்டாவது சுயம்வ ரத்தில் பிரிந்த தம்பதியினர் மீளவும் ஒன்றிணைகிறார்கள். விதியின் பாதிப்பில் இருந்து மீண்டு தங்கள் நாட்டை ஆள்கி றார்கள்.

நளன் தமயந்தியின் கதை ஊடாக பாண்டவர்களுக்கும் நம்பிக்கை ஊட்டப்படுகிறது. பெண்ணிலைவாத முனைப்பில் தமயந்தியும் ஓர் அடையாளமாகத் திகழ்கிறாள். பெண்களில் நம்பிக்கையை கட்டியெழுப்பும் பணியில் இக்கதை நீண்ட காலமாகவே செல்வாக்குப் பெற்று விளங்குகின்றமை கவனத் திற்குரியதாகும். எத்தகைய சவால் வந்த போதிலும் தமயந்தி கொண்டிருந்த நம்பிக்கை, தமயந்திக்கு இழந்த வாழ்வை மீளவும் வழங்கியிருக்கிறது. காமன் கூத்து ரதி, மதன் பாத்தி ரங்களின் இணைவு, பிரிவு குறித்த சித்தரிப்பை பிரதானப்ப டுத்தியிருப்பினும் அப்பாத்திரங்கள் ஊடாக உலகிற்கு பல விடயங்கள் போதிக்கப்படுகின்றன. அவ்வகையில் உலக ஏகத்துவம் தொடர்பான கருத்தியல் வாதங்களுக்கு அடிப்ப டையாகவும் காமன்கூத்து விளங்குகிறது. ரதியின் எடுத்து ரைப்புகள் மேற்குறித்த கதையம்சத்தின் பல்வேறு நிலை களையும் தத்துவார்த்த தரிசனங்களையும் பார்ப்பவர்களுக் கும், கேட்பவர்களுக்கும் ஏற்படுத்தும். சிந்தனை கிளர்ச்சியின் முக்கிய களமாகவும் காமன்கூத்து தளம் விளங்குவதற்கு நளன், தமயந்தியின் கதையம்சமும் எடுத்துக்காட்டாக அமை கிறது. இத்தகைய போதிப்புகளைச் செவிமடுத்த நிலை யிலும் மதனில் மாற்றத்தை அவதானிக்க முடியவில்லை. மாறாக உலக யதார்த்தத்தை உணர்ந்த நிலையில் தனது கருத்தை பாடலாக முன்வைக்கும் முனைப்போடு மதனின் குரல் பின்வருமாறு ஒலிக்கிறது.

***‘கண்மணி சிரோமணியே பொன்மணி மனோன்மணியே***
***காப்புவியில் வாழ்க்கையிது நீர்மேல் குமிழியடி***
***கடும் வாழ்வில் நம்பாதே படுகுழியில் தள்ளிவிடும்***
***கருவிகள் தொன்னூற்றாறு எழும்புசதை நரம்புடனே***
***கால்ரெண்டுடைய பொம்மை மேல்கொண்டு எடுத்தநம்மை***
***கதிமோசம் வழியை விட்டு மதிகெடுக்க செய்யுமடி***
***கண்ணுக்குள் பார்வையடி மண்ணுக்குள் நாற்றமடி...’***

என நிலையில்லாத வாழ்க்கையின் தன்மையை எடுத்து ரைக்க முனைவதைக் காணலாம். நிலையில்லாத வாழ்வில் பிறர் நலம் சார்நத ஒரு விடயத்துக்குப் பங்களிப்பை செய் வதே சிறப்பான காரியமாக அமையும் என்பதை வலியுறுத்து வதாக இப்பாடலடிகள் அமையப்பெறுகின்றன.

(தொடரும்...)



letsumanan.a@thaiveedu.com



# மனக்குழப்பம்

- த. ஜீவராஜ்

ஆதினி திகைத்து நின்றாள். அந்தக் கணத்தில் அவளுக்கு எதுவும் புரியவில்லை. தனது நடனத்திற்கான வெகுமதியா இது? ஆனால், இவ்வளவு மதிப்புமிக்க ஓர் ஆபரணத்தை, தேவரடியாருக்கு ஓர் உயர் அரச பிரதானி நேரடியாக அணிவிப்பது வழக்கத்திற்கு மாறானது என்பதால் அவளது மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது.

கூட்டத்தின் மத்தியில் நின்றிருந்த மலைமண்டல நாயகன், அவளைப் பார்த்து ஒரு கணம் புன்னகைத்தார். அவரது கண்களில் ஒருவித பெருமையும், திருப்தியும் கலந்திருந்தது. ஆனால் ஆதினிக்கு அந்தப் புன்னகையின் அர்த்தம் புரியவில்லை. அவளது மனம் இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை.

கூட்டம் கலைந்த பின்னர் கோணநாயகரின் முன்னால் கண்களை மூடி தியானத்தில் அமர்ந்திருந்தாள் ஆதினி. நீண்ட நேரமாகச் சிலை போல அமர்ந்திருந்த ஆதினி மெல்லக் கண் திறந்தபோது கோதையும், வானதியும் அவளை நோக்கி ஓடி வந்தனர். அவர்களின் முகங்களில் அளவற்ற மகிழ்ச்சி பொங்கியது.

'ஆதினி அக்கா! மலைமண்டல நாயகனே உங்களுக்குப் பரிசளித்திருக்கிறார்! எவ்வளவு பெரிய கௌரவம்!' வானதியின் உற்சாகமான குரல் அவளை நிஜ உலகிற்கு இழுத்தது.

'அக்கா எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அறிவாட்டிப் பாட்டி நேரில் கண்டிருந்தால் ஆனந்தக் கண்ணீர் விட்டிருப்பார்!' கோதை ஆதினியின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு உற்சாகமாகச் சொன்னாள்.

வானதி அவளது கழுத்தில் இருந்த ஆபரணத்தை ஆச்சரியத்துடன் தொட்டுப் பார்த்தாள். 'அக்கா, இது எவ்வளவு அழகாக இருக்கிறது! நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலி!'

அவர்களின் மகிழ்ச்சி ஆதினிக்கு ஆறுதலாக இல்லை. மாறாக, அவளது குழப்பத்தை மேலும் அதிகரித்தது. 'ஏன்... ஏன் அவர் இதைச் செய்தார்? எனக்குப் புரியவில்லை...' ஆதினி மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்.

'ஏன் அக்கா? இது ஒரு பெரிய கௌரவம்! மலைமண்டல நாயகனே உங்களுக்குப் பரிசளித்திருக்கிறார் என்றால், நீங்கள் எவ்வளவு திறமையானவர் என்று அவர் உணர்ந்திருக்கிறார்!' என்றாள் கோதை.

ஆனால் ஆதினியின் மனம் வேறு எங்கோ சஞ்சரித்துக்கொண்டிருந்தது. ஆடையின் ஓரத்தில் கட்டப்பட்டிருந்த கந்தளாய்க் குளக் கட்டில் இருந்து அவள் கொண்டு வந்திருந்த சிறிய கல்லை எடுத்து கையில் வைத்து உருட்டிக் கொண்டிருந்தாள். அந்தக் கல்லின் குளிர்ச்சி அவளது உள்ளத்தில் ஏற்பட்டிருந்த குழப்பமான உணர்வுகளுக்குச் சற்றும் பொருந்தி வரவில்லை. அவளுடைய கண்கள் அபிரா மியைத் தேடிக் கொண்டிருந்தன.

கணவதி தண்டநாதனார், ஒரு பெரிய அரச அதிகாரி, திருகோணமலைக்கே பொறுப்பானவர். அவர் ஏன் ஒரு சாதாரண தேவரடியாருக்கு இவ்வளவு மதிப்புமிக்க ஒரு பரிசை நேரடியாக வழங்க வேண்டும்? இது வெறும் நடனத்திற்கான வெகுமதியா? அல்லது இதற்குப் பின்னால் வேறு ஏதேனும் அர்த்தம் இருக்கிறதா? இந்தக் கேள்வி அவளது மனதை அரித்தது.

அபிஷேக நீர் போல, கோணநாயகப் பெருமானின் அருள் அவள் மீது பொழிய வேண்டும் என்றுதானே அவள் நடனமாடினாள். ஆனால், இந்த ஆபரணம்... இது ஒரு கனமான சுமையாக அவளுக்குத் தோன்றியது. அவளது தேவரடியார் பணி கோணேசருக்கு மட்டுமே

சொந்தமானது என்று அறிவாட்டிப் பாட்டி கூறிய வார்த்தைகள் அவளது மனதில் ஒலித்தன. இந்த ஆபரணம் அந்தப் பணிக்கு ஒரு புதிய பரிமாணத்தை அளிக்குமா? அல்லது அவளது வாழ்க்கையில் ஓர் எதிர்பாராத திருப்பத்தை ஏற்படுத்துமா?. கோதை மற்றும் வானதியின் மகிழ்ச்சியான முகங்களை ஆதினி பார்த்தாள். அவர்கள் அவளுக்குக் கிடைத்த கௌரவத்தில் உண்மையாகவே மகிழ்ச்சியடைந்திருந்தனர். ஆனால் ஆதினிக்கு அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள முடியவில்லை. ஆபரணத்தின் கனம் அவளது கழுத்தில் ஒரு புதிய பாரமாக அமர்ந்தது.

சில நாட்கள் கடந்தன. ஆதினியின் மனக்குழப்பம் மாறவில்லை. நடந்த சம்பவங்கள் தொடர்பில் ஆதினியும், அபிராமியும் அச்சப்படுவதின் உண்மைத் தன்மையை மெல்ல மெல்ல கோதையும், வானதியும் புரிந்துகொள்ளத் தொடங்கினர்.

கோதையும், வானதியும் உண்மையான அன்போடு வெளிப்படுத்திய மகிழ்ச்சியை ஒரு சில தேவரடியார்களே பிரதிபலித்தனர். ஆதினிக்கு நெருக்கமான சில தேவரடியார்கள் அவளுக்கு கிடைத்த கௌரவத்தை தங்கள் சொந்த வெற்றியைப்போல் கருதி பெருமிதம் கொண்டனர். ஆனால், ஆலயத்தில் உள்ள மற்ற தேவரடியார்களிடமும், சில கோயில் ஊழியர்களிடமும் ஒருவித பொறாமையும், கோபமும் குடிகொண்டிருப்பதை ஆதினி உணர்ந்தாள். அவர்கள் ஆதினியைக் கண்டதும் முணுமுணுப்பதும், அவளைப் பற்றிப் பேசிக்கொள்வதும், அவளது காதில் விழத் தொடங்கின.

‘மலைமண்டல நாயகனுக்கு ஆதினி மீது காதல் வந்துவிட்டதாம். அதனால்தான் இந்த ஆபரணத்தைப் பரிசளித்தாராம்,’ என்று சிலர் வெளிப்படையாகவே பேசினர்.

‘அவள் ஏதோ மாயவித்தை செய்திருக்கிறாள். இல்லையென்றால், ஒரு தேவரடியாருக்கு இவ்வளவு பெரிய பரிசு கிடைக்குமா?’ என்று வேறு சிலர் உண்மைக்குப் புறம்பான கதைகளை பரப்பத் தொடங்கியதையும் அறிந்து ஆதினி மனவேதனை கொண்டாள்.

கோயிலுக்குள்ளும், வெளியிலும் சொல்லப்படும் ஆதினி தொடர்பான கதைகள் அவள் மனதில் மேலும் மேலும் ரணங்களை உருவாக்கின. கோணேசருக்கு அர்ப்பணிக்கப்பட்ட தனது வாழ்க்கையும் புனிதத்தன்மையும் மலைமண்டல நாயகன் பரிசளித்த ஒற்றை ஆபரணத்தால் கேள்விக்குள்ளாக்கப்பட்டு பலராலும் பலவாறும் விவாதிக்கப்படுவது அவள் மனவேதனையை இன்னும் அதிகரிக்கச் செய்தது.

ஆலயத்தில் பணியாற்றும் சில மூத்த தேவரடியார்கள், ஆதினியைத் தனியே அழைத்து, ‘ஆதினி, இது உனக்குக் கிடைத்த ஒரு பொன்னான வாய்ப்பு. மலைமண்டல நாயகர் சாதாரண ஆள் இல்லை. இந்த வாய்ப்பை நீ சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இது உன் வாழ்க்கையையே மாற்றிவிடும்,’ என்று அறிவுரை கூறினர். அவர்களது அறிவுரைகள் ஆதினிக்கு பெரும் அதிர்ச்சியைத் தருவதாக இருந்தது. அதுவரை வாழ்வில் இப்படி ஒரு சூழ்நிலையை அவள் எதிர்கொண்டதில்லை. அறிவாட்டிப் பாட்டியின் நிழல் இல்லாத வாழ்வை நினைத்து ஆதினி மனதுக்குள் அழுது கொண்டாள்.

அந்த ஒற்றைச் சம்பவம் நீண்ட நாட்களுக்கு ஆலயத்தில் பேசுபொருளாகவே இருந்தது. பலரும் பல விதமாக அவளுக்கு ஆலோசனை கூறினர். ஆதினியின் மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. அவளுடைய பயம் அவள் மனம் மாறிவிடுவாள் என்பதல்ல. அடுத்த முறை மலைமண்டல நாயகன் அவளைத் தேடி வந்துவிட்டால் என்ன செய்வது என்பதுதான். பலரும் சொன்னவற்றிலிருந்து, சில தேவரடியார்கள் அரச பிரதானிகளின் ஆசை நாயகிகளாகச் சென்றிருக்கிறார்கள் என்பதை அவள் புரிந்துகொண்டாள். சில தேவரடியார்கள் ஆதினிக்கு அப்படியொரு நல்லதொரு வாழ்க்கை அமையப் போகிறது என்ற மகிழ்ச்சியையும், சிலர் பொறாமையையும் கொண்டிருந்தார்கள்.

திருக்கோணேச்சர ஆலயத்தில் தேவரடியார்கள் மத்தியிலும், ஆலயப் பணியாளர்கள் மத்தியிலும் இந்தக் கதைதான் அப்போது மிகவும் பிரபல்யமாக இருந்தது. ஆலயத்துக்கு நேர்ந்து விடப்பட்டவர்களின் வாழ்க்கை எத்தனை துயரமானது என்பதையும், அவர்களின் வாழ்க்கை நிச்சயமற்ற தன்மை கொண்டது என்பதையும் ஆதினி நன்கு உணர்ந்து கொண்டாள். இந்த ஆபரணம் அவளது வாழ்க்கைப் பாதையில் ஒரு புதிய, கணிக்க முடியாத திருப்பத்தை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சம் அவளது மனதை ஆட்கொண்டது.

மாலை நேரம் திருக்கோணேச்சர ஆலய யாத்திரிகர் மண்டபத்தில் தேவரடியார்களுக்கு ஒதுக்கப்பட்ட மண்டபத்தில் ஆதினி புதிதாக வந்த தேவரடியார்களுக்கு நடனம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அப்போது சில தேவரடியார்களும், ஆலயப் பணியாளர்களும் தொடர்ந்து வர வேளைக்காரப் படை வீரர்கள் இருவர் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த துணியால் மூடப்பட்ட ஒரு தட்டத்தை ஏந்தியவாறு அவர்களது மண்டபத்தை நெருங்கினார்கள். தரையில் இருந்தபடி அபிநயம் பிடித்துக் கொண்டிருந்த ஆதினியிடம் ஒரு தேவரடியார் மலைமண்டல நாயகர் அனுப்பிய பரிசுப் பொருட்கள் இது. எழுந்து பணிவாக வாங்கிக்கொள் என்று காதுக்குள் கிசுகிசுத்தாள். திடீரென்று ஆதினி எழுந்து நிற்கவும் அவள் தலை பட்டு தட்டத்தில் இருந்த பரிசுப் பொருட்கள் தரையில் சிதறவும் சரியாக இருந்தது.

(தொடரும்...)



jeevarajah@thaiveedu.com

# ஈழத்துப் பெண்ணிலைவாதக் கவிதைகளில் அகம்

**சி. ரமேஷ்**



மனிதர் தோன்றிய வரலாறு காணாத இருள் கவிந்த காலமுதல் இற்றைவரை, வரலாற்று நாகரிகங்களைக் கடந்து மனித மனங்களில் நிலைபெற்ற மாயமான, மகத்தான, விந்தையான மனவெழுச்சி காதல் ஆகும். காதல் என்பது பெரும்பாலும் ஆர்வம், நெருக்கம், அர்ப்பணிப்பு, ஈர்ப்பு, அன்பு, பரிவு முதலான நற்பண்புகளுடன் தொடர்புடையது. அடிப்படை மனித உணர்ச்சியாகக் கருதப்படும் காதல் உலகளாவிய மனித அனுபவமாகக் கொள்ளப்படுகிறது. ஆழமான வலுவு ள்ள உறவுகளை உருவாக்குவதில் காதல் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. ‘காதல்’ என்பது ஒருவர் பிறிதொருவரின் நலத்தில் அக்கறை செலுத்துவதைக் குறிக்கிறது. அதேசமயம் பாலியல் ஈர்ப்பின் காரணமாகப் பிறக்கும் காதல் சிற்றின்ப ஆசைக்குள் தன்னை முடக்கிக் கொள்கிறது. காதல் என்பது பல பொருள் குறிக்கும் ஒரு சொல். ‘சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி காதலுக்கு அன்பு, காம இச்சை, வேட்கை, ஆவல் எனப் பொருள் தருகின்றது’. பெண் மனத்தில் ஊற்றெடுக்கும் காத லானது வெறும் இனக்கவர்ச்சியாலோ, உடல் இச்சை யாலோ மட்டுமே வருவதல்ல. இவ்வகவெளி இரு உள்ளங்களின் உணர்வையும் அவ்வுணர்வுகளுக்கூடாக உடலில் விளையும் இயல்பூக்கத்தையும் வெளிப்படுத்தும் இயல்புடையது.

1980-களில் அமெரிக்க உளவியலாளர் ராபர்ட் ஸ்டெர்ன்பெர்க்கால் அறிமுகப்படுத்தப்பட்ட ‘முக்கோணக் கோட்பாடு’ காதல் பற்றி ஆங்கிலத்தில் எழுந்த முக்கிய உளவியல் கோட்பாடாகக் கருதப்படுகிறது. காதல் என்பது நெருக்கம், ஆர்வம், முடிவு அல்லது அர்ப்பணிப்பு என்ற மூன்று உணர்ச்சிக் கூறுகளைக் கொண்டுள்ளது என ஸ்டெர்ன்பெர்க் கூறுவார். காதல் என்பது நெருக்கம் மற்றும் ஆர்வத்தைக் கொண்டுள்ளது என வாதிடும் இவர் மோகம் ஆர்வத்தை மட்டுமே கொண்டிருக்க திருமணம் என்பது அர்ப்பணிப்பையும் தன்னுள் கொண்டுள்ளது எனவும் கூறுவார். இவர் கூற்றின்படி முழுமையான காதல் நெருக்கம், பேரார்வம்,



அர்ப்பணிப்பு ஆகிய மூன்று கூறுகளின் கலவையாகவே காணப்படுகிறது.

மென்னுணர்வுக்கூடாகக் காதலைப் பாடும் ஈழத்து நவீன கவிதைகள் அன்பு, வெறுப்பு, கோபம், ஏமாற்றம், பிரிவு, நெருக்கம், காமம் என வெவ்வேறு உணர்வுத் தளங்களில் கட்டுறுபவை. மென்மையான தன்னுணர்வுக் கூடாக கலாசார, பண்பாட்டு விழுமியங்களை உடைத்து காதலை வெளிப்படுத்தி நிற்கும் இவ்வகவெளி அகப் பொருள் இலக்கிய மரபுக்கூடாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும். உணர்வுகளும், உணர்ச்சிகளும் இரண்டறக் கலந்து பிரவேசிக்கும் இவ்வகவெளி நவீன கவிதையில் மரபுரீதியாக வரையறுக்கப்பட்ட ஒழுக்கக் கற்பிதங்களை உடைத்து புதியவெளியை உருவாக்குகின்றது.

ஈழத்தில் ஆணாதிக்க சமூகம் வலுப்பெற்ற 1980-களில் குறிப்பாக பெண் தன் அந்தரங்க நிலையைப் பகிரங்கமாக வெளிப்படுத்த முடியாத சூழ்நிலை காணப்பட்டது. இச்சூழலில் மனிதநாட்களை விழுங்கி ஆயுளை அழிக்கும் யுத்தம் முனைப்புப் பெற்றது. இக்கால வெளியில் தன் நேசிப்புக்குரியவனுடன் பேசும் ஊர்வசியின் ‘காத்திருப்பு எதற்கு’ என்னும் கவிதை வாழ்தலுக்கான அழைப்பை எவ்வித விகற்பமும் இன்றி வெளிப்படுத்துகிறது.

*‘மெது பூமி மெது பொழுதுகள்*
*எதுவுமே மெய்கு இல்லையென்றான பின்*
*இதுபோல் ஒரு பொழுது*
*கிடைக்காமலும் போகலாம்*
*தொடரும் இரவின் இருளில்*
*எதுவும் நடக்கலாம்*
*ஆதலால் அன்பே*
*இந்த அதிகாலையின்*
*ஆழ்ந்த அமைதியினில்*
*நாம் இணைவோம்’*

*– உயிர்வெளி, பக். 34*

காதலானது ஒருவர் மற்றவரைக் கண்டவுடன் மனத்தில் பிறக்கும் ஒருவகையுணர்வு. காதல் என்பது விட்டுக்கொடுப்பு, அர்ப்பணிப்புடன் தொடர்புடையது. காதல் என்பதனை நாகரிகமான பண்பு எனினும் அதில் தவறில்லை. பிரியத்துக்குரிய ஒருவருக்காக விட்டுக் கொடுக்கும்போது அவருக்காக உதவி செய்யும்போது மனம் நிறைவடைகிறது. அதேபோல் உடல்ரீதியான கவர்ச்சியையும் மனஅவஸ்தையையும் காதல் தன் வசத்தில் வைத்திருப்பதுமுண்டு. இக்காதல் காமமாகப் பரிணாமம் அடையும்போது அது குற்றம் குறை பார்ப்பதில்லை. தான் நேசிப்பவரைக் காணும்போது மனத்தளவில் கிடைக்கும் திருப்தியே காதலின் வெற்றி எனலாம். ஆண் மீது பெண் கொண்ட தீவிரமான ஆர்வத்தையும் உறவின் இழை அறாத அன்பினையும் நேசிக்கும் ஒருவனிடம் குறை காணாத மனத்தையும் யாழ். ஆதிரையின் ‘அது தானே நான்’ என்ற கவிதை உணர்த்தி நிற்கிறது.

*‘கூர் மூக்கின் அழகில்*
*சிறுபிள்ளைத் தனங்களில்*
*உதாரண குணங்களில்*
*உனக்குள்ளான மனிதனை*
*சலித்துத் தேடி…*
*உன்னில் லயித்து*
*நீ தரும்*
*சந்தோசங்களில் கலந்து*
*அதே புன்னகையுடன்*
*உனக்காகவே என்றும்…’*

*– உயிர்வெளி, பக். 11*

தன்னால் விரும்பப்படுபவன் சமான்யன் ஆனாலும் அவனிடம் உள்ள நற்பண்புகளைக் கண்டு புளகாங்கிதம் அடையும் பெண்ணின் உள்ளத்தையும் உறவின் ஆழத்தையும் யாழ். ஆதிரையின் இக்கவிதை தத்ரூபமாகப் பதிவு செய்கிறது. உணர்வுரீதியாக ஒருங்கிணைந்த உள்ளங்களுக்கிடையில் இருந்த மோகத்தையும் இருவருக்கும் இடையிலான உறவின் ஆழத்தையும் இக்கவிதை போகிற போக்கில் கூறிச்செல்கிறது.

‘உண்மையான மனதின் திருமணம்’ (The Marriage of True Minds) என்ற கவிதையில் உண்மையான காதலின் தன்மையை ஷேக்ஸ்பியர் ஆழமாக விபரித்துச்சென்றுள்ளார். உண்மையான காதல் என்பது இயற்கையின் இனிமையான பரிசு எனக்கூறும் ஷேக்ஸ்பியர் இரண்டு ஆன்மாக்களுடன் தொடர்புடைய உண்மைக் காதலானது இரண்டு உண்மையான இதயங்களையும் மனங்களையும் வாழ்வில் கலக்கச் செய்கிறது எனக் கூறுவார். இந்த உண்மைக் காதலை ஔவையின் காத்திருப்புக் கவிதையிலும் காணலாம்.

*‘காலமெல்லாம் கரைந்துருகி*
*கனவாகிப் போகாமல்*
*மீள ஒருபொழுது சுகந் தரவருமென*
*உடல் தகிக்க*
*உணர்வூறும் பொழுதுகளில்*
*கண்மூடித் துயில்கொள்ள*
*விழைகிறது மனம்*
*உன் வரவில் உயிர் கொள்ளும்…’*

*– உயிர்வெளி, பக். 26*



மனித மனதினை வாட்டும் காதல் ஸர்மிளா ஸெய்யித்தின் ‘வந்துவிடு மீண்டும்’ கவிதையில் உணர்வின் பிரவாகமாக இறங்குகிறது. ஓர் அலையின் எழுச்சியாக வெளிப்படும் காமம் ஆழங்காணாத இரகசியத்தைக் கூறிச்செல்கிறது. உணர்வினால் நசுக்கப்படும் ஆன்மாவையும் வேட்கை கொண்டு அலையும் பெண்மையையும் இக்கவிதை துல்லியமாகக் காட்டிச்செல்கிறது. தன்னலமற்ற உண்மையான அன்பு வாழ்வின் இருப்பாக மாறிப்போன இறுதிக்கணத்தை ஸெய்யித்தின் கவிதை அடிகள் எடுத்துக்காட்டுகின்றன.



‘விடுதலைக்கான
இரகசியமிக்க இந்தப் பயணத்தில்
நூற்றாண்டுகளாகப் படிந்து உன்
நினைவுகளைத் தவிர
வேறெதனையும்
எடுத்து வரவில்லை
வாழ்வின் முடிவில்லா வெளிகளின்
தொலைவுக்கு
செல்வதற்குமுன்
என்னிடம் வந்துவிடு மீண்டும்’

பெயரிடமுடியாத உணர்ச்சிகளின் அரிய ரச வாதத்தை வெளிப்படுத்தும் இக்கவிதை உள்ள த்தை உணரச் செய்யும் இதமான வார்த் தைகளால் ஆனது. உலகளாவிய அனுபவத்தைப் பறவை களின் இசையைப் போல உணரச் செய்யும் இக்கவிதை ஆன்மாவை அசைக்கிறது. மனதில் பீறிட்டெழும் வேதனையின் கீற்றுக்களை மைதிலியின் கவிதைகள் வெளிப்படுத்தி நிற் கின்றன. நிறை வேறாத ஆசைகளையும் கனவுகள் சிதைந் துபோன பெண் ணின் வலி நிறைந்த வாழ்வையும் ‘இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள்’ தொகுப்பில் உள்ள கவிதைகள் பல உணர்த்தலாயின.

‘காற்றிடையுதிரும் இறகுகளென
சலிப்புற்ற மனத்திலிருந்து
பீறிட்டெழும் பிரார்த்தனைகள்
நான் உன்னை நேசிக்கிறேன்...
கனவுகள் கருணையற்றவை
ஒருபோதுமவை எனக்கு
இரக்கம் காண்பிப்பதுமில்லை
இதயத்தின் இடுக்குகளில்
எஞ்சியவற்றைக்கூட
சீழ்மூடிவிடுகிறது...’

*- இரவில் சலனமற்றுக் கரையும் மனிதர்கள், பக். 53*

அக்மதோவா ‘He Did Love’ எனும் கவிதையில் கணவனுக்கும் தனக்கும் இடையிலான மனவேறுபாடுகள் பலவற்றை இணைத்துப்பேசுவார். இல்லறத்துக்கும் நெருக்கத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை அக்மதோவாவின் கவிதைகள் பிரதிபலிப்பதைப் போல மைதிலியின் கவிதையிலும் காணலாம். கணவன் - மனைவி இருவருக்கும் இடையிலான தூரத்தையும் புரிதலின்மையால் ஏற்படும் இடைவிலகலையும் மைதிலியின் கவிதைகள் துல்லியமாக வெளிப்படுத்துகின்றன.

மனித மனதின் ஆழத்தை வெளிப்படுத்தும் மயூ மனோவின் கவிதைகள் வேட்கை கொண்டலையும் பெண் மனதின் அகப் பாடலாகவும் காணப்படுகின்றன. கலாசார வரையறைகளை உடைத்து பெண்ணிலைவாதக் கருத்துகளை வெளிப்படுத்து வனவாக அமையும் இக்கவிதைகள் மொழியின் அழகையும் சக்தியையும் கொண்டாடும் ஒரு கலை வடிவமாகவும் விளங் குகின்றன. கலைத்திறன் கொண்ட இக்கவிதைகள் மொழியா ழத்தில் கட்டுண்டவை. சிந்தனாவாத மரபை உடைத்து அறிவுசார் வளர்ச்சியில் தன்னை நிலைப்படுத்தும் கவிதைக ளாகவும் இவை காணப்படுகின்றன.

‘மிதந்தெழும் தொன்மத்தின் வன்மப் புணர்ச்சிக்குள்
சிதைந்தொழும் என்னை
பெண்ணென்று சொல்லிக் கொள்கிறேன்
ஆக
நீ என்னவளாகின்றாய்
கேள்விக்குறியுடன் திரும்பி முழிக்கும் என்னை
உற்று நோக்குகிறாய்
அன்பே
நாளை என்பதற்குத் தேவையான
என் சுதந்திரங்களின் நீளங்களை
அடிகளால் சாண்களால் முழங்களால்
எதனால் அளந்து முடித்தாய்?...’

*– நாம் பேசிக்கொண்டிருந்தபோது பெய்திராத மழை, பக். 87*

அன்பு கொண்டு ஆண், பெண் கட்டுண்ட நிலையில் இருந் தாலும் ஒருவர் பிறிதொருவர் மீது பாசத்தைப் பொழிந்தாலும் பெண் தனித்துவமாகவும் சுயத்துவமாகவும் இயங்குவதற்கு உரிமை அவசியம் என்பதை இக்கவிதை புலப்படுத்தி நிற்கிறது. பெண் பார்வையில் இருந்து காதலை வெளிப்படுத்தும் இக்கவி தைகள் பிரச்சினைகளைக் கையாள்வதற்கான தேடலாகவும் வாய்க்கப் பெற்றன. 1923-ஆம் ஆண்டு புலிட்சர் (Pulitzer Prize) பரிசு வென்ற எட்னா செயிண்ட் வின்செண்ட் மில்லேயின் கவி தைகளைப் போல மயூ மனோவின் கவிதைகளும் நவீனத்துவ மனப்பான்மைகளை பாரம்பரியங்களுடன் இணைக்கின்றன.

வார்த்தைகளால் சொல்ல முடியாத உணர்ச்சிகளை வெளிப் படுத்தும் ஆற்றல் கண்களுக்குண்டு. காதலில் கட்டுண்ட உள்ளங்கள் தம் எண்ணவோட்டங்களைக் கண்களாலேயே பேசிக்கொள்கின்றன. காதலை வெளிப்படுத்தும் நுட்பமான ஆற்றல் கண்களுக்குண்டு எனக் கூறுவர். உள்ளத்தை அறிகின்ற ஆற்றல் கண்களுக்குண்டு. காதல் நோயை உண் டுபண்ணும் ஆற்றலும் அந்நோய்க்கு மருந்தாகும் ஆற்றலும் கண்களுக்குண்டு என்பார் வள்ளுவர். அவருடைய குறிப்பறிதல் அதிகாரம் இதனைத் தெளிவுப டுத்தி நிற்கிறது. காதலர் இருவர் அன்போடு பார்க்கும் பார்வை காதல் பயிரை செழித்து வளர்ந்தோங்கச் செய்கிறது. காதல ரில் ஒருவர் கண்ணோடு மற்றொ ருவர் கண்ணும் பார்வையால் பேசிவிட்டால் அதற்கு பிறகு வாய்ச் சொற்களால் ஒரு பயனும் இல்லை என்பதை ‘கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் / என்ன பயனும் இல’ என்னும் குறளின் வாயிலாகத் தெளிவு படுத்துகிறார். இதற்கொரு படி மேலே சென்ற கம்பர் இராமன் பார்வையும் சீதை பார்வையும் சந்தித்துக் கொண்டதை,





'கண்ணொடு கண் இணை
கவ்வி, ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலை பெறாது
உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்,
அவளும் நோக்கினாள்'

என்ற வரி உணர்த்தி நிற்கிறது. அன்று மாத்திரமன்றி இன்றும் இக்கண்கள் காதலர் இடையே நுட்பமான காதல் கதைகள் பலவற்றைப் பேசிச் செல்கின்றன. 'ஓ நளினி உன் கண் திற' எனக் கூறி நளினியை விளித்துப் பாடும் 'பிரோபதி' என்ற தலைப்பில் ரவீந்திரநாத் தாகூர் பாடிய பாடலிலும் காதலியின் கண்கள் சிறப்பிக்கப்படுகின்றன. ஔவையின் உணர்வுகள் கவிதையும் இதனை உணர்த்தி நிற்கின்றன.

'அன்று நான் உன்னை ஒருமுறை
நோக்கினேன்
ஒரேமுறை நோக்கினேன்
நீலவிழியின் அழகுதான் காரணமோ?
இல்லை இல்லை
ராஜநடைபோட்டு – நீ வாசலில் நின்றபோது
மனம் சிலிர்க்கும்
நோக்கினேன்
என்றும் போல் அதே பார்வை...'

*– உயிர்வெளி, பக். 27*

உளவியலாளர் ஃபிராங்க் டி. காக்ஸ் (Frank D. Cox) காதலிலிருந்து மோகத்தை வேறுபடுத்த முடியும் எனக் கூறினாலும் அது நடைமுறையில் சாத்தியமா என்றால் இல்லை என்றே கூறலாம். உளரீதியான நெருக்கத்துக்குப்பின் தோன்றும் காதல் மோகத்துடன் இணைந்தே பயணிக்கும். இது தவிர்க்க முடியாததும் கூட. வெறித்தனமான வலுவான அன்பு மோகமாக மாறும் தருணங்களில் உற்சாகம் மற்றும் பரவச உணர்வு கொண்டதாக காதல் உருமாறுகிறது. மோகத்தின்போது ஏற்படும் மாயைகள் தவிர்க்க முடியாமல் ஏமாற்றத்தை ஏற்படுத்துகின்றன என்பதை உளவியலாளர் அடம் பிலிப்ஸ் (Adam Phillips) விபரித்துள்ளார். தான்யாவின் கவிதையிலும் இதனைக் காணலாம்.

'எல்லா கதவுகளும் மூடிய பின்
உணர்ச்சி பிரவாகமாய் ஊறி
என்னைக் குலைக்கும்
உன் வாசல் திறக்கும்போதே
கதவுஅடைப்புக்களையும்
சொல்லி விடுகிறது.
மாதம் தவறாத விலக்காய்
உனது எச்சரிக்கை எழும்
அவற்றுக்கு ஒத்திகை பார்க்கத் தயாராய்
எனது விடியல்கள்...'

*– சாகசக்காரி பற்றியவை, பக். 21*

கவிதையில் நீடித்த பேரின்பத்தைக் கண்டறிவதற்கும் நிலையான காதலைப் புலப்படுத்துவதற்கும் இயற்கை உதவுகின்றது. தன்னாற்றலால் மனித வாழ்வைக் கவரவும் மாற்றவும் வரம்பற்ற தன்மைகொண்ட இயற்கையால் முடியும். சங்க இலக்கியம் தொட்டு இற்றைவரை அகப்பாடல்களில், இயற்கை செல்வாக்குச் செலுத்தி வருகிறது. ஒரு புதிய உணர்வை இயற்கை அளிக்கிறது. ஈழத்து நவீன கவிதையிலும் பெண்ணானவள் தன் மனவுணர்வை நுட்பமாகவும் தெளிவாகவும் புலப்படுத்த இயற்கை பயன்படுத்தப்படுகிறது. இதனை மைதிலி அருளையாவின் 'ஒரு மழைநாளில்' கவிதையில் காணலாம்.

'பச்சை இலைகளின் மீதுபடர்ந்த
மழைத்துளிகளின் சப்தம்
உன் முத்தத்தை
நினைவுபடுத்தியது...
காற்றின் வீச்சில் துளிர்த்த
துளிகளின் அழுத்தத்தில்
புன்சிரிப்புகள் சூழ்ந்து கவிந்தன...
ஃற்ப்பில் சடசடக்கிற
பறவைகளின் ஒலிகளை
உள்வாங்கிக் கொண்டிருக்கிறது
இந்தக்காற்று
உன்னைண்ணியே துடித்துக் கொண்டிருக்கிறது
இந்தக்கவிதை...'

*– மாசி - பங்குனி, 1995, கவிதை இதழ், பக். 20*

இயற்கை உள்ளக்கிளர்ச்சியைத் தூண்டி மோகத்தை உருவாக்கும். குறிப்பாக மழைக்காலம் உணர்வுகளைத் தூண்டி காமத்தைக் கிளர்த்தும் தன்மைகொண்டது. இத்தன்மையின் உள்வாங்கலும் வெளிப்பாடுமே ரேவதியின் 'நீ... நான்... மழை' என்ற கவிதை ஆகும். ஆணின் ஸ்பரிசமும் அவனுடைய நினைவுகளும் சுயம் இழந்து தவிக்கும் பெண்ணின் உள்ளத்து உணர்வுகளும் இக்கவிதையில் நுண்ணுணர்வுக் கூடாக வெளிப்படுத்தப்படுகிறது.

'கண்ணாடியால் தெறித்து
என் உதட்டில் வழிந்த
ஒருதுளி
மழை
எனை என்மையாய் சிலிர்ப்பிக்கிறது ...
போனேன் நான்
உயிர்ப்பெடுக்க முடியாமல் இயலாமையால்
கண்கள் கலங்க பற்கள் உதடுகள் கடித்து கண்ணீரை
அடக்கிக் கொண்டது.
வாழ்தலின் உயிர்
மூச்சாய் ஏங்கி
கால்கள் தன் வழி தொடர்கிறது.
அவன்
இப்பொழுதும் ஆராய்ந்து
கொண்டிருக்கக்கூடும்
இந்த சமூகத்தின் ஒழுக்கக்
கட்டமைப்பை
பற்றி'



*– 1997, ஜூலை 31 - ஒகஸ்ட் 13, சரிநிகர், பக். 15*



காதல் என்பது ஒருவருக்கொருவர் உண்மையாய் இருத்தல் ஆகும். பரஸ்பரம் நேசிப்புக்கு அப்பால் விட்டுக்கொடுப்பு, சகிப்புத் தன்மை என்பன காதலில் முக்கியம் பெறுகின்றன. காதல் வயப்பட்ட இருவருள் ஒருவருக்கு துன்பமொன்று நிகழும்போது மற்றொருவர் அத்துன்பத்தினைப் பகிர்ந்து கொள்பவராகவும் அதன் பங்காளராகவும் இருப்பர். தாட்சாயிணியின் ‘கேட்காத கேள்விகள்75’ என்னும் கவிதை வெறும் உதட்டளவில் விட்டுச் சென்ற பகிர்தலையும் பகிர்தலுக்கான நேசிப்பையும் பதிவு செய்கிறது. கருத்தொருமித்த, புரிந்துணர்வுக்கூடான இரு மனங்களின் இணைவே காதல். அக்காதல் பெண்ணின் தன் சுயத்துவத்தை இழப்பதற்குக் காரணமாக அமையக்கூடாது என்பதை லறீனா ஏ. ஹக்கின் ‘பிரிந்து செல்லுகை’ என்னும் கவிதை மிக நுட்பமாக எடுத்துரைக்கிறது.

‘போதும்!
நீயாக நானும்
நானாக நீயும் உணர்ந்து
சுயம் தொலைத்து
சாத்தியமற்றதின் வெளிச்சத்தில்
விடியல் தேடியது...
இனியேனும்
நான் நானாகவே
உயிர்க்க விழைகின்றேன்’

பெண்ணுணர்வையும் வேட்கையையும் வெளிப்படுத்திநிற்கும் அகம் சார்ந்த கவிதைகள் சங்க இலக்கியத்தின் அகத்திணைப்பாடல்களைப் போலன்றி பாலின சமநிலை நோக்கில் தம்மை வெளிப்படுத்தி நிற்கின்றன. பாலின சமநிலை நோக்கில் எழும் நவீன கவிதையானது பெண்ணினுடைய அகம்சார் அனுபவப்பகிர்வாகவும் உணர்வுகளின் வெளிப்பாடகவும் தோன்றியது. இக்கவிதைகள் கலையழகியலுக்கூடாக அகம்சார்ந்த உணர்வுகளை வெளிப்படுத்தி வெற்றியும் கண்டுள்ளன.

தனக்கு நெருக்கமான ஒருவரின் உடலின் வாசனையைப் பாடும் கவிதைகள் சிலசமயங்களில், ஆழமும் நெருக்கமுமானதாகவும், மனதைத் தூண்டுவதாகவும் இருக்கும். உலகில் நாம் காணும் பொருட்கள் பலவற்றுக்கு இயற்கையான வாசனை உண்டு. மரஞ்செடி, கொடிகளுக்கு விலங்குகளுக்கு வாசனை இருப்பதுபோல மனிதருள் இரு பாலானவர்களுக்கும் வாசம் உண்டு. மீறியும் மீறாத முன்நகர்தல் என்ற தலைப்பில் மலராவின் கவிதைகளுக்கு பின்னுரை எழுதிய சண்முகம் சிவலிங்கம் இது குறித்து விரிவாகவே பேசிச் செல்வார். மலராவின் ஆண்வாசனை நுகர்வை மையப்படுத்தி மலரா எழுதிய கவிதைகள் பெண்ணின் தாபத்தை வெளிப்படுத்தும் இயல்புகொண்டவை.

‘படுத்துறங்கிய பூப்போட்ட தலையணையில்
பதிந்துபோன உன் வாசனையை
எக்கணமும் எனையமிழ்த்தும்...’

- புதிய இலைகளால் ஆதல், பக். 87-88

மலராவின் கவிதைகளில் ஆண் வாசனை ஆழப்பதிந்த நினைவுகளை மீட்க உதவுகிறது. மனதுக்கு ஆறுதலையும் பாதுகாப்பையும் தருவதாக இவ்வாசனை காணப்படுகிறது. ஒருவரைத் தொடும்போது நெருங்கி இணைந்து பழகும்போது இவ்வாசனையை உணர்ந்து கொள்ளலாம். கிறிஸ்டியானோ ராண்டினின் ‘உங்கள் வாசனை, என் காதல்’ (Your scent, my love’ by Cristiano Rantin) என்ற ஆங்கில கவிதையும் இதனைத் தெளிவுபடுத்துகிறது. மலராவின் காதல் கவிதைகள் மனித வாழ்வோடு ஆழப்புதைந்தவை. பெண்ணின் அபிலாசைகளை வெளிப்படுத்தி நிற்பவை.

‘உன் பிரியத்தை நீ
போராடிப் புரிய வைக்கவேண்டாம்
தழுவி
மூச்சிறைத்து
வியர்த்து சோரவேண்டாம்...
அன்பே,
விடுதலையாய் உனை நீ
உணரும் பொழுதுகளில் மாத்திரம்
உன் மடியில் சிறிது எனை வளர்த்து
தலைகோது
விரல்கள் பிணை
பின் கொஞ்சம் கண்ணயர்வேன் விடு...’

– புதிய இலைகளால் ஆதல், பக். 79

மனதை ஊடறுத்துப் பாயும் அன்புப் பிரவாகத்தில் கணவனிடம் பெண் எதிர்பார்க்கும் மன அபிலாசைகளை இக்கவிதை உணர்பூர்வமாக வெளிப்படுத்திச் செல்கிறது. தாம்பத்திய வாழ்க்கையின் ஆதாரமாகவும், நம்பிக்கையின் ஊற்றாகவும் அன்பே காணப்படுவதை இவரின் கவிதைகள் உணர்த்திநிற்கின்றன.

உடைந்த உள்ளத்துடன் காதல் தோல்வியைப் பாடும் பெண்களின் கவிதைகள் மனத்தில் கவிந்திருக்கும் வலியில் இருந்து பிறப்பவை. துரோகம், இழப்பு, பிரிவு, துக்கம், சோகம் மற்றும் வெறுமை உணர்வுகளில் இருந்து பிறக்கும் இக்கவிதைகள் கொந்தளிக்கும் மனதுக்கு ஆறுதல் அளிப்பவை. அனுபவங்களின் வாய்க்காலாகவும் இக்கவிதைகள் காணப்படுகின்றன. மனக்காயங்களின் வடுவாகவும் இழப்பின் வேதனையாகவும் ஆறாச்சோகத்தின் எண்ணப் பிரதிபலிப்பாகவும் இக்கவிதைகள் காணப்படுகின்றன. நேசிப்புக்குரியவனை இழப்பது மீட்சிக்குள் அடங்காத துன்பம். வேதனையின்



வலியையும் ஆறாச்சோகத்தையும் தில்லையின் கவிதை யிலும் காணலாம்.

‘உன் மரணத்தை
நினைவுறுத்தும்
கண்ணீரும்
என் வாழ்தலுக்காய்
காத்திருக்கும்
நானுமாய்
மிஞ்சியிருக்கிறது காலம்’

– விடாய், பக். 47

காதலின் நிலையையும் அதன் நெருக்கத்தையும் ‘காயத் ரியின் இருட்டின் காதலி’ தொகுப்பு வெளிப்படுத்தி நிற்கிறது. உறவின் இழை அறாத பிரிவின் ஏக்கத்தையும், வலியையும் ஆறாக்காதலையும் ‘காதலர் பிணைப்புகள்’ என்ற கவிதை உணர்த்தி நிற்கிறது.

‘உன் வழித்தடம் பார்த்து
பெருமூச்செறிக்கிறேன்
நமக்கான நிமிடங்களை
அனுதினமும் மீட்டியபடியே
சருகான ஞாபக அலைகள்
உதிர்ந்து சிதறிக் காத்திருக்கும்...’

சுயமரியாதை தொலைந்த நிலையில் உள்ள பெண்ணின் உள்ளத்து உணர்வுகளையும் நிராகரிப்பின் வலியையும் ஃபஹீமா ஜஹானின் ஆதித்துயர் வெளிப்படுத்தி நின்றது. சிதைக்கப்பட்ட ஆத்மாவின் பாடுகளைப் பாடுவதாக அவருடைய கவிதைகள் காணப்படுகின்றன. மனதளவில் ஏற்பட்ட வெறுமையையும் தவிர்க்க எண்ணா ஆறாச்சோகத் தையும் இக்கவிதைகள் எடுத்துக்காட்டின. மரபுக்குள் வாழ்ந் துகொண்டு சமூகச் சூழலை எதிர்க்க முடியாத பெண்ணின் அவலத்தையும் கண்ணீரோடு அவள் கழிக்கும் காலத்தையும் ஃபஹீமா ஜஹானின் கவிதைகள் கூறிநிற்கின்றன.

‘எல்லாம் முடிந்து போனபின்
மனதின் கருணையையும் அன்பையும்
காற்றிலே கிழித்தெறிக்கிறேன்
குருவிச் சொண்டுகளில் காவிச் சென்றவை
கூடுகளைக் கதகதப்பாக்கிக் கொள்ளட்டும்
யாருக்கு வேண்டுமினி
நிராகரிப்பின் வேதனைகள்?...’

நிறைவேறாத ஆசைகளின் பிரதிபலிப்பையும் ஆழமான நேசிப்பின் மனவேட்கையையும் பெண்ணியாவின் கவிதை களில் காணலாம். தனிமையின் தகிப்பில் புழுங்கித் தன்னை ஆசுவாசப்படுத்தும் கவிதைகளைப் பெண்ணியாவும் எழுதி யுள்ளார்.

‘உன் பெயரை உச்சரிப்பதில் தான்
என் உணர்ச்சிகள் மெய்ப்படுகின்றன
சிறது உன்னை நினைக்கின்றேன்
பிறகு அழுகுகிறேன்
என் ஆத்மார்த்தமான காதல்
நீ புரியாதது
இப்போது நீ இல்லை
ஆனபோதும் நான் நேசிக்கிறேன்
அதைப் புரியாமலேயே நீ போய்விட்டாய்...’

– என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை, பக். 21

பெண்ணியாவின் எழுத்துகள் சோகத்தில் இருந்து பிறப்பவை. அமைதியிழந்த அவரின் மனதுக்கான வடிகாலே ‘உதிரும் இலைக் கனவு’ என்ற கவிதை. கூட்டுக்குள் நத்தையாய் ஒடுங்கி மௌனமாய் வாழும் சப்தமற்றுப் பாயும் உணர்வின் வேட்கையை இக்கவிதை துல்லியமாய் உணர்த்தி நிற்கிறது. பிரிவை நினைத்து உளங் கலக்கும் பெண்ணின் இருப்பை இக்கவிதை உணர்த்தி நிற்கிறது. அனார் பெண்ணியாவில் இருந்து வித்தியாசமானவர். வாழ்வின் பிரளயங்களைச் சந்தித்தவர். எவ்விடரினையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பவர். பாரதி கண்ட புதுமைப் பெண்ணை அவரின் கவிதைகளில் காணலாம்.

‘என் உடல் செஞ்சாம்பல் குழம்பு
கத்திகளால்
கைகளையோ கனிகளையோ
வெட்டிக்கொள்ளாதவள்
காதலால் கத்தியை உடைத்தவள்
நான் யூசுப்பைக் காதலிப்பவள்
சுலைஹா...’

– பெருங்கடல் போடுகிறேன் - பக். 19

‘காதலால் கத்தியை உடைத்தவள்’ என்ற படிமமும் இறை தூதரான நபி யூசுப் அவர்களைக் காதலித்த எகிப்து நாட்டின் அமைச்சரின் மனைவியான சுலைஹா என்னும் தொன்மமும் கவிதைக்கு அர்த்த பரிமாணத்தைக் கொடுக்கிறது.

காதலின் பன்முகத் தன்மையை ஆண், பெண் இருபாலரும் பாடியுள்ளனர். காதலின் தீவிரத்தையும், மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தும் இக்கவிதைகள் இதன் எதிர் நிலைத்தன் மையான பிரிவு, வேதனையின் பாற்பட்டும் பிறப்பவை. வாழ்க்கைப் பயணம் முழுவதும் அதன் நீடிப்புத் தொடர் கிறது. சில கவிதைகள் அன்பின் மாய அல்லது ஆன்மீக அம் சங்களிலும் கவனம் செலுத்துகின்றன. அதேசமயம் ஆன்மீ கத்தில் இருந்து விடுபட்டு மோகத்தையும் வெளிப்படுத்தும் இயல்பும் கவிதைக்குண்டு. அன்பின் நீரோட்டத்தில் கலந்து வாழ்வின் இனிமையை வெளிப்படுத்தும் இக்கவிதைகள் சக் திவாய்ந்த, எந்நாளும் அழியா மாகவிதைகளாய் விளங்கும் என்பதில் ஐயமில்லை.



ramesh.s@thaiveedu.com

# தண்ணீருக்குத் தவிக்கும் கென்யக் காடுகள்

– சதீஸ் செல்வராஜ் –



1989-ஆம் ஆண்டு, கென்யா நாட்டின் நைரோபி நகரத்தில் இருந்த ஒரேயொரு இயற்கைப் பூங்காவான உகூரு பூங்காவை (Uhuru Park) அழித்து, 62 மாடிகள் கொண்ட வணிகக் கோபுரமும் வாகன நிறுத்துமிட வளாகமும் அமைக்க கென்ய மத்திய அரசு திட்டமிட்டது. இயற்கையை காதலித்து காத்து நின்ற சுற்றுச்சூழல் ஆர்வலர் வாங்கரி மாத்தாய் (Wangari Maathai) என்ற பெண்மணி இத்திட்டத்தை எதிர்த்து உறுதியான போராட்டத்தை முன்னெடுத்தார். அவரை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். தடியடி, மிரட்டல் மற்றும் பொய்யான குற்றச்சாட்டுகள் என பல்வேறு அடக்குமுறைகள் அவர் மீது பாய்ந்தன. ஆனால், வாங்கரி மாத்தாய் அவர்களுக்கு உள்ளூர் மக்களிடமும் சர்வதேசத்திலும் பெரும் ஆதரவு கிடைத்தது. இதன் விளைவாக, அரசு தனது திட்டத்தை கைவிட்டது. இந்தப் போராட்டம் வாயிலாக வாங்கரி மாத்தாய் மற்றும் அவரது அமைப்பான பச்சைப் பட்டை இயக்கம் (Green Belt Movement) உலகளவில் கவனத்தை ஈர்த்தது. 2004-ஆம் ஆண்டு, பேண்தகு வளர்ச்சி (sustainability) மற்றும் அமைதிப் பணிகளுக்காக வாங்கரி மாத்தாய் நோபல் பரிசு பெற்றார்.

இன்றும்கூட கென்ய நாட்டு பூங்காக்கள், வானாந்திரங்கள் உள்ளிட்ட தாவரப் போர்வையைக் காப்பாற்றுவதற்கு ஆயிரமாயிரம் வாங்கரி மாத்தாய்கள் தேவைப்படுகிறார்கள். மரங்கள் மிக மோசமாக வெட்டி சாய்க்கப்படுவதால் ஏற்பட்டிருக்கின்ற தண்ணீர் பற்றாக்குறைக்குத் தீர்வுகாண பலம்பொருந்திய போராட்டமொன்றை கென்யாவில் நடத்தப்பட வேண்டியிருக்கிறது. இயற்கைக்கும் மனிதருக்கும் இடையில் அமைதியை நிலைநாட்ட வேண்டியிருக்கிறது. கென்ய நாடு பாலைவனமாகி வருவதை தடுத்தாக வேண்டியிருக்கிறது. இதனைச் சாதிக்க வாங்கரி மாத்தாய்கள் எழுந்து வரத்தான் வேண்டும். அதற்கு முன்னர் கென்ய நாட்டு காட்டு மரங்களின் மரண சாசனங்களை வாசித்தாக வேண்டும்.

கென்யக் குடியரசு கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள ஒரு நாடு ஆகும். நரோபி இதன் தலைநகராகும். நடுநிலக் கோட்டில் அமைந்துள்ள கென்யாவின் எல்லைகளாக, தெற்கு மற்றும் தென்மேற்கே தன்சானியா, மேற்கே உகாண்டா, வட-மேற்கே தெற்கு சூடான், வடக்கே எத்தியோப்பியா, வட-கிழக்கே சோமாலியா ஆகிய நாடுகள் காணப்படுகின்றன. இந்நாடு மனித இனம் தோன்றிய புவியியல் பகுதியில் அமைந்திருக்கிறது. இங்கு 4 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனித இனத்துக்கு நெருக்கமான ஆஸ்ட்ரலோபிதேகஸ், ஹோமோ எபிலிஸ் போன்ற ஹோமினின்களின் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதனால் மனிதகுலத்தின் தொட்டில் (Cradle of Humankind) என்ற பட்டமும் கென்யாவுக்கு உண்டு. சிறப்புமிக்க இந்த நாட்டில் காடுகள் பெரும் ஆபத்தில் இருக்கின்றன.

1963-இல் கென்ய நாடு சுதந்திரம் பெற்றபோது, அந்நாட்டின் மொத்தப் நிலப்பரப்பளவில் 10 சதவீதம் காடுகளைக் கென்யா கொண்டிருந்தது. ஆனால், காலப்போக்கியில் இந்த அளவு 6 சதவீதம் வரை குறைந்துவிட்டது. 2001-முதல் 2022-வரையிலான 22 வருடங்களில் ஆண்டுக்கு ஏறக்குறைய 12,000 ஹெக்டேர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இந்தத் தொடர்ச்சியான காடழிப்பு, நாட்டின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் உயிரியல் பன்மை மீது தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

கென்யா சுதந்திரம் பெற்றபோது எஞ்சியிருந்த காடுகளே குறைவானதுதான் என்ற கருத்தும் நிலவுகிறது. ஏனெனில் சுதந்திரத்திற்கு முன்னர், குறிப்பாக 1950-களில், காடுகள் 12% முதல் 15% வரையிலும் இருந்திருக்கலாம் என்று சில மதிப்பீடுகள் கூறுகின்றன. ஆனால் அந்தக் காலத்துக்கான துல்லியமான அதிகாரபூர்வ தரவுகள் மிகக் குறைவாக உள்ளதால், கென்யா 1963-இல் இருந்த 10% அளவையே இற்றைவரையும் ஆதாரபூர்வமாகப் பயன்படுத்தப்படுகிறது.

1895 முதல் 1963-வரை கென்யா பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் ஒரு காலனியாக இருந்தது. முதலில் பிரித்தானிய கிழக்கு ஆபிரிக்க பாதுகாப்பு வலயம் (British East Africa Protectorate) என அழைக்கப்பட்ட இப்பகுதி, 1920 முதல் பிரித்தானிய முடிக்குரிய கென்யக் காலனி (British Crown Colony of Kenya) எனப் பெயர் மாற்றப்பட்டு, நேரடியாக பிரித்தானிய ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டது. காலனித்துவ காலத்தில், உயர்நில மலைப்பகுதிகள் ஐரோப்பிய குடியேறிகளுக்காக ஒதுக்கப்பட்டது.

அவர்கள் காடுகளை அழித்துப் பண்ணைகளை உருவாக்கினார்கள். இவை உள்ளூர் ஆபிரிக்க மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட பாரம்பரிய நிலங்களாகும். கறுப்பினத்தவர்களை விரட்டியடித்து விட்டு இப்பகுதிக்கு White Highlands என்று பெயரிட்டனர். ஏனெனில், வெள்ளையர்களுக்கு மட்டுமே சொந்தமான, அவர்கள் மட்டுமே வசிக்கின்ற இடமாக இந்த மலை பிரகடனப்படுத்தப்பட்டது.

காலனித்துவ காலத்தில் இயற்கை வளங்களும், பாரம்பரிய வாழ்க்கையும் பிரித்தானியரால் எவ்வாறு அழிக்கப்பட்டது என்பதற்கு உதாரணமாக ஒரு கதையைப் பார்ப்போம். 'காலனியர் ஒருவர் தனது பிரபலமான வேளாண் பண்ணை அமைப்பதற்காக, அங்கிருந்த பெரிய பழமையான மரங்களை வெட்டினார். அடுத்த நாள் அந்த பெரும் நிலப்பரப்பே வெட்டவெளியாக்கப்பட்டது. அதைப் பார்த்து வெள்ளையரே அதிர்ச்சியடைந்தார். அங்கிருந்த ஒரு வயதான கிகுயு இன மூதாட்டி, 'இந்த மரங்கள் நம்ம வாழ்வின் அங்கம். அவற்றை அழிக்கும்போது நம் சமுதாயமும் அழியும்' என்று கண்ணீர் மல்க அழுதுப் புலம்பி அங்கிருந்து சென்றுள்ளார். இவ்வாறாகத்தான் ஈவிரக்கமின்றி காடுகள் அழிக்கப்பட்டன.

> ***1963-இல் கென்ய நாடு சுதந்திரம் பெற்றபோது, அந்நாட்டின் மொத்த நிலப்பரப்பளவில் 10 சதவீதம் காடுகளைக் கொண்டிருந்தது. ஆனால், காலப்போக்கியில் இந்த அளவு 6 சதவீதம் வரை குறைந்துவிட்டது. 2001-முதல் 2022-வரையிலான 22 வருடங்களில் ஆண்டுக்கு ஏறக்குறைய 12,000 ஹெக்டேர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன.***

களாகவும், பல்வேறு உயிரினங்களின் வாழ்விடங்களாகவும் செயல்படுகின்றது. மேலும், காற்றைப் சுத்திகரிப்பதிலும், பசுமையைப் பாதுகாப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால் ஐரோப்பியர்கள் வருகை தந்த பின், வனங்களைப் பாதுகாக்கும் பெயரில் பல சட்டங்கள் உருவாக்கப்பட்டன. அவை உள்ளூர் மக்களின் வாழ்வாதாரத் தேவைகளைக் கருத்தில் கொள்ளாததால், மக்கள் வனங்களைச் சட்டத்திற்குப் புறம்பாகவே பயன்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். 1933-ஆம் ஆண்டில் 28,199 ஹெக்டேர் பரப்பளவு கொண்டிருந்த காகமேகா காடு, 2008- ஆம் ஆண்டில் 18,887 ஹெக்டேராகக் குறைந்தது.

1970 தொடக்கம் 1990-வரையான காலப்பகுதியில் கென்யாவில் அதிகளவில் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. தற்போது, கரிக்கட்டை உற்பத்தி, வெட்டுமரத் தொழில் காரணமாக மரங்கள் வெட்டப்படுகின்றன. 2001 முதல் 2014-வரையான காலப்பகுதியில் அமெரிக்காவின் மாநிலமான ரோட் தீவின் (Rhode Island) பரப்புக்கு இணையான காடுகள் கென்யாவில் அழிக்கப்பட்டுள்ளன.

கோப்பி, தேயிலை, பஞ்சு போன்ற வர்த்தகப் பயர்களை வளர்ப்பதற்காகவே முதலில் பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. வெட்டுமர வளங்களை (timber resources) பிரித்தானிய நிறுவனங்கள் எல்லையின்றிப் பயன்படுத்தின. தமக்கான வசதிவாய்ப்புகளை பிரித்தானியர் உருவாக்கிக் கொண்டனர். உள்ளூர் மக்களுக்கு கல்வி, சுகாதாரம் மற்றும் அரசியல் உரிமைகள் மிகவும் குறைவாகவே இருந்தன. இந்த ஒடுக்குமுறைகள் மற்றும் நில அபகரிப்புக்கு எதிராக 1952-ஆம் ஆண்டு கிகுயு மக்களின் தலைமையில் மௌ மௌ ஆயுதக் கிளர்ச்சி (Mau Mau Rebellion) வெடித்தது. சுதந்திரப் போராட்டம் தீவிரமானது. இதன் விளைவாக, 1963-ஆம் ஆண்டு கென்யா சுதந்திரம் பெற்றது. 1964-இல் கென்யா ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

அதுபோலவே, 1933 முதல் 1963-வரையிலான காலப்பகுதியில், கென்யாவின் காகமேகா காடு (Kakamega Forest) முக்கியமான மாற்றங்களுக்கும் அழிவுகளுக்கும் உட்பட்டது. இந்த வனப்பகுதிகள் மனித வாழ்விற்கு தீவிர முக்கியத்துவம் வாய்ந்தவை. அவை நீர்வீழ்ச்சிகளுக்கான மூலப்பகுதி

2009-ஆம் ஆண்டில், கரிக்கட்டை மற்றும் வெட்டுமரத் தொழில், விவசாய விரிவாக்கம், நகரமயமாக்கல் ஆகிய பல காரணிகளால் காடுகளின் பரப்பளவு 6 சதவீதமாகக் குறைந்தது. இந்த மாற்றங்கள் மண் அரிப்பு, வெள்ளப்பெருக்கு மற்றும் நீர் இருப்பு குறைதல் உள்ளிட்ட பல்வேறு தீவிர பாதிப்புகளைக் கென்யாவில் ஏற்படுத்தின.

கென்யாவின் காடுகள் துண்டாடப்பட்டு தூரதூர இருக்கின்றன. இருப்பினும், ஒருங்கிணைந்த பரப்பளவு 37 மில்லியன் ஹெக்டேர்களுக்கு மேல் காணப்படுகின்றன. இதில் 2.1 மில்லியன் ஹெக்டேர்கள் வனப்பகுதிகளாகவும், 24.8 மில்லியன் ஹெக்டேர்கள் புதர் நிலங்களாகவும், 10.7 மில்லியன் ஹெக்டேர்கள் மரங்களால் நிறைந்த புல்வெளிகளாகவும் உள்ளன. கென்யாவின் காடுகள் உலகளவில் போற்றபடுகின்றன. ஏனெனில், இவை 1847 விதமான நீர்வீழ்ச்சிகள், பறவைகள், பாலூட்டிகள் மற்றும் ஊர்வன போன்ற உயிரினங்களை ஆதரிக்கின்றன. இதில் 4% உயிரினங்கள் மட்டுமே கென்யாவில் காணப்படுகின்றன. மேலும், வாஸ்குலர் தாவர வகைகளில்





6505 வகைகள் இங்கு உள்ளன, அவற்றில் 4.1% தான் கென்யா நாட்டில் மட்டுமே காணப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆனால், அதிகரித்து வரும் காடழிப்பின் தீவிரத்தன்மையால் நாட்டின் உயிரின வகைகள் மற்றும் சூழல் நிலைக்கு பாரிய அழிவு ஏற்படுகிறது. எனவே, காடுகளைப் பாதுகாப்பது கென்யாவின் சூழல் மற்றும் உயிரியல் வளங்களின் நீடித்த வளர்ச்சிக்கான அவசியமான பணியாக உள்ளது.

ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பும் (UNEP), கென்யா வன சேவையும் (KFS) இணைந்து மேற்கொண்ட ஆய்வின் படி, காடழிப்பு காரணமாக கென்யாவுக்கு 2009-ஆம் ஆண்டில் 6.6 பில்லியன் கென்யன் ஷில்லிங்கும், 2010-ஆம் ஆண்டில் 5.8 பில்லியன் ஷில்லிங்கும் பொருளாதார இழப்பாக ஏற்பட்டது. இந்த இழப்புகள், ஆண்டுதோறும் வனவியல் மற்றும் மர வெட்டுத் துறைகளில் இருந்து கிடைக்கும் சுமார் 1.3 பில்லியன் ஷில்லிங்கை விட அதிகமாகும். இந்தப் பெறுபேறு, வனங்களை அழிப்பதைவிட பாதுகாப்பதே நாட்டின் நீடித்த பொருளாதார நலனுக்கும் சூழலியலுக்கும் மிகவும் முக்கியம் என்பதை உணர்த்துகிறது.

கென்யாவில் காடழிப்பின் நிலைமை தீவிரமடைந்து தற்போது வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறை உருவாகியிருக்கிறது. அதனால் காடுகளும் கூட மெதுவாகவே வளர்வதாகக் கண்டறியப்பட்டுள்ளன. கென்யாவில் நிலவும் தண்ணீர் பஞ்சமானது, குடிநீரை மட்டுமின்றி விவசாயம் மற்றும் மீன்பிடிக்கும் நீர் ஆதாரங்களையும் பாதித்துள்ளது. பல பகுதிகளில், ஈரநில புற்கள் கால்நடைகளுக்கு உணவளிக்கவும் பராமரிக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. காடுகள் அழிக்கப்பட்டதனால் மண் அரிப்பு அதிகரித்து, தண்ணீர் மாசுபட்டு உள்ளது. இது நாட்டின் முக்கிய நீர்நிலைகளையும் பாதித்து, பல்வேறு நோய்கள் மற்றும் நீர் ஆதாரங்களை சுற்றியுள்ள மோதல்கள் போன்ற சமூக சிக்கல்களையும் உருவாக்கியுள்ளது. நைரோபி போன்ற பெரிய நகரங்களில் அதிக மக்கள் தொகை குடியிருப்புகள் உருவாகி, அங்கு அசுத்தமான நீர் பிரச்சினையும் தீவிரமாக உள்ளது. இதனால் சுத்தமான தண்ணீர் கிடைக்கும் தூரத்துப் பிரதேசங்களை நோக்கி மக்கள் பொடிநடையாக சென்று வருகின்றனர். நில மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் கொள்கைகளில் முன்னேற்றம் இல்லாவிட்டால், நாட்டின் நீர் பஞ்சம் மற்றும் அதனால் வரும் சமூக, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் மோசமாகும். எனவே, நீர் வளங்களின் பாதுகாப்பு மற்றும் சீரமைப்பு கென்யாவின் வளர்ச்சிக்கான முக்கிய கடமை ஆகும்.

**“ நில மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் கொள்கைகளில் முன்னேற்றம் இல்லாவிட்டால், நாட்டின் நீர் பஞ்சம் மற்றும் அதனால் வரும் சமூக, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் மோசமாகும். ”**

கென்யாவின் சுற்றுச்சூழல் அமைப்பில் காடழிப்பின் தீவிர விளைவுகள் நைவாஷா ஏரி (Lake Naivasha) மற்றும் அதன் சுற்றியுள்ள சமூகங்களில் அதிகமாக உணரப்படுகிறது. நைரோபிக்கு மேற்கே அமைந்துள்ள நைவாஷா ஏரி, அபெர்டேர்ஸ் மலைத்தொடரின் நீர் ஆதாரங்களை நம்பி உள்ளது. இம்மலைகளின் காடுகள் ஈரப்பதத்தை பராமரிப்பதிலும், குளிர்ச்சி அளிப்பதிலும், மேக மூட்டத்தை உருவாக்குவதிலும், நீரோடைகள் மற்றும் ஆறுகளுக்கு தேவையான மழைப்பொழிவை வழங்குவதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால் இப்பகுதியில் அதிகளவில் காடுகள் அழிக்கப்பட்டதால் இயற்கை நீர் சுழற்சி முற்றிலும் சீர்குலைந்தது. அபெர்டேர்ஸ் மலைகளின் மரங்கள் அழிக்கப்படுவதால், ஈரப்பதமும் மழைப்பொழிவும் குறைந்து நைவாஷா ஏரியில் நீர்மட்டம் குறைந்தது.

மேலும், மாரா நதிப் படுகையில் இடம் பெறும் காடழிப்பு, மண் அரிப்பு மற்றும் வெள்ளப் பெருக்குகளின் அதிகரிப்புக்கு வழிவகுத்துள்ளது. 1970-கள் முதல் 2000-களின் முற்பகுதி வரை மாரா ஆற்றின் சுற்றியுள்ள சவன்னா, புல்வெளி மற்றும் புதர் நிலங்கள் 27% குறைந்துள்ளன. அதே நேரத்தில் விவசாய நிலம் இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மேல் நீர்பிடிப்பு பகுதிகளில் நில அரிப்பு தீவிரமானது. தாழ்வான பகுதிகளில் வெள்ளப்பெருக்குகள் 7% அதிகரித்து, மாரா சதுப்பு நிலம் 387% வரை விரிந்துள்ளது. எனவே, காடழிப்பு கென்யாவின் நீர் வளங்கள், நிலத்தின் உற்பத்தித் திறன் மற்றும் சுற்றுச்சூழல் நிலையைத் தீவிரமாகப் பாதித்துள்ளது.

கென்யாவின் வடக்கு பகுதியில், லோயங்கலானிக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில், துர்கானா பழங்குடியினர் மற்றும் எரிக்கப்பட்ட ஆடுகளின் சடலங்களைக் கடந்து செல்லும் காட்சிகளைக் காணலாம். இது இந்நாட்டில் நிலவும் கடுமையான வறட்சியை வெளிப்படுத்தும் துயரமான காட்சியாகும். ஐந்து வருடங்களில் ஒருபோதும் இல்லாத அளவுக்குச் சிக்கலான வறட்சி இதுவென்று கூறப்படுகிறது. வறட்சியும் பட்டினியும் ஆயிரக்கணக்கான கால்நடைகளைக் கொன்றுவிட்டது. நோய்கள் பரவுவதைத் தடுக்க, கிராமவாசிகள் விலங்குகளின் சடலங்களை எரிக்க

தொடங்கியுள்ளனர். இந்த நிலைமைகள், காலநிலை மாற்றம், காடழிப்பு மற்றும் நிலச்சீரழிவின் நேரடி விளைவுகளாகும்.

இந்தக் காலநிலை நெருக்கடியை உலகம் இப்போது உணரத் தொடங்கியுள்ளது. ஆனால் தீர்வுகள் குறித்து விவாதிக்கும்போது, இயற்கையையும் இளைய சமுதாயத்தையும் பெரும்பாலும் தூரவைக்கின்றனர். இது ஆபத்தை விளைவிக்கக்கூடிய தவறாகும். கென்யாவைப் போன்ற நாட்டில், காடழிப்பு மற்றும் நிலச்சீரழிவை முறையாகக் கவனிக்காமல் கென்யாவின் முன்னேற்றத்தில் சாத்தியம் ஏற்படப்போவதில்லை. எனவே, இயற்கை பாதுகாப்பும் இளைய தலைமுறையின் பங்கும் காலநிலை நெருக்கடித் தீர்வுகளுக்குத் தவிர்க்க முடியாத காரணிகளாக அமைகின்றன.

கென்யாவின் ஐந்து முக்கிய மலைக் காடுகள், மழைக்காலங்களில் தண்ணீரை சேமித்து, வறண்ட காலங்களில் மெதுவாக வெளியேற்றுவதனால், அவை 'நீர் கோபுரங்கள்' (Water Towers) என அழைக்கப்படுகின்றன. இவை நாடு முழுவதும் பரவியுள்ள நன்னீர் வழங்கலில் 75% அளவுக்கு பங்களிக்கின்றன.

2000 முதல் 2010-வரையான காலப்பகுதியில், இந்த நீர் கோபுரங்கள் 28,000 ஹெக்டேருக்கும் அதிகமான காடுகளை இழந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) மதிப்பீடு செய்துள்ளது. இதன் விளைவாக, ஆண்டிற்கு ஏறக்குறைய 62 மில்லியன் கன மீட்டர் நீர் இருப்பு குறைவடைந்துள்ளது. இந்தக் காடழிப்பால் ஏற்பட்ட பொருளாதார இழப்புகள், அதே காலத்தில் வனத்துறையில் பெற்ற வருமானத்தைக் காட்டிலும் நான்கில் ஒரு மடங்காகும். இது, இயற்கை வளங்களை காக்கும் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் ஒரு முக்கிய எடுத்துக்காட்டாகவுள்ளது.

ஏறக்குறைய பத்து ஆண்டுகளுக்கு முன், கென்யாவின் அன்றைய அரசாங்கம் சுற்றுச்சூழல் சிக்கல்களின் தீவிரத்தை உணர்ந்து, 2030ஆம் ஆண்டுக்குள் நாட்டின் நிலப்பரப்பில் 10 சதவீத காடுகளை மீள கட்டியமைக்கும் வகையில் அரசியல் அமைப்பில் மாற்றங்களைச் செய்துள்ளது. சுமார் 1.6 மில்லியன் ஹெக்டேர் நிலத்தை மீண்டும் காடாக்கும் முயற்சியில் கென்யா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

ஆனால், ஆரம்பக் கால முயற்சிகள் பல்வேறு சவால்களால் தடைபட்டன. சட்டவிரோதமாக மரம் வெட்டுதல், நில உரிமைத் தகராறுகள் மற்றும் அரசியல் சிக்கல்கள் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியாதபடிக்கு திசையை மாற்றின. இருந்தாலும், சில நம்பிக்கையூட்டும் முன்னேற்ற சுடர்களும் தெரிகின்றன. அரசாங்கம் 10% காடளவுக்கான இலக்கை நோக்கி நகரமுயற்சித்துள்ளது. மேலும், அவ்விளக்கத்தை அடைவதற்கான சட்ட கட்டமைப்பையும் உருவாக்கியுள்ளது. இதற்கு மேலும், கென்யா 2030ஆம் ஆண்டுக்குள் 5.1 மில்லியன் ஹெக்டேர் சிதைந்த மற்றும் அழிந்த நிலங்களை மீட்டெடுக்க உறுதியளித்துள்ளது. பான்-ஆப்பிரிக்க அளவில் 100 மில்லியன் ஹெக்டேர் நிலங்களை மீட்டெடுப்பதே எதிர்கால இலக்காக இருக்கிறது. உயர் தர மர நாற்றுகளை நிலையாகப் பெற்றுத் தருவது ஒரு சிக்கலாக இருப்பதாக குறிப்பிடப்படுகிறது. ஏனெனில், குறித்த இலக்கை அடைய 1.8 பில்லியன் மர நாற்றுகள் தேவைப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.



இந்நிலையில் சோம்பித்திரிவதற்கோ சாக்குபோக்கு சொல்வதற்கோ இடமில்லை. நமது முயற்சிகளை வேகமாக முன்னோக்கி நகர்த்த வேண்டிய கட்டாய சூழ்நிலை கென்யாவில் நிலவுகிறது. ஒரே தீர்வு இல்லை என்றாலும், உடனடி நடவடிக்கைக்கான முக்கிய வழிகளில் ஒன்று இயற்கையைப் பாதுகாக்கும் பணியில் இளைஞர்களை அணித்திரட்டுவதாகும். அதுபோலவே, ஆயிரக்கணக்கான வாந்தரி மாத்தாய்களை உருவாக்கிடவும் வேண்டும். பல பச்சை பட்டை இயக்கங்களை நிர்மாணித்திடவும் வேண்டும்.


**உசாத்துணை:**

- Illegal Deforestation for Forest-risk Agricultural Commodities Dashboard: Kenya
- Deforestation in Kenya! - Dean Weiss
- Kenya has lost nearly half its forests – time for the young to act - By Kaluki Paul Mutuku
- Kenya's Battle with Urbanization and Deforestation - https://www.finnpartners.com/
- Deforestation Costing Kenyan Economy Millions of Dollars Each Year and Increasing Water Shortage Risk - https://www.unep.org/news-and-stories/press-release/deforestation-costing-kenyan-economy-millions-dollars-each-year-and
- Kenya's water and sanitation crisis - https://water.org/our-impact/where-we-work/kenya/
- The Water Crisis in Kenya: Causes, Effects and Solutions - Samantha Marshall
- Wangari Maathai Biographical - https://www.nobelprize.org/prizes/peace/2004/maathai/biographical/





sathees.selvarajah@thaiveedu.com



# கண்ணுக்குத் தெரியாத ஆழமான ஓர் இழப்பு

ச.சத்யதேவன்

நாம் வாழும் நகரங்கள் வேகமாக வளர்கின்றன. இந்தப் பயணத்தில், சாலைகளின் இரு மருங்கிலும் கம்பீரமாய் நின்ற மரங்கள் அண்மைக் காலங்களில் வேகமாய் மறைந்து கொண்டிருக்கின்றன. புயல், முதுமை அல்லது திட்டமிடல் என எந்தக் காரணமாக இருந்தாலும், பலர் கவனிக்காத ஓர் உண்மை என்னவென்றால், ஒவ்வொரு மரமும் வீழும்போது, நம் நினைவுகளிலிருந்தும், நம் சூழலிலிருந்தும், நம் வசிப்பிடத்தின் அமைதியிலிருந்தும் ஏதோ ஒன்று உடைந்து போகிறது. இது கண்ணுக்குத் தெரியாத, ஆனால் ஆழமான ஓர் இழப்பு.

ஒக்ரோபர் 2023-இல், கொழும்பின் டுப்ளிகேஷன் வீதியால் சென்ற அரச பேருந்து மீது உயரமான மரம் விழுந்து பாரிய விபத்து இடம்பெற்றது. இவ்விபத்தில் ஐந்து பேர் உயிரிழந்தனர், 17 பேர் காயமடைந்தனர். இந்தத் துயரச் சம்பவத்தைத் தொடர்ந்து, சாலை ஓர மரங்கள் எதிர்பாராத ஆபத்தாகப் பேசப்படும் ஒரு தலைப்பாக மாறின. மோசமான வானிலை நாட்களில் நாடு முழுவதும் சாலை ஓர மரங்களால் ஏற்படும் விபத்துகள் ஒரு பொதுவான நிகழ்வாக இருந்து வந்தாலும், விபத்துகளின் தொடர்ச்சியான செய்திகளும், பாதிக்கப்பட்டவர்களின் அனுபவங்களும், சாலை ஓர மரங்கள் ஆபத்தானவை என்ற கருத்தை மக்கள் மனதில் ஆழமாகப் பதிய வைத்தன. அண்மைக் காலமாக அவை அச்சுறுத்தலாகக் கருதப்படுகின்றன.

கொழும்பு மற்றும் இலங்கையின் பிற பகுதிகளில் மரங்கள் விழுந்த விபத்துகளுக்குப் பிறகு, பாதுகாப்புக் காரணங்களுக்காக மரங்களை முழுமையாக அகற்றுவதற் கான விருப்பம் பெரிதும் அதிகரித்தது. மரத்தின் கிளைகளை மட்டும் வெட்டுவது (pruning) அல்லது வலுவிழந்த மரங்களுக்கு மரங்களுக்கு ஆதரவளிப்பது (providing support to weakened trees) போன்ற தீர்வுகளைக் காட்டிலும், மரங்களை முழுமையாக அகற்றுவதே உடனடி மற்றும் நிரந்தரமான தீர்வு என்ற எண்ணம் மேலோங்கியது. இதன் விளைவாக, நல்ல நிலையில் இருந்த மரங்கள்கூட வெட்டப்பட்டன.

இந்தச் சூழ்நிலைக்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவதாக, தொடர்ச்சியான விபத்துகள் பொது மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தின. எந்த நேரத்திலும் மரம் விழலாம் என்ற பதற்றம் காரணமாக, ஆபத்தானதாகக் கருதப்படும் எந்த மரத்தையும் உடனடியாக அகற்ற வேண்டும் என்ற வலுவான கோரிக்கைகள் எழுந்தன. இந்த மக்கள் அழுத்தமே, உள்ளூர் அதிகாரிகளை விரைவான முடிவுகளை எடுக்கத் தூண்டியது.

இரண்டாவதாக, மரங்களை நிர்வகிப்பது குறித்த சட்டக் கட்டமைப்பு - உதாரணமாக: உள்ளூராட்சி மன்றச் சட்டங்கள் மற்றும் மரங்கள் வெட்டுதல் கட்டுப்பாட்டுச் சட்டம் போன்றவை - இருந்தபோதிலும், அதன் நடைமுறைப்படுத்தலில் சவால்கள் இருந்தன.

பிரதேச சபை மற்றும் நகர சபை ஊழியர்கள் பல சமயங்களில் முறையான வழிகாட்டுதல் அல்லது நிபுணத்துவ ஆலோசனை இல்லாமல் மரங்களைப் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வெட்டினர். மரங்களின் ஆரோக்கியம், அவற்றின் அமைப்பு வலிமை மற்றும் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் ஆகியவற்றை மதிப்பிடுவதற்கான போதிய பயிற்சியோ, தொழில்நுட்ப அறிவோ இல்லாமல் அவசரகதியில் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய நடவடிக்கைகள், தேவையற்ற மரங்களை அகற்ற வழிவகுத்ததுடன், சாலையோர மரங்களின் கணிசமான அழிவுகளுக்கும் வழிகோலியது.

இறுதியில், பொதுப் பாதுகாப்பிற்கான அவசரத் தேவை, முறையான முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த நீண்டகாலக் கண்ணோட்டத்தை

பின்னுக்குத் தள்ளியது. இது, மரங்களை முழுமையாக அகற்றுவதைத் தடுக்கும் சட்டங்களின் நோக்கத்தையே கேள்விக்குள்ளாக்கியது.

சாலையோர மரங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உயர்ந்தபட்ச கரிசனை என்பது மரங்களில் சாலையோரமாக உள்ள பகுதியை வெட்டுதல் என்பதாகவே உள்ளது. அதாவது, மரங்களை முறையாகப் பராமரிப்பதற்கான விரிவான அணுகுமுறைக்கு பதிலாக, வாகனப் போக்கு வரத்து அல்லது பாதசாரிகளுக்கு இடையூறாக இருக்கும் எனக் கருதப்படும் மரத்தின் பகுதிகளை மட்டும் வெட்டுவதில் கவனம் செலுத்தப்பட்டது.

மரங்களைப் பற்றிய போதிய புரிதல் இல்லாமல், ஒரு பெரிய மரத்தின் ஒரு பகுதியை மட்டும் சமச்சீரற்ற முறையில் வெட்டும்போது, அதன் சமநிலையான எடைப் பகிர்வு பாதிக்கப்படுகிறது. இதனால் மரத்தின் ஈர்ப்பு மையம் (center of gravity) மாறிவிடுகிறது. இதன் விளைவாக, பலத்த காற்று மற்றும் புயல் (cyclone) போன்ற இயற்கைச் சீற்றங்களின் போது மரம் விழுந்துவிடும் வாய்ப்பு அதிகமாகிறது.

இப்படிப் பெரிய அளவில் வெட்டும்போது, மரத்தில் ஆழமான காயங்கள் (deep wounds) ஏற்படுகின்றன. இந்தக் காயங்கள் வழியாக நோய்க்கிருமிகளும் (pathogens) பூச்சிகளும் மரத்தினுள் எளிதாக நுழையும். இது மரத்தின் உள் அமைப்பைப் பலவீனப்படுத்தி, அழிவுக்கு வழிவகுக்கும். மேலும், மரத்தின் ஒளித்தொகுப்பு (photosynthesis) திறன் குறைவதோடு, 'நீர் முளைகள்' (water sprouts) எனப்படும் பலவீனமான புதிய கிளைகளும் தோன்றும். இவை மரத்தின் ஆயுளைக் குறைத்து, நீண்ட காலத்திற்கு ஆபத்தானதாக மாற்றிவிடுகின்றன.

குறிப்பாக, வெப்பமண்டல புயல் மற்றும் பலத்த காற்றுக்கு ஆளாகும் பகுதிகளில், இத்தகைய முறையற்ற கத்தரித்தல் (pruning) பலத்த காற்றுக்கு ஈடுகொடுக்கும் மரங்களை மேலும் பலவீனமாக்குகிறது. இதனால் பெரிய மரங்கள் வழங்கும் அத்தியாவசியமான நிழல் மற்றும் குளிர்ச்சி போன்ற நன்மைகளும் (benefits) குறைந்து, நகர்ப்புற வெப்பத் தீவு விளைவு (urban heat island effect) அதிகரிக்கிறது.

நகரங்களில் உள்ள மரங்கள் மிக முக்கியமான இரண்டு வேலைகளைச் செய்கின்றன. முதலாவதாக, அவை நிழல் கொடுத்து வெயிலின் தாக்கத்தைக் குறைக்கின்றன. இரண்டாவதாக, மரங்கள் தங்கள் இலைகள் வழியாக நீரை ஆவியாக்கி, சுற்றியுள்ள காற்றைக் குளிர்விக்கின்றன.

இந்த மரங்களை அகற்றுவதால், நகரப் பகுதிகள் மேலும் வெப்பமடைகின்றன. இது மக்களுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்துகிறது. அத்துடன், இந்த அதிகரித்த வெப்பம் மன அழுத்தத்தையும் மற்றும் உடல் நலக் கோளாறுகளையும் உருவாக்கும். இது 'Urban Heat Island Effect' என்று அழைக்கப்படுகிறது. எளிமையாகச் சொன்னால், மரங்கள் இல்லாததால் நகரம் ஒரு பெரிய வெப்பத் தீவாக மாறிவிடுகிறது.

> "சாலையோர மரங்களை அலட்சியமாக அல்லது முறையற்ற விதத்தில் அழிக்கும்போது, அதன் தாக்கம் சுற்றுச்சூழல் பாதிப்புடன் முடிந்துவிடுவதில்லை. நகரவாசிகள் மீது இது கணிசமான 'நகர்ப்புற உளவியல் தாக்கத்தை' ஏற்படுத்துகிறது"

சாலையோர மரங்களை அலட்சியமாக அல்லது முறையற்ற விதத்தில் அழிக்கும்போது, அதன் தாக்கம் சுற்றுச்சூழல் பாதிப்புடன் முடிந்துவிடுவதில்லை. நகரவாசிகள் மீது இது கணிசமான 'நகர்ப்புற உளவியல் தாக்கத்தை' ஏற்படுத்துகிறது. 'நகர்ப்புற உளவியல் தாக்கம்'(Urban Psychological Toll) என்பது நகர்ப்புற உளவியலில் உள்ள ஒரு கருத்தாகும். இது மனித நல்வாழ்வு, மன ஆரோக்கியம் மற்றும் நடத்தை ஆகியவற்றில் நகர்ப்புற வாழ்க்கை ஏற்படுத்தும் எதிர்மறை விளைவுகளை எடுத்துரைக்கிறது. நகரங்கள் வாய்ப்புகளையும் வசதிகளையும் வழங்கினாலும், அவை அதிகரித்த மன அழுத்தம், பதட்டம், சமூகத் தனிமைப்படுத்தல் மற்றும் பிற மனநலப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் தனித்துவமான சவால்களையும் முன்வைக்கின்றன. கூட்ட நெரிசல், சத்தம், காற்று மாசுபாடு, பசுமையான இடங்களின் பற்றாக்குறை மற்றும் வேகமான வாழ்க்கை முறை போன்ற காரணிகள் இந்தத் தாக்கத்திற்குப் பங்களிக்கின்றன. இதனால்தான், சாலையோர மரங்கள் அழிவது என்பது, வெறும் சுற்றுச்சூழல் கவலையைத் தாண்டி, மனித மனங்களின் ஆரோக்கியத்தையும் பாதிக்கும் ஓர் ஆழமான விஷயமாக மாறுகிறது. பெரும்பாலும், இதன் ஆழமான தாக்கங்கள் குறித்து அதிர்ச்சியூட்டும் கவனக்குறைவும், விழிப்புணர்வு இல்லாமையும் நிலவுகின்றது.

சாலையோரங்களில் காணப்படும் மரங்கள் வெறும் அழகுக்காக மட்டுமல்ல; அவை சுற்றுச்சூழலுக்கும், நமக்கும் எண்ணற்ற நன்மைகளை வழங்குகின்றன. கார்பனீரொக்சைட்டை உறிஞ்சி, உயிர் கொடுக்கும் ஒக்ஸிசனை வெளியிடுவதன் மூலம் காலநிலை மாற்றத்தைத் தணிப்பதில் அவை இன்றியமையாதவை. பெருகிவரும் நகரமயமாக்கப்பட்ட நிலப்பரப்புகளில், அவை இயற்கையான காற்று சுத்திகரிப்பனாகச் செயல்பட்டு, மாசுபடுத்திகளைப் பிடித்து காற்றைச் சுத்தப்படுத்துகின்றன.

அடர்ந்த மரங்களின் விதானம் அத்தியாவசிய நிழலை வழங்குகிறது, இது பெரும்பாலும் வெப்பமான சூழ்நிலைகளில் சுற்றுப்புற வெப்பநிலையைக் கணிசமாகக் குறைக்கிறது. இதனால் நடைபயிற்சி மற்றும் பயணம் வசதியாக மாறுவதுடன், நகர்ப்புற வெப்ப விளைவும் குறைகிறது. இதன் விளைவாக, குளிரூட்டுவதற்கான சக்தி நுகர்வு (energy consumption) குறைகிறது.

குறிப்பாக முதிர்ந்த சாலையோர மரங்கள், பல பறவைகள், பூச்சிகள் மற்றும் சிறிய பாலூட்டிகளுக்கு

முக்கியமான வாழ்விடங்களாகவும், உணவு ஆதாரங் களாகவும் திகழ்கின்றன. இவை அழிவது, நுட்பமான சுற்றுச் சூழல் அமைப்பு களைச் சீர்குலைத்து, உள்ளூர் பல்லுயிர் பெருக்கத்தின் சரிவுக்கு வழிவகுக்கும். மரங்களின் விரிவான வேர் அமைப்புகள் கனமழையின்போது மண் அரிப்பைத் தடுக்க உதவுகின்றன. அவை நிலத்தடி நீர் மட்டத்தை அதிக ரிக்கவும் பங்களிக்கின்றன. வெள்ளம் அல்லது நிலச்சரிவு ஏற்படும் பகுதிகளில் மரங்களின் இருப்பு முக்கியமானது. மரங்கள் இயற்கையான தடைகளாகச் செயல்பட்டு, ஒலியை உறிஞ்சி, போக்குவரத்திலிருந்து வரும் ஒலி மாசுபாட்டைக் குறைக்கின்றன. இதன் மூலம், அமைதியான மற்றும் வாழக் கூடிய சமூகங்களை உருவாக்கப் பங்களிக்கின்றன.

மரங்களின் இருப்பு நமது சுற்றுப்புறங்களின் அழகை மேம்ப டுத்துகிறது, மேலும் விரும்பப்படும் பொது இடங்களும் உரு வாகுகிறது. மரங்கள் இருக்கும் இயற்கையை அனுபவிப்பது மன அழுத்தத்தைக் குறைத்து, ஒட்டுமொத்த மன நலனை மேம்படுத்தும் என்றும் ஆய்வுகள் காட்டுகின்றன. நகரச் சூழலில் எப்போதும் ஏதேனும் ஒரு சத்தம், விளக்கு அல்லது காட்சி என நிறைய விஷயங்கள் நம்மைச் சுற்றிலும் இருக்கும். இது நம் மூளையைத் தொடர்ந்து வேலை செய்ய வைத்து, சீக்கிரமே சோர்வடையச் செய்துவிடும். ஆனால், மரங்கள் நிறைந்த இயற்கையான சூழல் இதற்கு நேர்மாறானது. அது நம் கவனத்தைச் சிரமமின்றி ஈர்க்கும் ஒரு 'மென்மையான கவர்ச்சியை' வழங்குகிறது. இதனால் மனம் புத்துணர்ச்சி பெறுகிறது.

சாலையோர மரங்களை அகற்றுவது, இத்தகைய எளிதாகக் கிடைக்கும் புத்துணர்ச்சி தரும் சூழல்களை நகரவாசிகளுக்கு இல்லாமல்ச் செய்கிறது. இதன் விளைவாக, அன்றாட வாழ்வில் ஏற்படும் மன அழுத்தத்திலிருந்தும், அறிவாற்றல் சார்ந்த சோர்விலிருந்தும் மீண்டு வருவது அவர்களுக்குக் கடினமாகிறது.

அடர்ந்த மரக்கிளைகள் ஒலியை உறிஞ்சி, சிதறடித்து, போக் குவரத்து மற்றும் நகர்ப்புற இரைச்சலின் கடுமையைக் குறைக்கின்றன. இந்த இயற்கையான ஒலித் தடைகளை அகற்றுவது, அப்பகுதியில் வசிப்பவர்களை அதிக அளவி லான ஒலி மாசுபாட்டிற்கு ஆளாக்குகிறது. இது மன அழுத்தம், தூக்கமின்மை மற்றும் இதய நோய்கள் போன்ற பிரச்சினைகளுக்குக் காரணமாக அமையலாம்.

சிறிய அளவிலான பசுமையான இடங்கள்கூட, மன அழுத்த அளவைக் கணிசமாகக் குறைத்து, மன அமைதியை மேம்படு த்துகின்றன என ஆய்வுகள் கூறுகின்றன. நகரங்களில் மரங்கள் இல்லாதது, நகர்ப்புறச் சூழலால் ஏற்படும் அழுத்தங்க ளிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் இயற்கையான அரணை நீக்குகிறது. இந்த இயற்கைப் பசுமைச் சூழல் அகற்றப்படும் போது, நகரவாசிகள் இரைச்சல் மிகுந்த மற்றும் கட்டடக் காடுகளுக்குள் விடப்படுகிறார்கள். இது அவர்களுக்கு அதிக மன அழுத்தம், சோர்வு மற்றும் பதட்டத்தை ஏற்படுத்து கிறது.

மனிதர்களுக்கு இயற்கையுடன் தொடர்பு கொள்ள ஒரு உள்ளார்ந்த தேவை உள்ளது, இது பயோபிலியா (Biophilia) என்று அழைக்கப்படுகிறது. பயோபிலியா என்பது மனிதர் களுக்கும் இயற்கைக்கும் இடையிலான பிறவியிலேயே இருக்கும் ஓர் ஆழமான தொடர்பு. கிரேக்க மொழியில் 'பயோ' (bio) என்றால் உயிர் என்றும், 'பிலியா' (philia) என்றால் அன்பு என்றும் பொருள்படும். எனவே, இது 'உயிர் மீதான அன்பு' அல்லது 'வாழும் உயிரினங்கள் மீதான ஈர்ப்பு' எனப் புரிந்துகொள்ளலாம்.

மனிதர்கள் இயல்பாகவே தாவரங்கள், விலங்குகள், நீர்நிலைகள் மற்றும் இயற்கைக் காட்சிகளால் ஈர்க்கப் படுகிறார்கள். இது நம் மரபணுக்களிலேயே பதிந்த ஒரு பண்பு. இயற்கையுடன் நேரம் செலவிடுவது மன அழுத்த த்தைக் குறைக்கிறது, இரத்த அழுத்தத்தைச் சீராக் குகிறது, மனநிலையை மேம்படுத்துகிறது, கவனத்தை அதிகரிக்கிறது மற்றும் ஒட்டுமொத்த உடல்நலனை மேம்படுத்துகிறது என்று ஆய்வுகள் காட்டுகின்றன. நமது முன்னோர்கள் உயிர் வாழ்வதற்காக இயற்கையுடன் கொண்டிருந்த ஆழமான பிணைப்பின் எச்சமே இந்த பயோபிலியா. இந்தக் கருத்தை உயிரியலாளர் எட்வர்ட் ஓ. வில்சன் (Edward O. Wilson) தனது 'பயோபிலியா' புத்த கத்தின் மூலம் இதை உலகறியச் செய்தார். மனிதர்களின் பரிணாம வளர்ச்சியில், இயற்கையான சூழலில் வாழ்ந்ததால் இந்த ஈர்ப்பு உருவானது என்று வில்சன் வாதிடுகிறார். இயற்கையுடனான இந்தத் தொடர்பு, சுற்றுச்சூழலைப் பாது காக்கவும், பல்லுயிர்ப் பெருக்கத்தைப் போற்றவும் நம்மைத் தூண்டுகிறது.

சாலையோர மரங்கள் மனிதர்க்கும் இயற்கைக்கும் இடையேயான தினசரி தொடர்பைப் பராமரிக்கும் உயிர்க்கம் பிகளாக விளங்குகின்றன. இவை அழிந்தால், தெருக்கள் பாழடைந்து, காணத்தகாத காட்சிகளாக மாறும். நகரத்தின் அழகியல் மதிப்பை இது குறைக்கிறது; மேலும் இவை மனித மனங்களில் இயற்கையிலிருந்து துண்டிக்கப்பட்ட உணர்வை வளர்க்கிறது. இது சோகம், அமைதியின்மை மற்றும் மனிதர் களின் ஒட்டுமொத்த நல்வாழ்வின் சரிவுக்கும் வழிவகுக்கும்.

மரங்கள் நிறைந்த தெருக்கள் உட்பட பசுமையான இடங்கள் பெரும்பாலும் முறைசாரா ஒன்றுகூடும் இடங்களாகவும், சமூகத் தொடர்புகளை ஊக்குவிக்கவும் உதவும். இந்த சூழல்கள் இல்லாதது சமூகத் தனிமைப்படுத்தலுக்குப் பங்களிக்கும்.

முறையான பொது ஆலோசனை இல்லாமலோ அல்லது வெளிப்படையான காரணம் கூறப்படாமலோ மரங்கள் அழிக்கப்படும்போது, அது அப்பகுதி மக்களிடையே ஒருவித அதிகாரமின்மை மற்றும் கட்டுப்பாடற்ற தன்மையை ஏற்படுத் துகிறது. 'நமது கருத்து கேட்கப்படவில்லை, நம் உரிமை மதிக்கப்படவில்லை' என்ற உணர்வு அவர்களுக்குள் இயல் பாகவே உருவாகிறது.

இது மக்களுக்கும், உள்ளூர் நிர்வாகத்திற்கும் இடையே உள்ள நம்பிக்கையைப் பாதிக்கிறது. மக்கள் பொது விவகாரங்களில் ஈடுபடுவதையும் (civic engagement), தங்கள் சமூகத்தில் நடக்கும் விஷயங்கள் குறித்து அக்கறை கொள்வதையும் குறைக்கிறது. இத்தகைய சூழல், சமூகத்தின் மீது ஒரு மனோரீதியான சுமையை (psychological burden) உருவாக்குகிறது. பல தசாப்தங்களாகப் பேரழிவு தரும் மோதல்கள், பாரிய இடப்பெயர்வுகள் மற்றும் இழப்புகளால் சூழப்பட்ட நிலப்பரப்பில், நீண்ட காலம் நிலைத்து நிற்கும் பழைய மரங்களின் இருப்பு அவற்றின் சுற்றுச்சூழல் அல்லது அழகியல் மதிப்பைவிட மிக ஆழமான அர்த்தத்தைப் பெறுகிறது.

இந்த பழமையான மரங்கள் மோதலின் இருண்ட காலகட்டங்களில் உறுதியாக நின்றன. அவை அழிவு, இடப்பெயர்வு மற்றும் துன்பங்களுக்கு மௌன சாட்சிகளாக விளங்குகின்றன. தலைமுறைகள் வந்து போவதையும், குண்டுகள் விழுவதையும், வீடுகள் இடிந்து விழுவதையும் அவை கண்டிருக்கின்றன, ஆனாலும் அவை அப்படியே இருக்கின்றன. அவற்றின் தொடர்ச்சியான இருப்பு கடந்த காலத்துடன் ஒரு உறுதியான இணைப்பாகும்; மற்ற அனைத்தும் இழந்தபோதும்கூட ஏதோ ஒன்று நிலைத்தி ருக்கிறது என்பதன் ஓர் அடையாளச் சின்னமாக இந்த மரங்கள் திகழ்கின்றன.

போர் போன்ற பெரும் மோதல்கள் முடிவுற்ற பின்னர், மக்கள் தம் வாழ்வை மீண்டும் தொடர முனைவதே ஒரு பெருஞ்சவா லாகிறது. அவர்களின் வீடுகள் சிதைந்திருக்கலாம்; சமூகக் கட்டமைப்புகள் தாறுமாறாகியிருக்கலாம். இத்தகைய சூழலில், அவர்களுக்கு ஒரு நிலையான, மாறாத அடித்தளம் கட்டாயம் தேவைப்படுகிறது. எல்லாமே அழிந்து போனாலும், சில விட யங்கள் மட்டும் மாறாமல், முன்பு போலவே இருப்பதை அவர்கள் ஏக்கத்தோடு நாடுகின்றனர். இவ்வாறு அவர்க ளுக்கு முன்னரே நன்கு தெரிந்த, பழக்கமான விடயங்களே ஒரு பாதுகாப்பான உணர்வையும், மனத்தளர்ச்சிக்கு ஆறுத லையும் அளிக்கின்றன. இத்தகைய கடினமான சூழ்நிலை களில், நிலையான மற்றும் பழக்கமானவற்றை மக்கள் தேடுவது முற்றிலும் இயற்கையான ஒரு மனிதப் பண்பாகும்.

மனிதர்களால் உருவாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்கூட உடைந்து போகலாம், அல்லது மறக்கப்படலாம். ஆனால், இந்த பழைய மரங்களோ இயற்கையாகவே நினைவுகளை உருவாக்குகின்றன. அவை கடந்தகால இழப்புகளை மட்டும் நினைவூட்டுவதில்லை. மாறாக, மீண்டும் உயிர் வாழ்வ தையும், காயங்கள் ஆறி குணமாகும் காலப்போக்கையும் அடையாளப்படுத்துகின்றன.

கடினமான போர் காலங்களில், இந்த மரங்களின் நிழல் மக்க ளுக்கு அடைக்கலம் தந்திருக்கலாம். வேறு எதுவும் கிடைக் காதபோது, அவற்றின் பழங்கள் குடும்பங்களின் பசியைப் போக்கியிருக்கலாம். போர் நிகழ்ந்த சூழலில், இந்த மரங்கள் வெறும் தாவரங்கள் அல்ல; அவை சமூகத்தின் கூட்டு நினை வுகளின் களஞ்சியமாகவும், எதிர்காலத்தின் நம்பிக்கையை உருவாக்கும் நீடித்த சின்னங்களாகவும் விளங்குகின்றன

மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை குறித்த நம்பிக்கை பொதுவாகவே குறைந்திருக்கும். இச்சூழலில், 'இயற்கைக் காரணங்களால்' ஒரு நீண்டகால இயற்கை அடையாளம் திடீரெனவும், தவிர்க்க முடியாமலும் அழிக்கப்படுவது, அவர்களின் பாதுகாப்புக் குறித்த உணர்வுகளை மேலும் சிதைக்கிறது. இது, இயற்கையும் நிலையற்றது, மதிக்கப்படும் ஒன்றும் பறிபோகக்கூடியது என்பதை அவர்களுக்கு மீண்டும் நினைவுபடுத்துகிறது. இந்த நிலை, ஏற்கனவே காயமுற்ற சமூகங்களின் உளவியல் சுமையை மேலும் அதிகரிக்கச் செய்கிறது.

போரில் உயிர் பிழைத்தவர்களுக்கு, நிழல் கொடுத்த அல்லது பாதுகாப்பு அளித்த மரம் வெறும் மரமல்ல; அது அவர்களின் அதிர்ச்சியான அனுபவங்களின் ஒரு பகுதியாகும். வளர்ச்சி அல்லது கால மாற்றங்களுக்காக அந்த மரம் அழிக்கப்படும்போது, அது மீண்டும் ஒருமுறை மனதை உலுக்கும் நிகழ்வாக, தப்பிப் பிழைத்ததற்கான அடையாள த்தின் அழிவாக உணரப்படலாம். இந்த இழப்பு, அந்த மரத்துடனான நினைவுகளுடனும், அதனால் ஏற்பட்ட உணர்வுபூர்வமான தொடர்புகளுடனும் பிணைந்துள்ளது.

இலங்கையின் வட மாகாணத்தில் போர், சண்டைக் களத்தில் மட்டும் நடக்கவில்லை; நிலமே ஒரு இலக்காகவும், பாதிக்கப்பட்ட ஒன்றாகவும் இருந்தது. போர் முடிந்து இத்தனை ஆண்டுகளாகியும், வட மாகாணத்தின் நிலம் இன்றும் தன் போராட்டக் கதையைச் சொல்கிறது. இங்குள்ள வறண்ட காலநிலை காரணமாக, மரங்களால் வழங்கப்படும் நிழல் மற்றும் குளிர்ச்சி ஒரு ஆடம்பரம் மட்டுமல்ல; அன்றாட ஆறுதலுக்கும் ஆரோக்கியத்திற்கும் ஓர் அத்தியாவசியத் தேவையாகும்.

இளம் மரக்கன்றுகள் அல்லது புதிய மரங்களை விட, பெரிய, பழைய மரங்கள் மிகச் சிறந்த குளிர்ச்சி விளைவைத் தருகின்றன. அவசியமான காரணங்களுக்காக அவற்றை அகற்றினாலும், அது நகர்ப்புற வெப்ப விளைவை உடனடியாக அதிகரித்துவிடும். இதனால் தெருக்களும் பொது இடங்களும் கணிசமாக வெப்பமடைந்து, வசிப்பதற்கு உகந்ததல்லாத சூழலாக மாறும். இது உடல் மற்றும் மனநல ரீதியான நேரடி விளைவுகளை ஏற்படுத்தும். அதாவது, அசௌகரியம், சோர்வு மற்றும் வெப்பம் தொடர்பான நோய்கள் கூட அதிகரிக்கும்.

வறட்சி மற்றும் நீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படும் பகுதிகளில், பழைய மரங்களின் ஆழமான வேர் அமைப் புகள் மண்ணின் ஈரப்பதத்தைப் பராமரிப்பதிலும், மண் அரிப்பைத் தடுப்பதிலும், நிலத்தடி நீர் மீள்நிரப்பலை எளிதாக்குவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்த மரங்கள் இல்லாதது, நகர்ப்புறச் சூழலை மேலும் வறண்ட தாக்கி, உள்ளூர் நுண்-காலநிலைகளைப் பாதிக்கும். இதனால் வறட்சிக்கு ஆளாகும் பகுதிகள் மேலும் பாதிக்கப் படும். இது குடியிருப்பாளர்களின் அன்றாட அழுத் தங்களை மேலும் அதிகரிக்கிறது.

பெரிய மரங்கள் இயற்கையான வடிகட்டிகளாகச் செயல்பட்டு, தூசி மற்றும் மாசுபடுத்திகளைப் பிடிக்கின்றன. வறண்ட, பெரும்பாலும் காற்று வீசும் காலநிலையில், அவை இல்லாதது தூசி அதிகரிப்பதற்கும் மோசமான காற்றின் தரத்திற்கும் வழிவகுக்கும். இது சுவாச ஆரோக்கியத்தைப் பாதிப்பதுடன், பொதுவான அசௌகரியம் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவுக்குப் பங்களிக்கிறது.

மோதலுக்குப் பிந்தைய சூழலில், சமூகத்தின் மீட்சிக்கு பழமையான மரங்களைப் பாதுகாப்பது மிக அவசியம். இது மக்களின் உடல் மற்றும் மனநலத்திற்குப் பெரிதும் உதவும். இந்த மரங்கள் வெறும் தாவரங்கள் அல்ல. அவை அந்த நிலப்பகுதியின் வரலாற்றின் நீடித்த சின்னங்களாகவும், அங்கு வாழும் மக்களின் மீள்தன்மைக்கான சான்றுகளா கவும், எதிர்காலத்திற்கான நம்பிக்கையின் ஆதாரங்களா கவும் திகழ்கின்றன. எனவே, நிலையான மற்றும் ஆரோக்கி யமான சமூக மீட்சிக்கு இவற்றைப் பாதுகாப்பது மிகவும் இன் றியமையாதது.

போர் முடிந்து மக்கள் தங்கள் வாழ்க்கையின் மீது கட்டுப்பாட்டை மீண்டும் பெற முயற்சிக்கும்போது, அபிவிருத்தித் திட்டங்கள் முக்கியமானவை. ஆனால், நகரங்களை அழகுபடுத்துதல் அல்லது பாதுகாப்பு போன்றவைகளால் மரங்களை வெட்டுவது போன்ற முடிவுகள் சமூகத்துடன் கலந்தாலோசிக்கப்படாமல் எடுக்கப்படும் போது, அது மக்களை மீண்டும் அதிகாரமற்றவர்களாக உணர வைக்கிறது. உள்ளூர் மக்களின் கருத்துகள் புறக்கணிக்கப்படும்போது, அவர்கள் தங்கள் சொந்த மண்ணில் ஒரு பார்வையாளர்களாகவே இருக்கிறார்கள் என்ற உணர்வு வலுப்பெறுகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் உளவியல் மற்றும் சுற்றுச்சூழல் தேவைகளைப் புறக்கணிக்கும் 'அபிவிருத்தி' திட்டங்கள் இன்னொரு விதமான திணிப்பாக உணரப் படலாம். உதாரணமாக, அகலமான சாலைகள் அமைப்பதற்காக மரங்களை வெட்டுவது மற்ற இடங்களில் முன்னேற்றமாகத் தோன்றலாம். ஆனால் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில், இது நினைவுகளை அழிப்பதாகவும், நிலப்பரப்புடன் சமூகத்தின் உணர்வு பூர்வமான பிணைப்பைப் புறக்கணிப்பதாகவும் கருதப் படலாம். ஒரு காலத்தில் தாங்கும் சக்தியாக இருந்த மரங்கள் அழிக்கப்படுவது, வளர்ச்சித் திட்டங்களுக்காக இயற்கை அழிக்கப்படுவது போன்றவை நம்பிக்கைக்கான அடித் தளத்தை அசைக்கலாம். இது, தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள் பெரும்பாலும் தங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை என்ற உணர்வை வலுப்படுத்துகிறது.

இத்தகைய சூழலில், மக்கள் தங்கள் நினைவில் வைத்திருந்த பழக்கமான மரங்கள், பொது இடங்கள், வீடுகள் போன்றவை இல்லாமல் போகும்போதும், நவீன நகர மயமாக்கல் மற்றும் கட்டுமானங்களால், ஒருகாலத்தில் தங்களுக்குச் சொந்தமானதாக உணர்ந்த மண் இப்போது அந்நியமாகத் தெரிகிறது. இது தங்கள் சொந்த நிலத்தில் நிற்கும்போதும் ஓர் ஆழமான மன இடப்பெயர்ச்சி உணர்வை (sense of displacement) ஏற்படுத்துகிறது. இந்த உணர்வுடன் நெருங்கிய தொடர்புடையதுதான் சொலஸ்ரால்ஜியா (Solastalgia) என்ற கருத்தாக்கம்.

## சொலஸ்ரால்ஜியா:

சொலஸ்ரால்ஜியா என்ற வார்த்தை, 2005-ஆம் ஆண்டில் தத்துவஞானி கிளென் அல்பிரெக்ட் (Glenn Albrecht) என்பவரால் உருவாக்கப்பட்டது. லத்தீன் மொழியில் 'சொலாச்யும்' (solacium - நிம்மதி, ஆறுதல்) மற்றும் கிரேக்க மொழியில் 'அல்ஜியா' (algia - வலி, துயரம்) ஆகிய இரண்டு வார்த்தைகளின் கலவையே இது. இதன் பொருள் என்னவென்றால், நாம் நம்முடைய சொந்த வீட்டிலேயே வாழ்ந்துகொண்டிருக்கும்போது, அந்தச் சூழல் நமக்கு பிடிக்காத வகையில் மாறிவிடுவதால் ஏற்படும் துயரம், மனச்சோர்வு அல்லது வீடு மீதான ஏக்கம் போன்ற உணர்வுகளே சொலஸ்ரால்ஜியா என வரையறுக்கப் படுகிறது. இது பொதுவாக நாம் பயன்படுத்தும் 'ஏக்கம்' என்ற வார்த்தையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஏக்கம் என்பது, நீங்கள் திரும்பிச் செல்ல முடியாத ஒரு கடந்த கால வீட்டிற்கான ஏக்கமாகும். நீங்கள் அந்த இடத்தை விட்டுப் பிரிந்து வந்த பிறகு ஏற்படும் ஓர் உணர்வு அது. ஆனால், சொலஸ்ரால்ஜியா என்பது உங்கள் வீடு உங்கள் கண் முன்னாலேயே மாறிக்கொண்டிருப்பதைப் பார்க்கும் வலி. ஒரு காலத்தில் உங்களுக்கு நிம்மதியையும் பாதுகாப்பையும் அளித்த உங்கள் வீட்டின் மதிப்பு குறைந்துவிட்டதாக நீங்கள் உணரும் நிலை இது.

## சொலஸ்ரால்ஜியா என்ற உணர்வை ஏற்படுத்தும் முக்கியமான காரணிகள்:

**இட உணர்வு:** ஒரு குறிப்பிட்ட இடத்துடன் நமக்கு இருக்கும் ஆழமான, உணர்வுபூர்வமான தொடர்பு. அந்த இடம் நமக்கு அடையாளம், ஆறுதல் மற்றும் பாதுகாப்பைத் தரும் ஆதாரமாக இருக்கும்.

**சுற்றுச்சூழல் மாற்றம்:** அந்த இடத்தில் ஏற்படும் பெரிய, விரும்பத்தகாத மற்றும் பெரும்பாலும் மீள முடியாத மாற்றங்கள். உதாரணங்களாக: காடுகளை அழித்தல் (deforestation), சுரங்க வேலைகள் (mining), காலநிலை மாற்றத்தின் (climate change) விளைவுகள் அல்லது போர் (war) போன்ற சூழ்நிலைகள்.

**ஆறுதல் இழப்பு:** சுற்றுச்சூழல் ஒரு காலத்தில் வழங்கிய நிம்மதியையும் ஆதரவையும் இனி வழங்கப்போவதில்லை என்ற உணர்வு.

**சக்தியின்மை:** இந்த மாற்றங்களை ஏற்படுத்தும் சக்திகளின் மீது நமக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை, நாம் உதவியற்றவர்கள் என்ற உணர்வு.

வடக்கு மாகாணம் போன்ற போர் பாதித்த பகுதிகளில் சொலஸ்ரால்ஜியாவின் அனுபவம் இன்னும் ஆழமானது. இங்கே, இது படிப்படியான சுற்றுச்சூழல் சீரழிவை (environmental degradation) மட்டும் குறிப்பதில்லை. இது அதிர்ச்சியுடனும் (trauma) வாழ்க்கையின் வன்முறைச் சீர்குலைவுடனும் பின்னிப் பிணைந்துள்ளது. சுற்றுச்சூழல் மாற்றங்கள் மெதுவாக நடக்கும் செயல்முறைகளிலிருந்து மட்டுமல்லாமல், போரின் நேரடி, வன்முறை நடவடிக்கைகளிலிருந்தும் உருவாகின்றன

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சொலஸ்ரால்ஜியா என்பது, போரின் நேரடி வடுக்களையும், சமகால அபிவிருத்தி (development) மற்றும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளையும் உள்ளடக்கிய ஒரு சிக்கலான உளவியல் நிலையாகும்.

பெரிய, பழமையான மரங்களை வெட்டுவது, அது இயற்கைக் காரணங்களால் இருந்தாலும் சரி அல்லது 'அபிவிருத்தி' என்ற பெயரால் நியாயப்படுத்தப்பட்டாலும் சரி, வெறும் பசுமைப் போர்வையை இழப்பதுடன் முடிவதில்லை. மாறாக, இது ஒரு சமூகத்தின் வலிமை (resilience), தொடர்ச்சி (continuity) மற்றும் அதன் அடையாளத்தையே அரிக்கிறது. இது கடந்தகால இழப்புகளை மீண்டும் நினைவூட்டுவதுடன், நீண்டகால குணப்படுத்துதல் (healing) மற்றும் மீட்சிப் (recovery) செயல்முறையைத் தடுக்கும் ஓர் சுற்றுச்சூழல் மற்றும் மனநலச் சுமையாகவும் அமைகிறது.

ஆகவே, அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒரு நுணுக்கமான (nuanced), ஒத்திசைவான (harmonious), மற்றும் சமூகத்தை மையமாகக் கொண்ட (community-centric) அணுகுமுறை

தேவை. இது வெறும் சிறந்த கொள்கை மட்டுமல்ல; போருக்குப் பிந்தைய உலகில் மக்களின் உளவியல் நலனுக்கு ஒரு முக்கிய அங்கமுமாகும்.

சாலையோர மரங்கள் வெறும் தடைகள் அல்ல; அவை நமது சுற்றுச்சூழலுக்கும், நமது நல்வாழ்வுக்கும் அளவிட முடியாத நன்மைகளை வழங்கும் வாழும் சொத்துகள். அவற்றைப் பராமரிப்பதில் அதிக அக்கறையும் விழிப்புணர்வும் கொண்ட ஒரு கலாச்சாரத்தை வளர்ப்பது கட்டாயமாகும்

அவற்றின் உண்மையான மதிப்பை உணர்ந்து, நிலையான நடைமுறைகளை ஏற்றுக்கொள்வதன் மூலம், இந்த அமைதியான பாதுகாவலர்கள் வழங்கும் நிழல், சுத்தமான காற்று மற்றும் துடிப்பான பல்லுயிர் பெருக்கத்தை எதிர்கால சந்ததியினரும் அனுபவிக்க முடியும் என்பதை உறுதி செய்யலாம். உண்மையான முன்னேற்றம் என்பது புதிய உள்கட்டமைப்பை உருவாக்குவது மட்டுமல்ல, நம் அனைவரையும் நிலைநிறுத்தும் இயற்கை பாரம்பரியத்தைப் பாதுகாப்பதும் அடங்கும் என்பதை நாம் நினைவில் கொள்வோம்.

நமது மதிப்புமிக்க சாலையோர மரங்களைப் பாதுகாக்க, நாம் சிந்திக்கும் விதத்தில் ஒரு பெரிய மாற்றம் தேவை. இதற்காக:

- எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்தைத் தொடங்குவதற்கு முன்பும், தற்போதுள்ள மரங்களின் எண்ணிக்கையை மதிப்பிட வேண்டும். வளர்ந்த மரங்களைப் பாதுகாக்கக்கூடிய அனைத்து சாத்தியமான வழிகளையும் ஆராய்வது அவசியம்.
- அரசாங்க அமைப்புகளும் உள்ளூர் அதிகாரிகளும் மரங்களைப் பராமரிப்பதற்கான தெளிவான வழிகாட்டுதல்களை உருவாக்கி, அவற்றை உறுதியாக அமுல்படுத்த வேண்டும். சரியான மர வளர்ப்பு நுட்பங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். பயிற்சி பெற்ற, சான்றளிக்கப்பட்ட பணியாளர்கள் மட்டுமே மரங்களை வெட்டவோ அல்லது கத்தரிக்கவோ அனுமதிக்கப்பட வேண்டும்.
- எதிர்கால நகர அபிவிருத்தி மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களில், மரங்களை வெறும் அலங்காரப் பொருளாகக் கருதாமல், வடிவமைப்பின் தொடக்கத்திலேயே அவற்றின் முக்கியத்துவத்தை இணைக்க வேண்டும். மரங்களின் வேர் வளர்ச்சிக்கும், கிளைகள் பரவுவதற்கும் போதுமான இடத்தை ஒதுக்கித் திட்டமிடுவது அவசியம். நகரத் திட்டமிடுபவர்கள் மரங்களை வெறும் தடைகளாகப் பார்க்காமல், ஆரோக்கியமான மற்றும் வளமான நகரத்திற்கு மிகவும் அத்தியாவசியமான கூறுகளாகக் கருத வேண்டும். பசுமையான பகுதிகளை உருவாக்குவதற்கு அதிக முன்னுரிமை அளிக்க வேண்டும்.
- சாலையோர மரங்களின் மகத்தான நன்மைகள் பற்றியும், அவற்றைத் தேவையின்றி அழிப்பதால் ஏற்படும் மோசமான விளைவுகள் பற்றியும் மக்களுக்குக் அறிவூட்டுவது மிக முக்கியம். மரம் நடுதல் மற்றும் பராமரிப்புப் பணிகளில் சமூகத்தின் ஈடுபாட்டை ஊக்குவிக்க வேண்டும். சாலையோர மரங்கள் குறித்த முடிவுகளில் உள்ளூர் சமூக மக்களை ஈடுபடுத்துவது, அவர்களுக்கு உரிமை உணர்வையும் பொறுப்புணர்வையும் வளர்க்கும். இதனால், எடுக்கப்படும் முடிவுகள் அந்தப் பகுதிக்கும், மக்களின் மனநலனுக்கும் ஏற்றதாக இருக்கும்.
- மரங்களை அகற்றும் முடிவை எடுப்பதற்கு முன், உள்கட்டமைப்புச் சவால்களைச் சமாளிப்பதற்கான மாற்றுத் தீர்வுகளை முழுமையாக ஆராய வேண்டும். இது தேவையில்லாத மர அழிப்பைத் தவிர்க்க உதவும். தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் மரங்களை அகற்ற வேண்டியிருந்தால், அதற்குப் பதிலாக புதிய மரங்களை நடுவதற்கு உறுதியான திட்டங்கள் இருக்க வேண்டும். முடிந்தவரை நன்கு வளர்ந்த மரங்களை நடவேண்டும். அத்துடன், அந்த மரங்களை நீண்ட காலத்திற்குப் பராமரிக்க முதலீடு செய்ய வேண்டும். இது மனரீதியான தாக்கத்தைக் குறைக்க உதவும்.
- எதிர்காலத்தில், சாலையோர மரங்களை அகற்றும் எந்தவொரு திட்டத்திற்கும் முன்பு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகளுடன் சேர்த்து, சமூகத்தில் அது ஏற்படுத்தக்கூடிய மனரீதியான தாக்கத்தையும் முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும்.



sathiyathevan.s@thaiveedu.com



# வரலாற்றில் ‘ஊடல்’

## திருவள்ளுவரும் பிற இலக்கியகாரர்களும்

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்



**முகவுரை:**

தொல்காப்பியத்திற்கு முன்னர் தமிழில் பல இலக்கண இலக்கிய நூல்கள் இருந்து கால ஓட்டத்தில் அழிந்து போயின. தமிழ் இலக்கிய வரலாறு, தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலுடன்தான் தொடங்குகிறது.

தொல்காப்பியம் தமிழ் மொழி முழுமை பெற்ற நிலையில் எழுதப்பட்டு, ஏறக்குறைய 2800 ஆண்டுகள் கடந்து, தொழில்நுட்ப வளர்ச்சியில் உலகம் முன்னேறிக்கொண்டிருக்கும் இன்றைய நிலையிலும், அடிப்படை இலக்கணக் கோட்பாடுகளில் தன்னிறைவு கொண்டதாக, பெரிய அளவில் அடிப்படை மாற்றங்களை எதிர்நோக்காததாக உள்ளமையே அதன் நிறைவைக் குறிக்கிறது. காலத்தால் அழிந்தனபோக, தொல்காப்பியத்தின் பின் எழுந்துள்ள ஐம்பதுக்கும் அதிகமான மரபிலக்கண நூல்கள் தொல்காப்பியக் கோட்பாட்டு மரபையே அடியொற்றியவையாகக் காணப்படுகின்றன.

இலக்கண நூலாக அறியப்படும் தொல்காப்பியம் இலக்கண நூல் மட்டுமல்ல ஓர் இலக்கிய நூலும் கூட.

இல்லற வாழ்வில் கணவன் மனைவியிடையே ஏற்படும் இன்பத்தை மிகுத்துக் கொடுக்கும் ஒரு உன்னத கருவியாக ‘ஊடல்’ என்னும் ஒழுக்கம், நிகழ்வு இடம்பெறுகிறது. இது, மனிதன் இல்லறம் நடத்தத் தொடங்கிய காலத்திலிருந்தே பேசப்பட்டு, அனுபவிக்கப்பட்டு, விரும்பப்பட்டு வரும் ஒரு நிகழ்வாக இருந்திருக்கவேண்டும். இலக்கியங்களில் ஊடல் இன்பச் சுவையின் தரத்தை மிகுத்துக் கொடுக்கும் பகுதியாகக் காட்டப்படுகிறது. தனி மனிதரது இயல்பு வாழ்க்கையில் இடம்பெறும் இந்த நிகழ்வு, அதன் சுவை காரணமாக இலக்கியத்திலும் இடம்பெறலாயிற்று. வாழ்வியல் கூறுகள் இலக்கியத்தில் இடம்பெறும் பொழுது அவை சுவைபடக் கூறும் நோக்கில், அதாவது. ‘இயல்பு வாழ்வில் இடம்பெறும் நிகழ்வுகள் இலக்கியமாகும்போது, அவை மிகுத்தும் குறைத்தும் கூறப்படுகின்றன’. வாழ்வியல் கூறுகள் இலக்கியத்தில் இடம்பெறும் பொழுது எவ்வாறு கூறப்படவேண்டும் என்பது பற்றித் தொல்காப்பியர் கூறுவது சிறப்பானதும் சிந்திக்க வைப்பதுமாகும்.

***‘நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்***
***பாடல் சான்ற புலனெறி வழக்கம்’***

*தொல். அகத். 56*

இவ்வகையில், ‘ஊடல்’ என்னும் வாழ்வியல் ஒழுக்கம், பல்வேறு காலப் பகுதிகளில் வாழ்ந்த பல்வேறு கலைஞர்களின் பல்வேறுபட்ட படைப்புக்களில் கையாளப்பட்டிருக்கிறது. இது திருக்குறளுடன் ஒப்பு நோக்கில் ஆராயப்பட்டிருக்கிறது.

திருக்குறள், ‘உலகப் பொதுமறை’ என்பதைக் கடந்து, அது வாழ்வியல் இலக்கணமாகவும் விளங்குகிறது. இதனை, வ.சுப. மாணிக்கனார் (தமிழ்க் காதல்), ‘இலக்கண நூலான தொல்காப்பியம் வாழ்வியல் இலக்கியத்தையும் இலக்கிய நூலான திருக்குறள் ‘வாழ்வியல் இலக்கணத்தையும் எடுத்துரைக்கும் உன்னதமான நூல்களாகும்’ என்று கூறியிருப்பது கவனத்திற்குரியது. அறிவியலின் அனைத்து வளங்களினதும் ஆழ நீளம் கண்ட திருவள்ளுவர், உலக இன்பங்களுக்கெல்லாம் அடிப்படையான அன்பை வலியுறுத்தும் முறையில் காதலின் நுணுக்கங்களை ஆராய்ந்திருக்கிறார். நெஞ்சொடு புலத்தல், புலவி, புலவி நுணுக்கம், ஊடல் உவகை எனும் நான்கு அதிகாரங்களிலும் ஊடல் பற்றிக் குறிப்பிடும் கருத்துகள் எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் உரியனவாக அனைத்து இலக்கண இலக்கியங்களை விஞ்சி நிற்கிறது என்பதே இந்த ஆய்வின் முடிவாகும்.

***ஏறக்குறைய 2800 ஆண்டுகள் கடந்து, தொழில்நுட்ப வளர்ச்சியில் உலகம் முன்னேறிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையிலும், அடிப்படை இலக்கணக் கோட்பாடுகளில் தன்னிறைவு கொண்டதாக, பெரிய அளவில் அடிப்படை மாற்றங்களை எதிர்நோக்காததாக உள்ளமையே அதன் நிறைவைக் குறிக்கிறது.***

**ஆய்வுச் சொற்கள்:**
ஊடல், புலத்தல், புலவி நுணுக்கம்

**ஆய்வுத் தலைப்பு:**
வரலாற்றில் 'ஊடல்' - திருவள்ளுவரும் பிற இலக்கியகாரர்களும்

**ஆய்வுச் சிக்கல்:**
வாழ்வியல் இன்பத்திற்கு அடிப்படையான அன்பை வலியுறுத்தும் காதல் நுணுக்கங்களைக் கூறும் பகுதிகளுள் 'ஊடல்' பற்றிக் கூறும் பகுதிகள் சுவை மிக்கவை. கால வேறுபாடு காரணமாக, திருவள்ளுவர் காணும் ஊடல் பகுதிகளைத் திருக்குறளுக்குக் காலத்தால் முன், பின்னான இலக்கியங்களுடன் ஒப்பிடுதல் சிக்கலானது.

**கருதுகோள்:**
தலைவன் தலைவியரிடையே ஏற்படும் பிணக்கு, பொய்ச் சினம், பகைத்தல், வெறுத்தல் முதலான செயல்களைக் குறிக்கும் ஒற்றைப் பதமான 'ஊடல்', காலம், இடம், இனம், மொழி, பண்பாடு முதலாய எல்லைகளைக் கடந்து, எவருக்கும் எக்காலத்திற்கும் ஏற்புடைத்தாக, இனிய வாழ்விற்குப் பொருந்தும் அன்பின் நுணுக்கங்களைப் படிப்பார் மனதில் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அனைத்து இலக்கணங்களையும் விஞ்சி நிற்கிறது திருக்குறள் என்பது கருதுகோளாகும்.

**ஆய்வியல் நெறி:**
உளவியல், சமூகவியல், வரலாற்றியல், ஒப்பாய்வியல்.

**உளவியல் நெறி:**
இன்றைய இலக்கியக் கோட்பாட்டிலும் திறனாய்வுக் கோட்பாட்டிலும் முக்கிய இடம்பெறுகிறது. மனித உளம் சார்ந்தது இலக்கியம், மனித மனம் சார்ந்தது உளவியல். எனவே மனித உளம் சார்ந்த இலக்கியங்களை மனித உளம் சார்ந்த உளவியல் முறையில் ஆராய்வது சிறந்தது.

**சான்றுகள்:**

- முதன்மைச் சான்றுகள் - தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க் கணக்கு இலக்கியம், பக்தி இலக்கியம்.
- துணைச் சான்றுகள் - இவ்விலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகள்.

**ஆய்வேட்டின் அமைப்பு:**

- முகவுரை
- ஊடல் – திருவள்ளுவருக்கு முன்னைய காலம் – தொல்காப்பியம், சங்க இலக்கியம்.
- ஊடல் – திருவள்ளுவருக்குப் பிற்பட்ட காலம் – பதினெண்கீழ் கணக்கு நூல்கள், சிலப்பதிகாரம், பக்தி இலக்கியம்.

  ஆய்வின் அளவு கருதி, ஆய்வின் கால எல்லை, பக்தி இலக்கிய காலம் வரை பொ.ஆ.பின் 9-ஆம் நூற்றாண்டு வரை என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ஒப்பாய்வு
- முடிவுரை

## இயல் 1 – ஊடல்:

### திருவள்ளுவருக்கு முற்பட்ட காலம்:

தமிழ் இலக்கிய வரலாற்றில் திருவள்ளுவருக்கு முற்பட்ட காலப்பகுதி என்பது, தொல்காப்பியர் காலம் (பொ.ஆ.மு. 711) முதலாக தொகை நூல்கள் காலமான சங்க காலம் (ஏறக்குறைய, பொ.ஆ.மு. 5-ஆம் நூற். முதல் 1-ஆம் நூற்றாண்டு) வரை என்று அறியப்படும் மிக நீண்ட காலப்பகுதியாகும்.

### தொல்காப்பியர் காலம்:

தொல்காப்பியர் காலம் பொ.ஆ.மு. 711 என்று சிவகங்கை மாவட்டம் கோவிலூர் திருமடத்தில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இக் கூட்டம் கோவிலூர் திருமடமும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் இணைந்து நடத்தியதாகும்.

இக் கருத்தை வேறு ஒரு முறையிலும் நிச்சயிக்கலாம். தொல்காப்பியம் உறுதியாக நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்திற்கு முந்தியது. தமிழ் நாடு சீர் கெட்டிருந்ததாகக் கூறப்படும் களப்பிரர் காலத்திற்கும் கீழ்க்கணக்கு நூல்களுக்கும் முந்தியது. திருக்குறள் காலத்திற்கும் முந்தியது.

வலுவான சான்றுகள் மூலம் இந்நிலைப்பாடு மாற்றியமைக்கப்படும் வரை இதனை ஏற்றுக் கொள்வதில் தப்பில்லை. இந்த ஆய்வின் தேவைக்காக, தொல்காப்பியர் காலத்தின் கீழ் எல்லை பொ.ஆ.மு. 5-ஆம் நூற்றாண்டு என்றும் சங்க இலக்கியங்கள் தொல்காப்பியர் காலத்திற்குப் பிற்பட்டவை என்றும் கொள்ளலாம்.

### தொல்காப்பியர் காலத் தமிழ் நாடு:

இந்த ஆய்வின் நோக்கத்திற்காகத் தொல்காப்பியம் பொருளதிகாரம் மட்டுமே உள்வாங்கப்பட்டிருக்கிறது. தொல்காப்பியம் என்னும் இந்த இலக்கணம் கூறுகின்ற நாட்டினது எல்லைகளை, தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம் கீழ்க்கண்டவாறு வகுக்கின்றது.



*‘வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்’*

*சிறப்புப்பாயிரம்*

எனவே, வடக்கே விந்தியமலையையும் தெற்கே குமரியையும் கிழக்கிலும் மேற்கிலும் கடலையும் எல்லைகளாகக் கொண்ட தமிழ் நாட்டிற்கே தொல்காப்பியம் கூறும் இலக்கணம் ஏற்புடையது என்பது முதலிலேயே தெளிவுபடுத்தப்படுகிறது.

## எட்டுத் தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்கள்:

எட்டுத் தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்கள் இயற்றப்பட்ட காலத்திற்கும் தொகுக்கப்பட்ட காலத்திற்கும் இடையே நீண்ட இடைவெளி இருந்திருக்கவேண்டும். எட்டுத் தொகை இலக்கியங்களில், பரிபாடலும் கலித்தொகையும் நீங்கலாக ஏனைய ஆறு நூல்களும் எண்ணிக்கை அடிப்படையில் தொகுக்கப்பட்டு, அகநானூறு, புறநானூறு, நற்றிணை நானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, என்று பெயர் பெற்றிருக்கின்றன. அகநானூறும் புறநானூறும் பொருள் அடிப்படையில் தொகுக்கப்பட்டவை. எட்டுத் தொகை இலக்கியங்களில் குறுந்தொகை (4-8), நற்றிணை (9-12), அகநானூறு (13-31), என்னும் 1200 பாக்களும் அடி வரை யறையால் திட்டமிட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன.

பத்துப்பாட்டு இலக்கியங்களைவிட எட்டுத்தொகை இலக்கியங்களே பெருமளவில் அகப்பொருள் பற்றிய நூல்களைக் கொண்டவை. எட்டுத் தொகையில் பதிற்றுப்பத்தும் புறநானூறும் நீங்கலாக ஏனையவை அகம் சார்ந்த நூல்கள். இவையே பெருமளவில் எமது ஆய்வுக்கும் பயன்படுபவையாகும். பத்துப் பாட்டில் முல்லைப் பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய நான்கு நூல்களும் அகம் சார்ந்தவை.

இவ்விலக்கியங்களின் காலப் பிரிவுகளைக் கீழே காணும் அடிப்படையில் கொள்ளவிருக்கிறது.

பண்டைக் காலத்தில் பாண்டிய மன்னர்களால் ஆதரிக்கப்பட்ட தமிழ் அவை ஒன்று தமிழ் நாட்டில் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. பொ.ஆ.மு. முதலாம் நூற்றாண்டளவில் தமிழ் நாட்டு அரசுகள் வலுவிழந்தபோது தமிழ்ச் சங்கமும் வலுவிழந்து முடிவிற்கு வந்திருக்கவேண்டும்.

திருக்குறள் ஏறக்குறைய பொ.ஆ.மு. முதலாம் நூற்றாண்டளவில் எழுந்திருக்கவேண்டும். திருக்குறள் தொல்காப்பியத்தை அடியொற்றிச் செல்லும் ஓர் இலக்கியம். திருக்குறள், தன் காலத்து நாட்டு நிலையைப் பிரதிபலிப்பதுடன் பொருளளவில் சங்க இலக்கியத்திலிருந்தும் பெரிதும் மாறுபடுவதாயினும் சங்க இலக்கியத்தின் தொடர்ச்சியாகவே திருக்குறளைக் காணத்தக்க வகையில் அமைந்திருக்கிறது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, கீழ்க்கணக்கு நூல்கள் ஆகியவை சங்கத் தொகை நூல்களுக்கு நடையாலும் பொருளாலும் செய்யுள் அமைப்பாலும் பெரிதும் வேறுபட்டவை. காலத்தால் பிந்தியவை. சங்க காலப் பிற்பகுதியில் நாடு சீர் குலைந்த நிலையில் இருந்ததைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் காட்டி நிற்கின்றன. இவ்விலக்கியங்கள் சங்க இலக்கியங்களிலும் வேறானதொரு பண்பாட்டைக் காட்டுகின்றன.

பக்தி இலக்கியங்கள், பெருமளவில், களப்பிரர் காலப்பிற்பகுதியில் தொடங்கி பொ.ஆ.பி. 9-ஆம் நூற்றாண்டு வரை செல்கின்றன.

## தொல்காப்பியம் – திணை மரபு:

பண்டைக் காலத்தில் தமிழக நிலங்கள், உலகின் அனைத்துப் பகுதிகளையும்போல, அவற்றின் வளம், செயற்பாடு முதலிய பல்வேறு காரணங்களால் ஐவகையாகப் பிரிக்கப்பட்டது. தொல்காப்பியம், அவர் கால மக்கள் வாழ்ந்த நிலப் பரப்பினை, ‘முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்’ (தொல். பொருள். அகம் நூ.5) என்று நான்கு திணைகளாக வகுத்ததுடன், இவற்றுள் அடங்காத, வரண்ட நிலப்பரப்பைப் ‘பாலை’ என்று தனியான ஒரு திணையாகவும் வகுத்தார். இந் நிலப் பரப்புக்கள், அவற்றின் தன்மை நோக்கி, அவை பாடலில் பயின்று வரும் பொழுது அவற்றிற்குரிய முதல், கரு, உரிப் பொருட்களைக் கொண்டு பாடப்படவேண்டும். இந்த ஐவகைத் திணைகள் பற்றிய விளக்கம் தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியலில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. தேவை கருதி அடிப்படைத் தன்மை மட்டும் இங்கு எடுத்துவரப்படுகிறது. மலையும் மலை சார்ந்த நிலமும் குறிஞ்சி, காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை, வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம், கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல், மணலும் மணல் சார்ந்த நிலமும் பாலை. ஐந்திணைகள் அகத்திணையில் சிறப்புப் பெறுகின்றன.

## தொல்காப்பியப் பொருளதிகாரக் கோட்பாடுகள்:

தொல்காப்பியம் பொருளதிகாரம், இலக்கியம் படைக்கும் புலவனுக்கு, அவன் இலக்கியம் படைப்பதற்கு வழிகாட்டியாக அமையக்கூடிய கோட்பாடுகள், கொள்கைகள், வரன்முறைகள் முதலியவற்றை விரிவாக எடுத்துக் கூறுகிறது. தொல்காப்பியர் கூறும் இலக்கணத்திலிருந்து பிறழாமல் இலக்கியம் படைத்தல் வேண்டும். உலக வழக்கு என்பது உயர்ந்தோர் வழக்காகும். கோட்பாடுகள், மரபுகளை மீறிக் கவிதை அமையும்போது அது உலக வழக்கு மீறிய கவிதையாகி உயர்ந்தோர் ஏற்கும் தன்மையை இழந்துவிடுகிறது.

தொல்காப்பியர், ஐந்திணைக்கும் உரிய உரிப் பொருட்களை அகத்திணையியல் 14-ஆம் நூற்பாவால் விளக்குகின்றார்.

***‘புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்***
***ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை***
***தேருங்காலை திணைக்குரிப் பொருளே’***

*தொல். பொ. அகத். 14*

இந்த ஆய்வின் நோக்கத்திற்காக மேலே கூறப்பட்ட உரிப் பொருட்களும் அவை தொடர்பான நிகழ்வுகளும் பற்றிய தொல்காப்பியர் கருத்து மட்டுமே எடுத்துவரப்படுகிறது. இங்கு கூறப்பட்ட ஒழுக்கங்கள் அனைத்து நிலங்களுக்கும் உரிய உரிப் பொருட்களாக இருப்பினும் அவை குறியீட்டமைப்பின் மூலம் ஒரு திணைக்கே சிறப்பாக உரியதாகக் கொள்ளப்படுகிறது. இந்தக் குறிகள் விளக்கும் உரிப் பொருள்கள் காலம் தோறும் இருந்து வரக்கூடியவை. எனவே காலத்தை மீறியவை.

எனவே, குறிஞ்சித் திணை புணர்தலையும், முல்லைத்திணை இருத்தலையும், நெய்தல் திணை இரங்கலையும், மரு

தத்திணை ஊடலையும், பாலைத்திணை பிரிதலையும் குறியீட்டாக்கம் மூலம் குறிக்கின்றன. கவிதை ஆக்கத்தில், இவை மேலே குறிப்பிட்ட நிலங்களுக்கே உரியவையாகத் திணை அமைப்பில் குறிக்கப்படுகின்றன.

இங்கு, ஐந்திணை என்பது மக்களது 'பாலியல் ஒழுக்கங்களை' எடுத்துக் கூறுவதாகிறது. பாலியல் சார்ந்த இவ்வொழுக்கம், தொல்காப்பியத்தில் கற்பு, களவு என்னும் வாழ்வியல் அடிப்படையில் 'கைக்கோள்' கோட்பாடாகிறது. தலைவன் தலைவி இருவரது உறவு நிலையின் அடிப்படையில் ஐந்திணைகள் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. 'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' என்னும் அகத்திணையியல் 13-ஆம் நூற்பாவின் மூலம் உரிப் பொருள் திடமாக நிறுவப்படுகிறது.

மொத்தத்தில், ஓர் ஆணும் பெண்ணும் சமூகத்தில் இணைந்து வாழும் திருமண உறவானது, அறம், பொருள், இன்பம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்து இயங்க வேண்டும் என்பது தொல்காப்பியரது நோக்கமாக இருந்திருக்கவேண்டும்.

***ஓர் ஆணும் பெண்ணும் சமூகத்தில் இணைந்து வாழும் திருமண உறவானது, அறம், பொருள், இன்பம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்து இயங்க வேண்டும் என்பது தொல்காப்பியரது நோக்கமாக இருந்திருக்க வேண்டும்.***

மேலே குறிப்பிட்ட குறியீட்டாக்கத்தில் மருத நிலத்திற்கு உரிய பொருள் ஊடல் என்றாகிறது.

அகம் பற்றி விரிவாகவும் நுணுக்கமாகவும் பேசும் தொல்காப்பியர், அக வாழ்விற்கு இடையூறாக அமைந்த பரத்தைமையில் அவருக்கிருந்த உடன்பாடற்ற தன்மை காரணமாக உலகியல் வழக்கில் காணப்பட்ட பரத்தைமை ஒழுக்கம் பற்றித் தவிர்க்க முடியாத வேளைகளில் மட்டுமே குறிப்பிடுகிறார். 'உலகியல் என்பது உயர்ந்தோர் மேற்றே' என்னும் கருத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். வாழ்க்கை இப்படித்தான் இருக்கவேண்டும் என ஓர் இலட்சிய வாழ்க்கையைக் காட்ட முனைந்த தொல்காப்பியரால் சமூக வாழ்வில் புல்லுருவியாக அமைந்துவிட்ட பரத்தைமை ஒழுக்கம் பற்றி அதிகம் கூற முடியவில்லை. ஆனால், தவிர்க்கவும் முடியவில்லை.

## தொல்காப்பியத்தில் ஊடல்:

ஆய்வினுள் நுழையுமுன் சில விடயங்களைத் தெளிவுபடுத்திக்கொள்கிறோம்.

***பொருளதிகாரம் கூறும் வாழ்வியலில் பங்குதாரர்களான தலைவனும் தலைவியும் யாரைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள்?***

உலகியல் வழக்கைக் காட்டும் வகையில், அகத்திணையியல், அனைத்துத் திணை மக்களையும் உள்வாங்கியிருந்தாலும் தலைவன் தலைவியருக்குரிய இலக்கணங்கள் சாதாரண மக்களுக்கு ஒப்புவதாக இல்லாவிட்டாலும் சங்க இலக்கியங்கள் உலகியலையும் காட்டி நிற்கின்றன. உண்மையான காதல் வாழ்க்கை பேசப்பட்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. தலைவன் தலைவியருக்குரியதாகக் குறிப்பிட்டிருக்கும் பத்துக் குணங்களை, ஒரு காலத்தில் ஓரிடத்தில் ஒரு தலைவன் தலைவியரிடையே நிகழ்ந்த உயர்ந்த வாழ்க்கையை முன்னுதாரணமாகக் கொண்டு அளவு கோலாகக் காட்டியிருக்கிறார் என்று கூறலாம்.

தொல்காப்பியர் விதந்து கூறாத பல விடயங்கள் இக் காதலரிடையே நடந்திருக்கின்றன. அவை இல்லாமலே அக் காலச் சமூக நிலையை நாம் ஆராய்கிறோம். பல இடங்கள் இட்டு நிரப்பப்பட்டிருக்கின்றன.

களவில், தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் காண்பதுடன் தொல்காப்பியர் கூறும் வாழ்வியல் தொடங்குகிறது. தொல்காப்பியர், அக் கால வாழ்வியலை, வாயில்கள் எனப்படும் கதாபாத்திரங்களின் கூற்றுகள் வாயிலாகக் கூறிச் செல்கிறார். இக் கூற்றுகளை அக் காலப் பின்னணி கொண்டே ஆராயவேண்டியுள்ளது, இதனை, ஒரு பெரும் கதை என்றும் கூறலாம். அல்லது தலைவன் தலைவியரின் வாழ்க்கையில் ஒரு கணப் பொழுதில் ஓரிடத்தில் நடைபெற்ற ஒரு சிறு நிகழ்வை அடியாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதைகள் பல கொண்ட ஒரு நெடுங்கதை என்றும் கூறலாம்.

தொல்காப்பியத்தில் களவியல், சுவைமிக்க காதல், மொட்டாகி மலராகி காயாகி கனியாகும் இனிய அனுபவத்தை அழகுறக் கூறும் பகுதியாகும். காதல் திருமணமாக அரங்கேறுவதுடன் காதல் வாழ்வின் சுவைமிக்க ஓர் அங்கம் முடிந்துவிடுகிறது. அடுத்து வரும் கற்பியல் பகுதி திருமணத்துடன் தொடங்குகிறது. இப் பகுதி வாழ்வியலின் இன்னொரு பக்கத்தைக் கூறுகிறது. தொல்காப்பியத்தில் ஊடல் என்னும் ஒழுக்கம் மருதநிலத்திற்கு உரியதாகக் கூறப்படுகிறது. வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம் ஆகும். ஓய்வு நேரம் அதிகமாகக் கொண்ட விவசாயத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்டது மருதநிலம். ஓய்வு நேரத்தில் கலைகள் வளர்ந்தன. கூடவே பண்பாட்டுச் சீர்கேடும் வளர்ந்தது. 'ஊடல்' என்னும் ஒழுக்கம் கற்பியல் என்னும் அதிகாரத்தின் முக்கிய பேசு பொருளாக இடம்பெறுகிறது.

கற்பியல், தலைவன் தலைவியரிடையே நடந்த மணவினையுடன் தொடங்கும் 53 நூற்பாக்களைக் கொண்ட முக்கியமான வாழ்வியல் பகுதியாகும்.

தொல்காப்பியத்தில், பல இடங்களில், தொல்காப்பியர், பொருள் விளக்கம் கொடுக்கத் தவறியிருக்கிறார். தவறினார் என்று கூறுவதை விட, அச் சொற்களுக்கோ சொற் தொடர்களுக்கோ பொருள் விளக்கம் கொடுக்கவேண்டிய தேவை இல்லை என்னும் பொருள்பட, சொற் பொருளோ விளக்கமோ வரைவிலக்கணமோ கொடாது கடந்து சென்றிருக்கிறார் என்று கொள்வது மிகப் பொருத்தமாக இருக்கும். 'ஊடல்' என்னும் சொல் பற்றிய விளக்கம் கொடுக்கத் தவறியமையையும் அவ்வாறே கொள்ள வேணடியுள்ளது.

ஆனால், சில, முக்கியமான கைக்கோள்களுக்குச் செய்யுளியலில் விளக்கம் கொடுத்திருக்கிறார். அதாவது, மறை (களவு), கற்பு ஆகிய கைக்கோள்கள் செய்யுளியலில் (நூ. 178-179) விளக்கப்பட்டுள்ளன.

***'மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்
இவைமுத லாகிய இயல்நெறி பிழையாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே'***

*தொல். செய்யுளியல் 179*

களவொழுக்கம் ஒழுகி, அதன் பின்னர் மணம் செய்து கொண்ட தலைவனும் தலைவியும் கூடியும் ஊடியும் வாழும் வாழ்க்கையே கற்பு வாழ்க்கையாகும். அந் நெறியில் அவர்கள் பெறும் மன உறுதியே 'கற்பெனப்படும் திண்மை' ஆகும். இதனையே வள்ளுவரும்,

***'பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்'***

*குறள் 54*

என்றார்.

கற்பியலில் மலிவு, புலவி, ஊடல், உணர்வு, பிரிவு என்னும் ஐந்து கூறுகள் பேசப்படுகின்றன. 'கற்பு' என்னும் பதம் தொல்காப்பியத்தில் பல பொருள்பட ஆளப்பட்டிருந்த போதிலும், அது, பொதுப்பட 'இல்லறம்' என்னும் பொருளில் ஆளப்பட்டிருக்கிறது எனலாம். தொல்காப்பியர், காதல் வாழ்க்கையைக் 'களவியல் வாழ்க்கை' என்றும் திருமணம் செய்து வாழ்தலைக் 'கற்பியல் வாழ்க்கை' என்றும் அமைத்திருக்கிறார். அவரை அடியொற்றியே வள்ளுவரும் இன்பத்துப்பாலில் 'களவியல்' 'கற்பியல்'ஒழுக்கங்களை ஒன்றன் பின் ஒன்றாக வைத்திருக்கிறார்.

'மலிவு' என்பது, மகிழ்ச்சி என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. அதாவது களவு வாழ்க்கை முடிந்து கற்பு வாழ்க்கை தொடங்கிய காலத்தில், தலைவனும் தலைவியும் களவுக் காலத்தில் வருந்திய வருத்தம் தீர, சுதந்திரமாக இன்பம் அனுபவித்து மகிழ்தலாகும். இதனைத் தொல்காப்பியர்,

***'கரணத்தின் அமைந்து முடிந்த காலை
நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சி'***

*தொல். கற்பியல் நூ. 5*

என்றும்,

***'அவன் அறிவாற்ற அறியும்'***

*தொல். கற்பியல் நூ. 6*

என்றும் குறிப்பிடுகிறார்.

கற்பியல், மணவினையின் பின் தலைவி கணவன் வீட்டில் பெறும் உரிமைகளும் கடமைகளும் பேசப்படுகின்றன. தொல்காப்பிய நூற்பாக்களும் சங்க இலக்கியங்களும் தலைமகளுக்கு இருக்கும் அளப்பரிய உரிமைகள் பற்றிப் பேசுகின்றன. தலைவி, கணவனை, காமக்கிழத்தியர், பரத்தையர் முதலிய பிற பெண்களுடன் பங்கு கொள்ள வேண்டியதொரு துர்ப்பாய்க்கியமான நிலை தவிர அனைத்துத் துறைகளிலும் உயர் நிலையில் இருந்திருக்கிறாள். தன் கணவனை இன்னும் ஒருத்தியுடன் பங்கு கொள்வதில் பெண்களின் நிலைப்பாட்டில் இன்றுவரை எவ்வித மாற்றமும் இல்லை என்பது வியப்பிற்குரியதல்ல. தலைவனின் பரத்தமை ஒழுக்கமும், அதனால் தலைவன் தலைவியரிடையே ஏற்படும் ஊடல், ஊடலின் பல படிநிலைகள் முதலியவற்றை விளக்குவதாகவே தொல்காப்பியரின் ஊடல் பற்றிய பகுதிகள் அமைந்திருக்கிறன.

## ஊடல் பற்றிய விளக்கம்:

ஊடல் என்றால் என்ன என்று எம் எல்லோருக்கும் சுய அனுபவம் மூலமாக அல்லது பிறர் அனுபவம் வாயிலாக நன்றாகத் தெரிந்திருக்கிறது. ஆனால், அதனைத் தெளிவாக இன்னும் ஒருவருக்கு விளக்கத்தான் முடிவதில்லை. ஊடல் என்பது பொதுவாக இருவரிடையே, சிறப்பாக கணவன் மனைவியரிடையே அல்லது காதலன் காதலியரிடையே ஏற்படும் பொய்க் கோபம், பிணக்கு, கருத்து வேறுபாடு அல்லது மனத் தாங்கல் எனலாம். இது உளவியல் அடிப்படையில் தோன்றுகிறது. இதனை 'நடத்தை அறிவியல்' அடிப்படையில் பல கோணங்களில் பகுத்து ஆயலாம். 'நடத்தையியல் மேலை நாடுகளில் 19- ஆம் நூற்றாண்டில் உருவானது. தமிழில் இக்கலை தொல்காப்பியர் காலத்திலேயே வளர்ந்திருக்கிறது. மெய்ப்பாட்டியலில் இது பற்றிக் கூறப்படுகிறது.



ஊடலின் கால அளவு மிகச் சிறியது. ஊடல் என்பது வாழ்க்கையைச் சுவைபடக் கொண்டு செல்லும் ஒரு காரணியும் கூட. தினமும் இனிய சுவையை அனுபவிப்பவனுக்கு மாற்றாக வேறு சுவை ஒன்று தென்படும்போது. உணவு சுவை மிக்கதாகிறது.

## புலவி, ஊடல், உணர்வு:

புலவி, ஊடல், உணர்வு ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று நெருங்கியவை, ஒன்றை விட்டு ஒன்று பிரிக்க முடியாதவை. பிணக்கின் படிநிலை வளர்ச்சியைக் குறிக்கும் சொற்கள். ஊடல், ஆண் பெண் இருபாலாரிடமும் உண்டு என்று தொல்காப்பியம் அறியத் தருகிறது.

***“தலைவனின் பரத்தமை ஒழுக்கமும், அதனால் தலைவன் தலைவியரிடையே ஏற்படும் ஊடல், ஊடலின் பல படிநிலைகள் முதலியவற்றை விளக்குவதாகவே தொல்காப்பியரின் ஊடல் பற்றிய பகுதிகள் அமைந்திருக்கிறன.”***

திருக்குறள் ஊடல் ஒழுக்கத்தை துனி, புலவி என்னும் சொற்களால் வேறுபடுத்திக் காட்டுகிறது.

‘புலவி அண்மைக் காலத்தது என்றும் ஊடல் அதனின் மிக்கது’ என்பர் இளம்பூரணர்.

உணர்தல் என்பது ‘ஊடலை அளவறிந்து நீங்குதல்’ என்கிறார் பரிமேலழகர், திருக்குறள் உரையில்.

ஊடல் பற்றிய தொல்காப்பியரின் இந்த அமைப்பு முறை, அவரது உளவியல் நுட்பத்தை வெகுவாக விளக்கும் பகுதியாகும். மனித உள்ளங்களை அணு அணுவாக அளந்து சுவை மிகச் சொல்லியிருக்கும் திறம் வியக்க வைக்கிறது. தொல்காப்பியர், கணவன் மனைவியரிடையே இருந்த அன்பின் ஆழத்தைப் புலப்படுத்துவதற்கு ஊடலை ஒரு கருவியாகப் பயன்படுத்தியிருக்கிறார், இது உலகியல் ஒழுக்கமாகும். பரத்தையர் ஒழுக்கம் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருந்தாலும், ‘தன் கணவனை இன்னும் ஒரு பெண்ணுடன் பங்கு கொள்வதற்கு எந்தப் பெண்ணும் தயாராக இல்லை’ என்னும் எக் காலத்துக்கும் எந்நிலத்திற்கும் பொருத்தமான உலகியல் நிலைப்பாட்டைத் தொல்காப்பியர் அணுகியிருக்கும் அழகும், அளவைகளும் விளக்கமும் பிரமிக்கத் தக்கவை.

ஊடல் என்பது பிணக்கிக் கொள்ளும் ஒருவகை நடத்தைப் பாங்கு என்று கூப்படுகிறது. இது உளவியல் சார்ந்த ஒரு வெளிப்பாடாகும். மேல் நாட்டில் இதனை ‘நடத்தை அறிவியல்’ சார்ந்து பல்வேறு கோணங்களிலும் பகுத்தாய்வு செய்யலாம். நடத்தை அறிவியல் என்றால், இயற்கையில் உயிரினங்களின் உள்ளும் அவற்றிடையேயும் உள்ள நடத்தைகள் மற்றும் உத்திகள் நடத்தை அறிவியல்கள் என்பது, இயற்கையில் உயிரினங்களுக்கு உள்ளும் அவற்றுக்கு இடையிலும் உள்ள நடத்தைகள் மற்றும் உத்திகள் பற்றி ஆய்வு செய்யும் எல்லாத் துறைகளையும் ஒட்டுமொத்தமாகக் குறிக்கும் ஒரு சொற்றொடர் ஆகும்.

இந்த ஊடலின் பகுதிகளை, தொல்காப்பியருக்கு ஆயிரம் ஆண்டுகளின் பின் வாழ்ந்த திருவள்ளுவர் மிக அழகாக எடுத்துக்காட்டுடன் விளக்கியிருக்கிறார்.

***‘துனியும் புலவியும் இல்லாயிற் காமம்***
***கனியும் கருக்காயும் அற்று’***

*திருக்குறள் 1306*

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com





## இனப்படுகொலையின் அரசியல் - 16

# சர்வதேச போர்க்குற்ற விசாரணை: தீர்ப்பாயங்களின் அரசியல்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### தொடக்கக் குறிப்புகள்:

1990-களின் முற்பகுதியில்தான் நியூரம்பெர்க் மற்றும் டோக்கியோ மாதிரிகளால் ஈர்க்கப்பட்ட புதிய சர்வ தேச நீதிமன்றங்கள் உருவாயின. யூகோஸ்லாவி யாவின் உடைவு, ருவாண்டாவில் இனப்படுகொலை என்பவற்றுடன் தொடர்புடைய போர்கள் வினையூக்கி களாக இருந்தபோதிலும், கெடுபிடிப்போரின் முடிவு, உலகளவில் தாராளமய ஜனநாயகம் பரவுவதற்கும் சர்வதேச நீதிமன்றங்களினதும் நிரந்தர சர்வதேச குற் றவியல் நீதிமன்றத்தினதும் உருவாக்கத்தை ஆதரிக் கக் கணிசமான எண்ணிக்கையிலான நாடுகள் - குறிப்பாக அமெரிக்கா விருப்பம் தெரிவித்தது ஆகி யவை உலகளாவிய அளவில் ஒரு புதிய சட்ட கட்ட மைப்பை உருவாக்குவதற்கான அத்தியாவசிய சூழலை வழங்கின. 21-ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில், நியூரம்பெர்க்கிலும் டோக்கியோவிலும் நிறுவப்பட்ட முன்னுதாரணங்கள் நிலைநிறுத்தப்பட் டன. மேலும் சர்வதேச குற்றவியல் சட்ட மீறல்கள் என்ன என்பது விரிவடைந்தது. ஆனால் உலகளாவிய அதிகாரப் போட்டி - அதாவது, சீனாவுடான பொருளா தாரப் போட்டியில் அமெரிக்காவின் சரிவும் ஒரு பெரிய சக்தியாக தன்னை மீண்டும் நிலைநிறுத்த ரஷ்யாவின் உறுதிப்பாடும் - கெடுபிடிப்போருக்குப் பிந்தைய முதல் தசாப்தங்களில் போர்க்குற்றங் களுக்கான விசாரணைகளுக்குக் கடுமையான சவால் களை ஏற்படுத்தியுள்ளது.

1980-களின் பிற்பகுதியில், பல்வேறு இனங்களையும் மதங்களையும் சேர்ந்த யூகோஸ்லாவியா கூட்டாட்சி மக்கள் குடியரசு (போஸ்னியா மற்றும் ஹெர்ச கோவினா, குரோஷியா, மாசிடோனியா, மாண்டி னீக்ரோ, செர்பியா, ஸ்லோவேனியா ஆகிய ஆறு குடி யரசுகளை உள்ளடக்கிய ஒரு கூட்டமைப்பு) பிரிந்து கொண்டிருந்தது. 1991-இல், ஸ்லோவேனியாவும் குரோஷியாவும் பிரிந்து, செர்பியாவுடன் குறுகிய போர்களை உருவாக்கியது. அடுத்த ஆண்டு போஸ்னியா, ஹெர்சகோவினா அரசாங்கங்கள் சுதந் திரத்தை அறிவித்தன. இரண்டு காரணிகள் நிலை மையை வெடிக்கச் செய்தன. ஒன்று, யூகோஸ்லா வியத் தலைவரும் செர்பியாவின் தலைவருமான ஸ்லோபோடன் மிலோசோவிக் ஏற்கனவே செர்பியா விற்குள் தேசியவாதத்தை முன்னிறுத்தினார், ஏனெ னில் யூகோஸ்லாவிய கூட்டமைப்பு உடைவை நோக் கிச் செல்வது தெளிவாகத் தெரிந்தது. மற்றொன்று போஸ்னியாவின் இன வரைபடம். மக்கள் தொகை யில் பெரும்பாலோர் முஸ்லிம்கள் (போஸ்னியாக்ஸ்) ஆகவும் ஆனால் செர்பியர்கள் கணிசமான சிறுபான் மையினராகவும் (சுமார் 1.3 மில்லியன்) இருந்தனர். போஸ்னியாவின் சுதந்திரத்தை நோக்கிய நகர்வை மிலோசோவிக் ஒரு சாக்காகப் பயன்படுத்தி, போஸ் னியாவின் கணிசமான பகுதியையும் குரோஷியாவின் ஒரு சிறிய பகுதியையும் கட்டுப்படுத்த முயற்சிப்பதன் மூலம், பழைய செர்பிய தேசியவாதக் கனவான 'பெரிய செர்பியா'வை அடைய முயன்றார். இந்தச் செயற்பாட்டில், செர்பிய இராணுவத்தின் ஆதரவுடன் போஸ்னிய செர்பிய இராணுவம், இரண்டாம் உலகப்

போருக்குப் பிறகு ஐரோப்பாவில் காணப்படாத அளவில் இன அழிப்பு பிரச்சாரத்தை நடத்தியது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. 1994 வாக்கில், அவர்கள் போஸ்னியாவின் சுமார் 70 சதவீதத்தைக் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டனர். அனைத்துத் தரப்பினராலும் அட்டூழியங்கள் செய்யப்பட்டன. ஆனால் அவை பேசப்படுவதில்லை.

1994-ஆம் ஆண்டு, ருவாண்டாவில் உள்ள ஹட்டு இனக் குழுவைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர், லட்சக்கணக்கான டுட்சிகளையும் பிற ஹட்டுக்களையும் கொன்றனர். பெரும்பான்மை ஹட்டு மக்களுக்கும் சிறுபான்மை டுட்சிகளுக்கும் (அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரத்தில் விகிதாசார மற்ற பங்கைக் கொண்டிருப்பதாக முன்னவர்களால் கருதப்பட்டது) இடையேயான பதற்றங்களும் சில சமயங்களில் வன்முறையும் காலனித்துவத்திற்கு முந்தைய காலம் வரை நீட்டிக்கப்பட்டு காலனிய ஆட்சியாளர்களான ஜெர்மன் மற்றும் பெல்ஜிய ஆட்சியால் அதிகரிக்கப்பட்டன. இந்தப் பதற்றங்கள் காலனித்துவத்திற்குப் பிந்தைய தசாப்தங்களிலும் தொடர்ந்தன. 1990-களின் முதல் ஆண்டுகளில், டுட்சிகள் ஹட்டு மக்களைக் கொல்லத் திட்டமிட்டுள்ளனர் என்ற வதந்தியின் அடிப்படையில் டுட்சிகளை ஒழிக்க ஹட்டு தேசியவாத அரசாங்கம் உறுதியாக இருந்தது. அண்டை நாடான புருண்டியில் இரு குழுக்களிடையே வன்முறை தீவிரமடைந்தமை விஷயங்களை மோசமாக்கியது. 1990-இல் டுட்சி கிளர்ச்சிப் படைகள் ருவாண்டா மீது படையெடுத்ததைத் தொடர்ந்து, ஹட்டு டுட்சி ஆகிய இரண்டு பிரிவு அரசியல் கட்சிகளுக்கு இடையே ஒரு சமாதான ஒப்பந்தமும் அதிகாரப் பகிர்வும் செய்வதற்கான ஏற்பாடு மிகவும் தீவிரமான ஹட்டு கூறுகளின் ஆதரவைப் பெறத் தவறிவிட்டது. இதன் தொடர்ச்சியாக ருவாண்டா இனப்படுகொலை நிகழ்ந்தது.

2000-களின் முற்பகுதியில் பல சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டன. 1990-களின் இறுதியில் இந்தோனேசியாவின் ஒரு மாகாணமான கிழக்கு திமோரில் மற்றொரு இனப்படுகொலை நிகழ்ந்தது. ஆனால் அதற்கு அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றம் அரசியல் நலன்களால் சேதமடைந்தது. மனித உரிமை மீறல்கள் நடந்ததாகக் கூறப்படும் பல தசாப்தங்களுக்குப் பிறகு சர்வதேச நீதிமன்றத்தால் கூட்டப்பட்ட கம்போடியாவின் வழக்கு அசாதாரணமானது. 1975-க்கும் 1979-க்கும் இடையில், கம்போடியாவில் கெமர் ரூஜ் ஆட்சியில் நிகழ்ந்ததாகச் சொல்லப்பட்ட குற்றங்கள் 1990-களில் விசாரிக்கப்பட்டன. விசித்திரமாக, அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் 1994-இல் கம்போடிய இனப்படுகொலை நீதிச் சட்டம் என்ற ஒன்றில் கையெழுத்திட்டார். இது 1975-க்கும் 1979-க்கும் இடையில் கெமர் ரூஜ் செய்த குற்றங்களை விசாரித்து வழக்குத் தொடர்வதற்கான அமெரிக்காவின் ஆதரவை உறுதியளித்தது.

> ***1990-களின் இறுதியில் இந்தோனேசியாவின் ஒரு மாகாணமான கிழக்கு திமோரில் மற்றொரு இனப்படுகொலை நிகழ்ந்தது. ஆனால் அதற்கு அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றம் அரசியல் நலன்களால் சேதமடைந்தது.***

இவ்வாறு அமைக்கப்பட்ட நீதிமன்றம் தனது முதல் விசாரணையை 2007 வரை நடத்தவில்லை, மேலும் வயதான சந்தேக நபர்கள் ஐந்து பேரை மட்டுமே குற்றஞ்சாட்டியது. ஒருவர் விசாரணைக்கு மனரீதியாகத் தகுதியற்றவர் என்று அறிவிக்கப்பட்டார், மற்றொருவர் விசாரணையின்போது இறந்தார், மற்ற மூவரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டனர். பிரெஞ்சு நீதிபதிக்கும் கம்போடிய நீதிபதிக்கும் இடையே மேலும் வழக்குத் தொடருவது தொடர்பான கருத்து வேறுபாடு, விசாரணைகள் நாட்டில் ஸ்திரமின்மையை ஏற்படுத்தும் என்ற அச்சம், பல குற்றவாளிகள் இறந்துவிட்டமை ஆகிய காரணங்களால் குறித்த நீதிமன்றின் முன் இனி எந்த வழக்குகளும் கொண்டுவரப்படாமல் இருப்பது உறுதி செய்யப்பட்டது. மேற்சொன்ன அனைத்திலும் நீதி குறித்த அவா, அரசியலால் உந்தப்பட்டது.

### யாருடைய நலன், யாருக்கான நீதி:

1989-ஆம் ஆண்டில், பொதுச் சபை இறுதியாகச் சர்வதேச சட்ட ஆணையத்திற்கு நிரந்தர நீதிமன்றத்திற்கான சட்டத்தை வரைவதற்குப் பச்சைக்கொடி காட்டியது. கெடுபிடிப்போரின் முடிவு சர்வதேச குற்றவியல் நீதியின் மறுமலர்ச்சிக்கு ஒரு வளமான சூழலை வழங்கியது. 1994-ஆம் ஆண்டில், ஆணையம் தனது இறுதி அறிக்கையை ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் சமர்ப்பிக்கும் முன்பே, நிரந்தர அமைப்பு அமைக்கப்படும் வரை தற்காலிக நிறுவனங்களை உருவாக்க வேண்டும் என்ற பொறுமையற்ற கோரிக்கைகள் எழுந்தன. சர்வதேச நிகழ்ச்சி நிரலில் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஒரு பெரிய இடத்தைப் பிடித்திருப்பது தெளிவாகத் தெரிந்தது. 1990-ஆம் ஆண்டில், குவைத்திற்கு எதிரான ஈராக் ஆக்கிரமிப்பு தொடர்பாக அதிகார வரம்பைக் கொண்ட ஒரு சர்வதேச நீதிமன்றத்தை உருவாக்க அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் என்பவற்றைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்தால் எச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இவை தீர்ப்பாயங்கள் குறித்த கேள்விகளையும் எழுப்பின. ஈராக்கிற்கு எதிராக ஒரு தீர்ப்பாயத்தை உருவாக்குவதற்கான மேற்குலகின் உந்துதல் அதன் நோக்கங்களைக் கேள்விக்குட்படுத்தியது. அமெரிக்கா வியட்னாமில் இழைத்த குற்றங்களை யார் விசாரிப்பது என்ற கேள்வி எழுந்தது. அதேபோல காலனியாதிக்கத்திலிருந்து விடுதலையடைவதற்கான போராட்டங்களின்போது காலனியாதிக்கங்கள் 1950-கள் முதல் 1980-களின் இறுதிவரை இழைத்த குற்றங்களுக்குப் பொறுப்பேற்பது யார் என்ற கேள்வியும் எழுந்தது. குவைத்-ஈராக் மோதல் ஒரு இராணுவ முட்டுக்கட்டைக்குள் முடிந்ததால், ஈராக்கிற்கு எதிரான தீர்ப்பாயம் என்ற யோசனை கைவிடப்பட்டது. ஈராக் தீர்ப்பாயத்தை உருவாக்கும் முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டவுடன், கவனம் பால்கன் பகுதிக்கு திரும்பியது, அங்கு யூகோஸ்லாவியாவின் உடைவுடன் போர்க்குற்றங்கள், இன அழிப்பு மற்றும் பாலியல் வன்முறை பற்றிய பயங்கரமான அறிக்கைகள் வந்தன.

பெப்பிரவரி 1993-இல், முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தை உருவாக்க ஐ.நா. பாதுகாப்புச் சபை வாக்களித்தது. ஐக்கிய நாடுகள் சபையின் மூத்த வழக்கறிஞர்கள், சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தை உருவாக்க பாதுகாப்பு சபைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் யாப்பினால் அதிகாரம் அளிக்கப்பட்டதா என்பது குறித்து சந்தேகம் கொண்டிருந்தனர். முதல் பிரதிவாதிகளில் ஒருவர் தீர்ப்பாயத்தின் உரு




வாக்கத்தை சவால் செய்தபோதும், அந்தச் சவால்கள் புறந் தள்ளப்பட்டன. முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான சர்வ தேச குற்றவியல் தீர்ப்பாயம், அதன் முன்னோடியான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் கிட்டத்தட்ட உலகளாவிய அதிகாரத்தின் காரணமாக, நியூரம்பெர்க் மற்றும் டோக்கி யோவில் அதன் முன்னோடிகளை விட சந்தேகத்திற்கு இட மின்றி சர்வதேசமானது. சர்வதேச தீர்ப்பாயம் நிறுவப்பட்ட நேரத்தில், மோதலில் வெற்றியாளர் யாரும் இல்லை, எந்த வொரு சந்தர்ப்பத்திலும், நீதிபதிகள் உலகின் பல்வேறு பகு திகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டனர், பாதுகாப்பு கவுன்சில் மற்றும் பொதுச் சபை இரண்டையும் உள்ளடக்கிய நம்பகமா னதும் வெளிப்படையானதுமான நடைமுறையால் நியமிக்கப் பட்டனர். 1940-களின் முன்னுதாரணங்களை அதன் குறிப்புப் புள்ளியாகப் பயன்படுத்தி, சர்வதேச சட்டத்தின் கீழ் சந்தே கத்திற்கு இடமின்றி அங்கீகரிக்கப்பட்ட குற்றங்களை மட் டுமே தீர்ப்பாயம் தீர்ப்பளிக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி குறிப் பிட்டார்.

1994-ஆம் ஆண்டு ருவாண்டாவின் டுட்ஸி சிறுபான்மை யினரை இனப்படுகொலை செய்தபோது யூகோஸ்லாவியா தீர்ப்பாயம் செயற்படவில்லை. பாதுகாப்பு கவுன்சிலால் இரண்டாவது தீர்ப்பாயம் விரைவாக உருவாக்கப்பட்டது. யூகோஸ்லாவியாவிற்கான அதே சட்டம், பகிரப்பட்ட வழக்கு ரைஞர் மற்றும் ஒருங்கிணைந்த மேல்முறையீட்டு அறை ஆகி யவற்றால் இது இணைக்கப்பட்டது. குற்றங்கள் சற்று வித்தி யாசமாக வரையறுக்கப்பட்டன, மேலும் நியூரம்பெர்க்கில் வழக்குத் தொடரப்பட்ட குற்றங்களை வெறுமனே குறியீடாக் குவதை விட பாதுகாப்புச் சபையானது மேலதிகமாகச் செயற்பட வேண்டிய தேவையுள்ளது என்பதை ஒப்புக் கொண்டது. குறிப்பாக, உள்நாட்டு ஆயுத மோதலில் செய் யப்பட்ட போர்க்குற்றங்கள் மீதான அதிகார வரம்பு அதற்கு வெளிப்படையாக வழங்கப்பட்டது. இது ஏற்கனவே உள்ள வழக்கமான சர்வதேச சட்டத்தின் அறிக்கையாக இன்னும் சர்ச்சைக்குரியதாக இருந்தது.

அப்போதிருந்து இரண்டு தீர்ப்பாயங்களும் இணையாகச் செயற்பட்டன. சட்ட முன்னுதாரணங்களினதும் மற்றும் நடை முறைகளின் அடிப்படையிலும் அவற்றுக்கிடையே தவிர்க்க முடியாத நுணுக்கங்கள் உள்ளன. நிபுணத்துவம் இல்லாதவர் களுக்கு, அவை பிரித்தறிய முடியாதவையாக இருந்தன. 1990-களின் பிற்பகுதியில் தற்காலிக தீர்ப்பாயங்கள் செழித்து வந்தாலும், அவற்றின் செயற்பாட்டில் அதிருப்தி அதிகரித்து வந்தது. மேலும் இது ஒரு சிறந்த மாதிரி அல்ல என்ற உணர்வும் இருந்தது. குறிப்பாக, யுகோஸ்லாவியா தீர்ப் பாயத்தின் நடத்தை மிகுந்த விமர்சனத்திற்கு உள்ளானது. அது அரசியல் நோக்கங்களால் வழிநடத்தப்படுகிறது என்பது பொதுவான குற்றச்சாட்டாக இருந்தது. அதேபோல ருவாண்டா தீர்ப்பாயம் டுக்ஸி இனத்துத் தலைவர்களின் குற்றங்களை விசாரிக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்தது.

இந்நிலையில் 2002-இல், சியரா லியோனுக்கு ஒரு தீர்ப்பா யத்தை நிறுவ வேண்டும் என்ற அழைப்பை எதிர்கொண்ட ஐக்கிய நாடுகள் சபை, ஒரு பலவீனமான நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்தது. சியரா லியோனுக்கான சிறப்பு நீதிமன்றம் மற்ற இரண்டு ஐக்கிய நாடுகளின் குற்றவியல் தீர்ப்பாயங்க ளுடன் ஒப்பிடும்போது வியத்தகு முறையில் குறைவான பட் ஜெட்டைக் கொண்டிருந்தது, மேலும் அது, ஒரு சில விசார ணைகளை மட்டுமே கையாள வடிவமைக்கப்பட்டது. இது பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தால் அல்லாமல் ஐக்கிய நாடுகள் சபைக்கும் சியரா லியோன் அரசாங்கத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தால் உருவாக்கப்பட்டது. நிறு வனத்தின் கூட்டு உரிமையைப் பிரதிபலிக்கும் வகையில், சில நீதிபதிகளாலும் துணை வழக்கறிஞரை சியரா லியோன் அரசாங்கத்தால் நியமனம் செய்வதற்கு உடன்பாடு எட்டப் பட்டது. யூகோஸ்லாவியா மற்றும் ருவாண்டா தீர்ப்பாயங் களைப் போலவே, பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்படா மல், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் வழக்குரைஞரும் சர்வதேச நீதிபதிகளும் நியமிக்கப்பட்டனர். இந்த அம்சங்களால், சியரா லியோனுக்கான சிறப்பு நீதிமன் றத்திற்கு பாதுகாப்புச் சபையால் நிறுவப்பட்ட தீர்ப்பாயங் களைப் போன்ற அதிகாரங்கள் இல்லை என்றும், அரசாங்கத் திடமிருந்து தேவையான சுதந்திரம் இல்லை என்றும், அதன் சொந்த மூத்த அதிகாரிகள் சந்தேகத்திற்குரியவர்களாகக் கூட இருக்கலாம் என்றும் வழக்கறிஞர்கள் வாதிட்டனர். லெபனானுக்கான சிறப்பு தீர்ப்பாயத்தைப் பொறுத்தவரை இதே போன்ற சில பிரச்சினைகள் எழுந்தன, இது அதன் அதி காரிகளை நியமிப்பதில் உள்ளூர் அரசாங்கத்தின் பங்களிப் பையும் கொண்டிருந்தது.

இதேபோல லெபானானுக்கான சிறப் புத் தீர்பாயமும் உருவாக்கப்பட்டது. இது மிகுந்த சர்ச்சைக்குரியதாக இருந்தது. லெபனானுக்கான சிறப்பு தீர்ப்பாயம், 2007-ஆம் ஆண்டு ஐ.நா. வின் அனுசரணையில், முன்னாள் லெபானானியப் பிரதமர் ரபிக் ஹரிரி யின் கொலையில் தொடர்புடைய வர்களை விசாரிக்க அமைக்கப்பட் டது. இந்தத் தீர்ப்பாயம், இனப்படு கொலை அல்லது மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக அல்லா மல், ‘கொடூரமான பயங்கரவாதச் செயல்’ என்று அழைக்கப்படும் ஒரு படுகொலைக்காக குற்றவாளிகளைத் தேடித் தண்டிக்க முயன்றது. இது 2007-ஆம் ஆண்டு ஐ.நா. பாதுகாப்பு சபையால் சர்ச்சைக்குரிய முறையில் அங்கீகரிக்கப்பட்டதிலிருந்து, தீர்ப்பாயம் அரசாங்கத்தில் முன்னெப்போதும் இல்லாத பதற்றம், அவநம்பிக்கை மற்றும் நீடித்த நெருக்கடிகளை உருவாக்கியது. உள்நாட்டுப் போருக்குப் பிந்தைய லெபனானில் இது மிகவும் பிளவுப டுத்தும் பிரச்சினைகளில் ஒன்றாக உருவெடுத்தது. ஆழ மாகப் பிளவுபட்ட நாட்டில் உள்நாட்டு அரசியல் மோதலின் சர்வதேசமயமாக்கலுக்கு இந்தத் தீர்ப்பாயம் நல்ல உதாரண மாகும். அதன் நீதித்துறையால் குற்றவாளிகளை பொறுப் பேற்க முடியவில்லை. பாரபட்சமற்ற விசாரணையை நடத்த அது மிகவும் பிளவுபட்டுள்ளது. நம்பகமான தீர்ப்புகளை எட்டக் கூடிய தன்மையற்ற பலவீனமான, பிராந்திய மேலாதிக் கவாதிகளால் (அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ்) பின்பற் றப்பட்டு, தண்டனையி லிருந்து விலக்கு அளிக்கும் முயற் சியில் சர்வதேச சமூகத்தால் (ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் மேற்குலகு) திணிக்கப்பட்ட நீதிக்கான உள்ளூர் விசா ரணைகளால் குற்றவியல் விசாரணை தூண்டப்பட்டது. சிக்க லான நீதித்துறை செயல்முறைக்கு சிவில் சமூகத்தின் சில பிரிவுகள் ஆதரவு அளித்தன. ஆனால் இந்தத் தீர்ப்பாயம் நிறுவப்பட்ட பின்னர் சர்வதேச அரங்காடிகளால் இயக்கப் பட்டது, மேலும் அதன் வெளிப்படையான அரசியல்மயமாக் கல் காரணமாக, உள்ளூர் அரங்காடிகளின் பங்கு பலவீனம டைந்தது.




சியரா லியோன் மற்றும் லெபனான் தீர்ப்பாயங்களும் முந் தைய நிறுவனங்களிலிருந்து நிதியுதவி அடிப்படையில் வேறு படுகின்றன. முதல் இரண்டு (ருவாண்டா, யுகோஸ்லாவியா) தற்காலிக தீர்ப்பாயங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் பொது பட்ஜெட்டில் இருந்து செயற்பட்டன, அதே நேரத்தில் பிந்தைய இரண்டும் (சியரா லியோன், லெபனான்) அந்தந்த நாட்டின் தன்னார்வ பங்களிப்புகளாலும், லெபனான் தீர்ப்பா யத்தைப் பொறுத்தவரை, அரசாங்கத்தின் பங்களிப்பாலும் நிதியளிக்கப்பட்டன. இந்த வகையான நிதியுதவி ஒரு நீதித் துறை நிறுவனத்திற்கு திருப்தியற்றது. தேசிய நீதிமன்றங் களின் நீதிபதிகளைப் போலவே, சர்வதேச தீர்ப்பாயங்களில் உள்ளவர்களுக்கும் அவர்களின் சம்பளம் வழங்கப்படும் என்றும், அவர்களின் எதிர்கால வாழ்வாதாரம் தீர்ப்பாயத்தால் வழங்கப்படும் தீர்ப்புகளால் ஒரு அரசு திருப்தி அடைகிறதா என்பதைப் பொறுத்ததாக அமையாது என்றும் உறுதியளிக் கப்பட வேண்டும். அரசுகள் நிறுவனத்தின் ஆயுட்காலத்திற்கு நிதியுதவியை உறுதி செய்யும் வரை அத்தகைய நிறுவனங்களில் பங்கேற்க மறுப்பது ஐக்கிய நாடு கள் சபைக்கு மிகவும் எளிதானது என்று தோன்றுகிறது. அத்தகைய உறுதிமொழிகளைச் செய்வதற்கு நிதியளிப்பவர்களின் எதிர்ப்பு, தீர்ப்பாயங்களுக்கான அவர்களின் தற்போதைய நிதி ஆதரவு ‘செயற்றிறனுடன்’ இணைக்கப்பட் டுள்ளது என்ற உண்மையை மட்டுமே உறுதிப்படுத்துகிறது.

2010-ஆம் ஆண்டின் பிற்பகுதி யில், சர்வதேச தீர்ப்பாயங்களுக் கான சர்வதேச எஞ்சிய வழிமுறை என்ற ஐந்தாவது தற்காலிக சர்வ தேச குற்றவியல் நீதிமன்றம் உரு வாக்கப்பட்டது. உண்மையில், இது யூகோஸ்லாவியா மற்றும் ருவாண்டா தீர்ப்பாயங்களின் பணிகளைத் தொடர்ந்தது. இறுதி விசாரணைகள் மற்றும் மேல்முறையீடுகள் முடிந்ததும் அவற்றின் கதவுகள் மூடப்பட்டன. குறிப்பாக, ருவாண்டா தீர்ப் பாயத்தில், தலைமறைவாக இருக்கும் சில குற்றம் சாட்டப் பட்ட தப்பியோடியவர்களுக்கு (யூகோஸ்லாவியா தீர்ப்பா யத்தின் ‘மிகவும் தேடப்படும்’ பட்டியலில் உள்ள அனைத்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்) எப்போதும் ஒரு நீதிபதி மற்றும் ஒரு வழக்கறிஞர் இருப்பதை சர்வதேச எஞ்சிய வழிமுறை உறுதி செய்கிறது, அத்துடன் ஒரு குற்ற வாளியை விடுவிக்கக்கூடிய புதிய ஆதாரங்கள் வெளிச்சத் திற்கு வந்தால் மறுபரிசீலனை செய்வதற்கான ஒரு வழியை யும் இது உறுதி செய்கிறது. விசாரணைகள் முடிந்ததும் சியரா லியோனின் சிறப்பு நீதிமன்றத்திற்காக ஒரு எஞ்சிய நீதி மன்றமும் திட்டமிடப்பட்டது.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்:

1990-களில், முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கும் ருவாண்டா விற்குமான புதிதாக உருவாக்கப்பட்ட தற்காலிக தீர்ப்பாயங் கள் பெரும்பாலும் அறியப்படாத நீரில் பயணித்தபோது, ஒரு நிரந்தர சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவுவது குறித்த பேச்சுவார்த்தைகள் விரைவான முன்னேற்றத்தை அடைந்தன. உண்மையில், பணியின் விரைவான வேகத் தைக் கணிக்க முடியாது. 1994-இல் சர்வதேச சட்ட ஆணை யத்தால் (International Law Commission) இறுதி செய்யப் பட்ட வரைவு சட்டம், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையின் அனுசரணையில் நடைபெற்ற தொடர்ச்சியான கூட் டங்களில் மூன்று ஆண்டுகள் தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டது. இந்தக் காலகட்டத்தில், நீதிமன்றத்தின் பார்வை, பாதுகாப்பு கவுன்சிலுக்கு அடிபணிந்த ஒரு நிறுவனத்தி லிருந்து, பெரும் வல்லரசுகளதும் ஏனைய பலமிக்க அரசுக ளதும் வேரூன்றிய ஆதிக்கம் இல்லாமல் அதன் சொந்த முன் னுரிமைகளை அமைக்கக்கூடிய ஒரு சுயாதீன அமைப்பின் பார்வையாக வளர்ந்தது. 1998-இல், சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் சட்டத்தை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த சுமார் 160 நாடுகள் ரோமில் கூடியிருந்தன. சட்டம் வாக்களிக் கப்பட்ட போது, பெரும்பாலான உள்ளடக்கங்களில் பரந்த ஒருமித்த கருத்து இருந்தபோதிலும், பங்கேற்ற நாடுகளில்

120 மட்டுமே ஒப்புக்கொண்டன. அமெரிக்கா, சீனா மற்றும் இஸ்ரேல் உட்பட ஏழு நாடுகள் சட்டத்திற்கு எதிராக வாக்க ளித்தன, மேலும் இருபத்தொரு நாடுகள் வாக்களிப்பைத் தவிர்த்துவிட்டன.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை முந்தைய அனைத்து சர்வதேச குற்றவியல் நீதி நிறுவனங்களிலிருந்தும் பிரிக்கும் மிக முக்கியமான வேறுபாடு, வழக்கறிஞருக்கு வழங்கப்பட்ட சுதந்திரம். அவர்கள் நீதிமன்ற உறுப்பினர்களால் ஒன்பது ஆண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுவதுடன் விசாரணை களையும் விசாரணைக்கான 'சூழ்நிலைகளையும்' தேர்ந்தெ டுக்கும் அதிகாரம் கொண்டவர்கள். சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில், அந்த நெருக்கடிகள், மோதல்கள் மற்றும் அதன் கவனம் செலுத்தப்பட வேண்டிய நாடுகளை அடையாளம் காண தன்னாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்ப்பாயம் உருவாக் கப்பட்டது. முந்தைய தீர்ப்பாயங்களை வகைப்படுத்திய அரசியல் வழிகாட்டுதலின் ஒரே எச்சம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை அல்லது ஒரு உறுப்பு நாடு ஒரு சூழ் நிலையை வழக்கறிஞரிடம் குறிப்பிடுவதற்கான சாத்தியக் கூறு மட்டுமே. ஆனால் அப்போதும் கூட, 'நீதியின் நலன் களில் இருக்காது' என்று அவர் நினைத்தால் விசாரணையை மறுக்க வழக்கறிஞர் விருப்புரிமை பெற்றுள்ளார்.

இந்த அசாதாரண வழக்குத் தொடுக்கும் அதிகாரத்தின் மீது லேசான அளவிலான நீதித்துறை மேற்பார்வை உள்ளது. கோட்பாட்டளவில், எப்படியிருந்தாலும், சூழ்நிலைகளைத் தேர்ந்தெடுக்கும் முழு செயல்முறையும் கண்டிப்பாக நீதித் துறை அளவுகோல்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும். நடைமு றையில், இது இன்னும் ஆழமாக அகநிலையாகத் தெரி கிறது, ஆனால் கூடுதலாக, முந்தைய நிறுவனங்களுடன் ஒப் பிடும்போது, மிகவும் தெளிவற்றது. மற்ற சர்வதேச குற்ற வியல் தீர்ப்பாயங்களில், இலக்குகளைத் தேர்ந்தெடுப்பது மன்னிப்பு கேட்காமல் அரசியல் ரீதியாக இருந்தது. வழக்குத் தொடுப்பவரால் சூழ் நிலைகளை அடையாளம் காண்பதில் எழும் சவால்கள், 'வெற்றியாளர்களின் நீதி' நோக்கியதாக வழக்குத் தொடுப்புகள் இருக்கப் போகின்றன என்பதைக் காட்டின.

ரோம் சட்டம் அதன் அறுபதாவது ஒப்புதலைப் பெற்ற பிறகு ஜூலை 1, 2002 அன்று நடைமுறைக்கு வந்தது. ஒரு வருடம் கழித்து, நீதிபதிகளதும் வழக்குரைஞரதும் தேர்தலைத் தொடர்ந்து, அது முழுமையாக செயற்பாட்டுக்கு வந்தது. அதன் ஆரம்ப ஆண்டுகளில் நீதிமன்றம் அதன் வழியைக் கண்டுபிடிக்க போராடியது என்பது இரகசியமல்ல. 'பொருத் தமான சூழ்நிலைகளைத் தேர்ந்தெடுப்பது' என்பதைச் சொல் வது எளிது, செய்வது எளிதல்ல என்று தோன்றுகிறது. முதல் விசாரணைகள் சாட்சிய சிக்கல்களில் தடுமாறின. இன்று 23 ஆண்டுகள் கழித்தும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் குறித்த நியாயமான விமர்சனங்கள் உண்டு.

### 'சர்வதேச' என்ற சொல்லாடல்:

சில போர்க்குற்ற தீர்ப்பாயங்கள் தங்கள் பெயரில் 'சர்வதேச' என்ற வார்த்தையைக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, சர்வதேச இராணுவ தீர்ப்பாயம், முன்னாள் யூகோஸ்லாவியா விற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம், சர்வதேச குற்ற வியல் நீதிமன்றம். அதுபோலவே சியரா லியோனுக்கான சிறப்பு நீதிமன்றம், லெபனானுக்கான சிறப்பு தீர்ப்பாயம் போன்றவற்றில் சர்வதேச என்ற சொல் இடம்பெறவில்லை. எனவே தீர்ப்பாயங்களிற்கு வழங்கப்படும் பெயர்கள் தீர்க்க மானதல்ல என்பது தெளிவாகிறது. சியரா லியோனுக்கான சிறப்பு நீதிமன்றத்தின் நீதிபதிகள், முன்னாள் யூகோஸ்லாவி யாவையும் ருவாண்டாவையும் கையாள ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையால் நிறுவப்பட்ட தற்காலிக தீர்ப்பாயங் களைப் போலவே அவை 'சர்வதேச' என்று தீர்ப்பளித்துள் ளனர். சியரா லியோன் மற்றும் லெபனான் தீர்ப்பாயங்கள் அந்தந்த அரசாங்கங்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையிலான ஒப்பந்தங்களுக்கு அந்தந்த நாடுகளின் பாது காப்புச் சபையின் அனுமதியுடன் கட்டுப்பட்டுள்ளன. சர்வ தேச குற்றவியல் நீதிமன்றம் அதன் இருப்புக்கு அதன் ஒப்பந் தமான ரோம் சட்டத்திற்குக் கடமைப்பட்டுள்ளது.

சர்வதேச இராணுவ தீர்ப்பாயங்கள், முதல் இரண்டு தற் காலிக தீர்ப்பாயங்கள், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஆகியவை சர்வதேச குற்றங்கள் மீது மட்டுமே அதிகார வரம்பைப் பயன்படுத்துகின்றன. ஆனால் ஒரு நாடு அதே நிபு ணத்துவத்துடன் அதன் சொந்த தேசிய தீர்ப்பாயத்தை நிறுவு வதைத் தடுக்க இயலாது, மேலும் சிலர் அவ்வாறு செய்துள் ளனர். ஒரு தேசிய நீதித்துறை நிறுவனம் சர்வதேச குற்றங் களை மட்டுமே கையாள்கிறது என்பது அதை ஒரு சர்வதேச நீதிமன்றமாக மாற்ற போதுமானதாக இல்லை. சர்வதேச குற் றவியல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு சர்வதேச குற்றங்க ளுக்கு மட்டுமே இருக்க வேண்டும் என்ற தேவையும் இல்லை. சியரா லியோனுக்கான சிறப்பு நீதிமன்றம் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு கூடுதலாக சியரா லியோனின் சட்டங்களின் கீழ் குற்றங்களுக்கான விசாரணையை தொடர முடிந்தது, இருப்பினும் வழக்கறிஞர் குற்றச்சாட்டுகளை சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றங்களுக்கு மட்டுப்படுத்தத் தேர்ந்தெடுத்தார். லெபனானுக்கான சிறப்பு தீர்ப்பாயத்தின் அதிகார வரம்பு லெபனான் சட்டத்தின் கீழ் குற்றங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, உண்மையான சர்வதேசத்திற்கும் முற்றி லும் தேசியத்திற்கும் இடையில் ஒரு நடுநிலையை வரைய றுக்க 'கலப்பு' என்ற பெயர் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை மறைக்கும் குழப்பத்திற்கு ஒரு மூலமாகும். சர்வதேச மற்றும் தேசிய தீர்ப்பாயங்களுக்கு இடையிலான வேறுபாட்டைக் குழப்புவதற்குப் பதிலாக, அவற்றைப் பிரிக்கும் ஒரு தெளி வான கோட்டை வரைவது நல்லது. தீர்ப்பாயத்தை ஒரு நாட்டின் சட்டத்தின் மூலம் கலைக்க முடியுமா என்பதுதான் சோதனையாக இருக்க வேண்டும். கம்போடியாவில் இருப் பது போலஆயினும் அப்படியானால், தீர்ப்பாயம் தேசிய மானது. கம்போடியா ஐக்கிய நாடுகள் சபையுடன் ஒரு ஒப்பந் தத்தைக் கொண்டுள்ளது, அதன் மூலம் அது ஒத்துழைப்பை உறுதியளிக்கிறது. இந்த ஒப்பந்தம் ஒரு பொதுச் சபைத் தீர் மானத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆயினும்கூட, அதன் சட்ட கட்டமைப்பு ஆழமாக தேசியமானது. இதற்கு நேர் மாறாக, சியரா லியோனுக்கான சிறப்பு நீதிமன்றமும் லெபனா னுக்கான சிறப்பு தீர்ப்பாயமும் தெளிவாக சர்வதேச இயல்பு டையவை. அவற்றின் சட்டங்கள் ஒரு ஒப்பந்தத்துடன் இணைக்கப்படுவது மட்டுமல்லாமல், பாதுகாப்புச் சபைத் தீர் மானங்களாலும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளன. சியரா லியோன் மற்றும் லெபனான் அரசாங்கங்கள், அவர்களால் தனியாகச் செயற்பட்டு முடிவுக்குக் கொண்டுவர முடியாத ஒரு செயல்

முறையை இயக்க உதவியுள்ளன. சியரா லியோன், லெபனான் தீர்ப்பாயங்களின் பணிகளை முடிப்பதற்கான ஒரே வழி, அவற்றை உருவாக்கிய கட்சிகளின் பரஸ்பர உடன்பாடு அல்லது பாதுகாப்புச் சபையின் தீர்மானம் மூலம் மட்டுமே. ஒருதலைப்பட்சமாகச் செயற்படுவதால், இரு அரசாங்கங்க ளுக்கும் நிறுவனங்களின் பணிகளை நிறுத்த அதிகாரம் இல்லை.

சர்வதேச நீதித்துறையில் ஈடுபட்டுள்ள நீதித்துறை நிறுவனங் களின் பரந்த தன்மையை வகைப்படுத்துவதில் ஒரு பயனுள்ள அளவுகோல் என்பதைத் தவிர, இது வேறு எந்த முக்கியத்து வத்தையும் கொண்டிருக்கிறதா? சர்வதேச மற்றும் தேசிய நீதி மன்றங்களுக்கு இடையிலான வேறுபாட்டிற்கு ஏதேனும் சட்ட விளைவுகள் உள்ளதா? உண்மையில், சர்வதேச நீதிமன்றத் தின் கூற்றுப்படி, அவை உள்ளன. இது வழக்கமான சர்வதேச சட்டத்தின் கீழ் அரச தலைவர்கள் மற்றும் சில மூத்த அரசாங்க அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட உன்னதமான விதிவிலக்குகள் பற்றிய விவாதங்கள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. 2002-ஆம் ஆண்டு கொண்டாடப்பட்ட ஒரு தீர்ப்பில், வெளிநாட்டுத் தலைவர்களுக்கு உரிமையுள்ள விதி விலக்குகளை தேசிய நீதிமன்றங்கள் மதிக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியது. இருப்பினும், அத்தகைய நபர்கள் வழக்குத் தொடரப்படுவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட வில்லை. குறிப்பாக, சர்வதேச நீதிமன்றம், அவர்கள் அதிகார வரம்பைக் கொண்ட சில சர்வதேச குற்றவியல் நீதிமன்றங் களில் குற்றவியல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படலாம் என்று கூறியது. முன்னாள் யூகோஸ்லாவியாவிற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம், ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் VII-ஆம் அத்தியாயத்தின் கீழ் பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களின்படி நிறுவப்பட்ட ருவாண்டாவிற்கான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் மற்றும் 1998 ரோம் மாநாட்டால் உருவாக்கப்பட்ட சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் ஆகியவை எடுத்துக்காட்டுகளில் அடங்கும்.


சூடான் ஜனாதிபதி எல் பஷீர்

எனவே, 'சில சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள், அவற்றின் அதிகார வரம்பைக் கொண்டவை' என்பதை அடையாளம் காண்பதில் சட்ட முக்கியத்துவம் உள்ளது. சர்வதேச குற்ற வியல் நீதிமன்றங்களுக்கிடையில் கூட வேறுபாடுகள் ஏற்ப டுத்தப்பட வேண்டும். சர்வதேச நீதிமன்றம் பராமரித்துள் ளபடி, அவற்றில் சில விதிவிலக்குகளைப் புறக்கணிக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கலாம், மற்றவை இல்லாமல் இருக்கலாம்.

சர்வதேச நீதிமன்றம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை, தற்காலிக தீர்ப்பாயங்களுடன் இணைத்து, மூன்றுக்கும் 'சில சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள்' என்ற முத்திரையை வழங்கியது போல் தோன்றுகிறது. பாதுகாப்புச் சபையால் உருவாக்கப்பட்ட தீர்ப்பாயங்கள் சர்வதேச சமூகம் கூட்டாகச் செயற்படுவதன் மூலம் உருவாக்கப்படுகின்றன என்ற தோற்றத்தை வழங்குகின்றன. ஆனால் உண்மையில் அவ்வாறு நிகழ்வதில்லை.

மார்ச் 2009-இல் சூடானின் ஜனாதிபதி எல் பஷீருக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பித்தது. ஜூன் 2011-இல் லிபியாவின் முயம்மர் கடாபிக்கு எதிராகவும் இவ்வாறானதொரு ஆணை பிறப்பிக்கப்பட்டது. எல் பஷீருக்கு நீதிமன்றத்தின் முன் விலக்குரிமை இல்லை என்று தீர்ப்பளித்தபோது நீதிபதிகள் போதுமானதாக இல்லாத மற்றும் மேலோட்டமான விளக் கத்தை அளித்தனர். எல் பஷீர் மற்றும் கடாபிக்கு எதிராக இயக்கப்பட்ட பிடியாணைகள் குறித்து அமெரிக்கா அக்க றையாக இருந்தாலும், இந்த நடைமுறைகள் தமக்குச் செல்லாது என்று அமெரிக்கா வாதிடுகிறது. சர்வதேச குற்ற வியல் நீதிமன்றம் அதன் சொந்த ஜனாதிபதி மீது அதிகார வரம்பைப் பயன்படுத்த முடியாது என்ற கருத்தை அமெரிக்கா சந்தேகத்திற்கு இடமின்றி எடுக்கிறது. அப்படி யானால் அதே விதி சூடான் மற்றும் லிபியாவின் ஜனாதிபதிக ளுக்கும் ஏன் பொருந்தக்கூடாது?

## தொடரும் குறிப்புகள்:

சர்வதேச குற்றவியல் சட்டம் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயங் களில் தங்கியிருப்பதில்லை என்பது வெளிப்படையானது. ஏனெனில் பொது சர்வதேச சட்டம் பொதுவாக சர்வதேச நீதி மன்றத்தைக் கோருகிறது. சர்வதேச நீதித்துறை நிறுவனம் இருப்பதற்கு முன்பே சர்வதேச சட்டம் இருந்தது. சர்வதேச குற்றவியல் சட்டம் உட்பட சர்வதேச சட்டம், உள்நாட்டு நீதி மன்றங்களில் உயிருடன் உள்ளது. பல ஆண்டுகளாக, மனித உரிமை ஆர்வலர்கள் உலகளாவிய அதிகார வரம்பைப் பயன்படுத்துவதை ஊக்குவித்து வருகின்றனர், இது சர்வதேச குற்றவியல் சட்டத்தை தேசிய நீதி நிறுவனங்களின் எல் லைக்குள் கொண்டு வருவதற்கான ஆற்றலைக் கொண்ட ஒரு வழிமுறையாகும். ஆனால் அது நிகழ்கிறதா என்பதுதான் வினா.

சர்வதேச குற்றவியல் நீதி பல விஷயங்களில் உள்நாட்டு மட்டத்தில் 'சாதாரண' வழக்குத் தொடரலில் இருந்து வேறுபட்டது. முதலாவதாக, குற்றங்கள் ஒரே மாதிரி யானவை அல்ல. ஒரு வகையில், இனப்படு கொலை போன்ற சர்வதேச குற்றங்கள் கொலை போன்ற சாதாரண குற்றங்களை ஒத்திருக்

கின்றன. ஆனால் அவற்றுக்கு சூழல், நோக்கம், அளவு அல்லது கவனக் குவிப்பு ஆகிய மேலதிக கூறுகளும் தேவைப்படுகின்றன. சாதாரண குற்றங்கள் என்று அழைக்கப் படுபவை சமூக விரோதிகளின் செயல் என்றாலும், சர்வதேச குற்றங்களுக்கு பொதுவாக அரசின், அதாவது சமூகத்தைப் பாதுகாப்பதே நோக்கமாகக் கொண்ட அமைப்பின் ஈடுபாடு தேவைப்படுகிறது. தொடர் கொலையாளிகள் கொடூரமான குற்றங்களைச் செய்யலாம், ஆனால் இதற்கு சர்வதேச தலை யீடு தேவைப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அவர்களின் குற்றங்கள் பிரமிப்பைத் தூண்டுகின்றன, ஆனால் எதுவும் அவர்களின் சர்வதேசமயமாக்கலை கட்டாயப்படுத்து வதில்லை.

இதுவே சாதாரண குற்றங்களைச் சர்வதேச அரங்கிற்குள் உயர்த்துவதில் அரசு அல்லது அரசு போன்ற அமைப்பின் பங்களிப்பு ஆகும். பெரும்பாலும் அரசு தானே ஒரு மாபெரும் குற்றவியல் அமைப்பாகச் செயற்படுகிறது. சர்வ தேச வழக்கு விசாரணை என்பது விரிவானதாக இல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவே இருக்கும். இது தலைவர்களை மையமாகக் கொண்டது. பெரும்பாலும், இது ஒரு மோத லுக்குப் பிறகு வருவதுடன் சாதாரண குற்றங்களைப்போல சமநிலையான முறையில் அல்லாமல் தோற்கடிக்கப்பட்டவர் களுக்குத் தண்டனை வழங்கப்படுகிறது. அதன் நோக்கம் என்ன? சாதாரண குற்றங்களைப் போலவே, ஒரு குறிப்பிடத் தக்க தடுப்பு விளைவை நிரூபிப்பது கடினம், ஏனென்றால் குற்றம் பலனளிக்காது என்று உறுதியாக நம்புபவர்களை விட சட்டத்தை மீறுபவர்களை நாம் எளிதாக அடையாளம் காண முடியும். இது பழிவாங்கும் செயலாகவும் இருக்கலாம், குற்ற வாளிகளுக்கு நியாயமான தண்டனைகளை வழங்குவதா கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓரளவு அங்கீகாரத்தை வழங்குவதாகவும் இருக்கலாம். சர்வதேச நீதி சர்வதேச சமூ கத்தின் இலக்குகளை ஊக்குவிப்பதாகவும் கூறப்படுகிறது. குறிப்பாக போர் இல்லாத உலகத்திற்கான தேடலை, அங்கு சர்ச்சைகள் அமைதியாகத் தீர்க்கப்படுகின்றன. இது ஒரு பெரிய சுமை, மேலும் இது சாதாரண குற்றங்களை விசாரிப் பதோடு தொடர்புடையது அல்ல.

சர்வதேச நீதியின் இந்த அனைத்து பரிமாணங்களையும் நிவர்த்தி செய்வதில், தேசிய குற்றவியல் நீதியிலிருந்து பெறப்பட்ட கருத்துகளையும் கொள்கைகளையும் சர்வதேச மட்டத்திற்கு இயந்திரத்தனமாக மாற்றுவதற்கான ஒரு போக்கு உள்ளது. ஆனால் சர்வதேச நீதி வேறுபட்டது. அதன் அரசி யல் பரிமாணங்கள் தவிர்க்க முடியாதவை. அதன் நோக்கங் கள் மோதல் தடுப்பு மற்றும் சர்ச்சைத் தீர்வு தொடர்பான இலக்குகளை உள்ளடக்கியது. செயல்முறையின் இந்த அரசியல் அம்சமே சர்வதேச நீதியை மிகவும் தனித்துவமா கவும், மிகவும் கவர்ச்சிகரமானதாகவும் ஆக்குகிறது. அது திறம்பட செயற்பட முடிந்தால், நமது காலத்தின் சில பெரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பங்களிக்கும் ஆற்றல் உள்ளது.



meenilankco@thaiveedu.com





# கண்ணனால் கிட்டிய கவிதைச் செல்வம்

– கிருங்கை சேதுபதி

ஒளிவு மறைவின்றி, உள்ளது உள்ளவாறே தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தும் பாரதியின் பதிவுகளில் இன்னும் உணரத்தக்க உண்மைகள் பல இருக்கின்றன என்பதை அவற்றைப் பயில்கிறபோதெல்லாம் அறிய முடிகிறது. அவற்றுள் ஒன்று, அவர்தம் ஓய்வறியாது கற்ற திறம்.

## தேடுகல்வியில் திறம் மிகுந்த பாரதி:

***யாதானும் நாடாமால் ஊராமால் என்***
***னொருவன்***
***சாந்துணையும் கல்லாத வாறு***
*கல்வி. 397*

என்ற திருக்குறளுக்கு இலக்கணமானவர்களுள் சிறப்பிடம் பெறுபவர் மகாகவி பாரதி.

இந்திய நாட்டின் எல்லை கடந்து அவர் எங்கும் சென்றதில்லை என்றாலும், இந்தியாவுக்குள் அதிகாரம் செலுத்திய இரு நாடுகளின் முக்கியப் பெருநகரங்களில் அவர் வாழ்ந்திருக்கிறார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆட்சி செய்த இந்தியாவிலும், பிரெஞ்சு ஆளுகைக்குட்பட்ட புதுச்சேரியிலும் அவர் வாழ்ந்திருக்கிறார்.

தன் தாய் மொழியாகிய தமிழோடு, இந்திய மொழிகள் பலவற்றையும் ஆட்சி செலுத்திய இரு நாடுகளின் மொழிகளாகிய ஆங்கிலத்தையும் பிரெஞ்சினையும் கற்றறிந்த பாரதி, தன் ஆயுட்காலம் முழுவதும் கற்பதை ஒரு கடமையாகவே கொண்டிருந்தார்.

எட்டயபுரத்தில் தொடங்கிய அவர்தம் கற்றல், இறுதியாய் அவர் வாழ்ந்த சென்னை வரையிலும் தொடர்ந்தது. அதற்குக் காரணம், கற்பித்தல் தொழிலை அவர் தொடர்ந்து செய்ததுதான்.

பள்ளியாசிரியராக, பத்திரிகை ஆசிரியராக, தன் சீடர்களைக் கூட்டிக் கலந்துரையாடும்போது குருநாதராக, பொது வெளிகளில் உரை நிகழ்த்தும் உரையாளராக, அவர் பரிணமித்த விதங்களில் இருந்து அவர்தம் கற்றல் அனுபவங்கள் புலப்படுகின்றன. அதனை அவருடன் இருந்து பயன் துய்த்தவர்கள் எடுத்துரைத்திருக்கிறார்கள். பலவற்றை, பாரதியே பதிவு செய்திருக்கிறார். பாஷாபிமானமும் தேசாபிமானமும் என்று பாரதி குறிப்பிடுவதுபோல, மொழிப் பற்றும், நாட்டுப்பற்றும் அவற்றின் அடிநாதமாக எப்போதும் இருந்திருக்கின்றன.

அவற்றுள் ஒன்று, புதுச்சேரியில் அவர் பெற்ற அனுபவம்.

## தமிழ் அமுதளித்த தனுர் மாதம்:

பாரதியாருடன் புதுவை வந்த இந்தியா இதழில், 1909.01.22-ஆம் நாள் அன்று வெளியான கட்டுரை, 'தனுர்மாதம்' என்பதாகும். இது மார்கழி மாதம் குறித்த கட்டுரை.

பாரதி புதுவைக்கு வந்த சில மாதங்களில் நடந்த ஒரு நிகழ்வு இது. தன் அனுபவமாக, பாரதி தந்த இக்கட்டுரைக்குப் பின்புலமாக இருப்பவர் அவரது நண்பர் குவளைக் கிருஷ்ணன் என்னும் குவளைக் கிருஷ்ணமாச்சாரியார் என்பது தெரிகிறது.

பாரதி எழுதுகிறார்:

'சென்ற வாரத்தில் புதன்கிழமை தினம் (மார்கழி மீ 29உ) சூர்ய உதயத்திற்கு முந்தி கிரமப்படி ஸ்நானம் முதலியன செய்து விட்டு ஓர் அவசரமான காரியத்தினிமித்தம் எமது நண்பர் ஒருவரைக் கண்டுவிட்டு வர அவருடைய வீட்டிற்குச் சென்றோம். அவர் கோயிலுக்குப் போயிருப்பதாக எமக்குத் தகவல் கிடைத்தது. பிறகு அக்கோயிலுக்கு நாமும் சென்றோம். அது மஹிமை விளங்கும் சிறந்ததோர் விஷ்ணு ஆலயம். எமது நண்பரை அங்கு கண்டோம். சற்று இருந்தால் ஸ்வாமி தரிசனம் கிடைக்கும், அப்புறம் வீட்டிற்குப் போகலாமென்றார். நாமும் அப்படியே அங்கு ஸ்ரீ பகவானின் சன்னிதானத்தில் தங்கியிருந்தோம். அப்போது நூற்றுக் கணக்கான இருகலை வைணவர்கள் அவர்களுக்கென்றே குறிப்பிடப்பட்டது போலிருக்கும் ஓர் இசையில் அநேக பாடல்களைப் பாடினர். எமக்கு வைணவப் புத்தகங்களின் பாடல்களில் தேர்ச்சியில்லை, ஆயினும் அவர்கள் பாடிய பாடல்களில் சில சொற்களை மாத்திரம் நாம் நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொண்டோம் ஒவ்வொரு பாடலும் திருவெம்பாவை போல் 'எம்பாவாய்' என்று முடிகிறது...'

என்று தொடங்குகிறது அக்கட்டுரை. பாரதியார் ஸ்மார்த்த பிராமணர். அவர் அறிந்தது சைவ இலக்கியமாகிய திருவெம்பாவை. அதுபோல், ஆண்டாள் நாச்சியார் பாடிய திருப்பாவை நூல் குறித்து அறியாத நிலையில் பாரதி அங்கு கேட்டுக் கிரகித்துக் கொண்ட பாடல் அடிகளையும் அவற்றின் நுண்பொருள்களையும் மீள நினைந்து எழுதுகின்றார்:

## அமுதனைய தமிழ்ச்சொற்கள்:

***'சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்',***

***'யசோதையிளஞ்சிங்கம்',***

***'ஐயமும் பிச்சையு மாந்தனையும் கை காட்டி',***

***'தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து',***

***'குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்,'***

***'நீங்காத செல்வம் நிறைந்தேல்',***

***'மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய தேவ தேவனை',***

***'தூமணி மாடத்துச்சுற்றும் விளக்கெரிய'***

***'செற்றார் திறலழிய சென்று செருச் செய்பவன்'***

***'சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனதுக்கினியானை',***

***'கொடித் தோன்றும் தோரண வாயில் காப்பானே',***

***'அன்றிவ்வுலக மளந்தாய் அடி போற்றி',***

***'சென்றங்கு தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி',***

***'பொன்றச் சகடமுதைத்தாய் புகழ் போற்றி',***

***'கன்றுகுணிலாய் எறிந்தாய் கழல் போற்றி',***

***'குன்று குடையா யெடுத்தாய் குணம் போற்றி',***

***'வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி',***

***'என்றென்றுன் சேவகமே யேத்திப் பறை கொள்வான்',***

***'கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே',***

***'பால் சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவார',***

***'அறிவொன்றுமில்லாத ஆய்க் குலத்துன்றன்னை பிறவி பெறு புண்ணியம் யாமுடையோம்',***

***'அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்றன்னை சிறு பேரழைத்தனவும் சீறியருளாதே',***

***‘உன் பொற்றாமரை யடியே போற்றும் பொருள் கேளாய்’,***

***‘எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் உன்றன்னோ டுற்றோமே யாவோம்’, ‘உனக்கே நாமாட் செய்வோம்’,***

***‘மற்றை நம் காமங்கள் மாற்றுக’,***

***‘பைங்கமலத்தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன சங்கத்தமிழ் மாலை’,***

***‘செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்’***

இத்தியாதி சொற்கள் எமது செவியில் விழுந்தன என்று எழுதுகிறார். இவையனைத்தும் பட்டர்பிரான் கோதை ஆகிய ஆண்டாள் நாச்சியார் அருளிய திருப்பாவை, திருவாய் மொழிப் பாசுரங்களின் அடிகள். ஸ்ரீ வில்லிபுத்தூர் பசுவளம் சிறக்க வரும் இப்பாடல் அடிகளின் திரண்ட கருத்தினை, தெளிந்துகொண்ட செய்தியினை நிறைவாய் உணர்ந்த வண்ணம் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

‘நாம் கடவுளின் திவ்ய மங்கள விக்ரஹத்தைத் தரிசியா நிற் புழி, அமுதமைய இச்சொற்கள் எமது செவியில் விழவும், நமது ஸ்ரீ பாரதநாட்டின் முற்காலப் பெருமையையும், செழிப்பையும், கடவுளின் திவ்ய லீலைகளையும், கருணையையும், கொடுங்கோன் மறமன்னர்கள் பட்ட பாட்டையும், பாரதர்கள் இன்புற்றிருந்த வண்ணத்தையும், பாரத நாட்டுப் பெண்மணியொருத்தி பன்னெடு நாட்களுக்கு முன் பாடிய பாடல்களின் பக்தியையும், உருக்கத்தையும், உணர்ச்சியையும், ஒருமனத் தன்மையையும் எண்ணி எண்ணிக் கண்ணீர் மல்கினம்.’ என்று எழுதுகிறார்.

## பாரதி அடைந்த பரவசம்:

‘பிறகு இவ்வண் துதி செய்தவர்களனைவருக்கும் ஸ்ரீ சுவாமியின் தீர்த்தம் கொடுக்கப்பட்டது. ஸ்ரீ சடகோபமென்னும் ஸ்ரீ ஸ்வாமியின் பொன்னடிப் பாதுகையை அக்கோயிலர்ச்சகர் ஒவ்வொருவர் தலையிலும் வைத்து வந்தார். அவர்களினிடையில் நின்ற எமக்கும் அந்த திவ்ய பாக்கியம் அருளப்பட்டது. ஆனந்த பரவசரானோம்.’

என்கிறார். பெருமாள் கோயிலில் வழிபாடு முடித்த பின்னர், திருத்துழாய் (துளசி), தீர்த்தம் கொடுத்த பின்னர் பக்தர்களின் சிரசில் பட்டாச்சாரியார் பொன்னடிப்பாதுகையை வைப்பது வழக்கம். இது பாரதிக்குக் கிட்டிய முதல் புதுமை அனுபவம். அந்த நேரத்தில் அது விடுதலை பெற்ற பாரதத்தின் மன்னருக்குச் சூட்டப்பட்ட மணிமகுடமாகவே பாரதிக்குத் தோன்றிவிடுகிறது. ‘இந்தியா விடுதலை பெற்ற பின்னர் எல்லோரும் ஒரு விலை, எல்லோரும் ஒரு நிறை, எல்லோரும் இந்நாட்டு மன்னர்’ என்று பாடியவர்தானே பாரதியார். அதற்கு முன்மாதிரியாய் இந்த முடிசூட்டல் நிகழ்ந்துவிடுவதாகவே உணர்கிறார். பின்வருமாறு உணர்த்தவும் செய்கிறார்.

‘நமது பாரத நாட்டின் பக்தர்கள் இப்பாடங்களில் முக்கியமான சிலவற்றை கவனித்தற்பாலது. நாட்டின் வளப்பம். பசுக்களின் விருத்தி, தெய்வ பக்தி, ஜாதியப்பெருமை, கடவுளின் கிருபை, பக்தர்களின் பிரார்த்தனை, பெண்மணியில் பாடல்கள் ஆகிய இவைகளே. கடைசியில், ‘எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடுற்றோமே யாவோம்’, ‘உனக்கே நாமாட் செய்வோம்’, ‘மற்றை நம் காமங்கள் மாற்றும்’ என்ற இம்மூன்றையும் தங்களிஷ்ட பூரீத்தியான பாரத ஸ்வராஜ்ய ஸ்தாபனத்திற்குத் திருவாக்கியமாய்க் கொண்டு தேச சேவை செய்து வந்தால் கடவுளின் பொன்னடி போன்ற ஸ்வராஜ்யத் திருவடி (கிரீடம்) ஸ்வதந்திரமடைந்த ஒவ்வொரு பாரதனின் தலைமீதும் சாசுவதமாய் விளங்கிவரும் என்பது சத்தியமே.’

என்று உறுதிபட உரைக்கிறது, பாரதியின் நாட்டுப்பற்றுளம். தொடர்ந்து மார்கழி மாதத்தின் மகிமையையும் தேவ, அசுரப் போரின்போது, தேவர்கள் போர் புரியச் செல்லும் முன்பு செய்த பூசனையையும் சுட்டிக்காட்டுகிறது பாரதியின் எழுதுகோல்.

## விடுதலையை உணர்த்திய விடியல் நிகழ்வு:

‘இந்த தனுர் மாசமானது தேவர்களுடைய பகலான உத்தராயணத்திற்கு முந்திய விடியற்காலம். முன்னொரு தேவாசுர யுத்தத்தில் பொழுது விடியுமுன்னே பகவதாராதனை செய்துவிட்டு பயிற்றம்பருப்புப் பொங்கலை ஸ்வாமிக்கு அமுதூட்டிப் பொழுது விடிந்த உடன் போர்க்கோலங் கொண்டு தேவர்கள் யுத்தத்திற்குச் சென்றனர். பசுவானின் அருளால் தேவர்கள் வெற்றி பெற்றனர்.’

என்று எழுதுவதன் மூலமாக, பாரதமாதாவின் பரிபூரண அருள் பெற்ற பாரத வீரர்களை இறையருள் பெற்ற தேவர்களாகவும், ஆதிக்கம் செலுத்திய ஆங்கிலேயர்களை வல்லசுரர்களாகவும் வகைபிரித்துக் காட்டி, இந்திய விடுதலைப் போரினை தேவ - அசுர யுத்தமாக, பக்தியுணர்வுடைய பாரதமக்களுக்குப் புரிய வைக்கிறார் பாரதி. முடிவில், இந்த நாடு விடுதலை பெற்று, வெற்றி கொடி நாட்டி மேன்மை அடையும் என்று நம்பிக்கை கொள்கிறார். அதனை இக்கட்டுரையின் நிறைவில் பின்வருமாறு தருகிறார்.

‘நமது பாரத நாடானது தன்னைப் பிடித்திருந்த பேருறக்கத் தினின்றும் துயில் விழித்து இரண்டு வருஷங்கள் பூர்த்தியாய் முடிந்தன. இப்போது எங்கு பார்த்தாலும் நவீன ஸ்வதந்திரக் கிளர்ச்சி பரவி தேசமாதாவின் பஜனைகளும் கடவுளின் ஸேவையும் ஸ்வதந்திர தேவியின் ஆராதனமும் நாட்டில் நடைபெற்று வருகின்றன. சீக்கிரத்தில் பாரதர்களின் கஷ்டங்கள் நீங்குமாறு நல்ல பொழுதாக விடிந்து பாரதர்கள் வெற்றிக் கொடி நாட்டி ஸ்வராஜ்யம் அடையுமாறு ஸ்ரீ பகவான் திருவருள் தந்தருள்வாராக!’

## பாரதி தேடி, பார்க்கப்போன நண்பர் யார்?

இக்கட்டுரை தோன்றக் காரணமானவரை, ‘எமது நண்பர்’ என்று குறிப்பிடும் பாரதியார் அவர் யார், அவர் பெயர் என்ன

என்பது பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. பொதுக்கட்டுரை எழுதுகிறபோது அவ்வாறு குறிப்பிடுகிற வழக்கம் இல்லை. ஆனாலும், அவர் குவளைக் கிருஷ்ணமாச்சாரியாராகவே இருக்க வேண்டும்.

காரணம், பாரதி புதுவைக்கு வந்த காலத்தில் இருந்தே உடன் உதவிகள் புரிந்த நண்பராக, சீடராகக் குவளைக் கண்ணன் திகழ்ந்திருக்கிறார். பாரதி, பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி பாடக் காரணமான சூழலையும் அதற்குத்தான் உடனிருந்த பாங்கினையும் அவர் எழுதியிருக்கிறார். (காண்க. பள்ளி எழுச்சி பாட வைத்த கண்ணன், தாய்வீடு, மே, 2025, பக். 164-166) இக்கட்டுரை வெளிவந்த மறுமாதமே (பிப்ரவரி, 1919), கர்மயோகி இதழில் அப்பாடல் வெளிவந்தி ருக்கிறது.

அந்தக் காலக்கட்டத்தில் பாரதியாருக்கு ஆழ்வார் பிரபந்தங்கள் அவ்வளவு பரிச்சயம் இல்லை என்பதற்கு இந்தக் கட்டுரையும், குவளைக்கண்ணனுடனான உரையாடல்களும் சான்று பயக்கின்றன. எனினும் பாரதியார் பின்னர் இப்பாசுரங்களைத் தேடிக் கற்று ஆழ உள்வாங்கி அனுபவித்து, ஆழ்வாராகவே தம்மை மாற்றிக் கொண்டிருக் கிறார் என்பதை அறிய முடிகிறது.

## கண்ணனால் கிட்டிய கவிதைச் செல்வம்:

ஆயர்குலக் கண்ணனை அனுபவித்துப் பாடிய ஆண்டாள் பாசுரத்தின் அமுதனைய சொற்களை இனிய கற்கண்டுச் சொற்கட்டிகளாய் எடுத்து வைக்கும் இக்கட்டுரை, குவளைக் கண்ணனால் தமிழுக்குக் கிட்டியது.

இந்த நிகழ்வும் இதன் பின்னர் குவளைக்கண்ணன் உடனான உரையாடல்களும் ஆண்டாள் நாச்சியார் உள்ளிட்ட ஆழ்வார் பாசுரங்களை ஆழ்ந்து அனுபவிக்கும் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் பாரதிக்குள் தூண்டின என்றால் மிகை இல்லை. இவையனைத்தும் கண்ணனால் பாரதிக்குக் கிட்டிய கவிதைச் செல்வங்களாக அமைகின்றன. அவற்றுள் ஆழ்ந்து அனுபவிக்கும் ஆழ்வார்களுள் ஒருவராகவே பாரதியார் ஆகியிருக்கிறார் என்பதை, 'திருவாய்மொழியில் நம்மாழ்வார் பாடி யுள்ள 'இவையும் அவையும் உவையும்' என்று தொடங்கும் பாடல்களை அடுத்த பத்துப் பாடல்களையும் தம் தலை, மார்பு, உச்சி, நாக்கு, தோள் இவைகளில் பரப்பி இருப்பதாக அபிநயித்துப் பாடுவார்' என்ற யதுகிரி அம்மாளின் பதிவு உறுதி செய்கிறது. (மகாகவி பாரதி வரலாறு, (தொ.ஆ) முனைவர் சொ. சேதுபதி, (யதுகிரி அம்மாள், பாரதி நினைவு கள்), ப. 784)

மேலும், தான் பெற்ற செல்வத்தைத் தமிழ் அறிந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கிய வள்ளலாகவும் பாரதி திகழ்ந்திருக்கிறார் என்பதற்கு, நாகசாமி எனும் மற்றொரு பாரதியன்பர் 'தர்மாலயம்' வந்த இளைஞர்களிடம் ஆண்டாள் பாசுரத்திலிருந்து பாக்களைப் பாடி, வியாக்யானம் செய்து கொண்டிருந்தார் பாரதியார். சிலவற்றிற்கு அவர் அபிநயமும் செய்து காட்டினார் என்று பதிவிடும் தகவல் உறுதி தருகிறது. (சித்தரின் போக்கும், சீடரின் மனமாற் றமும், தாய்வீடு, ஆகஸ்ட், 2024, பக். 161-164)

## நிறைவாக...

இவையெல்லாம் சரி, இக்கட்டுரையில் குறிப்பிடப்பெறும் நண்பராகிய குவளைக் கண்ணன் (கிருஷ்ணமாச்சாரியார் கோயிலுக்குப் போன காரணம் யாது?

அதற்கான பதிலை, புதுவையைச் சேர்ந்த பாரதியின் மற்றொரு சீடரான ரா. கனகலிங்கம் பதிவில் இருந்து அறியலாம்.

'என் குருநாதர் புதுவையில் அடிவைத்தபோது, அன்னவருக்குக் கிடைத்த நண்பர், குவளைக்கண்ணன் என்ற ஸ்ரீ கிருஷ்ண மாச்சாரியார்தான். நானும் குவளைக்கண்ணனும் புதுவைக் கல்வே உயர்தரப் பள்ளியில் ஒன்றாக வசித்து வந்தோம்' என்று குறிப்பிடும் கனகலிங்கம், 'படிப்பை விட்ட பின்னர் அவர் உத்தியோகம் எதுவும் செய்ய நான் பார்த்ததில்லை. புதுவைப் பெருமாள் கோயிலில் பட்டாச்சாரியராக இருந்து வந்தார் என்று நான் கேள்விப்பட்டதுண்டு' என்று சொல்கிறார்.

இத்தகவல் பாரதியின் நண்பர் குவளைக்கண்ணன் என்பதையும் அவர் அக்கோயிலின் பட்டாச்சாரியார் என்பதையும் உறுதிப்படுத்துகிறது. பாரதி அந்நண்பரைக் காணச் சென்ற அவசரக் காரிய நிமித்தம் எதுவெனத் தெரிய வில்லை. ஆனால், அவரைக் காணச் சென்றதால் அவர் கண்டு கற்கத் தேவையான தூண்டுதலை ஆண்டாள் நாச்சியாரின் பாசுரங்கள் செய்துவிட்டன என்பது அற்புதம். அமுதனைய சொற்களைச் செவியேற்ற உணர்ச்சிப் பெருக்கில் மகிழ்ந்தும் நெகிழ்ந்தும் எழுதிய இக் கட்டுரையினைத் தமிழகம் பெற்றது பேறு. இந்தப் பேறு அவர் காலத்தில் இந்தியராகப் பிறந்த எல்லாருக்கும் கிட்டியதா? எனில் இல்லை.

தனக்கும் தன் குருநாதருக்கும் நண்பர் என்று குவளைக் கண்ணனைச் சொல்லிக் கொள்ளும் ரா. கனகலிங்கம், அவர் பணியாற்றிய கோயிலுக்குள் நேரில் செல்லவோ, பார்க்கவோ வாய்ப்புக் கொடுக்காத காலம் அது. பள்ளியில் ஒன்றாகப் படிக்கும் வாய்ப்பளித்த அக்காலம், கோயிலின் உள்செல்ல, கனகலிங்கத்தை அனுமதிக்கவில்லை என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. ஆனால், குவளைக் கண்ணனையும், கனகலிங்கத்தையும் சரிசமமாய், தமது சீடர்களாய் ஆட் கொண்ட பாரதிக்கு இந்த நிலை சம்மதம் தானா? இந்தச் சூழலில் பாரதி என்ன செய்தார் என்றெல்லாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. அதற்கு, குவளைக் கண்ணனை முன்னிறுத்தி, ரா. கனகலிங்கத்தைத் துணைக்கொள்வது இன்றியமையாததாகிறது.



sethupathi@thaiveedu.com



12

# ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள்

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

## இதுவரை...

- ஈழத்து வரலாற்று நூலாகக் கருதப்படும் மகாவம்சத்தின் உண்மைத் தன்மை ஆராயப்படுகிறது. இதன் விரிவாக்கம் இவ்விதழில் தொடர்கிறது.
- மகாவம்சத்தின் முதல் நான்கு அத்தியாயங்களிலும் கூறப்படும் வடநாட்டு அரச பின்னணி, பௌத்த மதமும், அதன் பிரிவுகளும் ஏற்படுவதற்கான பின்புலத்தை விளக்குவதாய், இந் நூலுக்கு முகவுரையாக அமைந்திருக்கின்றன.
- அரச உரிமைப் போராட்டம் தொடர்ந்தது. ஈற்றில், சாணக்கியன் என்னும் பிராமணன் முயற்சியால் சந்திரகுப்தன் என்னும் பெருமை மிக்க இளைஞன் அரசனானான். சந்திரகுப்தன் ஜம்புத்வீபம் முழுமையையும் 24 ஆண்டுகள் ஆட்சி செய்தான். சந்திரகுப்தனின் பின் அவன் மகன் பிந்துசாரன் 28 ஆண்டுகள் ஆட்சி செய்தான். பிந்துசாரனின் பின் அவனது மகனான அசோகன் தன் சகோதரர்களைக் கொன்று அரசனானான். இவனே பௌத்த மத வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்ட மன்னனாவான்.
- அசோகன் முடிசூடிக்கொண்டபோது புத்தர் நிர்வாணம் அடைந்து 218 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவன் நாடெங்கிலும் பெருமளவிலான பௌத்த விகாரைகளைக் கட்டினான், கட்டுவித்தான். பெரும் தானங்கள் செய்தான்.
- அசோகன் காலத்தில் பல பிரபல்யமான பௌத்த பிக்குகள் தோன்றிப் பௌத்தத்தை வளர்த்தனர்.
- மகாகாலன் என்னும் நாக மன்னன் புத்தரின் அழகிய உருவத்தைப் படைத்தான்.
- கௌதம புத்தர், 84 ஆண்டுகள் உலகில் வாழ்ந்து தமது கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றிய பின் குஸிநாகரத்தில் (நேபாளத்தில் ஒரு நகர்) வைகாசிப் பௌர்ணமி தினத்தில் இவ்வுலகை நீத்தார்.
- வட இந்தியாவில் பல்லாயிரக் கணக்கானோர் பௌத்தர் களானார்கள்.
- தேரவாத மரபு முதல் 100 ஆண்டுகளில் ஒன்றாகவும் ஒன்று பட்டதாகவும் இருந்தது.
- அதன் பின் பிற தர்மக் கோட்பாடுகள் எழுந்தன. தவறான வழியில் நடந்த 10,000 பிக்குகளும் மஹா சம்ஹிகை என்ற ஒன்றை அமைத்தனர். மஹா சம்ஹிகையிலிருந்து கோகுலிகா, ஏகவியோகாரிகா பிரிவுகள் ஏற்பட்டன.
- இரண்டாம் மகாசபை மூலம் அவை அடக்கப்பட்டன. இரண்டாம் மகாசபை கூடியபோது, எதிர்காலத்தை நோக்கிய தேரர்கள் அந்த அரசன் காலத்தில் நம்பிக்கை வீழ்ச்சியடையும் எனக் கண்டனர். நம்பிக்கை வீழ்ச்சியடையாமல் காக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டன.
- மகாவமசத்தின் 5-ஆம் அத்தியாயம் மூன்றாம் மகாசபையுடன் முற்றுப் பெற்றது.

### மகாவம்சம் – ஆறாம் அத்தியாயம்:
### விஜயன் வருகை:

விஜயன் இலங்கைக்கு வந்தமை பற்றிய கதைகளைப் படித்தோம். மகாவம்சம் கூறும் விஜயன் வருகையைப் பார்க்கலாம். மகாவம்சமே நாடோடிக் கதைகளிலிருந்து எழுதப்பட்ட ஓர் இலக்கியம் எனக் கண்டோம்.

வங்க நாட்டுத் தலைநகரில் ஒரு காலத்தில் இருந்த அரசன் ஒருவன் கலிங்க நாட்டு இளவரசியை மணந்தான். அவளுக்கு





ஒரு பெண் குழந்தை பிறந்தது. அப் பெண் பிள்ளை 'மிருகராசனைக் கூடுவாள்' என்று சோதிடர் கூறினார். அவள் மிக்க அழகி, காம வெறி கொண்டவள்.

> **"விஜயனும் அவன் நண்பர்களும் கெட்டவர்கள். தீய நடவடிக்கையில் ஈடுபட்டனர். விஜயனைக் கொல்லும்படி மக்கள் அரசனைக் கேட்டார்கள். அரசன், விஜயனையும் அவன் தோழர்கள் 700 பேரையும் பாதித் தலை மயிரைச் சிரைத்து, அவர்களையும் அவர்கள் மனைவி மக்களையும் கப்பலில் ஏற்றிக் கடலில் விட்டான்."**

அவள் வீட்டை விட்டுத் தனியே புறப்பட்டு, மகத நாட்டுக்குச் சென்று கொண்டிருந்த ஒரு வாணி பக் குழுவுடன் யாரும் அறியாது இணைந்து கொண்டாள். லாலா நாட்டுக் காட்டில் சிங்கம் ஒன்று அவர்களைத் தாக்கியது. எல்லோரும் ஓடிவிட இவள் மட்டும் சிங்கத்தின் பாதையில் ஓடினாள். சிங்கம் உணவருந்திய பின் அவ்வி டத்தை விட்டு நீங்கியபோது அவளைக் கண்டது. காம வெறி கொண்ட சிங்கம் அவளை நெருங் கியது. சோதிடர் கூறியது அவள் நினைவுக்கு வந்தது. பயமின்றிச் சிங்கத்தை தட்டிக் கொடுத் தாள். சிங்கம் அவளைத் தன் குகைக்கு அழைத் துச் சென்று அவளுடன் கூடியது.

அவளுக்கு சிம்மபாகு, சிம்மசீவலி என்று இரட் டைக் குழந்தைகள் பிறந்தார்கள். மகனுடைய கைகளும் கால்களும் சிங்கத்தினுடையவை போல் காணப்பட்டன. மகனுக்கு 16 வயதான போது, பெற்றோரின் வேறுபாடு பற்றித் தாயா ரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான். அவர்கள் இருந்த குகை வாயில் அடைத்து வைக்கப்பட்டிருந்தது.

சிம்மபாகு, பாறையை அகற்றி, தாயையும் சகோதரியையும் தோள்களில் தூக்கிக்கொண்டு வெளியேறினான். அவர்கள் மூவரும் நாட்டினுள் நுழைந்தார்கள். சிங்கம், தன் குழந்தை களைத் தேடிக்கொண்டு எல்லையோரக் கிராமங்களைப் பாழாக்கியது. சிங்கத்தைப் பிடித்துத் தருபவர்களுக்குச் சன் மானம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. யாரும் அந்த முயற்சியில் ஈடுபட முன்வராததால் பரிசுத் தொகை இரு மடங்காக அறிவிக்கப்பட்டது. தாய் இருமுறை தடுத்தும் கேளாது மூன்றாம் முறை தாயைக் கேளாமலே தந்தையைக் கொல்வதற்கு 3,000 பணத்தைப் பெற்றுக்கொண்டான். அவன், சிங்கத்தைக் கொன்றால் அவனுக்கே இராச்சியத் தைத் தருவதாக மன்னன் ஒப்புக் கொண்டான்.

சிம்மபாகு சிங்கத்தின் குகை வாசலுக்குச் சென்றான். மக னைக் கண்டதும் சிங்கம் புத்திரபாசத்துடன் அவனை நோக்கி வந்தது. சிம்மபாகு சிங்கத்தை நோக்கி அம்பு எய்தான். பல தடவைகள் முயன்று தந்தையாகிய சிங்கத்தின் தலையை வெட்டி எடுத்துக்கொண்டு நகரத்துக்குத் திரும்பினான். அவன் நாடு திரும்பியபோது வங்க மன்னன் இறந்து ஏழு நாட் களாகிவிட்டன. மன்னனுக்குப் பிள்ளைகள் கிடை யாது. சிங் கத்தைக் கொன்று வந்த சிம்மபாகு, வங்க மன்னனின் பேரன் என்பதை அறிந்த மந்திரிமார் சிம்மபாகுவை ஏகமனதாக அரசனாக ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் சிம்மபாகு தன் தாயின் புருசனிடம் ஆட்சியை ஒப்ப டைத்துவிட்டு, சகோதரி சிம்மவல்லியுடன் தான் பிறந்த நாட் டிற்குச் சென்று நகரை உருவாக்கினான். அந்நகர் சிம்மபுரம் என்று அழைக்கப்பட்டது. காட்டில் 100 யோசனை தூரம் வரை கிராமங்களை அமைத்தான்.

லாலா நாட்டிலிருந்த ஒரு நகரத்தில் சிம்ம பாகு, சிம்மசீவலியைத் தன் ராணியாக்கி ஆட்சி செய்தான். சிம்மசீவலி 16 முறை இரட்டைக் குழந்தைகளைப் பெற்றாள். மூத்தவன் விஜயன். விஜயன் உரிய காலத் தில் உப ராசனாக நியமிக்கப்பட்டான்.

விஜயனும் அவன் நண்பர்களும் கெட்டவர் கள். தீய நடவடிக்கையில் ஈடுபட்டனர். விஜயனைக் கொல்லும்படி மக்கள் அர சனைக் கேட்டார்கள். அரசன், விஜயனை யும் அவன் தோழர்கள் 700 பேரையும் பாதித் தலை மயிரைச் சிரைத்து, அவர்க ளையும் அவர்கள் மனைவி மக்களையும் கப்பலில் ஏற்றிக் கடலில் விட்டான். தலைம யிரைச் சிரைப்பது சுதந்திரத்தைப் பறிப் பதைக் குறிக்கும். சிங்கள மொழியில் 'மிடி' எனப்படும் இதற்கு 'அடிமை' என்று பொருள்.

தனித்தனிக் கப்பல்களில் சென்ற ஆண் கள், பெண்கள், குழந்தைகள் தனித்தனித் தீவுகளில் கரையேறினர். குழந்தைகள் நக் கதீபகம் என்னும் தீவிலும் பெண்கள் மகிள தீபகத்திலும் விஜயன் சூரபாரகம் என்ற இடத்திலும் கரையேறினர். சூர்பாரகத் திலும் விஜயனின் நண்பர்களின் கொடுஞ் செயல்களால் அபாயம் நேரும்போல் தோன்றவே மீண்டும் கப்பலேறிப் புறப்பட்டு இலங்கையில் தம்மபாணி என்று அழைக்கப்படும் பகுதியில் கரையேறினான். இது தகாகதர் நிர்வாணம் அடைவதற்குச் சால விருட்சங்களிடையே அமர்ந்த அதே நாளில் நடந்தது.

இத்துடன் 'விஜயன் வருகை' என்னும் மகாவம்சத்தின் ஆறாம் அத்தியாயம் முற்றுப் பெறுகிறது.

இந்த இடத்தில், இந்த ஆய்வுரையின் 9-ஆம் அத்தியாயத் தில் மகாவம்சத்தின் உண்மைத்தன்மை ஆராயப்பட்டுள்ளது. அப் பகுதியை ஒரு முறை புரட்டிப் பார்க்கவும்.

### மீள் பார்வைக்காக 9-ஆம் அத்தியாயத்தின் சிறு பகுதி இங்கு தரப்படுகிறது:

பண்டைக்காலத்தில் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வணி கம் சிறப்பாக நடைபெற்றது என்றும், கடற்கொள்ளைப் பயம்

காணப்பட்டது என்றும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. விஜயன் பற்றிய 'இந்திய மரபு', 'இலங்கை மரபு' கதைகளை இணைத்து ஆராயும்போது,

கதையேயானாலும் வரலாற்று உண்மை கலந்த கதையாகவே இருக்கிறது.

தொல்காப்பியர் காலத்திலேயே (பொ.ஆ. மு 711) ஈழம், தமிழ் நாட்டிலிருந்து பிரிந்துவிட்டது.

தொல்காப்பியப் பாயிரமே இதற்குச் சான் றாகும். குறிப்பிட்ட தொல்காப்பியப் பாயி ரப் பகுதி வருமாறு:

'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறு நல்லுலகம்'. - தொல். சிறப்புப் பாயிரம்

அதாவது தொல்காப்பியர் காலத்திலேயே தமிழ் நாட்டின் தெற்கெல்லை 'குமரி முனை'யாக அறியப்படுகிறது. தொல்காப்பியர் காலத்திலேயே ஈழம் தனியாகப் பிரிந்திருக்கிறது.

ஈழத்தையும் இந்தியாவையும் பிரிக்கும் சிறிய கடற்பரப்பின் ஆழத்தில் தாமரபரணி ஆற்றுத் தடங்கள் காணப்படுகின்றன என்று இன்றைய ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

அசோகச் சக்கரவர்த்தியின் (பொ.ஆ.மு. 3-ஆம் நூற்.) கிர்னார் இரண்டாம் பாறைக் கல்வெட்டு வாசகங்களில், ஈழம் 'தம்பபரணி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் இந்தியத் துணைக்கண்டத்தின் தெற்கேயும் அதன் கீழேயுமிருந்த நிலப்பரப்புகளுக்கும் பௌத்தம் பரப்பும் முயற்சி நடந்திருக்கிறது என்பதை இப் பாறைக் கல்வெட்டு விதந்து உரைக்கின்றது. பாறைக் கல்வெட்டுக் குறிக்கும் வாசகப் பகுதி வருமாறு:



***'ஏவமபி ப்ர சந்தேஸீ யதா சோடா, பாடா ஸதி யபுதோ கேதளபுதோ ஆ தம்ப பர்ணி அன்தியோகோ யோன ராஜா யே வாபி அன்தி யகஸ் ஸாமிநோ'***

அசோகன் தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகள் மட்டுமல்லாது, சுதந்திரமாக இருந்த நாடுகளான சோழர், பாண்டியர், சத்தியபுத்திர் (அதியமான் நெடுமான் அஞ்சி) சேரர், தாமரபரணி (ஈழம்) முதலியன நாடுகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படவேண்டும் என்று இக் கல்வெட்டு வாசகம் குறிப்பிடுகிறது.

எனவே, அசோகன் காலத்தில், அதாவது பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டில் ஈழத்தில் பௌத்தம் பரப்புவதற்கான முயற்சி நடைபெற்றிருக்கிறது.

பொ.ஆ.மு. 8 முதல் 1-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் பாடப்பட்டவையாக இன்று கொள்ளப்படும் சங்க இலக்கியங்களில் ஈழத்துப் பூதந்தேவனார் என்னும் புலவர் ஒருவர் அறியப்படுகிறார். இவர் அகநானூற்றில் மூன்றும் (88, 231, 307), குறுந்தொகையில் (189, 343, 360) மூன்றும், நற்றிணையில் (366) ஒன்றுமாக ஏழு பாடல்கள் பாடியிருக்கிறார். பேரா.ஆ. வேலுப்பிள்ளை அவர்கள், ஈழத்துப் பூதந்தேவனார் பொ.ஆ.பி 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என பல சான்றுகளை முன்வைத்து எடுத்துக்காட்டினார்.

வேறு சான்றுகள் அற்ற நிலையில் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றை ஈழத்துப் பூதந்தேவனாருடன் தொடங்குவது மரபாக உள்ளது.

கடல் வாணிபத்தில் தமிழர் சிறப்புற்று விளங்கினார்கள் என்பது சங்க இலக்கியங்கள் வாயிலாக உறுதி செய்யப்பட்ட தகவலாகும்.

முடிவாக, ஈழத்து வரலாற்றுக் காலத்தின் மேல் எல்லையை, இந்த ஆய்வின் தேவைக்காக, பொ.ஆ.மு 8-ஆம் நூற்றாண்டு காலப்பகுதியாகக் கொண்டு இந்த ஆய்வு தொடர்கிறது.

தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம், ராஜாவலிய முதலிய நூல்கள் குறிப்பிடும் 189 மன்னர்களில் விஜயன் முதலாவது மன்னனாவான்.

விஜயன் காலத்தில் தொடங்கிய தென்னிந்திய அரசகுமாரிகளை ஈழத்து மன்னர்கள் மணம் முடிக்கும் உறவு இறுதிச் சிங்கள மன்னனான ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் வரை நீடித்திருந்தது.

அடுத்து, விஜயனின் பட்டாபிசேகம் ஏழாம் அத்தியாயம்.

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com



# கம்பனின் கருவூலம் திறந்து...

## - மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

40

> “ஆணொருவனின் அழகில் கொண்ட ஈடுபாட்டைப் பிறருக்குச் சொல்லாமல் தனக்குள் எண்ணி மகிழ்கின்ற பெண்களின் இயல்பு இராக்கதப் பெண்ணான சூர்ப்பணகையிடமும் இருப்பதாக இச்செய் யுள்களினூடாகக் கம்பர் காட்டுவது சிறப்புடையது.”

சென்றமாதத் தாய்வீடு இதழில் கம்பராமாயணத்தில் ஆரணியகாண்டத்தின் ஐந்தாவது படலமாகிய சூர்ப்பணகைப் படலத்தின் ஒரு பகுதியை எடுத்துவந்திருந்தேன். சூர்ப்பணகை இராவணனின் வீழ்ச்சிக்கும், அவனது குலத்தின் அழிவுக்கும் இராமாயண காவியம் தோன்றுவதற்கும் முதன்மைக் கதாபாத்திரமாக அமைந்தவள். அதனாலேயே, ‘தன்கிளைக்கு இறுதிகாட்டுவாள்’ என்று கம்பரால் குறிப்பிடப்படுகின்றாள். தனிமையில் தண்டகவனத்தில் சுற்றிக்கொண்டிருந்த அவள் தற்செயலாகப் பஞ்சவடியில் இராமன் இருந்த சோலைக்கு வந்ததையும் இராமனைக் காண நேர்ந்ததையும் சென்ற இதழில் பார்த்தோம். அதன் பின்பு நடந்தவற்றை இந்தப் பகுதியில் கம்பரின் கவிநயத்தோடு எடுத்துவருகிறேன். அந்தச் சோலையிலே சூர்ப்பணகை இராமனைக் கண்ட போது அவனது அழகால் ஈர்க்கப்பட்டவளாக அவன் யாராக இருப்பானோ என்று பலவாறு எண்ணுகிறாள்.

***சிந்தையில் உறைபவர்க்குஉருவம் தீர்ந்ததால்***
***இந்திரற்கு ஆயிரம் நயனம், ஈசற்கு***
***முந்திய மலர்க்கண்ணோர் மூன்று, நான்குதோள்***
***உந்தியில் உலகளித் தாற்கென்று உன்னுவாள்***

*கம்ப. ஆரணிய. 236*

சிந்தையில் உறைபவர்க்கு உருவம் தீர்ந்ததால் - இராமனைக் கண்டு அவனது அழகால் ஈர்க்கப்பட்ட சூர்ப்பணகை இவன் எல்லோர் மனதிலும் தங்குபவனாகிய மன்மதனாக இருப்பானோ. ஆனால் அவனுக்கு உருவம் அற்று ஒழிந்து விட்டதே. எனவே இவன் மன்மதன் அல்லன். இந்திரற்கு ஆயிரம் நயனம் - இந்திரனாக இருப்பானோ என்றால், அவன் ஆயிரம் கண்களை உடையவன். ஆகவே இவன் இந்திரனுமல்லன். ஈசற்கு முந்திய மலர்க்கண்ணோர் மூன்று - இவன் சிவனாக இருப்பானோஎன்றால் சிவனுக்குத் தாமரை மலர் போலும் மூன்று கண்கள் இருக்கும். எனவே இவன் சிவனுமல்லன். நான்குதோள் உந்தியில் உலகளித் தாற்கென்று உன்னுவாள் - தனது நாபிக் கமலத்திலிருந்து உலகத்தைப் படைத்தருளிய திருமாலோ என்றாலும் திருமாலுக்கு நான்கு தோள்கள் இருக்குமே. ஆதலால் இவன் திருமாலுமல்லன் என்று ஐயமும் தெளிவும் தோன்ற இவன் யாராக இருப்பானோ என்று சூர்ப்பணகை மனதில் எண்ணுவதாகக் கம்பர் இச்செய்யுளை ஐயவணி நயத்துடன் அமைத்துள்ளார்.

சிவனின் நெற்றிக்கண் நெருப்பால் மன்மதன் எரிக்கப்பட்டு உருவம் அழிந்தான் என்பதும், கௌதம முனிவனது சாபத்தால் இந்திரன் ஆயிரம் கண்களைப் பெற்றான் என்பதும், திருமாலின் நாபிக் கமலத்திலிருந்து உலகம் தோன்றியதென்பதும் புராணங்கள் கூறும் செய்திகளாகும்.

உருவம் அழிந்துபோன மன்மதன் பெருந்தவம் இயற்றி முன்னரிலும் அழகிய வடிவத்தைப் பெற்றான்போலும் என்று மீண்டும் நினைத்த சூர்ப்பணகை, இராமனின் ஒவ்வொரு உறுப்பின் அழகையும் வியந்து மனதில் எண்ணுவதாகக் கம்பர் பத்துக்கும் மேற்பட்ட செய்யுள்களில் வருணனை செய்கிறார். இராமனின் அழகை வருணிப்பதற்கு ஏற்ற பாத்திரமாக சூர்பணகையைக் கையிலெடுத்து அவள் வாயிலாக அவனின் அழகை வருணிக்கும் கம்பரின் கவித்துவம் வியக்கத்தக்கது. அவ்வாறு, இராமனைவருணிக்கும் செய்யுள்களில் ஒன்று.

***அதிகநின்று ஒளிரும் இவ்வழகன் வாண்முகம்***
***பொதியவிழ் தாமரைப் பூவைஒப்பதோ?***
***கதிர்மதியாமெனில் கலைகள் தேயும்அம்***
***மதியெனின் மதிக்குமோர் மறுவுண்டுஎன்னுமால்***

*கம்ப. ஆரணிய. 241*

அதிகம் நின்றுஒளிரும் இவ்வழகன் வாண்முகம் - பேரொளி மிகுந்து வீசுகின்ற இந்த அழகனின் முகத்துக்கு, பொதியவிழ் தாமரைப் பூவைஒப்பதோ - மொட்டுவிரிந்த தாமரை

மலரை ஒப்பாகக் கூறமுடியுமோ? அது ஒப்பாகாது. கதிர்மதி யாமெனில் கலைகள் தேயும் - ஒளிவீசுகின்ற நிலவை உவமை சொல்வோமென்றால் நிலவும் தனது ஒளியில் நாள் தோறும் தேய்ந்து போகிறது. அம்மதியெனின் மதிக்குமோர் மறுவுண்டு என்னுமால் - அவ்வாறு இன்றி, முழுமதியை இவனது முகத்துக்கு உவமை கூறுவதென்றாலும், அந்த முழு நிலவிலும் களங்கம் இருக்கின்றதே. எதனையும் ஒப்புவமை சொல்லமுடியாதபடி இவனது முகம் பேரொளி வீசுகிறதே என்று சூர்ப்பணகை மனதில் நினைத்து வியப்பதாகக் கம்பரின் கற்பனை விரிகிறது.

இராமனின் முகவொளிக்கு அன்றலர்ந்த தாமரையையும் உவமை சொல்லமுடியாது, பொழுதாக அது வாடிவிடும். கலைகள் குறைவதும், வளர்வதும் இயல்பாக உள்ள நிலவையும் ஒப்பாகச் சொல்லமுடியாது. கலைகள் நிறைந்த முழு நிலவை உவமைசொல்வதானாலும் அதுவும் கறைபடிந் திருப்பதால் மாசு மறுவற்ற இவனது முகத்துக்கு அதுவும் ஒப்பாக அமையாது என்று சூர்ப்பணகை நினைப்பதாகக் கம்பரின் கற்பனை செல்கிறது. உவமிக்கப்படும் பொருளான இராமனின் முகவொளியையும், அதற்கு எடுத்துக்கொண்ட உவமைகளையும் வேற்றுமைப்படுத்திக் கூறுவது வேற்றுமை அணிநயம் கொண்டதாகும். இவ்வாறு ஆணொருவனின் அழகில் கொண்ட ஈடுபாட்டைப் பிறருக்குச் சொல்லாமல் தனக்குள் எண்ணி மகிழ்கின்ற பெண்களின் இயல்பு இராக் கதப் பெண்ணான சூர்ப்பணகையிடமும் இருப்பதாக இச் செய்யுள்களினூடாகக் கம்பர் காட்டுவது சிறப்புடையது.

சூர்ப்பணகை இராமனது முகத்தின் அழகில், தோள்களின் அழகில், மார்பின் அழகில், கைகளின் அழகில், கால்களின் அழகில், தலைமுடிக் கற்றையின் அழகில் என்று அவனின் ஒவ்வொரு உறுப்பாக மனதைப் பறிகொடுத்தவள் அவனின் முழுமையான மேனியழகில் தன்னை முழுமையாக இழந்து விட்ட நிலையைக் கம்பர் இன்னும் சில செய்யுள்களில் நயமாகக் கூறியுள்ளார்.

***நீத்தமும் பரவையும் குறுகநெஞ்சிடைக்***
***கோத்தஅன்புஉணர்விடைகுளிப்பமீக்கொள***
***ஏத்தவும் புரியவொன்றுஈக லான்பொருள்***
***காத்தவன் புகழெனத் தேயும் கற்பினாள்***

*கம்ப. ஆரணிய. 250*

நீத்தமும் பரவையும் குறுக - ஆற்றுவெள்ளமும், கடல் நீரும் சிறியதாகத் தோன்றும்படி, நெஞ்சிடைக்கோத்த அன்பு - இராமனின் அழகைக்கண்டு பலவாகச் சிந்தித்தவளின் மன திலே தொடர்ச்சியாக ஊற்றெடுத்த அன்புவெள்ளம்பெருகி, உணர்விடைகுளிப்பமீக்கொள - அதனுள்ளே அவளது அறிவு மூழ்கும்படி அதிகரிக்க, ஏத்தவும் புரியவொன்று ஈகலான் - தன்னைஏத்தப் புகழ்ந்தவனுக்கும் கூட அவன் விரும்பியபடி ஒரு சிறிது பொருளையும் ஈயாதவனாக, பொருள்காத்தவன் புகழெனத் தேயும் கற்பினாள் - தனது பொருளைப் பாதுகாத் துவரும் உலோபியினது புகழ் சிறிது சிறிதாகத் தேய்ந்து போவதைப்போல, சூர்ப்பணகை தனது கற்புநிறை என்னும் நிலையிலிருந்து சிறிது சிறிதாகத் தேய்ந்துபோகும் நிலையை அடைந்தாள் என்கிறார் கம்பர்.

இராமனின் அழகை எண்ணியெண்ணி, ஆற்றுப்பெருக்கையும் கடலின் அளவையும் விட இராமனின் மீதுகொண்ட ஆசை வெள்ளம் மிகுதியாக, அந்த ஆசை வெள்ளத்தினுள்ளே அவளது ஆய்ந்தறியும் அறிவு அமிழ்ந்துபோக, அவளது கற் புநிலைதேய்வுற்றதாகக் கம்பர் மிக்கநயமுடன் பாடியுள்ளார். கற்பு என்பது கல்போன்ற மனவுறுதிப்பாட்டைக் குறிப்பது. பெரும் செல்வம் இருந்தும் அறவழியினில் பொருளைச் செலவு செய்யாமல் பாதுகாத்து வருகின்ற ஓர் உலோபி யினது புகழ் சிறிது சிறிதாகத் தேய்ந்து போவதைப் போல அவளது கற்புநெறி தேய்வடைந்தது என்று கம்பர் உவமை கூறியிருப்பது புதிய உவமை உத்தியாக இருக்கிறது.

இராமனின் அழகிலே தன்னை இழந்துவிட்ட சூர்ப்பணகை அவனைச் சேர்ந்து மணம் புரிந்துகொண்டு அவனுடன் வாழ முடியாது போனால், அமுதம் கிடைத்தாலும் வேண்டேன்.



உயிரைப் போக்கிக் கொள்வேன் எனத் துணிந்து அவனெதிரே போய்நிற்பதற்கு எண்ணுகிறாள். இராமன் தன்னைக் கொடிய அரக்கியென்று தள்ளிவிடாதபடி, தனது மந்திர வலிமையி னால் திரு மகளைப் போன்ற அழகிய தோற்றத்தை எடுத்துக் கொண்டு, இராமனின் எதிரில் வந்ததை அழகான ஐந்து சந் தக்கலிவிருத்தத்தில் கம்பர் வடித்துள்ள சிறப்பைக் காணலாம். அவற்றுள் பலரும் படித்தறிந்து சுவைத்த பாடலொன்று.

***பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க***
***செஞ்செவியகஞ்சம்நிகர் சீறடிபெயர்ப்பாள்***
***அஞ்சொல்இள மஞ்ஞையெனஅன்னமெனமின்னும்***
***வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்***

*கம்ப. ஆரணிய. 255*

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க - திருமகளைப் போன்று அழகிய தோற்றம் எடுத்தவள் அந்த தோற்றத்துக்கு ஏற்றாற்போலத் தனது நடையையும் மாற்றிக்கொண்டு, செம் பஞ்சின் ஒளியும், மென்மையான இளந்தளிரும் செம்மை யிலும், மென்மையிலும் தனக்கு ஒப்பாகாத வண்ணம் அவை கள் வருந்துமாறு செஞ்செவியகஞ்சம்நிகர் சீறடிபெயர்ப்பாள் - சிறந்த அழகுமிக்க தாமரை மலரைப்போலத் தோன்றுகின்ற தனது சிறிய பாதங்களை எடுத்துவைத்தபடி, அஞ்சொல் இள மஞ்ஞையென அன்னமெனமின்னும் - அழகிய சொற்களை யுடைய இளமையான மயிலைப்போலவும், அன்னப் பேடை யைப்போலவும் மின்னுகின்ற, வஞ்சியென நஞ்சமென வஞ்ச மகள் வந்தாள் - வஞ்சிக் கொடியைப்போன்ற தோற்றத்து டனும், நஞ்சைப் போலவும் இந்தவஞ்சமகள் இராமனை நோக்கிவந்தாள் என்று சூர்ப்பணகையின் வரவைக் கம்பர் வருணிக்கிறார்.

அகத்தே வஞ்சமகளாக, புறத்தே அழகிய தோற்றத்துடன் அவள் நடந்து வந்த காட்சியை இனிமையான மெல்லோசை தரும் மெல்லின எழுத்துகளை மிகுதியாகக்கொண்டு அழகிய முடுகோசைபெற்ற சந்தம் அமைந்த கலிவிருத்தங்களாக மேலும் நான்கு விருத்தங்களில் கம்பர் பாடியுள்ளது சிறப்பு டையது. இதேவகையில்தான் பாலகாண்டத்தில் மணிமண் டபம் நோக்கி வருகின்ற சீதையின் நடையையும் 'பொன்னின் ஒளிபூவின் வெறிசாந்துபொதிசீதம்' எனத் தொடரும் செய்யுள் களிலே வருணித்திருப்பது நோக்கத்தக்கது. இந்த இரண்டு இடங்களிலும் வரும் செய்யுள்களை ஒப்பிட்டு சீதையின் நடை இயற்கையாக அழகாக இருந்தது, சூர்ப்பணகையின் நடை செயற்கை அழகாக, வருவித்த நடையாக இருந்தது என்று சில உரையாளர் நயவுரைகூறக் கேட்டிருக்கிறோம். இந்தச் செய்யுளில் பல உவமைகள் தொடர்ச்சியாக வந்து தலை யுவமையணிநயம் பெற்றிருக்கின்ற சிறப்பைக் காண்கிறோம்.

சூர்ப்பணகை வருகின்றபோது அவளது சிலம்பு, மேகலை, ஆரம் முதலிய அணிகளின் ஒலியும், கூந்தலில் சூடிய மலர் களில் மொய்க்கும் வண்டுகளின் ஆரவார ஒலியும் ஒரு பெண்ணின் வருகையை உணர்த்தும், இராமன் அவ்வோசை வருகின்ற பக்கமாகத் திரும்பி நோக்கியபோது சூர்ப்பண கையைக் கண்ணெதிரே காண்கிறான்.

***பேருழைய நாகருல கிற்பிறிது வானின்***
***பாருழையின் இல்லதொருமெல்லுருவுபாரா***
***ஆருழை அடங்கும் அழகிற்கு அவதியுண்டோ***
***நேரிழையர் யாவர் இவர் நேரெனநினைந்தான்***

*கம்ப. ஆரணிய. 255*

பேருழையநாகருலகில் - பரந்த இடத்தையுடைய நாகர் உலகாகிய பாதாளத்திலும், பிறிதுவானின் - மேலும் வானுல கத்திலும், பாருழையின் - பூவுலகிலும், இல்லதொருமெல்லு ருவுபாரா - இல்லாததைப் போன்ற அந்த மென்மையான பெண் வடிவத்தைப் பார்த்து, ஆருழை அடங்கும் அழகிற்கு அவதியுண்டோ- இந்தப் பெண்ணிடம் உள்ள அழகிற்கு எல்லை இல்லையே என்று எண்ணியபடி, நேரிழையர் யாவர் இவர் நேரெனநினைந்தான் - பொருத்தமான அணிகலன் களை அணிந்துள்ள பெண்கள் எவரும் இவருக்கு நிகரா கயார் இருப்பர் என்று நினைந்து வியந்தான் என்பது பொருள். அவளது அழகு இராமனையே இவ்வாறு சிந்திக்க வைத்த தைக் காண்கிறோம். 'நேரிழையர் யாவர் இவர் நேர்' என்ற சொற்றொடரில் 'இவள்' என்னாமல் 'இவர்' எனப் பன்மையில் குறிப்பிட்டதால், சூர்ப்பணகையின் அழகை இராமன் பெருந் தகைமையுடன் வியந்ததாகக் கம்பர் வேறுபடுத்தியிருப்ப தாகக் கொள்ளலாம் எனச் சில உரையாசிரியர் விளக்குவர்.

இராமன் அவளது வடிவழகைக் கண்டு வியக்கும்போது, அவள் இராமனது முன்சென்று வணங்கி சிறிது நாணத்துடன் ஒருபக்கமாகப் பார்த்தபடி நிற்கிறாள். இராமன் சூர்ப்ப ணகையை நோக்கி, 'திருமகள் போன்றவளே! உனது வரவு நல்வரவாகுக! உனதுபெயர் யாது? ஊர் எது? உறவினர் யார்?' என வினவுகிறான். அதற்கு அவள் தன்னைப்பற்றித் தெரிவிக்கின்றாள்.

***பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி,***
***முப்புரங்கள் செற்ற***
***சேவலோன் துணைவனானசெங்கையோன்***
***தங்கை, திக்கின்***
***மாவெலாம் தொலைத்துவெள்ளிமலையெடுத்து***
***உலக மூன்றும்***
***காவலோன் பின்னைகாமவல்லியாம் கன்னிஎன்றாள்***

*கம்ப. ஆரணிய. 263*

பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி - தாமரை மலரில் தோன்றிய பிரமனது மைந்தர்களாகிய ஒன்பதின்மரில் ஒருவ ராகிய புலஸ்தியர் என்பவருடைய குமாரனாகிய விச்சிரவசு என்னும் முனிவனின் பெண். முப்புரங்கள் செற்றசேவலோன் துணைவனான செங்கையோன் தங்கை - எருதினைஊர்தியா கக்கொண்ட, மூன்று புரங்களை எரித்த சிவபிரானது நண் பனாகிய சிவந்த கைகளையுடைய குபேரனது தங்கை, திக் கின்மாவெலாம் தொலைத்து - திக்குயானைகளையெல்லாம் அழித்து, வெள்ளிமலை யெடுத்து உலக மூன்றும் காவலோன் பின்னை - வெள்ளி மயமான கைலாசமலையைத் தனது கைகளாற் பெயர்த்து எடுத்தவனும், மூன்று உலகங்களையும் காத்தலில் வல்லவனுமான இராவணனின் பின் பிறந்தவளான, காமவல்லியாம் கன்னி என்றாள் - காமவல்லி என்று சொல் லப்படுகின்ற பெண் நான் என்றாள்.

பிரமனால் ஆதிகாலத்தில் உண்டாக்கப்பட்ட உபப்பிரமர்கள் எனப்படும் ஒன்பதுபேரில் ஒருவராகிய புலத்தியன் என்னும் முனிவன், விச்சிரவசு என்னும் மகனைப் பெற்றான். விச்சிரவசு பரத்துவாச முனிவனின் மகளை மணஞ்செய்து ஒரு மகனைப் பெற்றெடுக்கிறான். அந்தமகன் பின்னாளில் செல்வத்துக்குத் தலைவனான குபேரன் என்று பெயர் பெறுகிறான். பின்னொ ருகால் சுமாலி என்னும் இராக்கதன் தன்மகளான கேகசிக்கு, குபேரனின் சிறப்பைக் கூறி இப்படிப்பட்டவனைப் பெற்றெ டுத்த விச்சிரவசு முனிவனைச் சேர்ந்து நீ நன்மக்களைப்

பெறுவாய் என்று விச்சிரவசுவிடம் சேரவைக்கிறான். அவள் ஆசுரவேளையில் தன்னைச் சேர்ந்ததனால் கொடிய பிள்ளைகளை அவள் பெற்றெடுப்பாள் என்று சாபமிட, அவளின் பெரும் வேண்டுதலால் அவளுடைய கடைசிப்பிள்ளை நன்மகனாவான் என அருள்கின்றான். அவ்வாறு விச்சிரவசுவுக்கும் கேகசிக்கும் இராவணன், கும்பகர்ணன், சூர்ப்பணகை, விபீடணன் என்போர் முறையே பிறந்தனர் என்பது புராணச் செய்தி. இதனையே கம்பரின் இந்தச் செய்யுள் வெளிப்படுத்துகிறது.

சூர்ப்பணகையின் வரலாற்றைக் கேட்டு ஐயமுற்ற இராமன், 'கோர உருவமுள்ள அரக்கனது தங்கை நீயானால் இவ்வழகியதோற்றம் எப்படி வாய்த்தது' எனக் கேட்கிறான். அதற்கு அவள் இராக்கதரோடு வாழ்தலைநீக்கி, நல்வழிநின்று தவம் செய்து தேவர்களிடத்திலிருந்து நல்லுருவம் பெற்றேன். அத்துடன் உன்னையும் காணவந்தேன் என்கிறாள். அதனைக் கேட்ட இராமன் நீ இங்கே வந்த நோக்கம் என்ன? என்னால் செய்யத்தக்கது உண்டென்றால் செய்வேன் என்கிறான்.

***தாம்உறுகாமத் தன்மை***
***தாங்களே உரைப்பதுஎன்பது***
***ஆமெனல் ஆவதுஅன்றால்***
***அருங்குலமகளிர்க் கம்மா***
***ஏமுறும் உயிர்க்குநோவேன்***
***என்செய்கேன் யாருமில்லேன்***
***காமனென்றுஒருவன் செய்யும்***
***வன்மையைக் காத்திஎன்றாள்***

தாம் உறுகாமத் தன்மை தாங்களே உரைப்பது என்பது - தாம் ஒருவர் மீது கொண்டுள்ள காதலின் தன்மையைத் தாங்களே வெளியில் சொல்வது என்பது, அருங்குல மகளிர்க்கு ஆமெனல் ஆவதுஅன்றால் - மேன்மையான குடிப்பிறந்த மகளிர்க்குத் தக்கதன்று, ஏமுறும் உயிர்க்குநோவேன் - எல்லா இன்பத்தையும் அடையத்தக்க உயிரோடு கூடி வாழ்வதற்கும் வகையில்லாமல் வருந்துகின்றேன், என்செய்கேன் யாருமில்லேன் - வேறொரு துணையுமில்லாதவளாகிய நான் ஏதுசெய்வேன், காமனென்று ஒருவன் செய்யும் வன்மையைக் காத்திஎன்றாள் - மன்மதன் என்கின்ற ஒருவன் செய்கின்ற கொடுமையைத் தடுத்து என்னைக் காத்தருளவேண்டும் என்றாள்.

தமது காமத்தின் தன்மையைத் தாமே சொல்வது குலமகளிருக்கு ஏற்றதன்று. ஆயினும் யான் அக்காம மிகுதியால் மரண வேதனையை அடையும்படியான நிலையைப் பெற்றதனால் எனது எண்ணத்தைத் தெரிவித்து நிறைவேற்றுவதற்கு ஏற்ற தோழிமார் போன்ற துணையேதும் எனக்கு இல்லாமையாலும், நானே எனது காதலை உன்னிடம் வெளியிட்டுக் கூறுகிறேன். உன்னிடம் ஏற்பட்ட காதலினால் ஏற்பட்ட வேதனையைப் போக்கிக் காத்திடவேண்டும் என்று அவனிடம் கெஞ்சுகிறாள். அதனைக் கேட்ட இராமன் என்ன சொல்லப்போகின்றான் என்பதை சூர்ப்பணகைப்படலத்தின் தொடர்ச்சியாக அடுத்த இதழில் எடுத்து வருகிறேன்.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com



# தமிழ்வலை - 118

‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-118 வினா

### இடமிருந்து வலம்

3 பயம்
4 சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர்
5 இரை
6 ஒரு மத்திய அமெரிக்கத் தீவு
8 யாழ் மாவட்டத்தில் புதைகுழிகள் கண்டறியப்பட்ட இடம்
10 சிவாஜி 9 வேடங்களில் நடித்த படம்
13 பிரதிபலன்
15 தமிழகத்தின் தொன்மையை உணர்த்தும் அகழ்வாராய்ச்சித் தலம்
16 புதிய தேர், கப்பல் முதலியவற்றை களத்தில் இறக்கிப் பரீட்சித்துப் பார்க்கும் நடைமுறை
17 ஒழுங்கு

### மேலிருந்து கீழ்

1 ஆபத்து
2 பொறுத்துக்கொள்
3 நாள்தோறும்
5 போரில் 1000 யானைகளைக் கொன்ற வீரனைப் போற்றும் பிரபந்தம்
7 ஏடுகள்
8 சமிபாடு
9 வேதம்
11 ஏங்கு
12 சரணடை
14 கசை

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: 416 849 0594

Thaiveedu
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

## தமிழ்வலை-117-க்கான விடைகள்



## தமிழ்வலை-117 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

த.செ. நடராசா, ரொறன்ரோ.
குமாரசாமி ரூபிகா, கிளிநொச்சி.
கிருபா சண், ரொறன்ரோ.
விசுவநாதன் தாமரை, ரொறன்ரோ

### பரிசுபெறும் போட்டியாளர்

**மேரி கெலன் தேவதாஸ்,**
**நோத்யோர்க்.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.



# முலையறுகாதை!

## பெண் துயரப் பெருங்கதை - 6



மா. சித்திவினாயகம்

கேரளத்தின் கொடூர இரவு அது. தலித்தான கோவிந்தனும், அவன் மனைவியும் திட்டமிட்டு நம்பூதிரியால் வீட்டோடு கொழுத்தப்பட்ட அந்தக் கொடிய இரவு வேதனையோடு நகர்ந்து அழுது வடிந்து கொண்டிருந்தது. காக்கையும், குருவிகளும், நாய்களும் கூட கூட்டமாய்க் கூவியழுத போதும் ஒரு தலித்தின் வீடு எரிந்ததென அந்தத் தேச அதிகாரத்தில் உள்ள எந்த மனிதரும் அவ்வீட்டின் முன் கூடினார்களல்ல. அடிமைகளின் சாவு என்பது அங்கு ஒரு வெறும் மயிரை இழப்பதற்குச் சமானம். அதிகாரத்திலுள்ளவன், குரலற்ற ஏழைக்குத் தண்டனைவழங்க இந்த உலகத்தில் எழுதப்படாத சட்டம் என்றுமுண்டு.

என் கடவுளே இந்த அப்பா விகளுக்கு நடந்த கொடூரம் என்ன ? ஏதுமறியாத தலித்திற்கு ஏன் இந்த அநியாயம் என்று மார்பிலடித்தபடி ஒப்பாரி வைக்க அங்கு எவருக்கும் துணிவில்லை. அப்படி ஒப்பாரி வைப்பவர்களின் மார்பையே அறுத்தெறிகிற கொலைகாரப் பாவிகளின் தேசமது. ஈவிரக்கமற்ற அந்தச் செயலைச் செய்த வர்கள் யாரென யாரையும் கேள்வி கேட்க முடியாது.

தோள்மீது கைபோட்டுத் தொட்டணைத்து நின்ற தோழன் கோவிந்தனின் கொடூரச் சாவு கணேசனைப் படாத பாடுபடுத்தியது. மரணம் தான் இங்கு அச்சப்படுத்துவது. மரணபயங்காட்டித்தான் இந்தப் பூமியில் அனைத்து அநீதிகளையும் அதிகாரத்தில் உள்ளவன் நடத்தி முடிக்கின்றான். நம்பூதிரிகளும், அவர்களிற்குக் காவலாக இருக்கும் வெள்ளைய அரசும் மக்களிற்கு மரணத்தையும், மரண பயத்தைக் காட்டி அடிமையாக்கவுமென, பல்வேறு ஆயுதங்களையும், கொடூரத் தண்டனைகளையும் தம் வசம் வைத்திருந்தார்கள்.

கேள்வி கேட்பவர்கள் கேரளக் கடற்கரையெங்கும் கேட்பாரற்றுப் பிணமாய் ஒதுங்கிய காலமது. உலகெங்கும் கோடிக் கணக்கானோரை அடிமைகளாய் கைகட்டி நிற்க வைக்கவும், சாதிபிரித்து தம்வேட்கையை நிலைநாட்டவும், கொன்று விடுவார்கள் என்கிற அதிகார அச்சம் மட்டுமே இப் புவியில் அடிப்படையாக இருக்கின்றது.

கணேசன் பைபிளோடு கலங்கி நின்ற கோவிந்தனின் மகளைத் தூக்கி அணைத்துக் கொண்டான். 'அப்பா... அம்மாவே... நீங்கள் என்னை விட்டுப் போயிற்றீங்களே... ஐயோ... இனி உங்கள் இந்தக் குழந்தையை யார் காக்கப் போகின்றார்கள் என்று வாய்விட்டழக்கூட அறியாத குழந்தையது. அவளுக்குத் தாயும் தந்தையும் இனியில்லை. அவர்கள் நம்பூதிரி வைத்த தீயில் சாம்பலாய்க் கிடந்தார்கள். அவர்கள் மட்டுமல்ல அவர்களின் இந்தக்குழந்தைக்கும் இனி வாழ்வு சூனியம்.

கணேசன் குழந்தையைத் தூக்கியபடியே தன் வீட்டிற்கு வந்தவேளை வழியில் கன்னி மேரிக்காக வெள்ளையர் கட்டியுள்ள சிறுதேவாலயத்தில் கால் தரித்தான். உள்ளே குழந்தை யேசுவைக் கையிலேந்தியபடி அன்னைமேரி ஆலயத்துள் வீற்றிருந்தாள். என்ன நினைத்ததோ தாய் தந்தையிழந்த அந்தக் குழந்தை கன்னி மேரி கரத்திலிருந்த பாலன்யேசுவிடம் பாசத்தோடு ஓடியது. வளர்ந்த இயேசுவின் மேலேயே சிலுவை சுமத்தி சாட்டையால் அடித்து ஆணி அடித்துக் கொன்ற இந்தப் பாவப்பட்ட மனித சமூகத்தில் இந்தப் பாலயேசுவால் இந்தப் பாலகியைப் பாதுகாத்திட முடியுமா ?

கண்மூடித் திறப்பதற்குள் அந்தக் குழந்தையைக் கன்னிமேரி கட்டியணைத்தாள். கணேசனால் தன் கண்ணை நம்ப முடிவில்லை. கண்ணைக் கசக்கிவிட்டு மெழுகுதிரி ஒளியில் நன்றாகப் பார்த்தான். வெள்ளைக்காரக் கன்னியாஸ்திரி ஒருத்தி குழந்தையை அணைத்தபடி எங்கள் ஆச்சிரமத்தில் இந்தக் குழந்தை இருக்கட்டும் என்றாள். பைபிளோடு நின்ற குழந்தைக்கு கடவுளின் பாக்கியம் என்றெண்ணித் தலையாட்டினான் கணேசன்.

கோவிந்தனை வீட்டோடு கொழுத்திவிட்டு வந்த நம்பூதிரி அடுத்த நாட் காலை ஏதுமறியாதவன் போல காமவேட் கையோடு தன் அன்புக் காதலி கிளாராவைத் தேடி அவள் வீட்டிற்குப் போயிருந்தான்.

அவளும் சிரித்தபடி கடவுளின் தேசமான கேரளதேச அதிபதியே வாருங்கள் என்றாள்...

அதிலென்ன சந்தேகம் ? இது எங்களுக்காகக் கடவுள் அருளிய தேசம் என்றான் அவள் கரங்களைப்பற்றியபடியே நம்பூதிரி.

இந்தப் பூமியில் எந்த மனிதனுக்கும், எந்த இடமும் பூர்வீகமான சொந்த இடங்கிடையாது என்றாள் கிளாரா.

இது எங்களின் நிலம், எமக்கு மட்டுமே சொந்தமென கடவுள் தந்த நிலமென்றான் நம்பூதிரி மீண்டும் உறுதியாக.

இங்குள்ள நீங்களெல்லாம் வந்தேறிய ஆரியர்கள். ஈரானையண்டிய ஐரோப்பிய நிலப்பகுதியிலிருந்து கைபர் போலன் கணவாய் வழியாக பொ.ஆ.மு 1500-களையண்டி இந்திய தீபகற்பத்துக்குள் நுழைந்த ஆரியர்களின் வாரிசுகள்தான் நம்பூதிரிகளாகிய நீங்கள். ஏற்கனவே இங்கு இருந்த கறுப்பின மக்களை ஏமாற்றி அவர்களோடு கலக்காமல் இருக்க அமைத்த மதரீதியான கட்டுப்பாடுதான் இங்கு நீங்கள் ஏற்படுத்திய வருணப் பாகுபாடு.

அதற்காகக் கடவுள் எழுதினாரெனக் கதை விட்டு இந்தோ ஈரானிய வம்சமாகிய நீங்கள் இயற்றிய முதல் நூல் இருக்கு வேதம் ஆகும். பிராமணர்கள் பிரமனின் தலையிலிருந்தும், சைத்திரியர்கள் அவன் கரங்களிலிருந்தும், வைசியர்கள் பிரமன் தொடைகளிலிருந்தும், சூத்திரர்கள் பிரமன் பாதங்களிலிருந்தும் தோன்றினார்கள் என்று எழுதி வைத்த பெருமை உங்களின் பெருஞ் சாணக்கியக் கணக்கு அது.

நீங்கள் யாவரும் ஒன்றாகச் செல்லுங்கள், ஒரே குரலில் பேசுங்கள், உங்கள் மனம் ஒரே எண்ணம் கொண்டதாக அமையட்டும் என்கிற பிராமணருக்கான வேதாந்தம்தான் நான்குவேதங்கள். ஆரியர்கள் தாங்கள் இயற்றிய அந்த இருக்கு வேத மந்திரங்களை எழுத்தில் எழுதி வைக்காது, தம் வாயின்மூலமாக தம்சாதிக் காதுகளுக்கு மட்டுமே கேட்குமாறு பரப்பினர். இதனால்தான் வேத மந்திரங்களை எழுதாக்கிளவி என்றீர்கள் நீங்கள் என்றாள் கிளாரா...

கேட்டுக் கொண்டிருந்த நம்பூதிரிக்கு பொறுக்க முடிய வில்லை. இதையெல்லாம் எப்படி உனக்குத் தெரியும் என்றான் கோபமாக.

தொல்லியல், மானுடவியல், மரபணுவியல், இலக்கியம் வரலாறு மற்றும் சுற்றுச்சூழலியல் ஆய்வுகளால், தேடல் களால் கண்டறிந்த செய்திகள் இவையென்றாள் கிளாரா.

மனிதர்கள் இன்று எங்கெங்கெல்லாமோ குடியேறிப் பரவியிருக்கின்றார்கள். இவர்கள் இன்றுகுடியேறியிருக்கிற நிலங்களில் தான் அவர்கள் ஆரம்பமுதலே தோன்றி நிலைத்தார்கள் என்று வாதிடுவது அபத்தமாகும். அதே போல் கேரளா கடவுளின் நாடு, நம்பூதிரிகளுக்கான நாடு என நீங்கள் சொல்வது வேடிக்கையென்றாள் கிளாரா.. நம்பூதிரிக்கு கோபத்தில் வார்த்தை வரவில்லை...

இன்றைக்கு உங்களிடமிருந்து தப்பித்து மலேசியா பர்மா இலங்கையின் மலையகமென வெளிநாடுகளுக்குப் போகிற கூலித் தொழிலாளிகள் மற்றும் ஈழவர், நாயர் உட்பட்ட அனைத்து தாழ்த்தப்பட்டவர்களும் சரி நாம் கடவுளின் பிள்ளை என்கிற உங்களையொத்த நம்பூதிரிகளும், பார்ப்பனர்களும் சரி வந்தேறிய எங்களின்வெள்ளையர்களும் சரி அனைவரும் இதற்குள் அடங்கியவர்கள் தான். இவ்வளவு நெருக்கமாகக் குடியேறி இன்றைக்கு ஓரிடத்தில் நிலையாக

மானிடம் வசிக்கிற நிலையை அடைவதற்கு, மனித சமுதாயம் மகத்தானதியாகங்களையும் மாபெரும் போராட்டங்களையும் புரிந்திருக்கிறது. அது இன்னமும் தொடர்ந்தவண்ணமேயுள்ளது.

அப்போ கடவுள் உலகத்தை, மனிதர்களைப் படைத்தான் என்கிற கருத்தை நீ நம்பவில்லையா என்றான் நம்பூதிரி அழாக்குறையாக. இங்கு ஆக்கவும், அழிக்கவும் வல்லவன் மனிதன் மட்டுமே என்றாள் கிளாரா.

கேரள தேச நாட்டாண்மையாய் நின்று நிலைத்து, அந்த நிலம் தம்முடையது... தாமே கடவுள் என்கிற நம்பூதிரிக்கு கிளாரா இதைச் சொன்னவுடன் சட்டென்று முகம் மாறி விட்டது. அவளைப் பற்றியிருந்த கையைத் தளர்த்தினான். பல காரணங்களுக்காக மனிதன் தோன்றிய இடத்தைத் துறந்து மாற்றிடம் தேடி அலைகின்றான். ஆரம்பகால வேட்டைச் சமூகம் தாய்வழிச் சமூகமாகத் தானிருந்தது. அந்தக் குழுச் சமூகத்துள் தர்ம நீதிநியாயங்கள் என்பவற்றைக் கடந்து பலசாலியான பெண் அங்கிருந்த பலங்கொண்ட ஆண்களைப் புணர்ந்து இனவிருத்தி செய்த காலம்.

இந்தக் குடும்பச் சமூகத்திற்குப் பெண் தான் தலைவி. இந்தச் சமூகத்தை ஒரு பஞ்சாயத்துக் குழுத்தான் நிர்வகித்தது. அந்தக் கூட்டத்தில் வாழும் வாழ்க்கையின் எந்த அம்சமும் இந்தச் சபையின் நிர்வாகத்திற்கு அடங்கிய துதான். வேட்டையாடுதல், உணவைப் பங்கிடல், குடித்து நடனம் ஆடுதல், காதல் செய்தல், குடிசைகட்டுதல், தோலினால் பாத்திரங்கள், கருவிகள் செய்தல் என அனைத்துக் காரியங்களையும் இந்தச் சபைதான் நடாத்தியது. இந்தச் சபையில் என்றும் தாய்க்குத்தான் முதல் இடம் என்றாள் கிளாரா.

பெண்களை வாய்பேசா ஊமைகளாய் அறையிலடைத்து அடிமைகளாக்கும் நம்பூதிரிக்கு இதைக் கேட்கக்கேட்க கிலி பிடித்தது.

கிளாரா ஓர் anthropologist. இங்கிலாந்துப் பல்கலைக் கழகத்தில் மானிட வரலாறு படித்த மானிடவியலாளி அவள்.

இந்த மனிதர்களின் முதல் மூதாதையர்கள் கிட்டத்தட்ட 7 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியவர்கள்தான். ஒருவேளை ஆபிரிக்காவின் சிலவகைக் குரங்குகள் இரண்டு கால்களில் எழுந்து நடக்க ஆரம்பித்ததிலிருந்துதான் மனிதன் தோற்றம் பெற்றான். அதிலும் 2.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் கற்கோடரிகளால் மரம் உரிக்கப் பழகினான் அவன். பின்னர் அவர்களில் சிலர் இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் ஆபிரிக்காவிலிருந்து ஆசியா மற்றும் ஐரோப்பாவிற்குப் பரவினர். இதில் எந்தக்கு ரங்கு சிறப்பென்று வாதிட இங்குள்ள எந்தக் குரங்கிற்கு யோக்கியதையுண்டு.

இந்தக் கேள்விக்கு நம்பூதிரி என்ன பதிலைச் சொல்லுவான்?

வெளியே பறந்த பறவையைக் காட்டி இந்தப் பறவைகளின் நேரடி மூதாதைகள் டைனோசர்கள் என்றால் நீ நம்புவாயா நம்பூதிரி.. மனிதர்கள் தோன்றமுன் இங்கு தோன்றியவை டைனோசர்கள். இங்குள்ள அனைத்துப் பறவைகளும் டைனோசர்களின் பரிணாமம்தான் என்றாள் கிளாரா. ஜெர்மனியின் மெட்மேன் நகரில் உள்ள நியண்டதால் பள் ளத்தாக்கின் மனித எச்சங்கள் அதற்கு இன்றும்சாட்சி...

கேட்டுக் கொண்டிருந்த நம்பூதிரிக்கு தலை சுற்றியது.

பெண்களைப் புணரும் வெறும் அடிமை இயந்திரமாகவே, தான் காணும் பெண்களைக் கண்ட நம்பூதிரிக்கு இவை யெல்லாம் புதிய விடயங்கள்.

அந்த வேட்டைச் சமூகக் கூட்டு வாழ்வுள் இருக்கிற வீரப் பெண்தான், தான்புணர்கிற ஆண்களைத் தினத்திற்கொன் றாகத் தீர்மானிக்கின்றாள். அதைப் போன்றவள் தான் நானும்.

சூரியன் பகலோடு சேர்ந்தால் தானே உலகம் பிரகாசிக்கும். வா என அவள் அவன் கை பிடித்து இழுத்தாள்.

இவ்வளவு கதைபேசி யதார்த்தம் பேசும் கிளாரா நம்பூதி ரியைப் புணர்வதிலும், கொஞ்சிக் குலவுவதிலும் சளைத்தவ ளல்ல.

நம்பூதிரி தலையாட்டியபடி அவள் கரம் பற்றினான்.

உள்ளே அழைத்தாள் நம்பூதிரியை.

இது அவர்களுக்கான நேரம்.

மூடி திறந்து விஸ்கியை தன் தொப்பிளில் ஊற்றினாள்.

நக்கும்படி அவன் தலையை அழுத்தினாள்.

பெருமகிழ்வோடு நாயாகி தொப்பிளை நக்கினான் நம்பூதிரி.

வா என்னோடு இன்றைக்கும் ஆடு.

கையில் பிடித்து இழுத்தாள்.

நம்பூதிரி ஓர் அடங்கிப் போன ஆட்டுக்குட்டி போல அவள் இழுத்த இழுப்பிற்கெல்லாம் ஆடினான்.

இன்று இரவும் நீ என்னோடு தங்கு?

மறுப்புச் சொல்ல அவன் மடையனா?

கட்டாயம் தங்குவேன் என்றான் முந்திக் கொண்டு... அப்படி யானால் நான் இன்றும் மகிழ்வாக இருக்கலாம். சொல்லியவாறே அவனைத் ஆரத் தழுவி முத்தமிட்டாள். வெள்ளைச்சி எதற்கும் வெட்கப்படுவதில்லை. நம்பூதிரி மனதுள் சிரித்தான் .

நிர்வாண உடல்கள் பாம்பைப் போல ஒன்றில் ஒன்று விழுந்து பிணைந்தன. அன்றைய இரவு அமர்க்களப்பட்டது. விடிந்தது ! வெண் தேவதையாக மின்னினாள் அவள்! அழகான மலரெடுத்து அவள் தலையில் சூடி மகிழ்ந்தான் நம்பூதிரி. பூச்சூடுவது அவளுக்குப் புது அனுபவம். அவனை ஆரத் தழுவி பூச்சூடிய தன் அழகை அதிசயமென இரசித்தாள் கிளாரா.

எழுந்து குளித்து காலைச் சாப்பாட்டை முடித்த பின் எங்கு போவது என்று யோசித்தார்கள் இருவரும். கொச்சின்... அழகான துறைமுகம் அது! போவதற்குள் Maritini திராட்சை வைனை இரு கிளாஸ்களில் ஊற்றினாள். சிவப்பு இரத்தமாய் மின்னியது அது. அழகான சொண்டுகளால் அந்த வைனை. அவள் உறிஞ்சிக் குடித்தாள். நம்பூதிரி வெடுக்கென்று எடுத்து மடக்கென்று குடித்தான். வைனில் வெறித்தனம் குறைவு.

மனித நாகரிகம் தோன்றிய கதையை நேற்றுச் சொன்னேனே உனக்கு ஏதாவது புரிந்ததா என்றாள் கிளாரா...

கடவுளே தலையிலிருந்து தன்னைப் படைத்ததாகக் கதை சொல்லும் அவன் அவள் கதையை நம்புவானா? அதை நம்பினால் நம்பூதிரிக்கு இங்கு ஏது வாழ்வு?

ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி வேட்டைச் சமூகத்தில் அனைத்தையும் சேர்ந்தேதான் தேடவேண்டும். சேர்ந்தேதான் அனுபவிக்க வேண்டும். ஒன்றும் கிடைக்க வில்லையானால் சேர்ந்தேதான் பட்டினிகிடக்கவேண்டும். அந்தப் பிரதேசத்தில் மிருகங்கள், காய்கனிகள் கிடைக்கும் வரைதான் அங்கேதங்குவார்கள். அப்பால் வேறொரு உணவு கிடைக்கிற பிரதேசத்திற்குப் போய்விடுவார்கள். அதிகாரமில்லாத அன்பினால் கட்டுண்ட வாழ்வு அது. ஆணுக்குப் பெண்ணெந்தவகையிலும் குறைந்தவளல்ல... என்கிற அரிய சமூக வாழ்க்கையது.

அப்படியான வேட்டைக்கார நாடோடிகள் தான் நம் முன்னோர் என்றால் நீ நம்புவாயா நம்பூதிரி என்றாள் அவள்.

நாடோடியாகி வந்து தானே கடவுளெனக் கதைவிடும் நம்பூதிரி சிரித்தான்...

அடுத்த பிரதேசத்திற்குப் போனவுடன், குடிசை கட்டுவதற்கு இவர்களுக்குத் தேவையானது புற்கள், மற்றும் கற்கள்தான். கற்களை அடுக்கி அதன்மேல் புற்களைப் போட்டு வேய்ந்து குடிசைகளைக் கட்டிக்கொள்கிறார்கள். இந்தக் குடிசையில் ஒரு பக்கம் பொருட்களை வைத்துக் கொள்வதற்கென்றும், மற்றப் பக்கம் சமைத்துக்கொள்வதற்குமாக ஒதுக்கிக் கொள்ளுகிறார்கள். மண்ணைக்கொண்டு பாத்திரங்கள் செய்யவும், மண்டை ஓடுகளைப் பாத்திரங்களாக உபயோ கப்படுத்தவும், பழகிக் கொண்ட காலம். மாமிசத்தைப் பச்சையாகத் தான் தின்றோம். பின்தான் நாம் நெருப்பைக் கல்லோடு கல்லுரசிக் கண்டு பிடித்ததும் தீப்பெட்டிகண்டு பிடித்ததெல்லாம் என்றாள் கிளாரா.

மாமிசமும், கருவாடும் பச்சையாகத் தின்ற ஆதி மனிதன் தான் பின் நதிக்கரைகளில் விவசாயம் செய்யப்பழகி னார்கள். நிலையான தங்குமிடத்தை அங்கே கட்டினார்கள். தேன் குடித்து மகிழ்ந்தார்கள். நம்பூதிரிகளான நீங்களும் சோம பானம், சுரா பானம் குடித்து மாடாட்டை அன்றைய நாட்களில் வேள்வித்தீயினுள் போட்டுத் தின்றவர்கள் தான். உங்கள் புராணங்கள் அதைச் சொல்கின்றனவே என்றாள் கிளாரா. அவள் படித்த மானிடவியலை அவனுக்குச் சொன்னாள். அவன் மலங்க மலங்க விழித்தான்..

சமூக வாழ்வைத் தலை கீழாகப் புரட்டிப் போட்டு பெண்களை அடிமையாக்கி வைத்திருக்கிற வக்கிர புத்திகொண்ட நம்பூதிரிக்குக் கோபம் கோபமாக வந்தது. ஆனால் வெளியே காட்ட முடியாது. வெள்ளை யோனியுள் வீழ்ந்து கிடந்தான் அவன்.

வெளியே பூட்ஸ் காலடி பெருஞ்சத்தமாகக் கேட்டது. ஸ்டீபன் உள்ளே வந்தான். நம்பூதிரி பயந்தவனாகத் துள்ளிக் குதித்து எழுந்தான். கிளாரா எந்தத் தடுமாற்ற முமில்லாமல் நம்பூதிரி கையைப் பிடித்திழுத்துத் தன்னருகில் இருத்தினாள். வைன் கிளாஷ்களும் இவர்களிருந்த நிலையும் ஸ்டீபனுக்கு எரிச்சலைத் தந்தது.

என்ன நடக்கிறது இங்கே என்றான் கடுங்குரலில்.

எதைக் கேட்கிறாய் நீ? எது நடக்கிறது இங்கே? என்றாள் கிளாரா எந்தப் பதட்டமுமில்லாமல்.

நீதான் நேரமெதுவுமற்று என்னைத் தனியே தள்ளி விட்டு எங்கெங்கோ அலைகிறாயே என்றாள் எரிச்சலோடு அவள். ஸ்டீபன் பதிலேதும் சொல்லாமல் நம்பூதிரியை வியப்போடு பார்த்து, நீயும் குடிப்பாயா? என்றான்.

நம்பூதிரி எதுவும் பேசவில்லை. அவன் குடிப்பதில் என்ன பிரச்சினை உனக்கென்றாள் அவள்.

இன்னொரு கிளாஸில் ஸ்டீபன் விரும்புகிற விஸ்கியை ஊற்றி ஸ்டீபன் பக்கம் தள்ளினாள்.

கோபத்தோடு அதை ஒரே மடக்கில் உறுஞ்சி விட்டு வெளி யேறினான் அவன். நம்பூதிரிக்கு என்னமோ போலிருந்தது. தன் மனைவியோடு ஆணொருவன் நெருக்கமாயிருந்தும் கண்டுகொள்ளாமல் போறானே அவன்... அநியாயமாகக் கோவிந்தனைக் கொழுத்தி விட்டோமோ? வெள்ளையன் வெள்ளையன் தான்... மனதிற்குள் மகிழ்ந்தான் நம்பூதிரி...

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com



# பஞ்சவர்ணம் தேடும் பச்சைக்கிளிகள்

சியாமளா யோகேஸ்வரன்

‘நளினி... நளினி’ குழந்தை நயனியின் குரலுக்கு மேலாகக் கணவன் கதிர் ஏலம் போடுவது போல் கூப்பிடுவது கேட்டும் உறங்குவது போல் நளினி நடித்துக் கொண்டிருந்தாள். கீழிருந்து கூப்பிட்ட குரல் அண்மித்துக் கொண்டே வந்து பக்கத்தில் ஒலித்ததும் அதற்கு மேல் உறங்குவது போல் நடிக்க முடியாமல் கண்களைத் திறந்து சண்டைக்குத் தயாரானாள்.

‘என்ன வேணும்? எதுக்கு இப்ப கத்திக் கொண்டிருக்கிறியள்.’

‘இவள் நயனி, நனைச்சுப் போட்டாள் போல இருக்கு, ஒருக்கா மாத்தித் தாறீங்களே?’ என்றபடி மூன்று மாதங்களே ஆயிருந்த மகளை மனைவியிடம் நீட்டினான்.

‘எல்லாம் தெரிஞ்ச எஞ்சினியருக்கு உது கூட மாற்றத் தெரியாதே? எல்லாத்துக்கும் நான் வேணும்.’ முணுமுணுத்தபடி குழந்தையை நளினி வாங்கிக் கொண்டாள்.

மதியச் சாப்பாட்டைத் தயார் செய்தபடி குழந்தையும் இவ்வளவு நேரமும் கவனித்துக் கொண்டதில் களைத்துப் போயிருந்த கதிருக்குச் சூடாக ஏதாவது பதில் சொல்ல வேண்டும் போலிருந்தது. முதல் நாள் இரவு குழந்தை விழித்து அழுதாளா என்று கூடத் தெரியாத அளவுக்குக் கதிர் அசந்து உறங்கி விட்டிருந்தான். வழமையாக நயனி கண் விழித்து அழும் போது இவனும் விழித்துக் கொண்டு விடுவான். பால் குடித்து டயப்பரை மாற்றிய பின்னர் அதிக தொல்லை தராமல் நயனி மீண்டும் உறங்கும் வரையில் கதிர் மனைவிக்கு உதவியாக இருப்பான். நேற்று விழித்துக் கொள்ளவில்லையே என்ற குற்ற உணர்வில் மனைவியைத் தூங்கி விட்டு வருமாறு

அனுப்பியிருந்தான். இப்போதும் பொரிப்பதற்காக மீனுக்குப் பிரட்டியிருந்த உறைப்புக்கையால் குழந்தையின் டயப்பரை மாற்ற வேண்டாமே என்பதற்காகத் தான் மனைவியை அழைத்ததே.

மூன்று மணி நேரமாவது தூங்கியிருப்பாள் என்று பார்த்தால், அவள் தூங்காமல் பொருமிக்கொண்டிருந்திருக்கின்றாள் என்பது புரிந்து போனது.

'நளினி, நீங்கள் ஒத்துக் கொண்டாலும் ஒத்துக் கொள்ளாமல் விட்டாலும் நான் எஞ்சினியர் தான். அநாவசியச் செலவுகள் வேண்டாம் என்றால் நீங்கள் கேட்க மாட்டேன் என்கிறீர்களே ?' குரலில் தாங்கலுடன் சொன்னான் கதிர்.

'உங்களோட தானே கடம்பனும் வேலை செய்யிறார், கிட்டத்தட்ட உங்கட சம்பளம் தானே அவருக்கும் இருக்கும். இப்பத்தான் பிள்ளை பிறந்திருக்குது. ஒவ்வொரு மாதமும் பிள்ளையை விதவிதமா சூட் பண்ணி வைக்கிறினமாம். முதலாவது பிறந்த நாள் விழாவிலை வீடியோ போடேக்கை எவ்வளவு வடிவா இருக்கும் தெரியுமே ? தொட்டிலிலை போடுறதை எவ்வளவு பெரிசா செய்திச்சினம் ? ஊரையே கூட்டி, சாப்பாட்டை வெளியிலை ஓடர் பண்ணி, வந்த எல்லாருக்கும் பிள்ளையிண்ட படத்தோட ஒரு மேசைக் கலண்டர் குடுத்து... அப்பா நினைச்சுப் பார்க்க கனவு போல இருக்குது.' நளினி கண்கள் விரியச் சொல்லிக் கொண்டே போனாள்.

'ஆனா அந்தக் கலண்டரை நீங்கள் பாவிக்கிறீங்களே ? மூலையிலை போட்டுக் கிடக்குது. பாதிப்பேர் குப்பைக்குள்ள போட்டிருப்பாங்கள். எனக்கு அந்தப் படத்தைப் பார்க்கிற நேரமெல்லாம் கவலையா இருக்குது. இப்பிடி எங்கட பிள்ளையிண்ட படமும் கண்ட இடத்திலையும் இருக்க வேணுமென்று ஆசைப்படுறீரே ?'

'கதைக்குக் கதை சொல்லாதையுங்கோ, பிள்ளைக்குச் செலவழிக்காமல் காசைச் சேர்த்து வைச்சு என்னத்தைச் செய்யப் போறீங்கள் ?'

'தேவையோட செலவழிச்சா பரவாயில்லை, இப்பிடி மாதமொரு அநாவசியச் செலவு செய்தால் கடைசிலை தேவைக்குக் கையிலை காசு மிஞ்சாது.'

'எதிர்காலம், எதிர்காலம் என்று சொல்லி நிகழ்காலத்திலை வாழ்க்கையை அனுபவிக்க விடாமல் செய்யுறீங்கள். எத்தினை கனவோடை இருந்தனான் தெரியுமே ? உங்களைக் கல்யாணம் செய்து அத்தனையும் மண்ணோட போச்சு.'

மனைவியின் வார்த்தைகள் முள்ளாய் நெஞ்சில் குத்தின. பேசிப் பிரச்சனையைப் பெரிதாக்க விரும்பவில்லை. இருவருமே நடுத்தர வகுப்புக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். காசின் அருமை தெரிந்தவர்கள்தான். இளமையில் தம் தேவைகளைச் சுருக்கிக்கொண்டு வளமான எதிர்காலத்தை நோக்கிப் பயணித்தவர்கள்தான். கதிருக்கு கணினித்துறையில் வருமானம் அதிகம் என்பதால் தன் நிறைவேறாத கனவுகளை நனவாக்கிக் கொள்ள விரும்புகின்றாளா அல்லது அவளுடன் பழகுபவர்கள் செய்பவற்றை எல்லாம் தானும் செய்து காண்பிக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றாளா ?

கல்யாணம் பேசி முற்றான பின்னர் தொலைபேசியில் பேசிக் கொள்வது வழமையாக இருந்தது. கல்யாணத்துக்கு முன்னதான படப்பிடிப்பு என்பது தனது நீண்ட நாள் ஆசை என்று நளினி ஒரு வெட்கத்துடனும் தயக்கத்துடனும் சொன்ன போது, அரும்பி நின்ற காதலும், மனைவியாகப் வர இருப்பவளின் கனவை நனவாக்குவது தனது கடமை என்ற எண்ணமும் துணை நிற்க ஒரு தொகைப் பணத்தைச் செலவழித்து விதவிதமாகப் படங்களை எடுத்து அல்பமொன்றையும் தயாரித்திருந்தான். அதை ஒரு தடவைக்கு மேல் பார்த்ததாக ஞாபகமில்லை. அதே போல் வாழ்க்கையில் ஒரே தரம் நடக்கும் கல்யாணமும் பெரிதாக நடக்க வேண்டும் என்று சொன்னாள். நளினியின் தந்தையிடம் பெரிதாகச் சேமிப்பு இல்லை என்றவுடன் கதிர்தான் கல்யாணத்துக்கான செலவைப் பொறுப்பெடுத்திருந்தான். கல்யாணம் முடிந்த பின்னரான படப்பிடிப்பும் அப்படித்தான். சேமிப்பு பெருமளவில் கரைந்து போனபோது, கதிருக்கு வருத்தமாக இருந்தாலும் புது மனைவியின் கனவை நிறைவேற்றுவது தன் கடமை என்ற உணர்வில் மௌனமாக இருந்து விட்டான்.

அத்துடன் அவளது கனவுகள் ஓய்ந்து விடவில்லை. ஐரோப்பிய நாடொன்றுக்கு தேன் நிலவு போக வேண்டும் என்பதும் தன் கனவுகளில் ஒன்றொன்று சொல்ல கதிர் பிரான்சுக்குக் கூட்டிப் போனான். தங்குமிடம், சாப்பாடு, விதவிதமான உடுப்புகள்  என்று செலவுகள் எகிற, நளினியோ படமெடுத்து இன்ஸ்ராவிலும் முகநூலிலும் பதிவேற்றுவதிலும் அதற்கான விருப்புகளைப் பார்த்து மகிழ்வதிலுமே ஆர்வமாக இருந்தாள். கதிருடன் ஒட்டிக் கொண்டு விதவிதமாகப் படமெடுப்பதால் அந்தத் தேன்நிலவில் எந்த அந்நியோன்னியமும் வந்துவிடவில்லை. பணம் தண்ணீராகக் கரைவதில் கதிர் புன்னகையைத் தொலைக்க அதையும் ஒரு பிரச்சினையாக்கினாள்.

தேன்நிலவு முடிந்த கையோடு நளினி கர்ப்பமாகியிருந்தது எல்லோருக்குமே மகிழ்ச்சியைக் கொடுத்தது. வீட்டுக்கு ஒரு வாரிசு அதுவும் தன்னை அப்பா என்று சொல்ல ஒரு உறவு வரப்போகின்றது என்ற சந்தோசத்தால் கதிர் பூரித்துப் போனான். நளினியை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினான். பெரியவர்கள் இல்லாத இடத்தில் தானே அன்னையாகி சமையல் முதல் வீட்டு வேலைகள் யாவற்றையும் பார்த்துக் கொள்ள நளினிக்கு எல்லாமே தன்னால் தான் என்றொரு எண்ணம் ஏற்பட்டு விட்டிருந்தது.

வயிறு பூரண நிலாவாக வளரும் விதத்தை ஒவ்வொரு மாதமும் படமெடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட போது, நியாயமான ஆசைதானே என்று கதிர் நினைத்தான். ஆனால் நளினி வயிற்றைக் காட்டும் விதமாகச் சற்று இறுக்கமான ஆடைகளை வாங்கி, புகைப்படமெடுப்பவரைப் பிடித்துப் படமெடுக்க வேண்டும், கூடவே குழந்தையின் ஸ்கான் படங்களையும் பதிவேற்ற வேண்டும் என்ற போது, முதன்முறையாகக் கதிர் மனைவியின் பேச்சை மறுத்தான்.

‘இப்பிடி ஊருக்குப் படம் பிடித்துக் காட்டவேண்டாமே? நாங்களே எடுத்து எங்களுக்கு ஒரு ஞாபகமாக வைத்துக் கொள்ளலாம். உன்னையும் குழந்தையையும் இப்படி எல்லாருக்கும் காட்டிக்கொள்ள வேண்டுமா?’

‘பழம் பஞ்சாங்கம் போலக் கதைக்காதேங்கோ. நீங்கள் காசுக்கு தரும் மரியாதையை உறவுக்குத் தரப்போவதில்லை என்று நன்றாகத் தெரிந்து விட்டது. எவ்வளவு ஆசைகளோட இருந்த என்னை இப்பிடிக் கொண்டு வந்து தள்ளிட்டார் எங்கட அப்பா’ என்று புலம்பிய நளினி இரண்டு நாட்களாகப் பேசவில்லையே தவிர தன் எண்ணத்தைச் செயலாற்றாமல் விடவில்லை. வயிற்றுப்பிள்ளைக்காரி மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், அவளை வேதனைப்படுத்தக்கூடாது என்ற நினைப்பில் கதிர் எதுவும் சொல்லவில்லை.

படங்களைப் பார்த்து விட்டுக் கதிரின் அக்கா, அழைப்பெடுத்து பொது வெளியில் அனுப்பக்கூடிய படங்களா அவை என்று கேட்டபோது பதில் சொல்ல முடியவில்லை.

நான்காம் மாதம் பெண்குழந்தை வயிற்றில் இருப்பதாக வைத்தியர் சொன்ன கணமே கதிருக்குப் பொறுப்புணர்ச்சி வந்து விட்டிருந்தது. பிரசவத்தின் போது ஏற்படக்கூடிய செலவுகளுக்கும் எதிர்பாராத விதமாய் இடையில் ஏற்படக்கூடிய செலவுகளுக்கும் என்று கதிர் பணத்தைச் சேர்க்க முயன்றால், நளினி ஏதோவொரு விதத்தில் பணத்தை விரயம் செய்து கொண்டிருந்தாள்.

வளைகாப்பு என்ற ஒரு நிகழ்வை இலங்கையில் யாரும் கொண்டாடியததாக கதிருக்கு ஞாபகமே இல்லை. ஆனால் நளினியோ ‘பேபி ஷவர்’ என்ற பெயரில் பூக்களால் அலங்கரித்துப் பூக்கள் கொட்டிய மஞ்சத்தில் விதவிதமாக நிகழ்வைப் பதிவு செய்ய வேண்டும், தெரிந்த அத்தனை பேரையும் கூப்பிட்டு ஆட்டு பிரியாணி கொடுத்து வாழ்த்த வைக்க வேண்டும் என்று திட்டமிட்ட போது கதிர் சுத்தமாகக் குழம்பிப் போனான்.

‘நளினி, இந்த விழாவின் நோக்கம் இதில்லை, நீர் நினைக்கிறது மாதிரி கொண்டாட வேணும் என்றால் என்னட்டை ஒரு காசும் மிஞ்சாது.’

‘உங்களோட வேலை செய்யிறவர் வீட்டிலை எவ்வளவு பெரிசா இந்த பங்சன் நடந்தது? உங்களுக்கு திறமையில்லை போல, அதுதான் சம்பளம் குறைவோ தெரியாது.’ திருமணம் முடித்த ஒரு வருடத்துள் மனைவியின் வாயால் தன்னை மட்டம் தட்டிய இப்படியான ஒரு பேச்சைக் கேட்க வேண்டி வரும் என்று கதிர் கனவில் கூட நினைத்திருக்க மாட்டான்.

நொந்த மனதோடு அவள் ஆசைப்பட்டது போலவே விழாவை நடத்தினான். வந்தவர்கள் சரியாகச் சாப்பிடாமல் பாதிச்சாப்பாட்டைக் குப்பையில் கொட்டியபோது தன் மேலேயே நெருப்புக் கொட்டப்பட்டது போல தவித்துப் போனான். பெறுமாதத்துக்கு மூன்று கிழமைக்கு முன்னதாகவே அவசர சிகிச்சையின் மூலம் மகப்பேறு நடந்த போது செலவுகளும் எதிர்பாராத விதமாக எகிறி விட்டிருந்தன. கையில் பணமில்லாமல் நண்பர்களிடமும் கேட்க முடியாமல் தவித்த போது காலமறிந்து தமக்கையார் உதவிக்கு வந்தார்.

நயனி பிறந்ததும் நளினி இன்னமும் பிடிவாதக்காரியாகி விட்டிருந்தாள். பிரசவத்தின் போது எவ்வளவு பணம் செலவாயிற்று, கதிர் பணத்துக்கு என்ன செய்தான் என்ற கேள்வியே அவளுக்குள் எழவில்லை. குழந்தை பிறந்ததும் செலவுகளும் அதிகரித்து விட்டிருந்தன. நயனியோ, நளினியோ அடிக்கடி உடல் நலக்குறைவடையும் போது கதிருக்கும் லீவு எடுக்க வேண்டியிருந்ததில் அவனுடைய லீவுகள் முழுவதும் முடிந்து விட்டிருந்தன.

சென்ற மாதம் கடம்பனின் மகனின் தொட்டிலிடல் நிகழ்வுக்குச் சென்று வந்த பின்னர் நயனியும் அதே போன்று செய்ய வேண்டும் என்று கேட்க ஆரம்பித்து விட்டாள். கதிர் உறுதியாக ஒற்றை வார்த்தையில் ‘அவசியமில்லை’ என்று சொன்னது முதல் இப்படித்தான் முகத்தை நீட்டிக் கொண்டிருப்பதும், குத்தலாகப் பதில் சொல்வதாகவும் இருக்கின்றாள்.

குழந்தை பிறந்த பிறகு கொஞ்சம் பூசி விட்டது போன்று பருமனாகி விட்டதாகவும், முகத்தில் ஒரு முதிர்ச்சி வந்து விட்டதாகவும் அவளுடைய முகநூலில் யாரோ கருத்துப் பதிவிட்டு விட்டார்கள் என்பதற்காக, முகத்தைச் சீர் செய்வதற்காகவே வாரத்தில் இரண்டு தடவைகள் முக ஒப்பனை நிலையத்துக்குச் செல்கின்றாள். தாய்மை தந்த அழகு என்று கதிர் ரசித்தது ஒப்பனைப் பொருட்களின் பின்னால் மறைந்து கொண்டு விட்டிருக்கின்றது.

இனிமேல் கடன் வாங்கினால் தன்னால் அதை அடைக்க முடியுமா என்பதே பெருஞ்சந்தேகமாக இருந்த நிலையில் இன்னொரு விழாச்செய்வதற்குக் கதிர் தயாராக இல்லை. நயனியுடன் வீட்டைத் தயார் செய்து அத்தனை பேரையும் கவனித்து அனுப்புவதற்கு நளினியால் முடியாது என்பதுடன் குழந்தையையும் கவனிக்க முடியாது என்பது நிதர்சனம். அதை விட, விருந்துக்கான ஆயத்தங்களைச் செய்யும் போது, களைத்து விடுவதால் தம்பதிகளிடையே தேவையற்ற வாக்குவாதங்களும் வார்த்தைப் பிரயோகங்களும் வந்து விடுகின்றது. அதனால் தம்பதிகளிடையே பூசல் வந்து பேச்சுவார்த்தையின்றிப் போவதும் நிச்சயமாய் நிகழப் போகும் சம்பவங்கள். அதனாலேயே இன்னொரு கொண்டாட்டத்தைக் கதிர் விரும்பவில்லை. ஆனால் நளினியோ நாளை ஒரு காலத்தில் பணம் வந்து விடும், நன்றாக வாழ்ந்து விடலாம். ஆனால் அனுபவிக்காமல் இழந்து விட்ட கணங்களை மீளப் பெற முடியாது என்கிறாள்.

அதில் உண்மை இருந்தாலும், வாழ்க்கையில் பொருளாதாரமும் மிக முக்கியம் என்பதை எங்ஙனம் மறந்து விட்டாள்? வீட்டில் நிகழும் விசேடத்தால் உறவுகள் பலப்படும் என்றால் இங்கு உறவில் விரிசல் விழுந்து கொண்டு போகின்றமை இவனுக்கு மட்டும் வலிக்கின்றதே?

நளினி தான் நினைத்ததைச் சாதிக்க வேண்டும் என்பதற்காக அடுத்து வந்த நாட்களில் கதிருடன் பேச மறுத்தாள். சரியாகச் சாப்பிடவுமில்லை நயனியைக்

கதிரிடமே கொடுத்து விட்டுப் படுக்கையிலேயே கிடந்தாள். கதிர் ஒரு கட்டத்தில் கடன் வாங்கியாவது நயனியின் தொட்டிலிடும் விழாவைச் செய்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்குத் தள்ளப்பட்டான்.

அவள் பெயரில் இருந்த கடன் அட்டையைப் பாவித்துத் தனக்குத் தேவையானவற்றை எல்லாம் நிகழ் நிலையில் வாங்கினாள். வீட்டுக்குத் தினமும் ஏதாவது ஒரு பொதி வந்து கொண்டேயிருந்தது. கதிருக்கு வாழ்க்கையைப் பற்றிய அச்சம் அதிகமாகி விட்டதில் அவனும் பேச்சைக் குறைத்து விட்டிருந்தான். எதையோ பறிகொடுத்தவன் போலிருந்த அவனுக்கு நயனி மட்டுமே ஒரு விடியலாய் இருந்தாள்.

விழாவன்று வெளியில் தொட்டில் போடப்பட்டு, சுற்றிவரப் பூக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சின்னச்சின்ன ஒளிர்ந்தணையும் மின்விளக்குகளால் பின் தோட்டம் அலங்கரிக்கப்பட்டதில் நந்தவனமாய் தோற்றமளித்தது. மாலை ஆறு மணிக்கே விருந்தினர்கள் வருகை தரத் தொடங்கிவிட்டிருந்தனர். நளினி ரோஸ் நிறத்திலான சேலையில், பொருத்தமான அணிகலன்களுடன் தேவதை போன்று ஜொலிக்க, நயனியும் அதே கலரில் சின்னப் பட்டுப்பாவாடை அணிந்து பார்ப்பவர் கண்களைக் கவர்ந்தாள்.

ஒரு அரை மணி நேரம் வரையில் படத்துக்குப் புன்னகை செய்து கொண்டிருந்த நயனி, வேறு உடை மாற்ற என்று கொண்டு சென்ற போது அழத் தொடங்கிவிட்டாள். அதன் பிறகு அவளது அழுகை நிற்காமல் தொடர்ந்து கொண்டேயிருக்க நளினியும் சினக்கத் தொடங்கிவிட்டாள். நயனியைக் கதிர் தொட்டிலில் போட முயன்ற போது அவள் அழுது கொண்டே தந்தையின் சட்டையைத் தன் பிஞ்சு விரல்களால் இறுக்கமாகப் பிடித்துக் கொள்ள கதிருக்குக் கண் கலங்கிவிட்டது.

'பிள்ளையைப் போடுங்கோ, வீடியோவும் படமும் எடுபடுது.' நளினி மெதுவாக அழுத்தமாகச் சொன்னாள். கதிருக்கும் எதுவும் செய்ய முடியவில்லை. அழும் நயனியை வேதனையுடன் பார்த்தான். குளிருக்குள் வேறு இருக்கின்றாளே என்று கதிர் தவிக்க, வந்தவர்கள் தொட்டிலைச் சுற்றி நின்றபடி குடும்பம் குடும்பமாகப் படம் எடுக்கத் தொடங்கினார்கள்.

நளினி சாப்பாட்டைப் பார்க்கும் படி கண்ணால் காட்ட, கதிர் பரிமாறும் உணவைத் தயார் செய்வதற்காகச் சென்றான். சுமார் இருபது நிமிடங்கள் கழித்து வந்த போது நயனி அப்போதும் அழுது கொண்டிருந்தாள்.

'நளினி போதும், நயனியை உள்ளுக்குக் கொண்டு போய் பாலைக் குடும்.' பதட்டத்தில் கதிர் சத்தமாகச் சொல்லி விட்டான். நளினியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

'எல்லோரையும் இன்னமும் படம் எடுத்து முடிக்கவில்லை.' நளினியும் உரத்தே சொன்னாள்.

எல்லோரும் விதம் விதமாக படமெடுப்பதில் ஆர்வம் காட்டினார்களே தவிர, யாருக்கும் குழந்தை அழுவது தெரியவில்லை என்றவுடன், தானே நயனியைத் தூக்கிக் கொண்டு அறைக்குச் சென்றான்.

தந்தையின் நெஞ்சுச்சூட்டுக்குள் ஒன்றிக் கொண்ட நயனிக்கு அழுகையின் உச்சத்தில் விக்கலும் விம்மலும் குறைவதாயில்லை. நளினி பின்னால் வருவாள் என்று பார்த்தால் காணவில்லை. பாலைக் கொடுத்து உறங்க வைக்கச் சொல்லக் கூப்பிட முயன்ற போது, நளினி இவனைப் பார்க்காதது போல் அலட்சியம் செய்தாள்.

பால்மாவைக் கரைத்து ஊட்டியதும், கொஞ்சமாய் குடித்து விட்டுத் தந்தையின் கைகளில் சுருண்டு கொண்டாள். கிடத்தலாம் என்று முயன்ற போதெல்லாம் விழித்துக் கொண்டு சிணுங்கவே, கையில் அவளைத் தாங்கியவாறே வந்தவர்களைக் கவனித்தான்.

இரவு பதினொரு மணியளவில் எல்லோரும் கிளம்பியதும் எதையும் சுத்தம் செய்ய மனம் வரவில்லை. நயனியை அணைத்துக் கொண்டு படுக்கைக்கு வந்தான்.

'பிள்ளையிலை தனக்குத் தான் பாசம் என்றது போல என்னவொரு நாடகம்.' நளினி சொல்ல அவளது பேச்சை அலட்சியம் செய்தபடி குழந்தையை நீட்டி... 'பாலைக் குடும்' என்றான்.

'என் வேலை எனக்குத் தெரியும்' என்று சொன்னாலும், நயனி அழவே, நளினி பாலைக் கொடுத்தாள். பால் குடிக்கும் குழந்தையின் வாய் முலையில் சுடுவதை உணர்ந்ததால் நளினி மேற்கொண்டு எதுவும் பேசவில்லை.

அடுத்த நாள் நயனிக்கு நல்ல காய்ச்சல் கண்டுவிட்டிருந்தது. மாலை வரை எதற்கும் அடங்காமல் தூக்கிப் போட்டு காயவே, அவசரசிகிச்சைக்குக் கொண்டு சென்றார்கள். ஒட்சிசன் குழாய் பொருத்தப்பட்டு அசைவற்றுக் கிடந்த குழந்தையைக் கண்டு பெற்றோர் இருவரும் கலங்கினார்கள். குற்ற உணர்ச்சியாலோ என்னமோ நயனியை விட்டு நளினி அசையவேயில்லை. தலை கலைந்து உதட்டுச்சாயமின்றி ஒப்பனைகள் இன்றிக் கண்ணில் நீருடன் குழந்தையின் அருகில் இரண்டு நாட்களாக அமர்ந்திருந்த நளினியை கதிர் நோக்கினான். அவளுள் இருந்த பெண்மையும் தாய்மையும் விழித்துக் கொண்டதை உணர்ந்த அவனுக்குள் வாழ்க்கை பற்றிய நம்பிக்கை கீற்றாய் உதயமானது.

அனுபவம் தானே வாழ்க்கையில் சிறந்த ஆசான்.



Shiyamala@thaiveedu.com

# உண்ணா நோன்பு

அ. கந்தசாமி



அன்று ஒரு பொது விடுமுறைநாள். அது கடிகாரம் அலறாத நாள். கடிகாரம் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. அது முன்னூற்று அறுபத்தைந்து நாட்களும் மூச்சுவிடாமல் ஓடித்துலையச் சபிக்கப்பட்ட யந்திரம். அதன் மூன்று முட்களின் நிலைகளை ஓய்வு தினங்களில் எந்தவொரு ஜீவனும் பறவாய்ப் படுத்து வதில்லை.

அரைகுறையாக விழித்துக் கொண்ட சிந்தனைகள் எங் கெங்கோ உலாவத் தொடங்கின.

ஓர் அதிகாலையில் அடர்ந்த கானகமொன்றுக்குள் சிட்டாய்ச் சிறகடித்து நுழைந்தது சிந்தனை.

குறட்டை ஒலியே அன்று கானகத்தின் தேசிய கீதமாக ஒலித்தது.

மாடுகள், மான்கள், முயல்கள், சருகுமான்கள் போன்ற பல அழகான விலங்குகளால் நிறைந்ததே அக்கானகம். வழக்கம் போல் எல்லா வனங்களிலும் தாவர உண்ணிகளுக்கும் மாமிச உண்ணிகளுக்கும் நடக்கும் வாழ்வாதாரப் போராட்டத்துக்கு இக் கானகமும் விதிவிலக்கல்ல.

சிங்கராசா ஒரு வடிகட்டிய சோம்பேறி. அவரைப் பழு தாக்கிய பாவம் அன்னாரின் இணையையே சாரும். சூரியன் உச்சியில் நின்று எரிக்கும்போதும் அவர் எழும்பமாட்டார். இது பிலாக்கொட்டைக் குருவி களுக்கு நல்லாய்த் தெரியும். அதுகள் அவரது தலையில் ஆசறுதியா குந்தியிருந்து பேன் பார்ப்பதுபோல் உண்ணி களைக் கொத்தி நொறுக்குத் தீனியாக்கும். சாமரம் வீசப்படும் சுகத் துடன் குறட்டை ஒலியின் தாலாட்டில் ராசா அறுதுயில் கொள்வார்.

உயிர் உள்ள ஜந்துக்கள் யாவற்றுக்கும் பொதுவான பசி எனும் சர்வலோகப் பிணி மட்டும் இல்லாதிருந்தால் அந்தக் கான கமே மயிரிழைக் கனதியில் பூலோக சுவர்க்கமாகியிருக்கும்.

தூக்கத்தில் இருந்த சிங்கராசா அதிகாலைக் கனவோடு கண் விழித்தார். கனவில் கடவுளோடு பேசியிருப்பார் போல.

இன்று கானகம்வாழ் உயிரினங்களுள் மாமிச உண்ணிகள் அனைத்தும் உண்ணாவிரதம் இருக்கவேண்டும் என்றோர் ஆணையைப் பிறப்பித்துவிட்டு, சிறுநீர் கழித்துத் திரும்பிய சிங்கராசா துணையோடு உரசியபடி தூக்கத்தை விட்ட இடத் திலிருந்து தொடர்ந்தார்.

இக்கணத்தில் இருந்து பூனைகளும் புலிகளும் பாம்புகளும், எலிகளையும் பறவைகளின் முட்டைகளையும் அகப்பட்டால் தப்பிச்செல்ல வலுவற்ற சிறு குஞ்சுகளையும் தமக்கு ஆகார மாக்க முயலமாட்டா. வல்லூறின் நிழல் நிலத்தை நிறைத் தாலும் கோழிப் பேடோ குஞ்சுகளோ இனிப் பதறி ஓடாது. விலத்தி நின்று விடுப்புப் பார்க்கும்.

உண்ண விரட்டினால்த்தானே உயிர்ப்பயம் வரும்.

ஆழ்ந்த உறக்கத்தில் சிங்கராசாவிடம் இருந்து வெளிப்பட்ட குறட்டை ஒலியின் இடைவெளிகளில் மற்ற மாமிசபட்சணி களின் கீச்சொலிகள் இட்டு நிரப்பின. தாவர உண்ணிகளை ராஜா கருத்தில் எடுக்காததால் யானைகளும் ஒட்டகச்சிவிங் கிகளும் வழக்கம்போல மரக்கிளைகளை முறித்தும், வளைத்தும் துவம்சம் செய்து வயிறார உண்டன.

அக்கானகத்தில் நரிகளும் கழுதைப்புலிகளும் கூட இருந்தன. நரிகளுக்கு இந்த கழுதைப்புலிகளைக் கனவிலும் காட்டக் கூடாது. இவ்விரு விலங்குக் கூட்டமும் அருகருகாக வராது.

தொலைவிலிருந்து பார்க்கும் அண்மைக்குறைபாடுடைய கண்களுக்கு நரிகளும் கழுதைப்புலிகளும், நாய்களும் வெவ்வேறு அல்ல. எல்லாமே ஓரினம்தான். கழுதைப்புலிகள் சனியன்கள் உருப்படாததுகள் என்று எந்த நரியையும் நித்தி ரையில் சுரண்டி கேட்டாலும் சொல்லும்.

நாய்க்கு நன்றியையும், நரிக்குத் தந்திரத்தையும் கொடுத்த இயற்கை இதுகளுக்கு சினி நாற்றத்தை மட்டுமே வாரிவழங்கி யிருந்தது. வேறு எந்த விலங்குகளும் கழுதைப்புலிகளை கிட்ட அண்டுவதில்லை.

இரையை அடித்துத் தின்றுவிட்டு இனித் தின்னக் குடலுக்குள் இடமில்லை என மற்ற மிருகங்கள் ஒதுக்கிய மிச்சம் மீதியை இச்சத்தோடு நாக்கில் எச்சில் வழிய சுவைக்கும் கழுதைப்பு லிகளை இயற்கைப் படைப்பில் கடையர்கள் என்பதை நாலு கால் ஊர்வனவற்றுள் அறியாதார் எவரும் இல்லை.

நரிகளின் பேசுமொழி பிரதேசவழக்கில் இடத்திற்கு இடம் மாறுபட்டாலும் ஒன்றின் ஊளையை மற்ற நரி சிரமப்படாமல் புரிந்துகொள்ளும். யாழ்ப்பாணத்தாரின் நாட்டு வழக்கை மட் டக்களப்பார் விளங்கிக்கொள்ள எந்த அகராதியிலாவது இடம் ஒதுக்கியுள்ளார்களா?

சிந்தனை வேறு எங்கோ சிதறியது. எவடம்... எவடம்... வேம்படியோ, வேலமரத்தடியோ, புளியடியோ, புங்கமரத்தடியோ... வென குறுச்சிகளை வினாவி சாதிகளை அறியும் மானுடப் புத்திகளை உரசிய சிந்தனை மீண்டும் கானகத்துள் நுழைந்தது.

நரிகள் ஊளை மூலமாகவே தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும். பசி எடுக்கும்போது, தன் சிநேகிதரைத் தேடும்போது, இணையைக் கூப்பிடும்போது, கூடி உச்சமெய்தும்வேளையென... ஒவ்வொரு ஊளையும் பொருத்தமான அதிர்வெண், அலை நீளம், அலை அகலம் போன்றவற்றால் மாறுபடும்.

கழுதைப்புலிகளின் பேச்சுமொழி பல சமயங்களில் அதுகளுக்கே புரிவதில்லை. அவற்றிடையே தந்திரமும் இல்லை. உணவைத் தேடுவதில் ஒழுங்குகளும் இல்லை.

இன்று சிங்கராசா மேல் மாமிசபட்சணிகள் யாவற்றுக்கும் அடங்கா ஆத்திரம். யாரிடம் சொல்லி அழுவது? சிங்கராசாவின் ஆணையை விலங்குகள் கடைப்பிடிக்கின்றனவா? எனக் கண்காணிக்க சிங்கராசாவின் கோள்மூட்டித் தாத்தா மூப்பனார் அங்கும் இங்கும் அலைந்துகொண்டிருந்தார்.

கொஞ்சக்காலத்துக்கு முந்தி, ஒரு குருவி இருந்தது. நிறம் கருப்புத்தான். கைக்கு அடக்கமான சின்னக் குருவி. அது நடக்கிற திணிசை வைச்சு அதைச் சூத்தாட்டக்குருவி எண்டு கூப்பிடுவினம். பாவம், அதுக்கு விடிஞ்சது பொழுதுபட்டது ஒரு இழவும் பிடிபடாது. இறகு படைத்த யாவற்றிற்கும் அதைப் பார்த்தால் இழக்காரம். இது பூச்சி புழுக்களைக் கூடப் பார்த்தவுடன் அவசரப்பட்டு அள்ளி விளுங்காது. அவற்றின் அனுமதி பெற்று நன்றி சொல்லிச் சாப்பிடுவது போல் தோற்றம் தரும். சோலிசுரட்டுக்குப் போகாத மனிதர்களை ‘பாவம் பச்சைத்தண்ணி’ என்று ஓரங்கட்டுவதில்லையா, அதைப் போல இதுவும்.

இந்தக் குருவிமீது ஒரு குட்டி நரிக்குக் கொஞ்ச நாளாகவே அரைக்கண். குருவியை விறாஞ்சித் தின்ன வேணும் என்ற பிச்சைக்கார ஆசை அதற்கு இஞ்சித்தும் இல்லை. சுள்ளிக் கால்களையும் அதன் இத்தினியூண்டு சொண்டுகளையும், இறக்கைகளையும் விலத்திப் பார்த்தால் எலும்போடு ஒட்டிக் கொண்டு சற்றொப்ப சிறங்கை இறைச்சி தேறலாம். அதனையும் உடனேயே திண்டு துலைக்க வேணும்.

இப்ப கண்ணுக்கு முன்னால குருவி. ஆனா சிங்கராசாவின்ர ஆணை தடுக்கிறதே. என்ன செய்யலாம்?

இது நரிக்கு மட்டும் சிக்கல் இல்லை. மாமிச உண்ணி விலங்குகள் எல்லாமே பசியால் அல்லல்ப்பட்டன.

ஒரு வழி இருக்கிறது. உடனடியாக கருணை மனு ஒன்றை எழுதி சிங்கராசாவுக்குக் கொடுப்போம். பசியை விடக் கொடியது ஒன்றும் இல்லை. அதுவும் கண்ணுக்கு முன்னால் மானும் மரையும் பன்றியும் திமிரோடு திரிவதைப் பார்க்க முடியவில்லை. என்றது சிறுத்தை ஒன்று.

மனுவை எப்படிக் கொடுப்பது? சிங்கராசா உறக்கம் கலையும்வரை காத்திருக்க முடியாது... என்றது புலி.

மூப்பனார்தான் ஒரே வழி... அவரால்த்தான் சிங்கராசாவை எழுப்ப முடியும். மனுவை அவரிடம் கொடுப்போம் என்றது ஓநாய்.

மூப்பனாரும் இன்றோ நாளையோ என்றுதான் இருப்பவர். அவருக்கும் பல தொடுப்புகள். யாரோட, எங்க, எப்ப, எந்த வீட்டில் இருப்பார் என்ற நேரசூசை, எவள் முந்தானைக்குள் முடிந்து வைக்கப்பட்டுள்ளதோ அது அவருக்கே வெளிச்சம்.

சிங்கராசா தனியே படுத்தாலாவது அவர் காலைக்கட்டி அழுது குழறி எழுப்ப முயற்சிக்கலாம். அப்பவும் கழுத்தில் தலை தங்கும் சாத்தியம் அப்பிடி இப்பிடித்தான்.

மூப்பனாரைத் தேடி, அவர் காலைப்பிடிப்பதுதான் இதற்கு ஒரே தேர்வு என்று கருதிய மாமிச உண்ணிகள் மூப்பனாரைத் தேடின.

சிங்கராசாவின் கொடுப்புப் பற்கள் கொட்டிப்போய் பல காலம். சிங்கராசா கிழண்டிப் போயும் ஊசலாடிக் கொண்டு உயிர் வாழமுடிகிறது என்றால் அதற்கு மூப்பனாரே மூலகாரணம். சிங்கராசா மென்று உண்பதற்கு ஏற்ற முற்றாத முயல், உடும்பு, உக்குளான், விளைந்த பன்றிக்குட்டி போன்றவற்றைக் கச்சிதமாக வேட்டையாடி பதப்படுத்தி எடுத்துச்சென்று சிங்கராசாவின் தலைமாட்டில் வைத்துவிட்டு, அருகில் பவ்வியமாக நிற்பார்.

இந்தத் திரிக்கீசு வேலைகளால் சிங்கராசாவுக்குப் பிடித்ததைக் குடுத்து பெரிய காரியங்களை சாதித்துக் கொள்வது மூப்பனாருக்குக் கைவந்த அல்லது கால்வந்த கலை.

சிங்கராசாவுக்குப் பிடித்தவற்றைத் தேடியலையும் மூப்பனார் அதோடு தனக்குப் பிடித்தவற்றையும் சேகரிப்பது பத்தோடு பதினொன்றாய் பழகிப் போயிற்று. ராசாவின் நிழலில் இது ஊர்ந்து திரிவதால் ஏனைய விலங்குகளுக்கு மூப்பனாரிடத்தில் பயம்.

மூப்பனார் காட்டில் மாசம் முப்பத்தொரு நாளும் சோ என்று மழை. இவ்வளவையும் அளந்துபோட்டு மூப்பனாருக்குப் பிடித்தமான ஐற்றங்களைச் சொல்லாமல் மூடிவைப்பது சத்திராதித்தனம்.

மூப்பனாரின்டை பெண் சேட்டைகள் காடறிந்த கதை. வன்புணர்வுச் சட்டங்கள் மட்டும் அந்தக் காட்டிலை இருந்திருந்தால் மூப்பனார் கதை கம்பிகளுக்குள்ளேயே காலாவதியாகியிருக்கும்.

மீண்டும் சிந்தை வேறு எங்கோ சிதறுகிறது.

யாழ்ப்பாணத்தாரிடம் புடம்போட்டுப் பொதிந்த பொதுப்புத்தி ஒன்றுண்டு. உங்களுக்கு ஒரு காரியம் ஆகவேணும் எண்டால் வீட்டின் முன்வாசலிலை போய் முட்டாதேங்கோ. வாஸ்த்துப்படி அது சகுனப் பிழை.

பின்வாசலாலை தட்டுத்தடுமாறி குசினிக்குள்ளை போங்கோ.

மூளை கெட்டதனமா வெறும்கையை விசிறிக்கொண்டு போக வேண்டாம்.

அடுக்களையில் புகையோடு புகையாய் கிடக்கும் அந்தப் பெண் பாவத்தின் இதய ஆழத்தில் அடைய முடியா பல கோடி ஆசைகள் ஒட்டடை பிடிச்சு விக்கிரமாதித்த வேதாளம்

போல உங்கள் வரவிற்கு வளைவு வைத்து அலாதிப்பட்டுக் கொண்டிருக்கும்.

அதில் ஒரு ஆசையை இனங்கண்டு செய்து முடிப்பீர்களா யின் வீட்டுத் தலைவனின் போக்குவரத்து நேரசூசை உங்கள் பார்வைக்குத் தானாகவே வந்துவிடும்.

மேற்கொண்டு எதுவும் சொன்னால் சீத்துவக்கேடு.

ஒரு கோடு கீறினால் புரிந்து கொள்ளும் சிற்றெறும்பின் மூளை யாவது உங்களுக்கு இருந்து துலைய வேணாம்.

சுவையாக சமைக்கும் உணவுகளின் அவிர்பாகம் குசினியில் தொங்கும் உறியின் கீழ் சட்டிகளில் உங்கள் வரவைக் காத்தி ருக்கும். இதில் புறநடைகளும் நிரம்ப இருக்கு.

கோரிக்கை அற்றுக் கிடக்கும் வேரிற் பழுத்த பலாக்களைப் பற்றித்தான் இப்ப பேச்சு.

பாவிகள் சீவிக்கும் இந்த உலகத்தில் எண்பது விழுக்கா டுக்கு மேல் இவர்கள்தான். இவர்கள் விடும் பெருமூச்சில் தான் விமானங்கள்களே மிதக்கின்றன.

முல்லையையும் மல்லிகையையும் தான் முகரவேண்டும் என்ற அழிச்சாட்டியம் உங்களுக்கு ஆகாது. பூமியில் பூநாறிப் பூமரங்களும் உண்டு. உண்மைகளை மூடி மறைப்ப தற்கான உலைமூடிகள் என் கைவசம் இருப்பில் இல்லை. முறத்தால் புலியை புடைத்து விரட்டிய நீண்ட வரலாறு எம் மங்கையர்க்கு உண்டு. அக, புற என்று அடுக்கப்படும் நாநூறுகளை கிண்டிக்கிளறி அகழாய்வு செய்தால் இன்னும் அணையாத அக்கினிக் கங்குகள் ஆங்காங்கே கண் சிமிட் டக் கூடும்.

ஊர்த் துழாவாரங்களில் இருந்து மீண்ட சிந்தனை மீண்டும் கானகத்துள் கட்டுண்டது.

காலையிலேயே இரையின் இரத்தத்தில் வாய் கொப்பளிக் கும் விலங்குகள் பசி கொண்டலைந்தன.

சற்று முன்னர் கண்ணில் பட்ட மூப்பனாரைத் தேடித் திரிந் தன. உச்சித் தலையை சொறிஞ்சு சொடுகு சிந்தினதுதான் மிச்சம். மூப்பனார் எங்கோ ஒதுங்கிக் கொண்டார்.

மூப்பனாரை விட்டால் நெத்தியடியாக சிங்கராசாவை அல் லது அவரது மனையாட்டியை மட்டுமே சந்தித்துக் கருணை மனு கொடுக்க வேண்டும்.

நடக்கிற காரியமா இது ?

ஆனால் மூப்பனார் பசி கொண்டலையும் விலங்குகள் கண் ணில் படாமல் சிங்கராசாவை நோக்கிச் சென்றுகொண்டிருக் கின்றார்.

மூப்பனார் எப்பிடி சிங்கராசாவைத் தன்ரை கையுக்குள்ளை கொண்டு வந்தார் ? ஒற்றைச் சொல் விடை ‘பெண்கள்’.

ராசாவின் அந்தரங்க ரசனைகளை அவர் நன்றாய் அறிவார். அதற்கு வடிகாலும் வழிகோலும் மூப்பனார்தான்.

ராசாவின்ர காமத்துக்கு மட்டுமல்ல... வயித்துக்கும் வழி செய்வார் மூப்பனார். இப்ப சிங்கராசாவுக்கான உணவு மூப் பனாரின்ர கையிலை. ஆணை ஆள்வோரைக் கட்டுப்படுத்தி றதில்லை.

சிங்கராசாவின் தலைமாட்டை அடைந்தார்.

குறட்டை ஒலியற்ற தூக்கத்தில் இருந்தார் சிங்கராசா. சிறுநீர் கழித்துத் திரும்பிய ராணி இரையோடு காத்திருக்கும் மூப் பனாரைப் பார்த்தாள்.

ராணிக்கு மூப்பனாரைக் கண்ணில் காட்டேலாது. பச்சை மிள காய்களை எண்ணுக் கணக்கின்றித் தின்றுபோட்டு பாலை வனத்தில் பாலாடை நீருக்கு அலைந்து திரியும் வேகரம் மூப்பனார் மேல.

‘இந்தச் சனியனாலைதான் அவர் கெட்டுபோய் கண்ட கண்ட கூத்தியாளுகளோடை திரியிறார். இரவிலை வீட்டுக்கு வாறதே இல்லை. எப்பவாவது வந்தாலும் வீட்டுக்குள்ளை புழுக்கமா இருக்குதெண்டு வெளியிலை போய்ப் படுக்கிறார்.

முணு முணுத்துக்கொள்ளலாம். மூச்சு விட ஏலாது. எல்லாம் பெண்ணாப் பிறந்த பாவம். ஆரையும் குறைசொல்ல வகை யில்லை.

ஒரு பாறாங்கல்லைத் தூக்கி எண்டைக்காவது உவன்ரை மண்டையிலை போடவேணும் போல இருக்கும்.

‘இண்டைக்கு விடிய முந்தி இந்தக் கிழடு தலைமாட்டிலை வந்து நிக்குது.’

சிங்கராசாவை அருட்டினாள். அவர் தலை அப்படியும் இப்படி யும் ஆடியது. எழும்பவில்லை. உரத்து அசைத்ததால், உடல் அசைந்தது. உயிர் இல்லா உடல்.

ராணி பெருங்குரல் எழுப்பினாள். காடே அதிர்ந்தது.

‘ஐயோ என்னை விட்டிட்டு போயிற்றியளே ? இந்தப் படுபாவி உங்களை நிக்கப்பதைக்கக் கொன்று போட்டானே. நீ நல்லா இருப்பியாடா பாவி, ஆராவது இந்த அநியாயத்தை வந்து பாருங்கோ.’

மூப்பனாருக்கு மூளை விறைத்தது.

‘பலகாலப் பகையை மனசிலை வச்சு மனிசி இண்டைக்குக் கணக்குத் தீர்க்கப் பாக்குது. நிண்டு பிடிபட்டால் பிரியாணி தான்.’

வெளியில் பாய்ந்து இலக்கின்றி ஓடத் துவங்கினார் மூப்பனார்.

ராசாவின் ஆணையும் அத்துடன் காலாவதியானது. பசியோட லைந்த விலங்குகள் மூப்பனாரைத் துரத்தின.

நுளம்பொன்று கடிக்க, கலைந்த கனவில் சிந்தனை சில்லிட் டுக்கொண்டிருந்தது.



kandasamy.a@thaiveedu.com





# இலவசச் சவாரிப் பயணத்தின்போது நடந்த கார் விபத்து

– டெனிஸ் ஜோன்சன்

தமிழில்: என்.கே. மகாலிங்கம்

(டெனிஸ் ஜோன்சன் (1949-2017) அமெரிக்க எழுத்தாளர். சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் எழுதியுள்ளார். இவர் ஜேர்மனியின் மியுனிக் நகரத்தில் பிறந்தவர். அப்போது அவரின் தந்தை அங்கே, அமெரிக்க அரசு வேலையில் இருந்தார். இவர் பிலிப்பைன்ஸ், யப்பான், வோஷிங்ரன் டிசி ஆகிய இடங்களில் வசித்துள்ளார். அவருடைய சிறுகதைத் தொகுப்பான Jesus' son அவருக்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது. தேசிய நூல் விருது அவருடைய Tree of Smoke-இற்குக் கிடைத்தது. அவரின் முதலாவது நாவலான Angel-இற்கு முதல் புனைவுக்கான பரிசு கிடைத்தது. அவர் இரண்டு முறை புலிட்சர் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டார். அதில் ஒன்று அவருடைய Train Dreams என்ற நாவல். The Name of the World, Already Dead, Jesus' Son, Resuscitation of a Hanged Man, Fiskadoro, The Stars at Noon என்பவை அவரின் படைப்புகள். தன் இருபது வயதுக் காலத்தில் குடிப்பழக்கத்திற்கும் பிற போதைப் பொருள்களுக்கும் அடிமையானார். பின் 1978-ஆம் ஆண்டில் குடியை நிறுத்தினார். 1983-இல் போதைப் பொருள் பாவிப்பதையும் நிறுத்தினார். அந்த அனுபவத்திலிருந்து வெளிவந்த சிறுகதைத் தொகுப்பு Jesus' Son. அது வாசகர்களின் பெரும் பாராட்டைப் பெற்றது. அக்கதை திரைப்படமாகவும் வெளிவந்துள்ளது. அத்துடன் அவரின் கவிதைகள் ஒரே தொகுப்பாக வெளிவந்துள்ளது. அதன் பெயர் The Throne of the Third Heaven of the Nations Millennium General Assembly. பல நாடகங்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். இறுதியில் கல்லீரல் புற்றுநோயால் 2017-இல் இறந்தார்.)

ஒரு விற்பனையாளன் தன் மதுவை இன்னொருவனுடன் பகிர்ந்து குடித்த பின் தூங்கிக் கொண்டு காரை ஓட்டினான்... இன்னொருவன் செரோக்கி இந்தியன். அவன் தன் காரில் போர்போன் மதுப் போத்தல்களை நிரப்பிக்கொண்டு காரை ஓட்டினான்... இன்னொருத்தன், கல்லூரி மாணவன். அவன் ஹஷீஷ் குமிழிப் போதைப் புகையும் அவனுடன் கூட வர வொக்ஸ்வாகன் காரை ஓட்டினான்...

கடைசியில், மாஷல்ரவுணிலிருந்து காரில் வந்த ஒரு

குடும்பம். அது பெதானி மிசூரியிலிருந்து மேற்கு நோக்கி வந்த ஒரு காரை நேருக்கு நேர் மோதி ஒருத்தனைக் கொன்றுவிட்டது...

கொட்டும் மழையில் முற்றாக நனைந்து போய் நான் துயின்றெழுந்தேன். சரியான பிரக்ஞையில்லாமல் இருந்தேன். நான் முன்பு சொன்ன மூன்று பேர் ஓட்டிய கார்களின் உதவியுடன் அங்கே வந்திருந்தேன்... அவர்களைப் பற்றி ஏற்கனவே சொல்லி விட்டேன். ஒரு விற்பனையாளன், ஒரு செரோக்கி இந்தியன், மற்றும் மாணவன். அவர்கள் எல்லோரும் எனக்குப் போதை மருந்து தந்தவர்கள். சாலையில் சரிவான தளத்தின் வாசலில் சவாரி கிடைக்குமோ ? கிடைக்காதோ ? என்ற நம்பிக்கையின்மையுடன் உருட்டிக் கட்டியிருந்த நித்திரைப் பையுடன் காத்திருந்தேன். முற்றாக நனைந்து போய் இருந்த என்னை எவராவது தங்கள் காருக்குள் ஏற்றுவார்களா ? நித்திரைப் பையை என் கழுத்தைச் சுற்றி மேலங்கி போல அணிந்திருந்தேன். அடைமழை, தெருவில் கிடந்த தாரை அள்ளி நீர் நிறைந்த குழிகளுக்குள் இறைத்து, களகள ஓசை எழுப்பி நிரப்பியிருந்தது. என் எண்ணங்கள் தாறுமாறாக ஓடி அனைத்தையும் பெரிதாகக் காட்டின. பயணம் செய்துகொண்டிருந்த விற்பனையாளன் எனக்கு மாத்திரைகள் தந்தான். அவை என் இரத்த நாளங்களை வழித்தெடுத்தது போல வலியைக் கொடுத்தன. என் தாடைகள் வலித்தன. என் மேல் விழுந்த மழைத்துளிகள் எல்லாவற்றின் பெயர்களும் எனக்குத் தெரியும். எதுவும் நடப்பதற்கு முன்னரே அதை நான் உணர்ந்துகொண்டேன். ஓர் ஓல்ட்ஸ்மொபைல் கார் எனக்காக நிற்பதற்கு முன்னரே அதன் முன் விளக்குகள் பிரகாசிப்பதற்கு முன்னரே எனக்கு அது தெரியும். கூடவே, அதற்குள்ளிருந்து வரும் குடும்பத்தின் இனிமையான குரல்களிலிருந்து புயலின்போது எங்களுக்கு விபத்து நடக்கப் போகிறது என்பதும் எனக்குத் தெரியும்.

அவற்றைப்பற்றி நான் கவலைப்படவில்லை. என்னை நான் போகும் இடம்வரை அழைத்துச் செல்வார்கள் என்று அவர்கள் சொன்னார்கள்.

அந்தக் காரில் ஓர் ஆணும் அவரின் மனைவியும் இருந்தார்கள். அவர்கள் ஒரு சிறுமியை தங்களுடன் முன் இருக்கையில் இருத்திக்கொண்டு பின்னிருக்கையில் இருந்த குழந்தையை அப்படியே என்னுடன் இருக்கவிட்டார்கள். அத்துடன் நான் சுருட்டி வைத்திருந்த நீர் ஒழுகும் படுக்கையையும் அங்கே வைத்திருக்கவிட்டார்கள். நீ போகும் இடத்திற்கு உன்னை வேகமாகக் கொண்டு போய்ச் சேர்க்கப் போவதில்லை என்றான் அந்த ஆண். ஏனென்றால் என் மனைவியும் குழந்தைகளும் இங்கே இருக்கிறார்கள் என்றான்.

நீங்கள்தான் உலகில் மிகச் சிறந்தவர்கள் என்று நான் எண்ணினேன். என்னுடைய சுருள் படுக்கையை இடப்புறக் கதவில் சாத்தி வைத்துவிட்டுக் குறுகிக்கொண்டு படுத்து விட்டேன். இறப்பேனா ? அல்லது வாழ்வேனா ? என்று கவலைப்படவில்லை. குழந்தை எனக்குப் பக்கத்தில் இருந்த இருக்கையில் சுதந்திரமாகத் துயின்றது. அது ஒன்பது மாதக் குழந்தையாக இருக்கலாம்...

இவை அனைத்தும் நடப்பதற்கு முன் அந்தப் பின்மதியத்தில் நானும் அந்த விற்பனையாளனும் கன்சாஸ் நகரத்திற்கு அவனுடைய சொகுசுக் காரில் அதி வேகமாகச் சென்று கொண்டிருந்தோம். எங்கள் இருவரிடையேயும் ஆபத்தான குற்றம் காணும் தோழமையுணர்வு ஏற்பட்டிருந்தது. அது ரெக்சாஸ் நகரில் என்னை அவன் ஏற்றிக் கொண்ட போதே துவங்கிவிட்டது. இருவரும் அவன் வைத்திருந்த அம்ஃப்டெமின் ரெமைன்ஸ் போத்தல் போதை மாத்திரைகள் முழுவதையும் விழுங்கிவிட்டோம். அடிக்கடி நெடுஞ்சாலையிலிருந்து காரை இறக்கி அரை லீற்றர் கனடியன் கிளப் விஸ்கியையும் ஒரு சாக்கு ஐசையும் வாங்கினோம். அவனுடைய காரின் இரண்டு கதவுகளிலும் உருளை வடிவான கிளாஸ் தாங்கிகள் இருந்தன. அவற்றின் உள்ளே வெண்ணிறத் தோல் ஒட்டப்பட்டிருந்தது. தன் குடும்பத்துடன் அன்றிரவு தங்குவதற்காக என்னை அவன் அழைத்துச் செல்வதாகச் சொன்னான். அதற்கு முதல் தனக்குத் தெரிந்த ஒரு பெண்ணைப் பார்ப்பதற்காகக் காரை நிறுத்தப் போவதாகவும் சொன்னான்.

அமெரிக்காவின் மத்திய மேற்கு வட பிரதேசங்களின் முகில்கள் சாம்பல் நிற மூளையைப் போலக் காட்சியளித்தன. அதன் கீழ் இருந்த அகன்ற நெடுஞ்சாலையைக் கடந்தோம். இலக்கற்ற உணர்ச்சியுடன் அதை விட்டு அகன்று கன்சாஸ் நகரத்தின் வாகனங்களின் நெரிசலான நேரத்தில் காரை இறக்கினோம். அவ்வேளை எங்களுக்கு அந்த நெரிசலுக்குள் கார் நின்று போய்விடும் என்ற உணர்வு இருந்து கொண்டிருந்தது. நாங்கள் காரின் வேகத்தைக் குறைத்தவுடன் இருவரும் ஒன்றாகப் பயணிப்பதில் இருந்த கவர்ச்சி மறைந்து விட்டது. அவன் தன்னுடைய பெண் சிநேகிதியைப் பற்றி சொல்லிக்கொண்டே இருந்தான். 'இவளை நான் விரும்புகிறேன். இல்லை நான் இவளைக் காதலிக்கிறேன் என்று நினைக்கிறேன். ஆனால் எனக்கு இரண்டு குழந்தைகளும் மனைவியும் உள்ளார்கள். அதனால் சில கடமைகளும் இருக்கின்றன. எல்லாவற்றிலும் மேலாக நான் என் மனைவியைக் காதலிக்கிறேன். நான் காதலால் வாழ்த்தப்பட்டவன். நான் என் குழந்தைகளிலும் அன்புள்ளவன். நான் என் சுற்றத்தவரையும் விரும்புகிறேன்.' அவன் அப்படிச் சொல்லிக்கொண்டிருந்தபோது நான் கைவிடப்பட்டவன் போல சோகமாக உணர்ந்தேன். 'என்னிடம் பதினாறு அடி நீளமானதொரு படகு இருக்கிறது. இரண்டு கார்கள் இருக்கின்றன. வீட்டின் பின் தோட்டத்தில் ஒரு நீச்சல் குளம் அமைப்பதற்குப் போதுமான இடம் இருக்கிறது,' என்றான். அந்தச் சிநேகிதியை அவள் செய்யும் வேலையிடத்தில் சந்தித்து இருக்கிறான். அவள் தளபாடக் கடை ஒன்றை நடத்துகிறாள். அந்த இடத்தில் அவன் சொன்ன கதையை தவற விட்டு விட்டேன்.

முகில்கள் இரவுவரை ஒரே மாதிரியாக இருந்தன. அதன் பின் இருட்டில் காற்றுடன் கூடிய மழை வருவதை நான் கவனிக்கவில்லை. வொக்ஸ்வகனை ஓட்டிய அந்தக் கல்லூரி மாணவன் என்னை நகரத்தின் எல்லைக்கு அப்பால் கொண்டுபோய் விட்டான். அப்போதே மழை

துவங்கி விட்டது. அந்த மாணவன் தந்த ஹஷீஷ் தான் என் தலையை தலைகீழாகச் சுற்ற வைத்தது. நான் வேகம் வேகமாகச் சொல்லும் கதையைப் பொருட்படுத்தாதீர்கள். என்னால் எழும்பி நிற்க முடியவில்லை. வாகனங்கள் வெளியேறும் பாதைத் துவக்கத்தில் உள்ள புல்லில் படுத்திருந்தேன். என்னைச் சுற்றிச் சூழ்ந்திருந்த வெள்ளத்தின் நடுவிலிருந்து எழும்பினேன்.

நான் சொன்னது போல பிறகு ஓல்ஸ்மொபில் காரின் பின் இருக்கையில் மாஷன்ரவுனிலிருந்து வந்த அந்தக் குடும்பத்தின் காரில் துயின்றேன். அந்தக் கார் மழையில் வெள்ளத்தைக் கிழித்துக்கொண்டு ஓடிக் கொண்டிருந்தது. இருந்தும் என் கண்ணிமைகளைக் கிழித்துக்கொண்டு நான் கனவு காண்பதாகவும் என்னுடைய நாடித் துடிப்புகள் நேரத்தைச் செக்கண்டுகளாகக் கணக்கிடுவதாகவும் நினைத்துக் கொண்டிருந்தேன். மேற்கு மிசூரிக்கு ஊடாகச் செல்லும் மாநிலங்களுக்கு இடையேயான சாலைகள் அந்தக் காலத்தில் அதிகமாக இருவழிச் சாலைகள் மட்டுந்தான். இடைப்பட்ட தரத்தில் உள்ள றக் ஒன்று எங்களை நோக்கி வந்துகொண்டிருந்தது. அது எங்களைக் கடந்து எதிர்ப்பக்கமாகச் சென்றது. எங்கள் கார் கண்ணைக் குருடாக்கும் நீரால் குளிப்பாட்டுப்பட்டு அதற்குள் மறைந்து போனோம். அது தானியங்கிக் கார் கழுவும் இடத்தில் ஒரு கார் இழுபட்டுப் போவது போல் பெரும் சத்தத்துடன் சென்றது. நீர் வழிப்பான்கள் எழும்பிக் கார்க் கண்ணாடியில் நின்று பின் விழுந்தன. அதனால் அதிக பயன் இருக்க வில்லை. நான் களைத்துப் போனேன். ஒரு மணி நேரத்திற்குப் பிறகு நான் ஆழ்ந்து துயின்று விட்டேன்.

சரியாக என்ன நடக்கப் போகிறது என்பது எனக்கு ஏற்கனவே தெரியும். பின் அந்த மனிதனும் அவனுடைய மனைவியும் என்னை எழுப்பினார்கள். அதைப் பற்றி பின் நாங்கள் கதைத்தபோது அது அப்படி அல்ல என்று அதைக் கடுமையாக மறுக்கவும் செய்தார்கள். ஓ அப்படி இல்லை என்றார்கள்.

நான் அவர்கள் இருந்த கார் இருக்கையின் பின் பக்கத் தின்மீது மோசமாகத் தூக்கி வீசப்பட்டேன். அதனால் அந்த இருக்கையே உடைந்துவிட்டது. முதலில் நான் முன்னுக்கும் பின்னுக்குமாக உதைபட்டேன். ஒரு திரவம் பாய்ந்து என் தலையை முழுக்காட்டியது. அந்தத் திரவம் இரத்தம்தான் என்பதை நான் உடனடியாக அறிந்து கொண்டேன். அவை எல்லாம் முடிந்த பின் திரும்பவும் நான் படுத்திருந்த பின் இருக்கையில் கிடந்தேன். முன்னர் கிடந்தது போல. நான் எழும்பி எல்லாப் பக்கமும் பார்த்தேன். எங்கள் காரின் முகப்பு விளக்குகள் அணைந்துவிட்டன. வெப்பம் பரப்பி - றேடியேற்றர் - தொடர்ந்து இரைந்துகொண்டிருந்தது. அதற் கப்பால் எனக்கு எதுவும் கேட்கவில்லை. அப்போது நான் மட்டுந்தான் தன்னுணர்வுடன் இருந்தேன் என்று என்னால் சொல்ல முடியும். என் கண்கள் அந்தச் சூழலுக்குப் பழக்கப் பட்டவுடன் விழித்துப் பார்த்தபோது அந்தக் குழந்தை எனக்குப் பக்கத்தில் ஒன்றுமே நடக்காதது போலக் கிடந்தது. அதன் கண்கள் திறந்திருந்தன. அது தன் கன்னங்களைத் தன் சின்னஞ்சிறிய கைகளால் தொட்டுப் பார்த்தது.

திசை திருப்பும் சக்கரத்தில் சரிந்து கிடந்த காரோட்டி ஒரு நிமிடத்தில் எழுந்திருந்து எங்களைப் பார்த்தான். அவனுடைய முகம் நொருங்கிப் போய் இரத்தம் தோய்ந்து கறுத்திருந்தது. அவனைப் பார்த்தபோது என் பற்கள் கூட வலி எடுத்தன. ஆனால் அவன் பேசியபோது அவனுடைய எந்தப் பற்களும் உடைந்து போனதாகத் தெரியவில்லை.

‘என்ன நடந்தது ?’ என்று கேட்டேன்.

‘நாங்கள் ஒரு மோசமான விபத்துக்கு ஆளாகிவிட்டோம்,’ என்றான்.

‘குழந்தை நலமாக உள்ளது,’ என்றேன். ஆனால் குழந்தை எப்படி இருக்கின்றதென்று உண்மையில் எனக்குத் தெரியாது.

அவன் தன் மனைவியைத் திரும்பிப் பார்த்தான்.

‘ஜனிஸ், ஜனிஸ், ஜனிஸ்,’ என்று அழைத்தான்.

‘அவள் நலமாக இருக்கிறாளா ? என்று நான் கேட்டேன்.

‘அவள் இறந்து விட்டாள்,’ என்றான், அவளைக் கோபத் துடன் உலுக்கிக் கொண்டே.

‘இல்லை, அவள் இறக்கவில்லை,’ என்றேன். அப்போது எல்லாவற்றையும் மறுப்பதற்குத் தயாராக இருந்தேன்.

அவர்களுடைய சிறுமி உயிருடன் இருந்தாள். ஆனால் மயங்கிக் கிடந்தாள். அவள் மயக்கத்தில் அனுங்கிக் கொண்டிருந்தாள். அவன் தன் மனைவியைத் தொடர்ந்து உலுக்கிக் கொண்டிருந்தான்.

‘ஜனிஸ்!’ என்று உரத்துக் கத்தினான்.

மனைவி அனுங்கினாள்.

‘அவள் சாகவில்லை,’ என்று காரிலிருந்து இறங்கி அங்கி ருந்து ஓடிக் கொண்டே சொன்னேன்.

‘அவள் எழும்ப மாட்டாள்,’ என்று அவன் சொல்வது எனக்குக் கேட்டது.

கையில் குழந்தையுடன் அந்த இரவில் நான் வெளியே நின்று கொண்டிருந்தேன். ஏதோ காரணத்திற்காக. இன்னும் மழை பெய்து கொண்டிருக்க வேணும். ஆனால் அந்தக் கால நிலையைப் பற்றி எனக்கெதுவும் நினைவில் இல்லை. இருவழிப் பாதை செல்லும் பாலத்தில் நாங்கள் இன்னொரு காருடன் மோதியிருக்கிறோம் என்பதை இப்பொழுது நான்

உணர்கிறேன். எனக்குப் பக்கத்தில் இருந்த வெள்ளம் இருட்டில் தெரியவில்லை.

அடுத்த காருக்குப் பக்கத்தில் நான் போனபோது, கரடு முரடான, உலோகத்தனமான குறட்டை ஒலி ஒன்று அதற் குள்ளிருந்து கேட்டது. யாரோ ஒருத்தன் பயணிப் பக்கக் கதவுப் பக்கம் அரைவாசி உடல் வெளியே தெரியக் கிடந்தான். கதவு திறந்து கிடந்தது. சேர்க்கஸ் வித்தை காட் டுபவன் கம்பியில் குதிக்கால்களில் தலைகீழாகத் தொங்கு பவன் போலக் கிடந்தான். அந்தக் கார் பக்கவாட்டில் அடி பட்டிருந்தது. கார் தட்டையாகி இருந்தது. அதனால் காருக்குள் அந்த மனித னின் கால்கள் வைக்கக்கூட இடமி ருக்கவில்லை. சாரதியைப் பற்றியோ வேறு பயணிகளைப் பற்றியோ சொல்லத் தேவையில்லை. நான் அந்தக் காரைக் கடந்து நடந்தேன்.

தூர இருந்து வாகனம் ஒன்றின் முகப்பு வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. நான் பாலத்தின் மேல் பகுதிக்குச் சென்று குழந்தையை ஒரு கையில் தோளுடன் சாய்த்து வைத்துப் பிடித்துக்கொண்டு மற்றக் கையை வாகனத்தை நிறுத்தும்படி அசைத்தேன்.

அது நீண்டதொரு கனரக றக் வாகனம். அது தன் வேகத்தைக் குறைத்தபோது அதன் கியர் அரைக்கும் ஒலியை எழுப்பியது. அதன் ஓட்டுநன் பக்கக் கண்ணாடியை இறக்கினான். நான் அவனை நோக்கிக் கத்திச் சொன்னேன். ‘இரண்டு கார்கள் மோதிக் கிடக்கின்றன. அவற்றுக்குப் போய் உதவி செய்.’

‘என்னால் றக்கைத் திருப்ப முடியாது,’ என்றான்.

என்னையும் குழந்தையையும் பயணிகள் இருக்கையில் அமரச் செய்தான். நாங்கள் அந்தச் சிற்றறையில் இருந்து றக்கின் முகப்பு வெளிச்சத்தில் கார்களின் சேதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

‘அதிலிருந்த எல்லோரும் இறந்து விட்டார்களா ?’ என்று கேட்டான்.

‘யார் இறந்தார்கள் யார் இறக்கவில்லை என்று என்னால் சொல்ல முடியாது,’ என்பதை நான் ஏற்றுக் கொண்டேன்.

அவன் தான் குடிப்பதற்காகக் கோப்பியை ஒரு தேமோஸ் குடுவையிலிருந்து ஊற்றினான். பின் எல்லா விளக்குகளையும் அணைத்தான், நிறுத்தி வைப்பு விளக்கைத் தவிர.

‘இப்போது நேரம் என்ன ?’ என்று கேட்டேன்.

‘ஓ, இப்போ மூன்றே கால் மணி இருக்கும்,’ என்றான்.

அவனுடைய செய்கைகள் விபத்தைப் பற்றி தன்னால் எதுவும் சொல்வதற்கில்லை என்பதைப் போல இருந்தன. நான் நிம்மதியடைந்திருந்தேன். ஆனால் அழுகை வந்தது. நான் ஏதாவது செய்ய வேண்டும் என்றும் நினைத்தேன். ஆனால் அது என்ன என்று என்னால் கண்டு பிடிக்கவும் முடியாதிருந்தது.

இன்னொரு கார் எதிர்ப்பக்கத்திலிருந்து வந்தபோது அவர்களுடன் நான் கதைக்க வேண்டும் என்று நினைத்தேன். ‘இந்தக் குழந்தையை வைத்திருக்கிறாயா ?’ என்று றக்கின் ஓட்டுநனிடம் கேட்டேன்.

‘இதை நீயே வைத்துக் கொண்டிரு. இதுவொரு ஆண்குழந்தை அல்லவா ? என்றான் ஓட்டுநன்.

‘ஓம், அப்படித்தான் இருக்க வேண்டும்,’ என்றேன்.

உடைந்த காரிலிருந்து வெளியே தொங்கிக் கொண்டிருந்தவன் இன்னும் உயிருடன் இருக்கிறான் என்பதை நான் அவனைத் தாண்டிச் சென்றபோது கண்டேன். ஆனால் அவன் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டேன். ஆனால் என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டேன். அவன் மிகவும் உரத்தும் கரடுமுரடாகவும் குறட்டை விட்டுக்கொண்டிருந்தான். ஒவ்வொரு முறை மூச்சு விடும்போதும் அவனுடைய வாய்க் குள்ளிருந்து இரத்தம் கொப்புளித்துக்கொண்டிருந்தது. அப்படி அவனால் பலமுறை மூச்செடுக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். இந்தப் பூமியில் வாழும் ஒருத்தனின் வாழ்க்கையை நினைத்து நான் மிகவும் இரக்கப்பட்டேன். நாங்கள் எல்லோரும் இறந்து போவோம் என்று நான் சொல்ல வரவில்லை. அது பெரும் இரக்கத்திற்குரிய விஷயம் அல்ல. அவன் எதைப் பற்றிக் கனவு காண்கிறான் என்பதை அவனால் எனக்குச் சொல்ல முடியாது. அத்துடன் எது உண்மை என்பதை அவனுக்கும் என்னால் சொல்ல முடியாது.

மிகவும் விரைந்து பாலத்தின் இரண்டு பக்கமும் கார்கள் நிறைந்து நீளத்துக்கு நின்றன. கார்களின் முகப்பு விளக்கு களின் வெளிச்சம் இரவில் நடக்கும் ஒரு விளையாட்டுச் சூழலைப் போன்றதொரு தோற்றத்தை அவ்விடத்தில் உரு வாக்கியிருந்தது. அதுவொரு மோசமான குழப்ப நிலைமையை ஏற்படுத்திவிட்டிருந்தது. அம்புலன்சுகள், பொலிஸ்கார்கள் இங்குமங்கும் ஓடி அங்கிருந்த சூழலுக்குப் பலவித வண்ணங்களை உருவாக்கிக் கொண்டிருந்தன. நான் ஒருவருடனும் பேசவில்லை. என்னுடைய இரகசியம் என்னவென்றால் அந்தக் குறுகிய நேரத்தில் ஒரு தலைவன் என்ற இடத்திலிருந்து இரத்தம் தோய்ந்த ஒரு விபத்தினைப் பார்த்த முகமற்ற ஒரு பார்வையாளன் என்ற நிலைமைக்கு என்னை ஆட்படுத்தியிருந்தார்கள் என்பதே. ஒரு புள்ளியில் ஒரு காவல் அதிகாரி நானும் அந்தக் காரில் பயணம் செய்த ஓர் ஆள் என்பதை அறிந்து என்னிடமிருந்து ஓர் அறிக்கையை எடுத்தான். எனக்கு அவை எதுவும் நினைவில் இல்லை. அவன் சொன்ன ‘நீ வைத்திருக்கும் சிகரெட்டை அணை,’ என்பதைத் தவிர. நாங்கள் நடத்திய அந்த உரையாடலை

இடையில் நிறுத்தி, இறந்துகொண்டிருந்த அந்த மனிதனை அம்புலன்சில் ஏற்றிக் கொண்டிருந்ததைப் பார்த்தோம். அவன் சூழலுக்கு முரணாக எதையோ கனவு கண்டு கொண்டு இன்னும் உயிருடன் இருந்தான். அவனிலிருந்து குருதி துளித்துளியாக விழுந்து கொண்டிருந்தது. அவனுடைய முழங்கால்கள் சுண்டித் துடித்தன. தலை கடகடத்து ஆடியது.

என்னில் எந்தப் பிழையையும் பொலிஸ்காரன் காணவில்லை. நான் எதையும் பார்க்கவில்லை. ஆனால் பொலிஸ் காரனுக்கு என்னை விசாரிக்க வேண்டியதும் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதும் அவனுடைய கடமை. நாங்கள் அவசரசிகிச்சை அறை வாசலின் மேற்கவிகைக்குக் கீழ் வந்து சேர்ந்த பொழுது அந்தப் பொலிஸ்காரனின் வானொலியில் அந்த மனிதன் இறந்து விட்டான் என்ற செய்தி வந்தது. அப்போது நான் ஓட்டுத்தரை போட்ட நடைக்கூடத்தில் என் ஈரப் படுக்கைப் பையைச் சுவருக்குப் பக்கத்தில் வைத்துக் கொண்டு உள்ளூர் இறுதிச் சடங்கு இல்லத்து ஒருத்தனுடன் பேசிக் கொண்டிருந்தேன்.

ஒரு மருத்துவன் வந்து ஒரு எக்ஸ்ரே படம் எடுக்க வேணும் என்று எனக்குச் சொன்னான்.

‘தேவையில்லை,’ என்றேன்.

‘இப்பதான் எடுக்க வேணும். பிறகு ஏதாவது பிரச்சினை வந்தால்...’

‘எனக்கு அப்படியொரு பிரச்சினையும் இல்லை,’ என்றேன்.

மண்டபத்தின் உள்ளே இருந்து இறந்தவனின் மனைவி வந்து கொண்டிருந்தாள். அழகாக பிரகாசித்துக் கொண்டி ருந்தாள். அவளுடைய கணவன் இறந்துவிட்டான் என்பது அவளுக்கு இன்னும் தெரியாது. இறந்தது எங்களுக்குத் தெரியும். அது தெரியாததால்தான் எங்களிலும் பார்க்க அதிகாரம் மிக்கவள் போல அவள் இருந்தாள். மருத்துவன் ஒருவன் அவளை மண்டபத்தின் முடிவில் மேசை இருந்த ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றான். மூடிய கதவுக்குப் பின்னால் இருந்து மிகவும் பிரகாசமான ஒளி வெளிவந்தது. அதிசயமானதொரு செயலால் வைரங்கள் அங்கே எரிந்து பிரகாசித்துக் கொண்டிருந்தது போல அந்த ஒளி இருந்தது. அவளுக்கு எத்தனை பெரிய நுரையீரல்கள் இருந்திருக்க வேண்டும்! அவள் கிறீச்சிட்டுக் கத்தினாள். அது ஒரு கழுகு கத்தினால் எப்படி இருக்கும் என்று நான் கற்பனை செய்தது போல இருந்தது. அதைக் கேட்பதற்கு ஒருவர் உயிருடன் இருக்க வேண்டும் போலும்! அந்த உணர்ச்சி அப்படி அற்பு தமாக இருந்தது. அந்த உணர்ச்சியைத் தேடி நான் எல்லா விடமும் சென்றேன்.

‘எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.’ அந்தச் சொற்களை நான் சொன்னதைப் பற்றி ஆச்சரியப்பட்டேன்.

அப்படி மருத்துவர்களிடம் பொய் சொல்லும் போக்குத்தான் எனக்கு இயல்பாகவே இருந்தது. நலம் என்பது மருத்து வர்களை மடையர்களாக்குவதில் உள்ள திறன் போலும்.

சில ஆண்டுகளின் பின்னர் சியாற்றில் பொது மருத்துவ மனையில் என் உடலில் உள்ள கழிவுகளை அகற்றுவ தற்காக ஒருமுறை அனுமதிக்கப்பட்டிருந்தபோது அதேபோன்ற ஒரு முறையைக் கையாண்டேன்.

‘ஏதாவது அசாதாரணமான சத்தங்களையோ குரல் களையோ கேட்கிறாயா ?’ என்று மருத்துவன் என்னைக் கேட்டான்.

‘ஓ, கடவுளே. எங்களைக் காப்பாற்றுங்கள். எனக்கு வலிக் கிறது,’ என்று கூச்சலிட்டன அங்கிருந்த பஞ்சுப் பெட்டிகள்.

‘அப்படி ஒன்றும் இல்லை,’ என்றேன் நான்.

‘அப்படி என்றால் என்ன ?’என்று மருத்துவன் கேட்டான்.

‘அந்த விசயங்களைப் பற்றிக் கதைக்க நான் இன்னும் தயாராக இல்லை,’ என்றேன். மஞ்சள் பறவை ஒன்று என் முகத்திற்கு அருகில் தன் சிறகுகளை அடித்தது. என் தசைகள் இழுத்துக் கொண்டன. ஒரு மீனைப் போல துள்ளினேன். என் கண்களை இறுக மூடினேன். வெப்பமான கண்ணீர்த் துளிகள் கண்குழிகளிலிருந்து வெடித்துச் சிதறின. கண்களைத் திறந்து பார்த்தபோது நான் வயிறு குப்புறப் படுத்திருந்தேன்.

‘எப்படி இந்த அறை மிகவும் வெண்மையாகியது’ என்று கேட்டேன்.

அழகானதொரு செவிலி என் சருமத்தைத் தொட்டாள். ‘இது விட்டமின்ஸ்’ என்று சொல்லிக் கொண்டு ஊசி ஒன்றை ஏற்றினாள்.

மழை பெய்துகொண்டிருந்தது. பிரமாண்டமான ஃபேர்ண் செடிகள் எங்கள் மேல் படர்ந்திருந்தன. ஒரு காடு, மலை ஒன்றில் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. சிற்றோடை ஒன்று பாறைகளுக்கிடையில் வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் சத்தம் என் காதுகளுக்குக் கேட்டது. முட்டாள்த்தனமான உங்களுக்கு நான் உதவி செய்ய வேண்டும் என்று எதிர் பார்க்கிறீர்களா ?



mahalingam.k@thaiveedu.com

# ஆறாவது அனைத்துலக திருக்குறள் மாநாடு

## 6TH INTERNATIONAL THIRUKKURAL CONFERENCE

THEME
THIRUKKURAL ON GOVERNANCE

**DATE**

SEPTEMBER 19, 20, 21- 2025

**HOSTING CITY AND COUNTRY**

TORONTO, CANADA

**Jointly organized by**

Toronto Tamil Sangam, Toronto, Canada
Institute of Asian Studies, Chennai, India

***with the support of University of Toronto Scarborough***


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YS
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✔ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

| Corporate Bankruptcy | Bankruptcy | Consumer Proposal |
|---|---|---|
| $ 5000 to $7000 + HST | $1800 - $3000 + HST | Zero fee |

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre
"Empowering Financial Freedom"
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
creditsolutioncentre@gmail.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



# வீடு வாங்க விற்க...

**18 வருடங்களுக்கு மேலான வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்**

## ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

### வாங்கப் போகிறீர்களா?

- ☒ தரமான வீடு தவறிப்போகாது
- ☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- ☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
- ☒ பெருவருவாய் தரும் முதலீடு

### விற்கப் போகிறீர்களா?

- ☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
- ☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- ☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- ☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
















HOMELIFE
GRAND MASTER CLUB

Chairman's Club Award Winner 2015

Platinum Club Winner 2022

Chairman's Club Award Winner 2016

Chairman's Club Award Winner 2017

## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
info@vela4homes.com
www.vela4homes.com

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



# STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

**SARVAA CPA**
PROFESSIONAL CORPORATION

**Our passion is to solve your tax problems:**
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272







NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673-9855
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"



NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law
RAMAN HOME COMFORT INC
HEATING
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
15 years of Success
500+ Agents
VettyvelLaw
Selva Vettyvel
Broker of Record
Rishani Vettyvel
Real Estate Law
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
416.261.1544
AEREN Thiyagarajan
DILEEP Thangavel
647-888 3500
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
$8475.00
416-888-9492
ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
HomeLife Today Realty Ltd.
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545
RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225
Ahilan
Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMID GROUP
Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE
Mega Financial Group
Call Now
Raj Nadarajah
President & CEO
416-666-1120
Sri Vallipuranathar
Credit Solution Centre
416.439.0224
416.450.5011
Suba Aynkharan
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage
Azeezon
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8
Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER
Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com
RE/MAX ACE
BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1358@gmail.com
HomeLife Today Realty Ltd.,
NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
INFORCE LIFE Financial Services Inc.
416-909-0400
416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM
President & CEO
Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
416 505 8532
DR. YALINI ARAVINTHAN
DENTIST
YA Smiles
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
RE/MAX
LATHAN VARATHARAJAH